இராமாயணம்

- தோற்பாவை நிழற்கூத்து -



பதிப்பாசிரியர்

மு. இராமசுவாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை.

இராமாயணம்

- தோற்பாவை நிழற்கூத்து -

பதிப்பாசிரியர்
மு. இராமசுவாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி
சென்னை 600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Ramayanam - Thorpavai Nizharkkuthu
Editor	:	Dr. M. Ramaswamy
Publisher	:	International Institute of Tamil Studies
First Edition	:	2000
Publication No.	:	360
Language	:	Tamil
Paper used	:	TNPL 18 kg. Creamove
Size of the book	:	1/8 Demy
Printing types	:	11 points
No. of pages	:	xxxiii + 537
Price	:	Rs. 125.00
No. copies	:	1000
Printed by	:	**Shri Vignesh Prints** 158/5, Lake View Road, West Mambalam, Chennai-33. Ph: 4748486
Subject	:	Folk Narrative - Ramayanam

அணிந்துரை

இந்தியத் துணைக் கண்டத்தில் உருவான மிகப் பழமை வாய்ந்த இருபெரும் இதிகாசங்கள் மகாபாரதம், இராமாயணம் ஆகும். இவற்றுள் இராமாயணம் காப்பியம் என்றும் குறிக்கப் பெறும். இராமாயணம் வடமொழியில் வால்மீகியால் எழுதப்பட்டது. கதிரவன் மரபில் தோன்றிய இராமனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இராமாயணம் விளங்குகிறது. அறம், பொருள், இன்பம், வீடு முதலிய நற்பொருளில் அறம், பொருள், இன்பம் முதலியவற்றை முன்னிறுத்தி வீடுபேற்றினை அடைய இது வழி வகுக்கிறது. 'தர்மத்தின் வாழ்வு தன்னைச் சூது கவ்வும், தர்மம் மறுபடியும் வெல்லும்' என்பதை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது இராமாயணம்.

இந்நூல் ஏழு காண்டங்களையும், 500 சருக்கங்களையும், 24 ஆயிரம் சுலோகங்களையும் கொண்டுள்ளது.

வால்மீகி, இராமனை மனிதனுள் மிக்குயர்ந்தவனாகப் படைத்துள்ளார். ஆனால் முதலாம் காண்டத்திலும் ஏழாம் காண்டத்திலும் இராமன் திருமாலின் அவதாரமாகச் சுட்டப் படுகிறார். எனவே அறிஞர்கள் வால்மீகி இராமாயணத்தில் இடம் பெற்ற முதலாம் மற்றும் ஏழாம் காண்டங்கள் பின்னர், பிறர் எழுதிச் சேர்த்தவை என்பர். படிப்போர் புரிந்துகொள்ளும் வகையில் சிறந்த மொழி நடையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. சிறந்த உவமை, உருவங்கள் காணப்படுகின்றன.

இந்த இராமாயணக் கதையின் செல்வாக்கை அனைத்து இந்திய மொழிகளிலும் காணலாம். தமிழ்மொழியில் இராமாயணக் கதை நிகழ்ச்சிகள் சங்கப்பாடல்கள் தொட்டு, தொடர்ந்து பல இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளன.

அகநானூற்றில், இராமன் தென் கரையில் இலங்கை நோக்கிப் படையெடுத்துச் செல்வது குறித்து ஆராய்ந்த செய்தி கூறப்பட்டுள்ளது.

இராவணன் இமயமலையைப் பெயர்த்தெடுக்க முயன்ற தையும் சிவபெருமான் அவன் செயலை அடக்கியதையும் கலித்தொகை சுட்டுகிறது.

திருப்பரங்குன்றத்தில் முருகன் கோயிலில் அகலிகை சாப விமோசனம் பற்றிய வரலாறு ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளதைப் பரிபாடல் குறிப்பிடுகிறது.

புறநானூற்றில், சீதையை இராவணன் பர்ணசாலையுடன் வானத்தில் தூக்கிச் சென்றபோது அவள் அணிந்திருந்த அனைத்து நகைகளையும் கழற்றித் துணியில் கட்டி கீழே வீசியெறிந்தாள். அவற்றைக் கிட்கிந்தையில் வாழ்ந்த வானரங்கள் எவ்வாறு அணிய வேண்டும் என்று தெரியாமல் அணிந்தன என்ற நகைப்பை உண்டாக்கிய செய்தி விளக்கப்படுகிறது.

சிலப்பதிகாரத்தில், தந்தையின் கட்டளைக்கு இணங்க இராமன் அயோத்தியை விட்டு நீங்கிய செய்தி 'அருந்திறல் பிரிந்த அயோத்தி' என்று சுட்டப்படுகிறது. இராமனை 'வேத முதல்வன்' என்று கவுந்தி அடிகள் குறிப்பிடுகின்றார். ஆய்ச்சியர் குரவையில் இராமன் 'திருமால் அவதாரம்' என்று போற்றப்படுகின்றான்.

இராமன் இராவணனை வெற்றி கொள்வதற்காகக் கடலை அடைக்க முயன்றபோது வானரங்கள் பெரிய மலையைப் பெயர்த்து எடுத்து வந்து கடலில் இட்டன, என்று மணிமேகலை குறிப்பிடுகின்றது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடிய பாடல்களிலும் இராமாயணக் கதை நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. இராமேசுரத்தில் இராமன் சிவனை வழிபட்டதாகத் திருநாவுக்கரசர் குறிப்பிட்டுள்ளார்.

குலசேகர ஆழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருமங்கை ஆழ்வார் முதலியோர் பாடிய பாசுரங்களில் இராமாயணக் கதை நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன.

யாப்பருங்கல விருத்தி, வீரசோழியம் முதலியவற்றிற்கு உரை எழுதிய ஆசிரியர்கள் பஃறொடை வெண்பாவாலும், வெண்பாவாலும் இராமாயணம் எழுதப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். புறத்திரட்டு எனும் நூல் ஆசிரியப்பாவில் எழுதப்பட்ட இராமாயணத்தைச் சுட்டுகிறது. தொல்காப்பிய புறத்திணையியலுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் அகவற்பாவால் எழுதப்பப்பட்ட இராமாயணத்தைக் குறிப் பிட்டுள்ளார்.

மேலும் சமணச் சார்புடைய சமண இராமாயணம் என்ற நூல் இருந்ததாகவும் அறிகிறோம். கம்பனுக்கு முன்னர் எழுதப்பட்ட இவை அனைத்தும் வழக்கொழிந்தன.

சோழ நாட்டில் வாழ்ந்தவரும் கி.பி. 9 அல்லது 12-ஆம் நூற்றாண்டில் பிறந்தவர் என்று கருதப்படுகின்றவருமான கம்பர் வால்மீகி இராமாயணத்தைத் தழுவி முழுமையாக இராமாயணம் எழுதினார்; தமிழ்ப் பண்பாட்டுச் சூழலுக்கு ஏற்ப கதை நிகழ்ச்சிகளைத் திருத்தம் செய்தார்.

இந்நூல் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் முதலிய 6 காண்டங்களையும், 116 படலங்களையும், 10,436 பாடல்களையும் கொண்டு விளங்குகின்றது.

வால்மீகி இராமாயணத்தில் இடம் பெற்றுள்ள உத்தர காண்டம் கம்ப ராமாயணத்தில் இடம் பெறவில்லை. வால்மீகி இராமாயணத்தில் இல்லாத இரணியன் வதைப் படலம் கம்ப இராமாயணத்தில் இடம் பெற்றுள்ளது. கம்பர் விருத்தப்பாவால் இராமாயணத்தை யாத்தார். நூலில் கம்பர் 96 வகையான சந்தங்களைக் கையாண்டுள்ளதாக அறிஞர்கள் குறிப்பிடுவர்.

அக்காலத்தில் வாழ்ந்த மன்னர்கள் இராமாயணக் கதை நிகழ்ச்சிகளைக் கோயில்களில் நடத்துவதற்குத் துணை செய்தனர். இக்கதையை நிகழ்த்துபவர்களுக்கு நிலங்களைப் பரிசாக வழங்கினர்.

கம்பனுக்குப் பிறகும் பலரும் இராமன் கதையைப் பல வடிவங்களில் தந்துள்ளனர்.

ஒட்டக்கூத்தர் கம்பன் இராமாயணத்தில் எழுதாது விடுத்த உத்தர காண்டத்தை எழுதியுள்ளார். சீர்காழி அருணாச்சலக் கவிராயர் இராம நாடகக் கீர்த்தனையை இயற்றினார். கோட்டையூர் சுப்பிரமணிய ஐயங்கார், மதுரகவி சீனிவாச ஐயங்கார் ஆகிய இருவரும் **இராமாயண வெண்பா** என்ற பெயரில் நூல்களை யாத்துள்ளனர்.

வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியார் **அகலிகை வெண்பா** என்ற நூலையும், கனகராச அய்யர் **இலங்கைப் பரணி**

என்ற நூலையும், வேம்பு அம்மாள் **இராமாயணக் கீர்த்தனை** என்ற நூலையும், வேங்கடகிருஷ்ணசாமி ஐயங்கார் **இராகவ காவியம்** என்ற நூலையும் படைத்துள்ளனர்.

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சந்தச் சரபம் உடுமலை முத்துச்சாமிக் கவிராயர் **சம்பூர்ண இராமாயணம்** என்ற நாடகத்தைப் பமரக்குடி அரங்கசாமி அய்யங்காருக்காக எழுதினார்.

முத்தமிழகரம் என்று நாடக உலகில் போற்றப்படுகின்ற ஏகை சிவசண்முகம்பிள்ளை இராமாயணத்தைச் **சம்பூரண இராமாயணம்** என்ற பெயரில் நாடகமாக்கினார். இவர் எழுதிய நாடகத்தைப் பல்வேறு நாடகக் குழுக்கள் நடத்தின.

சங்கரதாசு சுவாமிகள் இராமாயணக் கதையின் சில பகுதிகளை நாடகங்களாக்கித் தமிழ் மக்களிடையே அரங்கேற்றினார். இலங்கா தகனம், வாலிமோட்சம், ராம இராவண யுத்தம், பாதுகா பட்டாபிஷேகம் முதலியவை குறிப்பிடத்தக்கன.

இங்ஙனம் மக்களிடையே செல்வாக்குப் பெற்ற இராம காதை நாட்டுப்புறக் கதை வடிவத்தையும் பெற்றது. இராமாயணச் சிந்து, இராமாயணக் கும்பி, இராமாயண வண்ணம், இராமாயண நலங்குப் பாடல்கள் குறிப்பிடத்தக்கன. தோற்பாவைக் கூத்துக் கலைஞர்கள் நாட்டுப்புறக் கதை வடிவத்தில் அமைந்த இராமாயணத்தைத் தமிழகத்தில் உள்ள சிற்றூர்களில் நடத்தினர்.

முனைவர் மு. இராமசாமி மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் 'தோற்பாவை நிழற்கூத்து' என்ற தலைப்பில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்தார். அப்போது தோற்பாவைக் கூத்துக் கலைஞர்கள் நிகழ்த்திய இராமாயணத்தை ஒலிநாடாவில் பதிவு செய்து பின்னர்க் குறிப்பேட்டில் அதனை அப்படியே எழுதினார். நாட்டுப்புறப் பாடல்களையோ, நாட்டுப்புறக் கதைப் பாடல்களையோ பதிப்பிக்கும்போது அவற்றில் சிறிது கூட மாற்றம் கூடச் செய்யக்கூடாது என்பது நாட்டுப்புற ஆய்வாளர்கள் கருத்தாகும். அப்போதுதான் மக்களின் பண்பாட்டையும் சமூக அமைப்பையும் காலத்தையும் உணர்ந்து கொள்ள முடியும் என்கின்றனர். நாட்டுப்புற ஆய்வாளர்களின் கருத்துப்படியும், இந்நூலினை மதிப்பீடு செய்த கலைமாமணி முத்துக்கூத்தன் அவர்கள் தோற்பாவைக் கூத்துக் கலைஞர்கள் நிகழ்த்திய இந்த நூலினை எந்தவிதமான மாற்றமும் இன்றி அப்படியே பதிப்பிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளபடியும்

முனைவர் மு. இராமசாமி பதிப்பித்த 'இராமாயணத் தோற்பாவை நிழற்கூத்து' என்ற இந்நூல் எவ்விதமானத் திருத்தமும் இன்றி அப்படியே பதிப்பிக்கப்படுகிறது.

இந்நூலினைப் பதிப்பித்த முனைவர் மு. இராமசாமி நாடறிந்த நாடகக் கலைஞர்; நாடக இயக்குநர்; சிறந்த ஆய்வாளர்; தமிழ்ப் பல்கலைக் கழக நாடகத் துறைப் பேராசிரியர்; தமிழ் நாடக மரபினை முற்றிலும் ஒதுக்காமல் புதுமை காண விரும்புபவர்.

இவ்வாறு பல்வேறு பரிமாணங்களைப் பெற்றுள்ள முனைவர் மு. இராமசாமி அவர்கள் பதிப்பித்த 'இராமாயணத் தோற்பாவை நிழற் கூத்து' என்ற இந்நூலினை இந்நிறுவனம் வெளியிடுகிறது. இவருடைய நாடகப் பணியும் நாட்டுப்புற ஆய்வும் மேன்மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகின்ற இந்நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு சு. இராமகிருட்டிணன் இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்நூலினை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த ஸ்ரீ விக்னேஷ் அச்சகத்தாருக்கு எங்கள் நன்றி.

இயக்குநர்.

கால் நூற்றாண்டுக் காலத்தில் கண்முன்னே கரைந்து போன ஒரு வரலாறு

'எல்லாம் மாயைதானா - ஏழை
எண்ணம் யாவும் வீணா?
ஏழை எந்தன் வாழ்வில் - இனி
இன்பம் காண்பேனா? ...

சரியாக இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு (*17.11.1973*) மதுரை அவனியாபுரம் அருகிலுள்ள பெருங்குடியில் நான் முதன்முதலாகப் பதிவு பண்ணிய மயில்ராவணன் தோற்பாவை நிழற்கூத்து நிகழ்ச்சியில் பதிவான முதற் குரலே இதுதான்! எல்லா முதல் அனுபவங்களும் அழுத்தமாய் நின்றுவிடுவதைப் போலத்தான் இதுவும்! அக்குரலின் தூக்கலான சோகத்தில், கொஞ்ச நேரம் வரையும், அது திரைப்படப் பாடல் என்பது மறந்து, அவர்கள் வாழ்வைச் சித்திரப்படுத்தும் - எனக்குப் பழகிப்போன - ஒரு பாடல் என்பதாகவும், எங்கோ இதைக் கேட்டிருக்கிறேன் என்பதாகவுமே மனசு கிடந்து தவித்துக் கொண்டிருந்தது. இப்பொழுதும் அந்நிகழ்ச்சி காலை விடியலாய் மெல்ல மெல்ல நினைவில் அழுத்தமாய்ப் படர்வது தெரிகிறது. அம் மராட்டிப் பெண்மணி தோற்பாவை நிழற்கூத்து நிகழ்த்தும் கூடாரத்தின் முன் அமர்ந்து பாடுகையில், சோகத்தில் நனைந்திருத்த அப்பெண்ணின் இருப்பு, எந்திரமாய்ச் சுதிப்பெட்டியில் இயங்கும் விரல்கள், விரலின் அசைவாய் வாழ்வைத் தேடி அலையும் குரல், அக்குரலில் தோய்ந்திருந்த சோகம் ஆகியவை இப்பொழுது நினைக்கும் போதும், அப்படியே மன அதிர்ச்சியாய் இரத்த நாளங்களை அழுத்தமாய் வலிக்கச் செய்கின்றன. தோற்பாவை நிழற்கூத்துக் கலைஞர் தம் வாழ்வியலின் குறுக்குவெட்டுத் தோற்றமாகத் 'தேவதாஸ்' திரைப்படத்தின் அந்தப் பாடல் புது அர்த்தத் தினைக் கொடுத்திருந்தது, பிறகுதான் புரியத் தொடங்கியது.

உடலெங்கும் புழுதிக் கவசமிட்ட இரண்டு குழந்தை களுடனும், காலமான தன் கணவனின் தம்பியுடன் பெற்ற கைக்குழந்தையுடனும், வாழும் வகைதேடி, கருப்பையாராவ் குழுவில் அன்றன்றைக்குப் பாட்டுப்பாடிக் கதைக்கு 'உம்'

கொட்டிய பங்குப் பணத்தில் வாயை மட்டுமே கழுவிக் கொண்டிருந்த அந்தப்பெண் இப்பொழுது எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை. நான் சந்திக்கும் தோற்பாவை நிழற்கூத்துக் கலைஞர்களிடமிருந்தும் அந்தப் பெண்ணைப் பற்றிச் சரியான பதில்களில்லை. அந்தப் பெண்ணின் குரல் இன்னமும் அதே அதிர்வுகளை உள்ளத்தில் எழுப்புமா என்பதும், அந்தக் குடும்பம் இப்பொழுது எப்படிப் பிழைத்துக் கொண்டிருக்கிறது என்பதும் தெரியவில்லை. கால் நூற்றாண்டுக் காலத்தில் எவ்வளவோ மாற்றங்கள் நிகழ்ந்திருக்க வாய்ப்புண்டு.... தனிமனித வாழ்வில், சமூகத்தில் என்று! மாற்றங்கள் மட்டுமே மனதில் நிற்கின்றன. மறைந்தவைகள் மறந்தவைகளாகி விடுகின்றன. பதிவு பண்ணப் பெற்றவை, வெறும் அருங்காட்சியகப் பொருளாகிவிடுகின்றன. காலம்... இது எதற்காகவும் காத்துக் கொண்டிருப்பதில்லை. காலத்தின் வேகத்திற்குக் கைகொடுக்காதவர்களைப் பற்றிக் கவலைப் பட்டுக் கொண்டிருப்பதற்கு அதற்கில்லை நேரம்! காலம் பற்றிக் கவலைப்படாத கலைஞர்கள் முடங்கிப் போய்விடுகிறார்கள். அந்தக் கலையும் முடக்குச்சாலையில் மாட்டிக் கொண்டு திக்குத் தெரியாமல்-முன்னேறும் திசை தெரியாது-திகைக்க ஆரம்பித்து விடுகிறது. வாழும் போராட்டத்திற்கான கடைசி எதிர்பார்ப்பை யும் கைவிட்ட நிலையில் உள்ள தோற்பாவை நிழற்கூத்தின் நிலையும் இதுதான்! பெரும்பான்மைக் குழுக்கள் அல்லது மொத்தக் குழுக்களுமே (குடும்பங்கள்) தோற்பாவை நிழற்கூத்தைத் தங்கள் வாழ்வியல் தொழிலாக இப்பொழுது நடத்தக் காணோம். இந்தக் கால்நூற்றாண்டுக் காலத்தில் கண்ணெதிரே கண்ட உண்மை இது! காலத்துடனான தங்கள் கடைசிப் போராட்டத்தில் கலையைக் காவு கொடுத்துவிட்டு, தாங்கள் மட்டும் தப்பித்தோம் பிழைத்தோம் என அகப்பட்ட தொழில் செய்து அன்றாடங் காய்ச்சிகளாய் ஆகிப் போனார்கள் பலர். இதுவே, கூர்தீட்டலுக்கு வாய்ப்பற்ற, சக்திமிக்கத் தகவல் தொடர்பு ஊடகங்களின் கிடுக்கிப்பிடியில் மாட்டிக் கொண்டிருக்கும் பெரும்பான்மைக் கலைகளுக்கும் நிகழ்ந்து வரும் குரூரமாகும். தோற்பாவை நிழற்கூத்தும் இதிலிருந்து விடுபட முடியாமல் திணறுகிறது.

ஊர் ஊராகக் குடும்பத்துடன் சென்று கூடாரம் போட்டு, நிகழ்ச்சி பார்க்க நுழைவுச் சீட்டு வைத்துத் தோற்பாவை நிழற்கூத்து நடத்தி வந்த 12 குழுக்களை (குடும்பங்களை), ஏறக்குறைய முப்பதுக்கும் மேற்பட்ட ஊர்களில் சென்று, ஆய்வு மாணவனாக இருந்த காலத்தில் சந்தித்திருக்கிறேன். அவர்களுடைய நிகழ்ச்சிகளைப் பதிவு செய்திருக்கிறேன். வாழ்க்கை முறையை நெருங்கி இருந்து பார்த்திருக்கிறேன். இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னும், இப்பொழுதும் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட தோற்பாவை நிகற்கூத்துக் குழுக்களைத் தமிழகத்தின் பல பகுதிகளில் சென்று சந்தித்திருக் கிறேன். ஆயின் இந்த இருபத்தைந்து ஆண்டு கால இடை வெளியில், இப்பொழுது எந்தக் குழுவும் தோற்பாவை நிழற்கூத்தைத் தங்கள் முழுநேர வாழ்வியல் தொழிலாகச் சார்ந்திருக்கக் காணோம். இவர்களின் இயக்கத்தின் மூலம் உயிர் பெற்ற தோற்பாவைகள் இவர்களுக்கு உயிரூட்டவில்லை என்பதுதான் சோகம்! இத்தோற்பாவைகளின் நிலையோ பரிதாபகரமானது. ஏதோ ஓர் ஊரில், பழகிய யாரிடமோ பாதுகாப்பாய் வைத்திருக்கக் கொடுத்துவிட்டு, மீண்டும் எடுத்து வந்து எங்கு வைப்பது எனும் வகை தெரியாமல், வைத்துவிட்டு வந்த ஊரிலேயே இருக்கும் எனும் நம்பிக்கையில் மட்டுமே சிலரின் தோற்பாவைகள் இருக்கின்றன. வேறு சிலரின் தோற்பாவைகளோ, தங்கள் ஓலைக் குடிசையின் எரவாணத்தில் பிளாஸ்டிக் உறையிட்டுக் கட்டுப்போட்டுக் கிடக்கின்றன. நீண்ட நாட்களாகப் பிரிக்கப்படாத அக்கட்டுகளில் ஒரு புழுங்கல் வாடை இயல்பாகவே வந்து சேர்ந்திருக்கிறது. எலி வாய்க்குத் தப்பித்தும், தப்ப இயலாமலுமாய்ப் பலரின் தோற்பாவைகள் முகந்திரிந்து காணப்படுகின்றன. இப்பாவை களை வாங்க நல்ல ஆள் கிடைத்தால், நிச்சயம் வந்த விலைக்கு விற்றிருப்பார்கள். 'எந்தையின் சிந்தை'யில் வெளிப்பட்டவை எனும் மரபின் இறுக்கமெல்லாம் தளர்ந்து, நீண்ட நாட்களாகி விட்டதாகத் தோன்றுகிறது. மரபை விடவும் யதார்த்த வாழ்க்கை அனுபவம் பெரிய ஆசானாகி அவர்களுக்குத் திசை காட்டத் தொடங்கிவிட்டிருக்கிறது. மரபுடன் மாரடித்துக் கொண்டிருப்பதை விடவும், அடுத்த கட்ட உணவு, எப்படிப் பிழைத்தால் கிடைக்கும் என்பதே அவர்களின் இன்றையப்

பெரும் தேடுதலாகி உள்ளது. புதிய வாழ்க்கைக்கு அவர்கள் பழகிப் போய்விட்டது தெரிகிறது. அல்லது புதிய வாழ்க்கை அவர்களுக்குப் பழக்கப்பட்டு விட்டது. முடிக்கிடக்கும் தோற் பாவைக் கட்டுகளில் அவர்களின் கலை வாழ்வு புதையுண்டு போனதை ஏற்றுக் கொண்டும், கற்ற வித்தை அவர்களிட மிருந்து கரைந்து போய்க் கொண்டிருப்பதை உணர்ந்து கொண்டும், புது வாழ்விற்கான பிடிமானங்களுக்காக அலை மோதிக் கொண்டிருக்கின்றனர்.

தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றம் கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பித்த முதல் தோற்பாவை நிழற்கூத்துக் கலைஞர் பரமசிவராவ் சோதிடம் பார்ப்பதைத் தன் வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிருக்கிறார். காலையில் சோதிடம் பார்க்க அவர் கிளம்புகையில், அவர் மனைவி, கிராமத்து அழகு சாதனங்களைத் தூக்கிக் கொண்டு வியாபாரம் பார்க்கக் கிளம்பி விடுகிறார். யாரும் விரும்பி அழைத்தால் வேண்டுமானால் இருக்கின்ற பழைய பாவைகளைக் கொண்டு தோற்பாவை நிழற்கூத்து நடத்தச் செல்கின்றனர். தோற்பாவை நிழற்கூத்து, முன்போல் அவர்களுக்கு, வாழ்வியலுக்கான முழுநேரத் தொழிலாக இல்லை. அவரின் மகனும் மகளும் தோற்பாவை நிழற்கூத்தை விட்டுத் திசை மாறிப்போய் நாட்களாகின்றன. மைய சங்கீத நாடக அகாடமியின் பாராட்டைப் பன்முறை பெற்ற முருகன்ராவும் கூட, இப்பொழுது இருக்கின்ற தோற் பாவைகளை யார் தலையில் கட்டுவது என்பதிலேயே தன் நேரத்தைக் கரைத்துக் கொண்டிருக்கிறார். யாரும் அழைத்தால் மட்டும் பாவைக்கூத்து; இல்லையேல் கிராமத்தில் சிறு சிறு வியாபாரம்! இதுதான் இப்போதைக்கு வாழ்க்கையாயிருக் கிறது. நிஜநாடக இயக்கம் நடத்திய இருள்யுகம் நாடகத்தில் தோற்பாவை நிழற்கூத்தை அருமையாகப் பயன்படுத்த உதவிய கலைஞர் துரைராஜ்ராவ், மைய அரசின் இசை நாடகப் பிரிவு வழங்கும் வாய்ப்புகளுக்காகத் தபால்காரரின் வரவை எதிர்பார்த்தே காத்துக் கிடக்கிறார். இப்பொழுது ஊர் ஊராகப் போய் கூத்து நடத்தக் காணோம். எப்பொழுதோ வரும் வாய்ப்புகள் இவர்களுக்குப் போதுமானதாகயில்லை. தொடர்ச்சியான பராமரிப்பு இவர்களுக்கு எந்த இடத்திலிருந்தும்

வரவில்லை. கிராமத்தைச் சார்ந்தும், மராட்டியர்கள் என்பதால் அக்கிராமத்தவர்களிடமிருந்து சமூக, பொருளாதார, இனரீதியில் அந்நியப்பட்டும் வாழும் இவர்கள், தோற்பாவை நிழற்கூத்தை விட்டு, திரை இசைப் பாட்டுக்கு ஆட்டம் ஆடி, அதிலும் சோர்ந்து போக, குடைசரி செய்தல், பெண்கள் அழகுசாதனப் பொருட்கள், ஊதல், பலூன் விற்பனை என்று ஏதேதோ கிடைக்கும் பிடிமானங்களைப் பிடித்து மேலெழும்பத் துடிக்கின்றனர். பல நேரங்களில் கிராமத்திடம் 'கையேந்தி'யே வயிற்றைக் கழுவி வருகின்றனர் என்பது நம் காலத்தியக் கலை வாழ்வின் வேதனை! அறிந்தோ அறியாமலோ நம் காலத்தில், அதன் அழிவிற்கு நாம் 'புறஞ்சேரி' மக்களாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அவர்கள் கைக்கொண்டிருக்கும் கலை ஆதாரத்தோடேயே அவர்களை வாழ்விப்பதற்கான திட்டமொன்று, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கான கலை, பண்பாட்டு உட்குழு உறுப்பினனாக இருந்த என்னால் முன்வைக்கப்பட்டது. ஆயின் என்ன காரணத்தாலோ அது கவனத்திற்குரியதாக வில்லை. 1997 செப்டம்பர் - அக்டோபர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்திய தோற்பாவை நிழற்கூத்துப் பட்டறையின் தொடக்க நிகழ்வில், இயல் இசை நாடகமன்றச் செயலர் திரு. சந்திரசேகர் முன்னிலையிலும் அத்திட்டத்தை மீண்டும் கூறும் வாய்ப்புக் கிடைத்தது. நான் வழங்கிய திட்டத்தைப் பொருத்தவரை, சிக்கல் எந்த இடத்தில் உள்ளதென்று தெரிய வில்லை. இத்திட்டத்தின் மேலான கவனம், நத்தையின் நகர் வளவு கூட நடைபெற்றிருக்கவில்லை எந்த இடத்திலும்! இந்த இடத்தில் அத்திட்டத்தைப் பதிவு பண்ணுவது பொருத்தமாய் அமையுமென்று கருதுகிறேன்.

இயல் இசை நாடக மன்றம் 100 பொம்மலாட்டக் கலைஞர் களுக்கு மாதம் ரூ.200/- வீதம் வழங்க இருப்பதாகத் தோற் பாவை நிழற்கூத்துப் பயிற்சிப் பட்டறைக்கு ஒரு வாரம் முன்னால் பத்திரிகைகளில் செய்திக்குறிப்பு ஒன்று வெளியாகி யிருந்தது. இதனால் அக்கலைக்கோ அக்கலையை நிகழ்த்தும் கலைஞர்களுக்கோ தொடர் செயல்பாட்டிற்கான உந்துதல் கிடைக்கப் போவதில்லை என்று பயிலரங்கத் தொடக்க

நிகழ்விலும் குறிப்பிட்டேன். ஆயின் இது நடைமுறைக்கு வந்ததாகத் தெரியவில்லை. வேறு மாதிரியான உதவி, இயல் இசை நாடக மன்றத்தால் தற்பொழுது தோற்பாவை நிழற்கூத்துக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழகத்திலுள்ள 10 தோற்பாவை நிழற்கூத்துக் குழுக்களுக்குத் தோற்பாவைகள் வாங்க முன்பணமாக ரூ.5000/- கொடுத்து, பின் ஒரு குறிப்பிட்ட நாளில் சென்னைக்கு அழைத்து நிகழ்ச்சி நடத்தச் செய்து, மீதிப் பணம் ரூ.5000/- வழங்குவதாக ஏற்பாடு. 1998 அக்டோபரில் சென்னையில் இதற்கான நிகழ்ச்சி நடந்ததாகத் தெரிகிறது. இதுவுமே கூட கலையின் தொடர் செயல்பாட்டிற்கு எந்த அளவிற்கு உதவும் என்று தெரியவில்லை. ஒவ்வோராண்டும், ஒதுக்கப் பெற்ற நிதிக்குள் கலைஞர்களுக்கு உதவத் துடிக்கும் இயல் இசை நாடக மன்றத்தின் முயற்சியை மதிக்கும் அதே நேரத்தில், இதன் பயனும் கலையின் தொடர் செயல் பாட்டிற்குக் கூடுதலாக உதவி ஏதும் செய்துவிடாது என்பதை-யும் கூறத்தான் வேண்டியுள்ளது. குழந்தைகளிடம் கொண்டு செல்வதற்கு ஏற்ற வகையிலான புதிய கதைப் பொருள் ஒன்று கொடுத்து, அதற்குரிய பொம்மைகளைப் புதிதாகச் செய்வதற்கு அவர்களை ஊக்கப்படுத்தினாலாவது, குறைந்த பட்சம் ஒரு புதிய முயற்சியாவது கைகூடியிருக்கும். அதன் மூலம் பள்ளிக்கூடங்களை அவர்கள் அணுகுவது எளிதா யிருக்கும். அதுவன்றி அவர்கள் ஏற்கனவே நடத்திக் கொண்டிருக்கும் ஒரு கதையையே, ஏற்கனவே வைத்திருக்கும் தோற்பொம்மைகளைக் கொண்டு (கலந்து கொண்ட தோற் பாவை நிழற்கூத்துக் கலைஞர்கள் கூறியது) நடத்திச் செல்ல அனுமதிப்பது பணத்தை வேறு வழியில் செலவு செய்ய வழி வகுத்துக் கொடுத்துவிடும். கொடுத்திருக்கிறது என்பதே உண்மை. இது, கலை வளர்ச்சிக்கு எந்த அளவில் கூடுதலாக உதவிடும் என்பது தெரியவில்லை. அவர்கள் வாழ்க்கைப் பாட்டை நகர்த்தக் கொஞ்ச காலத்திற்கு வேண்டுமானால் உதவலாம். ஏனெனில் இந்தக் கதைகளைக் கொண்டும், இந்த பொம்மைகளைக் கொண்டுமே அவர்களால் வாழ்க்கைப் பாட்டைத் தொடர்ந்து ஓட்ட முடியவில்லை என்பதே உண்மை. கலை விருத்திக்கு உதவும் மனப்பான்மையை

ஊட்டும் விதத்திலும், தொடர் கலைச் செயல்பாட்டில் ஈடுபடத் தூண்டும் விதத்திலும், அதன் மூலம் சமூகப் பயன்பாடு பயன்தரத்தக்க வகையில் உருவாகும் நிலையிலும் அந்தக் கலைக்கும் கலைஞருக்கும் உயிரூட்ட வேண்டும். அப்பொழுது, தகவல் தொடர்பு ஊடகங்கள் தாங்களாகவே இக் கலைஞர்களைத் தேடிவருவதும் நிகழும். இன்று, இதுவரை நடத்தி வந்த எல்லாக் கதை நிகழ்ச்சிகளையும் நடத்தக் கூடிய முழுத்திறன்மிக்க தோற்பாவை நிழற்கூத்துக் கலைஞர்கள் மிகவும் சொற்பமாகவே இருக்கின்றனர். கூத்தின் தொடர்ந்த பழக்கம் கைவிட்டுப் போனதால் பல கதை நிகழ்வுகளின் பல பகுதிகள் அவர்கள் கைவிட்டும் போய்விட்டன என்பது பல தோற்பாவை நிழற்கூத்துக் கலைஞர்களிடம் பேசிக் கொண்டிருக்கையிலும், அவர்களின் நிகழ்ச்சிகளைப் பார்க்கையிலும் தெரிகிறது.

தோற்பாவை நிழற்கூத்தின் கலைவீர்யத்தை உயிர்த் துடிப்பாய் இன்றும் உருவாக்கிக் காட்டும் திறனுள்ள 10 தோற்பாவை நிழற்கூத்துக் கலைஞர்களைத் தமிழகத்திலிருந்து தேர்வு செய்து, அவர்களைத் தமிழ்ப் பண்பாட்டு ஆக்கத்தை தன் உயரிய நோக்கமாக மேற்கொண்டு வரும் நிறுவனங்களான இயல் இசை நாடக மன்றம் / உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் / தமிழ்ப் பல்கலைக் கழகம் / ஆசியவியல் நிறுவனம் / பூம்புகார்க் கலை நிறுவனம் / சுற்றுலாத்துறை / ஊரக வளர்ச்சித் துறை / நாட்டுப்புறவியல் ஆய்வு மையம் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு நிறுவனம் தத்தெடுத்துக் கொள்ளலாம். தேர்வு செய்யப் பெற்ற கலைஞர்கள் தங்கள் குடும்பத்துடன் அந்நிறுவனத்தை யொட்டிக் குடிபெயர்ந்து வாழவேண்டும். அக்கலைஞர் களுக்குக் குறைந்தது மாதம் ரூ.3000/- ஊதியம் வழங்க வேண்டும். இதன் மூலம் அவர்கள், தாங்கள் வாழுமிடங்களில் உணவிற்காகக் கையேந்தாமல், வானத்தைக் கூரையாக்கிப் படுத்துறங்காமல், புதிய சூழலில் புது வீடு வாடகைக்கு எடுத்துச் சுயசார்புடன் வாழ வழி ஏற்படுத்திக் கொடுக்கப் படுகிறது. பன்முக வளர்தன்மைகளை உள்முகமாய்க் கொண்டு ஒன்றுடன் ஒன்று இணைந்து இத்திட்டம் நிகழ வேண்டும். தோற்பாவைகள் உருவாக்கம் அதில் ஒன்று. பாரம்பரியம் மிக்கதும், நவீனமயமானதுமான கலை வேலைப்

பாடமைந்த தோற்பாவைகளை நுணுக்கமாக உருவாக்குவ தென்பது இக்கலைஞர்களின் முக்கியப் பயனாயிருக்க வேண்டும். தற்பொழுது வெளிநாட்டவர்களும், தரகர்களும் பல தோற்பாவைகளை வாங்கிச் செல்கின்றனர். ஆயின் இதுவே ஒரு நிறுவனம் வழி நிகழுமாயின் விலையைத் துல்லியமாக நிர்ணயம் செய்து, தரத்துடன் விற்கமுடியும். கலைஞர்கள் ஏமாற்றப்பட மாட்டார்கள். மிகச் சிறப்பான தரத்தில் அமையுமாயின் அறை அலங்காரப் பொருட்களாக, அழகுக் கலைப்பொருட்களாக அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணியையும் பெருக்க முடியும். தோல்களைப் பதனிடல், துளையிடல், இயற்கையான பழைய வண்ணங்களை மீட்டுருவாக்கம் செய்தல் போன்றவற்றிற்கான நவீன தொழில் நுட்பக் கருவிகள் மட்டுமே இத்திட்டத்திற்கான நிரந்தரச் செலவின் கீழ்வரும். மற்றபடி, தோல்கள், வண்ணங்கள் போன்றவை கலைஞர்களின் ஊதியங்களைப் போன்று தொடர்ச் செலவாயமையும். ஆண்டொன்றுக்குக் குறைந்தது 1200 பாவைகள் உருவாக்கப்பட வேணடும். ஒரு தோற்பாவை நிழற்கூத்துக் கலைஞர் மாதம் ஒன்றுக்குப் பத்து தோற்பாவைகள் உருவாக்குதல் எனும் கணக்கில்! பாவை யொவ்வொன்றும் மிகக் குறைந்த விலையில் ரூ.500/க்குத் தாராளமாக விற்க முடியும். தொடக்க விற்பனை என்பது கொஞ்சம் சிரமம் தரக்கூடும். ஆயின் அழகிய வேலைப் பாடுடன் கூடிய அனைத்துப் பாவைகளையும் விற்கும் வழிவகைகளையும், பாவைகளைக் கூடுதலாகச் செய்யும் வாய்ப்பை உருவாக்கும் வழிவகைகளையும், பாவைகளின் விலையைக் கணிசமாக உயர்த்தும் வழிமுறைகளையும் மேற்கொண்டால், நிச்சயமாகக் கையைக் கடிக்காமல், இலாபத் துடன் ஒரு தொழிலை நடத்துதலும், பத்து தோற்பாவை நிழற்கூத்துக் கலைஞர் குடும்பங்களை வாழவைத்தலும் ஒருசேர நடந்தது போலாகிவிடும். இத்திட்டத்தின் செயல்பாடு மூன்றாண்டுகளுக்கு நிகழும் என்று கணக்கிட்டுப் பார்க்கலாம். மறு மதிப்பீட்டின் அடிப்படையில் இத்திட்டத்தின் பயனைப் பொருத்து, இத்திட்டத்தை மேலும் மூன்றாண்டுகளுக்கு நீட்டலாம் அல்லது மூன்றாண்டு காலத்துடனேயே நிறுத்திவிடலாம்.

விபரம்	நிரந்தரச் செலவினம் (மூன்றாண்டுகள்)	தொடர் செலவினம் (மூன்றாண்டுகள்)	பாவைகள் மூலம் வரவு (மூன்றாண்டுகள்)
1. கலைஞர்களின் ஊதியம் ரூ. 10 × 3000 × 36 மாதங்கள்	-	10,80,000.00	-
2. தோல்கள் வண்ணங்கள் இத்யாதி 100 × ரூ.100 × 36	-	3,60,000.00	-
3. தட்டுமுட்டுச் சாமான்கள் & நவீனக் கருவிகள்	1,50,000.00	-	
4. பாவைகள் விற்பனை மூலம் வரவு 1200 × ரூ.500 × 3	-	-	18,00,000.00
5. அஞ்சல் தொடர்பு மற்றும் இதரச் செலவினம்	-	10,000.00	-
	1,50,000.00	14,50,000.00	18,00,000.00

இதன் மூலம் மூன்றாண்டுகளுக்கான உபரி வருமானம் ரூ.2,00,000/- ஆகும்.

புதிய கதைகளைத் தோற்பாவை நிழற்கூத்து நிகழ்ச்சியாக்கத் தொடர்ந்து முயல வேண்டும். குழந்தைகளுக்கு நீதி புகட்டும் பஞ்சதந்திரக் கதைகள், தீண்டாமைக் கொடுமை, ஒற்றுமையின் வலிமை ஆகிய கருத்துக்களைக் கொண்டு, வாழும் சமூகத்திற்கு உடனடிப் பயன் தரத்தக்க வகையில் சோதனைப் படைப்பாக்க முயற்சிகள் தோற்பாவை நிழற்கூத்து வடிவில் உருவாக்க அக்கலைஞர்களைத் தயார்ப்படுத்த வேண்டும். கற்றவர்களான நாம், கருத்துக்களை நாடகமாக்கி அதை அவர்களிடம் கொடுத்து அப்படியே நிகழ்த்தச் சொல்லாமல், சம்பவங் களையும் சம்பவங்கள் வலியுறுத்தும் கருத்துக்களையும் அவர்களிடம் சொல்லி, கூத்துப் பனுவலை அவர்களே உருவாக்கிக் கொள்ள வகை செய்ய வேண்டும். என் சொந்த அனுபவத்தில் இதுதான் சரியாகத் தெரிகிறது. இந்திராகாந்தி தேசியக் கலைமையத்திற்காக 1994 ஆம் ஆண்டு முருகன்ராவ், துரைராஜ்ராவ் ஆகிய தோற்பாவை நிழற்கூத்துக் கலைஞர்களை இணைத்து 'தர்மயுத்தம்' எனும் பெயரில் மகாத்மா காந்தி பற்றிய அரைமணி நேரந் தோற்பாவை நிழற்கூத்து நிகழ்ச்சி ஒன்று உருவாக்கினேன். ஒரு மாதம் ஒத்திகை எடுத்தும் 10 முறைகளுக்கு மேல் நிகழ்த்தியும் இன்னும் அது அவர்கள்

உள்ளிலிருந்து வரவில்லை. அவர்கள் உள்போய்ச் சேர வில்லை. ஒவ்வொரு முறையும் பாவையாட்டும் கூடாரத்தி லிருந்து அவருக்கு அடி எடுத்துக் கொடுக்க வேண்டிய தாயிருந்தது. அரைமணி நேர நிகழ்வு என்பதால் பாவையாட்டிக்கு யோசிப்பதற்கு ஓய்வே இன்றி, நிகழ்ச்சி இறுக்கமாக இருந்ததுகூட, காரணமாயிருந்திருக்கலாம். ஆகவே கருத்தை அவர்களிடம் கூறி, அவர்களையே நிகழ்ச்சியை உருவாக்க வைப்பதுதான் தொடக்கத்தில் நல்லது.

இதற்கான புதிய பாவைகளைக் கூடுதல் செலவின்றி, மீதப்படும் தோல்களைக் கொண்டே அல்லது மிகக் குறைவான தோல்களை வாங்கிச் செய்யலாம். வார நாட்களின் மாலைப் பொழுதுகளில் ஆர்வமுடைய தேர்வு செய்யப்பெற்ற வேலைவாய்ப்பற்ற அல்லது பகுதிநேரத் தொழில் செய்யும் 10 படித்த இளைஞர்களுக்குத் தோற்பாவை நிழற்கூத்து நுணுக் கங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவர்கள் பயிற்சி பெறும் விதத்தில் அவர்களைக் கொண்டே புதிய பாவைகளை உருவாக்க வேண்டும். பயிற்சி பெறும் வேலைவாய்ப்பற்ற படித்த இளைஞர்களுக்கு மாதம் ரூ.750/- உதவிப் பணம் வழங்கலாம். ஆண்டுக்கு இதன் மூலம் செலவு ரூ.90,000/- தான். ஒவ்வோராண்டும் வெவ்வேறு பத்து பத்து பேருக்கு எனும் கணக்கில் மூன்றாண்டுகள் பயிற்சி கொடுத்தாலும் மொத்தச் செலவு ரூ.2,70,000 ஆகிறது. தோற்பாவை விற்பனையின் மூலம் கிடைத்த உபரி வருமானத்தைக் கழித்துப் பார்த்தால் கூடுதல் செலவினம் என்பது மூன்றாண்டுகளுக்குமே சேர்த்து வெறும் ரூ.70,000/- தான். 30 இளைஞர்கள் படைப்பாக்க முயற்சியில் தங்களைக் கரைத்துக் கொள்ள முன்வருகையில், 10 தோற்பாவை நிழற்கூத்துக் கலைஞர்கள் தன் கலை உன்னதத்திற்காக உழைக்க முன் வருகையில் இந்த 70,000/- அல்லது ஆண்டிற்கு 23,000/- என்பது மதிப்பற்ற சிறுதொகையாகிவிடும். இதுபோல் பயிற்சி பெற்ற இளைஞர் களைக் கொண்டு சாதி மத நல்லிணக்கம், சமூகப் பொறுப் புணர்வு, கூடி வாழ்தலின் அவசியம் ஆகிய சமூகக் கருத்தாக்கங் களை படைப்புணர்வோடு உருவாக்க முயலுகையில் கலையின் சமூகப் பயன்பாடு பரிமளிக்கும். சமூகத்திற்கும்

கலையின் மீது மட்டற்ற மரியாதை உண்டாகும். இதன்மூலம் குறிப்பிட்ட சாதியினர் மட்டுமே இக்கலைக்கு உரியவர் எனும் நிலைமாறி ஆர்வமுடைய எவரும் இக்கலைக்கு வாரிசாகக் கூடிய விந்தை நிகழும். தோற்பாவை நிழற்கூத்தைப் பொருத்தவரை, இதை நிகழ்த்த, மிகக் குறைவான நிலையில் ஒருவர் போதுமானது. மேற்கொண்டு இசைக்கருவிகள் இசைக்க இருவர் ஆக மூன்று பேர் மொத்தக் கூத்து நிகழ்விற்கும் போதும். மிகக் குறைந்த கலைஞர்களைக் கொண்டு மிகக் குறைந்த செலவில் மிகச் சக்தியுள்ள படைப்பாக்க உந்துதல் கொண்ட கலையாக இது விளங்கு கிறது. இச்சோதனைப் படைப்புகளை, தங்கள் பாரம்பரியப் படைப்புடன் இணைத்து ஒவ்வொரு மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை அல்லது ஏற்று நடத்தும் நிறுவனத்தின் சூழலுக்கேற்ப மாதத்தில் குறிப்பிட்ட ஒரு நாளில் அவசியம் நடத்த வேண்டும். ஒவ்வொரு மாதத்தின் முதல் ஞாயிறன்றும் அல்லது அந்தக் குறிப்பிட்ட நாளன்று குறிப்பிட்ட இடத்தில் நிச்சயம் இது நிகழும் என்கிற உறுதி பார்வையாளர்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் அப்பகுதியைச் சேர்ந்த அனைத்து நிறுவனங்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும். இதன்மூலம் அக்கலைஞர்கள் மற்றும் பயிலுநர்கள் தொடர்ந்த படைப் பாக்கத்தில் ஈடுபட வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது. இதன்மூலம் கிடைக்கும் சிறு வருமானமானது நிகழ்ச்சி நடத்தும் தயாரிப்புச் செலவினங்களைச் சரிக்கட்டப் போதுமானதா யிருக்கும்.

இதுபோக, பக்கத்திலுள்ள தொடக்கப் பள்ளிகளைத் தத்தெடுத்து வாரம் ஒருவேளை எனும் கணக்கில் அக்குழந்தை களின் பாடங்களைத் தோற்பாவை நிழற்கூத்து வழிச் சொல்லிக் கொடுக்க முயல வேண்டும். இதன் மூலம் படைப்புநிலைக் கல்விச் செயல்பாட்டிலும் தோற்பாவை நிழற்கூத்தை ஈடுபடுத்த வேண்டும். வாழும் வகை தேடி மடிப்பிச்சை கேட்கும் நிலையிலிருக்கும் இக்கலை, நவீன வாழ்வியலுக் கேற்ற நவீனக் கலையாக உயரும் என்பது ஒன்று. தோற்பாவை நிழற்கூத்துக் கலைஞர்கள் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர் எனும் சமூக அங்கீகாரம்

பெறுகின்றனர் என்பது இன்னொன்று! கையேந்தி நிற்பவரின் கலை எனும் கீழ்நோக்கிய பார்வை, கற்றுத்தரும் ஆசிரியரின் கலை எனும் மேல்நோக்கிய பார்வையாக மாறி, அக்கலைக்கு உரிய மரியாதை கிடைக்கச் செய்கிறது என்பது முக்கியமானது.

இதுபோக, மற்றைய விடுமுறை நாட்களில், தங்கள் சொந்த முயற்சியில், அழைக்கும் இடங்களுக்கோ அன்றி தாமே விரும்பிச் செல்லும் இடங்களைத் தேர்வு செய்து கொண்டோ சுயமாகச் சென்று நிகழ்ச்சிகள் நடத்தி, தங்கள் சொந்த வருமானங்களைப் பெருக்கிக் கொள்ளவும் வகை செய்து கொடுக்கப்பட வேண்டும்.

மூன்று ஆண்டுகள் இத்திட்டத்தைச் சோதனை முயற்சியாக நடத்தினால், உயர்தரத்துத் தோற்பாவை நிழற்கூத்துக் கலைஞர்கள் பத்துபேர் எந்தச் சூழலிலும் அக்கலையைக் கைவிட்டு விடாமல் புதிய புதிய முயற்சிகளில் ஈடுபடக் கூடியவர்களாக எந்தக் காலமும் விளங்குவர். இந்த அனுபவத் தினடிப்படையில் இன்னொரு 10 கலைஞர்களை அடையாளங் கண்டு இதே முயற்சியைத் தொடரலாம். இதன் பயன் இப்பொழுது தெரியாது. இது நிகழ்ந்தால், 10 ஆண்டுகளுக்குப் பின் தோற்பாவை நிழற்கூத்து, தமிழரின் பொதுக் கூத்துக் கலையாய், குழந்தைகளுக்கான கலையாய் மிளிர்ந்திருக்கும். குழந்தைகளின் படைப்பாக்கத்தைப் புத்தி பூர்வமாகப் பேணும் வழிவகைகளைக் கொண்டிருக்கும். நாட்டின் பண்பாட்டு வளர்ச்சியும் பிரமிக்கத்தக்கதாய் இருக்கும். இது உண்மை. குழந்தைகள் எல்லோரும் பாவையாட்டிகளாக உருவாகி விடுவர் என்பது இதன் பொருளில்லை. அது உயர்வான ஒன்றும் இல்லை. ஆனால் இப்படைப்புத் திறன், அக்குழந்தை கள் ஈடுபடும் ஒவ்வொரு துறையையும் படைப்பு வீர்யம் கொண்டதாக மாற்றும் அருமருந்தாய் விளங்கும் என்று உறுதியாக நம்பலாம். இது தோற்பாவை நிழற்கூத்தோடு மட்டும் முடிந்துவிடுவதில்லை. குழந்தைகளின் படைப்பாக்கச் செயல்பாட்டினால் புதிய தோற்பாவை நிழற்கூத்து உருவாகும் வாய்ப்புள்ளது. தோற்பாவை நிழற்கூத்துப் பற்றிப் பேசுவதால் இங்கு இது ஒன்றைப் பற்றி மட்டுமே கூறவேண்டியுள்ளது. ஆயின் அழிந்துபட்டுக் கொண்டிருக்கும் நிலையிலுள்ள

அனைத்துக் கலைகளையும் அதனதன் சமூகத் தேவை கருதி வெவ்வேறு நிறுவனங்கள் இதுபோல் தத்தெடுத்து, குழந்தைக் கல்வியின் உயர்வுக்குப் பயன்படும் வகையிலும், சமூகக் கருதாக்கத்திற்கு உதவும் வகையிலும், அவற்றைப் பயன் படுத்திக் கொள்வது அவசியமாகும். பாரம்பரியம் பேணப் படுவது, அதன்மூலம் நவீனம் முளைவிடுவதென்பது ஒருபுற மிருக்க, படைப்பு மனநிலையானது குழந்தைக் கல்வியின் வழியே ஊட்டப்படுவதானது படைப்பாக்கம் நிறைந்த உரம் மிக்க புதிய சமுதாயத்திற்கு அடிகோலும் என்று நம்பலாம். முன்வடம் இழுக்கச் சக்தியுள்ள, அதற்கான ஆத்மத் துடிப்பு நிறைந்த சிந்தனையாளர் கண்ணில் இது தாமதப்பட்டாவது விழவேண்டும் எனும் ஆதங்கமே இங்கே இதைக் குறிப்பிடக் காரணம்!

தமிழகத்தைப் பொருத்தவரை, நிகழ்த்துப்பனுவல் அப்படியே மாற்றமின்றி நூலாக வெளிவருவதென்பது நானறிந்த வரையில் இதுதான் முதலாவது, தோற்பாவை நிழற்கூத்தைப் பொருத்தவரை! கேரளத்தில் வாழ்ந்து வரும் கிருஷ்ணன் குட்டிப் புலவரின் கம்பராமாயண ஆடற்பத்து - அயோத்தியா காண்டம் மட்டும் சுவடியிலிருந்து எடுத்தெழுதி மைய சங்கீத நாடக அகாடமியால் வெளியிடப் பெற்றுள்ளது. தமிழகத் தோற்பாவை நிழற்கூத்துப் பனுவல்கள், பால காண்டம் தொடங்கி பட்டாபிஷேகம் வரை ஒரு தொடர்ச்சி யுடன் வருவதென்பதை, இன்னமும் கூட என்னால் நம்ப முடியாதிருக்கிறது. இதைக் காரியசித்தி ஆக்கியவர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குனர் முதுமுனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்கள் ஆவார். 24-25 ஆண்டுகளுக்கு முன், தோற்பாவை நிழற்கூத்து நிகழ்ச்சி நடைபெறுகிற இடத்தி லேயே பதிவு பண்ணிய நிகழ்த்துப் பனுவல்கள் இதுநாள் வரையும் முழுக்கவுமாகச் சிதைந்து போய் விடாமல் குற்று யிரும் குலையுயிருமாக நொறுங்கிக் கொண்டிருந்த நிலையில் அதற்கு உயிரூட்டிய மருத்துவராக அவர் விளங்குகிறார். 25 ஆண்டுகள் இந்தப் பனுவல்கள் அவருக்காகவே காத்திருக் கின்றன என்பதை நினைக்கையில் ஒடுகிற ஆற்று நீரில் முதல் முங்காச்சி போடுகிறபோது இதயத்திற்குள் ஏற்படும் பரவசம்

போன்ற இன்ப அனுபவம் நெஞ்சுக்குள் நிறைந்து நிற்கின்றது. தமிழகத்தில் முதன் முறையாக 1997 இல் தோற்பாவை நிழற்கூத்திற்கென்று 15 நாட்கள் பயிற்சிப் பட்டறை ஒன்று நடைபெற்றதும் அவரின் முயற்சியால் தான் என்பதை இந்த நேரத்தில் அவசியம் நினைவுப்படுத்தக் கடமைப்பட்டிருக் கிறேன். அத்தோற்பாவை நிழற்கூத்துப் பயிற்சிப் பட்டறையில் பங்கேற்ற பயிற்சியாளர்கள், நான்கு பிரிவுகளாகப் பிரிந்து தாங்கள் உருவாக்கிய நான்கு புதிய தோற்பாவை நிழற்கூத்துப் படைப்புகளைக் கலைவாணர் அரங்கில், உலகத் தோற்பாவை நிழற்கூத்து மரபில் கேரளத்தை அடையாளப்படுத்தி வரும் கிருஷ்ணன் குட்டிப் புலவரின் கேரள பாணிக் கூத்துடனும், உலகில் ஆந்திரத்தை நவீனச் சாயலுடன் அடையாளப்படுத்தி வரும் திருமதி விஜயலட்சுமியின் ஆந்திர பாணிக் கூத்துடனும், இந்திய அளவில் தமிழின் இடத்தை அழுத்தமாக அடையாளப் படுத்தி வந்துள்ள முருகன்ராவ், செல்வராஜ் ஆகியோரின் தமிழகப் பாணிக் கூத்துடனும் இணைந்து நிகழ்த்திக் காட்டினர் என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும். அதில் நிகழ்த்தப் பட்ட புதிய தோற்பாவை நிழற்கூத்து நிகழ்வுகளில் தோற் பாவை நிழற்கூத்து கலைஞர்களின் இன்றைய நிலையைத் தொட்டுக் காட்டிய சிறு படைப்பை உருவாக்கி நிகழ்த்திய குழுவைச் சேர்ந்த திரு. இராஜ்குமார் 'உயிர்ப்பாவைகள்' எனும் பெயரில் அதை அரைமணி நேரத் தொலைக்காட்சிப் படமாக இயக்க உத்வேகம் கொடுத்ததும் இந்தப் பயிற்சிப் பட்டறை தான் என்றால் அது மிகையில்லை. கலந்து கொண்டோரி டையே முதன் முறையாகத் தோற்பாவை நிழற்கூத்து எனும் வடிவத்தை அறிமுகம் செய்து வைத்து, அதில் அவர்களை ஈடுபாட்டுணர்வுடன் செயல்பட வைத்த வகையில் மிகச் சிறப்பாக அப்பட்டறை அமைந்தது. அதன் ஒருங்கிணைப் பாளராக நான் இருந்து அக்கைலஞர்களுடனும், பயிலுநர் களுடனும் முழுவதுமாக உறைந்திருந்தது மறக்க முடியாத அற்புதமான அனுபவம். என் வாழ்வின் துணையும் 'மெச்சி எனை ஊரார் புகழ்ந்தால் தன் மேனி 'சிலிர்த்த' என் இனிய பாதியுமான என் செண்பகம் உயிருக்கு மல்லாடிக் கொண்டிருந்த கொடூரம் நிறைந்த ஒரு வேளையில்தான்

இயக்குநர் ச.சு. இராமர் இளங்கோ அவர்கள் தொலைபேசி மூலம் என்னைத் தொடர்பு கொண்டு, ஒருங்கிணைப்பாளராக இருந்து அப்பயிற்சிப் பட்டறையை நடத்தித்தரக் கேட்டுக் கொண்டார். என் சூழலை எண்ணி நான் தயங்க, "நான் என் உடம்பைப் பார்த்துக் கொள்கிறேன். என்னைப் பார்த்துக் கொள்ளவும் ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் தோற்பாவை நிழற்கூத்துக்கு நீங்கள்தான் போயாகணும். இங்கிருந்தே என்னைப் பார்த்துச் சங்கடப்பட்டுக் கொண்டிருப்பதைவிட உங்களுக்குப் பிடித்தமான காரியத்தைச் செய்யுங்கள். அதுதான் உங்களுக்கு நல்லது" என்று உடனே அதற்கு ஒத்துக்கொள்ளச் சொல்லி என்னைப் பணித்த என் செண்பகத்தின் ஆசையும் இதில் கலந்திருந்ததால் எல்லா நிலையிலும் என்னால் மறக்க முடியாத ஒன்றாக இப்பட்டறை அமைந்ததில் வியப்பில்லை.

அப்பட்டரையின் நினைவாக ஒரு நூல் வெளியிட வேண்டுமென்பது இயக்குநனரின் அவா. அதைத் தெரிவித்த போது இப்பொழுது புதிதாக ஒன்று எழுதுவதைவிட, கால் நூற்றாண்டிற்கு முன் பதிவு செய்து எடுத்தெழுதிய நிகழ்த்தல் பனுவல்கள் உள்ளன. அதை வெளியிடலாமா என்று கேட்கவும், உடன் கையோடு கொண்டு வரச்சொன்ன அவரின் பெருந்தன்மைக்குத் தமிழக நாட்டுப்புற நிகழ்த்துக் கலை உலகம்தான் நன்றி கூறவேண்டும். நொறுங்கிக் கிடந்த சில பிரதிகளை மீண்டும் எழுதினேன். மயில் ராவணன் கதை இறுதிப் பகுதிகள் முழுக்கவும் எடுத்தெழுத முடியாதபடி 24-25 ஆண்டுகால அரிப்புகளைக் கொண்டிருந்தது. அது மட்டுமே இதில் வருந்தவைத்த நிகழ்ச்சி. மற்றபடி பாலகாண்டம் முதல் பட்டாபிஷேகம் வரை எப்படியோ அன்றே எழுதி வைத்திருந்திருக்கிறேன். திரும்ப ஒலிநாடாவைப் போட்டுக் கேட்டுத் திருத்தம் செய்ய வாய்ப்பில்லாது போயிற்று. 25 ஆண்டுகால இடைவெளியில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் நான் ஒப்படைத்திருந்த என் ஆய்வின் பதிவு நாடாக்கள் பற்றிய விபரம் விசாரித்த வரையில் சரிவரக் கிடைக்காததும் அதற்குக் காரணம்! நிகழ்த்துநரின் உண்மையான குரல் பதிந்துள்ள பதிவு நாடாவின் வரலாற்று

முக்கியத்துவம் யாராலும் சரிவர உணரப்படவில்லையோ என்னமோ? நல்ல வேளையாக எப்போதோ ஆய்வு மாணவனாக இருந்தபோது எழுதி வைத்தது இப்போது உதவியுள்ளது என்பதைத் தவிர, அதில் கூடுதல் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. பேச்சு மொழியில் அவர்கள் பேசியதை அன்று எடுத்தெழுதியதை மாற்றமின்றி-அதை மாற்றுவதற்கு நமக்கு எந்தச் சொந்தமுமில்லை எனும் தெளிவுடனும், மாற்றுகையில் நிகழ்த்து பனுவலின் குணங் கெட்டுப் போய்விடும் எனும் விதி மாறாமலும், பதிவு செய்த பனுவல் எவ்விதத் திரிபுமின்றி - அப்படியே எழுத்துப் பிசகாமல் இங்குக் கொடுக்க முயற்சிக்கப்பட்டுள்ளது. கொச்சை, இடக்கரடக்கல், அசிங்கம் என்று முகஞ் சுளிக்காமல், ஒரு கலைவடிவின் அந்நேர ஜீவிதம் எப்படி இருந்தது என்பது பற்றிய அறிவாக்க வரலாற்றுப் பதிவு இப்படித்தான் இருக்க முடியும் என்று நம்புகிறேன்.

தமிழகத் தோற்பாவை நிழற்கூத்தில், பாவையாட்டி, தான் இயக்கும் பாவைகளுக்காகத் தான் ஒருவரே மாற்றி மாற்றிக் குரல் கொடுக்கையில் ஏற்படும் இடைவெளியை இட்டு நிரப்பவும், நீண்ட வாக்கியங்களின்போது, பாவையாட்டி மூச்செடுக்கவிடும் இடைவெளியை அர்த்தப்படுத்தவும் பாவையாட்டி மனதில் தூண்டலை ஏற்படுத்திக் கதை கூறும் ஆவலை ஏற்படுத்தி உரையாடலை நகர்த்திச் செல்லவும், குரல் மாற்றத்தின் மூலம் ஏற்படும் பாத்திர உச்சரிப்புகளின் தவறுகளை உடனுக்குடன் செப்பனிடவும், பார்வையாளர் மனநிலையைப் பிரதிபலிக்கும் வண்ணம் நடுநடுவே கருத்துத் தெரிவித்தலும், கூடாரத்தின் முன் அமர்ந்து சுதிப்பெட்டி இசைத்துக் கொண்டிருக்கிற பெண்ணின் (பெரும்பாலும்) பணியாயிருக்கிறது. இங்கு வெளியிடப்பெற்றுள்ள நிகழ்த்துப் பனுவல்களில் 'உம்' கொட்டல் குறிக்கப்பட்டிருக்கவில்லை. நான் எடுத்தெழுதிய காலத்தில் முதலில் பதிவு செய்த மயில்ராவணன் கதைக்கு 'உம்' கொட்டலைப் பதிவு செய்து எடுத்தெழுதியிருந்தேன். ஆயின் அது கூடுதல் பணியாயிருந்தது. எல்லாப் பனுவல்களையும் 'உம்' கொட்டலுடன் எடுத்தெழுதி அதன் மேல் ஆய்வு மேற்கொள்கிற நிலை

அன்றைக்கு எனக்கில்லாது போயிற்று. ஆகவே சான்று ஒன்று மட்டும் போதுமே எனுங் கருத்தில் மயில்ராவணன் கதைக்கு மட்டும் 'உம்' கொட்டலை எடுத்தெழுதியிருந்தேன். 'உம்' கொட்டல் எவ்விதம் கதையின் நகர்த்தலுக்கு உறுதுணையாயிருக்கிறது என்பதற்கு மயில்ராவணன் கதையின் தொடக்கப் பகுதியைச் சான்றுக்கழைக்கலாம் ஒரு புரிதலுக்காக! இதோ அந்தப் பகுதி! *குறியீடு 'உம்' கொட்டலைக் குறிக்கும்.

'சைலேன்ஸ் இரைச்சல்' (அமைதி, கூச்சல்) கூடியிருக்கும்* பெரியோர்கள் எனதருமை தாய்மார்கள்* சிறுவர்கள் அனைவருக்கும் ஓர் வணக்கம் செய்துக் கொண்டேன் பபூன் ஆக்ட்காரன் (அன்பார்ந்த வணக்கம்) பெரியோர்களே!* தாய்மார்களே*! இன்று இரவு நடைபெறும் சரித்திரங்கள்* மயில்ராவணன் என்ற*.... இன்றைய தினம் மயில்ராவணனுடைய சரித்திரங்கள் நடைபெறச் செய்கிறது (ஆமா) எப்படியென்று கேளுங்கள்* அந்த ராவணன் பத்துத்தலை ராவணன்* சீதையை சிறையெடுத்து வந்ததனால்* அவன் கஷ்டப்படுவதும்* மயில்ராவணன் .... அவனுடைய தம்பி* ராவணனுடைய தம்பி மயில்ராவணன்* பாதாள லங்கையிலிருந்து* வருவதும்* அண்ணனிடத்தில் சத்தியங்கள் செய்து கொடுப்பது* எப்படியென்றால்* அந்த ராமரையும்* லட்சுமணரையும்* இரண்டு பேர்த்தையும்* காலை விடிவதற்குள்ளாக அவனை நான் வெட்டிப் பலியிடுகிறேன்' அப்படி என்று சத்தியம் செய்து கொடுப்பது (ஆமா) அனுமான் வால் கோட்டை செய்து* அனுமாருடைய வால் கோட்டையிலிருப்பது.... அந்த* ராமருடைய பெட்டிகள் (ஆமா) ராமரையும் லட்சுமணரையும்* மாயமாக சிறையெடுத்துக் கொண்டு போவது* அந்த மயில் ராவணன்*... அனுமான்* தூதாகச் செல்வதும்* அனுமாருடைய மகன் மச்சபல்லவனுக்கும் அனுமானுக்கும் சண்டை*... அனுமான்* இந்த* பெட்டி வைத்த இடத்தைப் பார்த்து* ராமருடைய பெட்டி தூக்குவதும்* மயில்ராவணனுக்கும் அனுமானுக்கும் பயங்கர சண்டைகள் நடப்பது* மயில்ராவணனுடைய தங்கை தூரசண்டிகை என்ற பெண்ணை* அனுமாருடைய* கைவசமாகச் சேர்த்துக் கொள்வதும்* அந்த மயில்ராவணனைக்

கொன்று* இராமருடைய பட்டாபிஷேகங்கள் (ஆமா) இப்படியாகச் சரித்திரம்*. நாங்கள் நடத்த வேண்டிய சரித்திரத்தில்* ஏதோ ஒரு சொல்குத்தம்* பொருள்குத்தம்* நாவில்குத்தம்* எழுத்தில் குத்தங்கள்* ஏதோ ஒரு குத்தங் குறைகள் இருந்தாலும்* சத்தமில்லாமல் அமதியாக இருந்து எங்களைக் கேட்டு எங்களுக்குத் தனம் கொடுப்பாருக்கு எல்லோருக்கும் ஒரு வணக்கமாக....'

இது, பபூன் கோமாளி முதலில் திரையில் தோன்றிக் கதையின் வரலாறுகளைச் சொல்லும் பகுதி. அதற்கு இந்த 'உம்' கொட்டல்தான் / கதை கேட்கும் / கதை சொல்லும் மரபை உயிர்ப்பித்துத் தருகிறது. பக்.409-410 இல் இதே பகுதி 'உம்' கொட்டல் குறிக்கப்படாமல் கொடுக்கப் பட்டுள்ளது. இது போலவே கதாபாத்திரங்கள் உரையாடு மிடங்களிலும் இந்த 'உம்' கொட்டல்கள் உயிர் தருகின்றன. இராமனும் அனுமனும் உரையாடும் ஒரு பகுதியைக் கொண்டு (பார்க்க பக். 417-418) இந்தப் புரிதலை எளிதாக்கலாம்.

இராமர் : அனுமாரே!*

அனுமன் : சுவாமி!*

இராமர் : அந்த ராவணபாதகன்* எந்த இடத்திலிருக் கிறான் என்பதை நீங்கள் தான் கண்டு பிடித்து வரவேண்டும்.*

அனுமன் : கவலைப்படாதீர்கள்*. அந்த ராவணன் எங்கயிருந்தாலும்* அவனுடைய குடுமியைப் பிடித்து இழுத்துக் கொண்டு வருகிறேன்.*

இராமர் : தம்பி!* இன்னும் சிலது நேரம் பார்ப்போம்*. இராவணன் அழைத்து வந்தால் பார்ப் போம்*. இல்லையென்றால் * நாங்கள்.... புஷ்பவாணிப் பெட்டியில் நாங்கள் இரண்டு பேரும் நித்திரை செய்யலாம்.*

இலக்குமணர் : அண்ணா! அப்படியே செய்யலாம்.*

இராமர் : வாருங்கள் போவோம்.*

பாத்திரங்களுக்கேற்ப குரல் மாற்றிப் பேசும் பாவையாட்டி அடுத்த கதாபாத்திரத்திற்கான உரையாடலை எடுப்பதற்காக மூச்செடுக்கும் அந்த இடைவெளியை இந்த 'உம்' கொட்டல் தான் அர்த்தப்படுத்திக் கேட்கும் செவிக்கு இனிமை தருகிறது.

இதுபோலவே பாவையாட்டி பாவையை இயக்கிக் கொண்டே உரையாடல்களைப் பேசிக் கொண்டு வருகையில் பாவையின் அசைவிற்கேற்பவும், பேசும் மொழிக்கேற்பவும் இயைபுபட்ட சந்தத்தில் பாவையாட்டியின் வலது கைப் பெருவிரலில் மாட்டியிருக்கும் 'கெர்கர்' (சிறுசிலம்பு) எழுப்பும் ஒலியும், பாவையாட்டியுடன் மனரீதியில் பேசுகின்ற - 'உம்' கொட்டுகின்ற - ஒன்றாகும்.

'உம்' கொட்டுதல் போக, பாவையாட்டி பேசும் பாத்திர உரையாடல்களின் நடுநடுவே உரையாடல் கருத்தை அழுத்திக் கொடுக்கும் தன்மையிலும், பாத்திரத்துடன் தானே கலந்து பேசும் தன்மையிலும் இசைக் கருவியுடன் அமர்ந்திருக்கும் பெண்மணி கருத்துரைத்துக் கதையை நடத்திச் செல்கிறார். இதுவும் உரையாடலின் அங்கமாய் நின்று வார்த்தையாடலின் புரிதலை எளிமைப்படுத்துகிறது. கூடாரத்தின் உள்ளிருந்து, மறைவாகப் பாவையாட்டி பாத்திரங்களுக்குக் குரல் கொடுக்க, பார்வையாளரின் மனநிலை வெளிப்பாடாய்க் கூடாரத்தின் முன்புறத்திலிருந்து வெளிப்படையாக அப்பெண்மணி அதற்கிசையக் குரல் கொடுக்க, இரண்டின் இணைப்பில் பேச இயலாத தோற்பாவைகள் பல கதைகளைப் பேசிவிடுகின்றன என்பது முக்கியம். பேச்சு வராத இருபரிமாணமிக்க தோற் பாவைகளுக்காக உள்ளும் புறமுமாக இருந்து இவர்கள் கலந்து பேசிப் பின்குரல் கொடுப்பதையெல்லாம் பாவைக்கூத்தின் பகுதியாகப் பார்வையாளர் புரிந்து கொள்கின்றனர் என்பது தான் இக்கலையின் பலம். பார்வையாளர் அனைவரின் பிரதிநிதி யாயும், கதை நடத்தும் பாவைப் பாத்திரங்களின் பகுதியாயும் அமையும் அப்பெண்மணியின் குரல்தான் பார்வை யாளரையும், பாவையாட்டியையும் உயிரோட்டமாயிருக்க வைக்கிறது. படைப்பாக்க நிலையை இவ்வடிவத்தில் மேம் படுத்தித் தருகிறது என்பது முக்கியமாகும். இங்கு கொடுக்கப் பட்டுள்ள நிகழ்த்துப் பனுவல்களில் இப்பெண்மணியின்

குரலானது நகக்குறி வளைகோட்டினுள் ( ) கொடுக்கப் பட்டுள்ளது. மேற்காணும் பிரிவுகளில் சில சான்றுகளைக் காணலாம்.

கருத்துரைபாங்கில் அமைபவை

பக். 20 வரி 14-15

பிச்சை 3 : காணாதுங்க. கூட ஏதாவது சேத்துக்குடுங்க (ஆமா ஒழச்சிக் குடுத்தவல்ல)

பக். 20 வரி 18-20

பிச்சை 3 : காணாதுங்க. ஒரு சேலயே எரநூத்தி அம்பது ரூபா ஆகுதே. (ம். இந்த மொகரைக் கட்டைக்கிப் பாடுபட்டுக் குடுத்தாங்க)

உரையாடலை எடுத்துக் கொடுக்கும் தன்மையில் அமைபவை

பக். 21 வரி 5-7

பபூன் 2 : .... ஆள் வரட்டும் (ம். ஒனக்கென்ன வேணும்?)

பபூன் 1 : ஒனக்கென்ன வேணும்?

பக். 21 வரி 12 - 14

பபூன் 2 : போப்பா... அய்யோ நல்ல மனுஷன் (அவனுக்கென்ன வேணும்னு கேளு)

பபூன் 1 : ஆமா, ஒனக்கென்ன வேணும்?

பாத்திரத்துடன் கலந்து பேசும் தன்மையில் அமைபவை

பக். 21 வரி 22 - 25

பிச்சை 6 : அய்யா ஆடிருக்கு, மாடிருக்கு, கோழிருக்கு, குஞ்சிருக்கு, சொத்து சொகம் நெறையாயிருக்கு. (வேறென்னா வேணும்?) ஆனால்.... நீ வச்ச வெளக்கு ஒன் வெளக்காயிருக்கணும்டா...

பக். 22 வரி 24 / பக். 23 வரி 1-7

பபூன் *1* : ஆமா தான தருமஞ் செய்யச் சொன்னியே (அட, அது ஒரு தருமந்தாப்பா) இது பேரென்ன? (கன்னிகா தர்மம்) கன்னிகா தானம் (ம்... கன்னிகாதானம்) கன்னிகா தானம்.... ம்.... அது ஒரு தருமந்தானா? (ஆமா) எந்தப் பெண்ணைப் போயிப் பாக்றது? (அட, ஒம் மாமம் மக ஒருத்தி யிருந்தாளே, ஒரு நொண்டி)

பிச்சை *6* : ஜெயலலிதா போலயிருக்கணும் {சிரிப்பு} ம்... ஆகா... அப்படிக்கேளு சீமேல கையி)

பபூன் *1* : .... இந்தா ஜெயலலிதாவுங் கெடையாது. பத்மனியுங் கெடையாது. கொத்தமல்லி யுங்கெடையாது.

இதனுள் உரையாடலை எடுத்துக் கொடுக்கும் தன்மையிலும், விமர்சிக்கும் தன்மையிலும் கூட அப்பெண்மணியின் பங்கு பெறல் அமைந்துள்ளது. கூடவும், திரைப்பட நடிப்பின் மூலம் மக்களின் மனதைக் கவர்ந்து பொது மனச்சித்திரத்தின் அழகின் படிமமாகத் திரை ஊடகம் பதித்துள்ள படிமங்கள் எனும் தன்மையில் சில பெயர்கள் அப்பாவித்தனமாய் அவர்களால் இயல்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதற்குமேல் கூடுதலாக எதுவுமில்லை. இது எழுபதின் காலகட்டப் பதிவு. அதை மாற்றுதல் நியாயமில்லை என்பதால் அதை மாற்றும் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை.

மொழித் தவற்றைத் திருத்தும் தன்மையில் அமைபவை

பக். 23 வரி 8-9

பபூன் *1* : அவபேரு வந்து மொத்தம்மா (முத்தம்மா) முத்தம்மா.

பக் 37 வரி 14 - 16

காவலாளி : ... அந்தத் தங்க மோத்ரம் இந்தக் கைலப் போடுங்க (டேய்! மோதிரம்.... மோத்ரமா)

விசுவா : டேய்! மோதிரம்டா

விளக்கம் சொல்லும் தன்மையில் அமைபவை

பக். 36 வரி 9-14

விசுவா : அரசர்களுக்கோ... ஆனால் ராஜமணி மகுடங்கள், கிரீடங்கள் இருக்குமே!

காவலாளி : அதென்ன கேக்றாரு? (ஏய்! தலையில முடி... முடி) தலயில முடியிருக்குதே (ம்... மணிமகுடம் இருக்கும்லாம்ப்பா) தலயில கவுத்திருப்பாங்களே கிரீடம் (ம்... கிரீடம்)

தமிழகத் தெருக்கூத்திலும், மற்றைய நாட்டுப்புற நாடக நிகழ்த்தல்களிலும் உரையாடல் பாங்கில் கதாபாத்திரம் கட்டியக்காரனூடே இது போன்ற விளக்கும் தன்மைகளே உள்ளன என்பது நினைவிற் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

நிகழ்த்துப் பனுவல் திட்டவட்டமான, செறிவான உரையாடல்களைக் கொண்டிராமல், நிகழ்த்துப் பனுவலின் கதை, அது ஏற்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பங்கள், அதில் வர வேண்டிய முக்கிய கருத்துகள்... இவை மட்டுமே பாவையாட்டியின் சிந்தனையில் இருந்து, தொடர்ந்து நிகழ்த்தி வந்த பழக்கத்தினடிப்படையில் சரளமாக வரத் தொடங்குகின்றன. ஆயினும் வார்த்தைகளை யோசித்து யோசித்து வெளிக் கொணருவதால்,.... 'ஆனால்' (சான்று: பக்.10 வரி 10-16).... 'என்ன' (சான்று: பக். 19 வரி 5-9 / பக்.23 வரி 9) .... ஆகிய சொற்களின் ஆதிக்கம் வாசிக்கையில் தடையேற்படுத்தும் விதத்தில் பரவலாக விரவி இருக்கும். இத்தோற்பாவை நிழற்கூத்துக் கலைஞர்களின் நிகழ்த்துப் பனுவல் மொழிநடை, அவர்கள் புழங்கும் பல்வேறு வட்டாரங்களின் பேச்சு மொழிகளை உள்வாங்கிய நிலையில் அமைந்திருக்கிறது. உதாரணமாக, மின்-முன் (பக். 23 வரி 28), மானம் - வானம் (பக்.32 வரி 22) போன்ற மொழியியல் மாற்றங்களும், பைதா = சக்கரம் (பக். 103 வரி 26) வெள்ளன = மிகச் சீக்கிரம் (பக். 107 வரி 16) போன்ற வட்டார வழக்குச் சொற்களும் பனுவல் முழக்க நிறைந் திருக்கின்றன. பேச்சுவழக்கில், பல இடங்களில், இலக்கணத் தேவையை மீறிப் பேச்சின் தேவைக்குட்பட்டு ஒற்று மிகுவதும், தேவையான இடங்களில் ஒற்று குறைவதும் பாவையாட்டியின் மொழிப் பயன்பாட்டுத் தன்மையைப்

பொருத்து அமைந்துள்ளன. ஒலிப்புப் பிசகின்றி வருமிடங் களில், அதற்கேற்ப சிற்சில இடங்களில் மாற்றங்கள் என்னை யறியாமலும் நிகழ்ந்திருக்க வாய்ப்புண்டு. அது பெரிய குறையாய் இருந்து பனுவல் மொழியின் இயல்பைத் திரித்து விடாது என்று நம்புகிறேன். வாக்கியங்களின் எடுப்பும் முடிப்பும் பல இடங்களில் சரியாயிராது. இலக்கண விதிமுறை களை நாம்தான் புதிதாக நிறுவ வேண்டியிருக்கும். உச்சரிப்பு மாறாமல் கொடுக்க முயற்சிக்கப்பட்டுள்ளது. மக்களுக்குப் புரியும் விதத்தில், புரியும் மொழியில் கதையாடுதல் நடைபெறுகிறது. மொழிநடை மாற்றமின்றிக் கொச்சையாக இருப்பது பற்றியோ, இடக்கரடக்கல் பேச்சுகள், பிறமொழிக் கலப்புக்கள் அப்படி அப்படியே தரப்பெற்றுள்ளது பற்றியோ அறிஞர்கள் அருவெறுப்பு கொள்ளத் தேவையில்லை. நாம் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்து, இன்று உயிர்த் துடிப்பு தள்ளாடிக் கொண்டிருக்கும் ஒரு கலைவடிவத்தின் வாழ்வியல் மொழி இயல்பு திரியாமல் அப்படியே இங்கு கொடுக்கப்படுவதன் காரணம், நம் கிராமிய மன அமைப்பின், குழந்தைகள் மனநிலையின் உள் விவகாரங்களையும், பூடகங்களையும் இதன் மேலான கூடுதல் ஆய்வின் மூலம் புரிந்து கொள் வதற்குத்தான்! இங்கு, அதை விளக்க முயற்சித்தால் இன்னொரு பெரிய ஆய்வாக இம் முன்னுரையை நீட்டி விடும். இதன் மேலான மொழியில் ஆய்வு இந்த வகை நிகழ்த்துக் கலையின் மொழியைப் புரிந்து கொள்ள உதவும்.

இடக்கரடக்கல் சொற்களாக இந்நிகழ்வுகளில் பயன்படுத்தப் படுபவைகளும் (சான்று: பக். *15* வரி *27*; பக். *17* வரி *16*; பக். *23* வரி *32*; பக்.*34* வரி *16*; பக். *42* வரி *7-8*; பக். *52* வரி *12*; பக்.*61* வரி *18-19*; பக்.*75* வரி *28*; பக்.*77* வரி *26-28*; பக்.*78* வரி *14*... இத்யாதி) குழந்தைகள் மனநிலைக்கேற்ப அவர்கள் கேட்டு நினைத்துச் சுவைக்கும் சொற்களே! கிராமம் நகரம் எதுவாயிருந்தாலும் குழந்தைகள் குழந்தைகள்தாம். அவர்களுக்கான கலையாக இது நிச்சயம் விளங்கும். இதன் மேலான உளவியல் ஆய்வும் குழந்தைகள் மனநிலையைப் புரிந்து கொள்ள உதவும். கதாபாத்திரங்களின் பெயர்கள் என்னால் குறிப்பிடப்படும் பொழுது, தமிழ் ஒலிப்புடன் தர முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளன. சான்றாக,

வசிஷ்டர் = வசிட்டர், விஸ்வாமித்ரர் விசுவாமித்திரர், லெக்ஷ்மணன் = இலக்குமணன், ஜடாயு = சடாயு என்பதாக! ஆயின் கதாபாத்திரங்களின் பேச்சில் அவை பயின்று வரும்போது பாவையாட்டியின் பாத்திர உச்சரிப்பிற்கேற்ப அவை வேறுபட்டே அமைந்திருக்கும்.

காட்சி மாற்றம், கதாபாத்திர வெளியேற்றம், புதிய கதா பாத்திர நுழைவு, பாத்திரங்களின் ஒயிலாக்க நகர்வுகள் ஆகியவை இதமான இணைப்பு இசையின் மூலம் நிரவப் படுகின்றன. இதுபோல ஆடற்பாடற் காட்சிகளிலும், சண்டைக் காட்சிகளிலும் இசையின் மேலாண்மை இயல்பாகவே உண்டு. பாடல், சண்டைக் காட்சிகள் போக, மேற்குறிப்பிட்ட மற்றைய இடங்களில் வரும் இசை, [....] எனும் சதுர வளைகோட்டுக் குறிக்குள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதைப் போலவே பாத்திரங்கள் சண்டையிடும்போது பாவையாட்டி தன் கால் கட்டையால் எழுப்பும் ஒலியும் [....] எனும் சதுர வளைகோட்டுக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது. பார்வை யாளரின் சிரிப்பும், பார்வையாளர் அப்போதைக்கப்போது வழங்கும் மனக் கருத்துக்கள், வினாக்கள் ஆகியவை {....} எனும் குறிக்குள் தரப்பட்டுள்ளன. பார்வையாளர் எழுப்பும் இயல்பான ஐயங்களுக்குப் பாவையாட்டி பாத்திரத்தின் மூலம் பதில் சொல்லிக் கதை நடத்தும் தன்மை, பக்.310 வரி 16-17 மூலம் வெளிப்படுவது குறிப்பிடத்தக்கது. 'டாம்டாம்'னா என்ன என்ற அப்பாவித்தனமான கேள்வி, பாவையாட்டியின் உரையாடல் மூலம் பதிலளிக்கப்படுகிறது என்பது பார்வை யாளரின் புரிதலை உயர்வாய்க் கருதும் பாங்காகும். அடிக் குறிப்புகள், நிகழ்ச்சி நடைபெறும் அன்றையச் சூழலில் நிகழும் சம்பவங்கள், பாவையாட்டியின் அப்போதைய மன நிலையைப் பாதித்து அது எவ்விதம் கதையோட்டத்தைப் பாதிக்கிறது என்பதைக் காட்டுகின்றன. சில இடங்களில் வட்டார வழக்குச் சொற்களின் பொருள் தருகின்றன.

குழந்தைக் கலையான இத்தோற்பாவை நிழற்கூத்தின் வார்த்தையாடல்கள் குழந்தைகள் மன அமைப்பு பற்றிய இன்னொரு பெரிய ஆய்விற்கு ஆய்வுலகை அழைத்துச் செல்லும். அதற்கேற்ப ஆய்வுலகின் முன் இதைப்

படைப்பதில் நான் பெருமகிழ்வெய்துகிறேன். இந்த ஆவலைப் பூரணப்படுத்திய உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் முதுமுனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களுக்கும், வெளியிட அனுமதியளித்த உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மதிப்பீட்டுக் குழுவிற்கும், பொறுமையாக அச்சிட்டு உதவிய ஸ்ரீ விக்னேஷ் பிரிண்ட்ஸ் அச்சகத்தாருக்கும் என் நன்றி.

பாலகாண்டம் முதல் பட்டாபிஷேகம் வரையிலான ஒரு தொடர்ச்சி இக்கதை நிகழ்வில் காணப்பட்டாலும், இவை அனைத்தும் ஒரு குழுவிலிருந்தோ, அல்லது ஒரே காலகட்டத்தில் வரிசைக்கிரமமாகப் பதிவு செய்யப்பட்டதோ இல்லை. ஒவ்வொரு தனித்தனிக் கதை நிகழ்வும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு குழுக்களிடமிருந்து பதிவு செய்யப்பட்டவை என்பது முக்கியம். 17.11.1973 இல் பெருங்குடியில் கோபால்ராவ் நடத்திய ‘மயில்ராவணன் கதை’யைப் (கற்றவர்கள் இதை மகிராவணன் கதை என்பர்) பதிவு பண்ணுகையில் அவருடன் இருந்து கதை நடத்தி வந்த சின்னச்சாமிராவும் அவர் மனைவி குழந்தைகளும் 17.05.1974 இல் நரசிங்கத்தில் ‘சீதை சிறைப்படல்’ பதிவு பண்ணுகையில் பாபுராவுடன் இணைந்திருந்து கூத்து நடத்திக் கொண்டிருந் தனர். சின்னச்சாமிராவ் - மாரியம்மாள்பாய் தங்கள் குழந்தை களுடன் 22.05.1974 க்குப் பிறகு பாபுராவிடமிருந்தும் பிரிந்து தனித்துச் செயல்பட ஆரம்பித்தனர். நான் தொடக்கத்தில் குறிப்பிட்ட, தோற்பாவை நிழற்கூத்தைப் பதிவு பண்ணிய முதற் குரலுக்குச் சொந்தக்காரர் இந்த மாரியம்மாள்பாய் தான்! இதன் மேலான தகவல்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழம் வெளியிட்டுள்ள தோற்பாவை நிழற்கூத்து (1983) எனும் என் நூலில் உள்ள ‘கலைஞர் வாழ்க்கை’ப் பகுதியில் உள்ளன. தோற்பாவை நிழற்கூத்து நிகழ்த்துப் பனுவல்கள், என் முயற்சியினூடே நூலாக வெளிவரும் நிலையில், என் வளர்ச்சியில் பூரித்துப் போயிருந்த, என் வளர்ச்சிக்கு உந்து சக்திகளாக விளங்கிய இரணடு பெரிய உள்ளங்கள் இதைப் பார்க்க இல்லாதது மட்டுமே எனக்குள் பெருங்குறை! ஒன்று மதுரையில் நாட்டுப்புறக் கலைகளின் புணருத்தாரணத் திற்கென்று ‘தெம்மாங்கு’ அமைப்பை நிறுவிட முதுகெலும் பாய் விளங்கிய, என் மனசாய் விரிந்து என்னை இயக்கிய என்

செண்பகம்! இன்னொன்று, தோற்பாவை நிழற்கூத்து ஆய்வு முயற்சிக்கு வழிகாட்டியாயிருந்து அடித்தளமிட்ட என் பேராசிரியர் முனைவர் முத்துச்சண்முகம் அவர்கள்! தோற்பாவை நிழற்கூத்து நூலுக்கு இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளை, 1980-84 ஆண்டுகளில் வெளிவந்த சிறந்த நுண்கலை நூலாகப் பரிசளிக்கையில் இவர்கள் இருவரும் ஆசி கூறி, அதைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள்! இது அவர்கள் இருவரின் நினைவிற்கான என் அஞ்சலியாய் என்றும் விளங்கும். நன்றி!

மு. இராமசுவாமி

உள்ளே...



இராமாயணம்

பால காண்டம்

பதிவு
செய்த நாள் : 10-06-1974

இடம்: அரும்பனூர் புதூர்
மதுரை.

நிகழ்த்துநர் : பாபுராவ் குழுவினர்

*பபூன்1 : ஆரம்பிக்றதா, ஆரம் பிக்கிறதா?

பபூன்2 : ஆரம்பிய்யி...

பபூன்1 : என்ன... சோத்துப் பாயவா?

பபூன்2 : என்னத்தயாவது ஆரம் பிய்யி. நல்லா சட்டி நெறைய போட்டுத் திம்போம். {சிரிப்பு}

பபூன்1 : ஆனால் கதய ஆரம்பிக்கப்போகிறோம். ஆனால் வந்திருக்கக் கூடிய பெரியோர்களும், தாய்மார் களும், சிறுவர்கள் அனைவருமே வந்திருப்பதி னால், ஆனால் சத்தமில்லாமல் அமதியுடனே யிருந்து, ஆனால் கத கேட்டால் கதபுரியும். ஊட ஊட சத்தம் போட்டமின்னா ஒரு ஆள் சொல்லக் கூடியது அத்தனப் பேருங்கேட்கணும்... என்ன? ஊட ஊட சத்தம் போடாதீர்கள். ஆனால் கத நடத்தும் போது தமாஷ் வரும்போது சிரிங்க. நான் வந்தா சிரிங்க இவன் வந்தா சிரிக்காதீங்க. {சிரிப்பு} (பார்ரா. டேய் டேய். இதெல்லாம் ஏண்டா? குத்து)

பபூன்2 : பார்ரா, ஏண்டா ஒனக்கு அவ்ளவுடா... நாந்தான்! என்னயப் பாத்தாத்தான் 'இன்ரஸ்'ஸா இருக்கும். (ஆமா, மொட்டப்பல்லுக்காரன்) {சிரிப்பு}

பபூன்1 : ஒங்களப் பாத்தா இன்ரஸ்ஸாயிருக்கு. மொகரக் கட்ட [அடிக்கிறான்]

பபூன்2 : டேய் அடிக்காதடா, சப்பு சப்புன்னு படுவா. (அடிச்சிக்கிடாதீங்கடா, டேய்) இப்பப் பாத்து அடிடா! மக்கா கோழிமேல கோழி வைக்க, படுவா.

பபூன்3 : மாப்ள! அந்த அஞ்சி பைசாவக் குட்ரா, {சிரிப்பு}

பபூன்2 : ஏல! மொளு மொளு... (ஆமா, மொளுமொளு). ஏல மருவாதியா போறயா என்னடா.

★நான் பதிவு செய்ய வருவதற்குள் கடவுள் வாழ்த்து முடிந்து கூத்து ஆரம்பமாகியதே இடையிலிருந்து இருப்பதற்குக் காரணம்.

பபூன்3 : ஏ! எம் பொண்டாட்டி வெளக்கமாத்தால அடிக்க வர்றாடா (டேய்! எத்தினி அடி அடிக்கிறாப்பா) அஞ்சி பைசாவுக்கு அஞ்சு அடி அடிக்கிறா. (கூட ரெண்டடி வாங்கிச் சேத்துக்க)

பபூன்2 : அவா நல்ல புண்ணியவதி. அவளுக்கு வந்து... அந்தப் புண்ணியவதிய நாங்க பாராட்டணும். அதாவது அஞ்சி பைசாக் கடங் கொடுத்ததுக்காக அஞ்சி அடி அடிக்கிறா. டேய்! கூட ரெண்டடி சேத்து வாங்கிக்க. (பார்ரா, டேய்! டேய்!)

பபூன்3 : எதுக்கு?

பபூன்2 : வட்டிக்கி {சிரிப்பு} (பார்ரா, டேய்! டேய்! மொளுமொளு)

பபூன்3 : பார்ரா. நான் வந்து ஓங்கிட்ட கடன் குடுத்துப் புட்டு, நானா எம்பொண்டாட்டிகிட்ட வெளக்க மாத்தடிபடுறது?

பபூன்2 : அப்புறம் நானா படுறது? {சிரிப்பு} *[அடிக்கிறான்]

பபூன்2 : ம் கதய ஆரம்பிப்பமா.

பபூன்3 : ம். கதய ஆரம்பிய்யி.

பபூன்2 : போய்ட்டு வா. [அடிக்கிறான்]

பபூன்3 : போய்ட்டு வாரேன் [அடிக்கிறான்.] (ஏஏய் ஏய் ஏய்... எல்லாத்தையும் போட்டு வெளுத்துட் டான்)

பபூன்1 : ஏய்! ஏய்! குத்தி எடுத்திட்டாண்டா... இந்தப் பயல்களா... (சரி) இனும வரட்டும் குடுமீல கட்டி வச்சி ஒதைக்கேன் (பார்ரா... டேய் டேய்) இங்க வா இங்க... படுவா.

★ நான் வந்து விட்டேனா? ஆரம்பிக்கலாமா என்று பாபுராவ் கேட்கிறார். அதற்கு தனபால்ராவ், 'ஆரம்பிக்கலாம். இந்தா உக்காந்திருக் காரு' என்கிறார்.

பாவையாட்டி : அயோத்திமா புரியை அரசு புரிகின்ற காவலர் கோமான் ...... அயோத்திமா நகரத்தை அரசு புரிய வேண்டிய தசரத குமாரன் வருகிறார்.

பாடல் : **வளமோடு நிழலாட**
மன்னவர்கள் கீதம்பாட
மன்னவர் தசரதர் கொலுவில் வருகிறார்

பாவையாட்டி : அயோத்திமா நகரத்தை அரசு புரிய வேண்டிய... ஆனால் தசரதரும் அவருடைய மந்திரியாகிய சிமிந்திர மந்திரியும் இருபேர்களுமாக வந்திருக்கிறார்கள். (ஆமா)

தசரதன் : சிமிந்திர மந்திரியாரே!

சுமந்திரர் : மகாராஜா!

தசரதன் : ஆனால் இந்த அயோத்திமா நகரத்தை அறுபதுக்கு அறுபது வருஷமாக நாங்கள் அரசு புரிந்து வந்தோம். ஆனால் இந்த அறுபது வருஷமாகவும் ஆனால் எனக்கு புத்திர பாக்கியங்கள் இல்லாமல் முப்பத்து முக்கோடி முனிவர்கள் நாற்பத்தி எண்ணாயிரங்கோடி ரிஷிமார்கள் அத்தனைப் பேர்களும்... ஆனால் என்னையப்பத்திக் கேவல மாகவும் தெரியப்படுத்தி வந்தார்கள். ஆனால் குழந்தைகளில்லாத பாவியாகப் போய்விட்டான் தசரதன். சத்தியம் நீதியும் நேர்மையும் தவறாமல் நடந்து கொண்டு வந்தான். அவனுக்குப் புத்திர பாக்கியங்கள் இல்லையென்று... என்னைக் கேவலமாகவும் தெரியப்படுத்தி வந்தார்கள். ஆனால் நம்முடைய வசிஷ்ட மகாமுனிவர், ஆனால் சொன்னபடியால், ஆனால் தெய்வேந்திர னுடைய வளத்தில் சென்று ஆயிரம் யானை களைக் கொன்றால், உனக்கு புத்திர பாக்கியங்கள் பிறக்குமென்றும், ஆனால்... விஸ்வாமித்திரர் வசிஷ்டர் என்றவர்கள் தெரியப்படுத்தவும், ஆனால் தெய்வேந்திரனு டைய வனத்தில் சென்று

ஆயிரம் யானைகளை நான் கொன்று வந்தேன். ஆனால் கயக்கோட்டு மகாரிஷி அன்னவர்கள் கொடுத்த... ஆனால் ரிஷிபிண்டத்தினால் ராமன், லட்மணன், பரதன், சத்ருக்னன் நான்கு புத்திர பாக்கியங்கள் பிறந்து வந்தார்கள். ஆனால் பிறந்தவுடனே எவ்வளவு மகிழ்ச்சியுடன் நானிருக்க, அவர்களுக்கு ஏழு வயதுகள் ஆகி விட்டது. ஆனால் அவர்களுக்குப் படினங்கள் இல்லாமலிருந்தால், பார்க்கக் கூடியவர்கள் ஒரு கேவலமாகவும் தெரியப்படுத்தி வருவார்கள் சுமிந்திர மந்திரியாரே!

சுமந்திரர் : மகாராஜா, ஆனால் அம்பத்தாறு தேசத்து அரசர்களும் முப்பத்து முக்கோடி முனிவர்களும் நாற்பத்தி எண்ணாயிரங்கோடி ரிஷிமார்கள் அத்தனைப் பேரும் தாங்களைப் பற்றிப் புகழ்ந்த வண்ணமாகத் தான் பேசுகிறார்கள். ஒரு அரசாங்கத்தை அரசு புரிய வேண்டிய குழந்தை களுக்கு, ஆனால் படிப்பு இல்லையென்று சொல்லிவிட்டால் கேவலமாகவும் தெரியப்படுத்தி வருவார்கள். இன்றைய தினத்தில் கஞ்சிக்கில்லாத வருடைய, ஆனால் வீட்டிலிருக்க வேண்டிய குழந்தைகள் முதற்கொண்டு... ஆனால் படித்து எவ்வளவு செல்வாக்குடனேயிருக்கிறார்கள்? அரசாங்கத்தில் சேர்ந்த குழந்தைகள் படிப்பில்லாம லிருந்தால் கேவலமாகவும் தெரியப்படுத்தி வருவார்கள் மகாராஜா!

தசரதன் : சரி. நம்முடைய குருவாகிய வசிஷ்ட மகா முனிவரை நான் அழைத்ததாகவே அழைத்துவா.

சுமந்திரர் : வருகிறேன்.

பாடல் : வஷிஷ்டர் வந்தாரே - பெருமையான
வஷிஷ்டர் வந்தாரே
திண்டுக்கு வெண்டலமாம் - மகாக்கொடி

சாஸ்திர வேதங்களாம்

மாமுனி வாரார் - வஷிஷ்டர் மாமுனி வாரார்.

நான் இப்படி வந்தனம் செய்து வருகிறேன். மகா முனிவரே... மகாமுனிவரே.

வசிட்டர் : யேவ்வ்வ்... (பையா...! கருவாட்டுக் கொழம்பு ஏப்பம்)

தசரதன் : சுவாமி! (சாணி) மகாமுனிவர்களே! அடியேன் வந்தனம் செய்து வருகிறேன்.

வசிட்டர் : மங்களம் உண்டாகட்டும்! மங்களமுண்டாகட்டுமப்பா! தசரத சக்ரவர்த்தியே... அடடாடாடாடா நான் ஆத்திலிருந்தவன்... அட... என்னை ஆத்திலிருந்தவனை... திடீர்னு அழைத்த காரணமென்னடா...? (னங்கன... னங்கன) {சிரிப்பு}

தசரதன் : சுவாமி! ஆனால் ராமன் லச்மணன், பரதன், சத்ருக்கன் நான்கு புத்திர பாக்கியங்கள் பிறந்ததனால்.... எவ்வளவு நான் சந்தோஷமுறையாக... நான் இருந்து வருகிறேன். அவர்களுக்கு ஏழு வயதுகள் ஆகிவிட்டது. ஆனால் அவர்களை நீங்கள் அழைத்துச் சென்று, ஆனால் வேண்டிய யானை ஏற்றங்கள், குதிரையேற்றங்கள், கூடு விட்டுக் கூடு பாயக்கூடிய ஒரு தொழில்களும், அம்புடைய விஷயங்களும்... இப்பேர்ப்பட்ட ஒரு *படினங்களை நீங்கள், ஆனால் படித்துக் குடுக்க வேண்டும், மகா முனிவர்களே!

வசிட்டர் : யேவ்வ்வ்... (அய்யா) அடே அம்பி (என்னா கம்பி) அடே தசரதன் சொன்னது கேட்டியோயில்லயோ (என்ன சொன்னாங்கோ) ஆனால் ராமன் லச்மணன் பரதன் சத்ருக்கன் நான்கு குழந்தைகளுக்கு ஆனால் ஏழு வயதுகள் ஆகிவிட்டது. அவர்களுக்குப் படினங்கள் இல்லையென்றால் கேவலமாகச் சொல்வார்கள்

★ படினங்கள் = படிப்புகள்

(ஆமா) அப்படீன்றே சொல்லி வருகிறாய். நன்னாருக்கு... நன்னாருக்கு... நன்னாருக்கு (நல்லாருந்தா நக்கு) {சிரிப்பு} அப்பா தசரதனே! ஆனால் உலகத்தில் அரசாங்கத்தினுடைய சேர்ந்த குழந்தைகளுக்குப் படினமில்லயென்றால் ஒரு கேவலமாகவே சொல்வார்கள். (ஆமா) ஆனால் ஒன்னுடைய கொழந்தைகள் எல்லாமே என் குழந்தையாகவே நெனைத்து ஆனால் வேண்டிய படிப்புகள் நன்றாகவே நான் படித்துத் தருகிறேன்.

தசரதன் : ரொம்ப சந்தோஷம், மகாமுனிவர்களே!

வசிட்டர் : ஆனால் ஒன்னுடைய... ஆனால் கொழந்தை களை-ராமன் லச்மணன் பரதன் சத்ருக்கன் நான்கு குழந்தைகளை-அழைத்துக் கொண்டுவா.

தசரதன் : வருகிறேன்... சுமிந்திர மந்திரிகளே!... சிம்மாதனத் திலே அமருங்கள்.

சுமந்திரர் : மகாராஜா!

தசரதன் : ஆனால் என்னுடைய புத்ர பாக்கியங்களை நான்கு பேர்களையும் அழைத்துக் கொண்டு வரவேண்டும்.

சுமிந்திரர் : வருகிறேன்... [இசை]

டேய்! யார்ரா காவலர்களே!

காவலாளி: மகாராஜா!

தசரதன் : ராமன் லச்மணன் பரதன் சத்ருக்கனன் நான்கு பேர்களையும் அதிசீக்கிரமாகவே வருவதாகத் தெரியப்படுத்திவா.

காவலாளி: ரொம்ப சந்தோஷம். அழைத்து வருகிறேன். பிரபு.

பாடல் : **குலரபி சேகரா - கோதண்டபாணி**
கோதண்டபாணி - ராஜசிகாமணி
குலரபிசேகரா - கோதண்டபாணி

பரதன் : தம்பி சத்ருக்கா!

சத்ருக். : அண்ணா!

பரதன் : தந்தையாகிய தசரத சக்ரவர்த்தியானவர் சிம்மா தனத்தில் ஏதோ யாலோசனை செய்துகொண்டு வருகிறார். அண்ணன் ஸ்ரீராமர் லச்மணன் இருபேர்களையும் காணவரவில்லையே.

சத்ருக். : அதோ வருகிறார்கள் அண்ணா!

பரதன் : வருவதை எதிர்பார்ப்போம்.

பாடல் : **குலரபிசேகரா - கோதண்டபாணி**
கோதண்டபாணி - ராஜசிகாமணி
குலரபிசேகரா - கோதண்டபாணி

இராமர் : வருவாய் தம்பி லச்மணா!

இலக்கு. : அண்ணா! அடியேன் வந்தனம் செய்து வருகிறேன்.

இராமன் : மங்களம் உண்டாகட்டும். வரதராஜனே!

பரதன் : அண்ணா!

இராமன் : சத்ருக்கா!

சத்ருக். : அண்ணா!

இராமர் : ஆனால் நான்கு பேர்களும் ஆனால் தந்தையாகிய தசரதர் எங்களை அழைத்து வருவதாகவும் மந்திரிமார்கள் தெரியப்படுத்தி வந்தார்களே.

பரதன் : உண்மைதான் அண்ணா. சீக்கிரமாக நாங்கள் சென்று தந்தையினுடைய பாதாரங்கள்... நாங்கள் வணக்கம் செய்து வருவோம்.

காவலர் : சுவாமி!

இராமர் : காவலர்களே... வந்த விஷயம் என்ன?

காவலர் : ஆனால் நம்முடைய மகாராஜா அன்னவர்கள் ஒங்களை அழைத்துக் கொண்டு வருவதாகவும் தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

இராமர் : தந்தையாகிய தசரதர் எங்களை அழைத்து வருவதாகத் தெரியப்படுத்தியிருக்கிறார்களா? சரி... புறப்படுங்கள். இதோ நான் வருவதாகப் போய்த் தெரியப்படுத்திவிடு! தம்பிமார்களே! புறப்படுங்கள். தந்தையுடைய பாதாரங்களை வணக்கம் செய்து வருவோம்.

இலக்கு. : புறப்படுங்கள் அண்ணா... [இசை]

இராமர் : ஐயா!

தசரதன் : மங்களம் உண்டாகட்டும் ராமா!

இலக்கு. : தந்தையே!

தசரதன் : ஆகட்டும் லச்மணா!

பரதன் : ஐயா!

தசரதன் : மங்களமுண்டாகட்டும். சும்மாயிருக்கவேண்டும். ஆனால் இவ்வளவு காலமாக நான் உங்களை... நான் பார்க்காதபடியால் நீங்கள் நான்கு பேர்களும் பிறந்தவுடனே... எவ்வளவு நான் சந்தோஷ முறையாக நான் இருந்துகொண்டு வருகிறேன். ஆனால் இன்றைய தினத்தில் உங்களை எதற்காக நான் அழைத்து வந்தேன். ஆனால் நம்முடைய குருவாகிய வஷிஷ்டருடைய பாடசாலையில் சில பாடங்களை நீங்கள் படித்துக்கொண்டு வரவேண்டும். அதற்காகத்தான் உங்களை நான் அழைத்ததாகத் தெரியப்படுத்தி வந்தேன்.

இராமர் : அப்பா, இது என்ன சோதனைகள்? அரசாங் கத்தைச் சேர்ந்த அரசருடைய குழந்தைகளுக்குப் படிப்பில்லாமல் இருந்துவிட்டால் உலகத்தில் ஒரு கேவலமாகவும் தெரியப்படுத்தி வருவார்கள். ஆனால் நீங்கள் சொன்னது போல்... ஆனால் வஷிஷ்டருடைய பாடசாலையில் சென்று சில பாடல்களை நாங்கள் படித்துக் கொண்டு வருகிறோம்.

தசரதன் : மகா முனிவர்களே!

வசிட்டர் : என்னப்பா தசரதனே? யேவ்வ்வ்... (கருவாட்டுக் கொழம்பு ஏப்பம்)

தசரதன் : ஆனால் என்னுடைய குழந்தைகள் வந்திருக் கிறார்கள். என்னுடைய குழந்தைகளல்ல... ஆனால் உன்னுடைய குழந்தையாகப் பாவித்து அவர்கள் யாதொரு குற்றங்குறை செய்திருந்தாலும் நீங்கள் தான் மன்னித்து, சில பாடங்களை நீங்கள் படித்துத் தர வேண்டும்.

வசிட்டர் : அட.... இதப்பத்தி நீ கவலைப்பட வேண்டா ம்ப்பா... தசரதனே. ஆனால் உன்னுடைய குழந்தைகள் இல்லாமல்... என்னுடைய குழந்தை களாகப் பாவித்து, ஆனால் வேண்டிய... ஆனால் தொழில்கள்ளாம் நான் படித்துத் தருகிறேன். ரொம்ப சந்தோஷம் அடைந்து வருகிறேன். ஆனால் கவலைப்படாதே.

இராமர் : சுவாமி!

வசிட்டர் : மங்களமுண்டாகட்டும் அப்பா ராமச்சந்திரா!

இலக்கு : சுவாமி!

வசிட்டர் : மங்களமுண்டாகட்டும் அப்பா லச்மணா!

சத்ருக். : குருதேவா!

வசிட்டர் : மங்களமுண்டாகட்டும் சத்ருகா!

பரதன் : பிரபு!

வசிட்டர் : மங்களமுண்டாகட்டும்! அடாடாடா பரதன், சத்ருக்கன், ராமன், லச்மணன்... ஆனால் ரொம்ப நன்னாயிருக்கிறது. அப்பா ராமச்சந்திரா! (ஆமா, சிந்தூரா) ஆனால் சீக்கிரமாகவே ஆனால் புஸ்தகம் சிலேட்டுகள் இவைகளெல்லாம் எடுத்துக் கொண்டு... ஆனால் பள்ளிக்கூடம் செல்லுங்கள். நான் ஆத்தோரம்... நான் போய் வருகிறேன். அடே தபேதா.

பபூன்1 : என்னச்சாமி? (சாணி)

வசிட்டர் : ஆனால் இவர்கள் நான்கு பேர்களையும் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துச் செல். ஆனால் நான் ஆத்தோரம் போய்ட்டு வருகிறேன்.

பபூன்1 : ஆத்துக்குப் போறீங்ககளா! ஏன்... கொளத்துக்குப் போனா என்ன? {சிரிப்பு} (ஏய் கொளத்துக்குப் போனா நண்டு கடிக்கும்) ஓ! ஆறுன்னு சொல்லிட் டம்னா, அவுக வீட்டுக்குப் போறாம்ங்றாரு. சரிதான். சாமி! சரி. நீங்க போய்ட்டு வாங்க. இவுகள நான் கூட்டிட்டுப் போறேன்.

வசிட்டர் : சீக்கிரமாய்ப் போக வேண்டும்.

பபூன்1 : நீங்க போங்க. நான் கூட்டிட்டுப்போறேன்.

வசிட்டர் : அப்பா தசரதனே...! நான் வரட்டுமோ?

தசரதன் : சந்தோஷம் பிரபு... [இசை]

ஆனால் உலகத்தில் எப்பேர்ப்பட்ட ஒரு படினங்கள் படித்து வருகிறார்களோ அதுக்குப் பணி விடையான படினங்களை நீ படித்துக் கொண்டு வரவேண்டும்.

இராமர் : ரொம்ப சந்தோஷம். சென்று வருகிறேன்.

தசரதன் : சென்று வா... [இசை]

தசரதர் : சிமிந்திர மந்திரி!

சுமந்திரர் : மகாராஜா!

தசரதர் : ஆனால் குழந்தைகள் படினங்கள் படிப்பதற் காகப் போயிருக்கிறார்கள். ராமா! லச்மணா! இரண்டு களஞ்சியங்கள் திறந்து தானதருமங்களை நீ நிச்சயமாகவே செய்யவேண்டும். தெய்வ லோகம் தெரியும்படியாகக் கோயில் மணிகளை அடித்து, ஆனால் அன்னதானம் பொருளதானங் கள், கோவேதிதானங்கள் இப்பேர்ப்பட்ட தான

தருமங்களை நீங்கள்... ஆனால் முக்கியமாகச் செய்யவேண்டும்.

சுமந்திரர் : அப்படியே நான் செய்து வருகிறேன் மகாராஜா. ... [இசை]

டேய் யார்ரா காவலர்களே (ஏய் காப்பார உள்ளி)

காவலாளி: மகாராஜா!

சமந்திரர் : ராமன், லச்மணன், பரதன், சத்ருக்னன் நான்கு பேர்களும் பள்ளிக்கூடம் போயிருக்கிறார்கள். (ஆமா) ஆனால் அரசருடைய கட்டளை, ஆனால் இராமா! லச்மணா! இரண்டு களஞ்சிகள் திறந்து ஆனால் தானதருமத்தைச் செய்யவேண்டும்.

காவலாளி: (பபூன்1) தான தருமம் செய்யணுமா? எங்கிட்டயா சொல்றீகா. ஹஹ்ஹா. மகாராஜா நீங்க போங்க. நாங்க அள்ளி அள்ளி வீசிர்றோம். (என்னத்த) தானதருமந்தான... போங்க நான் அள்ளி வீசிர்றேன். நீங்க போங்க. மகாராஜாவுக்கும் மந்திரிக்கும் சரியான பைத்தியம் புடிச்சிருக்குடா (என்னடா). இந்தக் காலத்ல தானமும் தருமமும் எவன்டா பாத்தவன் இந்தக்காலத்ல? (ஆமாமா) ஒருபடி அரிசி மூணார்ரூபா விக்கிற நேரத்துல (ஒனக்கென்னடா வந்திச்சி) எனக்கென்ன வந்ததா? இவுங்களுக் கென்ன? அதுக்குக் குடுக்கலாமா தர்மம்? (அவங்க குடுத்துக்கிட்டுப் போறாங்க. ஒனக்கென்ன?) மகாராஜாவுடைய சொத்து, அள்ளி வீசவேண்டியது தானென்னு கேக்ற (ஆமா) ஏண்டா ஒனக்குக் கொஞ்சமாவது மண்டேல சரக்கிருக்கா? (ஏண்டா) அட நாலு பேருக்கு கைய நீட்டி நாலுபேர கைய மடக்கிப் பாரு. அவுக கையயில்ல... எங்கைய (நல்லா வலிக்கத்தான் செய்யும்) கைய விடுக்விடுக் விடுக்விடுக்குங்கும் (அதுக்கு யாரென்ன செய்ய முடியும்?) அள்றவனுக்கு வருத்தமில்ல, குடுக்ற

வனுக்குத் தான் ரொம்ப வருத்தம். (சரி வீட்ல போய், வீட்ல போயிரெண்டு மூட்ட எறக்கி வச்சிட்டு வாடா) ஆமா இப்ப எப்படிச் சொல்றது? இவுங்களக் கூப்பிடுறது? (ஏ! தான தருமம் செய்யப் போறாங்க... பண்டாரம் பரதேசி எல்லாரும் வாங்கன்னு கூப்பிடப்பா) தானம் தருமம் செய்யப் போறாக (மகாராஜா குடுக்கப் போறாரு, பண்டாரம் பரதேசி எல்லாங் கூப்பிடு) கூப்பிடணுமா (ஆமா). டேய்! இங்க அயோத்திமா நகரத்லயிருக்கக்கூடியவர்கள் கூனுகுருடுகள், காது கேக்காதவன் எவராயிருந்தாலும் சரி, பிச்சக்காரன் கிச்சக்காரன் எவன் இருந்தாலுஞ் சரிதான் (நொண்டி நொடம் யாராயிருந்தாலுஞ் சரிதான்) யாராவது அயோத்திக்கி வந்து பிச்சேன்னு வந்திட்டீங்க ஆறுமாசம் வெலங்கு; ஒரு டசன் ஒதை. (அடேங்கப்பா. வர்றவனையும் வரவுடாமக் கெடுக்கான். ஏய்! தருமஞ் செய்யப் போகுது... எல்லாரும் ஓடியாங்கன்னு கூப் பிடப்பா) ஏ தருமக்கொடி கெட்டியிருக்கு ஓடியாங்கப்பா. ஓடியாங்க ஓடி வாங்க!

பாடல் : **ஏய் பிச்சைக்காரலெல்லாம் வாருங்க**
இஷ்டமானதெல்லாம் கேளுங்க
கூனுகுருடெல்லாம் வாருங்க
இஷ்டமானதெல்லாம் கேளுங்க
பண்டாரம் பரதேசி வாருங்க
இஷ்டமானதெல்லாம் கேளுங்க...
(பார்ரா! எத்தன எத்தன வந்திருக்காங்கன்னு.)

பிச்சை 1 : சாமி எனக்குக் குடுறா சாமி... அப்பா... (பெறவு ஒசில தருமஞ் செஞ்சா விடுவாங்களா?)

பிச்சை 2 : அய்யா அய்யா எனக்குக் குடுறா சாமி... அப்பா... அப்பா... அடேசாமி அப்பா அப்பா...

பபூன்1 : டேய் சத்தம் போடக்கூடாது. சத்தமில்லாமக் கேளு. (சத்தமில்லாமக் கேட்டு வாங்கிட்டுப் போங்கப்பா) சத்தம் போட்டீங்க... நிமுத்திப் போடுவேன்... நிமுத்தி. {சிரிப்பு}

பிச்சை 3 : அய்யோ... எனக்குக் குடு அப்பா... அப்பா... எனக்குக் குடுறா சாமி.

பபூன்1 : டேய்! (என்ன வேணும்) ஒவ்வொருத்தனும் ஒவ்வொன்னாக் கேக்கணும்.

பிச்சை 4 : அய்யா எனக்குக் குடுறா சாமி {சிரிப்பு}

பபூன்1 : ஒவ்வொருத்தனான்னா... எனக்குக் குடுடாவா? (எல்லாரும் வரிசேல நில்லுங்கப்பா) வரிசைக்கு இடிச்சுக்கிட்டில்ல ஓடியாராங்க... {சிரிப்பு}

பபூன்2 : என்னடா நடுநோட்ல கலாட்டா... இங்க! (நடு ரோட்ல கலாட்டா, நடுநோட்ல இல்ல)

பபூன்1 : அடேய் தம்பி!

பபூன்2 : என்ன நொண்ணன்? (என்னடா அண்ணன்னு கேளு. நொண்ணேங்காத) {சிரிப்பு}

பபூன்1 : என்ன அண்ணங்கறதுக்கு நொண்ணங்றான். [அடிக்கிறான்]

பபூன்2 : டேய் மூக்கு ஒளறிச் சொல்லிட்டா... இப்படியா அடிக்கிறது.... படுவா. {சிரிப்பு} (ஆமா. நாக்கு ஒளறல, மூக்குதான் ஒளறுது)

பபூன்1 : வந்து... மகாராஜா தான தருமஞ் செய்யச் சொல்லிச் சொல்லியிருக்காக... தசரத மகாராஜா.

பபூன்2 : சரி

பபூன்1 : அதுக்காக பண்டாரம், பரதேசிகள், பிச்சக் காரங்கள் எல்லாம் வந்திருக்காங்க. நான் ஒவ்வொருத்தருக்கும் என்னென்ன வேணும்னு சொல்லியனுப்புறேன். இங்கயிருந்துகிட்டு ஒவ்வொன்னா நீ எடுத்துக்குடு. (எடுத்துக் குடுத்து அனுப்பப்பா)

பபூன்2 : நான் கணக்குப்புள்ளி (ஆமா, கணக்குப்புள்ளி) நான் கணக்குப் புள்ளி; நீ கணக்காத புள்ளி. {சிரிப்பு} (இவன் வாச்மேன்) சரி இவுங்களுக்குத் தான குடுக்கணும். அங்க வரச் சொல்லு. *அரமணை கிட்ட வரச்சொல்லு. உள்ள வரச் சொல்லு. கதவப் பூட்டிக்கிட்டு குடுத்திட்றேன். {சிரிப்பு} (டேய் அவுங்க கேக்றத எடுத்துக் குடுத்திடுன்னா கதவப்பூட்டிக்கிட்டு குடுக்றியா) இங்க குடுக்ற குடு ஒவ்வொருத்தன் ஆறு மாசத்துக்கு எந்திரிக்காமயிருக்கணும். {சிரிப்பு}

பபூன்1 : ஏலேலே. அப்படி இப்படீன்னு செஞ்சுப் போடாதே. மகாராஜாவுக்குத் தெரிஞ்சமுன்னா ரெண்டு பேரு சீட்டும் கிழிஞ்சிப் போகும். (ஏய் பாவம்டா. மகாராஜா கொழந்த பெறந்த ஆசைல குடுத்து அனுப்புறாங்க.)

பபூன்2 : அப்படியா? (ஆமா) சரி, வரச்சொல்லு. வரச்சொல்லு. ஞாயமாக் கேட்டா குடுக்கணும். ரொம்ப அதிகாரம் புடிச்சுக் கேட்டா அவுங்கள என்ன பண்றது? (அதுக்குமேல ரெண்டு குடுத்தனுப்ப வேண்டியதுதான்.)

பபூன்1 : அப்படில்லாங் கேக்கமாட்டாங்க. சும்மாயிருடா உளுவத்தலப் பயல. {சிரிப்பு}

பபூன்2 : ஆள் வரச்சொல். வரச்சொல். ஏய்! பேனா எடுத்து பென்சில எடுத்து, பென்சில எடுத்து பேனால எழுது. வெள்ளப் பேப்பர எடுத்துக் குண்டி தொடச்சி இவங் கைல குடு. (வாய்க்கால்ல போட்டு அனுப்பு)

பபூன்1 : எவங் கைல?

பபூன்2 : ஒங் கைல குடுத்தாத்தான் **மொகந்து பாப்ப. {சிரிப்பு}

★அரமணை = அரண்மனை (பார்க்க. பக்.318) ★★ மொகந்து = முகர்ந்து

பபூன்1 : அகராதி புடிச்சப் பயலே. டேய்! ஒனக்கு என்னப்பா வேணும்?

பிச்சை 1 : அய்யா, அய்யா! சாமி... சாமி... எப்பா... எப்பா...

பபூன்1 : ஏய் சத்தமில்லாமக் கேள்றான்னா (அய்யோ அப்பான்னு கத்துறான்) கத்தாத. சத்தம் போடக் கூடாது. {சிரிப்பு}

பிச்சை 1 : அய்யோ அய்யா... எனக்கு வந்து, ஆனா எனக்கு ரெண்டு... ரெண்டு ஆட்டுக்குட்டி இருந்ததுன்னா, அத மேச்சிக்கிட்டே அதவச்சி நான் ஜீவனம் செய்துக்ருவேன்.

பபூன்1 : ம். ரெண்டு ஆட்டுக்குட்டி வேணும். சரி. அடே தம்பி! மகாராஜாவுடைய பண்ணேலயிருந்து ரெண்டு ஆட்டுக்குட்டிய பத்திவுடடா. பத்திவுடு. அதவச்சிப் பெழச்சிக்கிர்றேங்காரு. ம். குடுத்தனுப்புடா டேய்)

பபூன்2 : ஆமா. இல்லாத மனுஷன் சோறு கேப்பான்; ஏதோ நாலுரெண்டு ரூபா கேப்பான்... வேட்டி கேப்பான்... துண்டு கேப்பான், இதுதாங் கேப்பாங்க. இவன் கிடாயி கேக்றான... குடுத்து *வச்சவம் மாதிரி. (அத வச்சிப் பொழச்சிக்கிரு வேன்னு கேக்றாம்ப்பா) எத்தினிக் கிடாய் வேணும்? (ரெண்டு)

பிச்சை 1 : ஒரு ரெண்டு கிடாய் குடுத்தா போதும்.

பபூன்2 : இரு இரு வர்றேன். கொஞ்சம் இரு. வர்றேன்... (மே...) இந்தாபாரு நல்லா கொழுத்த கிடாயி. ரெண்டு கிடாயிதான கேட்ட. இந்தா... ஒண்ணு வச்சுக்க. ஒண்ணு எனக்கிருக்கட்டும். (ஒண்ணு அவனுக்குக் கமிஷன்)

பிச்சை 1 : அட என்னய்யா! இதுலயும் கமிஷன் அடிக்கப் பாக்ற.

பபூன்2 : கமிஷமில்லாத வேல எதுவுமே கெடயாது (ஆமா, எத எடுத்தாலும் கமிஷந்தான் இப்ப) கமிஷன்

★ வச்சவம் மாதிரி = வைத்தவன் மாதிரி

எடுத்தாத்தான் அதில ஒரு இன்ரஸ்ட் இருக்கும். இல்லேன்னா போரடிக்கும் (அங்க ஒரு வெல வித்தா, இங்க ரெண்டு வெல விக்கணும்.) ஆமா அங்க ஒண்ணு வித்தமுன்னா இங்க நாலு வித்தாத்தான்... ஆமா மனுஷனுக்கு ரொம்ப இன்ரஸ்ட் இருக்கும். அதில லாபம் சம்பாதிக் கலாம். ஒண்ணுந் தெரியல? கொண்டு போ. இத நல்லா வளத்து, லாபத்துக்கு வித்து, நீ அதாவது லாபம். நீ... லாபம் எனக்குக் கொடுத்திரு. என்ன? (மத்தத நீ வச்சிக்க) ரொக்கம் நீ வச்சிக்க.

பிச்சை 1 : என்னய்யா இதிலயும் பங்கு போட வர்றியா? (ஆமா)

பபூன்2 : பெறவு, எவ்ளவு இதா நான் வளத்திருக்கேன் ஒனக்குத் தெரியுமா? (என்ன பாடுபட்டு வளத் திருக்கான்) என்னென்ன... பருத்திக் கொட்டயா வச்சிருக்கேன்? எங்கொட்டயா வச்சதுனால இவ்வளவு ஒசரமிருக்கு. {சிரிப்பு} கொண்டு போ. கொண்டு போ... கொண்டுபோ... (கொண்டு போ... மேமே...) நீ எங்க போற? (இதப் புடிச்சிக் கட்டிப் போடப்பா) நீ நம்ம வீட்டுக்குப் போ... போ.

பபூன்1 : ஏண்டா தம்பி!

பபூன்2 : மூணு கிடாய் அனுப்பிட்டேன். {சிரிப்பு} மூணு கிடாய். ரசீது போட்டுட்டாங்க. ஆள வரச் சொல்றா.

பபூன்1 : ஏம்ப்பா. ஒனக்கென்ன?

பிச்சை 2 : அய்யா... ஒரு ரெண்டு மாடு குடுத்திட்டீங்கன்னா, (வர்றவன்லாம்...) ரெண்டுக் காளக்கண்ணு குடுத்திட்டீங்கன்னா, அத வச்சிப் பொழச்சிக் கிடுவேன்யா. (ஆடு, மாடுதான் கேக்றான் வர்றவன்லாம்)

பபூன்1 : பரவாயில்லை. அடே தம்பி! ரெண்டு காளக் கண்ணு பத்திக் குடறா.

பபூன்2 : சரி, வரச்சொல்லு அவன.

பபூன்1 : போ. போ. (போ) வாச்மேன் கிட்டப் போ.

பபூன்2 : என்ன வேணும்? (ரெண்டு காளக் கண்ணு வேணு மாம்ப்பா)

பிச்சை 2 : மாடு இருந்தமுன்னா அதவச்சி நான் பெழச் சிக்கிருவேன்.

பபூன்2 : என்னடா இது! ஆடு மாடு கேக்க வர்றாங்க. (அதுவும் ஒரு தர்மந்தான்) இப்ப இருக்ற வெலவாசி என்ன? தாராளமாகக் கேக்றாங்களே. சரி சரி. பா... பா... பா... இந்தா பாரு இதக் கொண்டு போ. இது இருக்கட்டும். (அட ரெண்டும் ரெண்டாயிரம் பெறும்ப்பா) ஒண்ணு கொண்ட்டுப்போ.. (ம். இப்ப விக்கிற வெலைக்கி) ரொக்கம் நீ எடுத்துக்க. லாபம் எனக்குக் குடுத்திரு.

பிச்சை 2 : சரியய்யா... குடுத்தது போதும்.

பபூன்2 : பதில் பேசப்படாது. மூச்செடுக்கப்படாது. மூச்செடுத்தே... படுவா, ஜெயில்ல ஒன்னைய அடச்சிடுவேன். {சிரிப்பு} (மூக்கப் புடுச்சிக் கொன்னுப்புடுவான்) டிஸ்மிஸ் பண்ணிப் புடுவேன். ரிவால்வார்ல சுட்டுப்புடுவேன், படுவா. (பொல்லாத சண்டியரப்பா. புடிச்சிட்டுப் போப்பா) கொண்டு போ... கொண்டு போ... நீ வா, நீ வா (நீ, நம்ம வீட்டுக்குப் போ)... ஆள் வரட்டும். ஏ அப்பா! எவ்ளவு கஷ்டந் தெரியுமா... வேர்த்திட்டேன் (ம். காத்தாடி வேணும்னா வச்சிக்க)

பபூன்1 : ஏ! தம்பி!

பபூன்2 : ஏல குடுத்தனுப்பிச்சிட்டேன். வரச்சொல்றா (மூணு மாடு பத்திவுட்ருக்கு)

பபூன்1 : எம்மா, ஒனக்கு என்ன வேணும்?

பிச்சை 3 : என்னங்க. எனக்கு ஒன்றும் வேண்டாங்க. ஒரு சேல ஒண்ணு வேணும். (சேலதான் வேணுமா)

பபூன்1 : சேல. டேய் தம்பி! இந்தப் புள்ளக்கி ஒரு... ஒரு சீல வாங்கிக் குடுப்பா. (வாங்கிக் குடுறா... பொம்பளப் புள்ளன்னா எறக்கப்படுவான் அவன்)

பபூன்2 : என்ன மார்க்கு சேல வேணும்? எந்த சைஸ்ல வேணும்? (நைலான் சிலுக்ல வேணுமாம், எடுத்துக்குடு) என்ன... சீலமட்டும் போதுமா? ரவுக்க வேணாமா? (பொம்பளப் புள்ளன்னா விடமாட்டான். நல்லாக் கேட்பான்)

பிச்சை 3 : என்னங்க! ரவுக்கையும் வேணும், சீலயும் வேணும். ம்... பாவாடையும் வேணும் (பாடி)

பபூன்2 : இன்னும் மொத்தமாக் கேட்றேன். {சிரிப்பு} இன்னும் என்ன வேணும்?

பிச்சை 3 : 'பூ'வு வேணும்... பவுடரு வேணும்... கண்ணு மையி வேணும்.

பபூன்2 : வெளங்கிப்போச்சி. {சிரிப்பு} கடைசீல இவளுக்கு மாப்ளயும் தேடிக் குடுக்கச் சொல்வா போலத் தெரியுது. (பெறவு வேண்டாமா) இந்தா... மொதலாளி வந்து, ஒரு சேலைக்கித் தான் 'ஆடர்' குடுத்திருக்காரு. இன்னக்கி இஷ்டமெல்லாங் கேட்டா, நான் எங்கபோறது? (எல்லாம் கேட்டா, எங்கேருந்தம்மா குடுக்றது) அதெல்லாங் குடுக்க முடியாது.

பிச்சை 3 : இந்தாங்க மாமா (அடேயப்பாடி, அதுக்குள்ள மாமான்னு கூப்பிட்றா)

பபூன்1 : அடேயப்பாடி, அதுக்குள்ள மாமான்னு கூப்பிட்றா, ஏம்மா, என்னம்மா வேணும்?

பிச்சை 3 : சேல கேட்டீங்களே...

பபூன்1 : நானா கேட்டேன். நீ கேட்டியா நான் கேட்டனா?

பிச்சை 3 : நாந்தான் கேட்டேன்.

பபூன்1 : அப்புறம் வாங்கிட்டுப்போக வேண்டியது தான!

பிச்சை 3 : இதென்ன? சேல மட்டுங் குடுத்தாப் போதுமா?

பபூன்1 : இன்னுமென்ன வேணும்?

பிச்சை 3 : ரவுக்க.

பபூன்1 : ரவுக்க... சரி.

பிச்சை 3 : பாவாட வேணும்.

பபூன்1 : சரி.

பிச்சை 3 : கைல ஒரு பத்து அம்பது ரூபா வேணும் செலவுக்கு.

பபூன்1 : அம்பது ரூபா செலவுக்கு வேணும். சரி. அதெல்லாம் நமக்கு... சீல வேட்டியெல்லாம் எடுத்துக் குடுக்க முடியாது. வேணும்னா மொத்தம் ஒரு எரநூறு ரூபா வாங்கிகிட்டுப் போ.

பிச்சை 3 : காணாதுங்க. கூட எதாவது சேத்துக்குடுங்க. (ஆமா ஒழச்சிக் குடுத்தவல்ல)

பபூன்1 : கூட ஒரு அம்பது ரூபா வாங்கிக்க. எரநூத்தி அம்பது ரூபா வாங்கிக்க.

பிச்சை 3 : காணாதுங்க. ஒரு சேலயே எரநூத்தி அம்பது ரூபா ஆகுதே (ம். இந்த மொகரைக் கட்டைக்கிப் பாடுபட்டுக் குடுத்தாங்க)

பபூன்1 : குடுக்றத வாங்கிட்டுப் போ. இல்லேன்னா இதுவுமில்லாதப் போயிரப் போற. சரி, ஒரு முன்னூர்ரூபா வாங்கிட்டுப் போம்மா. தம்பி ஒரு முன்னூறு ரூபா குடுத்திட்றா...

பிச்சை 3 : இந்தாங்க. அவரு சொல்லியிருக்காரு. முன்னூர் ரூபாயுஞ் சேலயும் ரவிக்கையும், பாவாடையும் வாங்கிக் குடுக்கச் சொன்னாரு (ஆசையப்பாரு, அம்மாளுக்கு) {ஆசையைப் பாரய்யா}

பபூன்2 : ஆசையப்பாருப்பா. அப்படியா, முன்னூறு ரூபாயுங் கெடையாது. சேல, வேட்டி, பாவாட, டவுசரு வாங்கிட்டுத் தச்சித் தர்றேன். நீ உள்ளபோ... உள்ளபோ... உள்ள போயி உக்காரு. பெறவு வந்து சொல்றேன்... ஆள் வரட்டும் (ம். ஒனக்கென்ன வேணும்?)

பபூன்1 : ஒனக்கென்ன வேணும்?

பிச்சை 4 : *வகிறு நெறையச் சோறு வேணும்.

பபூன்1 : இவளுக்கு வகிறு நெறையச் சோறுமட்டும் போட்டு அனுப்பப்பா. (சோத்தப் போட்டு அனுப்பு)

பபூன்2 : போப்பா... அய்யோ நல்ல மனுஷன். (அவனுக்கென்ன வேணும்னு கேளு)

பபூன்1 : ஆமா, ஒனக்கென்ன வேணும்?

பிச்சை 5 : எனக்கொண்ணும் வேண்டாங்க. (அய்யய்யோ)

பபூன்2 : ஏன் விழுந்து ஓடுறா? (என்னம்மோ) {சிரிப்பு} இங்க போடுற போட்ல அவளுக்கு அங்க கலக்கிடுச்சி. {சிரிப்பு} ஏதாவது சாஸ்தியா கேட்டமின்னா ஒதைக்கிறாங்கனுட்டு, வந்தது போதும்னுட்டுப் போய்ட்டா. (பயந்து ஓடிப்போய்ட்டா)

பிச்சை 6 : அய்யா ஆடிருக்கு, மாடிருக்கு, கோழிருக்கு, குஞ்சிருக்கு, சொத்து சொகம் நெறையாயிருக்கு. (வேறென்னா வேணும்) ஆனால், நீ வச்ச வௌக்கு ஒன் வௌக்காயிருக்கணும்டா சாமி.. (ம். இவ்ளவு சொத்து வச்சவனுக்கு ஒரு வௌக்கு வாங்க முடியல?)

பபூன்1 : ஏய் லைட்டு கிய்ட்டு ஏதாவது வேணுமா? (அதான்... அப்படியாத்தான் இருக்கும்) என்ன எலெக்ட்ரிக் லைட் வேணுமா?

★ வகிறு = வயறு

பிச்சை 6 : அய்யா எலெக்ட்ரிக் பல்ப்பெல்லாம் நம்ம வீட்லயிருக்குது. (வேறென்ன வேணும்?) அய்யோ ஒன் வெளக்கு... வச்ச வெளக்கு ஒன்வெளக்காயிருக்கணுமடா சாமி. (அப்ப ஒரு ஹரிக்கேன் லைட்ட வாங்கிக்குடுத்து அனுப்பப்பா)

பபூன்1 : சிம்னி வெளக்கு எதாவது வேணுமா?

பிச்சை 6 : ஐயோ அதெல்லாம் டெசன் கணக்லயிருக்குதே. (பெட்ரோமாக்ஸ் லைட்டு?) அய்யோ அதும் இருக்குதே! (ஏய், என்ன வேணும்?)

பபூன்1 : இன்னும் என்னத்தக் கேக்குறானோ? என்ன எளவோ? என்னய்யா வேணும்?

பிச்சை 6 : ஐயா நீ வச்ச வெளக்கு ஒன் வெளக்காயிருக் கணும்டாசாமி. (இவ்ளவு சொத்து வச்சவனுக்கு ...எந்த வெளக்கு ஆசையாயிருக்கு சொல்றா)

பபூன்1 : இந்த... பல்பு கேக்றாம் போலயிருக்கு. எலெக்ட்ரிக் பல்பு. (அதாம் வேண்டாமுங்கானே.)

பிச்சை 6 : அதெல்லாம் இருக்குடா சாமி. மூலமூலக்கி என் வீட்ல எரியுது.

பபூன் 1 : அப்றோம், இன்னும் என்ன எளவு வேணும்?..

பிச்சை 6 : ஐயா ஒரு பொண்டாட்டி ஒண்ணு பாத்துக்குடுடா சாமி (இவ்ளவு சொத்து வச்சவனுக்கு ஒரு பொண்டாடி கெட்ட முடியல)

பபூன் 1 : ஆமா, தானதருமஞ் செய்யச் சொன்னியே (அட அது ஒரு தருமந்தாம்ப்பா) இதுபேரென்ன? (கன்னிகாதர்மம்) கன்னிகாதானம் (ம். கன்னிகா தானம்) கன்னிகாதானம். ம். அது ஒரு தருமந் தான? (ஆமா) எந்தப் பெண்ணப்போயிப் பாக்றது? (அட, ஓம் மாமம் மக ஒருத்தியிருந் தாளே, ஒரு நொண்டி)

பிச்சை 6 : ஜெயலலிதா போலயிருக்கணும். {சிரிப்பு} (ம்.... ஆகா... அப்படிக் கேளு சீமேல கையி) {சிரிப்பு}

பபூன் 1 : பார்ரா, இவன் அடிமொடாவ்லயே கைய வைக்றான். (அமா. அப்ப ஓசி பொண்டாட்டி... பிச்ச சோத்லயும் கொளஞ்ச சோறு) இந்தா ஜெயலலிதாவுங் கெடையாது, பத்மனியுங் கெடையாது, கொத்தமல்லியுங் கெடையாது. {சிரிப்பு} என் அத்த மக... அவபேரு வந்து மொத்தம்மா (முத்தம்மா) முத்தம்மா. என்ன... அவளுக்கு ஒரு காலு நொண்டி. அத வேணா கல்யாணம் முடிச்சித் தர்றேன்.

பிச்சை 6 : அய்யா எந்த நொண்டியிருந்தாலும் இந்த முதுவுல வை ராஜா.(வை ராஜா முதுவுல) நான் கொண்டு போறேன்...குடுறா சாமி. எப்பா. ஒங்காலக் கும்புடுறண்டா...எப்பா.

பபூன் 1 : அடே தம்பி! நம்ம அத்த மக இருக்றாள்ளா முத்தம்மா (ம். மொத்தம்மா) ..ம். அவளத் தூக்கிட்டு வந்து இவன் முதுவுல வச்சி விடு. இவன்... அவன் வீட்டுக்குக் கொண்டு போகட்டும். (வீட்ல கொண்ட்டுப் போய்த்தான் எறக்கணும்.)

பிச்சை 6 : அப்படியா?

பபூன் 2 : (எடவழியில எறக்கக்கூடாது) நீ போ நான் குடுத்து அனுப்பிர்றேன்... ஏய்! ஒனக்கு என்னப்பா வேணும்? (இவன் குடுத்திடுவான் செம்மையா) பொண்டாட்டிதான... அதாவது என் அத்த மக இருக்றா பாரு, ரொம்ப சாந்த குணம் படைச்சவ. என்ன... *மின் கோபம் சாஸ்தி. ஆனா அதுக்கு, கால்கை வராது. சோறு கீறு பொங் கணும்னா நீதான் பொங்கணும். வெளிக்கியிருக்கத் தூக்கிப் போகணும் {சிரிப்பு} அதுக்குச் சம்மதமா? (குண்டியெல்லாங் கழுவி விட்ருவான்)

★ மின்கோபம் = முன்கோபம்

பிச்சை 6 : அய்யோ... அய்யோ.. எந்த நொண்டியிருந் தாலும் முதுவுல வை ராஜா. மூலயில வச்சிச் சூடஞ் சாம்ப்ராணி காமிச்சிப் பாத்துக்கிட்டே யிருப்பனடா அப்பா.. (ம். தூக்கி வையப்பா.)

பபூன் 2 : ம். நல்ல மனுஷன். அப்படித் திரும்பி இங்கஇரு. நான் போயித் தூக்கிட்டு வர்ரேன். (தூக்கிட்டு வரட்டும், திரும்பிக் குனிஞ்சுக்கப்பா)

பிச்சை 6 : டேய் படுவா! டேய் டேய், அயோக்கியப்பயல! (பாத்தியா) ஏல டேய்! காலிப் பயலே! ஏண்டா படுவா... எம் பொண்டாட்டியக் கொண்டுட்டு வர்றதுக்கு இவ்ளவு நேரமா? (பார்ரா அவனுக் கிருக்ற திமிர). {சிரிப்பு} கொண்டாடா. எம் பொண்டாட்டிய {சிரிப்பு} ஏண்டா அயோக்கியப் பயல! எம் பொண்டாட்டியத் தூக்கிட்ட வர்றதுக்கு இவ்ளவு நேரமா? படுவா ஒன்னைய அடிச்சிப் பல்லுகில்லு ஒடச்சிருவேன். (இப்பக் குடுப்பான் வாங்கிக்க) கொண்டாடா எம் பொண்டாட்டிய. ஏண்டா டேய்! (இந்தாக் கொண்டாறான் வாங்கிக்க) கொண்டாடா இங்க. அய்யாசாமி சீக்கிரம் தூக்கிட்டு வாடா சாமி. காலக் கும்புடுறேன். (பாத்தியா. ஆளக் கண்டதும் கும்புடுறான்.)

பபூன் 1 : ஆமா. இவ்ளவு நேரம் இவன் யாரப்பேசிக் கிட்டிருந்தான்? (ஒன்னையத்தான்) இந்தாயா! நீ திரும்பு... திரும்பப்படாது. இங்கமுதுவுலத் தூக்கி வைக்கிறத வீட்ல போயித்தான் ஏறக்கிப் பாக்கணும். (ஆமா. எட்டு நாளைக்கி ஆறக் கூடாது) அப்படிக் குனிஞ்சிக்க. தூக்கிட்டு வரட்டுமா?

பிச்சை 6 : வை ராஜா. அய்யா முதுவுல வை ராஜா (வை ராஜா)

பபூன் 2 : ஏய்! குடுக்றத வீட்ல ஏறக்கித்தான் பாக்கணும்.

பிச்சை 6 : வை ராஜா. வை ராஜா (வை ராஜா)

பபூன் 2 : ஏய்! குடுக்றத வீட்ல எறக்கித்தான் பாக்கனும்.

பிச்சை 6 : வை ராஜா. வை ராஜா [பபூன் 2 அடிக்கிறான்] அய்யய்யோ... அய்யய்யோ... யம்மா... யம்மா... {சிரிப்பு}

பபூன் 2 : ஏய் பொண்டாட்டி! (வாங்கிட்டுப் போய்ட்டான், பொண்டாட்டி) எப்படியிருக்குது பொண்டாட்டி {சிரிப்பு} ஏய்... படுவா ராஸ்கல் அய்யோ பாவம்னு தூக்கிட்டு வரலாம்னு போனேன்... அயோக்கியப் பயல, அந்தப்பயல, இந்தப் பயலேன்னு பேசுறான் படுவா {சிரிப்பு}

பபூன் 3 : மாப்ள அந்த அஞ்சி பைசா {சிரிப்பு}

பபூன் 2 : ஏல மொளு மொளுப் பயலே! எங்க போனாலும் அஞ்சி பைசாவக் கேக்றாம் பாரு. ஏல... [அடிக்கிறான்]... [இசை]

பாடல் : **உன்னைச் சொல்லிக் குற்றமில்லை**
என்னைச் சொல்லிக் குற்றமில்லை
காலம் செய்த கோலமடி
கடவுள் செய்த குற்றமடி

வசிட்டர் : அப்பா ராமச்சந்திரா! ஆனால் வேண்டிய படினங்கள்லாம் படித்துக் கொடுத்து வந்தேன். ஆனால் உன்னுடைய திறமைகள் உன்னுடைய சாமார்த்தியங்களை நான் தெரிய வேண்டும். ஆனால் உன்னுடைய வில் எடுத்து, உன்னுடைய அம்புனால் அதோ தெரியுதே மரம், அந்த மரத்தை, ஆனால் ஒரே அம்புனால் அந்த மரத்தைக் கீழ் சாய்த்துவிட வேண்டும்.

இராமர் : சவாமி! ஆனால் என்னுடைய வில் வளைத்து, என்னுடைய அம்புனால் அந்த மரத்தை ஒரே அம்புகளினால் கீழ் சாய்த்து விட வேண்டும். அப்படியே நான் சாய்த்து வருகிறேன்.

பாடல் : **ராமா ராகவா ராஜி பரோஜன**
சாமித்த வரவா ஜீயராகவா!
சூரசங்கார தேவா
கோவிந்தா கிருஷ்ணா
நந்த நந்தன கோவிந்தா

தங்களுடைய வார்த்தையை நான் கேட்டு ஒரே அம்புகளினால் அந்த மரத்தை நான் கீழ் சாய்த்து விட்டேன்.

வசிட்டர் : அடடாடா. மகாக் கெட்டிக்காரன். மகா சாமர்த் தியம் உடையவன். ஆனால் ஒரே சொல்லும் சொல்றதுக்குள்ளாக மரத்தை ஒரே அம்பினால் கீழ் சாய்த்து விட்டானே! மகா கெட்டிக்காரன். மகா சாமார்த்தியம் உடையவன். அப்பா லஷ்மணா!

இலக்கு : சுவாமி!

வசிட்டர் : எங்கே ஒன்னுடைய திறமையை நான் காண வேண்டும். ஆனால் உன் வில் வளைத்து ஒன்னு டைய அம்பினாலே அந்த மரத்தை நீ கீழ் சாய்த்து விடு பார்ப்போம்.

இலக்கு. : அதை நான் சாய்த்து வருகிறேன்.

பாடல் : **ராமா ராகவா ராஜி பரோஜன**
சாமித்த வரவா ஜீயராகவா
சூர சங்கார தேவா
கோவிந்த கிருஷ்ணா
நந்த நந்தன கோவிந்தா

வசிட்டர் : அடடாடா... மகா கெட்டிக்கரன். மகா சாமர்த்தியம் உடையவர்கள். பேஷ்! பேஷ்! ஆனால் உலகத் தில் உங்களை ஜெயிக்கக் கூடியவர்கள் (உலகத்ல யில்ல) உலகத்தில் யாருமே கிடையாது. ரொம்ப சந்தோஷம் அடைந்தேன். அப்பா ராமச்சந்திரா!

இராமர் : சுவாமி!

வசிட்டர் : நான் போய்ட்டு வரட்டுமோ? (ம்... போயிட்டு வாங்க)

இராமர் : சென்று வாருங்கள் சுவாமி.

வசிட்டர் : ஏவ்வ்வ்... (ம். கருவாட்டுக் கொளம்பு ஏப்பம்)

பாவையாட்டி : ஆனால் வசிஷ்ட மகாமுனிவர் இராமர் லெட்சுமணர் இருபேர்களையும் வில்வித்தை யானது சொல்லிக் குடுத்துக் கொண்டிருக்கிறார். அந்தச் சமயத்தில், ஆனால்...கூனியானவள் கைகேசியம்மாளுடைய வீட்டில் வேலை பார்க்கக் கூடிய கூனியானவள், அந்த இராம லெட்சுமணர் இரு பேர்களும் வில் விளையாட்டுகள் பழகிக் கொண்டிருப்பதை, அதை வேடிக்கை பார்க்க வேணுமென்றே வருகிறாள்.

பாடல் : **கூனி வந்தாளே!**
பொல்லாத கூனி வந்தாளே!
கூனு குறுகுறுத்து
வில்லைப் போல வளைத்து
கூனைப் போல நின்று
குடியைக் கெடுப்பவள்
கூனி வந்தாளே!
ராமரை வனவாசம் ஓட்ட
இராவணன் குடிகெட்டுப் போக
கூனி வந்தாளே!
பொல்லாத கூனி வந்தாளே!

கூனி : அட அடா அட அடா அடா... அப்பா ஆனால் என்னை யாரென்று உங்களுக்குத் தொயாது. (ஆமாத் தொயாது) அந்தக் கைகேசி அம்மாளு டைய வீட்டில் தாதி வேலை செய்யக்கூடிய என்பேர் கூனி என்றே சொல்வார்கள். என்னா... ஆனால் இராமன் இலச்சுமண் எவ்வளவோ அழகாகவே வில்... வில் வித்தையானது படித்துக்

கொண்டிருக்கிறார்கள். பார்த்தீர்களோ? (ம். கண்ணுல மண்ணள்ளிப் போடுங்க) பார்க்கப் பார்க்க ரொம்ப அழகாயிருக்கிறார்கள். பசி கூட எடுக்காது போலத் தெரிகிறது. (ம். ஒனக்குப் பசிக்காது)

பாவையாட்டி : ஆனால் கூனியானவள் வேடிக்கைப்பார்த்துக் கொண்டிருக்கக் கூடியவள்... ஸ்ரீராமருக்கு அது தெரிந்து இதோ லெச்சுமணனிடம் அந்த வரலாறு களைக் கேட்கச் சொல்கிறார்.

இலக்கு. : அண்ணா!

இராமர் : இந்தக் கிழவியானவர் யார்?

இலக்கு. : இந்த ஔவைக் கிழவியானவள் அய்யோபாவம். ஒம்போது கூன்கள். அதில் செப்புக் குடங்களை வைத்துக் கொண்டு தண்ணீருக்காகவே போகிறாள்.

இராமர் : நம்முடைய அரமணைக்குள்ளாக இப்பேர்ப்பட்ட ஒரு மனிதர்களும் நம்முடைய... அரமணைக் குள்ளாக இருக்கிறார்களா?

இலக்கு : அண்ணா! இது யாருன்னு ஒங்களுக்குத் தெரியாது.

இராமர் : யாரது? யாருடைய வீட்டில் வேலை செய்து கொண்டு வருகிறாள்? நம்முடைய அரமணைக் குள்ளாகத்தாள் இருக்கிறாளா?

இலக்கு. : அண்ணா! நம்முடைய சிறிய தாயார் கைகேசி அம்மாள் அவர்கள் இருக்கிறார்களல்லவா... ஆனால் பரதனுடைய தாய் கைகேசி அம்மாள். ஆனால் கைகேசி அம்மாளுடைய வீட்டில் தாதி வேலை செய்யக் கூடியவள். இவளுடைய பேரு வந்து மந்தாரக் கூனியென்றே சொல்லி வருவார்கள். ஆனால் இவள் வேலை செய்ய முடியாமல் இந்த ஒம்போது கூன்களையும் காமித்து ஏமாத்திச் சாப்பிட்டுக் கொண்டே

வருகிறாள். ஆக நாங்கள் விளையாடுவதை வில்வித்தையானது படித்துக் கொண்டிருப்பதை அவள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவளைக் கண்டு... நாங்கள் எதற்காகப் பார்க்க வேண்டும்? * பிறப்படுங்கள். நாங்கள், பள்ளிக் குடங்கள் நாங்கள் சென்று விடலாம்.

இராமர் : அய்யோ பாவம். இந்த ஒம்போது கூன்களும் இருக்கக்கூடியது அந்தக் கிழவிக்கு ரொம்ப கஷ்டமாக இருக்குமல்லவா?

இலக்கு. : கஷ்டமாகத்தான் இருக்கும் அண்ணா!

இராமர் : இப்ப ஒம்போது கூன்களையும் என்னுடைய அம்பினால் ஒரே கூனலாக நிமிர்த்தி விட்டா லென்ன?

இலக்கு. : அண்ணா வேண்டாம். இந்த ஒம்போது கூன்களையும் ஒரே கூனலாக நிமிர்த்தி விட்டால்** ஆனால் ஏதாவது சாபத்தைக் குடுத்து வருவாள். சாபத்துக்கு நாங்கள் ஆளாக வேண்டாம். வேண்டாமண்ணா பிறப்படுங்கள். நாங்கள் பள்ளிக்குடத்துக்குச் சென்று விடலாம்.

இராமர் : தம்பி! உலகத்தில் நன்மையான காரியத்தைச் செய்தால் அதைக் கெடுதி என்று யாராவது சொல்லி வருவார்களா? சொல்லவே மாட்டார்கள். என்னைத் தடுக்க வேண்டாம். ஒம்போது கூன்களும் ஒரே கூனலாக நான் நிமிர்த்தி விடுகிறேன்.

இலக்கு. : வேண்டாம் அண்ணா! நாங்கள் சொல்வதைக் கேளுங்கள். ஏதாவது சாபத்தைக் கொடுத்து வருவாள். அவள் போடக்கூடிய சாபங்கள் ஒடனே பலித்து விடும். வேண்டாம் அண்ணா. பிறப்படுங்கள். பள்ளிக்குடமாக நாங்கள் சென்று விடலாம்.

★ பிறப்படுங்கள் = **புறப்படுங்கள்**

★★ சிறு சலசலப்பு. **'அமைதி. சத்தம் போடாதீங்க' என்ற சப்தங்கள்**

இராமர் : தம்பி! நீ சிறு குழந்தையாக இருக்கிறாய். ஒன்றுமே புரியாமல் பேசிக்கொண்டு வருகிறாய். அமைதி யுடன் அங்கேயிரு. கூனி!

கூனி : என்னாப்பா ராமச்சந்திரா? கோசலதேவிமகன் ராமன். இந்த... சிமித்திரை மகன் லெச்சிமணன். என்ன...அப்பா ராமச்சந்திரா! எதுக்கப்பா என்னையக் கூப்பிட்ட?

இராமர் : என்னுடைய தாயாகிய கைகேசி அம்மாளுடைய, சிறிய தாயார் கைகேசி அம்மாள் விட்டில் தாதி வேலைசெய்துகொண்டு வருகிறாய்.

கூனி : ஆமா. என்ன பண்றது? நான் பெறந்த பெறவி. அடடா. ஆனால் இந்த ஒம்போது கூன்களும் செம்புக் குடங்களை வைத்துக் கொண்டு தண்ணீரானது எடுத்துக் கொண்டே போக வேண்டும். என்னப்பா செய்வது? என் தலை விதி. நான் யார் கிட்ட நான் சொல்லறது. (ம்...)

இராமர் : கூனி! கவலைப்படவேண்டாம். என்னுடைய அம்புனால், ஓடாமல் ஒளியாமல் ஒரு நெராக நின்றால்... இந்த ஒம்போது கூன்களும் ஒரே கூன்களாக நிமிர்த்தி விட்டால் உனக்குக் கஷ்ட மில்லாமல் இருக்கும் அல்லவா?

கூனி : அடப்பாவி. நான் என்னப்பா ஒனக்குக் குத்தஞ் செஞ்சேன்? அட நீ வெளயாடுறத வேடிக்கப் பாத்தது ஒரு குத்தமாப் போச்சா? அடப்பாவி ஏம்ப்பா எங் கூனலை நீ நிமுக்கப் போற? வேண்டாப்பா. வேண்டாம். வேண்டாம் ராமா. நான் இப்படியே இருந்தாலும் போதும்.

இராமர் : நீ எங்கே போனாலும் சரிதான். என்னுடைய அம்புனால் உன்னுடைய ஒம்போது கூன்களும் ஒரே கூனலாக நிமிர்க்கத்தான் போகிறேன். ஓட வேண்டாம்... [இசை]

கூனி : அடப்பாவி. நான் என்னப்பா குத்தம் செய்தேன். இந்த ஒம்போது கூனல் இருக்றது எனக்கு ரொம்பவே நன்மையாயிருக்றதென்றே நினைத் திருந்தேனே! (ம். ஏமாத்திச் சாப்பிட்டுக்கிட்டே இருந்திருக்கலாம்) வேல செய்ய முடியாமலே இந்த ஒம்போது கூனாலும் கால்நீட்டி, ஏமாத்தி கைகேசிட்டயே சாப்பிட்டுக்கிட்டே இருந்தனே! இது ஒனக்குப் போறாமையாகப் போய்விட்டது. வேல செய்யாமல் ஏமாத்திச் சாப்பிடுகிறாளே... இந்த ஒம்போது கூனலும் நிமித்திட்டம்னா வேலசெஞ்சிச் சாப்பிடட்டும் இப்படீன்னு... இந்தப் போறாமை. என்னையே அயோத்தியச் சுத்திச் சுத்தி... என்னைய ஒம்போது கூனலும் நிமித்தீட்டியே. ஏண்டா நீ வெளங்குவியா? அட நீ நாசமாப் போக! இந்த சமயத்தில் என்னைய இப்பேர்ப்பட்ட கொடுமை செய்து விட்டாய். ஒன்னைய... காலா காலத்தில், ஒரு சமயமா சமயங்களில்... 'ஒன்னைய நான் பதினான்கு வருஷம் பதினாறு நாள் பதினாறு நாழிகை ஒன்னையக் காட்டு வழியாகவே நான் வெரட்டி விடலையென்றால் நான் என்னடா கூனி... வருகிறேனடா..., [இசை]

இராமர் : [உரைப்பாட்டு] 'நன்மையான காரியத்தை நான் செய்யப்போக... நன்மையான காரியத்தை நான் செய்ய, வதந்தி அடிக்கச் செல்லுகிறாள் கூனி யானவள். என்னென்ன கஷ்டங்கள் நேர்கிறதோ? எனக்கு ஒன்றும் புரியவில்லை. லெட்சுமணா... ஆ... ஆ... நீ சொன்னது உண்மையாகவே போய் விட்டதே.'

இலக்கு. : அண்ணா! வருத்தப்படவேண்டாம். நம்மளு டைய அரமணைக்குள்ளாக வேலைக்கி இருக்கக் கூடியவள். (வேலைக்காரிதான) ஆனால் இவள்க்கு... என்ன செய்துவிட முடியும்? (செய்ய

முடியாது) நாம் நினைத்துவிட்டால் அரமணையை விட்டு வெளியே விரட்டி விடலாம். இவள் நினைத்தது போல், இவள் சொல்கிறது போல் நாங்கள் செய்து விட முடியுமா? ஆனால்... நடந்து விட முடியுமா? (முடியாது) ஒன்றுமே நடக்காது. இதப்பத்தி நீங்கள் வருத்தப்பட வேண்டாம். நான் மொதலாவது எவ்வளவோ சொல்லி வந்தேன். என் வார்த்தையை நீங்கள் கேட்கவில்லை. சரி. பிறப்படுங்கள். இதை நீங்கள் மனதில் நினைக்க வேண்டாம். பிறப்படுங்கள். பள்ளிக்குடமாக நாங்கள் சென்று விடலாம்... [இசை]

வசிட்டர் : ஏவ்வ்வ்... (இவருக்கு அடிக்கடி ஏப்பம் வரும், புளிச்ச ஏப்பம்) அடே அம்பி! (ம்!தம்பி) ஆனால் ராமன் லெச்மணன், ஆனால் பள்ளிக்குடம் போகின்றார்களோ? (ம். போய்ட்டாங்க) போய் விட்டாக்களோ? (ஆமாம்) அடாடாடாடா டேய்!.... (மேல பாத்துகிட்டே வந்தா...) என்னடா இது? அட என்ன இது? இது வரிசையா குழி தோண்டியிருக்கிறது? (ஏய்! ராமர், லெச்மணன் குண்டு வெளயாட்னாங்க சாமி) அட நான் எப்பவும் வழக்கம் போல் வரக்கூடிய பாதை (ம். மேல பார்த்துக்கிட்டே.... மானத்தை) ஆனால் மிதியடிகள் போட்டுக் கொண்டு வரக்கூடிய கட்டைகள்... நான் மிதியடி போட்டுக் கொண்டு வந்தேன். ஆனால் திடீரென்று அந்தப் பள்ளத் திற்குள் நான் காலை வச்சிட்டேன். குப்புறக் கீழ விழுந்து {சிரிப்பு} மூஞ்சி மொகரயெல்லாம் ஏக மண்ணாப் போச்சி {சிரிப்பு} (ம். தொடச்சிடுங்க. இந்த வாய்க்கால்ல தண்ணி போவுது, குளிச் சிட்டுப் போங்க) அட அடாடாடாடா. என்னையப் பள்ளத்தத் தோண்டிக் கீழத் தள்ளினவன் யாராயிருந்த போதிலும் சரி... ஒரு பிரம்மாண்டமான ஒரு அரக்கன், இராட்சதனு

டைய வாய்க்குள்ளாகப் போய் அகப்பட்டு, ஆனால் ரொம்பக் கஷ்டப்பட வேண்டும். என்னுடைய சாபங்கள் வீண் போகாது. (ம்... இவர் ஒரு சாபம்). ஏவ்வ்வ்..... [இசை]

இராமர் : தம்பி! ஆனால் வஷிஷ்ட மகா முனிவர் குடுத்த சாபத்தைப் பார்த்தாயா? அது எங்கள் மீது தான் தவறு. அவர் எப்பவும் வரக்கூடிய பாதையை நாங்கள் குழி... அனால் குழிகளைப் பறித்து, குண்டுகள் நாங்கள் விளையாடும் சமயத்தில், அதை * மேவாமலே நாங்கள் வந்து விட்டோம். அவர் நடந்து வரக்கூடியவர். அது தடுத்துக் கீழ விழுந்துவிட்டார்.

இலக்கு. : அண்ணா! எப்பேர்ப்பட்ட கஷ்டங்கள் வந்தாலும் நாங்கள் கஷ்டம் அனுபவிக்கத்தான் வேண்டாம். கவலைப்படவேண்டாம்.

இராமர் : அய்யோ! மறுபடியும் இந்தப் பாதைக்கித்தான் வருவார்கள். ஆனால் மண்ணுகளைப் போட்டு அந்தக் குழியை மேவி விடு.

இலக்கு. : வாருங்கள் போகலாம்....[இசை]

பாவையாட்டி : விண்ணுலகத்தை அரசு புரிய வேண்டிய காந்திராஜக் குமாரர் விசுவாமித்திர முனிவர் இதோ அயோத்திமா நகரங்கள் வருகிறார்.

பாடல் : **தவமுனி விஸ்வாமித்ரர் வாராரே!**
தவமுனி விஸ்வாமித்ரர் வாராரே!
தவமெல்லாம் வீணாகப் போச்சுதே என்று
ராமரை அழைத்துச் சென்று
சங்காரம் செய்யவே - முனிநாதர் வாராரே!

விசுவா. : ஏவ்வ்வ் ... அடே (ஏய்) அடேய்! என்னைய என்னப்பு யாருன்னு தெரியுதோ? (யார்ன்னு

★ மேவாமலே = மூடாமலே

தெரியலையே சாமி) ஆனால் விண்ணுலோகத்தை அரசு புரிய வேண்டிய காந்திராஜன் குமாரர் விசுவாமித்திர மகாமனிவர் என்று சொல்லி வருவார்கள். (விசுவாமித்திர மகாமுனி) உண்மைதான். (இப்ப எங்க போறீங்க?) ஆனால் இந்த அயோத்திக்கு ரொம்ப நாட்களாகி விட்டது நான் வந்து. ஆனால் இங்கே காவல் பார்க்கக் கூடியவர்கள் ஒருத்தரும் காணவில்லையே. (அந்தா அந்த அரமண வாசல்ல பாருங்க. ஒரு தடிப்பய இருக்கான்.... அந்தா உக்காந்திருக்கான் தடியன்)*

காவலாளி: (பபூன்1) (உட்காரப்பா) சாமியார் வரணும்னா. ஊர்க் குள்ள போகச் சொல்லு பிச்ச எடுக்க (அடயாருன்னு கேளப்பா)

விசுவா. : அடே அம்பி! (ரிஷி, ரிஷி வந்திருக்காரு)

காவலாளி: எந்தக் குசு விட்டாலுஞ் சரிதான் {சிரிப்பு}

விசுவா. : அடேய்!

காவலாளி: ஏஹே...ஹே... (என்னா?) ஏ அப்பா! தாடியும் முடியும் வச்சுக்கிட்டு பிசாசாட்டம் நிக்குது ஏழவு. (ஓய்! முனிவரப்பா.. கேலி பண்ணாத) சரியான முனி புடிச்சிருக்கு. தூரப்போகச் சொல்லு (காசு குடுத்திருவாரப்பா)

விசுவா. : அடே யார்ரா நீ?

காவலாளி: நீங்க யாரு?

விசுவா. : அடே நீ யாரு?

காவலாளி: நீ யாரு?

விசுவா. : அடே என்னடா. கேக்றதுக்குப் பதில் சொல்லாம... ஆனால் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கியே.

★ பதிவு நாடாவை மாற்றுகிற சில நொடிகள் இடைவெளி

காவலாளி: நான் கேக்றதுக்கே நீங்க பதில் சொல்லாம திருப்பித் திருப்பி நீங்க குண்டி பீத்திக்கிட்டிருக் கீங்களே {சிரிப்பு} (ஏய் கேலி பண்ணாத. என்னான்னு கேளப்பா)

விசுவா. : அட நீ சொன்னாலென்ன?

காவலாளி: ஏன் நீங்க சொன்னா யென்ன? {சிரிப்பு} (அவன் கேக்க மாட்டான், அகராதி புடிச்சவன்)

விசுவா. : அட என் பேரைச் சொன்னால் உன் பேரைச் சொல்கிறாயோ?

காவலாளி: சொல்றனே. சாமி! நீங்கயாரு? இங்க எதுக்க வந்திங்க? இவ்வளவு காலமா ஒங்கள நான் பாத்தது கிடையாது.

விசுவா. : ஆனால் நான் ஒன்னையப் பாத்தது இல்லை.

காவலாளி: ரெண்டு பேரும் அறிமுகம் இல்லாத ஆட்கள். நீங்க சொல்லுங்க ... மொதலாவது நீங்க இன்னார்னு! ரெண்டாவது நான் சொல்றேன்.

விசுவா. : என்னைய யார்னு ஒனக்குத் தெரியாது? (தெரியாது)

காவலாளி: தெரியாமத்தான் கேக்கறேன்.

விசுவா. : விண்ணுலோகத்தை அரசு புரிய வேண்டிய காந்திராஜ குமாரன். என்பேர் விஸ்வாமித்ர முனிவர் என்று சொல்வார்கள். (விஸ்வாமித்ர மகாமுனிவர்)

காவலாளி: என்னைய யார்னு ஒங்களுக்குத் தெரியுமா?

விசுவா. : தெரியாதே.

காவலாளி: ஆனால் இந்த அம்பத்தாறு தேசத்தையும் அடக்கி அரசு புரிய வேண்டிய... என்ன... தசரத சக்கரவர்த்தி நான்தான் (ஏய்! போட்டான்டா ஒரு போடு)

விசுவா. : அடே தசரதன் நீ தானோ ம். (நான்தான்)

காவலாளி: நான் தான் சாமின்னா, நீதான்'டா' வா. நான் தான் 'டா' வா .... நான்தான் சாமி, தசரத சக்கரவர்த்தி நான்தான்.

விசுவா. : ஆனால் இந்த அயோத்தியை அரசு புரிய வேண்டிய தசரதன் நீ தான்.

காவலாளி: சத்தியமா நான் தான்.

விசுவா. : என்னடாது? ஆனால் தசரதன்னு... அரசர் களுக்கோ... ஆனால் ராஜமணி மகுடங்கள், கிரீடங்கள் இருக்குமே!

காவலாளி: அதென்ன கேக்றாரு? (ஏய் தலயில முடி.. முடி) தலயில முடியிருக்குதே (ம். மணி மகுடம் இருக்கும்லாம்ப்பா) தலயில கவுத்திருப் பாங்களே கிரீடம் (ம். கிரீடம்) அடேடேடே சாமி! இப்ப அடிக்கிற வெயிலப் பாத்தமுன்னா மண்டய ஒடைக்குது. (அதுக்காக) என்னா ... வெயிலுக் குப் போகும்போது தலயில கவுத்தியிருப்பேன். வீட்டுக்கு வந்தமின்னா கழட்டி வீட்டுக்கு ஒயரதொங்கப் போட்றணும். (என்னா.. குடுமிய வச்சிக்கிருவயா) ஆமா. அது இப்ப அரமணைக்குள்ள இருக்கு.

விசுவா. : ஆனால் அரசர்களுக்கு வேண்டிய உடைகள், ராஜநடைகள், ஆனால் ரொம்ப அழகுடனிருப் பார்கள். உன்னைப் பார்க்கும் போது ரொம்ப அசிங்கமாயிருக்குது.

காவலாளி: இப்பத்தான தண்ணி உட்ருக்காக வாய்க்கால்ல. இனுமதான குளிச்சி, சோப்பு கீப்பு போட்டு நல்லா வரணும். (ஆமா, இவ்வளவு நாளா குளிக்க மாட்டியோ) இவ்ளவு நாளா தண்ணி உடல. குளிக்கல. இனும்தான் குளிக்கணும். (சரி. அப்ப வாய்க்காலுக்கு நட)

விசுவா. : அகராதிபிடித்தவனாகயிருக்கிறான். சரிதான். இவன் உள்ள போக விடமாட்டான். ஆனால் கிட்டிக்குள் மாட்டினால்தான் உள்ளதைச் சொல்வாள். அடேய், அப்பா தசரதனே!

காவலாளி: என்ன சாமி?

விசுவா. : ஆனால் அம்பத்தாறு தேசத்து அரசர்களுக்கு ஆனால் முத்திரமோதிரங்களை நான் கொண்டு வந்திருக்கிறேன். (ஏ! மூத்திர மோதிரம்)

காவலாளி: மூத்திர மோதிரமா? (ம். மூத்திர மோதிரம்)

விசுவா. : அட இல்லடா மோதிரங்கள்...

காவலாளி: தங்க மோதிரமா?

விசுவா. : அட உண்மை தான்.

காவலாளி: யாத்தாத்தோ ... யம்மம்மா ... யம்மம்மா .. {சிரிப்பு} சாமி அந்தத் தங்க மோத்ரம் இந்தக் கைலப் போடுங்க. (டேய் மோதிரம்... மோத்ரமா)

விசுவா. : டேய் மோதிரம்டா.

காவலாளி: சரி. இதெல்லாம் எனக்குக் குடுக்க வந்திருக் கீங்களா? காமிச்சிட்டுக் கொண்டு போக வந்திருக்கீங்களா? (டேய்! ஒங்க கைல மாட்றதுக்கு வந்திருக்காங்க)

விசுவா. : ஆனால் உன் கையில் போட்டால் ரொம்ப அழகாயிருக்கும். ஆனால் அரசன்னு சொல்வ தனால்... ஆனால் ராஜநடை ஒனக்குத் தெரியுமோ? (நல்லா நடப்பான்)

காவலாளி: ராஜநடை எனக்காத் தெரியாது? (அதான கழுத குதிச்ச மாதிரி)

விசுவா. : எங்கே நடந்து காமி பார்ப்போம். அடத் தடிப் பயலே! (சாமியாரையே ஏறி மிதிச்சிட்டான்) அட என்னடா கழுத குதிச்ச மாதிரி குதிக்கிறே? {சிரிப்பு} (இதான் ராஜநடை)... [இசை]

காவலாளி: இதான் ராஜநடை. (மந்திரி நடை நடக்கணுமா?) இனி யார் யார் நட நடக்கணும் சொல்லுங்க.

விசுவா. : அட, ஆளக் கொன்னுப்போடுவ போல யிருக்குதே!

காவலாளி: கிட்ட இருந்தம்னா... ஒதச்சிப் பல்லுகில்லெல்லாம் ஒடச்சிருவேன். {சிரிப்பு} அவ்ளவு வேகத்ல நான் நடப்பேன்.

விசுவா. : சரிதான். அந்தக் கைய நீட்டு. வெரலநீட்டு. (கட்டிப் போட்டக் கழுதய அவுத்து விட்டா எப்படிக் குதிக்கும்?) அடா அந்த வெரல நீட்ரா.

காவலாளி: எதுக்குச் சாமி?

விசுவா. : அட. இந்த வெரல்ல போடுவோம், அந்த மோதிரத்தை! (மோதிரம் போட)

காவலாளி: மோதிரம் போடணுமா? (ஆமா) எங்க... போடுங்க! இந்தக் கைல போடுங்க (போடுங்க) இந்தக் கைல போடுங்க சாமி. நல்லாருக்குமா? (போடுங்க சாமி சீக்கிரமா)

விசுவா. : அட உள்ளதச் சொல்றா நீ. யார்ரா நீ?

காவலாளி: சத்தியமா நான் தசரதர்தான். (இப்ப நீ குய்யாம்மிய்யாம்னு கத்தப் போற. இரு) சத்தியமா நான் தசரதர் தான். [அடி விழுகிறது] அய்யய்யோ... அய்யய்யோ ..... அம்மம்மா ... அய்யய்யோ ... அய்யோ ... கையெல்லாம் விடுக்கு விடுக்குங்குதே. அம்மா ... அய்யய்யோ... அய்யய்யோ... (அட மோதிரம் போட்டது இதுக்காகத்தான்) விடுக்கு விடுக் குங்குதே சாமி. புடுங்குங்கசாமி. (என்னத்தப் புடுங்க சாமி?) அய்யய்யோ சாமி புடுங்குங்க சாமி. அய்யய்யோ... யப்பப்பா (அட சாமி புடுங்கமாட்டாரு இனிம) ஏ! நாசமாகப் போக. உயிர்போகுதே... அய்யய்யோ... யய்யய்யோ... அப்பா... ஆத்தா... அப்பா... ஏலசாமி! புடுங்குங்க

சாமி... (ஏல சாமி புடுங்குங்க) ஏ சாமி! மொதல்ல புடுங்குங்க சாமி. ஏ அப்பா...! (ஏய் கத்தாம நில்றா) அப்பப்பா... ஏ சாமி! ஒங்க வாயில மண்ணுவிழுக. சாமி புடுங்குங்க சாமி. நீங்க நாசமாய் போக. (அட உண்மையச் சொல்லு) சாமி புடுங்குங்க சாமி. அய்யய்யோ.. யப்பப்பா... (நீ யாரு)

விசுவா. : அடே இப்ப உள்ளதச் சொல்றா. நீ யார்ரா டேய்? (நீ யாரு?)

காவலாளி: சாமி சத்தியமா நான் தசரதர் இல்ல. கோமாளிப் பய. {சிரிப்பு} அய்யோ சாமி நான் கோமாளி சாமி. அரமணைக் காவல் பாக்கறவன். (அப்ப ஏன் சொல்லல மொதல்ல) கும்புடுறேன் சாமி. புடுங்குங்க சாமி. அண்ணே! சாமி! புடுங்குங்க {சிரிப்பு} (என்னத்தப் புடுங்க?)

விசுவா. : அய்யய்யோ... அய்யய்யோ ... அடே! நான் சொல்றதெல்லாம் நீ கேட்கவேண்டும். (ஆமாப்பா)

காவலாளி: ஒங்க முழிக்கி முழி தட்டாமக் கேக்கறேன் சாமி. (ம். இன்னும் பாத்தியா அவன் அகராதியை விடமாட்டேங்றான்) [அடி விழுகிறது] ஏ அப்பா! இவரு வீட்டுக்கு அடுத்த வீடு ஓட்டயாப் போக {சிரிப்பு} (ஏண்டா மோதிரம் நல்லாயிருக்கா?) ஏ! ஒரு நண்டு காலு மாதிரி இருக்குது. (அதான் கிட்டிக்கோல்) என்னது? (கிட்டிக்கோல்) கிட்டிக் கோலு (ஆமாம்) அடேடேடே... இவர் தானா அந்த (அரிச்சந்திரனப் பொய் சொல்லச் சொல்லி மாட்னவரு). அட இவரு... இந்த ஆசாமி தானா? அப்ப இவரு ஆள உயிரோட வேக்காடு* வச்சிருவாரு. {சிரிப்பு} சாமி இனும செத்தாலும் பெழச்சாலும் இவர்கிட்ட பேசக் கூடாது. (மொதல்லயே சொன்னன்லா)

★ வேக்காடு = நெருப்பு (பார்க்க. பக். 250, 273)

விசுவா. : அடேய்!

காவலாளி: ஏஞ்சாமி?

விசுவா. : அடே என்னடா, சொல்றதெல்லாம் கேட்பதாகச் சொல்லி வந்தியே (அடச் சொல்லு உள்ளத)

காவலாளி: ஆமாம் சொற்றதக் கேக்றம்னு சொன்னேன். எவ்வளவு நீங்க சம்பளம் குடுத்திருக்கீங்க? (இன்னும் பாத்தியா... இவன் அகராதிய வுடமாட்டேங்கான்) {சிரிப்பு}

விசுவா. : அடே! நீ வேலை ஒண்ணுமே செய்ய வேண்டாம்.

காவலாளி: வேற என்ன செய்யணும்?

விசுவா. : அட, உன்னுடைய அரசன் தசரதன் இருக்கிறானோல்லயோ (இருக்காரு)

காவலாளி: தசரத மகாராஜா இருக்றாக.

விசுவா. : அவரிடம் சென்று விசுவாமித்ர மகாமுனிவர் வந்திருகிறதாகவே போய்ச் சொல்லிவிடு.

காவலாளி: ஓ! ஒங்க பேரென்ன? (விசுவாமித்ர மகாமுனி) குசு விட்ட முனி (டேய்) {சிரிப்பு} (விசுவாமித்ர மகாமுனின்னு சொல்லப்பா) குசுவிட்டமுனி... குசுவிட்ட முனி. {சிரிப்பு}

விசுவா. : அடே விசுவாமித்ரர் என்று சொல்லு.

காவலாளி: குசுவிட்ட முனி. {சிரிப்பு} (அடே, விசுவாமித்ரர்) சரி நீங்க உக்காருங்க. குசு முத்தோ.. ரிஷி முத்தோ... [இசை] சாமி! மகாராஜா!

தசரதர் : டேய்! தான தருமங்களைச் செய்து வந்தாயா?

காவலாளி: தான தருமமெல்லாம் செய்து முடித்திட்டோம். என்ன... எங்கயோயிருந்து ரிஷிமுத்து வந்திருக்கு {சிரிப்பு}

தசரதர் : அது என்னடா அது?

காவலாளி: மகாராஜா. எங்கயோயிருந்து சரியான ஒரு போர்க்கிடா வந்திருக்கு {சிரிப்பு}. தாடியும் முடியும் விட்டுக்கிட்டு ரொம்ப பிசாசாட்டம் இருக்கு பாருங்க. ஆளுகளக் கண்டா சரியான கோயில் மாடாட்டம் இருக்குது. போற... கிட்டப் போறதயெல்லாம் பாய வருது.

தசரதர் : அப்பேர்ப்பட்ட ஒரு கிடாய்களாயிருந்தால் நம்முடைய மாணிக்கத் தொழுவிலே கொண்டு போய் அடைத்துவிடு. (அடச்சிருடா போயி)

காவலாளி: ஏய் அந்தக் கிடாயி பாயிமோ? (பாயும். கம்பெடுத்திட்டுப் போடா) பெரம்பு தூக்கிட்டுப் போனாத்தான் கிடாய்க்குக் கால ஒடிக்கலாம்... {சிரிப்பு} (இப்ப வாங்குவான் நல்லா)... சோ... பா... பா... பா... ர்ர்ரு... ப்பூ... ப்பூ... மரியாதயா அந்தத்... (தொழுவுக்குள்ள) தொழுவுக்குள்ளப் போயிரு. இல்ல... கால ஒடிச்சிப்போட்டேன், படுவா. டர்ர்ய்யா வர்ர்ய்யா... டர்ர்ய்யா {சிரிப்பு}

விசுவா. : அடே என்னடா இது?

காவலாளி : ஒண்ணும் பேசப்படாது. மரியாதயா போயிரணும். {சிரிப்பு} படுவா அடிச்சி நொறுக்கிப் புடுவேன் நொறுக்கி. {சிரிப்பு} டுர்ர்ய்யா.... டுர்ய்யா... {சிரிப்பு}

விசுவா. : அடத் தடிப்பயலே! அட எரும மாட்டுப் படுவா. என்னடா ஓட ஓட வெரட்றியே. {சிரிப்பு}

காவலாளி: (ஏய் மவாராஜா) நான் என்ன செய்வேன். மகாராஜா கிட்ட சொன்னேன். அதத் தொழுவுல கொண்டு அடச்சிருடான்னாரு. (எப்பம்ப்பா சொன்ன?) சொன்னா நீங்க கேக்கமாட்டீங்க. எப்படியும் ரெண்டு... பெரம்பெடுத்து ரெண்டு விளாசு விளாசுனாத்தான் போவீங்க, அப்படீன்னு தூக்கிட்டு வந்தேன்.

விசுவா. : அட என்னடா சொல்லி வந்த அங்கபோய்?

காவலாளி: கிடாய் ஒண்ணு வந்திருக்குன்னேன். {சிரிப்பு}

விசுவா. : அடத் தடிமாட்டுப் பயலே. விசுவாமித்திரர் என்று சொல்லு.

காவலாளி: என்னது? (விசுவாமித்திரர்) விசுவாமித்திரர் (ஆமா. விஸ்வாமித்திரர்) விசுவாமித்திரர்ர்ர்ர்... {சிரிப்பு} பர்ரு புர்ரு டர்ரு புர்ரு {சிரிப்பு} சரி எப்படியாவது புர்ருன்னு விட்டுட்டு வர்றேன்... [இசை] மகாராஜா! எங்கயோயிருந்து காந்தல் புடிச்ச மகன் (காந்திராஜர் குமாரர்) காந்தல் புடிச்ச மகன் லாண்ரி கடைக்குப் போயி வேட்டி கீட்டி யெல்லாம் சுத்தப்படுத்திக்கிட்டு (டேய்) லாண்ரி போட்டு இங்க வந்து மாட்ட வந்திருக்கான் {சிரிப்பு} (காந்திராஜர் குமாரர் விசுவாமித்திரர்னு சொல்லப்பா) ம்ம்... அவர்தான் விசுமுத்து.... விசுமுத்து ... விசுமுத்து ... தீயமூட்டு ... {சிரிப்பு}

விசுவா. : அடே விசுவாமித்திரர் வந்திருக்கிறார் அப்படீன்னு {சிரிப்பு}

காவலாளி: (பபூன்1) அடாடாடா.... வாய்க்குள்ளே நொழயல எழவு {சிரிப்பு} (மகாராஜாவைப் பாக்க வந்திருக்காரு) வாய்க்குள்ள டம்ளர் போகமாட்டேங்குது. {சிரிப்பு} (செம்புதான் போகும்) விசுவாமித்ரர் இங்க எங்க வந்திருக்கிறார்கள்? (அந்தா ... அந்தப் பளிங்குமா மண்டபத்ல உக்கார்ந்திருக்காங்க.) அப்படியா. ஆனால்... மகாராஜாவிடம் நான் தெரியப்படுத்தி வருகிறேன்... [இசை].

பபூன்2 : என்னடா இங்க கலாட்டா இங்க. {சிரிப்பு} (பெரிய போர்க்கிடாயி வந்து பெரிய அக்கப்போரா யிருக்குடா)

காவலாளி: (பபூன்1) நான் பட்ட பாடென்ன? இவன் வந்து கெலாட்டவக் கேக்கான். {சிரிப்பு} (கிடாய் புடிச்சிக் கெட்டிப் போடுறதுக்குள்ள பெரிய பாடாயிடுச்சி)

பபூன்2 : கிடாயி, நல்ல கிடாய். கொழுத்தக் கிடாயிதானா? (கொழுத்தக் கிடாயி... கோயில் கிடாயிதான்) அத வெட்டி, என்ன... நல்ல கூறு வச்சி லாபத்துக்கு விக்கலாமே! (வெறும் மங்குனதுடா)

பபூன்1 : அப்ப அந்தக் கடாய நீ புடிச்சிருவியா?

பபூன்2 : எந்தக் கிடாயாயிருந்தாலும் காமிச்சிரு. புடிச் சிருதேன். {சிரிப்பு}... [இசை]

பபூன்1 : டேய் தம்பி பயந்திருவே...

பபூன்2 : நான் பயப்படுவேனா? {சிரிப்பு} அருவாத் தூக்கிட்டு வரட்டுமா? (ஏய் வேண்டாம்... அருவா வேண்டாம்).

பபூன்1 : மொதல்லக் கிடாயப் பாத்துக்க. ரெண்டாவது தூக்கிட்டு வா. (அந்தா நிக்குது பாரு அந்தக் கிடாயிதான்) {சிரிப்பு} (ரெட்டச் சுருக்கு போட்ட கிடாயி)

பபூன்2 : ஏய்! ஆளா இது யாரு? {சிரிப்பு} (அடக் கிடாய் தாம்ப்பா) குருட்டுப் பயலே. இதாடா கிடாய்? {சிரிப்பு} மூஞ்சி கை காலெல்லாம் இருக்குது. கிடாய்... இது எந்த நாட்டுக் கிடாயி? {சிரிப்பு}

பபூன்1 : இது அமெரிக்காவிலயிருந்து வந்திருக்கு. {சிரிப்பு}

பபூன்2 : பேசுமா? (ம்,. பேசும்)

பபூன்1 : கிடாய் எந்தக் காலத்ல பேசும்?

பபூன்1 : ஒரே... முன்ன ஆள் நிக்ற மாதிரி நின்னு கிட்ருக்கு. (இவன் குருட்டுப் பயலாயிருப்பாம் போலத் தெரியுது) ஏ! கிடாயி! நீ என்ன வெலைக்கி இப்ப வருவே? {சிரிப்பு} (கிடாயி கிட்ட கேட்டா சொல்லுமா?) நீ என்ன வெல பெறுவ சொல்லு. நூறு ரூபா வேணுமா எரநூறு ரூபா வேணுமா {சிரிப்பு}.

விசுவா. : அடே! என்னடா?

பபூன்2 : ஏலே! தடிப்பயலே. தடிப்பய. மனுஷனைப் போயிக் கிடான்னு சொல்லிட்டான் பாரு. சாமி! நான் தெரியாமச் சொல்லிப்புட்டேன். என்ன மன்னிவச்சிருங்க.

விசுவா. : அட என்னடா அது?

பபூன்2 : இல்ல... எங்க அண்ணன் கிடாயின்னு சொன்னான். அதனால ஒங்களைப் புடிக்கலாம்னு வந்தேன். நீங்க பேசிட்டீங்க. இல்லேன்னா கண்டிப்பா வெல பேசி கூட்டிட்டுப் போயிருப் பேன் (அய்யோ) சைக்கிள்ளாம் கொண்டாந் துட்டேன்.* பண்ணி வச்சிக் கட்டுன மாதிரி கட்டிக் கொண்டு போயிருப்பேன்.

விசுவா. : அடப்பாவித் தடிப்பயலே! (பிராமணாள் கிட்ட அப்படியெல்லாம் பேசாதே) அகராதி புடித்தவன். மண்ட அகராதி புடித்தவர்கள்.... [இசை]

மந்திரி : மகாராஜா!

தசரதர் : சிமுந்திர மந்திரி!

மந்திரி : ஆனால் விசுவாமித்திரர் அன்னவர்கள் வந்திருக் கிறார்களாம்.

தசரதர் : விசுவாமித்ரர் எங்கிருக்கிறார்கள்?

மந்திரி : பளிங்கு மாமண்டபத்தில் உட்கார்ந்திருக் கிறார்கள்.

தசரதர் : அவர்கள்.... இவ்வளவு காலமாக வராதவர்கள் இன்றைய தினத்தில் வந்திருக்கிறார். அதிசீக்கிரமாக அவருடைய பாதாரணங்களை வணக்கம் செய்ய வேண்டும்.... பிறப்படுங்கள்.

பாடல் : **சிக்கிக் கொண்டானே தசரதன்**

சிக்கிக் கொண்டான் கையில் கச்சிதமாகவே

அகப்பட்டுக் கொண்டானே தசரதன்.

[உரைப்பாட்டு] 'பணிவன்போடு வந்தனம் செய்து வருகிறேன் மகா குருதேவா... அடிகள் வந்தனம் செய்து வருகிறேன் மகா குருதேவா... ஆ....'

★ பண்ணி = பன்றி

விசுவா. : ஏவ்வ்வ் ... மங்களமுண்டாகட்டும். மங்கள முண்டாகட்டும்.

தசரதர் : சுவாமி!

விசுவா. : மங்களமுண்டாகட்டும்ப்பா... மங்கள முண்டாகட்டும்.

தசரதர் : சுவாமி! மாட மாளிகை கூட கோபுரங்கள் இரத் தினங்கள் அணித்திருக்கூடிய ஒரு சிம்மாசங்கள் இருக்க ... ஆனால் இந்தப் பளிங்கு மண்டபத்தில் நீங்கள் உக்காந்திருக்கலாமா?

விசுவா. : அப்பா தசரதனே! ஆனால்... எல்லாம் ஒன்னு டைய அரமனைதான். எல்லாம் ஒன்னுடைய இடங்கள்தான். ஆனால் இங்கேயிருந்தாலென்ன? அரமணைக்குள்ளாக வந்தாலென்ன? (எல்லாம் ஒண்ணுதான்) எல்லாம் ஒன்றுதானே?

தசரதர் : சுவாமி! புறப்படுங்கள். ஆனால் சிம்மாசனமே போகலாம்.

விசுவா. : பிறப்படு... பிறப்படு... பிறப்படு....

பாடல் : **முனிநாதர் வாராரே - ராஜரிஷி**
முனிநாதர் வாராரே!
தவமெல்லாம் வீணாகப் போச்சுதே என்று
ராமரை அழைத்துச் சென்று சங்காரம் செய்யவே
முனிநாதர் வாராரே!

தசரதர் : சிம்மாசனத்தில் அமருங்கள்.

விசுவா. : அப்பா தசரதனே! ஆனால் அரசாங்கத்தில் சேர்ந்த அரமணைகளெல்லாம் ரொம்ப அழகுடனேதான் இருப்பார்கள். ஆனால் கேவலமாக இருக்குமோ? ஆனால் வெகு நாட்களாகி விட்டது, உன்னுடைய அரமணைக்கி நான் வந்து!

தசரதர் : உண்மைதான் பிரபு.

விசுவா. : ஆனால் நீ வந்ததனால் எதற்காக நான் இங்கு வந்தேன் தெரியுமோ? எதனால் வராமலிருந்தேன்? (எதனால) ஆனால்... தசரதன் சத்தியம், நீதியும், நேர்மையும் தருமங்கள் இவைகளெல்லாம் செய்து வந்தான். அவனுக்குப் புத்திர பாக்கி யங்கள் ஒன்றுமே கிடையாது. அவனுடைய முகத்தில் முழிக்க வேண்டுமோ அப்படீன்னு நினைத்து நான் வரவேயில்லை. ஆனால் நான்கு குழந்தைகள் பிறந்ததாக நான் கேள்விப்பட்டேன். ஆனால் உன்னுடைய குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு போகலாமென்று ஓட்டமாக ஓடி வந்திருக்கின்றேன்.

தசரதர் : என்னுடைய புத்திர பாக்கியங்களைக் காண வேண்டுமென்று வந்திருக்கிறீர்களா? இதோ நான் அழைத்துக்கொண்டு வருவதாகத் தெரியப்படுத்தி வருகிறேன் சுவாமி.

விசுவா. : எங்கே... பார்க்கலாம், உன்னுடைய புத்திர பாக்கியங்களை, நான் பார்க்க வேண்டும். [இசை]

தசரதர் : சுமிந்திர மந்திரி!

மந்திரி : மகாராஜா!

தசரதர் : ராமன், லெட்சமணன், பரதன், சத்ருக்னன் நான்கு பேர்களையும் அதிசீக்கிரமாகவே அழைத்து வரவேண்டும்.

மந்திரி : வருகிறேன்... [இசை]

ஏய்!

காவலாளி: என்ன சாமி?
(பபூன்1)

மந்திரி : இராமர், லெட்சமணர், பரதன், சத்ருக்னன் நான்கு பேர்களையும் அதிசீக்கிரமாகவே அழைத்து வரவேண்டும்.

காவலாளி: சரி நான் கூட்டிட்டு வந்திட்றேன்...

பாடல் : சீதா ராமா பஜே! சீதா ராமாபஜே
சீதா ராமா பஜே
கோதண்ட ராமா பஜே!
கோசலை ராமா பஜே!
ராமபஜே சீதா!
வைகுண்ட வாசா!
வில்மணி ஓசா!
துஷ்டர்களைக் கொன்று
சிஷ்டபரிபாலனம் செய்த ராமா!
சீதா ராமா பஜே!

தசரதர் : ஆனால் என்னுடைய குழந்தைகளையும் நான்கு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு இதோ வந்திருக்கின்றேன்.

விசுவா. : எங்கே... பார்க்கலாம்.

தசரதர் : சுவாமி, அடியேன் வந்தனம் செய்து வருகிறேன்.

விசுவா. : ஏவ்வ்வ்.. மங்களமுண்டாகட்டும்.

தசரதர் : முனிதேவா!

விசுவா. : சொகமாயிருக்கட்டும்.

தசரதர் : சுவாமி!

விசுவா. : அடாடாடாடா... ஏவ்வ்வ்.. ஆனால் நான்கு குழந்தைகள் எவ்வளவு நன்னாயிருக்கிறார்கள். (அவர் கண்ணுல மண்ண அள்ளிப் போடுங்க) நன்னாயிருக்கிறது... நன்னாயிருக்கிறது (நன்றாயிருக்கிறது) அடே, ஆனால் எனக்கு ஒரு சந்தேகம் (என்னா சந்தேகம்?) தசரதருக்கோ ஆனால் மூன்று மனைவிகள். ஆனால் கோசலை, கைகேசி, சுமித்திரை. ஆனால் மூன்று பெண்கள். ஆனால் நான்கு குழந்தைகள் பிறந்திருக்கிறதே. (ம்! அந்த வெவரத்த இவர்கிட்ட சொல்லுங்க) ஆனால் நேக்கு... எனக்கு ஒண்ணும் தெரிய

வில்லை. அடே... அடே பபூன், குண்டோதரா! அடே, வாடா இங்கே. (குண்டோதரா)

காவலாளி: என்ன சாமி?
(பபூன்1)

விசுவா. : அட, நான் கேக்குறது... நீ பதில் சொல்ல வேண்டும்.

காவலாளி: நீங்க கேளுங்க. நான் சொல்றேன்.

விசுவா. : அடே! தசரதருக்கு ஆனால் மூன்று மனைவிகள். கோசலை, கைகேசி, சுமித்தரை. ஆனால் மூன்று பெண்களுக்கு நான்கு குழந்தைகள் பிறந்திருக் கிறது. யாருடைய குழந்தைகள் அப்படி யென்று எனக்கு ஒன்றும்... நேக்கு ஒன்றும் தெரிய வில்லை. (அந்த வெவரத்தச் சொல்றா) ஆனால் நேக்குத் தெரியுதோயில்லையோ? (அவனுக்குத் தெரியும்)

காவலாளி: நேத்துத் தெரியும். இன்னிக்கித்தான் தெரியாது. {சிரிப்பு}

விசுவா. : அட.... நேக்குத் தெரியுமா தெரியாதாடா?

காவலாளி: அதென்ன நேக்கு? நேக்கு நேக்கென்னா? (ஏ! ஒனக்குத் தெரியுமான்னு கேக்றாரப்பா) ஒனக்குத் தெரியுமான்னு கேக்கறதுக்குத்தான் நேக்கு நேக்குங்றாரா? (ம்... நேக்குத் தெரியுமாங்றாரு) நல்லா நக்குறாரு, போ {சிரிப்பு} சாமி.

விசுவா. : அடே! இவன் யாருடைய மகன்?

காவலாளி: இவருதான் பெத்தவுக மகன் {சிரிப்பு} (டேய். அவுக தாயார் பேரென்னப்பா).

விசுவா. : டேய் இவன் தாய் பேரென்னடா?

காவலாளி: இவுஹ... ஓ! அப்படிக் கேக்கறீகளா? அப்படிக் கேட்டாவில்லா தெரியும். யார் மகன்னு கேட்டா எனக்கெப்படித் தெரியும்.

விசுவா. : அடே இவன் பேரென்ன?

காவலாளி: இவர்தான் ஸ்ரீராமச்சந்திர பகவான். ஸ்ரீராமர்.

விசுவா. : ஒகோ... சர்தான். சர்தான். இந்த வைகுந்த பதவியிலிருக்க வேண்டிய கிருஷ்ணன் அவன். நாராயணன்... ராமனாகப் பிறந்திருக்கிறான். நன்னாயிருக்கு... நன்னாயிருக்கு... நன்னாயிருக்கு. (ம்... நன்னாயிருக்கு) அடே, இவன் யாருடைய மகன்?

காவலாளி: இவரு வந்து கோசலா தேவி மகன் ஸ்ரீராமர்.

விசுவா. : கோசலா தேவிக்கு ராமன் பிறந்திருக்கிறானோ (ஆமா) நன்னாருக்கு... நன்னாருக்கு... நன்னாருக்கு... அடே, இவனுடைய பேரென்னடா? (பரதன்)

காவலாளி: ஆனா இவர் பேரு வந்து லெச்மணரு.

விசுவா. : பூமி தாங்க வேண்டிய ஆதிசேடன் லெச்மண ராகப் பிறந்திருக்கின்றான். நேக்கு நன்னாருக்கு... நேக்கு நன்னாருக்கு... (ம் நேக்கு நன்னாருக்கு) அப்பா! அட அவன் யாருடைய மகன்?

காவலாளி: சிமித்ராதேவி மகன்.

விசுவா : அடே சிமித்ராதேவி. ஆனால் ராமன் வந்து கோசலாதேவி மகன்... லெட்மணன் வந்து சிமித்ராதேவி மகன். சர்தான். நன்னாருக்குது. அட இவன் பேரு என்னடாது?

காவலாளி: இவர்தான் பரத மகாராஜா.

விசுவா. : ஆனால் பரதன் இவன்தானோ? அட அவனுடைய தாய் பேர் என்ன?

காவலாளி: கைகேசியம்மாள்.

விசுவா. : அடேடேடே... கைகேசியம்மா. அடே இந்த கடேசில நிக்ற இவம் பேரு என்னடா? (சத்ருக்கன்)

காவலாளி: சத்ருகன்.

விசுவா. : அடே... சத்ருக்கன். அட அவன் பேரு... ஆனால் அவனுடைய பேரு வந்து சத்ருக்கன். அவன் யாருடைய மகன்.

காவலாளி: சிமித்திரா தேவி மகன்.

விசுவா. : அட எனக்கு ஒண்ணும் புரியலயே? (என்னடா திருப்பித் திருப்பிச் சொல்றயே) அட என்னடா திருப்பித் திருப்பிச் சொல்ற?

காவலாளி: ஒங்களுக்குப் புரியலேன்னா நான் என்னா பண்றது? {சிரிப்பு} சாமி சிமித்ரா தேவிக்கு வந்து லெச்மணரும் சத்ருக்கனும் ரெட்டைக் குழந்தை.

விசுவா. : அப்படிச் சொன்னால்ல தெரியும். ஆனால் கைகேசியம்மாளுக்கு வந்து பரத மகா... ஆனால் பரதன். சரி. கோசலாதேவிக்கு ஸ்ரீராமர். அடடாடா ஒரு எடனையப் பாத்தியோ (அந்த அவனையே பாத்தியோ) அடே சர்தான். ஆனால் ராமனுடனே லெச்மணனும் சேர்ந்து கொண்டான். ஆனால் பரதனுடனே சத்ருக்கன் சேர்ந்து கொண்டான். அட ஒரு எடனையப் பாத்தியோ. (ஆமா, பாத்தியோ) எனக்கு நன்னாயிருக்கு. ஆனால் நாலு பேர்களும்... ஆனால் ஒரு அச்சிலிட்டது போல் இருக்கிறதே. எவ்ளவழகாக.

காவலாளி: ஒரு மூங்கில எடுத்திட்டு வாடா. (கண்ணுல குத்துங்க) ஒரு மூங்கில எடு. பசக்குன்னு கண்ணுல குத்திடுறேன். {சிரிப்பு} ஒடனே கண்ணேறு போடுராறே.இவரு கால ஒடிச்சா என்ன? {சிரிப்பு}

விசுவா. : அடே! எனக்குத் தேவை ராமன், லெச்மணன் போதும். (அஹ்ஹா~ம். கண்ணேறு போட்டாச்சி) அடே பரதன், சத்ருக்கன் சோத்துக்கு வீண் செலவு. பூமிக்குப் பாரம். (பாத்தியா)

காவலாளி: (பபூன்) நீங்க சாம்பாதிச்சுப் போடுறதுல, ஏஞ்சாமி ஒங்க தேவைக்கு முடியாதுன்னு சொல்லிட்டம்னா,

வேண்டாமின்னு, அதெல்லாம் எதுக்கு சாமி சொல்றீக. ம். ஆளு சமாச்சாரம் தெரியாமே அலைறீங்களா? {சிரிப்பு}

பபூன்2 : உடுரா இந்தச் சாமிய. குளோஸ் நைஸ்ஸா பாஸ் பண்ணிடுவோம். {சிரிப்பு} (அதென்னடா அது, குளோஸ் நீஸ் பாஸ்) சட்டிலே போட்டு வறுத் திருவேன். {சிரிப்பு}

பபூன்1 : வரட்டுத் திங்கப் பாக்குறான் இவன்.

விசுவா. : அடே! இவர்களை ரெண்டு பேரையுங் கொண்டு போய் ஆனால் பள்ளிக்குடத்தில் கொண்டுபோய் விட்டுவிடு. (இவுக ரெண்டு பேரு) ராமன் லெச்மணன் இருபேரும் இருக்கட்டும். ஆனால் பரதன் சத்ருக்கன் ரெண்டு பேர்களையுங் கொண்டுபோய் பள்ளிக்குடத்தில் கொண்டு விட்டுவிடு. (விட்டுவுடு) குடு குடு {சிரிப்பு} விட்டு குடுகுடு (எங்க வுடு) {சிரிப்பு}

பபூன்1 : என்னத்த விடுறது அங்க?

விசுவா. : அட கொண்டு விட்டு விடுடா. (அட அவுக ரெண்டு பேர்த்தியும் கூட்டிகிட்டுப் போயி பள்ளிக்குடத்ல விட்ரணுமாம்ப்பா)

பபூன்1 : பள்ளிக்குடத்ல போய் விட்ரணுமா. இவர் குடுகுடு சடுகுடு போடப் போறாராங்கும்னு நெனச்சேன். (இல்ல இல்ல) சாமி! நீங்க ரெண்டு பேரும் இங்க வாங்க. அந்தச் சாமியாருக்கு ஒங்கள ரெண்டு பேரையும் புடிக்கல, இங்க வாங்க, நாங்கள் பள்ளிக்குடத்துக்குப் போவோம்... [இசை]

இராமர் : சுவாமி! வசிஷ்ட மகாமுனிவர்... ஆனால் எங்களைக் காணாமல் மனவருத்தம் செய்து கொள்வார். அதிசீக்கிரமாகப் பள்ளிக்கூடம் நாங்கள் செல்ல வேண்டும். போவதற்கு விடை கொடுக்க வேண்டும் சுவாமி.

விசுவா. : அப்பா ராச்சந்திரா! ஆனால் நானும் வசிஷ்டனை பார்க்க வேண்டும். என்னா... அமைதியுடனே இங்கன ஒரு இடத்ல உக்காரு. ஆனால் உன்னுடைய தகப்பனிடம் சில கேள்வியானது நான் கேட்க வேண்டும். அட ராமச்சந்திரனே! ஏன் அதற்குள்ளாக அவசரப்படுகிறாய்?

பபூன்1 : படிக்கிற படிப்ப உட்டுட்டு நிக்கச் சொல்றீங்களே, ஏஞ்சாமி! ஒங்க மண்டேல சரக்கிருக்கா? {சிரிப்பு}

பபூன்2 : ஏ! என்னா ஒனக்கு அவ்வளவு* அக்குறுவமா? ஒ அயிர சாமி. (ஓ! அய்யர் சாமி) {சிரிப்பு} நம்ம அயிர மீன் தாங்காது. [அடி விழுகிறது] ஏய்! ஏய்! என்ன சாமி, குண்டீல ஒதைக்கிற? {சிரிப்பு} பீ வராம அடைக்கவா? {சிரிப்பு} சும்ம அநாவசியமா ஒதச்சிக்கிட்டு திரிஞ்ச, பெறவு எனக்குக் கோபம் வந்திரும் (பளாச்சினு கோபம் வந்திரும்) ஆமா.

பபூன்1 : ஏய் அவுக கிட்டயெல்லாம் அப்படியெல்லாம் கேலி பண்ணக்கூடாதுடா.

பபூன்2 : நீ செய்யலாமாக்கும் {சிரிப்பு}

பபூன்1 : நான் பெரிய மனுஷன்.

பபூன்2 : நான் சின்னப் புள்ளையா? {சிரிப்பு} ஏண்டா மக்கா கோழி படுவா! {சிரிப்பு} நான் சின்னப் புள்ளேன்னா பாத்துக்கிட்ட {சிரிப்பு} (ம். நீயும் பெரிய மனுஷன்தான்) நானும் பெரிய மனுஷந்தான்! (ஆமாம்) நாம் பண்ணாம அவர வேறு யாரு பண்றது? (ம்... பண்ணு பண்ணு)

பபூன்3 : மாப்ள அஞ்சி பைசா.

பபூன்2 : ஏல மொளு மொளு... {சிரிப்பு} (அவங்கடங் காரனும் விடமாட்டான்) {சிரிப்பு}.

விசுவா. : அப்பா தசரதனே! ஆனால் நான்கு குழந்தைகளையும் நான் பார்த்துக் கொண்டேன். ரொம்ப நன்னாருக்கிறது. (நன்னாருக்குது) ஆனால் நான் சென்று வருகிறேன்.

★ அக்குறுவம் = சேட்டை

தசரதர் : சுவாமி! அதற்குள்ளாகவா நீங்கள் புறப்பட வேண்டும்?

விசுவா. : உண்மைதானடா. நான் போய் வருவதற்குள் நேரங்களாகி விட்டது. தெய்வ லோகத்தில் முப்பத்து முக்கோடி முனிவர்களெல்லாம்... ஆனால் யாகம் செய்வதற்காக என்னைய எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். நான் சென்று வருகிறேன்.

தசரதர் : அப்படியானால் சந்தோஷமாகவே சென்று வாருங்கள்.

விசுவா. : போய்ட்டு வரட்டுமோ? (ம். போய்ட்டு வாங்க) அடேடேடே (என்ன.. என்ன... என்ன மறந் திட்டீங்க) அட நான் வந்த செயலை விட்டுப்புட்டு பேசாமல் போலாமோ? (போகக்கூடாது)

தசரதர் : சுவாமி! தெய்வலோகம் போவதாக நீங்கள் தெரியப்படுத்தீர்கள். சந்தோஷமாகச் சென்று வரவேண்டும்... நான் தெரியப்படுத்த, ஆனால் போனவர்கள் திடீர்னு ஏன் திரும்பிவிட்டீர்கள்?

விசுவா. : அப்பா! அட வேறு ஒண்ணுமில்லை. ஆனால் ஒரு இடத்தில் நான் யாகம் செய்து கொண்டு வருகிறேன். அந்த யாகத்துக்கு.... ஆனால் சில பொருளானது... ஆனால் கேட்க வேண்டும்... ஆனால் சில பொருள்கள் உனக்கு... ஆனால் உன்னிடம் இருப்பதினால் கேட்கலாமென்று ஓட்டமாக ஓடிவந்தேன்.

தசரதர் : சுவாமி! நீங்கள் கேட்பதுதான் பெரிதே தவிர நான் குடுப்பது பெருசாகவே நான் நினைக்கவில்லை. நீங்கள் கேளுங்கள். நான் தருகிறேன்.

விசுவா. : அடே! கண்டிப்பாக நீ தருகிறாயோ?

தசரதர் : தருகிறேன் மகாமுனிவர்களே...

விசுவா. : அட நிச்சமயமாகத் தருகிறாயோ?

தசரதர் : தருகிறேன் சுவாமி!

விசுவா. : ஏவ்வ்வ்... (ம். ஏப்பம் வந்திரிச்சி)... [இசை]

பாடல் : **சிக்கிக் கொண்டான் தசரதன்**
சிக்கிக்கொண்டான் தசரதன்
சிக்கிக் ¦கொண்டானே
அகப்பட்டுக் கொண்டானே - தசரதன்
அகப்பட்டுக் கொண்டானே!

தசரதர் : சுவாமி! யாகம் செய்வதற்கு சில பொருள் கேட்டீர்கள். தர்றதாகச் சொல்லி வந்தேன். 'சிக்கிக் கொண்டான் தசரதன். அகப்பட்டுக் கொண்டான் தசயேந்திரன்' என்று சொல்லக் கூடிய வார்த்தை எதற்காக நீங்கள் தெரியப் படுத்தி வந்தீர்கள்?

விசுவா. : அதுவா, வேறொன்றுமில்லை. சிக்கிக் கொண்டது தசரதா என்று சொன்ன காரணம் எதற்குத் தெரியுமோ?... அதாவது, தெய்வ லோகம் விட்டு உன்னுடைய அரமணைக்கி நான் வரும்பொழுது, ஆனால் கிண்டிச் செம்புகளும், மாத்திரக்கோலும் அங்கு அகப்பட்டுக் கொண்டது.... தெய்வ லோகத்தில். அதான் அகப்பட்டுக் கொண்டது தசரதா என்று நான் சொல்லி வந்தேன். வேறு ஒண்ணுமில்லையப்பா. (அதுக்குள்ளே மாத்திட்டாரு சாமியார் பேச்ச)

தசரதர் : சுவாமி, அரசர்கள்தான் பொய் சொல்வதாக நினைத்திருந்தால், நீங்கள் தவத்தில் இருக்க வேண்டிய முனிவர்களுமா நீங்கள் பொய் சொல்ல வேண்டும். யாதோ நீங்கள் மறைத்து தான் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். உள்ளதைச் சொல்லுங்கள்.

விசுவா. : அப்பா, நான் உள்ளதைச் சொல்லுகிறேன். ஆனால் இதப்பத்தி நீ கவலைப்பட வேண்டாம்.

ஆனால் தாரகாமலை ஓரத்தில் நான் யாகம் செய்து கொண்டு வருகிறேன். ஒரு எமராட்சதியானவள் ... தாடகையானவள் .... மகா ராட்சதியானவள் ... நான் என்னுடைய யாகத்தை நிறைவேத்தி விடாமல், என்னிய... அந்த யாகத்தைக் கெடுத்துக்கொண்டே வருகிறாள். ஆனால் நான் தாடகையைக் கொல்வதற்கு ஏழுநாள்வரையிலும் இராமர் லெச்மணர் இருபேர்களையும் என்னு டைய பின்புறமாகவே அனுப்ப வேண்டும்... [இசை]

தசரதர் : ஆ! அய்யோ.

[உரைப்பாட்டு] 'அறுபதுக்கறுபது வருடமாக குழந்தையில்லாத பாவியாக நானிருந்து, நான்கு குழந்தைகளையும் நான் பார்க்கும் சமயத்தில், எனது உயிர்களைக் கேட்பதுபோல் இந்த இரண்டு கண்களையும் கேட்கலாகுமோ? முனியதோ.... ?'

குருதேவா! என்னுடைய நாடு நகரங்களைக் கேளுங்கள். தருகிறேன். ஆனால் என்னுடைய உயிரை வேண்டுமானாலும் தருகிறேன். அநேக நாட்களாகக் குழந்தையில்லாத பாவியாக நான் இருந்து நான்கு புத்திர பாக்கியங்களை நான் பார்க்கப் போக, கடைசியில் அந்த எம ராட்சஷியைக் கொல்வதற்காக, ஆனால் என்னு டைய குழந்தைகளைக் கேட்டு வரலாமா? கேட்க வேண்டாம். நான் வருகிறேன். ராமன், லெட்சு மணன் இருவர்களையும் நீங்கள் கேட்க வேண்டாம் மகாமுனிவர்களே! ஆனால் அந்தத் தாடகையை நான் கொல்லுகிறேன். ஆனால் உங்களுடைய யாகத்தை நான் நிறைவேற்றித் தருகிறேன். ஆனால் என்னுடைய குழந்தை களைக் கேட்க வேண்டாம்.

விசுவா. : அட, என்னடாது? அட, மொதலாவது யாகத்துக்கு வேண்டிய சில பொருள் தருவதாகச் சொல்லி வந்தாய். அதற்குள்ளாக மாறி விட்டாயே. சூரிய குலத்தில் பிறந்து பொய் சொல்வது கிடையா தென்று தெரியப்படுத்தி வந்தார்கள். ஆனால் நீ தருவதாகச் சொல்லி, இரண்டாவது முடியா தென்று சொல்லி வருகிறாயே. அடே! உன்னு டைய குழந்தைகளுக்கு எந்தவித ஆபத்துக்கள் இல்லாமல் நான் பார்த்துக்கொள்கிறேன். உன்னு டைய குழந்தைகளுக்கு ஆபத்து வந்துவிட்டால் என்னுடைய பஞ்சாட்சரத்தினால் புஷ்ஷுன்னு எரித்து விடுவேன். (ம். ஏன், அந்தப் பஞ்சாட் சரத்தால எரிக்கிறது) அப்பா! நீ ஒண்ணும் கவலைப்பட வேண்டாம். ஒன்னுடைய குழந்தை களுக்கு எந்த ஆபத்துமில்லாமல் ஆனால் ஏழு நாளுக்குள்ளாக உன்னுடைய அரமணைக்குக் கொண்டாந்து சேர்த்து விடுகிறேன்.

தசரதர் : முடியாது. என் உயிரை வேண்ணாலும் கேளுங்கள். தருகிறேன். என்னுடைய நாடு நகரங்கள் அத்தனையுங் கேட்டாலும் கொடுத்து விடுகிறேன். ஆனால் என்னுடைய குழந்தை களை... ஆனால் ஒங்களுடைய பின்பாக நான் அனுப்புவது கிடையாது.

விசுவா. : அட போ. (படக்குன்னு வந்திரிச்சி கோபம் சாமியாருக்கு) {சிரிப்பு} அட, நீயோ ஒங் குழந்தையோ... ஆனால் மொதலாவது தர்றேன்னு சொல்லிப்புட்டு முடியாதுன்னு சொல்றயே. அட ஒன் குழந்தைகள் உண்டோ. ஆனால் இந்தத் தாடகையைக் கொல்வ தென்றால், ஆனால் என்னுடைய பஞ்சாட் சரத்தினால் கொல்ல முடியாதோ? (அட, பின்ன எதுக்கு இங்க வந்து கொழந்தையைக் கேக்றீங்க சாமி) அட, நீ வேண்டாம். ஆனால் ஒன் குழந்தை

களும் வரவேண்டாம். அந்தத் தாடகையை நீ கொல்லவும் வேண்டாம். நான் கோபமாகப் போகிறேன்.

தசரதர் : சாமி போகவேண்டாம்... சுவாமி (சாமி, கோமணமா போய்ட்டாரு)

விசுவா. : இவன் இப்படிக் கேட்டால், இவன் கொடுக்க மாட்டான். ஆனால் அயோத்தி பூராக, ஏக அக்கினி பார்வையாகக் காமித்தால், பயந்து, ஆனால் ராமலெச்மணரை என் பின்புறமாகவே அனுப்பிவருவான். அயோத்தி பூராக ஏக அக்கினியாக எரிவதாக நான் சாபத்தைக் கொடுத்து வருகிறேன்... [இசை]

தசரதன் : அய்யய்யோ... அய்யய்யோ.. அயோத்தி மாநகரம் ஏக அக்கினியாக எரிகிறதே... பரமேஸ்வரி... ! குருதேவா!

வசிட்டர் : அப்பா, தசரதனே! என்னப்பா இது காரியங்கள்? அயோத்திபூராக ஏக அக்கினிப் பார்வையாக இருக்கிறதே. இங்கு யாராவது வந்திருந்தார்களா?

தசரதன் : வந்திருந்தார்கள்.

வசிட்டர் : யார் வந்தது?

தசரதன் : ஆனால் விசுவாமித்திரர் வந்திருந்தார்.

வசிட்டர் : அடாடாடா. விசுவாமித்ரர் வந்திருந்தானோ? தடிப்பயல், அவன் வந்து என்னப்பா கேட்டான் அவன்.

தசரதன் : தாடகையைக் கொல்வதற்கு ராமன் லெச்மணர் இருபேர்களையும் ஏழுநாள் வரையிலும் அவருடைய பின்புறமாகவே அனுப்ப வேணு மென்றே கேட்டு வந்தார். அதைக் கொடுக்க முடியாதென்றே சொல்லி வந்தேன். அனுப்ப முடியாதென்று சொல்லவும் அந்தி மந்தமாகவே கோபமாகவே சென்றுவிட்டார்.

வசிட்டர் : அட, அவன் தொழில் அவன விட்டுப் போகுமோ? (போகாது) ஆனால் கண்டதெல்லாம் கேட்பான். குடுக்கவில்லை யென்றால் ஏதாவது சாபத்தைக் குடுத்து விடுவான் அப்பா. அவனுடைய பின்புறமாகவே அனுப்புவதனால் ஏதொரு ஆபத்தும் வராது. ஆனால்... ஏழுநாள்தான் கேட்கிறான். எழுநாள் வரையிலும் குழந்தைகளை அனுப்பிவா. அவன் கேட்ட பொருள் நம்முடைய அரமணைக்குள்ளாக இருக்கக்கூடாது. இருந்து விட்டால் ஏதாவது ஆபத்துகள் ஏற்படும். உன்னுடைய குழந்தைகளுக்கு நான் ஜாமீன் ஏற்றுக் கொள்கிறேன். எதொரு ஆபத்தும் வராது. கவலைப்பட வேண்டாம்.

தசரதன் : சுவாமி! வசிஷ்ட மகாமுனிவர்கள், நீங்களுமா சொல்ல வேண்டும்?

வசிட்டர் : அப்படியொன்னும் கவலைப்பட வேண்டாம். உன்னுடைய குழந்தைக்குப் பதிலாக நான் ஜாமீன் எடுத்துக் கொள்கிறேன். குழந்தைகளுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிட்டால் என்னைய குரு என்று நீ பார்க்க வேண்டாம். ஆனால் உன்னுடைய மந்திர வாளினால் என்னுடைய தலையை நீ வெட்டி விடலாம். தர்றதாகவே சொல்லி விசுவாமித்ரனை அழைத்துவா. போ.. போ.. கவலைப் படாதே. போ.. போ.. கவலைப்படாதே. [இசை]

தசரதன் : சுவாமி...! சுவாமி... !

விசுவா. : கொழந்தையும் வேண்டாம், நீயும் வேண்டாம். கைய வுடு வுடு. (ஒன்னைய யாரு புடிச்சிருக்கா இங்க) அட கையை வுடுடா. அட கொழந்தையும் வேண்டாம், நீயும் வேண்டாம். கைய வுடு (ஏ! சாமி, நீங்க போங்க சாமி) அட கைய வுடுடா.

பபூன்1 : சாமி ரொம்பக் கிராக்கி பண்ணாதீங்க. ரொம்பக் கிராக்கியாயிருந்தா ஒங்க கையை யாரு

பிடிச்சிருக்கா? போறதுன்னா போக வேண்டியது தானே {சிரிப்பு} (அதான). ரொம்ப ஆத்ரமா ரொம்பக் கிராக்கி பண்ணுறேகளே.

பபூன்2 : என்னடா கலாட்டா இங்க? {சிரிப்பு}

பபூன்3 : மாப்ள அஞ்சி பைசா. {சிரிப்பு}

பபூன்2 : ஏ மொளு மொளு [அடிக்கிறான்] {சிரிப்பு}

வசிட்டர் : அடே விச்வாமித்ரா!

விசுவா. : அடே, யார்ரா வசிஷ்டனோ?

வசிட்டர் : அடே நான்தாண்டா.

விசுவா. : அட நீ எப்ப வந்தாய்?

வசிட்டர் : நான் இப்பத்தான் வந்தேன்.

விசுவா. : நானும் இப்பத்தான் வந்தேன்.

வசிட்டர் : ஆசீர்வாதம்! ஆசீர்வாதம்! ஆசீர்வாதம்! ஆசீர்வாதம்!

விசுவா. : ஆசீர்வாதம்! ஆசீர்வாதம்! ஆசீர்வாதம்! ஆசீர்வாதம்!

பபூன்2 : ஏய் ஏய் ஏய்... என்னா ரெண்டுபேரும் அரிசி பகுந்து தின்னுகிட்டிருக்கீங்க. {சிரிப்பு} எனக்குக் கொஞ்சம் குடுக்கப்படாது...

வசிட்டர் : அடே தடிப்பயலே! ஆனால் ரொம்பநாள் இஷ்டங்கள். பிரிய கஷ்டமாக இருப்பதனால்,... நாங்கள் இருபேர்களுமாக பேசிக் கொண்டிருந் தால், ஆனால்...திடீரென்று நீ குறுக்க வரலாமோ?

பபூன்2 : ஓகோ. அப்படியா? இல்ல, அரிசி பகுந்துதான் திங்கறீங்களாக்கும்னு நெனச்சேன். கொஞ்சம் குடுத்தாலும் ஊற வச்சித் திங்கலாம்னு பாத்தேன்.

பபூன்3 : மாப்ளே அஞ்சு பைசா.

பபூன்2 : ஏ! மொளு மொளு {சிரிப்பு}

வசிட்டர் : அடே! அப்பா விஸ்வாமித்ரா! அடே ரொம்ப நாட்களாக, கொழந்தைகளில்லாமல் ரொம்பக் கஷ்டப்பட்டிருந்த தசரதனிடம்... கொழந்தைகள் எப்படிக் கேட்பதென்று தெரியாமல் திடீரென்று கேட்கலாமோ?

விசுவா. : அப்பா வசிஷ்டா! ஆனால் நான் ஒன்றுமே கேட்கவில்லையப்பா. (வேற என்ன கேட்டீங்க) ஏழுநாள் வரையிலும்தான் குழந்தைகள் கேட்டேன். அவன் குடுக்க முடியாதென்றான். அந்த நிமிஷமே நான் போய்விட்டேன்.

வசிட்டர் : ஆனால் ஏழு நாள் வரையிலும். அவர்கள் குழந்தைகளுக்கு நான் ஜாமீன் எடுத்துக் கொள்கிறேன். ஏழு நாளுக்குள்ளாக குழந்தை களைக் கொண்டாந்து அயோத்தியில் விட்டுவிட வேண்டும். அப்படியில்லையென்றால்... ஆனால் ஒன்னைய லேசா விடமாட்டேன். ஒன் வாயிலே மண்ணுபோட்ருவேன். (அப்படி மண்ணு போட்றணும்) குழந்தைகளுக்குப் பதில் நான் ஜாமீன் எடுத்துக் கொள்கிறேன். சீக்கிரமாகச் சென்று தாடகையைக் கொன்றவுடன் உடனே வந்துவிட வேண்டும்.

விசுவா. : நீ ஒண்ணும் கவலைப்பட வேண்டாம். ஆனால் என் குழந்தையாக நினைத்து நான் அழைத்துச் செல்கிறேன். ஆனால் எதுக்குத் தெரியுமோ? (எதுக்கு?) அட, ஒரு பக்கத் தொணைக்காகத் தான். இல்லையென்றால் இந்தப் பஞ்சாட் சரத்தினால் புஸ்ஸென்று எரித்திடுவேன் (ரொம்பத் தைரியசாலிதான் சாமி)

வசிட்டர் : ஜாக்கிரதையாகவே அழைத்துச் செல்.

தசரதன் : சுவாமி! ஆனால் என் குழந்தையல்ல, உம்மு டைய குழந்தைகளாக நினைத்து ஏதொரு குத்தம் செய்திருந்தாலும் நீங்கள்தான் மன்னிக்க வேண்டும்.

விசுவா. : அட எனக்கு நன்னாத் தெரியும். நீ ஒண்ணும் கவலைப்பட வேண்டாம்.

தசரதன் : ராமா!

இராமர் : தந்தையே!

தசரதன் : முனிவருடைய பின்பாக நீங்கள் போவதனால், காலுனால் ஏவுன வேலையை, கையினால் நீங்கள் செய்ய வேண்டும். ஏழு நாளுக்குள்ளாகவே, ஆனால் அரமனை வந்து சேர்ந்து விடுங்கள்.

இராமர் : ரொம்ப சந்தோஷம் ஐயா. இதப் பற்றியெல்லாம் கவலைப்பட வேண்டாம். ஏழு நாளுக்குள்ளாக அரமணைக்கு நாங்கள் வந்து சேருகிறோம்.

விசுவா. : ஆனால் நீ ஒண்ணும் பயப்படாதடா. அட என்னடா சிறு பிள்ளையாட்டம் அழுது கொண்டேயிருக்கியே? அட, சின்னப் பிள்ளை யாட்டம் அழுதுகொண்டே இருக்கியே.. ஆனால் அழுக வேண்டாம். அட எப்பப் பார்த்தாலும் இவன் அழுது கொண்டேயிருக்கான் (ஆமா வெறுங் குண்டி இல்லையாக்கும்)

பபூன்2 : அழுகின குண்டியில்ல. வெறுங்குண்டிதான் இருக்கு {சிரிப்பு}

பபூன்3 : மாப்ள அஞ்சி பைசா {சிரிப்பு}

பபூன்2 : அட மொளு மொளு [அடிக்கிறான்]{சிரிப்பு-யாரோ ஒருவன் 'மொளு மொளு' என்று கத்துகிறான். சிரிக்கின்றனர்.}

விசுவா. : அடே! பிறப்படுங்கள்! பிறப்படுங்கள்.... [இசை]

தசரதன் : சுவாமி. அனால் அந்த எம ராட்சதியைக் கண்டு அம்மா என்றும் அப்பா என்றும் கதறுவார்கள். அவர்களுக்கு...ஆனால் அறியாத குழந்தைகள்.

வசிட்டர் : அடேடே சிறுகுழந்தையாட்டம் அழுக வேண்டா மப்பா. தசரதனே! கவலைப்படாதே. போ.

சிம்மாசனத்துக்குப் போ... போ... போ. கவலைப்படாதே.

பாடல் : **நடந்தாரே ராமா-விஜயாபுரிநகர்**
தொடர்ந்தாரே ராமா!

விசுவா. : ஏவ்வ்வ்...

இராமர் : சவாமி.

விசுவா. : ஆனால் இதுதான் மகாகிரி காடுகள். ஆனால் இந்த மகாகிரி நோன்பு... ஆனால் எம ராட்சதியானவள் இருக்கிறாள். தாடகையென்று சொல்லக் கூடியவள். ஆன வாய் போல இருக்கக் கூடியவள். நாம் யாகம் செய்ய வேண்டிய ஒரே இடம். யாகம் செய்து வருவேன். அந்த யாகங்கள் செய்தால் இந்தப் புகையெல்லாம் மேகம் போய் முட்டிவரும். இந்த ராட்சதப் பயல்களுக்கு மூச்சுப்போகவிடாமல் யாகம் செய்வேன். அதற்குள்ளாக அந்தக் குகைக்குள்ளாகயிருந்து ராட்சதர்கள் என்னைக் கொல்வதற்கு ஓடி வருவார்கள். ஆக, அந்த ராட்சதர்களைக் கண்டு நீங்கள் ஓடாமல், ஒளியாமல், பயப்படாமல், இந்த இடத்தில் உட்காருங்கள். அப்படி ராட்சதர்கள் வந்துவிட்டால், சுவாமி! ஆனால் ராட்சதர்கள் வந்ததாகவே சொல்லி விடுங்கள். என்னுடைய பஞ்சாட்சரத்தினால் புஸ்ஸுன்னு எரித்து விடுகிறேன். (ஆமா, புஸ்ஸுன்னு எரிச்சிருவாரு) அடே, யாகம் செய்யட்டோ? (ம். செய்ங்க)

இராமர் : செய்து வரவேண்டும், மகாமுனிவர்களே.

விசுவா. : அப்பா ராமச்சந்த்ரா! நீ இப்படி உக்காரு. (ஆமா, நடுப்பறம் உக்காரட்டும் சாமி) அப்பா! நீ அப்படி உக்காரு. நான் யாகம் செய்யட்டோ? (ம். செய்ங்க) யாகம் செய்யட்டோ?

பாடல் : **வேள்வி செய்தாரே சாமி-முனிநாதர்**
வேள்வி செய்தாரே சாமி
நல்ல இடமிதுவே-தவங்கள் செய்ய
நல்ல இடம் இதுவே!

விசுவா. : ஆஆஆஆ.... (சாமியாருக்கு நடுக்கவாதம் வந்திரிச்சி. பின்னால புடுங்கிருச்சி, புடுங்கு புடுங்குன்னு. ஏய், சாமி) அடே அம்பி! அட போய்ட்டானோ? (போயிட்டான் சாமி) அரக்கி போய்விட்டாளோ? (பொய்ட்டாங்க எல்லாரும்) அட கீழே உழுந்து மண்ண மண்ணக் கவ்விக் கொண்டு கிடக்கிறேன். (சும்ம எந்திரீங்க சாமி. பொய்ட்டாங்க) பொய்ட்டாங்கல்லடா (பொய்ட்டா)... அப்பா (ம். மீசயில மண்ஒட்டல) அப்பா லெச்மணா! பயப்பட்டியோ. அப்பா... பயப்படாதே. அப்பா லெச்மணா!பயப்படாதே. (அவுங்க ஒண்ணும் பயப்படல. நீங்கதான் கீழே உழுந்து மண்ண மண்ணக் கவ்வுனது) ராமா! பயப்படாதே. அடே என்னடா பண்ணிருவா (ம். ஒண்ணும் செய்ய மாட்டாள்) ஆனால்... சுவாமி! தாடகை வந்துவிட்டாள்... ராட்சதி வந்ததாகச் சொல்லி விடுங்கோ. என்னுடைய பஞ்சாட் சரத்தால் புஸ்ஸுன்னு எரித்து விடுகிறேன். என்ன செய்துவிட முடியும்? (புஸ்ஸுன்னு எரிக்கிற வருதான் குப்புற கெடந்தாரு கீழ) ராமா, நீ பயப்படாதே. லெச்மணா. நீ பயப்படாதே. ராமா!... பயப்படாதே. லெச்மணா!... பயப் படாதே. (ரெண்டு பேரும் சேர்ந்து சாமியாருக்குத் திருநீறு போடுங்க) ஏவ்வ்வ்.... அடே என்னடா பண்ணி விடுவாள். ராட்சதி வந்ததாகச் சொல்லி விடுங்கள். பஞ்சாட்சரத்தினால் புஸ்ஸுன்னு எரித்து விடுகிறேன். அடே யாகம் செய்யட்டோ? (செய்ங்க) செய்யட்டோ?

பாடல் : **வந்தாளே தாடகைப் பாவி!**
வந்தாளே தாடகைப் பாவி!

ஆஆஆஆ.... (ம். கிடுகிடுகிடுன்னு காச்ச வந்திருச்சி... சாமியாருக்கு)

அட பொய்ட்டாளோ? (பொய்ட்டா) அட பொய்ட்டாளா இருக்கிறாளாடா? (பொய்ட்டா சாமி, எந்திரிங்க சாமி) அப்பா... வர்றதுக்குள்ள எழுந்து ஓடிப் பொய்ட்டாளே? (ஆமா, கீழே உழுந்து மண்ணு கவ்வுனாரு) அடே, நான் மட்டும் இருந்திருந்தால் பஞ்சாட்சரத்தினால் புஸ்ஸுன்னு எரித்திருப்பேன் (ஆமா. எரிக் கிறீகளே குப்புற விழுந்து... எங்க எரிக்கிறது?) அப்பா ராமா! பயப்படாதே. அப்பா லெச்மணா! பயப்படாதே. (அவுக பயப்படாமத்தான் நிக்காக) அடே என்னடா பண்ணிடுவாள்? சுவாமி, ராட்சதி வந்ததாகச் சொல்லிடுங்கள். பஞ்சாட்சரத்தினால் புஸ்ஸுன்னு எரித்து விடுகிறேன். (ஆமா, இவரு புஸ்ஸுன்னு கீழ தான் எரிக்கிறாரு) என்ன பண்ணிருவாள்? ஒண்ணுமே செய்யமுடியாது. (சாமி) அடே என்னடாது? (பின்னால திரும்பிப் பாருங்க. என்னமோ வந்திருக்கு) அட பின்னால என்னடா வருது? (என்னதோ ஒங்களக் கூப்பிடுது. பின்னால திரும்பிப் பாருங்க) ஓகோ யாகம் செய்ததில ராட்சதர்களெல்லாம்... ஆனால் தீயால் எரிந்து சாம்பலாகப் போய்விட்டார்களோ? (ஆமா அந்தா... சாம்பலா நீத்துப் போச்சு. பாருங்க சாமி பின்னால) சாகட்டும். சும்பத் தேவடியா மகன் சாகட்டும். (திரும்பிப் பாருங்க சாமி) சாகட்டும்... ராட்சதப் பயல்களெல்லாம் சாகட்டும்டா. அடெ நெசமாதானோ? (அந்தா... பொகையாக் கௌம்புது. திரும்பிப் பாருங்க) அடே யாகம் செய்த என்னுடைய பஞ்சாட்சரத் தினால் பஸ்பமாக நீத்துவிட்டார்கள். நெசந் தானோ? (நெசந்தான்) அடே! உண்மை தானோ? (உண்மைதான்) அடே! (பின்னால திரும்பிப் பாருங்க சாமி. பொகையாக் கௌம்புது) எங்க

பாப்போம்?... ஆ! ஆ!.... (சாமியார் ரெண்ட்ர படிக்கு கழிஞ்சிட்டு ஓடிட்டாரு) {சிரிப்பு}.... அப்பா லெச்மணா! பயப்படதே. நான் ஆத்து வரைக்கும் போய்ட்டு வந்திட்றேன்.... [இசை]

அடே அம்பி! பொய்ட்டாளோ? (ம்.... பொய்ட்டா) அப்பா! அடே சொல்றா (பொய்ட்டா சாமி. எந்திரிங்க சாமி) நான் வர்றதுக்குள்ள பொய்ட்டா. நான் வந்திருந்தா பஞ்சாட்சரத்தினால் முச்சுன்னு எரிச்சிருப்பேன். {சிரிப்பு} (எங்க போயிருந்தீங்க சாமி நீங்க?) அடே நான் ஆத்தோரம் பொய்ட்டு வர்றதுக்குள்ளதான் பொய்ட்டாளே (ஆத்துக்கு எதுக்குப் போனீக?) என்ன பண்ணிருவாள்? பயப்படாதே. (ஒண்ணும் பண்ண முடியாது சாமி) அட என்னடா செய்ய முடியும்? (ஒண்ணும் முடியாது) பஞ்சாட்சரத் தினால் புஸ்ஸுன்னு எரித்துவிடுவேன். (இந்தப் பக்கம் பாருங்க. என்னதோ வருது சாமி) அட என்னடா அது? (என்னன்னு தெரியல,. ஒங்க பஞ்சாட்சரத்ல என்னமோ கௌம்பி வருது) என் பஞ்சாட்சரத்தினால் ராட்சதர்களெல்லாம், ஆனால் எரிந்து தீயாக் கௌம்புதோ? (ம்.இந்தா பாருங்க. தீயா எரியுது இந்தப் பக்கம்) என்னுடைய பஞ்சாட்சரங்கள் வீண் போகுமா? (போவாது. பின்னால திரும்பிப் பாருங்க) அடே நெசமா தானோ? (நெசம்மா) அடே உண்மைதானோ? (ஒங்க சத்தியமா)... ஆ! ஆ!... (தீயா புடிச்சிருச்சி) {சிரிப்பு} அப்பா லெச்மணா! பயப்படாதே. நான் கொளத்து வரைக்கும் போய்ட்டு வந்திடறேன். (கொளத்ல... மீன் புடிக்க) அடே அம்பி! பொய்ட்டாளோ? (பொய்ட்டா சாமி) நெசமா தானோ? (நெசம்மா) அடே என்னடா பண்ணிடு வாள்? அடே என் பஞ்சாட்சாரத்தினால் புஸ்ஸுன்னு எரித்திடுவேன். {சிரிப்பு} (கீழே உழுந்து உழுந்து மூஞ்ண மண்ணக் கவ்விட்டு என்னடா பண்ணிருவாள்னு கேக்கான்) {சிரிப்பு}

பபூன்2 : சாமி!

விசுவா. : ஏ! ஏ!.... {சிரிப்பு – 'அஞ்சிபைசா' 'ஏ! மாப்ள அஞ்சிபைசா' என்ற குரல்கள் கேட்கின்றன.}

பபூன்2 : ஏன் இப்படிப் பயந்து ஓட்றாரு. (தாடகை யோட பயம்ப்பா)

பபூன்3 : மாப்ள அஞ்சி பைசா

பபூன்2 : ஏய் மொளு மொளு [அடிக்கிறான்] {சிரிப்பு - ஏய் மொளு மொளு}

விசுவா. : அப்பா ராமச்சந்திரா! தாடகையுடைய படைகள் லாம் வந்திருக்கிறது. ஆனால் தாடகை...*

விசுவா. : அயோத்தியில் கொண்டுபோய் விட்டுவிடுது. (ஆமாம். அவர மட்டும் கொண்டுபோய்க் காப்பாத்தீருங்க. தொட்டில்ல போட்டிருங்க) அய்யோ இனிமேல் வந்துவிட்டால் எங்களை மூணு பேர்களையும் வெட்டி முழுங்கி விடுவாள். எமராட்சதி, அந்தத் தாடகையானவள். அப்பா ராமச்சந்ரா! லெச்மணா! அதோ வருகிறாள். அதோ வருகிறாள் தாடகையானவள்.

பாடல் : **அவள்தான் ரகுராமா! - தாடகைப் பாவி**
அவள்தான் ரகுராமா!
என் வேள்வியும் தவத்தையும்
கெடுத்தவள் அவள்தான்
அவள்தான் ரகுராமா!

பாவையாட்டி : இந்தத் தாடகையானவள் விசுவாமித்ரர் வந்ததைப் பார்த்து அந்த முனிவன் இன்னும் யாகம் செய்வதற்காக வருகிறான் அப்படியென்று அதிக சாமர்த்தியமாகவே ஆயுதங்களை எடுத்து, விசுவாமித்ரனைத் தூக்கி முழுங்கலாம்னு வந்திருக்கிறாள். விசுவாமித்ரன் யாகம் செய்து விட்டால் மேகமண்டலம், நட்சத்திர மண்டலங் கள், இப்பேர்ப்பட்ட ஒரு, ஆனால் மேகத்

★ பதிவு நாடா மாற்றத்தினால் ஏற்படும் சில நிமிட இடைவெளி.

திரையாகப் புகையில் மூட்டி மூச்சிப் போக விடாமல், யாகம் செய்து வருவார் விசுவாமித்ரர். அப்ப இந்தத் தாடகையானவள், ஆனால் இந்த மகாகிரி மலையில் நின்று, ஆனால் கால் தூக்கிக் கொண்டு அறுபதடி ஒயரத்துக்குக் கால்தூக்கிக் கொண்டு சிறுநீர் விடுவாள். சிறுநீர் விட்டால் கொள்ளிடம், காவேரி, வைகை ஆற்றில் தண்ணிகள் எந்தவிதமாகப் பிறண்டு ஓடும், அதே போல்... ஆனால் அந்த விசுவாமித்ரனையும் விசுவாமித்ரருடைய யாகத்தையும் அரித்துக் கொண்டு போய், கிழக்கே சமுத்திரத்தில் கொண்டு போய்ச் சேர்த்துவிடும். (அடேங்கப்பா... ஒரு பொம்பள மூத்ரம்...) அப்பேர்ப்பட்ட ஒரு சாமர்த்தியம் உடையவள். விசுவாமித்ரர் வந்து விட்டதாகப் படையெடுத்துக் கொண்டு வந்திருக் கிறாள் தாடகையானவள்.

தாடகை : யாரடா சுபா ராட்சதன்?

சுபா : தாயே!

தாடகை : டேய் சுபா ராட்சதனே! டேய் மாரீசா! (ஏய் மாரீசா) ஓடிவா இங்கே.

மாரீசன் : ஏண்டி ஆத்தா (ம்... ஏண்டியாத்தா)

தாடகை : இவ்வளவு காலமாக எங்களைக் கண்டு பயந்து ஓடுன விசுவாமித்ரன் இன்றைய தினத்தில் இரு சிசுவர்களை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறான். அவர்களைப் பார்க்கும்பொழுது மகா கெட்டிக் காரர்களாகவே தெரியப்படுத்துகிறது. என்னு டைய பேரப்பிள்ளையானவன் ராவணேஸ்வரன் இருக்கிறானே, இலங்கை வேந்தன்... ராவணனு டைய அரமணை போய், சில வீரர்களை அழைத்துக்கொண்டு வரவேண்டும். அடே மாரீசா! சுபா ராட்சதனே!

மாரீசன் : அம்மா, நான் போய், ஆனால் ராவணேஸ் வரனுடைய அரமணைக்குப் போய் சில வீரர்களை அழைத்து வரவேண்டுமா?

வருகிறேன். நான் வர்றதுக்குள்ளாக அந்த விசுவாமித்ரனைப் பிடித்துக் கண்டங் கண்டங் கண்டமாக வெட்டி, என்ன... அவன் மூள இருக்கு பாருங்க... (ஆமா மூள) அதத் தனியா எடுத்து வறட்டி வச்சிரு எனக்கு.

சுபா : ஆத்தா அந்த விசுவாமித்ரனைப் புடுச்சி ரெண்டு காலும் ரெண்டு கையும் வெட்டி, என்ன... சோப்பு... சோப்பு வைக்கணும் சோப்பு. (ம் இவருக்கும் சப்பு போட்டுக் குடுங்க) அப்பத்தான் நான் போய்க் கூட்டிக்கிட்டு வருவேன்.

தாடகை : சரி, அப்படியே நான் செய்து வருகிறேன். போடா, டேய் சுபா ராட்சதனே!

சுபா : ஆத்தா. அந்த விசுவாமித்ரனுடைய கண்ணு முழி இருக்குது பாரு (கண்ணு) ரெண்டையுந் தோண்டி நல்லா வறட்டி வைக்கணும்.

தாடகை : வைக்கிறேன் போ.

மாரீசன் : ஆத்தா.... எனக்கு அவன்... அவன் ரெண்டு தொடயும் நல்லா வறட்டி, நல்லா கண்டங் கண்டமா வெட்டி, மசாலா நல்லா சாஸ்தியாப் போட்டு, நல்லா காரஞ்சாரமா வச்சிருக்கணும்.

தாடகை : வைத்திருக்கிறேன். போ. போங்கடா.

பபூன்2 : ம். அதுக்கு நெய் வேணும். பால் வேணும். வறுக்கறதுக்கு. {சிரிப்பு} மனுஷங்கறி திங்கறதுக்கு எவ்வளவு ஆத்திரப்படுறான் இந்தத் தடி மாட்டுக்குப் பொறந்த பய...

மாரீசன் : டேய்!

பபூன்2 : என்னையத் தூக்கி முழுங்கினாலும் முழுங்கிடு வாம்போலத் தெரியுது. போங்கடா... போய்க் கூட்டிக்கிட்டு வாங்கடான்னா...

பபூன்3 : மாப்ள அஞ்சி பைசா. {சிரிப்பு}

பபூன்2 : டேய் மொளு மொளு {சிரிப்பு - ஏய் மொளு மொளு என்ற குரல்கள்} .... [இசை]

விசுவா. : அப்பா ராமச்சந்திரா! வந்துவிட்டது எங்களுக்கு ஆபத்துகள். அடே சீக்கிரமாப் பெறப்படு. அயோத்திக்கு ஓடிப்போகலாம். தாடகை வந்து விட்டாள். என்னைப் பார்த்துவிட்டால் போதும், வாழைப்பழத்தைத் தூக்கி முழுங்குவது போல முழுங்கிடுவா. (முழுங்கட்டுமே) ஏய் ராமச்சந்திரா! பெறப்படு.

இராமர் : சுவாமி! நான் எதற்காக யோசனை செய்து கொண் டிருக்கிறேன் தெரிவருமா? இந்த ராட்சதர்களை யும் இந்த தாடகைக்கும் பயந்தா நான் நின்று கொண்டு வருகிறேன்?

விசுவா. : அப்புறம் என்ன செய்து கொண்டிருக்கிறாய்? ஆனால் தாடகை என்னைத்தூக்கி முழுங்கலாம்னு பாத்துக்கிட்டு, வேடிக்கை பாக்கலாம்னு வந்திட்டியோ? இல்லையப்பா...

இராமர் : சுவாமி. மொதல் மொதலாக நான் வில்வித்தை யெல்லாம் கற்று ஒணர்ந்து, மொதலாவது இந்த... ஒரு பெண் மீதில் நான் போர் தொடுப்பதா? அது கேவலமில்லையா? என்று நான் யோசனை செய்து கொண்டு வருகிறேன்.

விசுவா. : அடே அப்பா. அட இது ஒரு கேவலமா? அட ஆடவனைப்போல் இருக்கிறாள், அந்தப் பெண்ணானவள். உயிருக்கு ஆபத்து வரும் போது பெண்ணிருந்தாலென்ன? ஆணிருந்தா லென்ன? யாராயிருந்தாத்தான் என்ன? அப்பா ராமச்சந்திரா! இப்படி நாங்கள் யோசனை செய்து கொண்டிருந்தால் ஒன் உயிருக்கும் ஆபத்துகள். ஒன் தம்பியுடைய உயிருக்கும் ஆபத்து. என்னுடைய உயிருக்கும் ஆபத்துக்கள். மூணு பேரயுந் தூக்கி வாழப்பழம் முழுங்குனதுபோல முழுங்கீருவா. சிரமமாயிருக்கும். புண்ணியமாயி ருக்கும்... ஒங்களால கொல்லவே முடியாது.

பெறப்படுங்க. நாங்கள் போய்விடலாம். பெறப் படுங்கோ. பெறப்படுங்கோ. (பெறப்படுங்க)

இராமர் : உண்மைதான். இவ்ளைக் கொல்ல வேணு மென்று நாங்கள் வந்தும், முன் வச்ச கால் பின்வாங்கிவிட்டால், உலகத்தில் கேவலமாகப் பேசுவார்கள். கவலைப்பட வேண்டாம். ஆனால் அண்ணன் தம்பி இரு பேர்களுமாகவே வில் வளைத்து, அந்த ராட்சதர்களுடைய படைகளை, அதன் தலையறுத்து நாங்கள் மலைபோல் குவித்து விடுவோம்.

விசுவா. : ஏவ்வ்வ்.... (ம். ஏப்பம் வந்திருச்சி) அப்பா! இப்பதான் எம் மனசு நிம்மதியாயிருக்கு. (பால் குடிச்சது மாதிரியிருக்கு) அப்பா ராமச்சந்திரா! சீக்கிரமா வில் எடுங்கோ. வந்துவிட்டாள் ராட்சதி யானவள். வந்துவிட்டாள்.... [இசை]

இராமர் : விஸ்வாமித்ரர் கவலைப்பட்டுக் கொண்டு வருகிறார். சீக்கிரமாக வில் எடுத்து, அந்த ராட்சதர்களை, அவர்களுடைய சிரசுகளை அறுத்து மலைபோல் குவித்துவிடலாம். வாருங்கள். இதோ வந்து விட்டாள் ராட்சதி.... [இசை]

விசுவா. : அப்பா ராமச்சந்திரா!ஆனால் நீங்கள் ரெண்டு பேர்களும் போர் முனையை.... போர் முனை யைக் கவனித்துக் கொண்டிருந்தால் என்னைய மட்டும் விட்டு விடாதீர்கள். (ஒங்களையும் என்னா செய்யணும்) அடே அந்த இடுப்பில் கட்டியிருக்கியே துண்டு, அந்தத் துண்டை எடுத்து என் இடுப்லயும் ஒன் இடுப்லேயும் சேத்துக் கட்டு. (சரியாப் போச்சி. எங்க போனாலும் இழுத்துகிட்டே போங்க) அடே! கீழே விழுந்தாலும் மேல விழுந்தாலும் இழுத்துக் கிட்டே போயேன். (ஏன்? நீங்க துண்டா,நின்னா என்ன சாமி) அட லபக்குன்னு தூக்கிட்டுப்

போயிருவா. (செத்தாப் போனாப் போவுது) அப்புறம் என்னைய இழுந்துபடுவீர்கள்.

இராமர் : சுவாமி, என்னுடைய அறையில் நீங்கள் இருக்கலாம்.... தம்பி!

இலக்கு. : அண்ணா!

இராமர் : உன்னுடைய மந்திரவாள் உருவி, ஆனால் முனிவருடைய பின்புறமாகக் காவலாக இருக்க வேண்டும். இந்த ராட்சதர்களை நான் கொன்று விடுகிறேன். (பத்தாத வயிரம்தான் சாமியாரு)

இலக்கு. : சரி அண்ணா!.... [இசை]

தாடகை : ஹ ஹ் ஹ ஹ் ஹ ஹ் ஹ ஹ் ஹா . . . ஹ ஹ் ஹ ஹ் ஹ ஹ் ஹ ஹ் ஹா . . . ஹஹ்ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா. டேய் சிறுவர்களே! கேவலமாகவே நினைத்திருந்தேன். வில்லெடுத்து என்னுடனே போர் தொடுப்பதற்காக வந்து விட்டீர்கள். எங்கே... போடு பார்ப்போம் உன்னுடைய அம்புகளை. நான் பார்த்து விடுகிறேன். {சிரிப்பு}

பாடல் : **ராமா ராகவா ராஜி பரோஜன**
சாமித்த வரவா ஜீயராகவா
சூர சங்கரகர தேவா
கோவிந்த கிருஷ்ணா
நந்த நந்தன கோவிந்தா

தாடகை : டேய் விசுவாமித்ரா! ஒன்னைய நான் கேவலமாக நினைத்திருந்தேன். ஆனால் இரு சிறுவர்களை அழைத்து வந்து... ஆனால் என்னையக் கொல்ல வேணுமென்று நீ ஆரம்பித்துவிட்டாய். ஆனால் ஒன்னைய நான் உயிரோடு விட்டு விடுவதாக நினைத்திருக்கிறாயா? இதோ நான் வருகிறேன். பயப்படாதே.

பாடல் : **ராமா ராகவா ராஜி பரோஜன**
சாமித்த வரவா ஜீயராகவா

சூர சங்கரகர தேவா
கோவிந்த கிருஷ்ணா
நந்த நந்தன கோவிந்தா

விசுவா. : வ்வ்வ்... வ்வ்வ்... (எங்கிட்டுக் கெடந்து ஓடி வந்தாரு இந்தச் சாமியாரு) அப்பா ப்பாப்பா... {சிரிப்பு} (இடுப்புல கட்டி வந்த சாமியாரு) {சிரிப்பு} (இன்னேரம் வெட்டுப்பட்டு சாகத் தெரிஞ்சயே சாமியார) நல்லவேள. ஆன்னா... தாடகை கைல கொல்றதுக்கு முன்னால லெச்மணன் துண்டா என் தலைய வெட்டப் பாத்துட்டான். (எதுக்காக சாமி ஊட ஓடிவந்தீங்க) அட விஷயத்தக் கேட்டியோ? (என்ன?) ஆனால் தாடகைக்கும் ராமருக்கும் கடுமையாகப் போர் நடந்து கொண்டிருந்தது. அட செத்துப் போய் விட்டாளா? போகவில்லையான்னு லேசா எட்டிப் பாத்தம்பாரு. (ஒனக்கு அக்குறுவந்தான) ஆனால் தாடகை சண்டை செய்து கொண்டிருந்தவள் லபக்குன்னு தாடியைப் பிடித்துக் கொண்டாள். அடே தாடியைப் பிடித்து இழுத்துக் கொண்டே போய்விட்டாள் அவளுடைய அரமனைக்கு. ஆனால் அரமணையில் கொண்டு போய் ஒரு தூணிலே என்னைப் பிறுபிறுக்க... என்னையப் பிடித்துக் கட்டிவிட்டாள், எங்கயும் நகர விடாமல்! ஆனால் கட்டிவிட்டு அரமணைக்குள்ளாப் போய்... கத்தி, சட்டி, அருவாமனை, அருவாள், இதுகளையெல்லாம்... என்னைய வெட்டிச் சாப்பிடலாமுன்னு தூக்கிட்டு வர்றதுக்காப் போய்விட்டாள் (பெறவு வருவல் போட வேண்டாம்) ஆனால்... இப்படி... பார்த்தேன். நான் தவள போல வேஷத்தப் போட்டு தப்பித் தெழுந்து ஓடியாந்தேன். ஆனால் இங்க வந்த வொடனே லெச்சமணன் ஓங்கி என் தலையை வெட்டப் பாத்திட்டானே. (பெறவு கூட்டத்துக் குள்ளே ஓடியாந்தா?)

பபூன்2 : வெட்டலையா பின்ன? (ம், வெட்டல) {சிரிப்பு - 'மாப்ள அஞ்சி பைசா' என்று சப்தங்கள்}

பபூன்3 : மாப்ள அஞ்சி காசு

பபூன்2 : போடா மொளு மொளு [அடிக்கிறான்] {சிரிப்பு - 'மொளு மொளுஅடிவாங்கி ஓடிட்டான்' என்ற சத்தம்}

இராமர் : சுவாமி என்னுடைய உத்ரவில்லாமல் நீங்கள் எங்கயும் போகக்கூடாது.

விசுவா. : போமாட்டேன்... அந்தா வந்திட்டா... அந்தா வந்திட்டா... (வந்திட்டா)... [இசை]

சுபா : அம்மா. (ம்... மகனுக்குப் பால் குடுங்க) தாயே! வீரர்கள் நாங்கள் இருக்க, அந்தக் கேவலமாக இருக்கக்கூடிய நரமனிதர்கள்... சிசுவர்களிடம் நீ போய் எதுத்து நின்று சண்டை செய்வதா? (வேண்டாம்) கவலைப்பட வேண்டாம். இதோ நான்... எனக்கு உத்தரவிடுங்கள். என்னுடைய தண்டாயுதத்தினால் இவர்கள் மூன்று பேர்களையும் அவர்களுடைய சிரசுகளை அறுத்து விடுகிறேன்.

தாடகை : போ மகனே போ. நம்முடைய படைகளைப் பூராவாகவே கொன்றுவிட்டார்கள் சிசுவர்கள். அவர்கள் மூன்று பேர்களையும் கசகசவென்று கசக்கி 'ஹோ' வென்று ஊதவேண்டும். (ம். போ)

சுபா : ஊதிவருகிறேன். ('பூ ன்னு ஊதிட்டு வா) ஏ! நரமனிதர்களே. டேய் விசுவாமித்ரா! இவ்வளவு காலமாக எங்களைக் கண்டு பயந்து விழுந்து ஓடினவன், இவ்வீரர்களை அழைத்துக் கொண்டு வந்துவிட்டானென்று, எவ்வளவு தைரியமாக நின்றுக் கொண்டு வருகிறான். பார் ஒன்னைய நான் கொல்கிறேன்... [இசை]

தாடகை : டேய் மகனே மாரீசா! உன்னுடைய அண்ணனைக் கொன்றுவிட்டான், இந்த வேடுவர்கள், ஆனால்... இந்த நரமனிதர்கள். இவர்களை...

மாரீசன் : கவலைப்படவேண்டாம் தாயே. நான் சென்று, அந்த வீரர்களை நான் ஜெயித்து வருகிறேன். பயப்படவேண்டாம்.

தாடகை : போ மகனே போ... [இசை]

மாரீசன் : ஏய் நாராயணா! எம்பெருமாளே! இராமா! இராமா...! ஏய் ஆதிநாராயணா! என்னைய எதற்காகக் கொல்லாமல், என்னுடைய நெஞ்சிலே மட்டும் ஒரு அம்புகளைப் போட்டு ஏன் நிறுத்த வேண்டும்?

இராமர் : டேய் மாரீசா! என் மீதில் நீ பகித்தியாக... நீ இருப்பதினால் இப்போது உனக்கு நான் மோட்சங் குடுப்பதில்லை. ஏழு கடலுக்கு அப்புறத்தில் நடுத்தீவில் ராமா ராமா வென்று நீ இராம மந்திரங்கள் படித்துக் கொண்டிருந்தால் ஒனக்கு நான் மோட்சம் தருகிறேன்.

மாரீசன் : சுவாமி! அப்படியென்றால் எப்படி நான் போகமுடியும்?

இராமர் : ஏழு கடல் நீ தாண்டிப் போவதற்கு முடியும். என்னுடைய அம்புகளே உன்னைய அங்கு கொண்டுபோய் விட்டுவிடும்.

மாரீசன் : ரொம்ப சந்தோஷம் பிரபு.

இராமர் : போ., நிக்காதே.

மாரீசன் : ஆ.. ராமா... ராமா...ராமா... [இசை]

தாடகை : அடத் துரோகிகளே! என்னுடைய வீரர்களையும் கொன்றுவிட்டீர்கள். ஆனால் என்னையும் சல்லடைக் கண்களைப்போல்... என்னுடைய திரேகம் பூராவுமே தொலைத்து விட்டீர்கள்.

ஒங்களை நான் லேசாக விட்டு விடுவேனா? ஒங்களை மூன்று பேர்களையும் தூக்கி நான் முழுங்கிவிடுகிறேன்.

இலக்கு. : அண்ணா! இவள் மகா சாமர்த்தியம் உடைய வளாக இருக்கிறாள். ஆனால் மூன்று பேருக்கும் ஆபத்துக்கள் வந்துவிட்டது. அத்தனை பேரும் மரணமடைந்து விட்டார்கள். இவள் ஒருவள்தான் மிச்சம். ஆனால் இவளை எதற்காக நாங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்? ஒங்களுடைய அம்பினால் இவளுடைய தலையை அறுத்து எமலோகத்துக்கே அனுப்பி விடுங்கள்.

இராமர் : தம்பி, உண்மை. அதிகமான கோபங்கள் ஏற்பட்டு வருகிறது. நம்முடைய மூன்று பேருக்கும் ஆபத்துக்கள் வந்தாலும் வந்துவிடும்.

இலக்கு. : சீக்கிரமாக இவளுடைய தலையை அறுத்து விடுங்கள்... [இசை]

விசுவா. : ஏவ்வவ்.. அப்பா (சாமிக்கு இன்னக்கித்தான் நிம்மதியாகத் தூக்கம் வரும்.) இப்பத்தான் எம் மனசு நிம்மதியாயிருக்குது. {சிரிப்பு} அடே தாடகை செத்துப் பொய்ட்டாளோ? (பாருங்க சாமி எட்டி) இவதான் தாடகை. (இவதான்) அடேயப்பா (அடே, கிட்ட பொயிராதீங்க. கடிச்சிப்போடுவா) ஆனால் இராமனா கொன்று விட்டான்? (ம். வேற யாரு கொன்னது?) இந்தப் பஞ்சாட்சரத்தினால் புஸ்ஸுன்னு எரித்து விட்டேன். {சிரிப்பு} (ம்.. பாத்தீங்களா. குண்டிக்குப் பின்னால ஒளிஞ்சி கெடந்தது தெரியாது) அடே எல்லாம் என்னுடைய பஞ்சாட்சரந்தான். (ம். ஒங்க பஞ்சாமிர்தத்தைக் குப்பைல கொண்டுபோய்ப் போடுங்க.) அடே... இந்த.. இவளை ஒதைக்கட்டுமோ (கொஞ்சம் பஞ்சாமிர்தம் அள்ளிப் போடுங்க சாமி. எரியட்டும் தீயி) ஒதை (ஒதை) ஒதை (ஒதை)

ஒதை {சிரிப்பு} (ம். ஒதை ஒதைன்னு பின்னாலதான் போவுது காலு.) {சிரிப்பு} என்னுடைய கோபங்கள் பூராவும் இப்பொழுது உதைத்து நான் பழி தீர்த்துக் கொள்ளவேண்டும். (ஆமா. பின்னாலேயே பொயிருங்க) ஒதைக் கட்டுமோ? ஒதை ஒதை (ஒதை ஒதை {சிரிப்பு} ஒதை ஒதைன்னு பின்னாலேயே போ) அட பயமாயிருக்குடா (ம்... செத்த பாம்ப அடிக்கிற சாமி) ஒதை ஒதை.. ஆ! ஆ! {சிரிப்பு}

பபூன்1 : கத்தாழ வயிரந்தாண்டா சாமி. (ஆமா. செத்தப் பாம்பக் கண்டா காத வழி ஓடுவாரு சாமி) {சிரிப்பு} செத்த மனுஷனை மிதிக்கக்கூட இவருக்கு அவ்வளவு பயமாயிருக்கு. சாமி! ஒதைங்க சாமி. செத்துப் பொய்ட்டா. அவ தலை ஓடிப் போயிருச்சி.

விசுவா. : அடே! தலயை அறுத்துவிட்டான் ராமன். எமலோகம் ஓடிப்போய் விட்டது. (ஒடல்தான் கெடக்கு)

பபூன்1 : ஒடல்தான் கெடக்கு. ஒதைங்க சாமி. நான் வேண்ணா புடிச்சிக்கிருதேன். ஒதைங்க.

விசுவா. : ஒதைக்கட்டுமோ. ஒதை ஒதை ஒதை... {சிரிப்பு} (முடியாது சாமி... கிட்ட போமுடியாது)

பபூன்1 : பரவாயில்லயே ஆளு {சிரிப்பு} (பின்னால தான் ஸ்டார்ட்டெடுக்கும் வண்டி)

விசுவா. : அடே அப்பா ராமச்சந்திரா! புறப்படுங்கள். என்னுடைய யாகத்தை நான் நிறைவேற்றி வரவேண்டும்.

இராமர் : பிறப்படுங்கள் சுவாமி... [இசை]

பபூன்1 : அட இதத் தூக்கிப் போடணுமே. (அட இழுத்துப் போடப்பா, அந்தப் பக்கம் வாய்க்கால்ல) நான் ஒருத்தன் எப்படித் தூக்கிப் போடுறது? (டேய்!

அட நீ ஒண்ணு கேட்டியே) எந்தம்பியக் கூப்பிட்டுத் தூக்கிப் போடணும். {சிரிப்பு} டேய் உளுவத்தலையா... டேய்!

பபூன்2 : அடி என்னடி ராக்கம்மா

பல்லாக்கு மூக்கக்குத்தி {சிரிப்பு} (ஏய் பல்லாக்கு மூக்குத்தி)

{'அஞ்சுகாசு அஞ்சுகாசு' என்று சிறுவர்கள் சப்தமிடுகின்றனர்} ஏன் காது குத்துன்னா என்ன?

அஞ்சாறு ரூபாய்க்குக் கௌவி மால {சிரிப்பு} கழுத்துக்குப் பொருத்தமடி

எங்க ஊரு மீனாக்ஷி

களவாண்டுகிட்டுப் போனவடி {சிரிப்பு}

பபூன்1 : நல்ல பாட்டுப் பாடுறாண்டா உளுவத் தலையன்.

பபூன்2 : ஏய் உளுவத்தலையன்னு பேசாத. அய்யா! சுப்ரமணியசுவாமி... கிளிக்குஞ்சு மொதலாளி அப்படீங்கணும். இல்லேன்னா தாறுமாறா டுப்பாக்கியால் சுட்டுப்புடுவேன். எடுடா டுப்பாக்கிய டுர்ர்ர்.. {சிரிப்பு}

பபூன்1 : தூக்கிப் போட்ருவமா (ம். தூக்கிப்போடு) ஏல... ஏல்... ப்... ப்... அப்பா... நாசமாப் போக... என்னா கனமாயிருக்குடா எளவு.

பபூன்2 : ஏண்டா படுவா டேய்! ஆனா நான் பெரிய எரநூறு ரூபா மொதலாளி. தாறுமாறா*மானாங்கண்ணியா பேசுற மொதலாளி. ஏய் இப்படித் தூக்கிப் போடலாமா எம்மேல? (ஓம் மேலயா போட்டாங்க) பேண்டுகட்டிருக்கிறேன். தூக்கி எம்மேல போட்டுட்டாக {சிரிப்பு} (அட, எங்க... இங்கயா) 'பீ'யும் நானும் உருண்டுட்டம் (அடக் குளிச்சிட்டு வா. வாய்க்கால்ல தண்ணி போவுது) {சிரிப்பு} அப்பா... சுப்ரமணியசாமி தண்ணிக்

★ மானாங்கண்ணி = கண்டபடி

குள்ள எறங்கப்படாது. {சிரிப்பு} (ஏன்?) அழுக்கு பொயிரும். {சிரிப்பு} எரநூறு ரூபா இன்னக்கி வச்சிருக்கேண்டா. தாறுமாறா மானாங்கண்ணியா அள்ளி வீசுவேன்.

பபூன்1 : டேய் டேய் தாறுமாறா அள்ளி வீசப் போறியா.

பபூன்2 : அள்ளி வீசப் போறண்டா. தாறுமாறா (அடத் தாறுமாறா போக்கடிக்க வேண்டாம்ப்பா) என்ன செய்யணும்? (அட, பத்துபடி அரிசிய வாங்கி பத்து பேருக்குச் சோறாக்கிப் போடப்பா) கெடுத்துப்புட்டாண்டா பாவிப்பய. எரநூறு ரூபாய்க்கி அரிசி பருப்பு வாங்கிச் சோறு பொங்கிப் போட்டா வர்றவன் போறவன் இருக்றவன் இல்லாதவன் நல்லாத் தின்னுப்புட்டு தெருவு பூரா பேண்டு வைக்கவா? {சிரிப்பு} (அட, நீ சோறு போடலேன்னு பேளாமலா இருந்துக்குவாக) அட, அசிங்கமாயிருமடா அண்ணன். {சிரிப்பு} (அப்ப ஒரு நாடகம்... ஒரு டான்ஸு) என்ன நாடகம்? (ஒரு இராமாயணம்... அரிச்சந்திரா கதை, வள்ளி திருமணம்) அதுலெல்லாம் பொம்பள ஆடுவாளா? (பொம்பள எல்லாம் ஆடமாட்டா. கத.) அப்ப எனக்குப் புடிக்காது. போரடிக்கும். போரடிக்கும். (ஊருக்கு நல்லது) இன்ரஸ் இருக்கணும். இன்ரஸ்ஸா இருக்கணும். (அட வள்ளித் திருமணம்) அந்த வள்ளித் திருமணத்ல பொம்பள டான்ஸு போடுவாளா) {சிரிப்பு}(அட பொம்பள ஆடமாட்டா. எல்லாங் கததாம்ப்பா) அப்ப எனக்கு, போரடிக்கும். (ம். போரடிக்கும். வேற என்னதான் செய்யப்போற?)

பபூன்1 : கட்டபொம்மன் நாடகம்

பபூன்2 : அந்தக் கட்டபொம்மன் நாடகத்ல டான்ஸு போடுவாளா பொம்பள? {சிரிப்பு}

பபூன்1 : நல்ல கட்டபொம்மு நாடகம் [அடிக்கிறான்] {சிரிப்பு}

பபூன்2 : ஏய் சப்பு சப்புன்னு அடிக்காதடா. ஆமா. {சிரிப்பு}

பபூன்1 : அப்போ ஒனக்கு வந்து இன்ரஸ்ஸா இருக்கனும்.

பபூன்2 : இன்ரஸ்ஸா, நவநாகரீகமா, இன்ரஸ்ஸா இருக்கனும். அப்பத்தான் எனக்குப் புடிக்கும். {சிரிப்பு}

பபூன்1 : அப்படியா... சரி. தூத்துக்குடியிலயிருந்து டில்லி முத்தம்மாள் கெரக வெளயாட்டு. கும்ப டான்ஸு. ரொம்ப பிரமாதமாயிருக்கும்.

பபூன்2 : என்னது? (தூத்துக்குடி டில்லி முத்தம்மா கரக வெளயாட்டு) தூத்துக்குடி தின்னி முத்தம்மாவா {சிரிப்பு} (அட தின்னி முத்தம்மா இல்ல. டில்லி முத்தம்மா).

பபூன்1 : டில்லி முத்தம்மா.

பபூன்2 : தின்னி முத்தம்மா {சிரிப்பு} (அப்ப, திங்காத முத்தம்மாளக் கூட்டிக்கிட்டு வா) {சிலர் எழுந்து நிற்க உட்காரச் சொல்லி யாரோ சிறுவன் சப்தமிடுகிறான்} ஆமா. அந்தப்புள்ள செவத்தப் புள்ளயா? கறுத்தப் புள்ளயா? (அடே செவத்தபுள்ள.. ஆப்பிள்பழ நெறத்ல இருப் பாப்பா) செவத்த புள்ள... ஆப்பிள் பழ நெறம்... யாத்தாத்தோ...அம்மாம்மோ.... {சிரிப்பு} யாத்தாத்தோ... அம்மாம்மோ... {சிரிப்பு}. யாத்தாத்தோ... யம்மம்மோ... ஆமா, ஆப்பின்பழ நெறம்... வயசு என்ன இருக்கும்? (வயசு பதுனாறு வயசுப் பருவமங்கை) பதுனாறு எடத்ல பரு இருக்காக்கும். (பரு இருக்கு) {சிரிப்பு}

பபூன்1 : பரு இருக்கு. [அடிக்கிறான்] பதினாறு வயசு பருவமங்கை. எள வயசுதான்டாம்னு சொன்னம் னாக்கா... பரு இருக்கா...? {சிரிப்பு}

பபூன்2 : அப்பா! பதுனாறு வயசுபுள்ள ... யாத்தாத்தோ... {சிரிப்பு} யம்மம்மோ... யாத்தாத்தோ... யம்மம்மோ... யாத்தாத்தோ... {சிரிப்பு} (அய்ய... பாக்றதுக்குள்ள இந்த பாடுபடுறான, பாத்துட்டா என்ன பாடு படுவான்?) ஆமா அந்தப் புள்ளைக்குக் கல்யாணம் ஆயிருக்குதா? (டேய். இன்னும் கல்யாணமாகலப்பா) கல்யாணம் செய்யாத எளசுதான் போலத் தெரியுது. யாத்தாத்தோ... யம்மம்மோ... {சிரிப்பு} ஆமா அந்தப் புள்ளைக்கி... டான்ஸுக்கார டில்லி முத்தம்மாளுக்குக் கல்யாணமில்லை. எளம் வயசு. புள்ள எத்தினி இருக்கும். (டேய் கல்யாணமில்லேன்னா புள்ள எத்தினியிருக்கா?)

பபூன்1 : அகராதி புடிச்ச பயா [அடிக்கிறான்] கல்யாணம் ஆகாத புள்ளடான்னு சொன்னமின்னா புள்ள எத்தினியிருக்குன்னு கேக்றாம் பாத்தியா! மண்ட அகராதி புடிச்ச பய.

பபூன்2 : சரி அவளுக்கு பீஸு எவ்ளவு? (நூத்தி ஒண்ணு) நூத்தி ஒண்ணு, போனாலுஞ் சரி. வந்தாலுஞ் சரி. ஒன்க்கு இப்ப தெரியுமா?

பபூன்1 : எனக்குத் தெரியும்டா. தூத்துக்குடி... எனக்குத் தெரியும். அட்வான்ஸு குடுத்திட்டு வாரேன். ரூபாக் கொடு.

பபூன்2 : இந்தா ஒரு ரூபா அட்வான்ஸ். (டேய் ஒரு ரூபா கார்ச் செலவுக்கே காணாதே) டேய் இங்கயிருந்து தூத்துக்குடி போறச் செலவு, வர்றச் செலவு. அவளுக்குச் சாப்பாட்டுச் செலவு, ஒனக்குச் சாப்பாட்டுச் செலவு. அவ சாமானத்துக்கு லக்கேஜி செலவு, ஒஞ் சாமானத்துக்கு லக்கேஜி செலவு {சிரிப்பு} (ரெண்டு பேரு சாமானத்துக்கும் லக்கேஜ் போட்டு) லக்கேஜ் போட்டு எல்லாஞ் செலவும் போக, தொண்ணூறு பைசாகொண்டா. {சிரிப்பு} (பெரிய தர்மக் கொடையாளிதான்)

பாடல் : **கற்பனை என்றாலும்**
கற்சிலை என்றாலும்
கந்தனே உனை மறவேன்...

பபூன்1 : ஏய் ஒரு ரூபாயக் குடுத்துட்டு தொண்ணூறு பைசா கேக்கயே. பத்து பைசால என்னடா பண்றது? {சிரிப்பு}

பபூன்2 : பொரிகடல வாங்கித் தின்னுகிட்டே போ. வரும் போது வாங்கிட்டு வா. {சிரிப்பு} செலவுக்குக் காணாதுன்னா அவகிட்ட கடன் வாங்கிக்க (ஆமாம். அவ குடுப்பா... ஒனக்குக் கடன்)

பபூன்1 : டேய்! சரி, ரூபாய் காணாது. கூட எதாவது பத்து இருபது குடு.

பபூன்2 : அப்போ... ஜாஸ்தியா எரநூறு ரூபா நோட்டா யிருக்கு. சில்றயில்ல. (நோட்டக் காமிச்சே ஏமாத்றான் இவன்) என்ன... ஒங்கைலயிருந்து கொண்டுகிட்டு வா, செலவு போட்டு. இங்க வந்த பெறவு குடுத்திறலாம்.

பபூன்1 : அப்படியா? சரி போய்ட்டு வந்திட்றேன்.

பபூன்2 : வர்றானோ என்னமோ (டேய்! வந்திரு வாம்ப்பா இப்ப) என் ஒரு ரூபா போச்ச. {சிரிப்பு} (ஒரு ரூபா போனாலும் இப்பக் கூட்டிட்டு வந்திரு வான்.) இட்லி வாங்கித் தின்னுட்டு படுத்திருந்து வர்றானோ என்னவோ? (அதெல்லாம் படுக்க மாட்டாம்ப்பா. இப்ப வந்திருவான் கூட்டிக் கிட்டு) வந்திருவானா (ஆமாம்).

பார்வை. : ஏய் பொம்பள டான்ஸு நெசந்தானா?... (ம் நெசந்தான். எளவட்ட வரியாப் போட்டு வாங்கப்பா... ஆளுக்கு ஒண்ணு ரெண்டுன்னு.)

★ பொம்மையாட்டி வெத்தலை போடுகின்ற நேரங்களில் இது போன்ற பாடல்கள் பாடுவது உண்டு.

பார்வை.2: டில்லி முத்தம்மா கரக வெளயாட்டு வாங்க... கூப்பிடப் பொயிருக்கான எங்க அண்ணன். என்ன... இப்ப ஒரு நன்கொடையா பத்து இருபது, எதாவது நன்கொடையாக் குடுங்க (எண்ணெ விக்ற செட்டியார் குடுப்பாரு)

பார்வை.1: எண்ணெ வித்த பெறவு தர்றேன். மொதல்ல டான்ஸு பாத்துக்கிர்றேன்.

பார்வை.2: பாருடா இவனுக்கிருக்ற ஆசைய {சிரிப்பு} வித்திட்டு வாங்க, ரெண்டாவது காமிப்போம், டான்ஸ்.

பார்வை.1: டான்ஸு பாத்திட்டு போனாக்க விசேஷம். யோகம். அப்பத்தான் யாவாரம் ஜாஸ்தியாகும்.

பவுன்2 : அப்ப ஒருபடி நல்ல... தேங்காண்ணெ குடுங்க. அவ... டான்ஸுகாரிக்குத் தல சீவ (டான்ஸுகாரிக்குத் தல சீவறதுக்குக் கொடுங்க) ஒரு லிட்டர்.

பார்வை.1: அது வேண்ணா தர்றேன். அது வேண்ணா தர்றேன். (ம். அது தருவாரு)

பவுன்2 : காசு.

பார்வை.1: ம்ஹூம்... ஆட்டம் நல்லாயிருந்தாதான் குடுப்பேன். இல்லேன்னா அதுங் குடுக்க மாட்டேன். {சிரிப்பு}

பவுன்2 : நயமான தேங்காயெண்ணெயா? நல்லெண் ணெயா?

பார்வை.1: நல்லெண்ணெ தான் இருக்கு. தேங்கா யெண்ணெ கெடயாது. (அதும் இல்லேன் னுட்டான்)

பவுன்2 : நல்லெண்ணெ எப்படித் தயார் பண்ணுறது?

பார்வை.1: நல்லெண்ணெ வந்து நாங்க சுத்தமான எண்ணெயக் கொண்டாறது (என்னா எண்ணெ) என்னா.. நல்லெண்ணெ...

பபூன் 2 : சுத்தமான நல்லெண்ணெ நீங்க கொண்டாருவீக. அது நல்லெண்ணெ மாதிரித் தெரியலையே?

பார்வை.1: கடலெண்ணெ கொண்டாரதப்பா.

பபூன் 2 : ம்... கடலெண்ணெ கொண்டாந்து என்ன பண்றது?

பார்வை.1: கடலெண்ணெ கொண்டாந்து அதுகூட கருப்பட்டியுஞ் சேத்து ரெண்டுங் காச்சீர்றது.

பபூன் 2 : கருப்பட்டியுங் கடலெண்ணெயும். அட ஒன் வீட்ல மண்ணு விழுக. {சிரிப்பு} அப்ப அதான் நல்லெண்ணெயா?

பார்வை.1: ஆமாம். அதான் நல்லெண்ணெ. சுத்தமான எண்ணெ கெடைக்காது. இப்பக் கலப்படந்தான் இருக்குது. கருப்பட்டியும் கடலெண்ணெயும்.

பபூன் 2 : பரவாயில்லை, கலப்படம். கலப்படம் ... [இசை]

பார்வை.2: ஏய் டான்ஸு காமிக்றது நெசந்தானா? (ஆமாப்பா)

பபூன் 2 : டான்ஸு பாக்க எதாவது குடுங்களேன்.

பார்வை.2: நான் வேணும்னா இருபது பைசா தர்றேன். {சிரிப்பு} (ம். இருபது பைசா வாங்கிட்டு போய் டீ குடிச்சிட்டு வா) {ஏய் 'அஞ்சி காசு' என்று சிரிக்கின்றனர்}

பபூன்2 : சரி... அப்படி உக்காரு.

பபூன் 1 : ஏய்! என்னா... மறைக்குது?

பார்வை2: நீ கலப்படந்தான். நீ பின்னால உக்காரு {சிரிப்பு} (பின்னால உக்காரு) கலந்து கலந்து விக்கிற.. ம் அங்குட்டு ஒரு இருபது... பத்து... இருபது குடுப்பா நன்கொடைக்கு.

பார்வை.3: நான் வேணும்னா பதினஞ்சி பைசா தருவேன்.

பபூன் 2 : நல்லா கொறச்சிப்புட்டான். சரி இப்படி உக்காரு.

பார்வை.2: ஏய் என்னா... மறைக்குது?

பபூன் 2 : ஏய்! நீ பின்னால உக்காரு. (பதினஞ்சி பைசா பின்னால உக்காரு. இருபது பைசா முன்னால வா) {சிரிப்பு} ஏய் பொம்பள டான்ஸு வருதப்பா. ஏய் (ஓடியாங்கப்பா, டேய்) ஏய் தூத்துக்குடி டில்லி முத்தம்மா கரக வெளயாட்டு பதினாறு வயசுப் புள்ள வர்றா...

பார்வை.4: ஏய் நல்லாயிருக்குமா? (ம். ஜோராயிருக்கும்.)

பபூன் 2 : நல்லா சோக்காயிருக்கும்.

பார்வை.4: நான் வேணுமின்னா மூணு பைசா தர்றேன். {சிரிப்பு}

பபூன் 2 : இவன் மூணு பைசாக்காரன். சரி இப்படி உக்காரு. {சிரிப்பு} ஆள் வரட்டும்.

பபூன் 3 : மாப்ள அஞ்சி பைசா {சிரிப்பு}

பபூன் 2 : ஏய் பொம்பள டான்ஸு வருது. கரக வெளயாட்டு ரொம்ப அழகாயிருக்கும்.

பார்வை.5: ஏண்டா, டான்ஸு வர்றது நெசந்தானா? (நெசந்தான்)

பபூன் 2 : டான்ஸு வருது.

பார்வை.5: ஆமா, யாரக் கேட்டு டான்ஸு போடப்போற {சிரிப்பு} யாரக் கேட்டுடா டான்ஸு போடப் போற? {சிரிப்பு} ஏண்டா அயோக்கியப் பயலே! கண்ட பொம்பளைகளைக் கூட்டிட்டு வர்றது, ஊர்க்குள்ள டான்ஸு போடுறது. ஊர்க்குள்ள உள்ள பொம்பளைப் புள்ளைகளைப் பூராக் கெடுக்றது. ஏண்டா படுவா! ஏண்டா

அயோக்கியப் பயலே! காலிப்பயலே! படுவா. கல்லத்தூக்கி மண்டைய ஒடச்சிடுவேன் படுவா. கலாட்டாப் பண்ணுவேன். ஏய் கலாட்டா பண்ணுவேன். (அய்யா, யாரோ தெரியலையே?).

பபூன் 2 : கலாட்ட பண்ணவேண்டாம். அட்வான் ஸெல்லாங் குடுக்கப் போயாச்சி ஆளு. டான்ஸ்க்காரி வந்திருவா. ஒங்ககிட்ட கேக்காம வச்சது எங்கமேலக் குத்தந்தான் (ஏன், இந்த நேரத்ல நீங்க கெடுக்கக் கூடாது) இந்த சமயத்ல கெடுக்காதீங்க. ஆட்களெல்லாங் கூடியிருக்குது. என்ன ... ஒங்க தலையில வச்சித்தான், இந்த டான்ஸு போடணும். (ஒங்க தலம தாங்கிதான் நடக்கட்டும்) தலம தாங்கியா? சொமதாங்கியா? ஒங்களப் படுக்க வைக்கணும். என்ன... இங்க உக்காருங்க. என்ன... டான்ஸு முடிஞ்ச பெறகு நீங்க வீட்டுக்குப் போங்க (ஏதோ ஒங்க கைல *ஏண்டது) ஒங்க கைல ஏண்டது பத்து இருபது...

பார்வை.5: போடக் கூடாதுங்றேன். பத்து இருபது கேக்றியா படுவா. கல்லத்தூக்கி அடிப்பேன். டேய் படுவா, கலாட்டா பண்ணுவேன்! டேய் கலாட்டா பண்ணுவேன்.

பபூன் 2 : கலாட்டா பண்ணாதீங்க. நீங்க காசுங் குடுக்க வேண்டாம். (ஒண்ணுங் குடுக்க வேண்டாம்) ஒண்ணுங் குடுக்க வேண்டாம். (சும்மாவே பாருங்க ஓசிக்கு) சும்மாவே நின்று பாருங்க. கெலாட்டா மட்டும் பண்ணிராதீங்க. (எதும் ஒரு **கச்சடா வராம ஒங்க தலம தாங்கியா இருக்கணும்)

பார்வை.5 : சரி சரி அப்படீன்னா சேர் வேணும் சேர். (சேறு போட்ருக்கு அங்க மொதல்லயே தண்ணி ஊத்தி)

★ ஏண்டது = இயன்றது ★★கச்சடா - தகராறு

பபூன் 2 : இப்பத்தான் வாய்க்கால்ல தண்ணி வந்திருக்கு. இனுமத்தான் வயக்காடு பூராவும் நல்லா உழுதுகிழுது சேறுகீறு நெறைய இருக்கும். வண்டி நெறைய இனுமத்தான் போடுவாங்க {சிரிப்பு} என்ன... காலேல ஆகட்டும். ஒங்களக் கொண்டு போய் அங்கயே முக்கிருவோம். {சிரிப்பு} ஒரு கயறக் கெட்டி இழுத்துக்கிட்டே போவோம். {சிரிப்பு}

பார்வை.5 : பெஞ்சி... எங்க பெஞ்சி?

பபூன் 2 : அய்யய்யோ நான் என்ன பண்ணுவேன். {சிரிப்பு} நீங்க ஆரம்பிக்றதுக்கு முன்னால வந்திருந்தா, ஒங்க மூஞ்சீலத் துப்பச் சொல்லி யிருப்பேன்,, வெத்தல வாங்கிப் போட்டு. இப்ப இந்தச் சமயத்ல பெஞ்சிக்கு எங்க போறது? எச்சி தான் கெடைக்கும். {சிரிப்பு}

பார்வை.5 : சரி நேரமாகுமா? இப்ப வந்திடுவாரா. (இப்ப ஆரம்பிச்சிருவோம்) டயம் வேஸ்டாகப் படாது.

பபூன் 2 : இல்லயில்ல.. இப்ப வந்திரும்.

பார்வை.2 : ஏய் என்ன... மறைக்குதே!

பபூன்2 : நீ இருபது பைசாக்காரன். அப்படி உக்காரு நீ.

பார்வை.3: என்ன மறைக்குது (ம். பதினஞ்சி பைசாக்காரன்)

பார்வை.1: நான் எண்ணெ குடுக்கமாட்டேன்.

பபூன் 2 : நீங்க கடைசிக்குப் போயிருங்க {சிரிப்பு} அப்படிக் கடைசீல உக்காருங்க.

பார்வை.5: என்ன... கடசீல என்னத் தள்ளி வுட்டிட்டியே.

பபூன் 2 : ஒசிதான். (காசு எவ்வளவு குடுத்தய்யா) ஒசில பாக்றவங்க கடசீலதான் இருக்கணும். {சிரிப்பு} காசு குடுத்தவுக முன்னால தான் இருக்கணும். கடசீல உக்காரு. {சிரிப்பு}

பார்வை.5: டேய் நேரமாகுது.

பபூன் 2 : டேய் ஒசி! {சிரிப்பு} ஒழுங்கா உக்கார மாட்ட? {சிரிப்பு} ஒசிலப் பாக்றதுமில்லாம ஒங்களுக்கு வேற.... அதிகாரம் வேறயாக்கும் (ஆமாம்.)

பபூன் 3 : மாப்ள (ஒசில வாரவங்க தான், மொதல்ல அதிகாரம் பண்றாங்க) மாப்ள! அஞ்சி பைசா கடன்.

பபூன் 2 : சும்மாயிருடா மொளு மொளு.

பார்வை1: டேய், என்னடா? நேரமாயிடுச்சி. ஆளுகள்ளாம் கூடிடுச்சி.

பபூன் 2 : இதோ வர்றாப்பா டான்ஸுக்காரி. (இந்தா வந்திட்டா)

பார்வை.5: டேய் என்னடா? நேரமாகுது. ஆரம்பிச்சா என்னடா சீக்கிரம்? (ஒசி போடுற போட்டப் பாருடா) எவ்ளவு நேரம்டா காத்துக்கிட்டு இருக்கிறது?

பபூன் 2 : ஏ! ஒசி. மரியாதயா உக்கார்றயா... படுவா கையக்காலக் கட்டிப் படுவா ஆனமலயில* யிருந்து உருட்டி விட்ரட்டுமா? {சிரிப்பு} அங்க யிருந்து உருண்டு வர்றதுக்குள்ள ஆணிவேரு அக்குவேரு புடுங்கிட்டுப் போயிடும். போய் உக்காரு ஒசி. (மொதல்லயே லொட லொடன்னு அசையுது காலுங் கையும்)

பார்வை.5: (வந்துட்டாப்பா டான்ஸுக்காரி) எங்க எங்க?

பபூன் 2 : ஏய் ஒசி சும்மாயிரு. {சிரிப்பு}

பார்வை.5: எங்க... பாக்கணுமே.. புள்ளயப் பாக்கணுமே. ரொம்ப நல்லாருக்றாளே. சோக்காருக்றாளே. பரவாயில்லையே... ஆளு பரவாயில்லையே... {சிரிப்பு}

★ ஆனைமலை - மதுரை-மேலூர் செல்லும் வழியிலுள்ளது.

பபூன் 2 : ஏதாவது பத்து இருபது.

பார்வை.5: அத மட்டும் கேட்றாத. {சிரிப்பு} ஓசியானா நல்லாப் பாப்பேன். (அட, உள்ள டிக்கெட்டா யிலும் குடுத்துப்பாரு) மஹூம். ஒரு பைசா குடுக்கமாட்டேன். ஆ! புள்ள நல்லாயிருக்காளே (பதினைஞ்சி காசு குடுத்திட்டுப் பாக்க மாட்டியா?) அடேடே! ரொம்ப அழகாயி ருக்குதே.

பபூன் 2 : அட ஓசி! [அடிக்கிறான்] {சிரிப்பு}

பபூன் 3 : மாப்ள அஞ்சி பைசா.

பபூன் 2 : அவ முன்னால கேக்காதடா. {சிரிப்பு} [அடிக்கிறான்]எங்க, போடுங்க பாப்போம்... டான்ஸு போடு போடு...

கன்னங் கருத்த கிளி
கட்டழகன் தொட்டகிளி
அன்னநடை போட்டாளடி - கண்ணம்மா
அன்னநடை போட்டாளடி*

பபூன் 2 : நாசமாப் போன பயலுக. டான்ஸு போடவு டுறானுகளா (கழுத குதிக்ற மாதிரி எல்லாருஞ் சேந்து குதிக்றானுங்க) ஏய் ஒரே மட்டா எல்லாப் பயல்களும் சேர்ந்து கழுத குதிச்ச மாதிரி குதிச்சி வெரட்டிப் போட்டாங்களே. பாவிப் பயங்க. ஏண்டா படுவா. {சிரிப்பு} ரசிக்ற நேரத்ல பளிச்சினு அடிச்சி வெரட்டிப் போட்டாங்கள. {சிரிப்பு}

பபூன் 3 : மாப்ள அஞ்சி பைசா {சிரிப்பு}

பபூன் 2 : ஏய்! மொளு மொளு. இந்தப் பயலும் ஊட ஊட வர்றானே. {மொளு மொளு}

டேய் எருமப்பாட்டுப் பயல [அடிக்கிறான்] ....[இசை]

★பதிவுநாடா மாற்றத்தினால் ஏற்படும் சிலநிமிட இடைவெளி

விசுவா. : அப்பா என்னுடைய யாகங்கள் முடிந்தது. ஆனால் யாகங்கள் முடிந்ததும், ஆனால் தாடகையையும் நாங்கள் கொன்று விட்டோம்.

இராமர் : சுவாமி! ஏழு நாட்கள் சரியாகவே முடியப் போகிறது. பிறப்படுங்கள். ஆனால் என்னுடைய அப்பா அன்னவர்கள்.... தந்தையன்னவர்கள், தசரதர் நம்மைக் காணாமல் அழுது துயர மடைந்து வருவார்கள்.

விசுவா. : அடாடா! அயோத்திமாநகரம் போகக் கூடிய பயணத்தைக் கொஞ்சம் நிறுத்த வேண்டும்.

இராமர் : காரணம்?

விசுவா. : எதற்காகத் தெரியுமோ. ஆறு... இதற்கு அடுத்த பட்டணம் மிதிலாபுரி பட்டணத்தில், ஒரு சீதை என்று சொல்லக்கூடிய பெண்ணானவள், மகாரா ஜாவுடைய பார்வையில் வளர்ந்துக் கொண்டு வருகிறாள். பூமியில் பிறந்தவள். அவளுடனே சேர்ந்த, ஆனால் கூடப் பெறந்த ஒரு வில், அந்த வில்லை வளைத்தவர்களுக்கு சீதையைக் கல்யாணம் செய்து கொடுப்பதாக ஜனகரன் உலகம் பூராகவே நோட்டீசாகக் கொடுத்திருக் கிறான். அந்த வில் வேடிக்கை பார்த்து, ஆனால் அயோத்தி மாநகரம் போய் விடலாம், ராமா.

இராமர் : சந்தோஷம், மகா முனிவர்களே! பிறப்படுங்கள், மிதிலைமாநகரம். ஆனால் ஜனகர் மகாராஜாவு டைய, அரமணைக்குச் செல்லலாம். ஆனால்... அந்த வில் வேடிக்கை பார்த்து வருவோம்.

விசுவா. : சந்தோஷம். பிறப்படுங்கோ, பிறப்படுங்கோ ...[இசை]

பபூன் 1 : கூடியிருக்கும் சபையோர்களும், பெரியோர் களும், தாய்மார்களும்... ஆனால் தாடகை

சண்டை முடிந்து விஸ்வாமித்ரர், ராமர், லெச்மணார், இந்த மூன்று பேர்களும் - மிதிலாபுரி பட்டணம் வில் வேடிக்கை பார்க்க வேணுமென்றே போகிறார்கள். நாளைய தினத்தில் கதையின் வரலாறுகள் ராமரானவர் வில் வளைப்பது, சீதையைக் கல்யாணம் செய்வது, சீதையைக் கல்யாண்ம் செய்து அயோத்தி வரும் வேளையில் பரசுராமன் வந்து சீதாலக்ஷ்மிக்காக ராமருடனே எதுத்து நின்று சண்டை செய்வது.... ஆனால் ராமரானவர் அந்த வில்லை வாங்கி, மலயா என்ற பூமிக்குக் கிளம்பி வருவதும், ஆனால் கைகேயி ஆனவள் ராமர், லெச்சுமணன், சீதை மூன்று பேர்களையும் காட்டு வழியாகவே.... ஆனால் தவறிவிடுவது... நாளைய தினத்தில் கதைகள். நாளையத் தினத்தில் காமிக் கொறவன் கொறத்தி காமிக்கள். இன்று வந்த பெரியோர்களும், தாய்மார்களும் நாளைய தினத்தில் சீத்தாக் கல்யாணங்கள், பரசுராமருடைய ஒரு சண்டை. இன்று வந்தவர்கள் நாளை இரவு வந்து எங்களுக்கு ஆதரவு நீங்கள் குடுப்பீர்களென்று எல்லாம் தாழ்ந்த வணக்கமாய்க் கேட்டுக்கொண்டேன்... [இசை]

அதனால் இதனுடன் கதைகளை நிறுத்துகிறோம். சகலமான பிரச்னை, நாளைய தினத்தில் சீத்தாக் கல்யாணங்கள், பரசுராமனுடைய ஒரு சண்டை, ராமர் வனவாசம் நாளைக்குப் போவது. ஆனால் நாளைய தினத்தில் இன்று வந்தவர்கள் நாளைய தினத்தில் வந்து சேருவதற்கு அனைவர்களுக்கும் வணக்கமாய்க் கேட்டுக் கொண்டேன்.

பாடல் : ரகுபதி ராகவ ராஜாராம்
பதீத்த பாவன சீத்தாராம் (ரகுபதி)



இராமாயணம்

சீதா கல்யாணம்

பதிவு
செய்த : 11.06.1974
நாள்

இடம்: அரும்பனூர் புதூர்
மதுரை.

நிகழ்த்துநர் : பாபுராவ் குழுவினர்.

*பபூன் 1: ம்... கதையின் வரலாறுகள்... ஆனால்... சீத்தாக் கல்யாணங்கள். சீதையுடன் பிறந்த வில்லை வளைத்து ஸ்ரீராமரானவர் திருமணம் முடிப்பதும், பரசுராமனுடைய சண்டைகளும், கைகேசியான வள் ஸ்ரீராமரை பட்டத்திற்கழைத்து பதினான்கு வருஷம் காட்டு வழியாக விரட்டி விடுவதும்.... ஆனால்... இந்த விதமான கதை ஆரம்பங்கள். வந்திருக்கக்கூடியவர்கள் சத்தமில்லாமல், கதை நடத்தும்போது சத்தமில்லாமல் அமதியுடனே யிருந்து கதயின் வரலாறுகளைக் கேட்டுச் செல்வதற்கு அனைவர்களையும் தாழ்மையுடன் கேட்டுக் கொண்டேன், பபூன் கோமாளி.

பபூன் 2 : அடிச் சக்கேய்... {சிரிப்பு} (வந்துட்டாண்டா சக்கேய்)

பபூன் 1 : என்னா... மொட்டப்பயலுக்குப் பெறந்த பயலே! [அடிக்கிறான்]

பபூன் 2 : ஏய்! [அடிக்கிறான்]ஏய் மக்காக் கோழி! படுவா, நா இருக்கிற சோக்கென்ன.. ரைட்டென்ன.. ஒழுங்கென்ன.. மருங்கென்ன.. குறுத்தென்ன சைசென்ன? (பனமரத்ல பாதி குறுத்தென்ன?)

பபூன் 1 : அது எங்க? [அடிக்கிறான்]

பபூன் 2 : அது இங்கதான் [அடிக்கிறான்]

பபூன் 1 : எப்ப? [அடிக்கிறான்]

★ நான் வரக் கொஞ்சம் தாமதமாகவும் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் முடிந்து நகைச்சுவைப் பகுதி நடந்து கொண்டிருந்தது. நான் வந்தவுடன் கதையை ஆரம்பித்தார்.

பபூன் 2 : இப்பத்தான். [அடிக்கிறான்] (ஏய்! அடிச்சிக்கிறா தீங்கடா. டேய்) ஏ! மக்காக் கோழி மேல கோழி வைக்க படுவா... சப்புச் சப்புன்னு அடிக்கெ, படுவா. {சிரிப்பு} (அவனக் கொஞ்சம்போல உப்புப் போட்டு அடிக்காத).

பபூன் 1 : ம். சப்புச் சப்புன்னு அடிக்கிறாக. [அடிக்கிறான்]

பபூன் 2 : ஏய் [அடிக்கிறான்] ஓயாம அடிச்சிட்ருக்காம் பாரு படுவா. பெறவு டுப்பாக்கீல சுட்டுப் புடுவேன். எடுரா டுப்பாக்கிய .... டுர்ர்ர்... {சிரிப்பு} (எகிறிப்போய் விழுந்தாண்டா, அரமணைக்கி)

பபூன் 2 : மாப்ளே {அஞ்சிகாசு என்று மற்றவர்கள் கத்துகின்றனர்.} (கத்தாதீங்க)

பபூன் 2 : ஏலே .... மொளு மொளு! ம். மொளு மொளு!

பபூன் 3 : ஏலே, அஞ்சி பைசா குடுக்கப்பிடாதா?

பபூன் 2 : பார்ரா. அஞ்சி பைசாவ விடமாட்டேங்றான், மொளுமொளு. (டேய்! அஞ்சி பைசா குடுத்தா என்ன?) இருந்தாத்தான குடுப்பேன்? (இல்லாத வன் ஏன் வாங்ன?) இருக்றவன் ஏன் குடுக்றான்? (இல்லாதவன் கேட்டா இருக்றவன் குடுப் பான்லடா) எடுடா.... டுப்பாக்கிய .... சூத்தங்கிய .... புர்ர்ர்.... {சிரிப்பு} (கண்ட பக்கம்லாம் பூத்துபூத்னு விடுறான்டா)

பபூன் 1 : டேய்! டப்பு டப்புன்னு அடிக்காதேடா படுவா. (ம். கொஞ்சம் போல உப்பப் போட்டு அடி) {சிரிப்பு}

பபூன் 2 : ஏல மக்காக்கோழி! சப்பு சப்புன்னு அடிக்ற.... சப்புச் சப்புன்னு! கோழிமேல கோழி வைக்கப் படுவா. {சிரிப்பு} எடுரா டுப்பாக்கிய.... டுர்ர்ர்.... {சிரிப்பு}

பபூன் 1 : டேய் தம்பி! இவ்வளவு நேரமா எங்கடா போயிருந்தே?

பபூன் 2 : நான் வந்து.... இந்த கிராமத்தில் வாழ்ந்து வளமையாக இருக்கக்கூடிய, சகலமான பிரபுகள் எல்லோரும்... அனைவரும் வந்திருக்கிறார்களா? (வந்திருக்காங்க)... இளவட்ட வாலிபர்கள்? (வந்திருக்காங்க ரொம்ப)... தாய்மார்கள் அவுககிட்டயெல்லாம் கண்டு பேசிட்டு இப்பத்தான் வந்திருக்கேன். இனி நம்ம... நம்ம... பஞ்சாயத்துதுப் போர்டு பிரசிடெண்டு தலைவர் அன்னவர்கள் வந்திருக்கிறார்களா? (வந்திருக் காங்க) எங்கே? எங்கே? அவருடனே சேர்ந்த மெம்பர்களும், ஆனால்... காத்திருக்கக் கூடிய பெரியோர்களும், அவுங்க கிட்டயெல்லாம் கண்டுபேசிட்டு இப்பத்தான் வந்தேன்.

பபூன் 1 : அது எப்ப அது? [அடிக்கிறான்]

பபூன் 2 : அது இப்பபத்தான். [அடிக்கிறான்] {சிரிப்பு}

பபூன் 1 : என்னிக்கி? [அடிக்கிறான்]

பபூன் 2 : அது இன்னிக்கித்தான் [அடிக்கிறான்] (ஏய் என்னா.... அடிச்சிக்கிட்டே.... யிருக்றே... டேய்) {சிரிப்பு} ஏ! மக்காக்கோழி டப்பு டப்புன்னு அடிக்கான் பாரு. (ம். கொஞ்சம் போல உப்பப் போட்டு அடி)

பபூன் 3 : மாப்ள அஞ்சி பைசா...

பபூன் 2 : ஏ மொளு மொளு! {சிரிப்பு} (ஆமா. மொளு மொளு) {ஏமாப்ள அஞ்சி பைசா என்று சிறுவர்கள் சப்தமிடுகின்றனர்}

பபூன் 1 : டேய்! கதய ஆரம்பிக்கலாம்.

பபூன் 2 : ம் கதய ஆரவய்யி. (டேய் கதய ஆரம்பிய்யி)

பபூன் 1 : ஆரம்பிக்றதா? ஆரவைக்றதா? (ஏய் பின்னால சாயாதப்பா. புள்ள படுத்திருக்குல்ல)*

பபூன் 2 : கதய ஆரவைய்யிடா? (ஏல, கதய ஆரம்பிய்யி)

பபூன் 1 : கதய ஆரம்பிப்பமா? ஆனால் கத ஆரம்பிக்கும் போது... கதை ஆரம்பிக்கச் செல்கிறோம். ஆனால் சத்தமில்லாமலிருந்தால் கதையானது புரியும். ஊட ஊட சத்தம் போட்டால் கத புரியாது. ஒரு ஆள் சொல்லக் கூடியது அத்தன ஆளும் கேட்க வேண்டும்... என்ன... ஆனால் சத்தமில்லாமல் அமதியுடனேயிருந்து கத கேட்பதற்கு, ஆனால் இவர்களுக்குத் தாழ்ந்த வணக்கமாய்க் கேட்டுக் கொண்டேன் கோமாளி... பபூன்.

பபூன் 2 : அடேயப்பா. இது சொல்றதுக்கு இவ்ளவு நேரமா?

பபூன் 1 : ஏல [அடிக்கிறான்]

பபூன் 2 : ஏல அடிக்காதடா! மக்காக் கோழிப் பயலே [அடிக்கிறான்]

பாடல் : **குலரபிசேகரா,**
கோதண்டபாணி!
கோதண்டபாணி...
ராஜசிகாமணி!
குலரபி சேகரா,
கோதண்டபாணி!

இராமர் : வருவாய்த் தம்பி லெச்மணா! (அண்ணா)

இலக்கு. : அண்ணா!

இராமர் : நம்முடைய குருவாகிய வஷிஷ்ட முனிவருடைய பாடசாலையில், நாங்கள் பாடங்கள் படித்திருக்க

★ பக்கத்தில் படுக்க வைத்திருக்கும் தன் குழந்தையின் மீது பார்வையாளர் ஒருவர் சாய்வதைக் குறித்துப் பேசுகிறார்.

வேண்டும்போது, அந்த விஸ்வாமித்ரர் எங்கள் இருபேர்களையும் அழைத்து வந்து... அங்கெ தாடகையைக் கொல்வதற்காகவே எங்களை அழைத்து வந்தார் விசுவாமித்ரர். அவருடைய பின்புறமாக வந்து தாடகையை நாங்கள் ஜெயித்து அவருடையை யாகத்தை நாங்கள் முடித்து வந்தோம்.

இலக்கு. : உண்மைதான் அண்ணா.

இராமர் : ஆனால் மிதிலாபுரிப் பட்டணம் போக வேணு மென்று தெரியப்படுத்தி வந்தார், விசுவாமித்திரர் அன்னவர்கள். அதைச் சீக்கிரமாக அழைத்ததாக, அந்த விசுவாமித்திரரை அழைத்து வா.

இலக்கு. : அப்படியே இதோ... [இசை]

மகாமுனிவர்களே!

விசுவா. : ஏவ்வ் (கருவாட்டுக் கொளம்பு ஏப்பம்) மங்கள முண்டாகட்டும். மங்கள முண்டாகட்டும். அப்பா ராமச்சந்திரா! (சுந்தரா! ஏ! சுந்தரா)

இராமர் : மகா முனிவர்களே! தங்களுடைய வார்த்தையை நான் தவறாமல், தாங்களுடைய பின்புறமாக வந்து, தாடகையை நாங்கள் ஜெயித்து, உங்களு டைய யாகத்தை நாங்கள் நிறைவேத்தித் தந்தோம். ஆனால், அயோத்திமா நகரம் போவதாக நாங்கள் தெரியப்படுத்தி வந்தோம். புறப்படுங்கள்.... அயோத்தி மாநகரம் போகவேண்டும்.

விசுவா. : அப்பா... ராமச்சந்திரா! (ஆமா, சுந்தரா) அயோத்தி மாநகரங்கள் போகக் கூடிய பயணத்தைக் கொஞ்சம் நிறுத்த வேண்டும். (ஏன்?) ஆனால் மிதிலாபுரி பட்டிணத்தில் வில் வேடிக்கையானது, ஆனால், செய்து வருகிறார் கள். அந்த வில் வேடிக்கையை யார் வளைத்து

வருகிறார்களென்று நாங்கள் கேட்டு... பார்த்து வரலாம். எல்லோரும் பிறப்படுங்கள். மிதிலாபுரி நகரம் போகலாம்.

இராமர் : ரொம்ப சந்தோஷம், முனிவர்களே!

விசுவா. : பிறப்படுங்கள், பிறப்படுங்கள்.

பாடல் : **நடந்தாரே சுவாமி - மிதிலாபுரி நகர்**
தொடர்ந்தாரே சுவாமி!

இராமர் : முனிவர்களே!

விசுவா. : ஏவ்வ்வ்... அப்பா ராமச்சந்திரா! ராமா, ஆனால் இந்தக் கன்னியானவள் யார்?

இராமர் : சுவாமி! நான் வரவேண்டிய ஒரு பாதையில் பிரும்மாண்டமான ஒரு கருங்கல்லானது இருந்தது. அந்தக் கல்லை நான் மிதித்தேன். ஆனால் பெண்ணாக வந்து விட்டது. இது.... ஆனால் இந்த வரலாறுகள் எனக்கு ஒன்றுமே தெரிய வரவில்லையே சுவாமி!

விசுவா. : அப்பா ராமச்சந்திரா! இந்தப் பெண் யார் எவரென்று உனக்குத் தெரிய வரவில்லை. இந்த வரலாறுகளைச் சொல்லுகிறேன். ஆனால் *சித்த கவனமாகவே கேட்க வேண்டும்.

இராமர் : ரொம்ப சந்தோஷம் பிரபு.

விசுவா. : இந்தப் பெண்ணானவள், அகலிகை என்று சொல்லக் கூடியவள். இவளுடைய, ஆனால் இந்த அகலிகையுடைய, ஆனால் கணவன் பேர் கௌதம மகாரிஷியானவன். தெய்வேந்திரனுக்கும், ஆனால் கௌதமனுக்கும், ஆனால் ஏகப் போட்டியாக இருந்ததினால், கௌதம மகாரிஷியானவர், ஆனால் கருங்கல்லாகவே சாபத்தைக் கொடுத்துவிட்டார்.

★ சித்த - சிறிது

இராமர் : சுவாமி! ஆனால் தெய்வேந்திரனுக்கும் கௌதம மகாரிஷிக்கும் என்ன போட்டிகள் நடந்தது? எதனால் கருங்கல்லாகவே சாபங் குடுத்த காரண மென்ன? அது வரலாறுகளைச் சொல்லுங்கள்.

விசுவா. : சொல்லி வருகிறேன் கேள். ஆனால் தெய்வ லோகத்தில் அமிர்தம் கடைந்து வந்தார்கள். அதில் இந்தப் பெண்ணானவள் பிறந்து வந்தாள். பிறந்து வந்தவுடனே, ஆனால் முப்பத்து முக்கோடி முனிவர்கள் நாற்பத்தி எண்ணாயிரங் கோடி ரிஷிமார்கள் அத்தனைப் பேரும் இருந்தார்கள். ஆனால் தெய்வேந்திரன், இந்தப் பெண்... இந்த அகலிகைப் பெண் எனக்கு வேண்டும் அப்படியென்றே சொல்லி வந்தான். ஆனால் கௌதம மகாரிஷியானவர், இந்தப் பெண் எனக்கு வேண்டுமென்றே சொல்லி வந்தார். அப்போ முப்பத்து முக்கோடி முனிவர்க ளெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து 'நீங்கள் இருபேர்களும் இந்தப் பெண்ணுக்காக அடித்துக் கொண்டு இருக்க வேண்டாம். நாங்கள் முனிவர் கள் என்று சொல்லக்கூடிய... ஒரு பந்தயத்தை நீங்கள் ஜெயிக்க வேண்டும். அவர்களுக்குத் தான் இந்தப் பெண்ணானது கல்யாணம் செய்து கொடுக்க முடியும்' அப்படீன்னே சொல்லி வந்தார்கள் முனிவர்கள். எப்படிப் பந்தயத்தைப் போட்டு வந்தார்கள்? இந்த ஏழு கடலுக்குள்ளாக ஏழு நாளு வரயிலும் எந்திரிக்காமல், ஆனால் கடலுக்குள்ளாகவே இருக்க வேண்டும். அப் போதுதான் இந்த அகலிகைப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுப்போம் அப்படி யென்றே சொல்லி வந்தார்கள். ஆனால் தெய்வேந்திரன் உடனே எந்திரித்து, ஏழுநாள் வரயிலும் கடல்க்குள்ளாக முங்கியிருந்து, ஆனால் இந்தப் பெண்ணை நான் கல்யாணம்

செய்து விடுகிறேன் என்று எந்திரித்துப் பிறப் பட்டான்... தெய்வேந்திரன், ஏழு கடலுக் குள்ளாகப் போய் இருந்துவிட்டான், தண்ணீர்க் குள்ளாக! கௌதமகாரிஷியானவர் இந்த சபதத்தை நான் நிறைவேற்றி வருகிறேன் அப்படி யென்று கௌதமரும் ஏழு கடல் தண்ணிக் குள்ளாகப் போய், ஆனால் முங்கிக் கொண்டார். ஆனால் இந்த தெய்வேந்திரன், ஏழுநாள் மூன்று பொழுது வரயிலும் இருந்தான். ஆனால் இவனால் முடியவில்லை. மூச்சுத் தாங்க முடியவில்லை தெய்வேந்திரனுக்கு. இந்தப் பெண் எனக்கு வேண்டாமென்று ஓட்டமாக ஓடி வந்துவிட்டான். கௌதம மகாரிஷியானவர் ஏழு நாள் வரயிலும் இருந்து, ஆனால் அவருடைய சபர்தத்தை நிறைவேற்றி இந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து, தன்னுடைய பர்ணக சாலைக்கு அழைத்து வந்தார், கௌதமகாரிஷி யானவர். அப்போ தெய்வேந்திரன் மறுநாள் ஒரு பொழுதாவது இந்த அகலிகையுடைய கற்பை அழிக்க வேணுமென்று சபர்தத்தைக் கூறிச் சென்றான். ஆனால் இவர்கள் பர்ணகசாலையில் இருக்கும்போது கௌதம மகாரிஷியானவர் விடியக்காலையில் எந்திரித்து பூசச் சட்டிகள் எடுத்து, கங்கா தேவியிடம் பூசைக்காகப் போய் விடுவார். இந்த விதமாக அநேக நாளாக இருக்கும் காலங்களில், இந்தத் தெய்வேந்திரன், ஆனால் சேவலைப் போல வேஷங்கள் எடுத்து, இவர்கள் இருக்க வேண்டிய பர்ணகசாலை உயர உக் காந்து சேவலைப் போலக் கூவினான். ஆனால் கௌதம மகாரிஷியானவர் விடிந்து விட்டது என்று பூசப் பெட்டியை எடுத்துக்கொண்டு, ஆனால் கங்கா தேவிக்குச் சென்றுவிட்டார், கௌதமகாரிஷி. இன்று சேவலாகவே வேஷத்தை எடுத்தத் தெய்வேந்திரன் திடீரென்று கீழ்குதித்து

கௌதமகாரிஷியைப் போல் வேஷத்தைப் போட்டுக் கதவுகளைத் தட்டினான். எந்த சமயம்? நடுக் குளிர் யாமத்தில் சென்று, ஆனால் வேஷங்களைப் போட்டு இவளைக் கற்பழித்து விட்டான், ஆனால் தெய்வேந்திரன். பூசைக்குப் போன, ஆனால் கௌதமகாரிஷியானவர், 'கெங்கா தேவி படுத்து நித்திரை செய்கிறாள், ஆனால் ஏதோ மோசமாகி விட்டதெ'ன்று மறுபடியும் திரும்பி வந்து கதவுகைளத் தட்டி வந்தார்... கௌதமகாரிஷியானவர். உடனே தெய்வேந்திரன் அடடா பூசைக்குப் போனவர் மறுபடியும் வந்து விட்டாரேயென்று, கண்டு விட்டால் சாபத்தைக் கொடுத்து விடுவாரே யென்று, கரும்பூனையைப் போல வேஷத்தை யெடுத்து அவருடைய பெற வாசல்* வழியாக விழுந்து ஓடினான் தெய்வேந்திரன். இதைக் கௌதமகாரிஷியானவர் ஞான திஷ்டியில் பாத்து, 'ஆ! இந்த தெய்வேந்திரன் என்னுடைய மனைவியைக் கற்பை அழித்துவிட்டான்' என்று, ஆனால் உடனே அந்த தெய்வேந்திரன்... கௌதமகாரிஷியானவர், தெய்வேந்திரனைப் பிடித்து ஆயிரம் கண்ணாகவே சாபத்தைக் கொடுத்து விட்டார். இந்த அகலிகைப் பெண்ணைக் கருங்கல்லாகவே சாபத்தைக் கொடுத்து விட்டார். ஒன்னுடைய கைப்படவே இந்த சாபங்கள் விமோசனமாகி விட்டது, ராமா. இவளுக்கு நான் மோட்சங்கள் கொடுத்து..ஆனால் மறுபடியும் கௌத மகாரிஷியுடைய பர்ணகசாலைக்கு அனுப்பி வா.

இராமர் : ரொம்ப சந்தோஷம். அகலிகைப் பெண்ணே!

அகலிகை : சுவாமி!

★பெற வாசல் = புறவாசல் (பின்வாசல்)

இராமர் : நீ செய்துவந்த அக்குறுவங்கள் இனிமேல் செய்ய வேண்டாம். ஓடிப்போ தெய்வலோகம். ஆனால் சென்று, கணவனுடைய வார்த்தை நீங்கள் கேட்டு, சுகமாக நீங்கள் இருக்க வேண்டும்.

அகலிகை : ரொம்ப சந்தோஷம்.... [இசை]

பாடல் : **மாதிவள் யார் சொல்ல - மாதவமே!**
தேவி யிவள் ராமா - கௌதமர்
மாது இவள் ராமா!
ஆதியில் சாபத்தில் முழுகி
பாபத்தில் விடுதலை கொண்டவள்
தேவி யிவள் ராமா!

பாவையாட்டி: ஆனால் மிதிலாபுரிப் பட்டணத்தை அரசு புரிய வேண்டிய ஜனக மகாராஜாவும் அவருடைய மந்திரியாகிய நீலாவி மந்திரி* இங்க வந்திருக் கிறார்கள்... சிவாவனம்.

ஜனகர் : நீலாவி மந்திரி!

நீலாவி : மகாராஜா!

ஜனகர் : ஆனால் இதுநாள்வரை, நாங்கள் அரசு புரிந்து கொண்டு வருவதனால், கோயிலில் வளர்ந்த சீதாலட்சுமியை நாங்கள் வளர்த்து, நாங்கள் வாலிபம் செய்து வந்தோம். சீதையுடனே பிறந்த வில் அறுபதிநாலாயிரம் கிங்கிலியர்கள் சுமக்க முடியாததாகவே போய்விட்டது. உலகத்தில் இந்த வில்லை வளைத்து வரக்கூடியவர்கள், ஆனால் ஜானகியைத் திருமணம் முடித்து விடுவதாக, நான் உலகம் பூராக நான் பிரபல்யமாக நான் தெரியப்படுத்தி வந்தேன். வில்லை ஒடித்துவர* (ஏ! சத்தம் போடாதீங்க) ஒருவரும்... இந்த வில்லைப் பார்த்தவர்கள், பயந்து பயந்து

★ 'அட, சத்தம் போடாத!' என்கிறாள் பாபுராவ் மனைவி காளியம்மாள்

பயந்து பயந்து விழுந்து அவர்கள் இருக்க வேண்டிய ஒரு நாட்டுக்கே பிறப்படுகிறார்கள்.

நீலாவி : சுவாமி...! மகாராஜா! இதப்பத்தி நீங்கள் கலங்க வேண்டாம். இந்த வில்லை வளைக்கக்கூடிய வீரர்கள் உலகத்தில் இருக்கத்தான் செய்வார்கள். இதப்பத்தி நீங்கள் கலங்க வேண்டாம்.

ஜனகர் : ஆனால், இன்னொரு யோசனை நீலாவி மந்திரி.

நீலாவி : மகாராஜா!

ஜனகர் : அம்பத்தாறு தேசத்தரசர்களும் எதற்காக இங்கு இருக்க வேண்டும்? வில் வேடிக்கை பார்க்க வந்தார்களா? ஆனால் வில்லை வளைத்துச் சீதை யைக் கல்யாணம் செய்வதற்காக வந்தார்களா? அந்த வரலாறுகளை நீ கேட்டு வரவேண்டும்.

நீலாவி : கேட்டு வருகிறேன் மகாராஜா... [இசை] காவலா! நீ சென்று, அம்பத்தாறு தேசத்து அரசர்கள் பூராவாகவே கூட்டங் கூட்டமாக இருக்கிறார்கள். ஆனால் வில் வளைக்க முடியுமா? இல்லை 'வில் வேடிக்கை பார்க்க வந்தீர்களா? வில்லை வளைத்துக் கல்யாணம் - சீதாலெட்சுமியைக் கல்யாணம் - செய்வதற்காக வந்தீர்களா' என்று அந்த வரலாறுகளை நீங்கள் கேட்டு வந்து பதில் சொல்ல வேண்டும்.

பபூன் 1 (காவலாள்) : நான் கேட்டு வந்திட்றேன். நீங்க பயப்படாதீங்க மகாராஜா. நீங்க போங்க... [இசை]

பபூன் 1 : ஏய் அம்பத்தாறு தேசத்து அரசர்களே! ஆனால், இந்த வில் வேடிக்கை பார்க்க வந்தீர்களா? இல்லை வில்லை வளைத்துக் கல்யாணம் - சீதாலெச்மியைக் கல்யாணம் செய்வதற்காக வந்தீர்களா? வெட்டிச் சாப்பாடு எதுக்குச் சாப்பிட்டுக்கிட்டே இருக்றீங்க? {சிரிப்பு} வில்ல

வளைக்கனும். சீதையைக் கல்யாணம் செய்யணும். இல்ல, நீங்க இருக்கிற எடத்துக்கு விழுந்து ஓடிப் போகணும். சும்மா நல்லாப் பொங்கிப் போடுறாகன்னு தின்னுகிட்டே இங்க படுக்கலாம்னு பாக்றீகளா? ஓ! அரசர்களே!

முதல் அரசன் : ஏய்! நான் வில் வளைக்கலாமென்றுதான் வந்தேன். வந்த இடத்தில் உடம்புக்குக் கொஞ்சம் சௌகரியமில்லை.

பபூன் 1 : வந்த எடத்ல உடம்புக்கு சௌரியமில்லையா? ஒடம்புக்கா? உடும்புக்கா? {சிரிப்பு} (ரெண்டும் ஒண்ணுதான்) ஆனால் நீங்கள் எந்த தேசமய்யா?

மு. அரசன் : நானிருப்பது அவனாதேசம்.

பபூன் 1 : ஏ அப்பா! அவனாதேசம். அவனா தேசத்ல யிருந்து வந்திருக்கீங்க. வில்ல வளைக்க வந்தீங்களா? வேடிக்கை பாக்க வந்தீங்களா?

மு. அரசன் : வில்லை வளைத்து, சீதையைக் கல்யாணம் செய்ய வேணுமென்றுதான் வந்தேன். வந்த இடங்களில் சாப்பாடு சௌரியம் ஒடம்புக்குச் சேரலை.

பபூன் 1 : எப்படி... ஒங்க தேசத்ல சாப்பாடு எப்படி?

மு. அரசன் : ஊ எங்க தேசத்ல, அவனா தேசத்ல வந்து*... ஆனால் அவனா தேசத்துச் சாப்பாடுகள் இந்த கோதம்பை மாவு இருக்கிறதல்லவா...

பபூன் 1 : ஆமா, கோதம்ப மாவு இருக்குது.

மு. அரசன் : அதைக் கொண்டுவந்து, நன்றாகவே, ஆனால் ரொட்டி போலவே சேர்த்து, ஒரு வண்டி பைதாவ*ப் போல ஒரு ரொட்டி சேக்கிறது.

★ 'ஏய் சத்தம் போடாதே' என்று சப்தமிடுகிறார் தனபால்ராவ். ஒரு குழந்தை அழுகிறது. 'ஒன்றமொழச் சங்கு ஊதுது' என்கிறார் தனபால்ராவ்.

★ பைதா = சக்கரம்

பபூன் 1 : வண்டி பைதாவப் போல ஒரு ரொட்டி சேக்கிறது. அவ்ளவு அகலத்ல, அவ்ளவு கனத்ல.

மு. அரசன் : ஒரு மனுஷன் பதினாறு ரொட்டி சாப்பிடணும். (ஆத்தாடியோ! ஒன் வீட்ல நடுவீடு ஒட்டையாப் போகும்) {சிரிப்பு}

பபூன் 1 : ஒரு மனுஷன் பதினாறு ரொட்டி சாப்பிட்டா எவ்ளோ வீரம் வரும்?

மு. அரசன் : ஆனால் பதினாறு ரொட்டி சாப்பிட்டால் ஒரு மனுஷனுக்கு ஒரு யானைக்கிருக்கிற வீரம் ஒரு மனுஷனுக்கு ஏற்படும்.

பபூன் 1 : ஒரு யானைக்கிருக்கிற பெலம் ஒரு மனுஷனுக்கு ஏற்படும். ஆனால் இங்க வந்தவொடன ஏன் ஒங்களுக்கு ஒடம்புக்கு சௌரியமில்ல?

மு. அரசன் : மௌகுத் தண்ணி ரசம், அரிசிப் பருக்கை சாப்பிட்டவொடனே ஒடம்புக்குக் கொஞ்சம் சௌரியமில்ல. இன்னும் ஒரு மாதம் போகட்டும். ஆனால் ஒடம்பை நல்லா தயார் செய்து அந்த வில்லை நான் படக்குன்னு ஒடித்து, சீதையைக் கல்யாணம் முடித்திடுறேன்.

பபூன் 1 : இவ்ளவுதானா? அப்ப நீங்க போய்ட்டு வாங்க.

மு. அரசன் : ஏய்! நான் வர்ற வரையிலும் ஒருத்தரும் தொடக்கூடாது.

பபூன் 1 : ஒருத்தரும் தொடாம நான் பாத்துக்கிடுறேன். நீங்க போய்ட்டு வாங்க.

மு. அரசன் : நான்... என்னையறியாமல் வில்லை ஒருத்தரும் வளைக்கவும் கூடாது.

பபூன் 1 : போய்யா. இவரு பேச்சக் கேட்டு ஒருத்தரும் வரக்கூடாதாம்... ஏய்! ஒங்களுக்கு எந்த

ஊருய்யா? வில் வேடிக்கை பாக்க வந்தீர்களா? ஆனால் வில்லை வளைக்கலாமுன்னு வந்தீர்களா?

இரண்டாம் அரசன் : அப்பா! வில்லை வளைக்கலாம் என்று நினைத்து வந்து, வந்த இடத்ல ஒடம்புக்குச் சௌரியம் இல்லாம போயிருச்சி. (எல்லாத்துக்கும் அப்படித்தான் வருது, டேய்!)

பபூன் 1 : ஒங்களுக்கு எந்த தேசம்?

இ. அரசன் : நானிருப்பது ஒத்த ராஜ்யம்.

பபூன் 1 : ஒத்த ராஜ்யம். அங்க சாப்பாடு எப்படி? இங்க வந்தவொடன ஒங்களுக்கு ஏன் ஒடம்புக்குச் சரியில்லாமப் போச்சி. {சிரிப்பு}

இ. அரசன் : ஒத்த ராஜ்யத்தில் வந்து, இந்த கேப்பை மாவுகள் இருக்கிறதல்லவா, ஆனால் அந்த மாவுகளைக் கொண்டுவந்து, ஆனால் நன்றாகக் கூழாகக் காய்ச்சி, ஆனால் ஒரு மனிதன் ஆறுபடி பக்கா...

பபூன் 1 : ஆறுபடி பக்காவா?

இ. அரசன் : ஆறு பக்கா புடிக்க வேண்டிய பானைல, அந்தக் கூழக் காச்சி, ஒரு மனுஷன் அந்தப் பானையப் போல இருபது பானக் கூழ் சாப்பிடுவோம். (அட, ஒன் வீட்டுக்கு நடுவீடு ஒட்டையாப் போக)

பபூன் 1 : ஏங்கப்பா... அப்படிச் சாப்பிட்டம்னா...?

இ. அரசன் : ரெண்டு யானைக்கிருக்கிற ஒரு வீரம் ஒரு மனுஷனுக்கு ஏற்படும்.

பபூன் 1 : ஆனா இங்க வந்தவொடன என்னாச்சி?

இ. அரசன் : இங்க வந்தவொடன நெய்ப் பருக்கை, மிளகுத் தண்ணி ரசம், தேங்காத் தொவையல் சாப்பிட்ட வொடனே ஒடம்பு கொஞ்சம் சௌரியமில்லா

மலாப் போச்சி. இன்னும் ரெண்டு மாசம் போகட்டும். ஓடனே... வந்து, ஆனால் அந்த வில்லை வளைத்து விடுகிறேன். (அவன் ஒரு மாசம்... இவன் ரெண்டு மாசம்.)

பபூன் 1 : சரி, நீங்க போய்ட்டு வாங்க நேரத்தோட. அட போய்யா.

இ. அரசன் : ஏய்! நான் வர வரயிலும் ஒருத்தரும் தொடக்கூடாது.

பபூன் 1 : அடத் தொடமாட்டாக. நீங்க போய்யா {சிரிப்பு}

இ. அரசன் : ஏய்! நான் வரவரயிலும் ஒருத்தரும் தொடக் கூடாது.

பபூன் 1 : [அடிக்கிறான்] போய்யான்னா... தொடக்கூடாது {சிரிப்பு}* போன்னு சொன்னா போவானா... தொடக்கூடாதாம். ஏய் நீங்க எந்த ஊரு? ஆனால் வில் வேடிக்கை பாக்கலாம்னு வந்தீர்களா? வில்லை வளைக்க வந்தீர்களா?

மூன்றாம் : நாங்க வில் வளைக்கலாமுன்னுதான் வந்தோம்.

அரசன் : வந்த இடத்தில் உடம்பு கொஞ்சம் சௌரிய மில்லை. (என்ன டோய்?)

பபூன் 1 : எல்லாம் நோக்காடு** புடிச்ச பயலா வந்திருக் கானுக {சிரிப்பு} ஒங்க ஊரு எதய்யா?

மு.அரசன் : நான் இருப்பது சிங்களர் தேசம். சிங்களர் தேசம். (அது எங்கடாயிருக்கு?)

பபூன் 1 : சிங்கள தேசம். அங்க சாப்பாடு, உணவு எப்படி? இங்க வந்தவொடன ஏன் ஒங்களுக்கு ஒடம்பு சௌரியமில்ல.

மு.அரசன் : சிங்களர் தேசத்தில் இந்த ஒட்டகை இருக்குதா ஒட்டகை...

★ 'சரி சத்தம் போடாதே' என்று தனபால்ராவ் கத்துகிறார்.

★★ நோக்காடு = 'முடியாமை'

பபூன் 1 : ஆமா, ஒட்டகை இருக்குது.

மூ.அரசன் : அதனுடைய கறியை நாங்கள் சாப்பிடக்கூடிய மனிதர்கள்.

பபூன் 1 : ஒட்டகம் கறிய சாப்பிடுறவுங்களா நீங்க? ஒரு மனுஷன் எத்தினி ஒட்டகக் கறி சாப்பிடுவீக.

மூ.அரசன் : ஒரு மனிதன் அம்பது ஒட்டகக் கறி சாப்பிடு வான். (அட அப்பா, ஒன் வயித்ல கொள்ளி வைக்க) இங்க வந்தவொடனே மௌகுத் தண்ணி ரசங்கள், பருக்கை சாப்பிட்டவொடன ஒடம்பு கொஞ்சம் சௌரியமில்ல, {சிரிப்பு} இன்னும் ஒரு மாசம் போகட்டும், படார்னு ஒடித்து விடுகிறேன்.

பபூன் 1 : அப்ப நீங்க பொய்ட்டு வாங்க. நீங்க படார்னு ஒடிக்கவும் வேண்டாம். நீங்க சடார்னு போகவும் வேண்டாம். நீங்க பொய்ட்டு வாங்க. வெள்ளன* போய்ட்டு வாங்க.

மூ.அரசன் : ஏய்! வர்ற வரையிலும்...

பபூன் 1 : ஏய்! போறயா இல்லயா இப்ப நீ? {சிரிப்பு} [அடிக்கிறான்]போடாண்ணா {சிரிப்பு} இவரப் பாக்கும்போது ஒரு சமயம் வளச்சாலும் வளச்சிருவாரு போலத் தெரியுது. (ஏலே, இவனப் பாத்தியா... ஒரு சோம்பேறி.) ஏய், வில்லை வளைக்க வந்தீர்களா? இல்லை, வேடிக்கை பாக்க வந்தீர்களா?

நான்காவது அரசன் : ஏய்! என்னைய யார்னு ஒனக்குத் தெரிய வில்லை... இந்த வில்லைப்போல முப்பத் ரெண்டு வில் இருந்தாலும் நான் வளைத்து விடுவேன்.

பபூன் 1 : அடி சக்கேன்னானா! அப்படித்தான் வேணும். ம். வளைக்கப் போறீங்களா?

★ வெள்ளன = மிகச் சீக்கிரம்

நா.அரசன் : அந்த வில் எங்கிருக்கிறது?

பபூன் 1 : வாங்க, காமிக்கிறேன்.

நா.அரசன் : பிறப்படு, அந்த வில்லை ஒடித்துவிடுகிறேன். [ஆடுகிறான்]

பபூன் 1 : (ஏய், ஒன் இடுப்ப ஒடிச்சாலும் ஒடிச்சிப் புடுவான்டா டேய்) இடிச்சிப் புடுவேன் ஒடிச்சிப்புடுவேன்னு என்னையப் போட்டு அமிக்கி விடுறயே. வாங்க அரமணக்குள்ள இருக்கு. அந்த வில்லைக் காமிக்றேன். ஒடிச்சிடுங்க.

நா.அரசன் : எங்கயிருக்கு...

பபூன் 1 : மகாராஜா! ஆனால் ஒத்த ராஜ்யத்திலிருந்து, ஆனால் ஒரு வீரன்... ஆனால் வில்லை வளைக்கலாமென்று சொல்லியிருக்கிறார்கள்.

நீலாவி : அப்படியா? அந்த வீரனை அழைத்துக் கொண்டு வா. மகாராஜாவிடம் சென்று தெரியப்படுத்தி, அந்த வில் வளைத்து விடுவதாக நாங்கள் தெரியப்படுத்தி வா.

பபூன் 1 : அதோ கூட்டங் கூட்டமாக வருகிறார்கள்... (இப்பத்தான் கழியப்போறான் பையன்) {சிரிப்பு} ஏய் இங்க வாய்யா. ம்... இந்த வில்லுதான்.

நா.அரசன் : ஹஹ்ஹஹ்ஹஹ்ஹஹ்ஹ. இந்த வில்லு தானா? ஒரு அற்பக் கேவலமாக இருக்க வேண்டிய ஒரு வில், இது வளைக்க முடியாமல் பயந்து ஓடுகிறார்களே... இவர்கள் ஒரு அரசர்களா இவர்கள்?

பபூன்1 : எங்க, ஒங்க தெறமையப் பாக்கணுமே! {சிரிப்பு} எங்க... இந்த வில்ல வளைச்சிருங்க.

பபூன்2 : இவரு வளச்சிருவாருடா. {சிரிப்பு}

பபூன் 1 : ஏல உளுவத்தலயா, ஒனக்கு எப்படிடா தெரியும்?

பபூன் 2 : இவரு வீரம் எனக்குத் தெரியும். (எப்படி?) எப்படியாவது வழிச்சி நக்கிருவாரு {சிரிப்பு} (ஏய் வளைச்சிருவாரா வழிச்சி நக்கிருவாரா)

பபூன்1 : வில்லு வளைக்கிறதா, வழிச்சி நக்குறதா?

பபூன் 2 : அது எப்படியாவது செஞ்சாச் சரிதான். {சிரிப்பு}

பபூன் 1 : எங்க பாப்பமெ!

பபூன் 2 : ம்... வளச்சிருங்க...

நா. அரசன் : ம்... ஒருத்தரும் நிக்காதே.. போ.

பபூன் 1 : ஏஅப்பா! ஒருத்தரும் நிக்கக்கடாதா கிட்ட. ஒருத்தரும் நிக்கலயய்யா.

நா.அரசன் : ஹெப்... ஹெப்... ஹெப்.. {சிரிப்பு} தம்ப்டி... தம்ப்டி... தம்ப்டி... {சிரிப்பு} இந்தா... இந்தா... இந்தா...இந்தா... {சிரிப்பு} ஏய்... ஏய்... [இசை]

பபூன் 2 : தூக்கு... தூக்கு... இவ்ளவுதானா உங்க தெறம?

நா.அரசன் : அடேயப்பா, என்னா கனமாயிருக்குடா ஏளவு? ஏன்ய்யா இப்ப நாங்க இல்லாமயிருந்தா நீ சட்னியாப் போயிருப்ப போலத் தெரியுதெ. {சிரிப்பு} வில்ல வளைச்சிர்ரம்னு சொல்லி, தூக்கி மேலப் போட்டுக்கிட்டு ...அய்யய்யோ அப்பப்போ அய்யய்யோ அப்பப்பாங்கிறிய {சிரிப்பு}

நா.அரசன் : சர் நம்மளால முடியாது.

பபூன்2 : இதுக்குத்தான் இவ்ளவு வீரமா வந்தீங்களாக்கும். தூக்கி மேல போட்டுக்கிட்டு

அய்யய்யோ அப்பப்பப்பாங்றீகளே. நல்ல வேள நாங்க இத்தனப் பேருஞ் சேந்து தூக்கலேன்னா இவரு சட்னியாப் பொயிருவாரு இன்னேரம்.

நா.அரசன் : யப்பா, ஒரு லேசா இருக்கும்னு நெனச்சேன். நல்ல கெட்டிக்கார வில்லாத்தான் தெரியுது. என்ன... [இசை]

பபூன்1 : போய்யா போய்யா. நல்ல கெட்டிக்கார மனுசந்தான். நல்ல *ஆசேல எல்லாரும் இருந்தது, இவரு வளச்சிருவாருன்னு. கீழே விழுந்துட்டு [அடிக்கிறான்]மண்ண மண்ணக் கவ்வுறாரு. போங்கய்யா... ஒரு பயலும் நிக்கக்கூடாது. போங்க... (ஏல! நீங்க ரெண்டுபேரும் ஒடைங்கடா பாக்கலாம்) மகாராஜா இவுங்கள் எல்லாம் வெறும் சோத்துமாடப் பயல்களாக இருக்காங்க. நான் போயி, அந்தா அங்க யாரோ ரெண்டு மூணு பேர் உக்காந்திருக்காக, அவுக கிட்ட.. அவுக கிட்ட, போய் நான் கேட்டு வருகிறேன்.

நீலாவி : சீக்கிரமாகச் செல்... [இசை]

பபூன்1 : சாமி!

விசுவா. : அடே என்னடா. அடே வண்டிக்கார சுப்பு. அடே வண்டிக்கார சுப்பு. {சிரிப்பு} ஆமா, அடே இவர்களெல்லாம்... ஏண்டா அவர்கள் இருக்கும் இடத்துக்கு வந்து ஓடுகிறார்கள்.

பபூன் 1 : சுவாமி! வில்லக் கண்டு பயந்து வில்லு வளைக்க முடியாது அப்படின்னு சொல்லிட்டுப்போறாங்க. அவர்கள் இருக்கும் நாட்டுக்குப் போகிறார்கள்.

விசுவா. : அப்படியா. ஆனால் அந்த மந்திரி இருக்கிறானே, நீலாவி மந்திரி, நான் அழைத்ததாகவே அழைத்து வா.

★ ஆசேல = ஆசையில்

பபூன் 1 : வருகிறேன்... [இசை]

நீலாவி : மகா முனிவர்களே! அரமணைகளிருக்க... ஒரு காலமும் நம்முடைய அரமணைக்கி நீங்கள் வராதவர்கள், இன்றைய தினத்தில் நீங்கள் வந்து விட்டீர்கள். வந்தக் காரணமென்ன? அம்பத்தாறு தேசத்து அரசர்கள் பூராகவும் வில்லைக் கண்டு பயந்து அவர்களிருக்கும் நாட்டுக்கே பிறப்படு கிறார்கள். ஆனால் உங்களுடைய பின்புறமாக இருக்கிறார்களே சிசுவர்கள், அவர்களுடைய கைப்படவாவது இந்த வில் வளைக்க முடியுமா?

விசுவா. : வளைக்க முடியுமா என்று கேக்கறியே. ஆனால் உன்னுடைய அரசன், ஆனால் ஜனகர் மகாராஜாவை, நான் அழைத்ததாகவே அழைத்து வா. சீக்கிரம்.

நீலாவி : சரி, வருகிறேன்... [இசை]

பாடல் : **ராஜாதி மகராஜன்**
ஞானமுள்ள கொலுவில் வீரதீரன்
தேவாதி தேவர்களும் போற்றிப் புகழ்ந்திடும்
ஜனகர பூபதியே கொலுவில் வந்திடும்
ராஜாதி மகராஜன்...

ஜனகர் : சுவாமி! ஒரு காலமும் என்னுடைய அரமணைக்கி நீங்கள் வராதவர்கள், இன்றைய தினத்தில் நீங்கள் வந்தது எனக்கு ரொம்ப சந்தோஷமாகவே ஆகிவிட்டது. ஆனால் அம்பத்தாறு தேசத்து அரசர்கள் பூராகவும் வில்லைப் பார்த்து பயந்து விழுந்து ஓடுகிறார்கள். ஒங்களுடைய பின்புறமாகவே நிற்கிறார்களே சிசுவர்கள், அவர்களுடைய கைப்படவே இந்த வில்லை வளைக்க முடியுமா? சீதாலட்சுமியைக் கல்யா ணம் செய்து வருவார்களா?

விசுவா. : அப்பா, ஜனகர் ராஜனே! அவர்களை யாரென்று உனக்குத் தெரியவில்லை?

ஜனகர் : அவர்கள் யார் சுவாமி?

விசுவா. : அயோத்தி நகரத்தை அரசு புரிந்து வருகிறாரே தசரத மகாராஜா, அந்தத் தசரத சக்ரவர்த்தி தவத்தில், ஆனால் பிறந்தவர்கள் ராமன், லெச்மணன், பரதன், சத்ருக்கன் நான்கு பேர்கள் கூடப் பொறந்தவர்கள். பரதனும், சத்ருக்கனும் அயோத்தியில் இருக்கிறார்கள். இந்த இராமரும் லெச்மணரும் இருபேர்களையும் அழைத்துக் கொண்டு, ஆனால் தாடகை சம்காரத்தை முடித்து அகலிகை மோட்சத்தைக் கொடுத்து, ஆனால் வில் வேடிக்கை பார்க்கலாமென்று வந்திருக்கி றோம். ஆனால் அப்படி அந்த வில்லை வளைத்துவிட்டால், என்ன வெகுமானத்தை நீ கொடுத்து வருவாய்? சொல் பார்ப்போம்.

ஜனகர் : சுவாமி! வில்லை வளைத்துவிட்டால், ஆனால் என்னுடைய மகளாகிய சீதாலெச்மியை நான் திருமணம் செய்து கொடுத்து விடுவேன். ஆனால் சொந்த மருமகன் என்று நான் முறம* கொண்டாடுவேன். வேலாயிரம், வேறு பதினா யிரங்கள், என்னுடைய நாடு நகரங்களில் பாதி நகரத்தை நான் சீதனமாகக் கொடுத்து வருவேன். ஒட்டகம் ஆயிரம். ஆனால் இப்பேர்ப்பட்ட ஒரு ஆடை ஆபரணங்களைச் சீதனமாகக் கொடுத்து வருவேன் மகாமுனிவர்களே.

விசுவா. : ஏவ்வ்வ்.. (அய்யா கெழவி ரசம் ஏப்பம்) அப்பா, ஜனக மகாராஜனே! கவலைப்படவேண்டாம். ஆனால் இனிமேல் இன்றிலிருந்து உன்னுடைய கவலையானது நீங்கிவிடும். ஆனால் அவர்களை... இடம்நான் தெரியப்படுத்தி... அந்த வில்லை

★முறம = உறவுமுறை

வளைப்பதாக நான் தெரியப்படுத்தி விடுகிறேன். அந்த வில்லானது எடுத்துக்கொண்டு,சபைக்கு.. ஆனால் எடுத்துக் கொண்டு வாருங்கள்.

ஜனகர் : ரொம்ப சந்தோஷம்... [இசை]

நீலாவி மந்திரி! அறுபது பேர் தூக்கமுடியாத வில், வடக்கயிறுகளைப் போட்டு இழுத்துக் கொண்டு வாருங்கள் சபைக்கு. ஆனால் இவர்கள் வில் வளைத்து வரட்டும்.

நீலாவி : ரொம்ப சந்தோஷம் மகாராஜா.. [இசை]

விசுவா. : ஏவ்வ்.. (அய்யா) அப்பா ராமச்சந்திரா! (ஏ! ராமச்சந்திரா) சீட்டு உன்மேல்தான் விழுந்திருக்கு.

இராமர் : அம்பத்தாறு தேசத்து அரசர்களெல்லாம் அவர்கள் இருக்கும் நாட்டிற்குப் போகும் காரணம் என்னா பிரபு?

விசுவா. : அடடா, விஷயத்தைக் கேட்டியோ, அட வில்லைக் கண்டு பயந்து, ஆனால் வில் வளைக்க முடியாமல் அவர்கள் இருக்கும் தேசத்துக்குப் பயந்து ஓடுகிறார்கள். ஜனக மகாராஜா அவர்கள் வந்தார். ஆனால் 'வில் வளைக்க முடியுமா இவர்களுடைய கைப்படவே' அப்படியென்று கேட்டு வந்தார். ஆனா வில் வளைத்துவிட்டால் என்ன வெகுமானத்தைக் கொடுத்து வருவாய் என்று நான் கேட்க, சீதையைக் கல்யாணம் செய்து கொடுப்பானாம்... தன்னுடைய நாடு நகரங்கள் பாதியைச் சீதனமாகக் கொடுப் பானாம். ஆனால் தெரியப்படுத்தி வந்தான். ஆனால் நீ வளைத்து விடுவதாக அவனிடம் சத்திய வாக்குகள் கொடுத்து விட்டேன். ஆனால் என்னுடைய சத்திய வாக்குகளை நீ நிறை வேற்றித் தரவேண்டும் ராமா. ஆனால் அந்த

வில்லை வளைத்து ஆனால் சீதையை நீ கல்யாணம் செய்து கொண்டாலென்ன?

இராமர் : சுவாமி! என்ன காரியத்தை செய்து வந்தீர்கள்? நீங்கள் சொன்னதுபோல் வில்லை நான் வளைத்துவிடுவேன். சீதையை நான்... திருமணம் நான் செய்து விடுவேன். இந்த வில்லுக்கு *ஒடையப்பட்ட ஒரு மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் வந்து... என்னையறியாமல் எப்படி நீ வில்லை வளைத்து விடலாமென்று, இரண்டாவது தகராறு செய்தால் அவர்களுக்கு யார் ஜாமீன் ஏற்றுக் கொள்வது?

விசுவா. : அவன் யார்ரா அவன் வரக்கூடியவன். சும்பத் தேவடியா மகன். பல தேவடியா மகன் (வந்த பெறகுல்லா ஒங்க சாணிய வெளிய தள்ளப் போகுது) அட பொதுவாயிருக்க வேண்டிய ஒரு வில்லானது, யாரும் வளைக்கலாம்... யாரும் கல்யாணம் செய்து வரலாம்... திறமை உள்ள வர்கள். ஆனால் வளைக்கக்கூடாதென்று சட்டம் போடக்கூடியவன் யாரது? அப்படி வந்து விட்டால் பஞ்சாட்சரத்தினால் புஸ்ஸுன்னு எரித்துவிடுகிறேன். (அப்பத்தான் கழிஞ்சிக்கிடப் போறிங்க) அட நீங்க இதப் பத்திக் கவலைப்பட வேண்டாமப்பா... ராமா! எப்பேர்ப்பட்ட ஒரு வீரனும் வந்தாலும் அவனை நான் பார்த்துக் கொள்கிறேன். இந்தப் பஞ்சாட்சரத்தினால் புஸ்ஸுன்னு எரித்து விடுகிறேன். (எல்லாத்துக் கும் பின்னால போய் நிப்பாரு) {சிரிப்பு} ஆமா... வில்லு மட்டும் வளைத்து விடு.

இராமர் : சுவாமி! ஆனால் யாராவது ஒரு... ஆனால் வில்லை எதற்காக வளைத்து வந்தீர்களென்று வந்துவிட்டால், அதற்கு நீங்கள்தான் ஜாமீன். விஸ்வாமித்ர மகாமுனிவர் சொல்லித்தான் நான்

★ ஒடையப்பட்ட = உரிமையுடைய

வில் வளைத்து வந்தேன் என்று நான் தெரியப்படுத்தி விடுவேன்.

விசுவா. : அப்படியே சொல்லிவிடு. அப்படியே சொல்லி விடு. அவன் என்ன பண்ணிருவான். (அப்பத் தான் கழிஞ்சிக்கப் போவுது) சும்பத் தேவடியா மகன். பல தேவடியா மகன்... பஞ்சாட்சரத்தால் புஸ்ஸுன்னு எரித்து விடுகிறேன். {சிரிப்பு} (அப்பால தெரியப் போவுது நாத்தம்)

பபூன்2 : ஒங்களுக்குத்தான் புஸ்ஸுன்னு வரப் போவுது {சிரிப்பு} ஒங்களுக்குப்... பிசின் வரப்போவுது பிசின்.

பபூன்3 : மாப்ள அஞ்சி பைசா. {சிரிப்பு}

பபூன் 2 : ஏய் மொளு மொளு! [அடிக்கிறான்] {சிரிப்பு} (அவன் அஞ்சி பைசா குடுக்க முடியாம போறாம் பாரு)

விசுவா. : ஏய்! அடே வில் வளைக்கப் போகிறார்கள். ஆனால் வில் வேடிக்கை பார்த்து நாங்களிருக்கும் இடத்துக்கே போய்விடலாம்.

பபூன்1 : அப்படித்தான் செய்யணும்.

விசுவா. : அப்பா, அம்பத்தாறு தேசத்து அரசர்களெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய, ஆனால் சபதத்தை நீ நிறைவேற்றி விடவேண்டும்.

இராமர் : ரொம்ப சந்தோஷம் மகாமுனிவர்களே.

விசுவா. : ஆவ்வ்வ்... அப்பா இப்பத்தான் எம்மனசு நிம்மதியாயிருக்கிறது. அப்பா! எங்கே வில் வளைத்துவிடு பார்ப்போம்...

இராமர் : அறுபது பேர் தூக்கமுடியாத வில்லை வடக்க யிற்றைப் போட்டு இழுத்துக் கொண்டு வருகிறார்கள்.

பூமியில் நீ சென்று அந்த வில்லை வாங்கி, என் கைப்படவே... ஆனால் நீ கொடுக்க வேண்டும்.

இலக்கு. : ரொம்ப சந்தோஷம் அண்ணா.... [இசை]

அறுபதுபேர் தூக்கமுடியாத வில்லை நான் கொண்டு வந்திருக்கிறேன். அதை வாங்கி... ஆனால் இந்த வில்லை வளைத்து விடுங்கள்.

இராமர் : வளைத்து விடுகிறேன். கவலைப்படவேண்டாம். [இசை]

விசுவா. : அப்பா ராமச்சந்திரா! ஏன் வில் பிடித்துக் கொண்டு, ஏன் நின்று கொண்டிருக்க வேண்டும்? சீக்கிரமாக வில்லை வளைத்துவிடு. படக்னு வளைத்துவிடு. (ஏய்! நில்லுங்க சாமியாரே) 'படக்'னு வளைத்துவிடு. {சிரிப்பு}

பபூன் 1 : ஏன் ஒங்களுக்கு அவ்வளவு அவசரம்? {சிரிப்பு}ஏன் சாமி கல்யாணம் நடத்னும்னா ஒங்களுக்கு வரக்கூடிய வருமானம் நெறய இருக்குதேன்னு நெனச்சிக்கிட்டீங்களாக்கும்.

விசுவா. : அடே போடா. ஒனக்கென்னடா தெரியும்? சும்பத் தேவடியா மகனே. பல தேவடியா மகனே. {சிரிப்பு}

பாடல் : **வில் வளைத்தாரே ராமர்**
பந்தயமாய் வில் வளைத்து
சீதையைக் கல்யாணம் செய்ய
வில் வளைத்தாரே ராமா...

பாவையாட்டி : ஆனால் சீதையுடன் பிறந்த வில்லை உடைக்கின்ற சமயத்தில் இரண்டாக உடைந்து விட்டது. அந்த வில்லுக்குப் பதிலாக ஸ்ரீராமருடைய வில்லை வளைத்து வந்தார். இதையறிந்த ஜனகர் மகாராஜன் அவர்கள்... அவர்கள் ஸ்ரீராமரை அழைத்துச்சென்று தலையில் கிரீடங்கள், ஆனால் மார்பில் பதக்கங்கள், கோமேதக மாலை, ரத்னமாலை இதுகள்ளாம்

பூட்டி மாப்பிள்ளைக் கோலமாகவே அழைத்து வருவதாகச் செல்கிறார்... [இசை]

விசுவா. : ஏவ்வ்வ்... (அய்யா) அப்பா ராமச்சந்திரா! வைகுந்த பதவியிலிருக்க வேண்டிய கிருஷ்ண பரமாத்மா போல இருக்கின்றாய். அடாடாடா... மார்பில் பதக்கங்கள், தலையில் கிரீடங்கள், கோமேதமாலை, ரத்னமாலை பூட்டி வைத்திருக் கின்றாய்,* ரொம்ப சந்தோஷம் அடைந்தேன்.

இராமர் : சுவாமி! தங்களுடைய வார்த்தையை நான் தவறாமல்... ஆனால் வில்லை வளைத்து நான் மாப்பிள்ளைக் கோலமாக நிற்பதனால், தாய் தந்தையர்கள் இல்லாமல் எந்தவிதமாக நான் திருமணம் செய்து வருவது?

விசுவா. : ஏவ்வ்வ்... அடே அம்பி. அடே ராமர் சொன்னது கேட்டியில்லயோ? (ஆமா.. ஓஓ) ஆனால் தாய் தந்தையர்கள் இல்லாமல் எப்படித் திருமணம் முடித்து வருவது என்று சொல்லி வருகிறான். (ஆமா) சிம்மாசனத்தில் போய் உக்காரு. தாய் தந்தையர்களிடம் **லிகிர்தங்களை நான் குடுத்து அனுப்புகிறேன். அஞ்சி நிமிஷத்துக்குள்ளாக எல்லோரும் வந்து விடுவார்கள். கவலைப்பட வேண்டாம். அப்பா லெச்மணா! ஆனால் ராமரை அழைத்துக் கொண்டு... ஆனால் சிம்மாசனத் துக்குச் செல்லுங்கள். பிறப்படுங்கள் பிறப்படுங் கள்... அப்பா, ஜனக மகாராஜனே! திருமணத்துக் குண்டான ஏற்பாடெல்லாம் செய்து வாருங்கள்.

ஜனகர் : ரொம்ப சந்தோஷம் சுவாமி...

விசுவா. : (ஏய்! பொட்டிக்காரன். சும்மா[illegible]) அடே யார்ரா! அயோத்திக்குப் போகக்கடி[illegible]... அடே அயோத்திக்கு யார் போறது இங்கிருந்து? (நீங்க

---

* 'ஏக சத்தம்' என்று தனபால்ராவ் கத்துகிறார்

** லிகிர்தம் = கடிதம்

தான் போகணும். ஒருத்தனும் போகமாட்டாங்க.) அடே டேய் குண்டோதரா. (ஏய் குண்டோதரா)

பபூன்1 : ஏண்டா பயலே சாமி! (இங்க பார்ரா டேய்) {சிரிப்பு}

விசுவா. : அட தடிப் பயலுக்குப் பொறந்த பயலே! [அடிக்கிறான்] (ஏண்டா சாமியார்) ஏண்டா பயலே! சாமின்னு கேலில்லா பண்றான்.

பபூன்1 : சாமி! மூக்கு ஒளறி சொல்லிட்டா, சப்புன்னு அடிக்கிறதா இப்படி. (வாயா? மூக்கா?) எதுக்கு சாமி கூப்புட்டீங்க.

விசுவா. : அடே நீ அயோத்திக்குப் போகவேண்டும்?

பபூன் 1 : எருவுக்கு (ஏய்! எதுக்கு?)

விசுவா. : ஏய்! எதுக்குன்னு கேள்ரா.

பபூன் 1 : ம். எதுக்கு?

விசுவா. : ஆனால் நீ அயோத்தி சென்று, ஆனால் நான் சொல்றது போலவே நீ சொல்ல வேண்டும்.

பபூன் 1 : எப்படிச் சொல்லணும் சொல்லுங்க. யார்கிட்ட போய்ச் சொல்றது?

விசுவா. : அயோத்திக்குச் சென்று தசரத மகாராஜாவிடம் சொல்ல வேண்டும்.

பபூன் 1 : எப்படிச் சொல்றது?

விசுவா. : ஆனால் ராமன் லெச்மணர்களை அழைத்துச் சென்றான் விஸ்வாமித்ர மகாமுனிவர். ஏழு நாளாகவே சம்காரத்தை முடித்தார்கள். அழகி அகலிகை சாபத்தை தீர்த்தார்கள். மிதிலாபுரி பட்டணத்துக்குச் சென்று சீதையுடனே பிறந்த வில்லை வளைத்து மாப்பிள்ளைக் கோலமாக இருக்கிறான் ராமன். ஆனால் தாய் தந்தையர்கள் இல்லாமல் கல்யாணம் செய்ய முடியாதென்று

சொல்லி வருகிறான். அதிசீக்கிரமாகவே ரதங்கள், யானை, சேனைகள், பரதன், சத்ருக்கன் ஆனால் சுமிந்திர மந்திரி, கோசலை, கைகேசி, சிமித்திரை இன்னும் இளையவர்கள், பெரியவர்கள், பரதன், சத்ருக்கன்... ஆனால் மந்திரிமார்கள், யானை சேனைகளுடனே அதிசீக்கிரமாக... ஆனால் வந்து சேரவேண்டும் அப்படின்னு சொல்லி விடு... ப்ளப்ளப்ளர்ர்.... ப்ளப்ளப்ளப்ளர்ர்... {சிரிப்பு} (கையோட பாட்டில்... பத்ரம்)*

பபூன் 1 : டேயப்பா... மூச்சி விடாம இப்படிச் சொன்னா எவனுக்கு ஞாபகமிருக்கும். (ஏய் எழுதிக் குடுக்கச் சொல்லப்பா) ஏனய்யா நான் இங்கயிருந்து போறதே ரொம்பக் கஷ்டம். அங்கயிந்த மாதிரி, நீங்க சொன்னதுபோல முணுமுணு முணு முணுன்னு என்னால பேசத் தெரியுமா? இந்தா பாருங்க சாமி, இதெல்லாம் எனக்குத் தெரியாது. ஒரு கடி நாய்ல எழுதிக் குடுங்க, (ஏய்! கடிதம்) கடிநாய்ல...

விசுவா. : அடே கடிதத்தில் எழுதிக் குடுக்க வேண்டுமா?

பபூன் 1 : நல்ல பேப்பர்லே எழுதிக் குடுங்க. பேசாம நீட்டிட்டுப் பேசாம வந்திட்றேன். {சிரிப்பு} அதச் செய்ங்க. இல்லேன்னா நீங்க செய்றது போல எனக்குப் பொலம்பத் தெரியாது. ஒரு கொழம்பும் தெரியாது; பொலம்பவும் தெரியாது {சிரிப்பு}

விசுவா. : அடே ஆனால் ஒனக்கு வாசிக்கத் தெரியுமோ?

பபூன் 1 : நான் வாய வைக்காத எடமில்லயே. {சிரிப்பு} (என்னத்த?) எல்லா எடத்லயும் வாய வச்சிருக்கேன். (டேய் படிக்கத் தெரியுமா?)

விசுவா. : அடே படிக்கத் தெரியுமாடா?

★ பார்வையாளரிடம் பேசுகிறார்.

பபூன் 1 : நான் இப்பத்தான் படுத்திருந்து வர்றேன். (ஏல படிச்சிருக்கியா பள்ளிக்குடத்ல)

விசுவா. : அடே! எத்னாங் கிளாஸ் வரயிலும் படித்திருக் கிறாய்?

பபூன் 1 : எத்தினிக் கிளாஸ் வேண்ணாலும் ஒடச்சிரு வேன். {சிரிப்பு} (என்ன காப்பி கிளாஸா)

விசுவா. : அடே! ஏபிஸிடி தெரியுமோ?

பபூன் 1 : எம்பீயா... எந்தப் பீயிருந்தாலும் ஒளப்பிருவேன் {சிரிப்பு} (ஏய் இங்லீஸு படிச்சிருக்கியா) எந்தப் பீஸிருந்தாலும் கிழிச்சிடுவண்டா. {சிரிப்பு} (ம்... மூக்ல போயி)

விசுவா. : அடே அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். ஆனால் இதோ எழுதியிருக்கிறேன். படிச்சிப் பாரு. (டேய் டேய்! கோழி கிண்டுனது போல கிண்டுறாரு)

பபூன் 1 : சாமி! இது ஒங்களுக்கு ஞாயமா இது... (என்னடா?) இதெல்லாம் ஒரு எழுத்தா இது? (என்னடா?) கோழி எப்படி இந்த எர எடுக்கிறதுக்குக் கிண்டிருக்கும்... அதுமாதிரி, கோடு கோடா கோடு கோடா போட்டிருக்காரு.

விசுவா. : அட போடா, சீக்கிரம் போடா. நேரமாகுது.

அட போடா. சீக்கிரம் போடா. நேரமாகுது.

பபூன் 1 : சரி, நான் பொய்ட்டு வந்திட்றேன் சாமி... வகிறு நெறைய சோறு போட்டாத்தான் போகமுடியும்.

விசுவா. : அடே! இந்தச் சமயத்தில் கல்யாணம் முடிப்பதற்குள்ளாக ஒனக்குச் சோறு எப்படி போட முடியும்? கல்யாணம் முடிந்த பெறகு போட்றலாம். போ.... போ. சீக்கிரம் போய்ட்டு வா. போ போ போ.

பபூன் 1 : துணைக்கி ஆளு வேணுமே. (டே! ஒன் தம்பியக் கூப்புட்றா) அடே தம்பி உளுவத் தலயா!

பபூன் 2 : ஏண்டா அண்ணே!

பபூன் 1 : அடே! விஸ்வாமித்ர மகாமுனிவர் இந்த லெட்டர் குடுத்திருக்காரு. இதக் கொண்டுபோயி.... அயோத்திக்குக் கொண்டு போய்ட்டு தசரத மகாராஜா கிட்ட கொடுத்திட்டு சீக்கிரம் வந்திரு.

பபூன் 2 : எப்பா... இது நம்மளால முடியாது. {சிரிப்பு} தொந்தி வயித்தத் தூக்கிக்கிட்டு நடக்க முடியாதுடா. {சிரிப்பு}

பபூன் 1 : எருமமாட்டுப் பயலே [அடிக்கிறான்] (ஏலே மொளு மொளு கூப்பிட்றான்) இவன் அதவுட பெருசாத்தான் இருப்பான்., (ஏய் கூப்பிடுறா... எதுக்கும் வருவான்) ஏய்! நீ போய்ட்டு வாரயா அயோத்திக்கி.

பபூன் 3 : எனக்கு அஞ்சி பைசா வேணும். {சிரிப்பு}

பபூன் 1 : மண்ணள்ளிப் போடு. {சிரிப்பு} (அவனுக்குத் தொந்தி வயிறு... இவனுக்கு அஞ்சி பைசா).

பாடல் : **போன பாலகர்கள் இன்னும் காணவில்லை**
புத்திர சிகாமணியே!
அங்கம் பதறுதே நெஞ்சம் புண்ணாகுதே!
போன பாலர்கள் இன்னுங் காணவில்லை.

தசரதர் : சுமிந்திர மந்திரி!

சுமந்திரர் : மகாராஜா!

தசரதர் : விஸ்வாமித்ரர், ராமர் லெச்மணன் இருபேர்களையும் அழைத்துச் சென்று... ஆனால் உயிருக்கு எந்த ஆபத்து நேர்கிறதோ தெரியவில்லை. ஆனால் இந்தத் தாடகையானவள் என்னுடைய

குழந்தைகளைத் தூக்கி விழுங்கி விட்டாளோ? கொன்று விட்டாள்... யாது காரணம் ஒன்றும் தெரியவில்லையே.

சுமந்திரர் : மகாராஜா. ஏழு நாளுக்குள்ளாக வருவதாகத் தெரியப்படுத்திச் சென்றார். ஏழுநாட்கள் சரியாகவே தீரப்போகிறது. குழந்தைகளுக்கு ஜாமீனாக ஏற்றுக் கொண்டாரே, நம்முடைய ஆனால் வஷிஷ்ட முனிவர், அவரை அழைத்துக் கேட்டால் தெரியவரும்.

தசரதர் : அழைத்து வா சீக்கிரம்...

பாடல் : **வஷிஷ்டர் வந்தாரே - பெருமையான்**

வஷிஷ்டர் வந்தாரே!

பபூன் 1 : சுவாமி!

வசிஷ் : ஏவ்வ்வ்... (கருவாட்டுக் கொளம்பு ஏப்பம்)*

பபூன் 1 : சாமி நான் வந்த வேகமென்ன. இப்படி வயித்த வயித்த பட்பட்னு ஒதைக்கிறீங்களே! {சிரிப்பு}

வசிட்டர் : அடே! எதுக்குடா எரும மாடாட்டம் இப்படி வந்து விழுகுறே.

பபூன் 1 : சுவாமி! சத்தமில்லாம கேக்கணும். அங்கவொரு .... இந்தக் குசு விட்டாரு பாருங்க {சிரிப்பு} (ஏய் விசுவா) ம்., விசுபுசு (ஆமா, விசுபுசு)

வசிஷ் : அடே! விஸ்வாமித்ரனா?

பபூன் 1 : ம்... அவருதான். அவருதான்... ஒரு கடிநாய் குடுத்திருக்காரு. (ஏய்! கடிதம்)

வசிட்டர் : அடே! லிகிர்தங்களைக் கொடுத்தனுப்பியிருக் கிறானோ விஸ்வாமித்திரன்.

★ பதிவு நாடா மாற்றத்தினால் ஏற்படும் சில நிமிட இடைவெளி

பபூன் 1 : ஆமா சாமி.

வசிட்டர் : அடே, எங்கடா அது?

பபூன் 1 : கைல வச்சிருக்கேன்.

வசிட்டர் : அதக் கொண்டா இங்கே. அதப் பார்ப்போம்.

பபூன் 1 : பாருங்க.

வசிட்டர் : அப்பா தசரதனே! உன்னுடைய மகனுக்கு ஆபத்து வந்ததாகவே சொல்லி வந்தீர்கள். இதோ பார்! லிகிர்தங்களைக் கொடுத்தனுப்பி யிருக்கின்றான். எந்த விதமாக எழுதியிருக்கிறான் தெரிவருமோ? 'ஏழு நாளாகத் தாடக சம்காரம் முடித்தார்களாம். மிதிலாபுரி பட்டணம் வில் வேடிக்கை பார்க்க வேணுமென்று போன இடத்தில், நடுப்பாதையில் அகலிகை சாபத்தைத் தீர்த்து, மிதிலாப்புரிப் பட்டணம் சென்று முப்பத்து முக்கோடி முனிவர்களும் அறிய நாற்பத்து எண்ணாயிரம் கோடி ரிஷிமார்கள் அறிய சீதையுடனே பிறந்த வில்லை வளைத்து, ஆனால் சீதை... ஆனால் வில்லை ஒடித்து மாப்பிள்ளைக் கோலமாக இருக்கின்றான், திருமணத்துக்கு! ஆனால் உடனே தாய் தந்தையர்களில்லாமல் எப்படி நான் திருமணம் செய்துக் கொள்வதென்று இராமன் சொல்லி வருகிறான். இந்த லிகிர்தங்ளைக் கண்டவுடனே சுமிந்திர மந்திரி, தசரதன், வஷிஷ்டன், கோசலை, கைகேசி, சிமித்திரை, ஆனால் பரதன், சத்ருக்கன், ரதங்கள், யானை சேனைகளுடனே மிதிலை மாநகரம் வந்து சேரவேண்டும்.' இப்படிக்கு, விஸ்வாமித்ர மகாமுனிவன். பார்த்தியோ! அட அவனுடைய பின்பாகச் சென்றால் கெடுதியாகச் செய்ய மாட்டான். நன்மையான காரியம்தான் செய்வான். அப்பா தசரதனே! உன்னுடைய

மகனுக்கு, ஆனால் திருமாங்கல்யங்கள், ஆனால் திருமணம் நடக்கப் போகுது, உன்னுடைய அபிப்பிராயங்கள் எப்படி?

தசரதன் : சுவாமி! ரொம்ப சந்தோஷம் அடைந்தேன். ஆனால் எல்லோருமாகப் பிறப்படுங்கள். மிதிலாபுரிப் பட்டணம் போய்ச் சேரலாம்.

வசிட்டர் : ஏவ்வ்வ்.... (அய்யா) இப்பத்தான் எம்மனசு நிம்மதியாக இருக்கிறது.

பபூன் 1 : சாமி! சீக்கிரமா வரச் சொன்னாக.

வசிட்டர் : அடே வர்றம்ப்பா. அடே, வந்து... நீ எங்க போறே... நீ...

பபூன் 1 : திரும்பி அங்கதான் போனும். நீங்க மெதுவா வருவீக. என்னா... வந்து... வண்டி நெறைய இருக்குது. எனக்கு நடராஜா வண்டிதான் இருக்கு.

வசிட்டர் : அடே! ஆனால் நாம ரெண்டுபேரும் மெதுவாகப் போவமே.

பபூன் 1 : சரி புறப்படுவோம்.

வசிட்டர் : நான் கூப்பிடுற சமயத்தில் நீ வரவேண்டும்.

பபூன் 1 : வர்றேன் சாமி... ரெண்டுபேரும் பேசிக்கிட்டே போயிருவோம்.

தசரதர் : ஆனால் மிதிலை மாநகரம் போவதற்கு எல்லோரும் தயாராக இருங்கள்.

வசிட்டர் : ரொம்ப சந்தோஷம். நான் ஆத்து வரையிலும் பொய்ட்டு வர்றேன்.

தசரதர் : சுமிந்திர மந்திரி! அதிசீக்கிரமாக ரதங்களுடனே படைகளுடனே பிறப்படுங்கள். மிதிலை மாநகரங்கள் செல்லலாம்.

சுமந்திரர் : ரொம்ப சந்தோஷம் பிரபு... [இசை]

தசரதர் : சத்ருக்கா, பரத ராஜனே! ஆனால் உன்னுடைய ஸ்ரீராமனுக்குத் திருமணம் நடக்கச் செல்கிறதாம். வெகு சீக்கிரமாகத் தயாராகுங்கள்.

சத்ருக். : சந்தோஷம்.

தசரதர் : கேசலா தேவி!

கோசலை : பிரபு!

தசரதர் : உன்னுடைய மகனான ஸ்ரீராமனுக்குத் திருமணம் நடப்பதாகவும்... ஆனால் விசுவாமித்ரர் தெரியப் படுத்தி வந்திருக்கிறார். மிதிலை மாநகரம் போக வேண்டும், உன்னுடைய அபிப்ராயங்கள் என்ன?

கோசலை : என்னுடைய மகனாகிய ஸ்ரீராமனுக்குத் திருமணங்கள் நடக்கச் செல்கிறதா? நான் ரொம்ப சந்தோஷமடைகிறேன் பிரபு. எல்லோருமாகப் புறப்படுங்கள். மகனுடைய திருமணத்தை ஆனால் கல்யாணங்கள் நாங்கள் பார்க்க வேண்டும்.* புறப்படுங்கள்.

தசரதர் : சுமித்திரை!

சுமித்திரை : சுவாமி! ஆனால் நானும் பின்புறமாக வருகிறேன். மகனுடைய திருமணத்துக்கு நாங்கள் போகாமல் திருமணங்கள் எப்படி முடித்து வருவது? பிறப்படுங்கள் சுவாமி. எல்லோரும் போகலாம்.

தசரதர் : கைகேசி!

கைகேசி : நாதா! நானும் வருகிறேன். (அய்யோ) என் மகனாகிய ஸ்ரீராமனுக்குக் கல்யாணம் நடக்கும் போது நானில்லாமல் திருமணம் எப்படி முடிந்து விடும்? நாங்கள் பெறவு எதற்காக இங்கு இருக்க

★ 'என்ன சத்தம்' என்று கத்துகிறார் தனபால்ராவ்

வேண்டும்? சீக்கிரம் பிறப்படுங்கள். மகனுடைய திருமணத்தை நாங்கள் காண வேண்டும். அக்கா கோசலாதேவி, சுமித்ராதேவி பிறப்படுங்கள். மகனுடைய திருமணத்தை நாங்கள் பார்த்து வருவோம்.

தசரதர் : ரொம்ப சந்தோஷம். பிறப்படுங்கள் எல்லோரும் ரெடியாக... [இசை]

வசிட்டர் : அடே அம்பி!

பபூன் 1 : ஏஞ் சாமி?

வசிட்டர் : ஆனால் தசரதன், ஆனால் எல்லோருமாகப் போகிறார்கள். நாம ரெண்டுபேரும் போக வேண்டும். ஆனால் பஞ்சாங்கம் நாங்கள் பார்த்துச் சொல்ல வேண்டுமோ இல்லியோ ராமனுக்கு. (ஆமா)

பபூன் 1 : ஆமா. ராமருக்கு வந்து... நீங்க உரு. (ஏய் குரு) ராமருக்கு நீங்க குருக்கு.

வசிட்டர் : அடே குரு!

பபூன் 1 : ம்... உருவு {சிரிப்பு} (புர்ரு) நீங்க புர்ருன்னு வுடவேண்டியதுதான், சாமி! நீங்க இல்லாம - குரு இல்லாம - அங்க சிஷ்யர்களுக்குக் கல்யாணம் செய்ய முடியாது. பஞ்சாங்கக் கட்டத் தூக்கிக்கிட்டு வர்றீகளா?

வசிட்டர் : பஞ்சாங்க கட்டெ நான் தூக்கிக்கொண்டு வருகிறேன். பஞ்சாங்கம் பார்த்து நான் சொல்ல வேண்டும். ஆஸ்ரமத்தில் சக்கர குடை கூட இருக்கிறது. என்ன... ஆனால் இந்தச் சித்திர மாசம் வெயிலானது மண்டையை உடைத்து விடும் போலத் தெரிகிறது. தலைக்கி உயர... அப்படித் தூக்கி வைத்துக்கொண்டு வரவேண்டும்... [இசை]

பபூன் 1 : பூ சக்கரக் கொட. சக்கர வேற இருக்குமா, சக்கர வேற இருக்குமா.அதுல (ஆமா, நக்கிகிட்டே போகலாம்.)

வசிட்டர் : அடே பூச்சக்கர குடையென்றால்... ஆனால் ரொம்ப அழகாகவே இருக்கும்.

பபூன் 1 : ஆமாம் நீங்க தூக்கிக்கிட்டு வந்தாயென்ன, ஒங்களுக்கு நெழல் காமிச்சிக்கிட்டே நாங்க வரணும். அப்ப நாங்க வெயில்லதான வரணும். ஏஞ் சாமி! எவ்ளவு தந்திரம் பாத்தியா? அட இவரு ஒடம்பு அழுகிப் போகும். எளகிப் போகும். ம். அதுனாலே இவரு ஒடம்ப, வெயில் படாமத் தூக்கிட்டுப் போகணும். சரி சரி பிறப்படுங்க போவோம்.

வசிட்டர் : அட பிறப்படு பிறப்படு...

பாடல் : **வஷிஷ்டர் வந்தாரே, பெருமையான**
வஷிஷ்டர் வந்தாரே!

வசிட்டர் : அட எங்கடா பொய்ட்டான் அவன். அட என்னடா பெரிய அநியாயமாயிருக்கு. அட சுடுமணல்ல நிக்க வச்சிட்டு அவன் பாட்டுக்கு மெதுவால்ல வர்றான். அடே தடிப்பயலே! சும்பத் தேவடியா மகனே. பல தேவடியா மகனே. கொடலக் கொண்டாடா. என்னடா பெரிய அநியாயமாயிருக்குது. அடேய் (டேய்) அய்யா அம்மா.... நாசமாப் போக... அட தலையில கொண்டாந்து அமுக்குறானே... {சிரிப்பு}

பபூன் 1 : சாமி! நீங்க நண்டு காலு மாதிரி வச்சிக்கிட்டு விசுக்கு விசுக்கு விசுக்குன்னு விழுந்து ஓடுறீங்க. நான்... என்னால நடந்து ஓடி வர்றது, என்னால மெதுவாகத்தான் வரமுடியும்.

வசிட்டர் : சரி என்னடாது... விறுவிறுன்னு வரக்கூடாதோ?

பபூன் 1 : புருபுருன்னு எப்டி வர்றது?

வசிட்டர் : அடே சீக்கிரமாப் பிறப்படுடா. கல்யாணத்துக்கு நேரமாகுது.

பபூன் 1 : பிறப்படுங்க. பிறப்படுங்க...

பாடல் : வஷிஷ்டர் வந்தாரே, பெருமையான
வஷிஷ்டர் வந்தாரே!

வசிட்டர் : அடே மண்ணு சுடுது, அடே கொண்டாடா சீக்கிரம் குடையை.

பபூன் 1 : என்னடா எளவு தொந்தரவாப் போச்சு. மெதுவாத்தான சாமி வரணும்.

வசிட்டர் : {சிரிப்பு} ஒங்க அவசரத்ல என்னால வர முடியுமா? அடே சீக்கிரமா வாடா நேரமாகுது.

பபூன் 1 : பிறப்படுங்க.

வசிட்டர் : அடே மண்ணு சுடுது. (இனிமேல் வந்துக்கிட மாட்டான்) அடே வண்டிக்கார சுப்பு. அடே வாடா இங்கே.*

பபூன் 1 : இருங்க சாமி, அர்ஜெண்டு கேஸு சாமியோவ். (போச்சுடா பொழைப்பு)

வசிட்டர் : அட என்னடா அப்படி அர்ஜெண்டு கேஸு?

பபூன் 1 : கொஞ்சம் பொறுங்க வர்றேன்.

வசிட்டர் : அட வாடா நேரமாகுது.

பபூன் 1 : புர்ர்ர்... (அய்யோ வந்திருச்சி)

வசிட்டர் : அட நாசமாய்ப் போக (கிழிக்கிறான் பீஸு)

பபூன் 1 : புர்ர்ர்.... புர்ர்ர்... (ம்... நல்லாக் கிழிங்க) புர்... புர்... புர்... (எட்டெட்டும் பதினாறு மொழத்ல கிழிக்கிறான்)

★'அட கொஞ்சம் தள்ளி உக்காரு. எடம் இருக்குல்லா' என்கிறார் காளியம்மாள். தான் உட்காருவதற்காக - எழுந்து போய்விட்டு இப்பொழுது தான் உள்ளே வருகிறார்.

வசிட்டர் : அடே என்னடா பண்றே. அடே குண்டோதரா. அடே சோமாறி.

பபூன் 1 : புர்ர்ர்... (அவன் இப்ப வர்றாப்ல இல்ல சாமியோ) புர்ர்... (புளியோதர)

வசிட்டர் : அட என்னடா இது? நான் கூப்பிடுறேன் (அவன் 'ஊம்' கொட்டல. அவங் குசுவுதான் 'ஊம்' கொட்டுது.) {சிரிப்பு} அட என்னடா செய்றே?

பபூன் 1 : சாமி கொஞ்சம் பொறுங்க சாமி. பேண்டுட்டு வர்றேன். (கொஞ்சம் பொறுங்களேன், அவசரமா இருக்கு) {சிரிப்பு}

வசிட்டர் : என்னடா இது. பிராமணாள் பிடித்திருக்க வேண்டிய குடைகள். ஆனால் கேவலமாக இருக்க வேண்டிய வண்டிக்காரன் தூக்குவானோ. ஆனால் இது.... தலைக்கு உயரம் அவன் பிடித்துக் கொண்டு வெளிக்கி இருந்து கொண்டிருக் கிறானே. (சாமி. சித்ரமாசத்து வெயில்ல, வெயில்ல போய்ட்டு வந்தா எரியுமில்ல பாவம்) அடே வாடா.

பபூன் 1 : சே! அவசரம் ஆத்தரம் தெரியாத சாமியாரா இருக்கீங்களே நீங்க. {சிரிப்பு} ஏஞ்சாமி (கல் யாணத்துக்குப் போற அவசரம்) கல்யாண மாவது ஆட்டுக்குட்டியாவது. மனுஷனுக்கு இங்க நெருக்கிருச்சி. (ஒனக்கு நெருக்னா ஒனக்குக் கல்யாணத்ல பாயாசம், பலகாரம் போச்சு)

வசிட்டர் : அடே! நீ என்னடா அங்க செய்து கொண்டிருந்தாய்?

பபூன் 1 : சாமி! அங்கயிருந்து வரும்போது... என்ன... கூழ் சாப்பிட்டு வந்தேன். அங்கயிருந்து வேகமா நடந்து ஓடியாந்தேன் பாருங்க... வயித்தக் கலக்கிருச்சி. {சிரிப்பு} அந்தா அந்த கருவேல

மரத்துக்குப் பக்கத்ல உக்காந்து பேண்டுக் கிட்டேயிருந்தேன். (அட அடி முட்டாப் பயல)

வசிட்டர் : அடே! தடிப்பயலே, அடே குடை எங்கடா?

பபூன் 1 : அய்யய்ய... {சிரிப்பு} (கொடைய மறந்திட்டு வந்திட்டான்) சாமி! கொடை வந்து, பேண்ட எடத்ல இருக்குது. {சிரிப்பு} (அட எங்க பேண்ட?)

வசிட்டர் : அட 'பீ' எங்கடா பேண்ட?

பபூன் 1 : கொட வச்ச எடத்ல (கொட எங்க வச்ச?) 'பீ' பேண்ட எடத்ல {சிரிப்பு} (அட கொடய எடுத்துக் கொண்டா)

வசிட்டர் : அடே! கொடய எங்கடா?

பபூன் 1 : பீப் பேண்ட எடத்ல இருக்கு சாமி. {சிரிப்பு}

வசிட்டர் : அட கொடய எங்கடா? பீ எங்கடா பேண்ட?

பபூன் 1 : கொட வச்ச சாக்ல பேண்ட்ருக்கேன். (ஆமா, 'பீ'க்கி வெயில் அடிக்கும்னு கொடய வச்சிட்டு வந்திருக்கான்)

வசிட்டர் : அட நாசமாப் போக. தூக்கிட்டு வாடா. அது நரகல்ல விழுந்திடுமே. (அட, ஐயர் ஆள் புடிக்கிற கொட. எடுத்துட்டு வாப்பா போயி)

பபூன் 1 : தூக்கிட்டு வரணுமோ (ம்) இவரு கொடையாவது இவராவது. அதுலப் போட்டு நல்லா துவட்டிக் கொண்டாரேன். (அடப் படுபாவி) புடிங்க சாமி... (ஏயப்பா.... வெறும் பீ நாத்தம்)

வசிட்டர் : ஏயப்பா... அட என்னடா, வெறும் நாத்தமாயிருக்குது (அட குடுப்பா)

பபூன் 1 : சாமி ஒண்ணுமில்ல. நீங்க அவசரப்பட்டதுனால அங்க வச்சிட்டு வந்திட்டனா.... (காத்தடிச்சி

கீழே) காத்தடிச்சி அங்க நரகல்ல விழுந்திட்டு. {சிரிப்பு} (அட, வாய்க்கால்ல உலர்த்திட்டு வா) இதக் கொண்டுபோய் வாய்க்கால்ல நல்லா அலசி, சோப்பு போட்டுட்டு, கொடய நல்லா சோப்பு போட்டுக் குளிச்சிப்புட்டு... என்னா... நீங்க கொண்டுட்டுப் போங்க. (அடே)

வசிட்டர் : அடே என்னடா நீங்க? ஏன்ட்ட குடுத்து நானா கழுவுறது. {சிரிப்பு}

பபூன் 1 : அப்புறம் நானா கழுவுறது. {சிரிப்பு} (அட நீ பேண்ட பீய சாமியா கழுவுவாக) வேணும்னா அலசித் தூக்கிட்டுப் போங்க. வேண்டாம்னா போட்டுட்டுப் போங்க. {சிரிப்பு} (அட அலசிக் கொண்டாந்து குடுரா)

வசிட்டர் : அடே நாசமாய்ப் போக. கொஞ்சம் அலசிக் குடுரா. (அட கல்யாண ஜோலிக்குப் போறவுங் கப்பா) ஏய் வாடா. வாடா... ஏ... அப்பா... (ஏ... அப்பா) ஏ... அப்பா... (படுநாத்தம் நாறுது) அட படுநாத்தம் நாறுது. அடக் கொடயும் வேண்டாம் நெழலும் வேண்டாம். நாசமாய்ப் போடா.

பபூன் 1 : அதானக் கேட்டேன். நல்ல அழகான பத்து நூறு ரூபா பெறும்டா கொடை. (இவனுந் தந்திரக் காரந்தான்) ஞாயமாக் கேட்டா குடுக்க மாட்டாரு. ஆனால் பீயில போட்டு ஒரு அமுக்கு அமுக்கிக் கொண்டாந்து குடுத்தம்னா... கொண்டாந்தேன். விழுந்து ஓடிப் பொய்ட்டாரு. இதக் கொண்டு தண்ணீல அலசி நம்ம வீட்ல நான் வச்சிக்கப் போறேன்... [இசை]...

சாமி! சாமி!

விசுவா. : அட என்னடாது?

பபூன் 1 : எல்லாருங் கூட்டங் கூட்டமா வருகிறார்கள் என்ன...

விசுவா. : ஆனால்... வஷிஷ்டன் வருகிறான் இல்லியோ?

பபூன் 1 : வர்ராக சாமி.* கோவிச்சுக்கிறாம.... தெர மேல மட்டும் சாயாதீங்க. {சிரிப்பு} அது ஒரு செவுரு இல்ல. ஒரு துணிதான்... என்ன? அதுமேல சாஞ்சீங்கன்னா உள்ளதும் கிழிஞ்சிப் பொயிரும்.

பபூன் 2 : நான் வேண்ணா தச்சித் தாரேன்.

பபூன் 1 : இவரு தச்சிப்புடுவாரு [அடிக்கிறான்]

பபூன் 2 : சப்பு சப்புன்னு அடிக்காதடா. எடுடா டுப்பாக்கிய.... டுர்ர்ர்... {சிரிப்பு}

பபூன் 3 : மாப்ள, அஞ்சி பைசா.

பபூன் 2 : ஏய் மொளு மொளு! [அடிக்கிறான்] {சிரிப்பு - ஏய் மொளு மொளு என்ற குரல்கள்}

தசரதர் : சுவாமி!

விசுவா. : ஏவ்வ்வ்... மங்களமுண்டாகட்டும். அப்பா ராமச்சந்திரா! அப்பா தசரதனே! ஆனால் உன்னு டைய குழந்தைகள்... ரெண்டு குழந்தைகளை யும் அனுப்புவதற்கு ரொம்பவும் கஷ்டப்பட்டு வந்தாய். ஆனால் வேண்டிய... திருமணத்துக்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்திருக்கிறேன். உன்னுடைய அபிப்ராயங்கள் எப்படி?

தசரதர் : சுவாமி தங்களுடைய இஷ்டம்போல் நடந்துக் கொள்ளலாம்.

விசுவா. : சரி பிறப்படுங்கள். சிம்மாசனங்கள் போய் உக்காருங்கள். போங்கள். போங்கோ... [இசை]...

★ 'இந்தப் பக்கம் பாத்து உக்காருங்க. தெர கிழிஞ்சிறும்' என்று சப்தமிடுகிறார் காளியம்மாள்.

தசரதர் : அப்பா, கோசமாதேவி!

கோசலை : சுவாமி!

தசரதர் : ஆனால் விசுவாமித்ரர்கிட்ட சொல்லுங்கோ. ஆனால் திருமணத்துக்குள்ளான ஏற்பாடெல்லாம் செய்யுங்கள். கோசலை, கைகேசி, சிமித்திரை... [இசை]

விசுவா. : அடே வஷிஷ்டா! எப்படா வந்தே?

வசிட்டர் : நான் இப்பத்தான் வந்தேன்.

விசுவா. : அடே! நீ இங்க நிக்கறே.

வசிட்டர் : அட நான் இங்கதான் நின்று கொண்டிருக்கிறேன். ஆசிர்வாதம்! ஆசிர்வாதம்! ஆசிர்வாதம்!

விசுவா. : ஆசீர்வாதம்! ஆசீர்வாதம்! ஆசீர்வாதம்! (ரெண்டு பேரும் அரிசி கோதுமை சாப்பிடுங்க) ஆசிர் வாதம்! ஆசிர்வாதம்! அப்பா! ஆனால்... ராமனுக்கும் சீதாலெச்மிக்கும் திருமணம் நடக்கச்செல்கிறது. ஆனால் பஞ்சாங்கம் கொண்டு வந்திருக்றயோயில்லயோ? பஞ்சாங்கம் பார்த்துச் சொல்லக் கூடாதோ? நேரம் காலங்கள் இதுயெல்லாம் பொருத்தமாச் சொல்ல வேண்டும்.

வசிட்டர் : பஞ்சாங்கம் கொண்டு... ஆனால் பழைய பஞ்சாங்கம்தான் கொண்டாந்திருக்கிறேன். (புதுப் பஞ்சாங்கம் கொண்டாரல) புதுப் பஞ்சாங்கங்கள் கெடையாது.

விசுவா. : அட, எதுவாயிருந்தாலும் ஒன்றுதானே, அட பார்த்துச் சொல் பார்ப்போம்...

பாடல் : பார்த்துச் சொல்வேனே பஞ்சாங்கத்தைப்
பாராமல் சொல்வேனே!
பாத்துச் சொல்வேன் - வெகு நேர்த்திகளாகவே

பார்த்துச் சொல்வேன்
ராமருக்கும் சீதைக்கும்
நல்ல லெக்னம் தானே!
நாளைக்கு இன்னேரம்
வனவாசம் போவார்கள்
பார்த்துச் சொல்வேனே - பஞ்சாங்கத்தைப்
பாராமல் சொல்வேனே!

வசிட்டர் : அடே அப்பா விஸ்வாமித்ரா. ராமனுக்கும் சீதாலெச்மிக்கும் ரொம்பப் பொருத்தந்தான். (பொருத்தந்தான்) ஆனால் கல்யாணம் முடிந்து அயோத்திக்குப் போகும்போது, பிரும்மாண்ட மான, ஆனால் சண்டையிருக்கிறது. (ஆமா) பெரிய தகர்ாறு வரும்.

விசுவா. : சரி

வசிட்டர் : ஆனால் அது முடிந்து அயோத்திக்குப் போனவுடனே, ராமன், லெச்மணன், ஆனால் சீதாலெச்மி மூன்று பேர்களும் பதினான்கு வருஷம் வனவாசம் போய்விடுவார்கள். அட வெளியே சொல்லாதே. வெளியெ சொல்லாதே. வெளியெ சொல்லாதே. (வெளியெ சொன்னா போச்சி) ஆனால் இந்த வனவாசம் போகக் கூடிய சமாச்சாரங்களுக்கு, தசரதனுக்குத் தெரிந்தால் உடனே கல்யாணம் நிறுத்தி விடுவார்கள். அப்பா! ஆனால்... ஒனக்கும் எனக்கும் தெரிந்த விஷயமாக இருக்க வேண்டும்.

பபூன் 2 : சத்தியமா நான் சொல்லிப்புடுவேன். (அடப் பாவி, டேய் கெடுகாலி) ஏய்! ரெண்டுபேரும் குசுகுசு மந்திரமாப் போடுறீங்க. {சிரிப்பு} ஏய்! இவுங்க நல்ல தந்த்ரமடா இது. (ஆமா) ஏஞ்சாமி வெளியச் சொன்னா என்ன?

வசிட்டர் : அடே! வெளியேச் சொன்னா எங்களுக்கு வரக்கூடிய வருமானமெல்லாம் போய்விடும். கல்யாணம் நின்னு போகுமடா.

பபூன் 2 : ஓகோ. ஒங்க வருமானத்துக்காக வெளியே சொல்லப்படாதுங்றீங்களோ? சத்தியமா நான் சொல்லிப் போடுவேன். (டேய், சொல்லாத ஒனக்கு ஒரு...)

வசிட்டர் : டேய் சொல்லாதடா... ஒனக்கு ஒரு வேஷ்டி தருகிறேன்.

பபூன் 2 : ம்ஹூம். வேட்டி கீட்டி எனக்கு வேண்டாம்.

வசிட்டர் : ஏய் நீ சொல்ல வேண்டாம். (ம்... நூறு அம்பது வாங்கிக்கிரலாம்.) நான் உனக்கொரு துண்டு ஒண்ணு தருகிறேன்.

பபூன் 2 : நூலும் வேண்டாம். வேட்டியும் வேண்டாம். சத்தியமா நான் இப்பச் சொல்லப் போறேன். (ஏய் வெளியச் சொல்லாத)

வசிட்டர் : அடே வெளியச் சொல்லாதடா. ஒனக்கொரு பாயாசம் தருகிறேன்.

பபூன் 2 : என்ன இது?... இருக்க இருக்கக் கொறையுது. (ஆமா... பின்ன கிராக்கி பண்ணப் பண்ண அதுவுமில்ல) இன்னுங் கொஞ்சம் கிராக்கி பண்ணுவோம். (ம்... அதுவுங் கெடைக்காமப் போயிரும்) ஏய், சொல்லப் போறேண்டா டேய்!

வசிட்டர் : டேய்! ஏய், வெளிய சொல்லலேன்னா ஒரு வட தர்றேண்டா. (சொல்லாத)

பபூன் 2 : கடைசீல ஒண்ணுமில்லாமத்தான் போகுமோ? (அப்படித்தான் போவும்)

பபூன் 3 : ஏய்! வெளிய சொல்றேன். எனக்கொரு அஞ்சு பைசா கொடு. {சிரிப்பு}

பபூன் 2 : ஆமா இவனுக்குக் குடுக்கணும். [அடிக்கிறான்]

வசிட்டர் : ஏய் வெளிய சொல்ல வேண்டாம். திருமணத்துக் குண்டான ஏற்பாடெல்லாம் செய்யுங்கள்...

பாடல் : வாருமய்யா தேவர்களே - மணவடையை
ராமருக்கு ஜோடிக்காகவே!
தேசத்திலுள்ள வீரர்களும் வந்து
மணவடையை ராமருக்கு ஜோடிக்கவே!
மங்களமே சுப மங்களம்
ஸ்ரீராமச்சந்திரருக்கு ஜெய மங்களம்!
மாறாதி ராமனுக்கு
மன்னன் பரந்தாமனுக்கு
கோசலை குமாரனுக்கு
ஜெய மங்களம்!

வசிட்டர் : அப்பா! முப்பத்து முக்கோடி முனிவர்கள் அறிய, நாற்பத்து எண்ணாயிரங் கோடி ரிஷிமார்கள் அறிய, ஆனால் திருமாங்கல்யத்தை எடுத்து, சீதாலெச்மியின் கழுத்தில் மாங்கல்யத்தைப் பூட்டிவிடு பார்ப்போம்... [இசை] [உரைப்பாட்டு]

: காசிமாநகரம் உள்ளளவும், இவ்வுலகம் உள்ளளவும், சந்திரன் சூரியன் அறிய பூமியில் பிறந்த சீதாலெச்மி தாயார் கழுத்தில் ஸ்ரீ ராமரன்னவர்கள் திருமாங்கல்யத்தைப் பூட்டி வைத்து...

பாடல் : மங்களமே சுபமங்களம் - ஸ்ரீராமச்சந்திருக்கு
ஜெயமங்களம்!

வசிட்டர் : ஏவ்வ்வ்... அப்பா.... எல்லோரும் பிறப்படுங்கள். ஆனால் பால் பாயாசம் சாப்பிடலாம். எல்லோரும் நிறைய சாப்பிடுங்கோ... போங்கோ, போங்கோ... சாம்பார்... சாம்பார்... சாப்பாடு முடியட்டும்.

பபூன் 2 : எனக்குச் சோறு போட்டீங்கன்னா கெலாட்டா பண்ணுவேன். கெலாட்டா பண்ணுவேன். (ஐயர்மாருங்க சாப்பிடு முன்னே போட மாட்டாங்கப்பா) என்னமாரு? (ஐயர்மாரு) தொவர மாரா? (டேய்) ஐயமாராவது தொவரமாராவது? ஏஞ்சாமி (சூத்ராளுக. சாப்பிடும் முன்னே

போடமாட்டாரு) என்னவாளு? (சூத்லவாளு) சூத்லவாளு {சிரிப்பு} சூத்ல வாளு இருக்காக்கும்.

வசிட்டர் : அட போடா... தடிப்பயலே. இல்லாத அகராதி யெல்லாம் பேசுறான்.

பபூன் 2 : ஏஞ்சாமி வகுத்தப் பாத்து பதுக்கு பதுக்குன்னு ஓதைக்கறீங்களே. ஒங்களுக்கு கொஞ்சமாவது மண்டேல சரக்கில்லையே...

பபூன் 3 : மாப்ள!

பபூன் 2 : ஏய் மொளு மொளு! {சிரிப்பு - இந்த மொளு மொளு சரக்கு எப்படிடா இருக்கு எட்டியா பாக்ற மொளு மொளு மொளு மொளு என்ற குரல்} இங்க வா சாணிய பிதுக்கிர்றேன்.

தசரதர் : அரமணையை விட்டு நாங்கள் வந்து வெகுநாட்களாகிவிட்டது. நானில்லாத பட்டணம் அரசனில்லாத கிராமங்களாகப் போய்விடும். அதிசீக்கிரமாக என்னுடைய அயோத்தி மாநகரம் புறப்பட வேண்டும். அதிசீக்கிரமாக என்னுடைய அயோத்தி மாநகரம் புறப்பட வேண்டும் சுவாமி.

விசுவா. : அட ஒன்னையத்தான. அட, திருமணங்கள் முடிந்தது. ஆனால் அயோத்தி மாநகரம் போக வேண்டியதுதானே. சீக்கிரமாகப் பிறப்படுங்கள். சீதாலெச்மி, ராமரை, பின்பதாக நான் அனுப்பி வைக்கிறேன்.

தசரதர் : ரொம்ப சந்தோஷம் குருதேவா, பிறப்படுங்கோ. பிறப்படுங்கோ...

பாடல் : **நடந்தாரே சுவாமி**
அயோத்தி நகர்
சேர்ந்தாரே சுவாமி!

ஜனகர் : குருதேவா! ஆனால் ஸ்ரீராமன் அயோத்திக்குப் பிறப்படுகிறான்.

விசுவா. : ஆனால் உன்னுடைய மகளாகிய சீதாலெச்மி யிடம் இரண்டு புத்திமதியான வார்த்தைகளைச் சொல்லி இராமனுடைய பின்பதாகவே அனுப்பிவா.

ஜனகர் : ரொம்ப சந்தோஷம் சுவாமி... அம்மா ஜானகி! சீதாலெச்மி! இவ்வளவு காலமாக உன்னை நான் வளர்த்தேன். வாலிபம் செய்து வந்தேன். ஒனக்கு எசைந்த கணவனை நான் தேர்ந்தெடுத்து, நான்... திருமணம் நான் செய்து கொடுத்து வந்தேன். ஆனால் கணவனுடைய வார்த்தையைக் கேட்டு அமதியாகவே இருக்க வேண்டும். சீக்கிரமாக நாயகன் பின்பதாகச் சென்று வர வேண்டும் ஜானகி.

சீதை : சென்று வருகிறேன் தந்தையே.

ஜனகர் : பிறப்படுங்கள். அய்யய்யோ பரமேஸ்வரா! ஜெகதீஸ்வரா...! அதிகாலையில் எழுந்திருந்து... ஆனால் சீதாலெச்மி முகத்தை நான் கண்டு விட்டால், அன்று செய்த பாவங்கள், அன்று செய்த கர்மவினைகளெல்லாம் நீங்கிக் கொண்டு வந்தது. இனிமேல் அதிகாலையில் எழுந்திருந்து யாருடைய முகத்தில் நான் விழிக்கச் செல்கிறேன்.

பபூன் 2 : எம் மொகத்ல முழிங்க, (ஆமா, இவம் மூஞ்சில முழிங்க. பொடிக்கி பொகையில கெடைக்காது) {சிரிப்பு} சீதாலெச்மிக்கு மொகத்ல முழிச்சா செய்த பாவமெல்லாம் விலகிப் போகும்னு வருத்தப்படுறீக. (ஏய்! ஏய்! மகாராஜா!) சந்தோஷமாக மகளைக் கல்யாணம் முடிச்சிக் குடுத்திட்டு அவுகள முன்னால போகச் சொல்லிப் புட்டு நீங்க இப்படிப் பின்னால இப்படி அழுகலாமா? (அழுக வேண்டாம் மகாராஜா) அடாடாடா. எத்தினி நாள் வரயிலும் ஒங்க அரண்மனையில அந்த அம்மா இருந்திருவாங்க. (இருந்தாலும் அடுத்த வீட்டுக்குப் போறதுதான்)

அடுத்த வீட்டுக்குப் போற கொழந்ததான். இப்படி அழுகலாமா? (அழுவக்கூடாது) வேணும்னா யார் மொகத்லயும் முழிக்க வேண்டாம்னு நெனச்சீங்கன்னா எம் மொகத்ல முழிங்க... என்ன... முழிச்சிட்டுப் போனீங் கன்னா போதும்... தெரு வழியா நெனச்ச பொம்பளைங்க வெளக்கமாத்தத் தூக்கிட்டு வருவாங்க. {சிரிப்பு} அவ்ளவு சிங்க ராசியா நான் பிறந்திருக்கிறேன். என்னையப் பாக்கணும்னா எல்லாரும் மேல் லோகத்லயிருந்து வந்தவுக.

பபூன் 3 : ஏல உளுவத்தலப் பயல! அஞ்சி பைசாவக் குடுக்க முடியல படுவா.

பபூன் 2 : போடா தடிப்பயலுக்குப் பொறந்த பயலே. {சிரிப்பு} எங்க போனாலும் பின்னாலயே வாறான். மக்கா கோழி மேல கோழி வைக்கப் படுவா. இனும வா. ஒஞ் சாணிய நோண்டிப் போடுதேன்...

பாடல் : **நடந்தாரே ராமர்**
அயோத்தி நகர்
சேர்ந்தாரே ராமர்

பாவையாட்டி : முப்பத்து முக்கோடி முனிவர்கள் அரசர்கள் அத்தனை பேரும் அயோத்திமா நகரம் போகும்போது, ஆனால் பரசுராமன், அந்தச் சீதையுடனே பிறந்த வில், ஒருவரும் வளைக்கக் கூடாதென்று அவன், தவத்தினால் பிறந்து தவஞ் செய்து வரமெல்லாம் வாங்கிக் கொண்டு வருவ தற்குள்ளாக யார் யாரோ வில்லை வளைத்துச் சீதையைக் கல்யாணம் செய்து போகிறானே என்று, போகக்கூடிய ஜனங்களைப் பூராகவே வழிமறித்து வருகிறார் பரசுராமர். இதைப் பார்த்த தசரதர் கன்றிழந்த பசுவைப் போல் கதறிச் செல்கிறார் தசரத மகாராஜர்.

பாடல் : அடேடே போகாதே நில்லு - ஏதடா
உன் அன்பு வில்லு?
எதுக்கு நீ என்னை வெல்லு
இராமனென்று பேரு சொன்னால்
வில்லை வளைத்துப் போடா வீரா
அடேடே போகாதே நில்லு!

பரசுராமர்: ஏய் யாருமங்கே போகக்கூடாது.

பாடல் : அடடே போகாதே நில்லு - ஏதடா
உன் அன்பு வில்லு?
அடேடே போகாதே நில்லு.

ஏய் யாரும் போகக் கூடாது. யார்ரா அவன் வில்லை வளைத்துச் சீதையைக் கல்யாணம் செய்து போகக் கூடியவன்? அவன் எப்படிப்பட்டவன்? சாமர்த்தியம் உடையவனாக இருக்கிறான். (ஏய்) ஹஹ் ஹஹ் ஹஹ் ஹஹ் ஹா (ம், நாளைக்கிக் கொஞ்சம் வச்சிக்கிருங்க) ஏய்! சீதையுடனே பிறந்த வில் சொத்த வில்லென்று நினைத்து, சிவனுடைய ஆலயம் சென்று நான் அருந்தவஞ் செய்து, முனிவர்கள் வாங்கிக் கொண்டு வந்த அந்த வில்லுக்குப் பதிலாக - சீதையுடனே பிறந்த வில்லுக்குப் பதிலாக - இந்த வில்லை வளைத்து, சீதையைத்தான் கல்யாணம் செய்ய வேணு மென்று எவ்வளவு ஆசையோடு நானிருக்க, யாரோ ஒருவன் அந்தச் சீதையுடனே பிறந்த வில்லை ... ஆனால் வளைத்து, சீதையைக் கல்யாணம் செய்துகொண்டு போகிறான்... ஹா... (ஏய்) போகாதே நில்லங்கே... ஏய்... ஏய்...

பாடல் : அடடா போகாதே அங்கே
பொக்கை வாய்க்கிழவி
தாடகையைக் கொன்ற இராமா
மெத்த மெத்தத் துள்ளாதே!

இராமர் : தந்தையே! இதென்னா பெரும் ஆபத்துக்கள்?

தசரதர் : மகனே! ஜெகதீசனே! கைலயங்கிரி வாசகா! இறைவா! இது உன்னுடைய சோதனைகள். சண்டாள அரக்கன்... ஆனால் பரசுராமன் நாகத்தைப் போல் சீறிக்கொண்டு வருகிறானே. அய்யய்யோ... [இசை]

இராமர் : தந்தையே! யாரோ ஒருவன் மந்த்ர வாள் உருவிக் கொண்டு, ஆனால் இடிமின்னல் எப்படிக் குமுறிக் கொண்டு வரும், அப்படி வேகமாக வருகிறான். அதைக்கண்டு எதற்காக நீங்கள் வருத்தப்பட வேண்டும்? ஒங்களுக்கும் அவனுக்கும் என்ன *தகறால்? அயோத்தி மாநகரம் போகும்... ஆனால் போகும் சமயத்தில் படுபாவிகள் வந்து, போகக் கூடிய ஜனங்கள் பூராவும் வந்து அடித்து விரட்டு கிறான். அவன் யார் அது? எதற்காக அவனைக் கண்டு நீங்கள் கவலைப்பட வேண்டிய, வருத்தப் பட வேண்டிய காரண மென்ன? என்முன்... ஆனால் தெரியப்படுத்தக் கூடாதா? தந்தையே!

தசரதர் : மகனே இராமா! சூரிய குலத்தை நிகரில்லாமல் கருவறுத்த வீரன்; மகாக் கெட்டிக்காரன்; மகா சாமர்த்தியம் உடையவன்; அவன்தான் பரசுரா மன். மகா சாமர்த்தியம் உடையவன். மகாக் கெட்டிக்காரன். அய்யோ என்னுடைய தலைகளை எடுத்தால் கவலையில்லையே. உன்னுடைய தலைகளுக்குப் பழிவாங்கி விடுவானே இராமா! பெரும் மோசங்கள் ஆகிவிட்டதே!... [இசை]

இராமர் : என்ன? நம்முடைய சூரிய குலத்தைப் பற்றி, ஆனால் கருவறுத்து வந்தவன்... சிரசுகளை அறுத்து வந்தவன். உம்முடைய தலையை வெட்டி விடுவான். என்னுடைய தலையையும்

★ தகரால் = தகராறு

வெட்டி விடுவானா?... எதற்காக? நீங்கள் செய்து வந்த குற்றம் என்ன? அதன் வரலாறுகளைச் சொல்லுங்கள்.

தசரதர் : சொல்லி வருகிறேன். கவனமாகக் கேட்க வேண்டும். அதோ வருகிறானே... ஆனால் பரசுராமன், அந்தப் பரசுராமனுடைய, ஆனால் தாய் பேரானது ரேணுகா தேவி என்று சொல்லி வருவார்கள்...

பாடல் : **காது கொடுத்துக் கேட்டேன்**
ஆகா குவாக்குவா சத்தம் - இனி
கணவனுக்குக் கிட்டாது
குழந்தைகளுக்குத்தான் முத்தம் *

அந்தப் பரசுராமனுடைய தகப்பன் பேர் யுவசக்ரரிஷி என்று தெரியப்படுத்தி வருவார்கள். யுவசக்ரவரிஷியானவர், அவருடைய தாய் பேரானது ரேணுகாதேவி. இவருடைய நாமதேயம் பரசுராமர். (ஆமாம்) ஆனால் ரேணுகா தேவியானவர் அனுதினமும் அதிகாலையில் எழுந்திருந்து, கங்கையில் சென்று, சாளபானங்களைச் செய்து, பெருவிரலினால், ஆனால் தண்ணீர்களைச் சுழற்றி வருவாள். சுழட்டினால் ஒரு தங்கக் குடமாகவே ஏற்படும். குடத்து நிறையாகத் தண்ணீர்களை எடுத்துக் கொண்டு... யுவசக்ரவரிஷியானவர் பூசை செய்து கொண்டிருப்பார். அவருடைய அருகில் கொண்டு வைத்து விடுவாள்... இந்த, ஆனால் ரேணுகாதேவியானவள்... ஒருநாள் தினத்தில் கங்கையில் சென்று குளித்து, உடைய சாளபானங்களைச் செய்து இருக்கும் சமயத்தில் நம்முடைய இனத்தான் சூர்யகுலத்தில் இருக்கக்கூடிய காட்டு அர்ஜுன

★ பாபுராவ் வெத்தலை கேட்க காளியம்மாள் கொடுக்கிறார். அந்த இடைவேளையில் இப்பாடல். இங்கு பரசுராமனின் தகப்பன் பேர் மறந்து போக, பாபுராவ் இந்தப் பாடல் நேரத்தில் அதை யோசித்ததாகச் சொன்னார்.

னானவன் ரதத்தில் உட்கார்ந்து பவனியாக வந்தான் உலகத்தில். அப்பேர்ப்பட்ட, ஆனால் காட்டு அர்ஜுனனிடம் போய் முறைத்தவன் உலகத்தில் யாருமே இல்லை. அவனுடைய நிழலானது தண்ணீருக்குள்ளாகவே தெரிந்தது. இந்த ரேணுகாதேவியானவள் குளித்துக் கொண்டு, அந்தத் தண்ணீருக்குள்ளாகத் தெரிந்த, ஆனால்... இந்த ரேணுகாதேவியானவள் இப் பேர்ப்பட்ட ஒரு அழகுள்ள மனிதன் உலகத்தில் இருக்கிறானா அப்படியென்றே மனதில் நினைத்தாள். இவளுடைய சக்தி, நீதி, நேர்மை பூராவாகவே அழிந்துவிட்டது. குளித்துச் சாள பானங்களைச் செய்து, பெருவிரலினால் தண்ணீர்களைச் சுழட்டவும் தங்கக்குடமாகவே திரண்டு வரவில்லை. ஆனால் என்னுடைய சத்தியம், நீதி, நேர்மை பூராகத் தவறிவிட்ட தென்று, ஆனால் தலைரோமங்களை விரித்துப் போட்டுக் கொண்டு, யுவசக்ரரிஷியானவர் பூசை செய்யக்கூடிய ஒரு இடத்துக்கு ஓட்டமாக ஓடிவந்தாள். யுவசக்ரவரிஷியானவர் பூசைகள் முடிந்து கண் திறந்து பார்க்க, ஆகா கட்டின மணவாளன் ஒருவன் இருக்க, கணவன் இருக்க, அடுத்தவன் மீது இவள் ஆசைப்பட்டு விட்டாள். அதற்காக இவளது கற்பானது அழிந்து விட்டதென்று, உடனே இந்தப் பரசுராமனை அழைத்து 'மகனே! ஆனால்... கட்ன கணவன் இருக்க மற்றவர்கள் மீது இவள் ஆசைப்பட்டி ருக்கிறாள். இப்பேர்ப்பட்ட மனைவி எனக்குத் தேவையில்லை. இப்பேர்ப்பட்ட தாய் உனக்குத் தேவையில்லை. இவளைக் கொண்டுபோய் இவளுடைய தலையை வெட்டிவிடு' அப்படி யென்றே சொல்லிவந்தான் யுவசக்ரவரிஷி யானவன். தகப்பன் ஒரு வார்த்தையைக் கேட்டு, இந்தப் பரசுராமன் தாயை அழைத்துக் கொண்டு போய் தலையை இரண்டாக வெட்டிவிட்டான்.

தலையை வெட்டிவிட்டு, ஓட்டமாக ஓடிவந்தான் தகப்பனிடம். தந்தையை, 'உன் வார்த்தையைக் கேட்டு என் தாய் தலையை நான் வெட்டி விட்டேன். இப்போ எனக்குத் தாய் வேண்டுமே' என்று கேட்டான் பரசுராமன். அப்போ யுவசக்ர வரிஷியானவர் சொல்லி வருவார் 'மகனே! நான் சொன்னவுடனே தாயுடைய தலையை வெட்டி வந்தாய். நான் கொடுக்க வேண்டியது எலுமிச்சம் பழங்களும்... ஆனால் இந்த மந்திரக்கோல் கொண்டுபோய், ஆனால் உன்னுடைய தாய் வெட்ன இடத்தில் சிரசானது ஒட்டவைத்து, மந்த்ர உபதேசங்கள் செய்து பிரம்பினால் அடித்தால் உயிர் உண்டாகும். உன் தாயை அழைத்துக்கொண்டு வரலா'மென்றே சொல்லி வந்தார் யுவசக்ரவரிஷியானவர். தகப்பன் சொல் தவறாமல் வெட்ன இடத்தையே பார்க்க தலையானது தெய்வலோகம் மறைந்துவிட்டது. உடலானதுதான் பூமியில் இருக்கிறது. ஆனால் அடுத்து ஒரு இடத்தில் ஒரு பெண்ணைக் கொண்டுவந்து சூதடியாகவே கொலை செய் திருக்கிறார்கள். அந்தப் பெண்ணுடைய தலையைக் கொண்டுவந்து தாயுடைய உடலிலே ஒட்ட வைத்து மந்த்ர உபதேசங்கள் செய்து, ஆனால் உயிர்கள் உண்டாக்கிக் கொண்டுவந்து நிறுத்தி னான் யுவசக்ரவரிஷியுடைய முன்பதாக! 'மகனே! உன்னுடைய தாயுடைய உடல் இதுதான். தலையானது தெய்வலோகம் மறைந்துவிட்டது' அப்படியென்றே சொல்லி வந்தான் யுவசக்ரவரிஷியானவன். அதனால் இந்தப் பரசுராமன், 'தந்தையே என் தாயுடைய தலை கிடைக்க வேணுமென்றால் என்ன செய்து வருவது' அப்படியென்று கேட்க,* ஆனால்

★ 'சத்தம் போடாதீங்க' என்று பபூன் 2 பொம்மையை வைத்து பாபுராவ் சொல்கிறார். சிறுவர்களிட மிருந்து சிரிப்பு எழுகிறது.

தெய்வ லோகம் மறைந்துவிட்டது. சூரிய குலத்தில் இருபத்தொரு தலையானது இருக்க வேண்டும். அப்போதுதான் உன்னுடைய தாயு டைய தலையானது கிடைக்குமென்று செல்லி வந்தான் யுவசக்ரவரிஷியானவன். இருபத்தொரு தலை வெட்டினால் அவனுடைய... பரசுராமனு டைய தாயுடைய தலை கிடைக்கும். என் உடலைச் சேர்ந்த சூரியகுலத்தில் பிறந்த அரசர்கள் இருபது பேர்களுடைய தலையை வெட்டிவிட்டான் இந்தப் பரசுராமன். இருபத்தி யொன்னுக்கு என்னுடைய தலைதான் மிச்சம். ஆனால்... என்னை வெட்ட வேண்டும், அவனு டைய தாய் தலை கிடைக்க வேண்டுமென்றிருக் கிறது. இந்தப் பரசுராமன் வரவேண்டிய ஒரு நேரத்தைப் பார்த்து ஒரு பெண்ணை அழைத்து வருவது, கையில் கங்கணங்களைக் கட்டி மாப்பிள்ளைக் கோலமாக நான் இருந்து கொள்வது. பரசுராமன் வருவானா? இவன் கல்யாண ஜோலியாக இருக்கிறான். இவனை வெட்டக் கூடாதென்று சொல்லி ஒதுங்கி ஓடிப் போவான். இவனைக் கண்டு பயந்து அறுபது வருஷமாக நான் அறுப்து பெண்களைக் கொண்டுவந்து கல்யாணம் செய்தேன். கடைசியில்... ஆனால் நீங்கள் பிறந்தீர்கள். ஆனால் உன்னுடைய செல்வமாக நான் திருமணம் செய்து கொடுத்து, அயோத்திக்குப் போகும் சமயத்தில் நடுப்பாதையில் வந்து மறைத்துக் கொண்டானே. என்னுடைய தலை போனாலும் கவலையில்லையே. உன்னுடைய தலையை வெட்டி விடுவானே என்று தான் வருத்தப்படுகிறேன் ராமா.

இராமர் : அப்படியா! நீங்கள் இதப்பத்தி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நம்முடைய சூரிய

குலத்தை நிகரில்லா... ஆனால் கருவறுக்க வந்த வீரன். அவன் யார் எவரென்று நான் போய் அறிந்து வருகிறேன். பயப்படாமல் ரதத்தில் போய் உட்காரலாம் அப்பா.

தசரதர் : மகனே! அவன் மின்கோபமுள்ள ஒருமனிதன். சூரியகுலத்தை நிகரில்லாமல் கருவறுத்த ஒரு வீரன். அவனிடம் சாந்த குணமாகத்தான் பேசவேண்டும்.

இராமர் : அது எனக்கு நன்றாகத் தெரியும். கவலைப்பட வேண்டாம்... [இசை]

இலக்கு. : அண்ணா! யாரோ ஒருவன் நம்முடைய ஜனங்களைப் போகவிடாமல் அடித்து விரட்டிக் கொண்டு வருகிறான். உத்தரவிடுங்கள். இந்த மந்த்ர வாளில் அவனை இரையாக்கி விடுகிறேன்.

இராமர் : வேண்டாம் தம்பி. எதற்காக... வழிமறித்த காரணம் என்ன? அந்த வரலாறுகளை நான் கேட்டு வருகிறேன். அமதியுடனேயிருங்கள். ஆனால் மின்பதாக நீங்கள் அவசரப்பட வேண்டாம். போ... [இசை]

பரதன் : யாரோ ஒருவன் நம்முடைய ஜனங்களைப் பூராகவே அடித்து வருகிறான். உத்தரவிடுங்கள். என்னுடைய அம்பினால் அவனுடைய தலையை அறுத்து வருகிறேன்.

இராமர் : ஒருவருமே நீங்கள் வரவேண்டாம். அவன் யாரு எவரென்று நான்போய் அறிந்து வருகிறேன். கவலைப்பட வேண்டாம்... தம்பி, பரதராஜனே! போங்கள். ஒருவரும் என் அருகில் நீங்கள் வரவேண்டாம். போ... [இசை]

பரசுராமன் : ஏய் யார்ரா போகக்கூடியவன்? டேய். அங்க யார்ரா? அடே விசுவாமித்ரா...! டேய்

விசுவாமித்ரா (ஏய் விசுவாமித்ரா) டேய் இங்க வாடா.

விசுவா. : பம்பம்பம்... பம்பம்பம்... பம்பம்பம்... அட சண்டாளன் வந்துவிட்டானே! கொலகாரப் பயல். சூரியகுலத்தை நிகரில்லாமல் கருவறுத்த வன், பரசுராமன் வந்துவிட்டானே.

பரசுராமர்: டேய்!

விசுவா. : ஆஆ... வ்வ்வ்... பவ்பவ்பவ்... (யோவ் நடுங்காம நில்லய்யா)

பரசுராமர்: ஏய்! டேய் விசுவாமித்ரா. ஆனால் சீதையுடனே பிறந்த வில் வளைத்தவர்கள் யாரடா... ஏய்.

விசுவா. : எப்பா... அதட்டாதே... {சிரிப்பு} நீ அதட்றதப் பாத்தா கஞ்சிப் பீயெல்லாம் கட்டிப் பீயாப் போவுது. {சிரிப்பு} அப்பா பரசுராமா! ஆனால் வில் வளைத்தது எனக்குத் தெரியாது. கல் யாணம் செஞ்சது எனக்குத் தெரியாது. அட கூட்டமாக வந்தார்களே அப்படீன்னு அவர்கள் கூட்டத்துப் பின்னால, பின்னாலேயே நான் போய்க்கிட்டே இருக்கிறேன். ஒரு எளவும் தெரியாதப்பா. எனக்கு ஒண்ணும் தெரியாது. விட்டுவிடு.

பரசுராமர்: ஒனக்கு ஒன்றுமே தெரியாதா? ஒன்றுமே தெரியாதா? தெரியாதா? (ஒண்ணுந் தெரியாது ஒண்ணுந் தெரியாதுன்னு சொல்றார்லா) வில் வளைத்தது?

விசுவா. : அதும் எனக்குத் தெரியாது.

பரசுராமர் : கல்யாணம் செய்தவர்கள் யார்?

விசுவா. : அதுவும் எனக்குத் தெரியாது.

பரசுராமர்: ஏன் தெரியாது?

விசுவா. : எப்பா.. பம் பம் பம் பம்...

பரசுராமர்: ஆனால் யார்ரா அவர்கள்?

விசுவா. : ஏதோ சொன்ன கேள்விதான் எனக்குத் தெரியும். வில் வளைத்தது அயோத்தி மாநகரத்தை அரசு புரிய வேண்டிய தசரதருடைய புத்ர பாக்கியங்கள். இராமன் அந்த சீதையுடனே பிறந்த வில்லை வளைத்துக் கல்யாணம் செய்யப் போகிறதாகவே சொல்லிக் கொண்டார்கள். அதும் சொல்லத்தான் கேள்வி. அதுகூட எனக்குத் தெரியாது. (அதுகூட இவருக்குத் தெரியாது)

பரசுராமர்: தசரதருடைய மகன் இராமன்... இராமன்... இராமா. ஹஹ்ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா. என்னைக் கண்டு பூனையாகவே பதுங்கியிருந்தவன் தசரதன். அவனுடைய வயித்தில் மகன் ஒன்று யானையாகப் பிறந்து சீதையுடன் பிறந்த வில் வளைத்து சீதாலெச்மியைத் தைரியமாக அவன் கல்யாணம் செய்துகொண்டு போகிறானா?

விசுவா. : ஆ! ப்ளப்ளப்ள ப்ள... {சிரிப்பு} பம்பம் பம்பம்...

பரசுராமர்: வருகிறானா?

விசுவா. : ம். அந்தா வருகிறான், பச்சை நிறமா வருகிறானே, அவன்தான் இராமன். இவன்தான் வில் வளைத்தவன் (விட்றாத). அவன மட்டும் விட்றாத.என்ன ஊட இழுக்காதப்பா.

பரசுராமர்: ஒனக்கு ஒண்ணும் தெரியாது?

விசுவா. : சத்தியமா எனக்குத் தெரியாது. சத்தியமாத் தெரியாது. நான் பஞ்சாட்சரம் கொடுக்கிறேன்.

பரசுராமர்: டேய் ராமா... டேய்.... [இசை]

விசுவா. : ராமா... ராமா... ராமா... ராமா... என் உயிரைக் காப்பாத்த வேண்டும் ராமா! (ஆமா) அந்தப்

பயல் வந்துவிட்டானே, அப்பா ராமச்சந்திரா! அப்பா ராமச்சந்திரா.

இராமர் : சுவாமி, இங்கு ஜனங்களைப் பூராகவே அடித்து விரட்டிக் கொண்டு வருகிறார். யார் அவர்கள்? எதற்காக... வழிமறிக்கும் காரணமென்ன?

விசுவா. : அப்பா ராமச்சந்திரா! அவன் பொல்லாத முரட்டுப் பயலாயிருக்கிறானே. {சிரிப்பு} அவன் உன்னுடைய சூரியகுலத்தை நிகரில்லாமல் கருவறுத்தவன். பெத்த தாயென்று தெரியாமல் தாயுடைய தலையை வெட்னவன். அடங்காத வன் அப்பா.

இராமர் : எதற்காக வழிமறிக்கும் காரணமென்ன? வரலாறு களைக் கேட்டீர்களா?

விசுவா : ஆமா, கேட்டேன். 'வில்லை வளைத்தது யாரு. சீதையைக் கல்யாணம் செய்தது யாரு' அப்ப டீன்னு வருகிறான். அப்பா, நான் சொல்வதைக் கேளு. ஆனால் என்னைய மட்டும் காமித்துக் கொடுத்திராதே. (அய்யோ).

இராமர் : சுவாமி, மொதலாவது வில் வளைக்கும்போதே நான் தெரியப்படுத்தி வந்தேன். இதற்கு உடை யப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வந்து தகறால் செய்துவிட்டால் அதற்கு யார் ஜாமீன் ஏற்றுக் கொள்வதாக கேட்டு வந்தேன். 'கவலைப் பட வேண்டாம் ராமா. வில்லை வளைத்து சீதையைக் கல்யாணம் செய்தால் என்னுடைய பஞ்சாட்சரத்தினால் யார் வந்தாலும் அவர்களை எரித்து வருவதா'கச் சொல்லி வந்தீர்கள். ஒங்க ளுடைய வார்த்தையைக் கேட்டுத்தானே நான் வில்லை வளைத்து வந்தேன். (அகப்பட்டுக் கிட்டாரு சாமி)

விசுவா : அப்பா. இந்தச் சேதி மட்டும் அவன் காதிலே கேட்டால் போதும். 'கதக்'னு வெட்டிருவான். 'கதக்'னு வெட்டிருவான். 'கதக்'னு வெட்டிருவான் {சிரிப்பு}. என் தலை துண்டா தூக்கி விடுவான். {சிரிப்பு} அப்பா என் உயிரைக் காப்பாத்த வேணுமப்பா. அப்பா! இப்படி நாசமாய்ப் போறப் பயல் இப்படி வருவான்னு நான் கண்டனோ? நாசமாப் போவான், இப்படி வருவான்னு நான் பார்க்கவில்லையே. (ஏன் தெரியாது ஒங்களுக்கு?) அப்பா ராமச்சந்திரா! எனக்குத் தெரியாமல் போய் விட்டது.

பபூன்2 : ஒங்க தலைய 'பதக்'னு வெட்டணும். {சிரிப்பு}

இராமர் : சுவாமி! துஷ்டர்களைக் கொல்லவும், நம்பி வந்தவர்களை ரட்சிக்கவும் பூலோகத்தில் ராம அவதாரமாக நான் பிறந்து வந்திருக்கிறேன். இதப்பத்தி நீங்கள் கலங்க வேண்டாம். எப்பேர்ப் பட்ட வீரனாயிருந்தாலும் சரி, அவர்களை நான் பார்த்து வருகிறேன். கவலைப்பட வேண்டாம் மகா முனிவர்களே.

விசுவா. : ஏவ்வ்வ்வ்... {சிரிப்பு} (இப்பத்தான் புது ஏப்பம் வந்திருக்கு) இப்பத்தான் ஒரு படி பால் சாப்ட்டதுபோல இருக்கு. எப்பா ராமச்சந்திரா! உன்னுடைய வீரம்... அவன் பரசுராமன் பார்த்துக் கொள்ளட்டும். பரசுராமனுடைய வீரங்களை நீ பார்த்துக் கொள். (என்னைய ஊட இழுக்காத) ஊட மட்டும் என்னையக் காமிச்சுக் குடுத்றாதே. நான் கிழக்கப் போய் பஞ்சாட்சரம் போட்டுக் கொண்டிருக்கிறேன். (ஆமா ஊருக்குக் கெழக்கப் போயிருங்க.) ராமச்சந்திரா நான் வரட்டோ?

இராமர் : சென்று வாருங்கள்...

பாடல் : அடடா பயலே - ஏண்டா
வில்லை நீ வளைத்தாய்

பரசுராமர்: ஆ! ராமரே! வில்லை வளைத்துச் சீதையைக் கல்யாணம் செய்துகொண்டு போகக்கூடியவன் யார்? (யாரு அவரு)

இராமர் : ஐயா பரசுராமரே! சிறியோன் செய்துவந்த ஒரு குற்றங்கள் பெரியோன் நீங்கள் மறந்திருக்கத் தான் வேண்டும்.

பரசுராமர்: ஏண்டாப்பா. எதற்காக நான் மறக்க வேண்டும். எதற்காக வில்லை வளைத்து வந்தாய்?

இராமர் : அவசரப்பட்டு...*

பரசுராமர் : ஏய்! எவ்வளவு சாமர்த்தியமாகப் பேசிவருகிறாய்? கோயிலில் பிறந்த சீதை, ஆனால் சீதையுடனே பிறந்த வில் சொத்தை வில்லென்று, நான் வளைக்கக் கூடாதென்று சிவனுடைய ஆலயம் சென்று அருந்தவம் செய்து, என் வில்லானது வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். ஆனால் அந்த சீதைக்குப் பதிலா, அந்த வில்லுக்குப் பதிலாக இந்த வில்லை வளைத்து சீதையைக் கல்யாணம் செய்யலாமென்று நான் நினைத்திருந் தேன். அதற்குள்ளாக நீ சீதையைக் கல்யாணம் செய்துகொண்டு போகிறாய். எவ்வளவு சாமர்த்தியமாக இருக்கலாம். டேய்... (டேய்)

இராமர் : ஐயா... (உடாதீங்க) மரியாதையாகப் பேச வேண்டும். மரியாதை இல்லாமல் பேசிவிட்டால் உயிருக்குத்தான் ஆபத்துக்கள். பொதுவாக இருக்க வேண்டிய வில்லை யாரும் வளைக் கலாம்... சீதையைக் கல்யாணம்... திருமணம் முடித்து வரலாம். இதற்காக வாடா போடா என்று வார்த்தைகளைச் சொல்வதும், மரியாதை இல்லாமல் பேச்சுக்களைப் பேசுவதும், அதனால் ஒங்களுக்கு... உயிர்களுக்கு ஆபத்துக்கள்.

★ பதிவு நாடாவை மாற்றுகின்ற சில நொடிகளில் இடைவெளி

பரசுராமர் : என்ன சாமர்த்தியமாக இருக்கலாம். பேசுகிறாய் மூடராமா. (துள்ளாதீங்க) ஒங்களுடைய அப்பன் ஒரு பூனையாகவும், நான் ஒரு மதங்கொண்ட யானையாகவும் நான் இருந்தவன். என்னை எதிர்த்துக் கொண்டு வருகிறாயா? பெரிய சூரியகுலத்தை நிகரில்லாமல் கருவறுத்த வீரன் என்று உனக்குத் தெரியாதா? ஏய்! இதோ பார் உன்னைக் கொல்கிறேன்.... [இசை] ஹஹ் ஹஹ் ஹஹ் ஹஹ் ஹா அடேராமா நீ பிழைத்து விட்டாயா? எவ்வளவு சாமர்த்தியமாக இருக்கும். ...[இசை] ... ஆ! ('உம்'னவரு எங்கிட்டோ பொய்ட்டாரு. ஆளக் காணம்) {சிரிப்பு}

விசுவா. : ஏய்! ஏய்! ஏய்! கொஞ்சம் பொறுங்கோ. அவசரப்படாதீங்கோ. (ராமா போடு. பரசுராமா போடு) பரசுராமா! கோபப்பட வேண்டாம். ராமா! நீ கோபப்பட வேண்டாம்.

பரசுராமர் : ஏய் எவ்வளவு தைரியமாக வில் வளைத்து அம்புகளைப் பிரயோகம் செய்து விட்டான் பார்த்தாயா?

விசுவா. : அடே கோபப்படாதப்பா. பரசுராமா! ராமா! கோபப்படாதே.

இராமர் : சுவாமி! ஆனால் கொஞ்சமாவது தெரிவராமல் என்னை எதிர்த்துக் கொண்டு வந்துவிட்டான். ஆனால் இடம் விடுங்கள்.... ஒரே அம்புனால் அவனுடைய தலையை அறுத்து எமலோகத் துக்கு நான் கொண்டுபோய் விடுவேன்.

விசுவா. : வேண்டாம்ப்பா. வேண்டாம். (வேண்டாம் வேண்டாம்) ராமா பொறு. பரசுராமா பொறு. ராமா பொறு. பரசுராமா பொறு. அடே அடே நீ அவசரப்படாதே. நீ அவசரப்படாதே. ப்ளப்ளப்ளப்ள....

பபூன்1 : இவ்ள நேரம் சும்மாயிருந்தாரெ. இவருக்கு வந்த நோக்காடு என்ன? {சிரிப்பு} (ஏய்! ராமனும் பரசுராமனும் சண்ட போட்டதுக்கு அதுக்கு ஆறுதல் சொல்றாரப்பா) ரெண்டு பேரும் சண்டை போட்டு, இப்படியா நடுங்கிக்கிட்டுத் திரியிறாரு. (ராமா பொறு, பரசுராமா பொறுன்னு) அந்த ஔறுவாய்ச் சனியன் வந்தது வேற (அமத்திவிடுறாரு சண்டய) நல்லா போட்டு அமத்துறாரு. இப்படி ஒண்ணுக்கொண்ணு கோவிச்சிக்கிட்டு சண்டபோடுற ஆளுகள இப்படியா அமத்துறது?

விசுவா. : அடே எப்படிடா அமத்றது, கோபத்துடன் இருக்கிறார்களே?

பபூன்1 : அப்படில்லாஞ் செய்யப்படாது. சாமி! 'இங்க வாங்க. நீங்க சண்ட போடாதீங்க. நீங்க இப்படி வாங்க. நீங்க இப்படி உக்காருங்க. நீங்க இப்படி உங்காருங்க. ஒங்க வீட்ல என்ன சோறு. ஒங்க வீட்ல என்ன கொளம்பு. ஒங்க வீட்ல என்ன சாப்பாடு. ஒங்க வீட்ல என்ன சாப்பாடு' - அதக் கேட்டு நீங்க வாங்கித்திங்கிறதா. ஊள ஊள ஊள ஊள ஊள ஊள {சிரிப்பு}

விசுவா. : அட போடா, தடிப்பயலே, அடே பரசுராமா! ஆனால் சிறுபிள்ளைத் தனமாகவே வில்லை வளைத்து, டேய்! வில்லை வளைத்துக் கல்யாணம் செய்துவிட்டான். இப்ப என்னப்பா செய்யவேண்டும்? என்ன சொல்கிறாய்?

பரசுராமன் : அடே விசுவாமித்ரா. வில் வளைத்ததும் எனக்குத் தெரிவராது. கல்யாணம் செய்ததும் எனக்குத் தெரிவராது. சொத்தை வில்லென்று நினைத்து, ஆனால் சிவனுடைய தவஞ் செய்து ஒரு வில் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன். அந்த வில் வளைத்தது போல் நான் கொண்டு வந்திருக்கக்

கூடிய வில்லை வளைத்தால்... ஆனால் இந்த ராமனை நான் விட்டுவிடுவேன். அப்படியில்லை யென்றால் இவனுடைய மனைவி மக்களுடனே நாடு நகரங்கள் பூராகவே எனக்கு அடிமையாக விட்டுவிட்டு வந்த வழியைப் பார்த்து விழுந்து ஓடிப்போக வேண்டும். என்ன சொல்கிறாய்? (இவ்ளவுதான)

விசுவா. : அடேயப்பா. இவ்ளவுதான. ஏண்டா இதுக்குத் துள்ளிகிட்டு திரியிறே. அவசரப்படாதே. அப்பா ராமச்சந்திரா! அவன் இப்பத்தான் வளைக் குள்ளாக அகப்பட்டுக் கொண்டான். ஆனால் வில் வளைத்ததும் தெரியாதாம். கல்யாணம் முடித்ததும் தெரியாதாம். அவனுக்கு ஒடைபட்ட வில்லென்று அவனே சொல்கிறான். 'அவன் கொண்டு வந்திருக்கக் கூடிய வில்லை வளைத்தால் விட்டுவிடுவேன். இல்லை யென்றால் அவன் திருமணம் செய்து கொண்டு போகும் சீதாலெச்மியும், நாடு நகரங்களெல்லாம் எனக்கு அடிமையாக விட்டுவிட்டு வந்த வழியைப் பார்த்து சன்னியாசியாகப் போக வேண்டும்' அப்படியென்றே சொல்கிறான். ஆனால்... அந்த வில் வாங்கி அந்த வில்லை வளைத்துவிடு.

இராமர் : சுவாமி! நான் எதற்காக அந்த வில்லை நான் வளைக்கவேண்டும்.

விசுவா. : அப்பா. அடே வெளிய சொல்லாதே. (அப்படிச் சொல்லாதே) இவ்ளவும் காரணம் நான்தான்னு சொன்னால் போதும், ஒரே வெட்டா என் தலையை வெட்டிருவான்.{சிரிப்பு} அப்பா என்னைய மட்டும் காமிச்சிக் குடுத்திறாத. அடே என் மானத்தை நன்றாகவே காப்பாத்தி விட வேண்டும். அந்த வில்லை மட்டும் வளைத்துவிடு.

இராமர் : சரி. தாங்களுடைய இஷ்டப் பிரகாரமாகவே அந்த வில்லை வளைத்து விடுகிறேன்.

விசுவா. : அடே! போ. அந்த வில்லை எடுத்துக் கொண்டு வா. போ. போ! ...[இசை]

பரசுராமன் : ஏய்! டேய் ராமா, வில்லப்பிடி, வில்லப்பிடிடா.

இராமர் : அய்யா! சிறியோன் செய்த குற்றங்கள் பெரியோர் பொறுக்கத்தான் வேண்டும். தெரிந்தும் தெரியாமல் தான், ஆனால் இந்த வில்லை நான் வளைத்து விட்டேன்.

பரசுராமன் : டேய்! மன்னிக்க இது நேரமில்லை. சீக்கிரமாக வில்லை வளைக்க வேண்டும். என்ன சொல்கிறாய்? (ம்... துள்ன மாடு பொதி சுமக்கப் போகுது)

பாவையாட்டி : ஆனால் ராமரவர்கள், ஆனால் பரசுராமன் கையிலிருக்க வேண்டிய வில்லை வாங்கும் சமயத்தில், பரசுராமனுடைய பாதி பெலத்தையும் வாங்கி விட்டார். (திடீர்னு சாஞ்சிட்டு பனமரம்) பாதி பெலங்கள் வாங்கனவுடனே, ஆனால் இந்த வில்லானது வளைக்கச் செல்கிறார், ஸ்ரீராமரானவர்...[இசை]

பபூன்1 : அய்யய்யோ. இவரு துள்ன துள் என்ன? பொதக்னு கீழே விழுந்துட்டார... எளவு (ஆமா. துள்ன மாடு பொதி சொமக்கத்தான் வேணும்) மெதுவா எந்திரிங்க. மெதுவா எந்திரிங்க. (மெதுவா) {சிரிப்பு} மெதுவா எந்திரிங்க (மெதுவா, மெதுவா) {சிரிப்பு} அய்யய்யோ. (ம். அந்தப் பன மரத்தத் தூக்கிட்டு வந்து முட்டுக்குடு) ஏய் மெதுவா எந்திரிய்யா. ஏன்யா இன்னொரு துள்ளிகிட்டு 'பொதக்' 'பொதக்'னு விழுற. அய்யய்ய {சிரிப்பு} (அது கழுத்துக்குச் சோறில்ல)

ஏய் மெதுவா எந்திரி. ம். அப்டி அப்டி.. நேர நில்லு (முடியாது) ம்... கீழ சாயாத... அட அட.... (அட ஒந் தம்பியக் கூப்பிட்டு அந்தப் பக்கம் புடிக்கச் சொல்றா) இருடா. பேசாம நில்லேன். பிடி... பிடி... கயிறக் கொண்டா. கட்டு (டேய் பிடிச்சிக்கப்பா அந்தப் பக்கம்) மெதுவா மெதுவா இருங்க... {சிரிப்பு} ம் இப்ப நின்னு பேசுங்க. இப்படித் தைரியமா நிக்காம பொதக்கு பொதக் குன்னு கீழே விழுகிறீகளே.

இராமர் : ஏய் பரசுராமரே! நீ கொண்டு வந்த வில்லை நான் வளைத்து, ஆனால் வளைப்பதற்குக் கயிறானது இல்லை. நாண் என்று சொல்லக் கூடிய கயிறுகள் கிடையாது. ஆனால் என்னுடைய வில்லில் இருக்கவேண்டிய நாணிப்புக் கவறுகளை எடுத்து நீ கொண்டுவந்த வில்லில் போட்டு, வில்லை நான் வளைத்திருக்கிறேன். வளைத்த வில்லுக்கு நீ வகை சொல்ல வேண்டும். இல்லையென்றால் உன்னை நான் லேசாக விடுவதில்லை. வளைத்த வில்லுகளுக்குப் பேர் சொல்ல வேண்டும். நாணிப்புக் கவறுகளுடைய பேர்களைச் சொல்ல வேண்டும். ஆனால் சொன்னால் ஒன்னிய விடுவதில்லை.

பரசுராமர்: ஆ! (ம். பெருமூச்சி விட்டாச்சி) இப்பத்தான் எனக்குப் புரிகிறது. அந்த வைகுந்த பதியிலிருக்க வேண்டிய ஸ்ரீ நாராயணர், கிருஷ்ண பரமாத்மா, ஸ்ரீ ராமராகவே பிறந்து வருகிறார். ஏ நாராயுணா! ஏ பரந்தாமா....! நாராயணா! தெரிந்தும் தெரியாமல் நான் மனம் நோகப் பேசி விட்டேன். என்னை மன்னித்து விட வேண்டும் ராமா.. ராமா... எம் பெருமானே! சுவாமி! ஆனால் தாங்கள் யார் எவரென்றும் தெரியவராமல், ஆனால் வில் வளைக்க வேணுமென்றே நான் தெரியப் படுத்தி விட்டேன். இந்த வில்லுடைய

பேர்கள் எனக்குத் தெரியாது. நாணிப்புக் கவறுடைய பேர்களும் எனக்குத் தெரிவராது. நானோ பிராமணன். எனக்கு நல் மோட்சங் கொடுத்தால் போதும். இந்த வில்லானது ஒங்களுக்குத் தர்மமாக நான் கொடுத்து விட்டேன்.

இராமர் : சரி. சரணாகதி அடைந்து விட்டாய். இப்போது நான் உன்னை மன்னித்துக் கொண்டேன். இப்போது நான் ஒனக்கு மோட்சங்கள் குடுப்பது கிடையாது. ஆனால் உன்னுடைய தலையில் இருக்கவேண்டிய துளசி மாலையை, இதை யெல்லாங் கழற்றிக் கீழ் வைத்துவிட்டு, நீ மலையாளம் என்கக்கூடிய பூமிக்குச் சென்று என்னுடைய பேர்களைச் சொல்லி, ஆனால் யாசகம் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டே நீ திரிய வேண்டும். அப்போது ஒனக்கு நான் மோட்சம் தருகிறேன். ஓடிப்போ... ஆனால் மலையாளம் என்கக்கூடிய பூமிக்கு!

பரசுராமர் : போய் வருகிறேன். நாராயுணா... நாராயுணா... [இசை]

விசுவா. : ஏவ்வ்வ்... (இப்பத்தான் அரப்படி பால் சாப்பிட்டாப்ல இருக்கு) என்னுடைய பஞ்சாட் சரத்தினால் வில்லு புஸ்ஸுன்னு போயிருச்சி. (ஒங்க பஞ்சாட்சரம் அடுப்புக்குள்ள தான் இருக்கு) அட, வில்லப் போட்டுட்டுப் போய்ட்டானோ (போயாச்சி) எல்லாம் என் பஞ்சாட்சரம் தான். {'ஆமா ஒன் பஞ்சாட்சரம்' என்கின்றனர் சிறுவர்}.

இராமர் : வில்லுடைய பேர்களைக் கேட்டேன். முடியா தென்று கீழ் போட்டு விட்டு, எனக்குச் சொந்த மாகவே குடுத்துவிட்டு – மலையாளம் என்கக் கூடிய பூமிக்கு–நான் மோட்சத்தை நான் குடுத்து வந்தேன் முனிவர்களே.

விசுவா. : சரிதான். ஆனால் ஒரு சமயா சமயத்தில் இந்த வில்லானது உங்களுக்கு உபயோகப்படும். ஆனால் வருணனிடம் நீ அடைக்கலமாகக் கொடுத்து விடு.

இராமர் : ரொம்ப சந்தோஷம். வருணராஜனே. நான் எப்ப இந்த வில்லை நான் கேட்கிறனோ அந்த சமயத்தில் என் கையில் கொடுக்க வேண்டும். கொண்டு போ...[இசை]

விசுவா. : அப்பா ராமா! அயோத்தி நகரம் போகலாம். ஆனால் தெய்வ லோகத்தை விட்டு வந்து ரொம்ப நாட்களாகி விட்டது. நான் தெய்வ லோகம் நான் சென்று வருகிறேன், ராமா.

இராமர் : ரொம்ப சந்தோஷம் முனிவர்களே. சென்று வாருங்கள். பிறப்பிடுங்கள். பிறப்பிடுங்கள். அயோத்திமாநகரம் போகலாம். ...[இசை]

பரதன் : அண்ணா! என்னுடைய தாய் மாமனுடைய அரமணைக்கி நான் போக வேண்டும். ஆனால் கேகய நாடு செல்ல வேண்டும். கேகய மகாராஜன் அவர்கள் எங்களை வரவேணுமாய் தெரியப்படுத்தியிருக்கிறார்.

இராமர் : சீக்கிரமாச் சென்று வாருங்கள்...[இசை]

கைகேயி : ஏய் சன்னீஸ்வர பகவானே! ஆனால் தசரதன் ஸ்ரீராமருக்கு முடிசூட்டு விழா நடத்தச் செல் கிறான். இந்தப் பட்டத்தைக் கலைத்து இராம, லெச்மணர், சீதை மூன்று பேர்களையும், பதி னான்கு வருடம் காட்டுவழியாகவே அனுப்பி விட வேண்டும். சனியனே! சனீஸ்வரபகவானே! பிறப் படு அயோத்திமா நகரத்திற்குள்ளாக. அரக்கர் கள், ராட்சதர்களுடைய... துன்பங்கள் தாங்கமுடிய வில்லை. அந்த நாராயணன் ஸ்ரீராமன் – சென்றால், ராட்சதர்களுடைய ஆனால் ஒடுக்

கல்கள் தீர்ந்து விடும். முப்பத்து முக்கோடி முனி வர்களுடைய ஒரு இடுக்கங்களும் தெரிந்துவரும். பிறப்படு ஆனால் அயோத்திக் குள்ளாக.

சனிஸ்வரன் : சரி. வருகிறேன்...[இசை]

விசுவா. : அப்பா தசரதா!

தசரதர் : சுவாமி!

விசுவா. : நான் தெய்வலோகம் நான் சென்று வருகிறேன்.

தசரதர் : அதற்குள்ளாகவா போகவேண்டும்.

விசுவா. : வந்து ரொம்ப நாட்களாகி விட்டது.

தசரதர் : ரொம்ப சந்தோஷம். சென்று வாருங்கள்... [இசை]

குருதேவா! ஆனால் எனக்கு அந்திய காலங்கள் ஆகிவிட்டது. இந்த அயோத்தி பூராகவே என்னு டைய மகனாகிய ஸ்ரீ ராமருக்கு... நாங்கள் முடி சூட்டு விழா நடத்திவிடவேண்டும். உங்களு டைய அபிப்பிராயங்கள் எப்படி வசிஷ்ட மகா முனிவர்களே.

வசிட்டர் : அப்பா தசரதனே! அதை, ராமனை அழைத்துக் கேட்கக்கூடாதோ? ஆனால் உனக்கு அந்திய காலங்கள் ஆகிவிட்டது. செங்கோல் பிடித்து அரசாங்கத்தை நீ பார்க்க முடியாது. ராமனை அழைத்துக் கேட்டால் தெரியவரும். அழைத்து வருவதாகச் சொல்லி வருகிறேன். சுமிந்திர மந்திரி! ராமரை அழைத்துவா சீக்கிரம்....

பாடல் : குலரபி சேகரா
கோதண்டபாணி
கோதண்டபாணி
ராஜசிகாமணி...

இராமர் : சுவாமி!

வசிட்டர் : அப்பா ராமச்சந்திரா! உன்னுடைய தந்தையாகிய தசரதர் அயோத்தி மாநகரங்கள் பூராக அரசாங் கத்தை மேற்பார்க்க முடியாது அப்படியென்றே தெரியவருகிறார். அயோத்தி பூராக உனக்கே முடிசூட்டு விழா நடத்திவிடுவதாக ரொம்ப ஆசைப்பட்டு வருகிறார்.

இராமர் : தங்களுடைய இஷ்டம் போல் நடந்து கொள்ள லாம், சுவாமி!

வசிட்டர் : ஏவ்வ்வ்... ரொம்ப சந்தோஷம் அடைந்தேன். அப்பா... ராமருடைய பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்யுங்கள்.

தசரதர் : ரொம்ப சந்தோஷம். ராமன் சம்மதித்து விட்டான். பிறப்படுங்கள். அதற்குரிய ஏற்பாடுகளை நாம் செய்து வரலாம்...[இசை]...

கோசலை! ஸ்ரீராமனுக்கு ஆனால் முடிசூட்டு விழா நடத்த வேணுமென்றே ஆரம்பித்து வந்தி ருக்கிறேன். உன்னுடைய அபிப்பிராயங்கள் எப்படி?

கோசலை : தங்களுடைய இஷ்டம் போல் நடந்துக் கொள்ளலாம் சுவாமி!

தசரகர் : சுமித்ரை!

சுமித்திரை : பிரபு!

தசரதர் : ஆனால் ஸ்ரீராமருக்குத் திருமணம் .. ஆனால் திருமணம் முடித்து வந்தோம். எனக்கு அந்திய காலங்களாகிவிட்டது. அயோத்தி பூராகவும் அவனை நான் அரசனாக்கி விடலாமென்று நான் யோசனை செய்து வருகின்றேன். உன்னுடைய அபிப்பிராயங்கள் எப்படி?

சுமித்திரை : தங்கள் இஷ்டம் போல் நடந்து கொள்ளலாம் பிரபு!

தசரதர் : கைகேசியினுடைய வீட்டுக்கு நான் சென்று வருகிறேன். அரமணை... ரொம்ப சந்தோஷம்... [இசை]

கூனி : அப்பா... ஏ அப்பா! ஏகக் கூட்டமாயிருக்குது! என்னடா அது? ' (ராமனுக்குப் பட்டங் கெட்டப் போறாங்கம்மா). என்னது? (ராமனுக்குப் பட்டம்) ராமருக்கு இந்த அயோத்தி பூராகப் பட்டாபிஷேகத்தச் சூட்டப் போகிறார்களா? (ஆமாம்) அந்தக் கள்ள ராமனுக்கா பட்டத்தச் சூட்டப் போறாக. (ம். ஒனக்கு என்ன செஞ்சாக) அடாடாடா.. அடே இந்தப் பட்டத்த நான் நடத்த விட்ருவனா கூனி.* (கூனின்னு ஒனக்கு எதுக்கு பேரு வச்சிருக்கு) சரி நான் கைகேசி அம்மாவுடைய அரமணைக்கி நான் சென்று வருகிறேன். ...[இசை]... அம்மா கைகேசியம்மா! ரொம்ப ஒறக்கமா ஒறங்குறாக. (ஆமா.) எட்டுநாளா கல்யாணம். ராமருடைய கல்யாணம். அதனால ஒறக்கம் தாங்க முடியல. ம்... அம்மா கைகேசியம்மா (அம்மா கைகேசியம்மா) அம்மா கைகேசி. அம்மா கைவீசி (அம்மா கைகேயி) அம்மா சரியான ஒறக்கமா இருக்குதே. அம்மா!

கைகேயி : யாரவள்? {சிரிப்பு} (அம்மா! கூனி, கூனி வந்திருக்காக) கூனி! எதற்காக, என் தூக்கத்தைக் கெடுத்த காரணமென்ன?

கூனி : அடாடாடா.. அம்மா கைகேசி அம்மா.... ஆனால் அரமணையில் ஏதாவது ஒரு அதிசயம் நடந்தால் அது உன்னிடம் நான் தெரியப்படுத்துவனா தெரியப்படுத்தமாட்டனா?

கைகேயி : ஆமா. உண்மைதான். அப்படியென்ன விசேஷம் நடந்து வருகிறது?

★ 'கூனி' என்றவுடன் சிறுவர்களிடையே ஒரு சலசலப்பு இருக்கிறது

கூனி : அயோத்தி பூராக உன்னுடைய சக்களத்தி இருக்கிறாளே அந்த கோசலாதேவி....

கைகேயி : ஆமாம். கோசலாதேவி இருக்கிறாள்.

கூனி : அவளுடைய மகன் இருக்கிறானே, ராமன். கள்ள ராமன். அந்த ராமருக்கு முடிசூட்டு விழா நடத்தப் போகிறார்களாம், அதைச் சொல்லலாம்னு ஓட்டமா ஓடியாந்தேன். அதுக்குள்ள என்ன வெரட்டீட்டியம்மா கைகேசியம்மா. {சிரிப்பு}

கைகேயி : என்னுடைய மகனாகிய ஸ்ரீ ராமருக்கு முடிசூட்டு விழா நடத்தச் செல்கிறார்களா? ரொம்ப சந்தோஷம் அடைந்தேன். சந்தோஷமான காரியத்தை நீ தெரியப்படுத்தி வந்ததனால்... உன்னுடன் நான்... என்ன... வெகுமானத்தைக் குடுக்கச் செல்கிறேன்.

கூனி : அடடா. எவ்வளவு சந்தோஷத்தப் பாத்தியா, இந்தக் கைகேயி அம்மாளுக்கு. எம்மா அதாவது அந்த ராமருக்குப் பட்டம் சூட்டுதுன்னு சொன்ன வொடன எவ்வளவு சந்தோஷப்படுறே கைகேசி.

கைகேயி : ஆனால் நாலு பேருக்கு மூத்தவன்... கல்வி ஞானங்கள் படித்து வந்தவன்... ஆனால் அரசாங்கம் அவனுக்குத்தான் நன்றாகவே அரசு புரிவதற்கு முடியும். அதற்காகத்தான் தெரியப்படுத்தி வருகிறேன்.

கூனி : எம்மா. ஒனக்குக் கொழந்தையில்லை என்று சொன்னால், அடுத்ததுகளுடைய கொழந்தைக்குப் பட்டத்தைச் சூட்டினால் சூட்டிவிடலாம். உனக்கு உன்னுடைய மகன் இருக்கும் போது அடுத்தவளுடைய மகனுக்குப் பட்டத்தைச் சூட்டினால் என்னம்மா லாபங் கெடைக்கும்? (ஒனக்குக் கெடைக்கும்) அம்மா! பரதமகாராஜா இருக்கிறார்கள். அந்தப் பரதனுக்கு அயோத்தி பூராகப் பட்டத்தைச் சூட்டி விட்டால்...

என்னா... ஒனக்குச் சந்தோஷம். ஆனால்... இப்ப ராமனுக்கான பட்டம் சூட்டிவிட்டால்... சிறிய தாயார் என்று ஒன்னை மதிக்கமாட்டான். மகாராஜா... தசரத மகாராஜா உயிருடன் இருக்க வரயிலும்தான் ஒனக்கு செல்வாக்குகள். அவர் இப்பவோ பெறகுன்னு ரொம்பத் தள்ளாத வயசாயிப் போயிருச்சி. எம்மா! நல்லா யோசன செஞ்சிப் பாரு. ஏன் எம்மேல இவ்ளவு கோபமாயிருக்கிற? நல்லா சிந்திச்சிப் பார்க்க வேண்டும். (ம். நல்லா யோசன செஞ்சிச் சொல்லுங்கம்மா) அடுத்த ஒரு மகனுக்குப் பட்டத்தைச் சூட்டி விட்டால் ஒன்னைய மதிக்கமாட்டான். நாளைய தினத்தில் உன் மகனையும் ஒன்னையும் அடித்து விரட்டி விடுவான். உன்னுடைய தாய் தகப்பனுடைய அரமணைக்கி! அவனுடைய தாய்... அவனு டைய மனைவி மக்களத்தான் கவனிப்பான். எம்மா! ஒங்களுடைய மகனுக்குப் பட்டத்தைச் சூட்டி விட்டால் ஒங்களுக்கு நல்லதில்லையா? இந்த நல்ல காரியத்தத்தான் சொல்ல வந்தேன். இஷ்டமின்னா கேளு. கஷ்டமின்னா விட்டுப்புடு. இதுக்கென்ன... எனக்கென்ன வம்பா இது. ரெண்டாவது, நீ வருத்தப்படும் போது நீ சொன்ன வார்த்தைய நான் கேக்காம விட்டுட்டனே அப்படீன்னு எம்மேல ரொம்ப வருத்தப்படுவ. அதுனாலத்தான் மொதல்ல ஒனக்கு ஞாபகப்படுத்திவுடுறேம்மா கைகேசி யம்மா... லொக் லொக் .... லொக் லொக் .... (ம். பின்னால புடுங்கிடுச்சி) {சிரிப்பு}

கைகேயி : உண்மைதான். என்னுடைய, ஆனால் எனக்கு மகன் இருக்க... பரதன் இருக்கின்றான். அவனுக்கு முடிசூட்டு விழா நடத்திவிட்டால் நான் சொல்வதெல்லாம் கேட்டு வருவான். அவனுக்குப் பட்டாபிஷேகத்தை முடித்து

விட்டால் – ராமனுக்கு – அவனுடைய தாய்... அவனுடைய மனைவி மக்களைத்தான் கவனிப்பான். ஆனால் என்னைச் சிறிய தாயார் என்றே நினைக்கமாட்டான்.

கூனி : பாத்தீங்களா... பாத்தீங்களா! நல்லா யோசனை செஞ்சிப் பாருங்க. தசரத மகாராஜாவுக்குக் கொஞ்சமாவது மன இரக்கம், ஒங்கமேலக் கொஞ்சமாவது பிரியம் இருந்ததுன்னா, இங்க வந்து சொல்ல மாட்டாரா? எம்மா! எல்லாம் கோசல அம்மா கிட்டேயே சொல்லிட்டாக. சுமித்திர கிட்டயும் சொல்லிட்டாரு... மகாராஜா வுக்கு... அக் கள்ளராமன், மனசில் கபடமும் உதட்டில் சிரிப்பும் உள்ளராமன். அம்மா! நான் சொல்றதக் கேளு. வம்பாக் கெட்டுப் போகாத. ஆனா நீ தெருவுல நின்னுதான் கடசீல கஷ்டப்படணும். என் கண் கலங்குது எனக்கு, அம்மா! கைகேசி அம்மா!

கைகேயி : கூனி! ஆனால் எந்த விதமாக நான் அவனுடைய பட்டத்தை நிறுத்த முடியும் (ம்... அதுக்கும் *கோளாறு சொல்லிக்குடு)

கூனி : அடாடாடா... இந்தப் பட்டத்த நிறுத்தவா ஒனக்குத் தந்திரம் தெரியல. அதுஞ் சொல்லித் தர்றேன்... கேளு. நீ கேகய நாடு... கேகய மகாராஜாவுடைய மகள் நீ. என்னா... மகாராஜா அங்க வந்து பெண் கேட்டு, ஆனால் கல்யாணம் செய்து வரும் போது, ஆனால் அசுரர்கள் வந்து, ஆனால் தசரத மகாராஜாவுடனே எதிர்த்து நின்று சண்டை செய்தார்கள். நீயும் தசரத மகாராஜாவும் ஏறி வந்த ரதத்தின் அச்சியானது முறிந்துவிட்டது. அந்தச் சமயத்தில் தசரத மகாராஜா ரொம்பக் கஷ்டப்பட்டாரு. எப்படி அயோத்தி போய்ச் சேர்றதின்னு. அப்போ உன்னுடைய இடது கையைக் குடுத்து, அச்சிக்குப் பதிலாக, ரதத்தைக்

★ கோளாறு = யோசனை

கொண்டாந்து அயோத்தீல வந்து சேத்த. மொதலாவது... ஒனக்கு பேர் எப்படித் தெரியுமோ? (எப்படி?) கேகேய அம்மாள் என்று தான் பேர் வைத்தார்கள். அச்சிக்குப் பதிலாக உங்கள் இடதுகை கொடுத்ததனால்... ஆனால் கைகேசி என்று தசரதமகாராஜா பேர் வைத்தார்.... அம்மா! அந்த சமயத்தில் தசரத மகாராஜா என்ன சொன்னார்கள்? கைகேசி ஒரு சமயா சமயத்தில் ஒரு காலா காலத்தில், உனக்கு இரண்டு வரந் தருவதாக தசரத மகாராஜா சொல்லி வந்தார்.

கைகேயி : ஆனால் உண்மைதான். தக்க சமயத்தில் நீ ஞாபகப்படுத்தி வந்தாய் கூனி. இரண்டு வரம் தருவதாகச் சொல்லி வந்தார். அதுக்கு நான் என்ன செய்துவிட முடியும்?

கூனி : அதாவது ஒரு வரத்தினால் 'பரதனானவன் அயோத்தி பூராக அரசனாக வேண்டும். இன்னொரு வரத்தில் ராமன் பதினான்கு வருடம் காட்டு வழியாகப் போக வேண்டும்.' அப்படீன்னு ரெண்டு வரம் மட்டும் மகாராஜா கிட்ட கேட்கு, {சிரிப்பு} ஆனால் ராமர் மீதில் உயிருக்கு உயிராய் இருக்கிறார் தசரத மகாராஜா. உன்னுடைய காலைப்பிடிப்பார். கையைப் பிடிப்பார்... ரொம்பவும் வணக்கங்கள்லாம் செய்து வருவார். அதற்கெல்லாம் இணங்கி விடாதே. ஒரே பிடிவாதமாக ரெண்டு வரம் மட்டும் கேட்டு விடு. என்னா... இரண்டு வரம் கொடுத்து விட்டால், இரண்டாவது, இந்த இராமனை லேசாக அடித்து விரட்டிரலாம்மா. {சிரிப்பு} ('ஏய் சத்தம்')*

★ 'சத்தம் சைலன்ஸ் கருவாட்டு மண்டை' என்கிறான் சிறுவன் ஒருவன். 'ஏய் சத்தம்' பாபுராவ் சப்தமிடுகிறார்.

அம்மா இந்த இராமர் மீதில் ஒனக்கு அவ்வளவு கவலையாயிருந்தா என் ஒம்பது கூனலப் பாத்தியா? நான் வில் வேடிக்க பாத்துகிட்டே யிருந்தேன். அந்த ராமனுக்கு எப்படியோ நான் நின்னது தெரிஞ்சி, ஒம்பது கூனல, ஒரே கூனலா நிமுத்துப்புட்டான்... ஒரே அம்புல. நான் என்னம்மா குத்தஞ் செஞ்சேன். கெழவின்னு தெரியாம இந்தப் போடு போட்டுட்டான என்னைய! அவனுக்கு, இந்த அரசாங்கம் அவன் கையில கிடைத்து விட்டால் சும்மா விட்ரு வானா? ஒந் தலையை அறுத்துப்புடுவான். நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கட்டும். மகாராஜா வர்ற நேரம். அம்மா! நான் பொய்ட்டு வரட்டுமா?

கைகேயி : ரொம்ப சந்தோஷம். அப்படியே நான் செய்து வருகிறேன்....[இசை]

கூனி : லொக் லொக்...

பபூன்2 : ஏ! கொழவி(ம்... ஏ! கெழவி)ஏ கொழவி. (ஏய் கெழவின்னு கூப்பிடுறா. கொழவி இல்ல) ஒனக்கு எவ்வளவு கெடுதலைப் புத்தி இருக்கணும். (இவ்வளவு வயது வந்தும் கெடுகாலி புத்தி இருக்கே) ஒனக்கு ஏன் இந்தக் கெட்ட எண்ணம். அதுனாலதான இப்படிக் குனிஞ்சிகிட்டுத் திரியிற. {சிரிப்பு} நல்ல எண்ணமாயிருந்தா, எங்கள மாதிரி நிமுந்துகிட்டுத் திரியிவேல்ல. (ஆமா) ஏ! மக்கா கோழிமேல கோழி வைக்கக் கெழவி {சிரிப்பு} அய்யா! டோன் கர் பிளீஸ் {சிரிப்பு} படுவா இதெல்லாம் ஒனக்குச் சொல்லிக் குடுக்கத் தெரியு தில்ல... படுவா. படுவா, டுப்பாக்கில ஒன்னையச் சுட்டுத் தள்ளிப் போடுறேன் பாரு. எடுடா ரிவால்வார. எடுடா டுப்பாக்கிய... புர்ர்ர்...

{சிரிப்பு} பீரங்கிக் குண்டுல சுட்டுத் தள்ளிப் போட்டேன்டா.

பபூன்3 : மாப்ள!

பபூன் 2 : டேய் மொளு மொளு {டேய் 'மொளு மொளு'} ...[இசை]

தசரதர் : கைகேசி!

கைகேயி : என்ன?

தசரதர் : ஆனால் இவ்வளவு அலங்கோலமாகவே இருக்கக் கூடிய ஒரு அரமணையில், எல்லாம் அலங் கோலமாகவே இருந்துக்கொண்டு வருகிறது கைகேசி.

கைகேயி : சுவாமி! இப்பத்தான் உங்களுக்குக் கண்கள் தெரிந்ததா? இங்க எதற்காக வந்தீர்கள்? ஏன் வந்தீர்கள் இங்கே?

தசரதர் : கைகேயி! ஆனால் ஏன் வரக்கூடாது? சந்தோஷ மான காரியத்தை நான் தெரியப்படுத்தலாம்னு நான் ஓட்டமாக ஓடி வருகிறேன். நின்ன வண்ணமாகவே நீ பேசி வருகிறாயே.

கைகேயி : என்ன காரியத்தைச் சொல்லப் போகிறீர்கள்?

தசரதர் : ஆனால் நம்முடைய மகனாகிய ஸ்ரீராமச்சந்திர பகவானுக்கு – ஸ்ரீ ராமருக்கு – நாங்கள் அயோத்தி பூராக, நான் முடிசூட்டுவிழா நடத்தி விடுவதாக நான் சொல்வதற்காக... நான் ஓட்டமாக நான் ஓடிவந்திருக்கிறேன். ஏன் இவ்வளவு கோபமாகவே பேசிவருகிறாய்? நான் என்ன குத்தம் செய்துவந்தேன்?

கைகேயி : பட்டஞ் சூட்டுவதை... ஆனால் சூட்டினால் சூட்டி விடுங்கள். ஆனால் அந்தக் காலங்களில்– என்னையத் திருமணம் செய்து வருங்காலங் களில் – எனக்கு இரண்டு வரம் தருவதாக நீங்கள்

தெரியப்படுத்தி வந்தீர்களே! இரண்டு வரமும் நீங்கள் கொடுக்கத்தான் வேண்டும்.

தசரதர் : கைகேயி! இரண்டு வரங்கள்... உண்மைதான்! தருவதாக நான் வாக்குக் கொடுத்து வந்தேன். இப்போ இந்த சமயத்தில் எதற்காக நீ கேட்டு வருகிறாய்? கேள். நான் தருகிறேன்.

கைகேயி : ஆனால் இரண்டு வரம் குடுத்ததாகச் சொல்லுங் கள். ஆனால் நான் தெரியப்படுத்தி வருகிறேன்.

தசரதர் : கவலைப்படவேண்டாம், தருகிறேன். கேள்!

கைகேயி : ஆனால் ஒரு வரத்தினால் அயோத்தி பூராவும் என்னுடைய மகனாகிய...

தசரதர் : அயோத்தி பூராக உன்னுடைய மகன்...

கைகேயி : பரதனுக்கு

தசரதர் : பரதனுக்கு...? {'பட்டம் எனும் குரல்'}

கைகேயி : முடிசூட்டு விழாவையும் நடத்தி விடவேண்டும்.

தசரதர் : ஆ! என்ன தெரியப்படுத்தி வருகிறாய்? பரதனுக்கு முடிசூட்டு விழா நடத்த வேண்டுமா? ஒரு வரத்தினால்! இரண்டாவது வரங்கள்...

கைகேயி : இரண்டாவது வரம்... பெரிய இராமன், பதினான்கு வருடம் பதினாறு நாள் பதினாறு நாழிகை காட்டு வழியாகப் போகவேண்டும்.

தசரதர் : இரண்டாவது வரங்கள் கொடுமை... [இசை] [உரைப்பாட்டு]

: அறுபதுக் கறுபது வருடமாக குழந்தையயில்லாத பெரும்பாவியாக நானிருந்தேன். நான்கு புத்திரர்கள் எனக்குப் பிறந்து, செல்வமாக அவனுக்கு நான் செய்வதெல்லாம் செய்து கொடுத்து, அயோத்தி பூராவும் முடிசூட்டு விழா நடத்தி விடுவதென்று நான் எவ்வளவோ நான்

சந்தோஷமாக இருக்க, ராமனைக் காட்டுக்கே போகவேணுமென்றே சொல்லி வருகிறாயே... என்ன செய்வேன்...?'

கைகேயி! என்ன காரியத்தைச் சொல்லி வந்தாய்? உன்னுடைய மகனைக் காட்டு வழியாக அனுப்புமாறு சொல்லி வருகிறாயே. உன்னுடைய மகனுக்கு வேணும்னால் அயோத்தி பூராவும் முடிசூட்டுவிழா நடத்தி வருகிறேன். ஆனால் இராமனை மட்டும் காட்டுக்கு அனுப்பவேண்டாம். நான் சொல்வதைக் கேள். ஆனால் ராமன் காட்டுக்குச் சென்றுவிட்டால், என்னுடைய பிராணங்களே போய்விடும்.

கைகேயி : அடேயப்பா! இராமனைக் காட்டுக்கு அனுப்ப வேண்டாம். பரதனுக்கு அயோத்தி பூராகவும் முடிசூட்டுவிழா நடத்திவிட வேணுமென்று சொல்ல, கன்றிழந்த பசுவைப் போல் கதறிக் கொண்டு வருகிறீர்களே!

தசரதர் : ஆனால் பரதனும் என்னுடைய மகன் தான். இராமனும் என் மகன்தான். ஆனால் நான்கு பேரும் என்னுடைய புத்ரபாக்கியங்கள்தான். ஆனால் நாலு பேத்துக்கும் மூத்தவன் நல்ல கல்வி ஞானங்கள் படித்து வந்தவன், இராமன்! அவனுக்குத்தான் அரசாங்கம் மேற்பார்க்கச் சரிவரும். ஆனால் உன்னுடைய மகனாகிய... சிறு குழந்தை! அறியாத குழந்தை! தெரியாத ஒரு சிறுவர்கள்! அவனுக்கு முடிசூட்டுவிழா நடத்தி விட்டால் உலகம் ஏற்றுக் கொள்ளாது. கைகேசி! நான் சொல்வதைக் கேள்.

கைகேயி : சரிதான். நான் சொல்லி அனுப்பி... நான் கேட்க வேண்டிய வரங்கள் நீங்கள் கொடுத்து விட்டால்... இராமன் காட்டுக்குப் போய்விட்டால், உம்முடைய உயிரானது போய்விடும். அந்த விஸ்வாமித்ரன் இராமனையும் லெச்மணனை யும் ஏழு நாளாகவே அழைத்துக்கொண்டு

சென்றான், தாடகையைக் கொல்வதற்கு! அப்போ போகாத உயிர், இப்ப போய்விடுமோ? (அம்மாகிட்ட பேசமுடியாது) மகாராஜா! என்ன காரியத்தைச் சொல்லி வந்தீர்கள்! ஆனால் நான் கேட்ட இரண்டு வரங்களைக் குடுத்து வருவீர்களா? இல்ல, நாக்கைப் பிடுங்கி நான் தற்கொலையாக, என்னுடைய காலிலிருந்து... என்னுடைய உயிர்களை நான் தற்கொலையாக நான் மாண்டுவிடுவதா சுவாமி!... [இசை]

தசரதர் : ஏ பரமேஸ்வரா! ஏ கைலயங்கிரி வாசகா! ஏ நாராயுணா! ராமா! அயோத்தி முழுதும் முடி சூட்டு விழா நடத்தி... உன்னுடைய திரு முகத்தை... நான் காணவேண்டுமென்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்க, சண்டாளியான வள்..., இப்பேர்ப்பட்ட அபாண்டமான வார்த் தைகளைத் தெரியப்படுத்தி வருகிறாள். கைகேசி, ஆனால் உன்னுடைய அபிப்ராயங்கள்தான். ராமனைக் காட்டுக்கு அனுப்பச் சொன்னாலும்... அனுப்பினால் உன்னுடைய பிரியம்தான். ஆனால் அரமணைக்குள்ளாக இருக்கச் சொன் னாலும் உன்னுடைய பிரியம்தான். பரதனை, ... ஆனால் பட்டம் சூட்டினாலும் உன்னுடைய பிரியம்தான். இராமனுக்கு நீ. பட்டம் சூட்டி னாலும் உன்னுடைய பிரியம் தான். இதோ... ராமர் ஏக்கத்தினால் உத்தரவு கொடுத்து நான் மயக்கமடைகிறேன்... [இசை]

கைகேயி : மயக்கமாகவே படுத்துவிட்டார்... இதுதான் சமயம். இதுதான் நேரங்கள். இவரைத் தூக்கி சிம்மாசனத்தில் படுக்க வைத்துவிட்டு... ஆனால் அந்த இராமனை இவர் எந்திரிப்பதற்குள்ளாக விரட்டி விடவேண்டும்... [இசை]

பபூன்1 : அம்மா! அம்மா! ராணியம்மா!.

கைகேயி : ஆனால் அந்த அம்பத்தாறு தேசத்தரசர்கள் எல்லாம் எதுக்கு இருக்கிறார்கள்?

பபூன்1 : அம்மா! ஸ்ரீ ராமருக்குப் பட்டாபிஷேகம் என்று சொன்னவுடன், ஆனால் பட்டாபிஷேகத்தைப் பார்க்கலாமென்று அம்பத்தாறு தேசத்தரசர்கள், முனிவர்கள் இவர்களெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

கைகேயி : இராமருக்குப் பட்டமில்லை. (ஏம்மா)

பபூன்1 : ம்... ஏம்மா பட்டமில்லை?

கைகேயி : ஆனால் பரதனுக்குப் பட்டம் முடிந்துவிட்டது.

பபூன்1 : அட எளவெ. எனக்குத் தெரியாம முடிச்சிட்டாக. (ஒருத்தருக்கும் தெரியாம முடிச்சிட்டாக) எப்பம்மா முடிஞ்சிது?

கைகேயி : டேய்! நான் சொல்றதக் கேளடா.

பபூன்1 : ம். உத்தரவு சொல்லுங்க.

கைகேயி : ஆனால் இந்த அம்பத்தாறு தேசத்து அரசர்களைப் பூராக, அவரவர்கள் இருக்க வேண்டிய ஒரு நாட்டுக்குப் போகச் சொல்லி விடு. ஆனால் யானை சேனைகள்லாம் அவுத்துக் காட்டு வழியாக விரட்டுவிடு. (விரட்டிவிடு) ஒருவருமே இந்த அயோத்திக்குள்ளாக இருக்கக் கூடாது.

பபூன்1 : உத்தரவு!

கைகேயி : அந்த ராமனை நான் அழைத்ததாகவே அழைத்துக் கொண்டுவா.

பபூன்1 : உத்தரவு!

கைகேயி : போடா.

பபூன்1 : போறேன். ... [இசை]

யோவ் யாரய்யா, அம்பத்தாறு தேசத்து அரசர்களே! ஒருவரும் இந்த அரமணைக் குள்ளாக இருக்கப்படாது. பரத மகாராஜாவுக்குப் பட்டம் முடித்துவிட்டது. ஆனால் இங்க ராமருக் குப் பட்டம் இல்லை. அவரவர்கள் இருக்க வேண்டிய அரமணைக்கி நீங்கள் போய் விடலாம். போங்கய்யா. எல்லாரும் போயிருங்க. போங்க... போங்க. நில்லாதீங்க. போ... போ... [இசை] அட போங்கய்யா (எங்க போங்கய்யா)

அரசன்1 : ஏய்! ராமருக்குப் பட்டமில்லை? (இல்லை)

பபூன்1 : இல்லை.

அரசன்1 : ஏன் இல்லை?

பபூன்1 : (அது என்னவோ நமக்குத் தெரியாது). பரத மகாராஜா... பரதனுக்குப் பட்டம் முடிந்து விட்டது. ராமனுக்குக் கிடையாது.

அரசன்1 : பரதனுக்கு எப்ப முடிஞ்சிது?

பபூன்1 : அது எப்ப முடிஞ்சிது...? எனக்கே தெரியலே... ஒனக்கு நான் என்ன சொல்றது? {சிரிப்பு} அடப்போய்யா... இல்லேன்னு சொன்னா போக வேண்டியது தான்.

அரசன்1 : அட, ராமருக்குப் பட்டமில்லை! ஏம்ப்பா இல்ல?

பபூன்! : அது என்னமோ (அது என்னமோ தெரியாது. அம்மா உத்தவு) கைகேயி அம்மாவுடைய ஒரு உத்தரவுகள்.

அரசன்1 : அது எதனால இல்ல? (இவன் கேக்க மாட்டான்)

பபூன்1 : அது என்னமோ தெரியாது. போய்யான்னா போகணுமில்ல.

அரசன்1 : அது ஏம்ப்பா ராமருக்குப் பட்டமில்ல? எதுனால இல்ல?

பபூன்1 : இது அதனாலத்தான் இல்ல [அடிக்கிறான்]. {சிரிப்பு} போகச் சொன்னா போவானா... ஏன் இல்ல, எதுனால இல்ல {சிரிப்பு} , அதனால இல்ல, இதனால இல்ல.

அரசன்2 : ஏய் ராமருக்குப் பட்டமில்லியா?

பபூன்1 : இல்ல (இல்ல).

அரசன்2 : ஏனில்ல?

பபூன்1 : அது என்னமோ, பரதனுக்குப் பட்டங்கள் முடிந்துவிட்டது.

அரசன்2 : அது எப்படி எங்களுக்குத் தெரியாம முடிஞ்சிருக்கும்?

பபூன்1 : அது எப்படியோ முடிஞ்சிது. எனக்குத் தெரியாது.

அரசன்2 : அட ஏனப்பா இல்லை... ராமருக்குப் பட்ட மென்று ரொம்ப நாட்களாகவே எதிர்பார்த்துக் கொண்டிருந்தோமே. ஆனால் ராமருடைய திருமேனி முகத்தை நாங்கள் காண வேண்டுமே. ஆனால் ராமருக்கு ஏனப்பா இல்லை பட்டம்?

பபூன்1 : [அடிக்கிறான்] போடான்னா {சிரிப்பு} அட ஒரு தடவ ரெண்டு தடவ மரியாதி. ஏன் இல்ல எப்படியில்லன்னு எனக்கே தெரியாது. இந்தப் பயல்வளுக்கு எப்படிச் சொல்றது?

பபூன்2 : ஏய் ராமருக்குப் பட்டமில்லியா? (இல்ல)

பபூன்1 : இல்ல. அட இல்ல. போய்யா. இவுங்க கூட மாரடிக்கிறதுக்குக்கூட சரியா வந்துரும்.{சிரிப்பு}

பபூன்2 : ஏய் ராமருக்குப் பட்டமில்லையா. (அட ஆன சேனயெல்லாம் அவுத்துவுட்டு, போட்ட பந்தல்லாம் பிரிச்சிவுடப்பா. எல்லாம் அவுஹ அவுஹ பாட்ல பொயிருவாக)

பபூன்1 : அதெல்லாம் அப்பவே ரெடியாய்ப் போச்சி. போய்யா. {சிரிப்பு}

பபூன்2 : ராமருக்குப் பட்டமில்லையா?

பபூன்1 : இல்ல.

பபூன்2 : அப்ப எப்ப பட்டாபிஷேகம் முடிக்கப் போறது?

பபூன்1 : ராமனுக்கே பட்டங் கெடையாது. பரதனுக்குப் பட்டம் முடிஞ்சிபோச்சி.

பபூன்2 : ம்... எப்ப முடிஞ்சி... {சிரிப்பு} (முந்தாநாத்து)

பபூன்1 : ஏளாந் தேதி... போய்யான்னு சொன்னா, ஏன் இல்ல, எப்படி இல்லன்னு கேக்ற. ஏன் உபத்ரவம். உயிர வாங்ற. போய்யா. இன்னக்கிக் கெடையாது. ராமருக்குப் பட்டங் கெடையாது. போ போ.

பபூன்2 : ராமருக்குப் பட்டமில்லையா?

பபூன்1 : இல்ல.

பபூன்2 : அட ஏம்ப்பா இல்ல? (இல்லேன்னா போய்யேன்)

பபூன்1 : என்னன்னு தெரியல போங்க {'இல்லேன்னா போயேன்'}

பபூன்2 : அது எதுனால இல்ல?

பபூன்1 : ஏய் மரியாதையா போறியா {சிரிப்பு} சுடச்சுட வேணுமா? பழசு வேணுமா? {சிரிப்பு}

பபூன்2 : அட ஏம்ப்பா இல்ல. {சிரிப்பு}

பபூன்1 : [அடிக்கிறான்] 'சுடச்சுட வேணுமா பழசு வேணுமா'.

பபூன்2 : அது ஏன் இல்ல? {சிரிப்பு} அது எதனால் இல்ல?

பபூன்1 : அதனாலத்தான் இல்ல [அடிக்கிறான்].

பபூன்2 : சப்புச் சப்புன்னு அடிக்காதடா படுவா [அடிக்கிறான்]

பபூன்1 : அட உளுவத்தலப் பயலே [அடிக்கிறான்]

பபூன்2 : அட மக்கா கோழி படுவா எடுடா டுப்பாக்கிய ...டூர்ர்ர்.... [இசை]

பபூன்1 : சாமி! கைகேசியம்மாள்... ஆனால் உங்களை அழைத்து வருவதாகச் தெரியப்படுத்தியிருக் கிறார்கள்.

இராமர் : சரி, அப்படியே நான் போய் வருகிறேன்... [இசை]...

அம்மா! தேவி! என்னை அழைத்த காரணங்க ளென்ன? நான் என்ன குத்தம் செய்து வந்தேன்? தேவர்கள் என்ன குத்தம் செய்தார்கள்? நான் செய்து வந்த குத்தங்களை மன்னிக்க வேண்டும்.

கைகேயி : மகனே ராமா! (வாழைக்காய்) அடே நான் பெத்த செல்வமே! நான் பெத்த புத்ரா! (அம்மா பெத்த செல்வம்!) மகனே! அநேக நாட்களாக குழந்தை யில்லாமல் இருந்தேனே... அந்த விதமாக இருந்துவிட்டால்தான் என்ன? அய்யோ... நான் பெத்தும் மலடியானேனே. பெறாமலும் மலடி ஆனேனே.... கண்ணா! ம்கும்... ம்கும்... ம்கும்... (கொறஜாலம் போடுறா பாரு)

இராமர் : அம்மா! எதற்காக நீங்கள் வருத்தப்பட வேண்டும்? நடந்த விஷயங்களைச் சொல்லுங் கள். ஏனிந்த... எனக்காகவே முடிசூட்டு விழா நடத்துவதாகவே சொல்லி வந்தார்கள் தந்தை அன்னவர்கள். முப்பத்து முக்கோடி முனிவர்கள் நாற்பத்தி எண்ணாயிரங் கோடி ரிஷிமார்களும்,

அம்பத்தாறு தேசத்து அரசர்கள் எல்லாம் என்னுடைய முடிசூட்டு விழா நடத்துவதைக் காண வேண்டுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந் தார்களே தேவி.

கைகேயி : அடேய்! உன்க்குப் பட்டாபிஷேகம் என்று சொல்லி வந்தார் உன்னுடைய தந்தையானவர். தங்கத் தாம்பாளத்தில் உனக்காகத் தங்கக் கிரீடங்கள், மார்பிலே பதக்கங்கள். மோகன மாலை, ரத்னமாலை இவைகளெல்லாம் எடுத்துக் கொண்டு, தங்கத் தாம்பாளத்திலே வைத்துக் கொண்டு, உன்னுடைய முடிசூட்டு விழா நடத்துவதை நான் காண வேண்டுமென்று ஓட்ட மாக நான் ஓடிவந்தேனடா மகனே. உன்னுடைய அப்பா அன்னவர் சிம்மாசனத்திலே இருந்தார். உன்னுடைய தந்தையானவர் உக்காந்தவுடன், கைகேசி எங்கே போகிறாள் என்று கேட்டார். உங்கள் அப்பா அன்னவர்கள் கேட்க, 'ஆனால் மகன் ஸ்ரீராமருடைய பட்டாபிஷேகத்தை நான் பார்க்க வேண்டும், அதற்காக இந்த ஆடை ஆபரணங்கள்லாம் கொண்டு போகிறேன்' அப்படியென்றே சொல்லி வந்தனடா கண்ணே. ம்கும்... ம்கும்... ம்கும்... நான் கொண்டு வந்திருக்கக்கூடிய ஆடை ஆபரணங்களை யெல்லாம் தாம்பாளத் தட்டுடனே பிடுங்கித் தூர எறிந்து என் கன்னத்தில் ஓங்கி அடித்தாரடா... ம்கும்... ம்கும்... ம்கும்... (ம்... அஞ்சி வெரல் அப்படியே கெடக்கு கன்னத்ல) மகனே! எதற்காக என்னைய அடித்து உபத்ரவம் செய்ய வேணும்? மகனுடைய பட்டாபிஷேகத்தை நான் பார்க்க வேணுமென்று நான் போகிறேன் என்று நான் கேட்டேன். ஆனால் 'ராமனுக்கு பட்டம் வேண்டாம். பரதனுக்குத் தான் பட்டம் முடிந்துவிட்டது. அந்த ராமனை பதினான்கு

வருஷம் பதினாறு நாட்கள் வனத்து வழியாகப் போகச் சொல்லிவிடு' என்று... ஆனால் என்னிடமே சொல்லிவிட்டு, என்னை அடித்து வெரட்டி, உன்னைப் போவதற்காகவே சொல்லி விட்டாரடா. ம்கும்... ம்கும்... (அம்மா அழுவாதீங்க... அழுவாதீங்க. ஆறாப் பெருகுது கண்ணீர்) {கன்னமெல்லாம் வீங்கிப் போச்சி}

இராமர் : சர்தான் ஆனால் நீங்கள் சொன்னாலென்ன? என்னுடைய தந்தை சொன்னாலென்ன? (எல்லாம் ஒன்றுதான்) எல்லாம் ஒன்றுதான். என்னைப் பதினான்கு வருடம் காட்டு வழியாகப் போக வேணுமென்று தெரியப்படுத்தி வந்தார்களா? ரொம்ப சந்தோஷம் அடைந்தேன். நீங்கள் போ... ஆனால் சொல்வதற்கு முன்பாகப் போகவேணுமென்றே நான் நினைத்திருந்தேன். அதுபோல் அப்பா அன்னவர்கள் தெரியப் படுத்தி வந்துவிட்டார்கள். அம்மா! அப்படியே நான் சென்று வருகிறேன்.

கைகேயி : மகனே! ஆனால் உன்னுடைய தந்தையானவர் மயக்கமாகவே படுத்து நித்திரை செய்கிறார். கொஞ்ச நிமிஷத்தில்... இந்த சமயத்தில் உன்னுடைய தந்தையைக் காணமுடியாது. (ம். எழுப்ப வேண்டாம்) ஆனால் எழுப்பக் கூடா தென்றே சொல்லியிருக்கிறார், அப்பா அன்ன வர்கள். ஆனால் நீ காட்டிற்கு நீ போவது உண்மையானால், அப்பா அன்னவர்கள் - தந்தையானவர்கள் - எந்திரித்து என்னுடைய மகனுடைய ஆடை ஆபரணங்கள் எங்கே என்று கேட்டால் நான் என்னப்பா செய்துவிட முடி யும்? (உட்றாதீங்க) உன்னுடைய கிரீடங்கள், மோகனமாலை, ரத்னமாலை, இடுப்பில் ஒட்டியாணங்கள் இவைகளையெல்லாம் கழட்டி அரமனைக்குள்ளாக வைத்துவிட்டு, ஆனால்

காட்டில் வேடுவர்கள் எப்படியிருப்பார்களோ அதைப் போல் நீ வரவேண்டும். மான்தோல் ஆசனங்கள், இலைத்தோல் ஆடைகள் இப் பேர்ப்பட்ட ஒரு ஆடை ஆபரணங்கள்... இப் பேர்ப்பட்ட ஒரு ஆடை ஆபரணங்கள் வைத்துக் கொண்டு ஆனால் வரவேண்டும்.

இராமர் : அப்படியே நான் என் ஆடை ஆபரணங்களை வைத்துவிட்டு வேடுவனைப் போல் நான் வருகிறேன்.

கைகேயி : என்னுடைய கண்ணுக்கு முன்பாகவே கழட்டி வைத்துவிட்டு வா. போ மகனே போ. எல்லாத்தையும் உன்னுடைய அப்பாத்தான் சொல்லி வந்தார்கள். போ... போ. ...

பாடல் : **மாரில் பதக்கமடா ராமா**
கழற்றி என் கையில் கொடடா-ரகுநாயகா
தங்கக் கிரீடமும் ராமா
கழற்றி என் கையில் கொடடா-ரகுநாயகா
காலுச் சிலம்புகள் ராமா
கழற்றி என்கையில் கொடடா-ரகுநாயகா

இராமர் : அம்மா! உன்னுடைய வார்த்தையை... நான் தவறாமல் மான்தோல் ஆசனங்கள், புலித்தோல் ஆடைகள், பருக்கள் என்று சொல்லக் கூடிய மரவுரி தரித்து, காட்டில் வேடுவர்கள் எந்த விதமாக இருப்பார்கள், அத்தகையவனாக நான் வந்துவிட்டேன்... [இசை]

கைகேயி : அடா மகனே! இப்படி வந்துவிட்டாயே ராமா... கண்ணா... ம்கும்... ம்கும்... ம்கும்... (அம்மா அழவேண்டாம்.) அய்யய்யோ. ஆனால் அரசாங்கத்தில் வேலை பார்க்கக் கூடியவன் வேடுவனைப் போல் வந்துவிட்டாயே! அடே கண்ணா...! ம்கும்... ம்கும்... (அம்மா அழுக வேண்டாம். அழுது அழுது மூஞ்சியெல்லாம்

வீங்கிப் போச்சி) மகனே! உனக்கு நான் பாக்கி வரங்களை நான் குடுத்து வருகிறேன்.

இராமர் : போவதற்குப் பாக்கி வரங்களைக் குடுத்து வாருங்கள்.

கைகேகயி : பதினான்கு வருடங்கள் பதினாறு நாள் பதினாறு நாழிகைகள் நீ காட்டு வழியாக நீ போவதனால், காடுகள்...., ஆனால் அதிகமாயிருந்தால் அங்கேயே இருந்துவிடு. காடு சௌகரியம் இல்லையென் றால்... ஆனால் அரமணைக்கு வந்து சேர்ந்து விடு. அட காட்டுக்குப் போகக் கூடியவன் அரமணை மீதில் ஒனக்கெதற்காக ஆசை. (ம், எப்படி வாத்தி பாடம் குடுக்றா அம்மா) ஒரே போக்கா... போக வேண்டும். ஒடனே போ பார்ப்போம். ...[இசை]

இராமர் : இதோ என்னுடைய தாயாரிடம் சென்று தெரியப்படுத்திவிட்டு ஆனால் வனத்து வழியாக நான் சென்றுவிட வேண்டும். ...[இசை]

பாடல் : **வித்தேச நாதா உந்தன்**
வேண்டிய பலன் இதுபோல்
வேடனைப் போல் வேஷம் கொண்டு
ஏகலானேன் - தெய்வமே
தெய்வமே! தெய்வமே! தெய்வமே!
தங்க வஸ்திர மிழந்தேன்
காவி வஸ்திர முடுத்தேன்
ஜோடி யிழந்த அன்றிலைப்போல்
துன்பப் படப்போகிறேனய்யா.

கோசலை : யாரப்பா நீ? ஆனால் வேடுவனைப் போல் வருகிறாயே. ஐயோ பாவம் எங்கள் ராமருடைய பட்டாபிஷேகத்தைப் பார்க்க வந்த... வேட ராமன்... ஆனால் வேடுவர்கள். ஆனால் பாதை தெரியாமலே வந்துவிட்டார்கள்.

இராமர் : அம்மா. நான் வேடுவனல்ல. ஒங்களுடைய மகன் ஸ்ரீ ராமர். ஆள் அடையாளம் தெரிய வில்லையா? இதோ பாருங்கள். ...[இசை]

கோசலை : ஏனப்பா இந்தச் சோதனைகள்? வேடுவன் போல வந்துவிட்டாயே. உனக்கு முடிசூட்டு விழா வென்று அப்பா அன்னவர்கள் தெரியப்படுத்தி வந்தார் கள். ஏன் இப்பேர்ப்பட்ட ஒரு சோதனைகள்? ஏன் இந்த வேஷங்கள்? இதை யார் சொல்லி வந்தது?

இராமர் : ஒருவருமே சொல்லி வரவில்லை. ஆனால் வனத்து வழியாகப் போவதற்கு எனக்கு ஆசை கள் தான். பதினான்கு வருடங்கள் பதினாறு நாள் பதினாறு நாழிகை நான் சென்று வருவதற்கு விடை கொடுக்க வேண்டும் தேவி!

கோசலை : அய்யய்யோ மகனே. போகவேண்டாம்... மகனே...

இலக்கு. : ஆ! அம்மா! சண்டாளியாகிய கைகேசியானவள் அவளுடைய பரதராஜன்... அண்ணனுடைய வேடத்தையும் கலைத்து பதினான்கு வருடம் காட்டு வழியாக அனுப்புவதற்கு எவ்வளவு மன தைர்யங்களாகயிருக்கும்? அந்தக் கைகேசி யையும் அந்தப் பரதனையும் என்னுடைய மந்திர வாளால் கண்டந்துண்டமாகவே வெட்டி, பறித்து ஸ்வைத்த மணி மகுடத்தை அண்ணனுக்கு நான் முடிசூட்டி வருகிறேன்!

இராமர் : தம்பி! என்ன காரியத்தைச் செய்து வந்தாய்?

இலக்கு. : அண்ணா! ஆனால் கள்ளக் கைகேசியையும் அந்தப் பரதனையும் என்னுடைய மந்திரவாளுக்கு இரையாக்கி விடுகிறேன்.

இராமர் : தம்பி! ஆனால் தம்பிமார்களைக் கொல்லவும், தாய்மார்களைக் கொல்லவும் மகாக் கொடிய ஒரு பாவங்கள்...*

★ பதிவு நாடா மாற்றத்தினால் ஏற்படும் சில நிமிட இடைவெளி.

நான் அயோத்திக்கு நான் வந்துச் சேர்கிறேன்.

இலக்கு. : அண்ணா! உங்களை விட்டு நான் பிரிந் திருப்பதா? ஆனால் நானும் தங்களுடைய பின்பு றமாக நான் வருகிறேன்.* ஆனால் தங்களுடைய பின்புறமாகவே நானும் வருகிறேன். உங்களைப் போல் வேட அவதாரமாகவே எடுத்து வருகிறேன். அண்ணா! என்னையும் கூட்டிச் செல்ல வேண்டும். ...[இசை]

இராமர் : தம்பி, என்னைப்போல அவதாரங்களை மாற்றி நீயும் என்னுடைய பின்புறமாக வருகிறாயா? உன்னுடைய தாயிடம் வேண்டிய வரங்கள் வாங்கிக் கொண்டு சீக்கிரமாகப் புறப்படு, போவோம்.

இலக்கு. : அண்ணா... தாயே!

சுமித்திரை : மகனே! லெச்மணா! எவ்வளவு சொன்னாலும் என்னுடைய வார்த்தையை நீங்கள் கேட்கமாட் டீர்கள். அண்ணனுடைய பின்புறமாக நீ போவதனால் உன்னுடைய அண்ணனுக்கு வரக் கூடிய ஆபத்துகள், எதிரே சென்று அரக்கர் களைக் கொல்ல வேண்டும். ஆனால் பதினான்கு வருடம் பதினாறுநாள் பதினாறு நாழிகையும் ஊணு உறக்கமில்லாத ஒரு பிரமச்சாரியாகவே நீ இருக்கவேண்டும்.

இலக்கு. : சந்தோஷம்.

சுமித்திரை : மகனே, போகவேண்டாம்...

இலக்கு. : அண்ணா, புறப்படுங்கள்.

★சிறு சலசலப்பு... 'என்ன சத்தம்' என்று பாபுராவ் காளியம்மாளிடம் கேட்கிறார். ஒண்ணுங்கேக்காது' என்கிறார் காளியம்மாள். உடனே 'சத்தம் போடாதீங்க. சத்தோம்' என்று சப்தமிடுகிறார் பாபுராவ்.

இராமர் : புறப்படு. சீதாலெட்சுமியிடம் நான் தெரியப் படுத்திச் செல்கிறேன்...[இசை]

பாடல் : **டேய மைனா டேய மைனா**
டேய மைனா டேயோ டோய்

குறத்தி : அரே! வாரே சந்திலே மாரே பொந்திலே குர்ர்ரி... அரே நீ சாட்லாப்பு வர்றே சாமி. அரே சீலப்பேன் விடுக்கு விடுக்குன்னு கடிக்குது. (ஏய் நீ எந்த ஜாதி? எந்த ஊரு?) அரே சாமி அரே பாரு ரவுக்கேல கடிக்குது, விடுக்கு விடுக்குன்னு. (ரவுக்கேல கடிக்காது... பாவாடைல தான் கடிக்கும்) அரே! பாவாடைல கடிக்குது, அரே விடுக்குவிடுக்குன்னு கடிக்குது. விடுக்கு விடுக்கு விடுக்குனு கடிக்குது. (இந்தாப் பாரு, நீ எந்த ஜாதி? எந்த ஊரு?) அரே பாவாடைல கடிக்குது, அரே சீலப்பேனு. (எங்க கடிக்குது?) அரே விடுக்கு விடுக்குன்னு கடிக்குது. (புடிச்சி வாயிலே போட்டுக்க) அரே சாமி! பைசாவுக்கு ரெண்டு பேனு. அரே வாங்கி சாப்பிட்டுத் தரையில படுசாமி. ரேடியோ பாட் பாடும். ரேடியோ பாட் பாடும் (இங்க யாரும் வாங்கமாட்டாக. கொண்டு போய்ப் பொரிச்சி தின்னு) அரே முணுமுணுன்னு பாட் பாடும் சாமி. (இந்தா அம்மா! ஒனக்கு எந்த ஊரு? எந்த ஜாதி?) அரே நாசமாப்போக. அது ரவுக்கேல கெடக்குது. (கேக்க மாட்டா) அரே பாவாடைல கெடக்குது... அரே (ஏய்) புடி சாமி. விடுக்கு விடுக்குனு கடிக்குது. (ம் உனக்கு அவசரம்னா நீதான் புடி) புடிசாரே! புடிசாரே! அரே புடிசாரே! அரே என்னா சாமி கேக்றே! (ஒனக்கு எந்த ஊரு? நீ என்ன ஜாதி? என்ன...) நாங்க சக்காளப் புள்ளேங்கோ (என்னாது? விரட்டக்காரப் புள்ளேங்களா) வேட்டக்காரப் புள்ளேங்கோ (எங்களுக்குத் தெரியாது) அரே நாங்க நரிக்கொறவப் புள்ளேங்கோ. (நரிக்

கொறவப் புள்ளேங்களா) ஆமா சாமி. (எந்த ஊரம்மா ஒனக்கு?) அரே வந்து... எந்த ஊருன்னு கேக்றே... (ம். குடிச எந்தப் பக்கம் போட்ருக்கீங்க?) அரே சாமி, நாங்க இருக்றது திருச்சினாப்பள்ளி. திருச்சினாப்பள்ளி. (ம்..., திருச்சீல) அரே ஆமா சாமி. (ம்.. குடிச எங்க போட்ருக்கீங்க?) அரே மதுரை இருக்கு மதுரை (ம்) அரே ஆறு போவுது சாமி காவேரி ஆறு... (வைகை ஆறு) ஆ! அரே வைகை ஆறு. நடு ஆத்துக்குள்ளே இழுத்துக் குடிச போட்டோம். (நடு ஆத்துக்குள்ள குடிச போட்டா) அரே மேற்கே மழ பேஞ்சு, அரே ஆத்து நெறையாத் தண்ணீ வந்திருச்சி தண்ணி. அரே ஆத்து நெறையாத் தண்ணி வந்து நம்மக் குடிசைய அடியோட புடுங்கிட்டுப் போயிருச்சி சாமி. (பெறவு, தரையிலே போட்டா என்ன?) அரே சாமி! பாவாடைல கடிக்குது... விடுக்கு விடுக்குனு {சிரிப்பு} (ஏய் அதுல என்னன்ன சேதம்?) அரே! சேதம்னு கேக்றே? (ஆமா) அரே மாமியாக் குடிசை ஒண்ணு (மாமியா குடிச ஒண்ணு), அரே மச்சினங் குடிசை ஒண்ணு (ரெண்டு), அரே எண்ணத்தின்னிக் கெளவி குடிச மூணு (மூணு) {சிரிப்பு} அரே சாமி கழுத சேதம் (எத்தனக் கழுத சேதம்?) அரே மாம்யாக்கழுத ஒண்ணு... ஆஆ! (ம்.. மாமியாக் கழுத ஒண்ணு) அரே மச்சினங் கழுத ரெண்டு...ஆஆ.. (ம்) அரே! உணர்ச்சி கெட்ட கழுத மூணு சாமி..! ஊர்க்கழுத நாலு... (ஏய்! தண்ணீல போச்சா) அரே ஆமா சாமி.

பபூன் 1 : யார்ரா அவன்? கழுத கிழுதன்னு பேசிக்கிட்ருக்கான் இங்க. ஏய்! (நரிக்கொறத்தி) அப்பா... புள்ள சில்லுன்னு இருக்கே... யப்பா... யாத்தாத்தோ... அப்பப்போ {சிரிப்பு} யாத்தா புள்ள சில்லுன்னு இருக்காளெ... யாத்தாத்தா... ம்ச்சு.ம்ச்சு.. ம்ச்சு.. {சிரிப்பு}

குறத்தி : அரே! ஓன் வாயில வைக்க. அரே! ஓன் வாயில மண்ணு விழுகோ. அரே! பொம்பள நிக்றது தெரியல! பளிச்சினு வந்து நாக்கப் போட்டு நக்றே. (நாக்கப் போட்டு நக்கு) {'ஏய் நாக்கப் போட்டு நக்கு'- சிரிப்பு}

பபூன்1 : ஏய் படுவா! நான் எட்டிப் பாத்தனா... படவா தப்புத்தவறா பேசுனா... நெஞ்சல எடுத்திரு வேன், பாத்துக்க. {சிரிப்பு} இவன் யார்ரா இவன். (நரிக் கொறத்திப்பா) நரிக்கொறத்தியா அதான் இவ்ள வகராதியா பேசுறா. இந்த... ஒங்க ஜாதிகள்ள வந்து, ஜோடி ஜோடியா, ஜோடி ஜோடியா, வருவீங்க. தனியா நீங்க வரமாட் டீங்க. ஒன்னையப் பாக்கும் போது எளவட்டப் புள்ளயா, வாலிப... நல்ல செவத்தப்புள்ளையா இருக்றே (கல்யாணமெல்லாம் ஆயிருச்சா?) ம்... கல்யாணம் ஆயிடுச்சா? புருஷன் கிருஷன் இருக்கிறானா? புள்ளகுட்டி இருக்குதா? என்ன சமாச்சாரம்... ம்ஹூம் ம்ஹூம் {சிரிப்பு}

குறத்தி : அரே சாமி! எனக்கு ரெண்டு புருஷன் (ஏயப்பா ஒண்ணு காணாது)

பபூன் 1 : ரெண்டு புருஷன். டபுள் புருஷன்... இருக்றானா இல்லயா?

குறத்தி : அரே சாமி! மூத்த புருஷன் இனிச்ச புருஷன் தங்கமான புருஷன். (ம்... நெறய சக்கரப் போட்ருப்பான்)

பபூன் 1 : மூத்த புருஷன் இனிச்ச புருஷன் {சிரிப்பு} (சக்கர போட்டா!) சக்கர தடவியிருப்பான்டா அவன். அவன் இருக்றானா இல்லயா?

குறத்தி : அரே சாமி! சீக்கில்லே, நொடியில்லே, வாதமில்லே, பித்தமில்லே... அரே! ஒலகத்ல வராத சீக்கு நம்ம புருஷனுக்கு வந்திருச்சி... (ஒலகத்ல வராத சீக்கு...என்ன சீக்கம்மா அது?)

பபூன்1 : உலகத்ல இல்லாத சீக்கா ஒம் புருஷனுக்கு வந்திருச்சி? எப்படி... என்ன சீக்குல செத்தான்? (காச்சலா, மண்டகுத்தா, வாய்வுகுத்தா)

குறத்தி : அரே சாமி! மூணு நாளா கோமணத்த இறுக்கிக் கெட்டியிருந்தான் சாமியோவ்.{சிரிப்பு} (மூணு நாளா கோமணத்த இறுக்கிக் கெட்டியிருந்தான்.) ம். அரே சாமி சீலப்பேன் கடிச்சிச் செத் பொய்ட்டான் சாமி.

பபூன்1 : அய்யய்யோ அப்பா (ஏ! நல்ல பாம்பு வெஷமா யிருந்திருக்கு... சீலப்பேன்) ஏ! செத்தாலும் பொழச்சாலும் கோமணம் கெட்டமாட்டேன்டா அப்பா {சிரிப்பு} (அட நீயும் கோமணத்துணி கெட்டுவியா?) ஏ! நல்ல பாம்பு விஷமாயிருந் திருக்குடா சீலப்பேனு... கோமணத் துணிக்குள்ள இருந்துகிட்டு (ஏய்... அந்த ஜாதி குளிக்காது. பேண்ட குண்டி கழுவாதப்பா) சுத்தமா நாகரீக மாக இருக்கமாட்டாக. அதனால் சீலப்பேன் பத்தியிருக்கு. அதனாலக் கடிச்சிச் செத்துப் பொய்ட்டானா? ஆமா... இன்னொரு புருஷன்?

குறத்தி : அரே சாமி! நல்ல மனுஷன். அரே! மாமியார் பேச்சுக் கேட்டு அடிக்க வர்றான் (மாமியார் பேச்சக் கேட்டு, எதுக்காக, குத்தமில்லாம அடிக்க வர்றாம்மா?)

பபூன்1 : எதாவது குத்தம் செஞ்சிருப்பா. அதனால அடிக்க வந்திருப்பான். அந்தப் பஞ்சாயத்தச் சொல்லு. ஒம் புருஷன் வரட்டும். சமாதானம் பண்ணி ஒம் புருஷன் பின்னால ஒன்னைய அனுப்பிர்றேன்.

குறத்தி : அரே சாமி இந்த ஞாயத்தைக் கேளு. சத்தமில்லாமக் கேளுங்க சாமி!

பபூன்1 : ம் சொலலு.* என்ன ஞாயம் அது? ஒம் புருஷனுக்கும் ஒனக்கும் என்ன சத்தம்?

★ 'இந்தப் பஞ்சாயத்தக் கேக்கணும். சத்தம் போடாதீங்க' என்கிறார் பாபுராவ்.

எதுக்காகச் சண்ட? எதுக்காக ஒன்னைய அடிக்க வர்றான் (சொல்லம்மா)

குறத்தி : அரே சாமி! அரே எங்க மாமனாரு எங்க மாமியா ஒரு குடும்பம். (மாமனாரும் மாமியாளும் ஒரு குடும்பம். இவளும் இவ புருஷனும் ஒரு குடும்பம்) அரே நானும் எம் புருஷனும் ஒரு குடும்பம் .

பபூன்1 : சரி ரெண்டு குடும்பமாச்சி. (ரெண்டு குடும்பம்)

குறத்தி : அரே! ரெண்டு குடும்பத்துக்கு ஒரு கொடம். (ஒரு கொடம்) அந்த ஒரு கொடத்ல தண்ணியெடுத்து ரெண்டு பேரும் ரெண்டு குடும்பத்தாரும் சோறு பொங்கறோம்.

பபூன்1 : இருக்கு. ரெண்டு குடும்பத்தார்களும் ஒரு கொடத்த எடுத்துச் சோறு பொங்கணும். (ரெண்டு குடும்பமும் பொழங்கணும்ப்பா) பொழங்கணும். அதுக்கு என்ன?

குறத்தி : அரே சாமி! கொடத்தத் தூக்கிக்கிட்டு நேரே கம்மாய்க்கிப் போயி ஒரு கொடம் நெறையத் தண்ணியெடுத்து இடுப்ல வச்சேன். அத இடுப்ல வைக்கும்போது கொஞ்சம் போலத் தண்ணி கீழக் கொட்டிருச்சி. (கொட்டத்தான் செய்யும். அதுக்கென்ன?)

பபூன்1 : இடுப்ல இந்தக் கொடத்த எடுத்து வைக்கும் போது கொஞ்சம்போலத் தண்ணி கீழே சிந்தியிருக்கு. அதுக்கென்ன?

குறத்தி : அரே! கொறஞ்சிட்டா, நம்ம மாமியா அடிப்பான்னு பயந்து, கொடத்த கீழ எறக்கிவச்சிக்கொறஞ்ச தண்ணீலக் கொஞ்சம் ஒண்ணுக்கிருந்தேன். {சிரிப்பு} (புள்ள, எப்படிப் பயந்து வேலை செஞ்சிருக்கு)

பபூன்1 : பார்ரா. குடிக்கிறத் தண்ணிக் கொடத்ல போயி ஒண்ணுக்கிருந்தா ஒதைக்க மாட்டான்? (டேய் பயந்துகிட்டு அந்த வேல செஞ்சிருக்காப்பா) அதுக்கு, கொடத்துக்குள்ளயா இருக்கச் சொல்லுது. (நல்ல தண்ணியாயிருந்தா... உப்புத் தண்ணியாகட்டும்னு) கொடத்ல இருந்ததுக்கு, கொளம்புச் சட்டில இருந்திருந்தா ரொம்ப நல்லாயிருந்திருக்கும். {சிரிப்பு} ஏன்னா... உப்புக் குச் செலவிருக்காது. {சிரிப்பு} படுவா இது ஒரு பஞ்சாயத்னா எங்கிட்ட பேச வந்திருக்கிற படுவா நீ? ரெண்டுஒதையோட விட்டுட்டானே... நல்ல மனுஷன். இந்தப் பஞ்சாயத்த, இங்க தீர்க்க... முடியாது. மதுர கோர்ட்டுக்குத்தான் போகணும்.

குறத்தி : அரே சாமி! இன்னொரு வழக்குக் கேளு? (இன்னொரு வழக்கு என்ன வழக்கும்மா?)

பபூன்1 : என்ன... என்ன... பஞ்சாயத்து! ஒழுங்காப் பேசணும். அகராதியாப் பேசுனா அடிச்சி நொறுக்கித் தள்ளீருவேன். {சிரிப்பு}

குறத்தி : அரே சாமி! ஒரு குடிசேல அரே ரெண்டு குடும்பந்தான இருக்கணும்.

பபூன்1 : ஓ! ஒங்க குடும்பத்லயிருந்து... அடடே நம்ம ஒரு வீட்ல ரெண்டு குடும்பம் இருக்கணுமே அது மாதிரி (அதுமாதிரி) ஊடால ஒரு தட்டிய மறச்சி (ரெண்டு பக்கம்) ம்... ரெண்டு பக்கம் இருக்றீங்க. அதுக்கு என்ன?

குறத்தி : அரே! எம் புருஷனுக்கும் எனக்கும் சண்டை வந்திருச்சி. (சண்டை வந்தாயென்ன) அரே! எனக்குக் கோபம் வந்து, அரே! நான் இருக்ற குடிசைப் பக்கம் தீயே வச்சேன். அரே எல்லாஞ் சேத்துப் புடிச்சிருச்சி (அட... ஒரு வீட்ல... எல்லாந்தான சேத்துப் புடிக்கும்) ஆனா அதுக்கு அடிக்கலாமா சாமி? (அடிக்கக்கூடாது... முட்டாப் பய.)

பபூன்1 : அவன் அகராதி புடிச்ச பய. {சிரிப்பு} ஆமா ஒரு வீட்ல ரெண்டு குடும்பத்தார் இருக்கீங்க. நீங்கள் இருக்ற பக்கம் தீய வச்சா எல்லாஞ் சேத்துத்தான புடிக்கும். (அதுலயே தூக்கிப் போட்டு இவளச் சுடாம வுட்ருக்கான புருஷங்காரன்) இந்தா, ஒம் பஞ்சாயத்து எனக்குத் தேவையில்ல. புருஷன் வரட்டும், சாமாதானப்படுத்தி விடுறேன். இங்க உக்காரு.

பபூன்2 : வந்திட்டாண்டா [அடிக்கறான்] ஏண்டா காலிப் பயலே! அயோக்கிய நாயே! ஒரு பொம்பள நம்ம ஊரைத்தேடி வந்தா கஞ்சித் தண்ணி ஊத்தி ஆதரிக்கிறதா...! டேய் பல்லப் பல்லக் காட்டறது... கண்ணக் கண்ணச் சிமிட்றது... அவளுக்கு ஒண்ணு ரெண்டு குடுத்து இழுத்துக்கிட்டு ஓடுறது {சிரிப்பு} எலே அயோக்கியப் பயலே. ஊரக் கெடுக்க வந்த... புள்ள கிட்ட, வந்த பொம்பளை கிட்டயெல்லாம் பேசுறது, பொழங்கறது... ஊரக் கெடுக்ற படுவா. பெரிய மனுஷத்தன்மைய விட்டுப்புட்டானே. என்ன... மானத்தக் கப்பல் ஏறுத. அயோக்கியப் பயலே! போடா [அடிக்கிறான்] போடா [அடிக்கிறான்] போடா [அடிக்கிறான்] போடா [அடிக்கிறான்]... [இசை]

அயோக்கியப் பயலே! காலிப்பயலே! சீட்டாடிப் பயலே! அடிச்சிப் பல்லகில்லெல்லாம் ஒடச்சிருவேன். {சிரிப்பு} அடிச்சிப் பல்ல ஒடச்சிருவேன் {சிரிப்பு} படுவா ஒரு பொம்பளப் புள்ளைகள ஊருக் குள்ள நடமாட விடமாட்டேங்கறான். ஏழ எளிய துகள்., படுவா இல்லாத அகராதி பேசுறான். அயோக்கியப் பயலே! படுவா, கிட்ட வந்தே... துப்பாக்கீல, சுட்டுப்புடுவேன் படுவா {சிரிப்பு}

பபூன்1 : அடத் தம்பி! அந்தப் புள்ளிகிட்ட எதுவுமே பேசலயே.

பபூன்2 : [அடிக்கிறான்] அதோடதான பேசிக்கிட்டிருந்த படுவா. {சிரிப்பு} காலிப்பயலே. அயோக்கியப்படுவா. ஊரக் கெடுக்கற படுவா {சிரிப்பு} ஏ கழுத! நீ ஊர்க்குள்ள வந்தா ஒழுங்கான மொறையில கஞ்சித் தண்ணி வாங்கிக் குடிச்சிட்டுப் போகாம, படுவா, ஏய்! ஊர்லயிருக்குற மைனர்களைக் கண்டா, பல்லப் பல்லக் காட்டறது, கண்ணக் கண்ணச் சிமிட்றது {சிரிப்பு}... ஊர்லயிருந்து மைனர்களைக் கெடுக்கவா ஊர்க்குள்ள வந்து அலயிற படுவா. அனாவசியமாத் திரிஞ்ச, பல்லப் புடுங்கி எறிஞ்சிடுவேன் படுவா. {சிரிப்பு} (இவனுக்கிருக்றது ஒரே பல்லு) என்னெ... யாருன்னு பாத்துக்கிட்ட. பெரிய மொதலாளி. (ஐயோப்பா பெரிய முதலாளி) {சிரிப்பு} ஒத்தக்கட*யிலிருக்கிற சினிமாத் தியேட்டர் பூரா நம்ம கடதான். நம்ம தியேட்டர்தான். (கிட்ட போனாத் தான் செருப்படி) அங்கயிருக்கிற ஓட்டல் கட பூரா நம்ம கடதான் {சிரிப்பு} (எலத் தொட்டி கிட்டி பூரா இருக்கான்னு பாத்து எடு) அங்க இருக்ற சைக்கள் கட பூரா நம்ம கடதான். {சிரிப்பு} ஜவுளிகட பூரா நம்ம கட. எல்லாம் நம்ம கடதான். நாந்தான் மொத்த காண்ட்ராக்ட். நான் பெரிய மொதலாளி. அந்தப் பயா காலிப்பய. அந்தப் பயல நம்பாத. அவன் ஒன்ன எடவழியில உட்ருவான். (இவன் கடசி வரைக்கும் புடிச்சிட்டுப் போவான்) நா பெரிய மனுஷன். ஊருக்குப் பெரிய மனுஷன். சண்டியரு. எம் பேரச் சொன்னாலும் சுண்ணாம்பு சட்டியை நாய் நக்காது {சிரிப்பு} அவன் அயோக்கியப் பயா... அந்தப் பயல நீ நம்பக்கூடாது. குடிக்கக்கூட கஞ்சியில்ல அந்தப் பயலுக்கு. வேணும்னா சொல்லு, நம்ம ரெண்டு பேரும் ரிஸ் மூஸ்லா கல்யாணம் பண்ணிக்கிரலாம் {சிரிப்பு} 'அப்படி' 'அப்படி' (இவன்தான் ஊருக்குப் பெரிய ஆளு.

★ஒத்தக்கடை = மதுரை - மேலூர் போகும் வழியிலுள்ள ஊர்.

ரிஸிஸ்டர் கல்யாணம் முடிக்றவரு) என்ன சம்மதமாச் சொல்லு? ஒடனே, இப்ப, ஒடனே எத்னாயிர ரூபா வேணும்ன்னாலுஞ் சரி, எத்தினி மோட்டார் பைக்ல... போவோம். {சிரிப்பு} ஆளுக்கு ரெவ்வெண்டு மோட்டார் பைக்ல ஓட்டிக் கிட்டுப் போவோம். (இன்னைக்கிக் கஞ்சிக்கி விதியில்ல இவனுக்கு) என்ன கல்யாணம் முடிச்சிக்கிருவமா? நீ சம்மதமா?

பபூன்1 : [அடிக்கிறான்] அப்ப வரமாட்டேன் {சிரிப்பு} {'ஒரே குடுலா குண்டீல...'} இவன் யோக்யமாகச் சொல்லிப்புட்டு... அவன் ரிஸ்முஸ்ஸாக் கல்யாணம் பண்ணப் போறான். {சிரிப்பு} இன்னேரமா அவா புருஷன் வரட்டும்...

பாடல் : வட்ட வட்டப் பாறையிலே

வரகரசி தீட்டையிலே

யாரு கொடுத்த சரிகச் சேலை

குறவன் : அரே சாமியோவ்! (சாமி சாமின்னு ஆள் மேலேயே ஏர்றான்)

பபூன்1 : படுவா, ஆள் நிக்றது தெரியல. தடிமாட்டுக்குப் பொறந்த பயலே! (காலத்தூக்கி மேலப் போடுறான்.)

குறவன் : அரே சாமி! ராத்ரிக்குக் கண்ணு தெரியுது. பட்டப் பகல் கண்ணு தெரியல... பட்டப் பகல் கண்ணு தெரியல. {சிரிப்பு}

பபூன்1 : பட்டா போடப் போறியாக்கும். {சிரிப்பு} படுவா, இவ்ளவு வெளிச்சத்லயும் ஒனக்குக் கண்ணு தெரியாமப் போயிருச்சி.

குறவன் : அரே சாமி! கண்ணு தெரியல,. அரே மாலைக் கண்ணு, மாலைக்கண்ணு. மாலைக்கண்ணு.. {சிரிப்பு}

பபூன்1 : டேய்! இப்ப எதுக்குடா இங்க வந்த?

குறவன் : சாமி! நம்ம பொண்டாட்டி கோவிச்சுக்கினே வந்திட்டா, கோவிச்சுக்கினு (ம்... பொண்டாட்டி கோவிச்சுக்கிட்டு வந்துட்டாளாம்ப்பா) அரே! நம்ம பொண்டாட்டிய பாத்தியா சாமி. நம்ம பொண்டாட்டி. அரே! நம்ம பொண்டாட்டி. நம்ம பொண்டாட்டி,. {சிரிப்பு} (ஒம் பொண் டாட்டிய இங்கு யாரு பாத்தா)

பபூன்1 : ஏய்! ஒம் பொண்டாட்டிய பாத்தியா சாமின்னு கேக்கான். ஒம் பொண்டாட்டியக் காமிக்றேன். எனக்கு ஏதாவது தரகு, ஏதாவது செலவுக்கு ரூபா தாறியா {சிரிப்பு} (தரகுப் பணம் கொடுக்கணும்)

குறவன் : அரே சாமி! அஞ்சி ரூபா மயிர் புடுங்கித் தர்றேன் சாமி. அஞ்சி ரூபா மயிர் புடுங்கித் தர்றேன் {சிரிப்பு} (அஞ்சி ரூபா மயிர்க்குஞ்சு தாரானாம்ப்பா)

பபூன்1 : அஞ்சி ரூபா மயிர்க்குஞ்சி (ம்... அதுக்குத்தான் மயிர் புடுங்கித்தாரானாம்) சரி, ரூபா குடு. ஒம் பொண்டாட்டியக் காமிக்றேன்.

குறவன் : அரே! நல்ல மனுஷன். அரே! பொண்டாட்டியப் பாத்த பெறகுதான ஒனக்கு ரூபாக் குடுக்கணும். அரே! அதுக்கு மொதல்ல, ஒனக்கு எப்படிக் குடுக்றது {சிரிப்பு}(ம்..., நெசந்தாம்ப்பா. எப்படிக் குடுப்பாக)

பபூன்1 : அப்படியா அது. அந்தா நிக்றா அவளான்னு பாரு (பாரு).

குறவன் : அரே அவதான் சாமி நம்ம பொண்டாட்டி., அரே அவதான் சாமி நம்ம பொண்டாட்டி. ஹே ஆவுரே. அரே ரொட்டிப் பான கத்னாநீ. அரே கத்குல் ஜாத்தா கூம்... அரே! நித்குலே நமக் நமூர் நிர்தா நாம். அரே! ரொட்டிபான பாத்தா கர்த்தா. ஹை கங்கில்பாணி. ஆவுஹே ஆவுஹே.. (ம்...

என்னென்னமோ சொல்றான், ஏதோ) ம்உம்ம்.. ஆ உம்ம்... ஆ உம்ம்... ஆ உம்ம்..{சிரிப்பு} (பாருடா, கோபமா வந்தவ முத்தங் குடுக்றா) நம்ம பொண்டாட்டி, ஒரே கோபமா கோவிச்சுக்கிட்டு வந்தவா முத்தங் குடுக்றா. அரே! நான் முத்தங் குடுக்கட்டுமா, அரே ஆவ்ஹே. அரே கிஸ்கே பாணி மாங்கா பீத் தண்ணீ ஆவுஹே. (ம். மாங்காப் பீத்தண்ணி) ஆ... ஆ... ஆ.. உம்... ஆ... ஆ... உம்ம்...

பபூன்1 : [அடிக்கிறான்] என்ன உம்ம்...மு...{சிரிப்பு}* படுவா, எதுல கொண்டு போய்.. முத்தங் கொஞ்சுறான் பாத்தியா அவன். (தரகுக்காரனப் பக்கத்ல வச்சிக்கிட்டு.. முத்தங் கொஞ்சுறான்)

குறவன் : அரே! எதுக்கு சாமி டப்புன்னு அடிக்றே?

பபூன்1 : ரூபா குடுரா, தரகுக்காரனுக்கு ரூபா குடுத்திட்லா ஓம் பொண்டாட்டி கிட்டப் பேசணும். ஏண்டா படுவா ரூபாய்க் குடுரா.

குறவன் : அரே! நல்ல மனுஷன். அரே நம்ம பொண் டாட்டிக்கி நான் முத்தங் குடுத்தா ஒனக்கு மயிரு புடுங்கவா அஞ்சி ரூபாக் குடுக்கணும். {சிரிப்பு} (அட, இனும பொம்பளத் தரகுக்குப் போகாத) மயித்தப் புடுங்கச் சொல்றான் பாத்தியா அவன் {சிரிப்பு} இந்தப் பயல அடிச்சி பல்லுகில் லெல்லாம் ஒடைக்க வேண்டாம். அரே சாமி , அரே! இந்த ஊர்ல ஒருத்தரும் இல்லே (ஏனில்ல) அரே ஒருத்தரும் இல்ல.

பபூன்2 : என்னடா நடுரோட்ல கலாட்டா இங்க. {சிரிப்பு} (இவருதான் எங்க போனாலும் வழக்கு தீக்றவரு)

குறவன் : அரே! இந்தக் குடுமிக்காரன் நம்ம பொண்டாட் டியக் கேலி பண்ணி அடிக்க வர்றான் சாமி.,

---

* 'இவனும் பெரிய ஆளா இருப்பான்டா' என்கிறார் பாபுராவ்.

பபூன்2 : ஒம் பொண்டாட்டியக் கேலி பண்றானா? எங்க அண்ணன்தான். அப்படித்தான் பண்ணுவான். ரெண்டாவது, மனசு தண்ணிபோல எளகீரும். இந்தா பாரு, ஒம் பொண்டாட்டியும் நீயும் ரெண்டு பேரும் ஒரு டப்பாங்குத்து-ஒரு டான்ஸ் - போடுங்க. ஆளுக்கு ரெண்டு பைசா தர்றேன். டவுன் பஸ் ஏறி ஊருக்குப் போயிற வேண்டியது. {சிரிப்பு} நான் பெரிய மொதலாளி. அள்ளி அள்ளிக் குடுக்ற மொதலாளி. {சிரிப்பு}

குறவன் : அரே சாமி! டான்ஸு போடணும்...

பபூன்2 : **எங்க போடு பாப்பம்... போடு.. பாப்போம்... போடு... போடு....**

சேட்டுக்கட மிட்டாயோ

... மரிக்கொழுந்தே என் தங்கரத்தினமே!

... மணக்குதடி எம்பொண்ணு ரத்தினமே!

கானக் கருங்குயிலே

கள பறிக்கும் பொன்மயிலே

நீலக் கருங்குயிலே தங்கரத்தினமே!

நான் நிக்கட்டுமா போகட்டுமா பொண்ணுரத்தினமே

குடகுமல பக்கத்தில் - நான்

கொக்குக்குத்தான் கண்ணி வச்சேன்

கொக்கு படும் கண்ணியிலே - இப்ப

கொறத்தி வந்து பட்டுக்கிட்டா..

ஏய் விடாத... விடாத... விடாத... விடாத... போடு... போடு...

பபூன்3 : ஏய் அஞ்சி பைசா... ஏய் அஞ்சி பைசா...

பபூன்2 : நாசமாய்ப் போற பயல்! டேய் படுவா. டான்ஸ் எவ்வளவு பிரமாதமாய்ப் போட்டுக்கிட்டிருந்தாங்க. பளிச்சின்னு அடிச்சி வெரட்டிப் புட்டானே. (பளாச்னு அடிச்சிப்புட்டானெ) ஏண்டா அயோக்கியப் பயலே!

பபூன்1 : ஏண்டா அவதான். டான்ஸ் போட்டா. நீயுமா போடணும். [அடிக்கிறான்]

பபூன்2 : [அடிக்கிறான்] நீ போடலாமா? (நரிக்கொறத்தி கூட ஆடலாமா) நான் சுப்பிரமணிய சாமி, நான் ஆடலாம். (ஆடு வாய்க்கால்ல போயிக்குளிச்சிட்டு வா, போயி) அய்யா நான் பெரிய சண்டியரு.{சிரிப்பு} எடுடா டுப்பாக்கிய டுர்ர்ர்...

பபூன்3 : மாப்ள அஞ்சி பைசா. {சிரிப்பு - 'ஏய் மொளு மொளு'}

பபூன்2 : இந்தப் பயா ஊட ஊட வர்றான.. இங்க வா ஒந்தலயப் பிதுக்கிப் போடுறேன். {'மாப்ள அஞ்சி பைசா'*}... [இசை]

இராமர் : ஜானகி!

ஜானகி : நாதா! இதென்ன கோலங்கள்? ஆனால் வேடனைப் போல அவதாரங்களை எடுத்து வந்திருக்றீர்களே.

இராமர் : ஆனால் பதினான்கு வருடம் பதினாறு நாள் பதினாறு நாழிகை வனத்து வழியாக என் தம்பியும்... நான் இருவருமாகச் சென்று வருகிறோம். ஆனால்... மாமி மாமாக்கள் இருக்கிறார்கள். வரும் வரையிலும், ஆனால் இந்த இடத்தில் அரமனையில் ஜாக்ரதையாக இருக்கவேண்டும்.

ஜானகி : சுவாமி! என்ன காரியத்தைச் செய்து வந்தீர்கள்? ஒருவரை விட்டு ஒருவர் பிரியக்கூடாதென்று சத்தியம் கூடச் செய்து, கல்யாணம் செய்து, என்னையத் திருமணம் செய்து, ஆனால் பெத்த பிள்ளையென்றும் தெரியாமல் ஒங்களைக் காட்டுவழியாகவே அனுப்பி விட்டார்கள். நான்

★மணி எத்தனை என்று பாபுராவ் தம் மனைவியைக் கேட்க அவர் மனைவி என்னிடம் கேட்க, நான் பதினொன்னு என்று சொல்கிறேன்.

அடுத்தவருடைய குழந்தைகள. என்னைய ஒரு காட்டுக்காகவே அனுப்பி விடுவார்கள். என்னையும் நீங்கள் அழைத்துக்கொண்டு போக வேண்டும் சுவாமி.

இராமர் : அடடா. நீயும் என் பின்புறமாக வருகிறாயா? சீதாலட்சுமி... ஆனால்... என்னோடு வரவேண்டாம். தாய்மார்களோடு அயோத்தில இரு. கானகத்திற்கு வந்தால்... அரக்கர்கள் பெருத்த கானகம். கல்லிலும் முள்ளிலும் கானகத்திலும் உன்னால் நடக்க முடியாது. நான் மட்டும் சென்று வருகிறேன், கானகத்திற்கு!

ஜானகி : கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன். உங்களோடு நானும் கண்டிப்பாக வருகிறேன்.



இராமாயணம்

சூர்ப்பநகை சண்டை

பதிவு
செய்த : 17.06.1974
நாள்

இடம்: விளாங்குடி
மதுரை.

நிகழ்த்துநர் : கோபால்ராவ் குழுவினர்.

கடவுள் வாழ்த்துப் பாடல் : ஆதிமூல பலஜோதி பாலகனே
அருள் செய்வாயே - கணேசா
அருள் செய்வாயே
....
ஆதிமூல பலஜோதி பாலகனே
ஆருயிர் கணேசனே.... பஜே பஜே
அருள் செய்வாயே.....
....

பபூன் 1 : நரைத்திடும் மீசை தாடி, நரசிம்மன்போல் பல்லு காட்டி, கரத்தினில் தடிய ஊன்றி, வீணப் பேச்செல்லாம் பேசி, விகடமெனும் சபைதனில் கோமாளி வந்தேன். போடு.....

பாடல் : ஒன்னு ரெண்டு மூணு நாலு
அஞ்சா நம்பருடா - ஜோக்கா
அஞ்சா நம்பருடா - நேக்கா
அஞ்சா நம்பருடா
அஞ்சாம் நம்பர் பாட்டுப் பாடி
வந்தேன் சபையிலே - ஜோக்கா
வந்தேன் சபையிலே - நேக்கா
வந்தேன் சபையிலே

சத்தோம்! (சத்தோம்) இரைச்சல்! இரைச்சல்! இரைச்சல்! (அமைதி) சத்தம். இன்று இந்த இராமாயண சரித்திரங்கள்... பெரியோர்கள், தாய் மார்கள் எல்லாத்துக்கும் வணக்கம். வணக்கம். (ம்.சபாஷ்) {சிரிப்பு}. இன்று நடைபெறும் இந்த இராமாயணச் சரித்திரத்தில் எப்படிக் கதைகள் என்றால் (எப்படி), இராமர், லெச்சமணர் சீதை மூன்று பேரும் தண்டகாருண்ய வனமாகச்

செல்வது, தண்டகாருண்ய வனத்தில் பஞ்சவடி ஆசிரமத்திலே வீடுகள் கட்டியிருப்பதும், ராமர் தம்பி லெச்சுமணர் சென்று கனிகள் பறிக்கச் செல்வதும், செம்புகாசூரனுடைய தலையை வெட்டுவதும், சூர்ப்பநகை மகனைத் தேடி வருவது, சூர்ப்பநகையுடைய காது மூக்கு அறுப்பது,* இராவணன் வந்து சீதையைச் சிறை எடுப்பது, சிடாயிக்கும் இராவணனுக்கும் சண்டைகள்.... எல்லாரும் அமதியாக இருக்கணும். மாப்ள எங்க? மாப்ள (இந்தா வர்றாரு) எப்ப வருவாரு? (இப்ப வருவாரு) போடுங்க.... போடுங்க... போடுங்க.... போடுங்க...

பபூன் 4 : ஏய்!

பாடல் : அம்பது கோழி எம்பது முட்ட
வேகாமத் திம்பேன்
நூறண்டா காப்பி ஆறண்டா சாதம்
பத்தும் பத்தாமப் போச்சே
யார் கண்ணு பட்டதோ
எவர் கண்ணு பட்டதோ
பத்தும் பத்தாமப் போச்சே

வாங்க மாப்ள... வாங்க கையக் குடுங்க... கையக் குடுங்க... கையக் குடுங்க... கையக் குடுங்க. (ஏய் ஏய் இழுக்றாரு ஒரேமுட்டா)

பபூன் 1 : அடடாடா வாங்க உக்காருங்க... நாலு போடு... சாப்பிடுங்க... சாப்பிடுங்க... சாப்பிடுங்க [அடிக்கிறான்] (ம்... மலங்கச் சாப்டுட்டாரு). அட என்னடா படுத்திட்டாரு? (சீனி காணல) சீனி காணல. வோய் எந்திரிய்யா.

★'வந்தாச்சா' என்று கேட்கிறார் கோபால்ராவ். வெளியே நுழைவுச் சீட்டு கொடுக்கும் இடத்தில் இருந்த நான், கதை ஆரம்பிக்குமுன் வந்துவிட்டேனா என்று உறுதிப்படுத்திக் கொள்கிறார்.

பபூன் 4 : அய்யா நீங்க அடிச்ச அடி நிமுந்து போச்சி. நிமுந்து போச்சி. நிமுந்து போச்சி. (ஏய்! சாணி ஒத்தணம் போடணும். சாணி ஒத்தணம்) நிமுந்து போச்சய்யா. நிமுந்து போச்சி.

பபூன் 1 : சரி என்னா வேணும்?

பபூன் 4 : கொஞ்சம் தண்ணி வேணும்.

பபூன் 1 : தண்ணி வேணுமா...? தூ...!

பபூன் 4 : அடச்சே! [அடிக்கிறான்] ஆசார உபசாரமா வாங்க மாப்ளேன்னு கூப்டவொடனே காலச் சேத்துப் படார்னு இடிக்கிறாரே [அடிக்கிறான்].

பபூன் 1 : டேய் படுவா ராஸ்கல். டேய்! ஆளுடைய நோக்கம் தெரியாம தொந்தியக் கொண்டாந்து தொந்தில இடிக்கிறாண்டா...

பபூன் 4 : ஏய் என்னன்னு பாத்தியா ஓய்! (ஆமா ஓய்) என்னன்னு பாத்தியா வோய்.

பபூன் 1 : என்ன பாத்திங்க வோய்? [அடிக்கிறான்].

பபூன் 4 : ஓய் ஓய் அடிக்காத வோய்! அடிக்காத வோய்! (அடிக்காம பேசணும்) ஓய்! அடிச்சுக்கிட்டிருந் தீன்னா உங் குடுமித் தலையப் பிச்சிப் போடுவேன் {சிரிப்பு}

பபூன் 1 : ஓங் குல்லாவத் திருப்பி வச்சிருவேன்.

பபூன் 4 : ஓங் காதக் கடிப்பேன் (ஏய் சண்டை போடா தீங்கப்பா).

பபூன் 1 : ஓங் கண்ணு ரெண்டயும் பிதுக்கிப் போடுவேன் (ஏய் சண்டை போடாதீங்கப்பா).

பபூன் 4 : ஒன் வாயப் பொத்துப் போடுவேன் {சிரிப்பு}.

பபூன் 1 : என்ன ரொம்ப முறுக்கிக்கிட்டிருக்க? (ஆமா)

பபூன் 2 : அடா மக்காக் கோழி மேல கோழி வைக்கோ...

பபூன் 1 : வந்திட்டாண்டா கிழிஞ்ச வாயன்.

பபூன் 2 : அடி படுவா மேல் படுவா {சிரிப்பு}.

பபூன் 1 : இந்தாப் பார். இவந்தான் நம்ம கூடப் பொறந்த தம்பி (தம்பி). இவம் பேரு வந்து... கிழிஞ்ச வாயன், தொந்தி வயித்துக்காரப் பையன், டர்புர்ருன்னு சொல்லலாம். {சிரிப்பு}.

பபூன் 2 : அடி படுவா மவனே படுவா. ராஸ்கோல் மவனே ராஸ்கோல். அய்யா இருக்ற சோக்கென்னா. அய்யாயிருக்ற ரைட்டென்னா. அய்யா நான் சண்டியரு மகன் சண்டியரு. அய்யா பேரச் சொன்னாலும் சுண்ணாம்பு சட்டிய நாய் நக்காது. (ஒங்கப்பங் காலத்ல)

பபூன் 1 : எங்ன நக்காது? [அடிக்கிறான்]

பபூன் 2 : இங்னதான் நக்காது. [அடிக்கிறான்]

பபூன் 1 : எந்நேரத்ல? [அடிக்கிறான்]

பபூன் 2 : இந் நேரத்லதான். [அடிக்கிறான்]. அடிக்காதடா... டப்பு டப்புன்னு. கொண்டா ரிவால்வெடி... கொண்டா டுப்பாக்கி. டுர்ர்ர்... {சிரிப்பு}

பபூன் 1 : அடப்பாவிப் பய. அடே தம்பி, இவ்ளவு நேரமா எங்கடா பேயிருந்தே?

பபூன் 2 : நான் போயிருந்தேன்... இந்த உள்ளூர் கிராமத்தி லிருக்க வேண்டிய, வாழ்ந்து வலிமைசாலியாய் இருக்கவேண்டிய, பெரியோர்களும் தாய்மார் களும் எல்லாத்துக்கிட்டயும் கண்டு பேசிக்கிட்டு நான் இப்பத்தான் வந்தேன்.

பபூன் 1 : அய்ய... [அடிக்கிறான்].

பபூன் 2 : ஆமா. [அடிக்கிறான்] (ஏய் அடிக்காதீங்கப்பா) {சிரிப்பு} கொண்டா ரிவால் வெடி... கொண்டா டுப்பாக்கி... கொண்டா... புர்ர்ர்... {சிரிப்பு}

பபூன் 1 : அடப் பாவிப் பயலே. {சிரிப்பு}

பபூன் 4 : ஓய் ஓய் ஓய் மாப்ள! (ஓய் மாப்ள) {சிரிப்பு} இன்னக்கி வந்த வசூல்ல பேர் பாதி பங்கு வேணும்.

பபூன் 2 : எத்ன பங்கு வேணுங்க.

பபூன் 4 : ரெண்டு பங்கு வேணும்.

பபூன் 2 : அடப் பாவிப் பயலே! இன்னக்கி சாப்பாட்டுக் கில்லாம ஒரு லைட்ட அடகு வச்சி, பதினைஞ்சி ரூபாய்க்கி, என்னா... மண்ணெண்ண கெடைக்காம ரொம்பவே கஷ்டப்பட்டு, ஏதோ கெடச்சிது... என்னா... ஏதோ கெடச்சிது. நாடகம் நடத்திக்கிட்டிருக்றோம். ஏதோ கூட்டத்தக் காணோம். அதனால நாளைக்கிக் கூட்டம் வரும். அதனால உனக்கு நெறையா பங்கு குடுத்திர்லாம்.

பபூன் 4 : அது முடியாது. ஐநூறு ரூபாயக் குடுத்தா புள்ளயக் குடுப்பேன்.*

ஏண்டா குடுத்தா குடுங்க இல்லேன்னா முடியாது. சண்டியர்த்தனம் பண்ணுவேன் சண்டியர்த்தனம்.

பபூன் 2 : ஓகோ. பண்ணுவீங்களோ?

பபூன் 4 : ஆமா. சண்டியர்த்தனம் பண்ணுவேன் இங்க.

பபூன் 2 : படுவா ராஸ்கல். பல்ல ஒடச்சிப் போடுவேன். படுவா மகனே ராஸ்கல்.

★ பாவையாட்டியின் சொந்த வாழ்க்கை விமர்சனங்கள் அவ்வப்போது இதுபோல் வருவதுண்டு. (பார்க்க. பக்.238)

பபூன் 4 : ஓய்! ஓய்! என்னய்யா பாத்த?

பபூன் 2 : கொண்டா ரிவால்வர் வெடி.

பபூன் 4 : ஏய் வேண்டாய்யா வேண்டாம் {சிரிப்பு}. பங்கு குடுய்யான்னா...

பபூன் 2 : சரி, எத்ன பங்கு வேணும்?

பபூன் 4 : ரெண்டு பங்கு.

பபூன் 2 : ஒண்ணு [அடிக்கிறான்] ரெண்டு [அடிக்கிறான்] {சிரிப்பு}

பபூன் 4 : ஓய்! ஏய்யா அடிக்ற?

பபூன் 2 : படுவா ராஸ்கல்! அமுக்கடா இவன. [அடிக்கிறான்] (ஏய் விடாத... விடாத... போடுறா... போடுறா...)

பபூன் 1 : ஏய்! ஏல... ஒன்னோட ஒண்ணா அடிச்சுக்கிட்டு சாகுறானுகடா. ம். வரட்டா. கதய ஆரம்பிக்கப் போறேன். எல்லாம் அமதியாயிருங்கள்.

பாடல் : காக்கைச் சிறகினிலே நந்தலாலா - உந்தன்
கரிய நிறம் தோணுதடா நந்தலாலா
பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா - உந்தன்
பச்சை நிறம் தோணுதடா நந்தலாலா
காக்கைச் சிறகினிலே நந்தலாலா - உந்தன்
கரிய நிறம் தோணுதடா நந்தலாலா
பேசும் மொழிகளெல்லாம் நந்தலாலா - உந்தன்
பிள்ளை முகம் தோணுதடா நந்தலாலா (காக்கைச்)

இராமர் : வருவாய் தம்பி லெச்சுமணா!

இலக்கு. : அண்ணா! வணக்கம் செய்தேன்.

இராமர் : மங்களமுண்டாகட்டும். தர்ம பூமியாளும் கோசல நாடு, அயோத்தி மாநகரத்தை அரசு புரிய வேண்டிய எங்கள் தந்தையான தசரதர். தசரதருக்கு

நாங்கள் பிறந்தவர்கள் இராமன், லெச்மணன், பரதன், சத்ருக்னன் நான்கு குழந்தைகள் பிறந்தோம். எங்களுடைய சிறிய தாயார் கைகேசியம்மாள் செய்த கொடுமையினால், காட்டு வழியாக பதினாலு நாள் பதினாலு நாழிகையாக, இந்தக் காட்டு வழியாக அனுப்பிவிட்டாள் என் சிறிய தாயார் கைகேசியம்மாள். அதனால் இந்தக் காட்டு வழியாக வந்து, குகனை நாங்கள் தம்பின்னு முறை கொண்டாடினோம். பர்த்ரகுரிஷி வனத்தில் வந்து வெகு நாளாகி விட்டது. தம்பி! தந்தை இறந்ததாக பரதன் சத்ருக்னன் வந்து என் பாதரட்சையைக் கொண்டு பாதுகா பட்டாபிஷேகம் செய்து கொண்டான். ஆகையினால் இங்கே இருந்துக்கிட்டால், நாங்கள் பல முனிவர்களை, நாங்கள் சந்திக்க வேண்டும். அதனால் இந்த வனத்தை விட்டு நாங்கள் போக வேண்டும். தம்பி! சீக்கிரமாகச் சென்று எங்களை அன்னந் தண்ணி ஆகாரங்களைக் குடுத்து உதவி செய்த அந்த பர்த்ரகுரிஷியை அழைத்து வரவேண்டும்.

இலக்கு. : அண்ணா! நீங்கள் கவலைப்பட வேண்டாம். அந்த ரிஷியை நான் அழைத்து வருகிறேன்.

இராமர் : சீக்கிரம்.

இலக்கு. : இதோ வருகிறார்.... [இசை]

ரிஷி : ஏவ்வ்வ்... அடே ராமா... அடே அம்பி... நான் பூஜை செய்து கொண்டிருந்தேன் ஆத்தில். அதனால் என்னை அழைத்து வந்தான் லெச்சுமணன். ராமா! என்னைய அழைத்த விவரமென்ன?

இராமர் : சுவாமி! உங்கள் ஆசிரமத்தில் வந்து வெகு நாட்களாகிவிட்டது. அதனால் அடுத்த காட்டுக்கு நாங்கள் போய்வர வேண்டும். தாய் சொன்ன வரத்தினால், நாங்கள் தண்டகாருண்ய வனமே

நாங்கள் போய்வர வேண்டும். நீங்கள் விடைகள் கொடுக்க வேண்டும்.

ரிஷி : ஏவ்வ்... அப்படியே சரி. உன் தாய் சொன்ன வரங்கள் நீ தட்டக் கூடாது. அதனால் நீ இனிமேல் இருக்கவும் மாட்டாய். சரி இந்த வனத்துக்கு அடுத்த வனம் விராத ராட்ஷதன் வனங்கள். அந்த விராத ராட்ஷதன் வனத்துக்கு அடுத்த வனம் காக்காசூரனுடைய வனங்கள். அதற்கு அடுத்த வனங்கள் ஜடாயுவுடைய வனம்... பஞ்சவடி ஆசிரமம். அங்கு நீங்கள் வீடுகள் குடியாயிருந்து பதினாலு நாள் பதினாலு நாழிகையை கழித்த பிறகு உங்களுடைய அயோத்தி மாநகரம் வரும்போது, நான் காமதேவனை அழைத்து உணவுகள் போட, உணவுகளை நான் பொங்கிப் போடுகிறேன். சென்று வாருங்கள்.

இராமர் : சரி, நான் போய் வருகிறேன்.

ரிஷி : ஏவ்வ். க்ஷேமமாகப் போய்வரலாம்.

இராமர் : போய் வருகிறோம். சீதா! லெச்மணா...! புறப்படுங்கள். இதற்கு அடுத்த வனமே புறப்படலாம்... [இசை]

ரிஷி : அடடாடாடா. இராமன் லெச்சமணன் போய் விட்டார்களோ? இராமன், லெச்மணன் சீதை மூன்று பேரும் இருக்கும்போது, என் காட்டிலே எவ்வளவு ஜெகஜோதியாக மரங்களும், செடிகளும் தளதளன்னு வளர்ந்து கொண்டிருந் ததோ, அவர்கள் போனவுடனே எல்லாம் வாடிப் போய்விட்டதே! நான் காலேல எந்த்ரிச்சி யார் மொகத்ல முழிப்பேன்? (முன்னால நிக்றவன் மொகத்ல முழி).

பபூன் 2 : எம் மொகத்ல முழியேன் (ஆமா)

ரிஷி : அடே ஒம் மொகத்ல முழிச்சால் பொடிக்குப் போயில கெடைக்குமே...

பபூன் 2 : சுண்ணாம்புக்கு வெத்ல கெடைக்கும் வோய். {சிரிப்பு}

ரிஷி : அடே உன்னைய நான் கல்லாகச் சபித்து விடுவேன்.

பபூன் 2 : என்ன?... சின்னக் கல்லா, பெரிய கல்லா?

ரிஷி : அடே, சின்னக் கல்லும் பெரிய கல்லும்.

பபூன் 2 : சின்னக் கல்னா குண்டியத் தொடப்பேன். பெரிய கல்னா தூக்கி எறிவேன்.

ரிஷி : டேய்! உன்னை நான் புல்லாகச் சபித்து விடுவேன்.

பபூன் 2 : என்ன... மொண மொணங்ற? {சிரிப்பு}. இந்தச் சண்டியர் மகன் சண்டியர்கிட்ட ஏதாவது பேசுன, அப்பிப் போடுவேன் அப்பி. (ம். அப்பி) ம்... கொண்டா ரிவால்வெடி. கொண்டா.

ரிஷி : அடே! என்னடா பேசுறாய்? உன்னை நான் என்னா செய்வேன்? த்ரௌ த்ரௌ த்ரௌ {சிரிப்பு}

பபூன் 1 : அடே தம்பி, என்னடா?

பபூன் 2 : நீட்றா கம்பி [அடிக்கிறான்] {சிரிப்பு}

பபூன் 3 : மாப்ள!

பபூன் 2 : வாங்க மாப்ள. இவர்தான் நம்ம மாப்ள. டர்புர்ரு {சிரிப்பு}

பபூன் 3 : மாப்ள! என்ன மாப்ள இது?

பபூன் 2 : ஏலே! ஒரு பத்து பைசா இருந்தாக் குடு. டிக்கெட் குடுத்து முடிஞ்சவொடன... ராமு டிக்கெட் குடுக்றான்... அதுனால அவருகிட்ட வாங்கி ஓங்கைல குடுத்திருவோம்.

பபூன் 3 : ம். அது முடியாது. இப்ப நான் குடுக்க மாட்டேன்.

பபூன் 2 : ஏண்டா?

பபூன் 3 : எம் பொண்டாட்டி உப்பு வாங்கறதுக்குப் பத்து பைசாக் குடுத்திருக்கா. என்னா... அந்த உப்பு கொண்டு போய்க் குடுக்கல, எம் பொண்டாட்டி வெளக்கு மாத்தால அடிச்சிப் போடுவா.

பபூன் 2 : அடப் பாவி... அடப் பாவி... பொம்ள கைல அடி வாங்ற பயலே. அடப் பாவிப் பயலே! ஏல! பெறகு தர்றண்டா ஒனக்குக் காசு.

பபூன் 3 : சரி, அப்பத் தந்துறணும்.

பபூன் 2 : தந்து போடுறண்டா.

பபூன் 3 : தந்துறணும்.

பபூன் 2 : தந்து போடுறண்டா (தந்துருவாம்ப்பா) {சிரிப்பு}.

பபூன் 3 : சரி, அப்ப இந்தா பத்து பைசா. எம் பொண்டாட்டி வெளக்கு மாத்தால அடிச்சிருவா. குடுத்திறணும்.

பபூன் 2 : வெளக்கு மாத்தால அடிப்பான்னா... கூட ரெண்டு அடிபட்டுக்க. {சிரிப்பு}.

பபூன் 3 : இந்தா பத்து பைசா.

பபூன் 2 : சரி, காப்பிக் குடுச்சிட்டு வாரேன். பெறகு தாரேன்.

பபூன் 3 : ஏல மறந்துறாதடா.

பபூன் 2 : மறக்க மாட்டேண்டா {சிரிப்பு}.

பபூன் 3 : மாப்ள!

பபூன் 2 : என்னது?

பபூன் 3 : அந்தப் பத்து பைசா.

பபூன் 2 : தர்றேண்டா. உக்கார்றா {சிரிப்பு}.

பபூன் 3 : மாப்ள!

பபூன் 2 : என்னடா?

பபூன் 3 : அந்தப் பத்து பைசா {சிரிப்பு}.

பபூன் 2 : டுர்ர்ர்... *[இசை]

இராமர் : ஏய்! உன்னையப் பார்க்கும்போது பயங்கரமான அரக்கனாக இருந்தாயே? இப்ப என்ன, வேடுவனாக இருக்க வேண்டிய காரணமென்ன? சொல் சீக்கிரம்.

விராக வேடுவன் : நாராயுணா! ராமச்சந்ரா! பரந்தாமா! இந்த வனம் என் வனந்தான். என் பெயர்தான் விராக வேடுவன். ஒரு காலத்ல ஈஸ்வரன் ஆலயத்ல இருக்க வேண்டிய மாடப் புறாவை, என் வில் அம்புனால் கொன்று, நான் சுட்டுத் தின்றுவிட் டேன். அந்தப் புறாவைத் தின்றவுடன் ஈஸ்வரன் நேரடியாக வந்து 'அடே என் பிறாவை அடித்துச் சுட்டுத் தின்கிறாயே, உன்னைய நான் சாபத்தைக் குடுக்கிறேன்' என்று, என்னைய, பன்னிரண்டு வருஷமாக ராட்சதனாகச் சாபத்தைக் கொடுத்து விட்டான் (ஆமா). யாருனாலும் தீர்க்க முடிய வில்லை. நீங்கள் வந்து என்னுடைய சாபத்தைத் தீர்த்து விட்டீர்கள். ராமா! எனக்கு நல் மோட்சங் கொடுக்க வேண்டும்... ராமா! ராமா!

★ ஏதோ மராட்டியில் பேசுகிறார்

இராமர் : சரி. இனிமேல் பறவை பட்சிகளை அடிக்கக் கூடாது. சாவுனா அடிக்கலாம். அதனால் சீக்கிரமா நீ இருக்க வேண்டிய இடத்துக்கே ஓடிப் போகலாம்.

விராக
வேடுவன் : போய் வருகிறேன். ராமா. ராமா... [இசை]

இராமர் : தம்பி!

இலக்கு. : அண்ணா!

இராமர் : இந்த விராக வேடுவனுக்கு மோட்சங்களைக் கொடுத்து விட்டோம். இதற்கு அடுத்த வனமே புறப்படலாம்.

இலக்கு. : புறப்படுங்கள்... [இசை]

இராமர் : ஜானகி... சீதா! ஏன் அழுது கொண்டு வருகிறாய்?

சீதை : நாதா! வண்டிப் பைதா போல் கண்களும், ரம்பம் போல் பல்களும், பார்த்தவுடன் பயமாக இருக்கின்றது நாதா.

இராமர் : கவலைப்பட வேண்டாம். அரக்கர்கள், ராட்சதர் கள் இருக்க வேண்டிய வனத்திலே கவலையில்லா மல் என் பின்பதாக வர வேண்டும். ராட்சதர்களை நான் கொன்று {'பாரு அக்குறுவம்'} உன்னுடைய உயிரை நான் காப்பாற்றுகிறேன். என் பின்பதாக வாருங்கள்... [இசை]

பாவையாட்டி: இதோ காக்காசூரனுடைய வனத்துக்கு அடுத்த வனங்கள் வருகிறார்கள்... [இசை] இவர்தான் ஜிடாவி அரசர். இதுதான் பஞ்சவடி ஆசிரமம். இவர் எதற்காக வந்திருக்கிறாரென்றால், அதோ வருகிறாரே... ராமர், லெச்மணர், சீதை மூன்று பேர்த் தையும் நிப்பாட்டி யார் எவரென்று விசாரிக்க வந்திருக்கிறார்... [இசை]

இராமர் : அய்யா... பட்சிகளே!*

சடாயு : சரி. அப்பா... நீங்கள் யாரப்பா நீங்கள்? இருபேர், நீங்கள் ஆடவர்கள் வந்துவிட்டால் நான் விட்டு விடுவேன். அழகான பெண்மணியை அழைத்து வந்திருக்கிறீர்களே. இந்தக் காட்டிலே... இந்த வன சஞ்சாரத்திலே யாராவது இந்தப் பெண்ணை மாயமாகக் கொண்டு போய் விட்டால் நீங்கள் யாரென்று கண்டு பிடிக்க முடியும்?

இராமர் : ஐயா... பட்சிகளே! நாங்கள் யாரென்று சொல்ல வேண்டுமா?

சடாயு : உண்மைதானப்பா.

இராமர் : நான் சொல்லுகிறேன். எங்களுடைய அரமணை யானது அயோத்தி மாநகரம். அயோத்தி மாநகரத்தைப் பரிபாலனம் செய்ய வேண்டிய அந்தத் தசரதருடைய பாலர்கள். என் பேர் ராமன், என் தம்பி லெச்மணன், பரதன், சத்ருக்னன் என நான்கு குழந்தைகள் நாங்கள் பிறந்தோம். என்னுடைய தகப்பன் எனக்கே முடிசூட்டு விழா நடத்த வேண்டுமென்று தெரிவித்தார். அதைக்

★எதோ சலசலப்பு. 'அண்ணே நிப்பாட்டுங்கண்ணே' என்று சிறுவன் எனக்குக் குரல் கொடுக்கிறான். நிறுத்தி மீண்டும் போடுகிறேன். 'ஐயா. பெரியாளுகளுக்குப் பதினஞ்சி பைசா. சின்னப் புள்ளைகளுக்குப் பத்து பைசா போட்ருக்றோம். ஏதோ டீ குடிக்கிற காசு. பின்னால வந்து எடஞ்சல் பண்ணாதீங்க. தயவு செஞ்சி. இந்த ராமர் கதயில எடஞ்சல் செஞ்சா...'' என்று கோபால்ராவ் கூறவும் மோசமான வார்த்தைகள் பரிமாறப்பட வெளியே உள்ளவர்களுக்கும், பாவைக்கூத்துக்காரருக்குப் பரிந்து பேசியதால் உள்ளே உள்ள உள்ளூர்க்காரருக்கும் தகராறு. ''வையாதீங்க, வையாதீங்க'' என்று உள்ளே உள்ள பெரியவர்கள் சொல்ல, ''ஏதோ ராமா ராமான்னு சத்தம் போடுறோம்... அன்னாட வயித்துக்கு'' என்கிறார் கோபால்ராவ். மீண்டும் மோசமான வார்த்தைகள் பரிமாறப்பட, பாவைக்கூத்துப் பெண், ''ஐயா, ஐயா அப்படியெல்லாம் பேசாதீங்க'' என்கிறார். ''சரி, சரி. கதய ஆரம்பிங்க'' என்று சத்தம் வரக் கதை ஆரம்பிக்கப்படுகிறது.

கேட்டுக் கொண்டிருந்த கூனியும், கைகேசியும் சேர்ந்து என்னுடைய பட்டத்தைக் கலைத்து, பதினான்கு நாள் பதினான்கு நாழிகையாக இந்தக் காட்டு வழியாகப் போய் வரவேண்டும் மகனே யென்று எங்களை அனுப்பி விட்டார்கள். இதோ நாங்கள் மூன்று பேரும் தண்டகாருண்ய வனம் எதென்று நாங்கள் கேட்டு வருகிறோமய்யா!

சடாயு : ஓகோ... அப்படியா! ராமா! ஒன்னுடைய தகப்பன் தசரதன், எனக்குக் கூடப் பொறக்காத அண்ணன். அவருக்கு நான் கூடப் பொறக்காத தம்பி. ஆகையால் அண்ணன் மகன் நீ. சீதை என்னுடைய மருமகள். மகனே ராமா! இதான் என்னுடைய வனங்கள். என் பேர்கள் வந்து ஜிடாவி அரசன்.

இராமர் : ஆகா... சித்தப்பா! ஜிடாவி அரசரே! வணக்கம் செய்தோம்.

சடாயு : மங்களமுண்டாகட்டும். மகனே, பாலகா! இந்த இடத்தில் ஒரு அழகான வீடுகளைக் கட்டியிருந்து, உங்கள் பதினாலு நாள் பதினாலு நாழிகை கழித்த பிறகு, உங்களுடைய வனத்துக்கே... நீங்கள் உங்கள் ஆசிரமத்துக்கு நீங்கள் போகலாம். சொல்வதைக் கேளுங்கப்பா.*

இராமர் : சரி, அப்படியே நாங்கள் இருக்கிறோம்.

சடாயு : போய் வருகிறேன். போய் வருகிறேன்... [இசை]

இலக்கு. : அண்ணா!

இராமர் : இந்த இடத்திலே அழகான ஒரு வீடுகளைக் கட்டி வா. சீக்கிரம். ('சரியம்மா விடுங்க விடுங்க')

★ மீண்டும் தகராறு. ''சரி, விடுங்க ஐயா'' என்று பாவைக் கூத்துப் பெண்மணி சப்தமிடுகிறாள். ''சப்தம் போடாதீங்க'' என்கிறார். மீண்டும் தகராறு ஆரம்பிக்கிறது. ஒரே பெண்கள் சப்தம் வெளியிலிருந்து.

இராமர் : தம்பி!

பாடல் : **கிருஷ்ணா கோவிந்தா**
ஹர ஹர மகாதேவ ஹரே
காசி விஸ்வநாதா...

இலக்கு. : அண்ணா! * உத்ர பூர்வா கத்றான்னு சொல்லக் கூடிய மூன்று கட்டு பர்ணசாலைகள் அதிக அழகுடன் நான் கட்டி வந்திருக்கிறேன். நீங்கள் பார்க்க வேணுமண்ணா.

இராமர் : எங்கே? எங்கே? பார்க்கலாம்.

பாடல் : **என்ன இது ராமச்சந்த்ரா**
பஞ்சவடியில்
என்ன இது ராமச்சந்த்ரா *

இராமர் : தம்பி லெச்மணா!

இலக்கு. : அண்ணா!

இராமர் : காட்டு வழியாக சீதையானவள் பசியாக வந்ததனால் காட்டில் சென்று அழகான கனிகளைப் பறித்து வரவேண்டும்.

★ *மீண்டும் தகராறு. ஓரே கசமுசா சப்தம்*

மீண்டும் தகராறு தொடர்கிறது. ''அய்யா அம்மா... அம்மா... ஆஃப் பண்ணுங்க ஆஃப் பண்ணுங்க... அய்யா அம்மா சத்தம் போடாதீங்க. ஆஃப் பண்ணுங்க... அம்மா... தெரியாமச் சொல்லிட்டாங்க. விட்ருங்களேன் பேச்ச. ஆம்ள ஆளுன்னு சின்னப் புள்ளேன்னு கத்தியிருப்பாரு. நீங்க நிக்றது அவருக்குத் தெரியாதில்ல. தெரியாம வந்து பேசித் தள்ளிட்டா விட்டுட்டுப் போங்களம்மா. அதே வாதத்துக்கு வந்ருக்கிங்களே... நிப்பாட்டுங்க'' என்கிறார் பாவைக் கூத்துப் பெண்மணி. நடுவில், ''ஆஃப் பணணுங்க'' என்று அங்குள்ள பாவைக்கூத்து மத்தளச் சிறுவன் கூறுகிறான். கசமுசா அதிகமாகிறது. ''சைலன்ஸ். அண்ணே கொஞ்சம் அமதியாயிருங்க. கொஞ்சம் அமதியா உக்காரச் சொல்லுங்க'' என்கிறார் கோபால்ராவ். ''சும்மாயிருங்க. சும்மாயிருங்க'' என்கிறார் அப் பெண்மணி. ''அமதியாகயிருக்கவும்... அமதியாகயிருக்கவும்'' என்கிறார் மீண்டும் கோபால்ராவ். ''உக்கார்ரா உக்கார்ரா'' என்று உக்கார்ந்திருப்பவர்களை ராமு அமர்த்துகிறார்.

இலக்கு. : அண்ணா! அப்படியே நான் கனிகளைப் பறித்து வருகிறேன்.

இராமர் : போ சீக்கிரம்...

பாடல் : **ராம ராகவ ராஜி பரோஜன**

சாமித்தவரவா ஜீயராகவா

ராம ராகவ ராஜிப ரோஜன...

ஸ்ரீ {உக்காரப்பா உக்காரப்பா}

பாவையாட்டி : பத்துத் தலை ராவணனுடைய மகன் இராவணன் தங்கை சூர்ப்பனகையுடைய மகன், இவன்தான் செம்புகாசூரன் வந்திருக்கின்றான். இவனுடைய தகப்பன் விக்ரசங்க ராட்சதனை ஒரேயடியாகக் கொன்றுவிட்டான் இராவணன். அதற்காக ஏழு வயதிலிருந்து இவன் தலைகீழையாக இவன் தவம் செய்து கொண்டிருக்கின்றான். இன்றைய தினம் இவனுடைய தவங்கள் முடியச் செல்கிறது. அதனால் ஈஸ்வரனுடைய ஆலயத்திலிருந்து வீரவாள்.. வீரவாள் வரப்போகிறது. இந்த வீரவாளை... இவன் கையில் வந்து கிடைப்பதை லெச்மணர்... லெச்மணருடைய கையில் வந்து கிடைத்து இவன் தலையை வெட்டப் போகிறார் பாருங்கள்.... [இசை]

இலக்கு. : ஆகா. இந்தக் காடெங்குமே நான் சுத்தடித்துப் பார்க்கிறேன். கனிகள் கிடைக்கவில்லை. இதோ இந்த மரத்தில் ஏராளமான கனிகள் இருக்கின்றது. இந்தக் கனியை நான் பறிததுக் கொண்டு போகவேண்டும். அம்மா... தேவி! அண்ணியர் களே! நீங்கள் என் பின்பதாக வரவேண்டும். வந்தால் மிருகங்கள் ராட்சதர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் (ஆமா). உங்களை மாயமாகக் கொண்டு போய் விடுவார்கள். நீங்கள் என் பின்பதாக வர வேண்டும் தாயே.

சீதை : சரி.

இலக்கு. : இந்த மரத்தில் ஏராளமான கனிகள் இருக்கின்றது. இந்த மரத்திலே நான் கனிகளைப் பறிக்கிறேன்.

பாவையாட்டி : லெச்மணர் கனிகளைப் பறித்துக் கொண்டிருந் தார். மேகத்திலிருந்து மின்னலும் இடியுமாக குமுறிக் கொண்டு வீரமாக வந்தது. லெச்மணரும் கைகளை ஏந்தினார். செம்புகா சூரனும் கைகளை ஏந்தினான். அந்த வீரவாள், இரண்டாவது திரும்பிப் போய்விட்டது ஈசனிடத்தில். போயி 'ஈஸ்வரா இரு பேருடைய கைகள் தெரியுதே. எவன் கைலே குடுப்பது' அப்படீன்னு கேட்டவுடன, 'ஆகா அப்படியா... இரண்டு பேருடைய கை தெரியுதா... மிந்னவனுடைய கைல போயி உன் வீரவாள் குடுத்து விடு' அப்படீன்றே இதோ அனுப்புகிறான். லெச்மணருடைய கைகளில் வந்து கிடைக்கப் போகின்றது...

பாடல் : **ராம ராகவ ராஜி பரோஜன**
சாமித்தவரவா ஜியராகவா
ராம ராகவ ராஜி பரோஜன...

இலக்கு. : ஆகா. இந்த மரத்திலேறி நான் கனிகள் பறித்துக் கொண்டிருந்தேன். மேகத்திலிருந்து, மின்னலும் இடியுமாகக் குமுறிக் கொண்டு வந்தது இந்த வீர வாள். வீரவாளில் எழுத்துகள் எழுதியிருக் கின்றன. எப்படியென்றால் எதித்தவனை வெட்டலாம். எதித்தவன் பாதி பெலங்கள் நமக்கு வந்து சேருமென்று! எனக்கு எதிரியானவன் யாரிருக்கிறான்? இந்த உலகத்திலே எவனும் கிடையாது. இந்த மரம்தான் எனக்கு எதிரி. ஒரே வெட்டாக இருக்க வேண்டும். இரண்டு துண்டாக விழுக வேண்டும். இதோ நான் வெட்டுகிறேன் பார்.

செம்புகா
சூரன் : ஆஹ்ஹ்...

இலக்கு. : ஆ! அய்யய்யோ. நான் மரத்தை வெட்டினேன். மரத்துக்குள்ளாகயிருந்து யாருடைய தலையோ வருகின்றதே. ஆ! அண்ணா! ராமா! ராமா!

பாடல் : **அண்ணா ராமா ராகவா**
அண்ணா ராகவா... அண்ணா...

யாரோ எவனோ தெரியவில்லை. அவர்கள் தலையை நான் வெட்டி நான் மகாக் கொடிய பாவங்கள் ஏற்றுக் கொண்டேன். எனது அண்ணா! ராமா! அண்ணா! ராமா!

பாடல் : **அண்ணா ராமா ராகவா**
அண்ணா ராகவா... அண்ணா...

இராமர் : தம்பி! நீ கனிகளைப் பறிக்கப் போனவன் உன் கைகளில் என்ன வீரவாள்? அதில் ஏராளமான ரத்தக் கோரைகள் இருக்கிறதே. யாரை வெட்டி னாய்? எவரை வெட்டினாய்? சொல் சீக்கிரம்.

இலக்கு. : அண்ணா! உயர்ந்ததோர் மரத்தில் ஏறி நான் கனிகளைப் பறித்துக் கொண்டிருந்தேன். மேகத்தி லிருந்து, மின்னலும் இடியுமாகக் குமுறிக் கொண்டு வந்தது இந்த வீரவாள். கைகளை ஏந்தினேன். கையில் வந்து கிடைத்தது. இந்த வீரவாளில் எழுத்துக்கள் எழுதியிருக்கின்றன. எதித்தவரை வெட்டலாம். எதித்தவன் பாதி பெலங்கள் நமக்கு வந்து சேருமென்று எழுதி யிருந்தது. பக்கத்திலிருந்த ஆல மரத்தை ஓங்கி வெட்னவுடன், யாருடைய தலையோ தெரிய வில்லை. எவனோ தெரியவில்லை. என்னையக் கண்டு பயந்திருந்தவர்களோ, யோகியோ, சன்யாசிகளோ தெரியவில்லை. அவுங்களுடைய

தலையானது துண்டித்துக் கொண்டு வருது அண்ணா, நான் என்ன பாவங்கள் செய்தேன்?

இராமர் : கவலைப்பட வேண்டாம். தம்பி! தெரிந்து வெட்னால்தான் பாவங்கள். தெரியாமல் வெட்ன தினால் பாவங்கள் கிடையாது. உன்னுடைய வீரவாளை உறைக்குள் போடு. சரி, வெட்டுப் பட்டவங்களுடைய ஆள்கள் யாராவது தேடி வருவார்கள். அவர்களை நான் கண்டு கொண்டி ரலாம். நீ சென்று ஒரு செடி மறவாக இருக்கலாம்.

இலக்கு. : நான் போய் வருகிறேன்.

இராமர் : போ... [இசை]

பபூன் 2 : நான்... நான் ஏன் புறந்தேன் (ஏன் பிறந்தே?) நாட்டுக்கு நலமென்ன புரிந்தேன் {சிரிப்பு} (ஏன் பிறந்தே?)

பபூன் 3 : பத்து பைசா. மாப்ள பத்து பைசா.

பபூன் 2 : வந்துட்டான்டா [அடிக்கிறான்] {சிரிப்பு} ஏய்! அய்யா நான் சண்டியரு மகன் சண்டியரு. ஊருக்குப் பெரிய மனுஷன். அய்யா பேர் சொன்னாலும் சுண்ணாம்பு சட்டிய நாய் நக்காது (நக்கவே நக்காது) {சிரிப்பு}.

பபூன் 3 : ஏய்! மாப்ள பத்து பைசா.

பபூன் 2 : போடா [அடிக்கிறான்]. அயோக்கியங் கெட்ட படுவா {சிரிப்பு}. அய்யா வந்தவொடன நடீர்னு பத்து பைசா கேக்றான (ஆமா... வாங்கனது னாலதான் சொல்றாங்க).

பபூன் 3 : ஏண்டா டேய். பத்து பைசா வாங்கனதில்லாம... கேக்றாங்களாக்கும் (ஆமா).

பபூன் 2 : கேட்டால் நான் குடுக்க மாட்டேனே.

பபூன் 3 : ஏன்?

பபூன் 2 : எங்கிட்டயெல்லாம் வாங்கற பழக்கந்தான் (ஓகோ). குடுக்ற பழக்கம் நம்மகிட்ட கெடையாது (ம். மதுரைல).

பபூன் 3 : அய்யய்யோ. அட, எம் பொண்டாட்டி வெளக்க மாத்தால அடிப்பாள (அய்யய்யோ). பத்து பைசாக் குடுறா மானங் கெட்ட பயலே.

பபூன் 2 : கொண்டாடா ரிவால்வர் வெடி (இந்தா). கொண்டா (இந்தா) போடு. ஸ்டார்ட் பொகை குண்டு.

பபூன் 3 : இது என்னது?

பபூன் 2 : இதா... ரிவால்வர் வெடி.

பபூன் 3 : எங்னயிருக்குது?

பபூன் 2 : இன்னொருக்க கேளேன், பத்து பைசா.

பபூன் 3 : பத்து பைசா குடு.

பபூன் 2 : புர்ர் {சிரிப்பு}. இதான்டா மொச்சப் பயிறு டுப்பாக்கி (ஆமா ஆமா).

பபூன் 3 : என்ன டுப்பாக்கி?

பபூன் 2 : (மொச்சப் பயிறு). எட்டிப் பாக்றியா [அடிக்கிறான்] {சிரிப்பு} இந்தா வர்றேன். இந்தா வர்றேன். காப்பி குடிச்சிட்டு வர்றேன்... [இசை]

[உரைப்பாட்டு]

'அடித்துச் சொல்லாத தன்மை முதற்கொண்டு மட்டி இராவணன் குடி கெடுப்பதற்காக நாசகாரன்போல் வெளியில் வந்தாள் சூர்ப்பநகை மகனைத் தேடுவதற்காக...'

பாடல் : வந்தாளே சூர்ப்பநகை
மகனைத் தேடி ஆஹ்ஹஹ்ஹா...
வந்தாளே சூர்ப்பநகை
மகனைத் தேடி
வந்தாளே சூர்ப்பநகை

பாவையாட்டி : இவள்தான் சொல்லின் செல்வி சூர்ப்பநகை வந்திருக்கிறாள். இவளுடைய மகன்தான் செம்புகாசூரன். வெட்டுப்பட்டு இறந்தவன். மகனைத் தேடுவதற்காக வந்திருக்கிறாள்.

சூர்ப்பநகை : அய்யோ. இந்த காட்ல எம் மகனானவன் தலகீழையாகத் தவம் செய்ய வந்தானே. எங்கிருக்கிறான் என்று தெரியவில்லையே (தேடிப் பாரம்மா). தேடிப் பார்க்கணுமா (ஆமா). அடா மகனே! அடா பாலகா!

பாடல் : எங்கே தேடுவேன்? - பாலனை
எங்கே தேடுவேன்? - இனிம
எங்கே தேடுவேன்?
அழகுள்ள ஒரு சிறு புதல்வனை
எங்கே தேடுவேன்? - பாலனை
எங்கே தேடுவேன்? - இனிம
எங்கே தேடுவேன்?
சிந்தை நொந்து இங்கே வந்தேன்
சென்று வனம் இன்று சேர்வை
சீவன் கத்தியைக் கொண்டுவரப் போன பாலகா
எங்கே தேடுவேன்? பாலனை எங்கே தேடுவேன்?
இனிம எங்கே தேடுவேன்?

மகனே என்றால் அம்மா என்று ஓடி வருவானே. இந்தக் காட்ல எங்கயிருக்றானென்று தெரியவில்லையே (தேடிப் பாருங்கள்). அதோ ஒரு ரிஷியானவர் ஓடுகிறார். டேய் ரிஷி! கானடா ரிஷி ஓடாதடா... [இசை]

டேய்!

பபூன் 1 : என்னம்மா யார்மா நீ? நான் ஆம்ப்ளன்னு தெரியாம அடா புடாங்ற. எங் குடுமியிருக்ற அழகென்ன {சிரிப்பு}. நான் இருக்ற சோக் கென்ன? என்னையப் பாத்து அடாங்றியே.

சூர்ப்பநகை: டேய்... என்னடா (இன்னும் திரும்பி அடா).

பபூன் 1 : எம் பேரு உனக்குத் தெரியாதா?

சூர்ப்பநகை : தெரியாது.

பபூன் 1 : எம்பேரு வந்து குண்டோதரன்னு சொல்வாங்க. சிலது நேரம் கோமாளின்னு சொல்வாங்க. சிலது நேரம் டபேதார். டபேதார் (மூணு பேர்). மூணு பேரு எனக்கு. குடுமித் தலையன் (அவம் பேச்சிக் கேக்கிறவன் ஏமாளிதான்). எம்பேரு கோமாளி. எம் பேச்சு கேக்றவன் ஏமாளி {சிரிப்பு}.

சூர்ப்பநகை : டேய்! டேய். கோமாளி.

பபூன் 1 : என்னம்மா ஏமாளி {சிரிப்பு}.

சூர்ப்பநகை : டேய், இந்தக் காட்ல என் மகன் செம்புகாசூரன் தலை... தலைகீழையாகத் தவம் செய்ய வந்தானா?

பபூன் 1 : என்னது... என்னது... ஓம் மகன் (செம்பக் களவாண்டானா) தவங்கட்ட வந்தானா?

சூர்ப்பநகை : அடே, என் மகன் செம்புகாசூரன்.

பபூன் 1 : ஓம் மகன் செம்புக் களவாணியா {சிரிப்பு} (ஆமா. இவன் லோட்டாக் களவாணி).

சூர்ப்பநகை : இல்ல. என் மகன் செம்புகாசூரன்.

பபூன் 1 : ஓகோ. லோட்டாக் களவாணி. லோட்டாக் களவாணி {சிரிப்பு}.

சூர்ப்பநகை : இல்லை. செம்புகாசூரன் (இல்லடா செம்பு காசூரன்).

பபூன் 1 : அது எனக்குத் தெரியாது. வெவரமில்லை. வெவரந் தெரியல (தெரியல).

சூர்ப்பநகை : அடே! என் பாலகன்... பாலகன்.

பபூன் 1 : அய்யோ பாவம். காலேலயிருந்தா பால் கெடைக்கும். இந்த நேரத்ல வந்தா? எங்கிட்ட எங்கம்மாயிருக்கு பாலு. ஆத்தாடி... அய்யா நம்மகிட்ட கெடையாது. {சிரிப்பு}.

சூர்ப்பநகை : டேய்!

பபூன் 1 : அதட்ர அதட்டப் பாத்தா கட்டிப் பீயெல்லாம் கஞ்சிப் பீயாப் போவுது (அப்படித்தான் இருக்கும்).

சூர்ப்பநகை : டேய்! மரியாதையாக என்னுடைய குழந்தை இருக்க வேண்டிய இடத்தைச் சொல்ல வேண்டும்.

பபூன் 1 : அய்யோ பாவம். அதான் புருஷன விட்டுட்டு கொழுந்தனப் புடுச்சிக்கிட்டீக, கொழுந்தனத் தேடுறியாக்கும். ஆத்தாடி ஒங்கொழுந்தன நான் பாக்கல.

சூர்ப்பநகை : ஆனால் சரி. மரியாதையாக என் மகன் இருக்க வேண்டிய இடத்தைச் சொல்றியா. உன் குடலைப் புடுங்கணுமா?

பபூன் 1 : என்னாத்த... என்னாத்தப் புடுங்கப் போற? (குடல்... குடல்).

சூர்ப்பநகை : குடலப் புடுங்கப் போறேன்.

பபூன் 1 : என்னாக் குடல்?

சூர்ப்பநகை : மணிக் குடல்.

பபூன் 1 : சரி. புடுங்கிட்டுப் போ.

சூர்ப்பநகை : டேய்! மரியாதையாச் சொல்கிறாயா? உதை.

பபூன் 1 : ஒத நல்லாருக்குமா?

சூர்ப்பநகை : உண்மயச் சொல்றா.

பபூன் 1 : ஒத நல்லாயிருந்தா கொஞ்சங் குடு {சிரிப்பு}.

சூர்ப்பநகை : சொல்றா.

பபூன் 1 : சொல்ல மாட்டேன். கொஞ்சம் ஒத குடுத் தாத்தான் சொல்வேன் [அடிக்கிறான்]. யாத்தாடி... யம்மாடி... யாத்தாடி... யம்மாடி... தெரியும்... தெரியும்... தெரியும் (நல்லா ஒத ஒதைக் கிறாங்கடா) எம்மா ஒம் மகன் இருக்ற எடம் நல்லா நமக்குத் தெரியும்.

சூர்ப்பநகை : எங்கடா இருக்றான்.

பபூன் 1 : இங்கயிருந்து நேரா கெழக்க நக்கிப் போகணும் (கெழக்க நோக்கி). கெழக்க நோக்கிப் போய் வடக்க திரும்பி கெழக்க நக்கிப் பாரு (கெழக்க நோக்கிப் பாரு). அந்த எடத்ல ஒரு ஆலமரம் இருக்குது. அந்த எடத்ல ஒரு குத்துக் கல்லு இருக்குது. ம். தாம்பர தடாகம். ம். அந்த எடத்ல ஒரு தலதான் கெடக்குது.

சூர்ப்பநகை : என்னது (தல) தலயா?

பபூன் 1 : ஆமா. ஒம் மகன் செத்தில்லா பொய்ட்டான்.

சூர்ப்பநகை : என்னது? என் மகன் செத்துப் போய்விட்டானா? ஆ! ஆ!

பபூன் 1 : ஏய் சத்தம் போடாத. ஒம் மகன் சாகல. ம்... மாண்டு போய்ட்டான்.

சூர்ப்பநகை : என்னது? என் மகன் மாண்டு போய் விட்டானா? ஐயய்யோ... மகனே.

பபூன் 1 : இந்தா அம்மா. ஒம் மகன் மாண்டு போகல. எறந்து போய்விட்டான்.

சூர்ப்பநகை : எறந்து போய் விட்டானா? அய்யோ.

பபூன் 1 : என்ன அய்யோ.

சூர்ப்பநகை : என்னடா? செத்தாலும் ஒன்றுதான். மாண்டாலும் ஒன்றுதான். எறந்தாலும் ஒன்றுதான். என்னடா திரும்பித் திருப்பிச் சொல்ற.

பபூன் 1 : நீ திருப்பித் திருப்பிச் சொல்ற. நான் திருப்பித் திருப்பிச் சொல்றேன் {சிரிப்பு}.

சூர்ப்பநகை : டேய் எங்கடா இருக்கிறான்?

பபூன் 1 : நேரா திரும்பு... நேரா கெழக்க நோக்கிப் போயி வடக்க திரும்பி மேற்க நோக்கிப் பாரு.

சூர்ப்பநகை : சரி. நான் போய் வர்ற வரைக்கும் இங்கயே இருக்கணும்.

பபூன் 1 : ஏன்? எவ்வளவு குடுத்த சம்பளம்?

சூர்ப்பநகை : டேய். நீ பொய் சொல்லுகிறாய்.

பபூன் 1 : நான் பொய் சொன்னா இந்தப் பாடையில போறேன்... இல்ல. நாசமாப் போறேன். போ (ஒனக்கது நஷ்டமா லாபமா).

சூர்ப்பநகை : சரி. போய் வருகிறேன்.

பபூன் 1 : போய்ட்டு வா. நாசமாப் போ {சிரிப்பு}. போற வழியில நாசமாப் போ {சிரிப்பு}.

பபூன் 2 : ஏண்டா அயோக்கியங் கெட்ட படுவா. நான்சென்ஸ் {சிரிப்பு}. ஏண்டா ஒரு பொம்மனாட்டியப் பாத்து போய்ட்டு வா. நாசமாப் போகங்றியே... ஒனக்கு அறிவிருக்கா. கொண்டாடா ரிவால் வெடி...

பபூன் 1 : எங்கயிருக்குது?

பபூன் 2 : ரிவால் வெடி... கொண்டா மொச்சப் பயிறு டுப்பாக்கி... புர்ர்... {சிரிப்பு}.

பபூன் 3 : ஏல மாப்ள பத்து பைசா {சிரிப்பு}

பபூன் 2 : போடா [அடிக்கிறான்] {சிரிப்பு}...

பாடல் : **மகனிருக்குமிடம் இதுதானோ**
எங்கள் பாலகனிருக்குமிடம் இதுதானோ
எங்கள் பாலகனிருக்குமிடம் இதுதானோ

சூர்ப்பநகை : ஆ! அடா மகனே, அடா கண்மணியே. அடா என் பாலகா... ஆ! அடா என் பாலகா... என் செல்வமே.
[உரைப்பாட்டு]

தாய் மாமனை வெட்டுவேனென்று தலைகீழை யாகத் தவம் செய்ய வந்த மகனே. ஒன்னை வெட்டியவன் யாரடா... என் பாலகா... ஆ! செல்வமே... கண்மணியே... மாண்டு விட்டாயா... அய்யோ... அய்யோ... அய்யோ...

பாடல் : **உன்னை நம்பி நானிருந்தேன்**
என்னை விட்டுப் பிரிந்தாயடா - பாலகா
தவமிருக்க வந்த இடத்தில் - உன்னை
வெட்டியவன் யாரடா? - உன்னைக்
குத்தியவன் யாரடா - பாலகா!

அடா மகனே... அய்யோ... தவமாகத் தவமிருந்து தவத்தில் பெத்த (பாலகன்) என் பாலகன் மாண்டு விட்டானோ? அய்யோ செல்வமே... என் கண்மணியே... சரி. என் மகனைப் பார்த்து நான் அழுது கொண்டிருந்தால் (உண்மைதான்) மகாக் கொடிய பாவங்கள்தான் (உண்மைதான். உண்மைதான்.) என் மகனை எடுத்து நான் தகனம் செய்து மகனை வெட்டிய பாவியை (ஆமா. ஆமா) சித்ரவதை செய்வேன். கொலைக்கிக் கொலை, பழிக்குப் பழி (விடாத) எடுக்கவேண்டும். (எடு எடு). என் மகனை எடுத்து நான் தகனம் செய்கிறேன்...

பாடல் : தகனம் செய்தாளே காட்டில்
மாது சூர்ப்பநகை அவள்
சந்தனக் கட்டை வெட்டி
வகை வகையாக அடுக்கி
குங்குமக் கட்டை வெட்டித்
தேரைப் போல வைத்து
தகனம் செய்தாளே காட்டில் - மாது...

ஆ! என் மகனை எடுத்துத் தகனம் செய்து விட்டேன். வெட்ன பாவிகளை நான் பிடிக்க வேண்டும். அதோ என் மகனை வெட்ன மரத்திலிருந்து ஒரு கால் தடமானது போகுது (அதத் தொடர்ந்து போ). இந்தத் தடத்து வழியாகப் போவோம். (போங்கள்)... [இசை]

ஆகா இந்தத் தடமானது இங்குதான் வருகிறது. இந்த வீட்டுக்குள்ளாகத்தான் இருப்பான் என் மகன வெட்ன பாவி (விடாதீர்கள். விடாதீர்கள்). எப்போதும் இந்த வீடுகள் கெடையாது. இப்போது புதுசாக இருக்குதே? (எட்டிப் பாருங்கள்). சரி. என் மகனை வெட்ன பாவிகள் இதற்குள்ளாகத்தான் இருப்பார்கள் (உண்மைதான். உண்மைதான்). நான் எட்டிப் பார்க்கிறேன். (எட்டிப் பாருங்கள்).

பாவையாட்டி: சூர்ப்பநகை இந்தப் பர்ணக சாலைக்குள்ளாக சன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். (உண்மை தான்) இராமருடைய முக லட்சணத்தைக் கண்டு மயங்கி கீழே விழுந்தாள் பூமியிலே.

பபூன் 2 : ஏதோ ஏதோ ஏதோ ஒரு மயக்கம் {சிரிப்பு}
இங்ட்டு இங்ட்டு இங்ட்டு வந்தது கலக்கம்.

பபூன் 3 : பத்து பைசா குடுக்கணுமே.

பபூன் 2 : [அடிக்கிறான்]. வாங்கிட்டுப் போயேன் {சிரிப்பு}
(ஏய், அவன் பத்து பைசா குடுத்திட்டா என்னடா)

ஏன்டா படுத்திட்டா இவ? (ஏய் மயக்கம்). மயக்கம்.

மயக்கமென்ன ஒங்க

மௌனமென்ன {சிரிப்பு - 'இந்தா மாப்ள பத்து பைசா'}

சூர்ப்பநகை : ஆ! (என்னன்னு கேளப்பா) என்ன அழகாயிருக் கிறான்?

பபூன் 2 : ஏய் நாந்தான் ரொம்ப அழகாயிருக்கிறேன் (ஆமா. ஒன்னையக் கண்டு தான் அழகு) {சிரிப்பு}.

சூர்ப்பநகை : அவன் பல் வருச என்ன?

பபூன் 2 : ஆகா... என் பல் வருச என்ன? (ரெண்டு பல்லுதான் மிச்சம்).

சூர்ப்பநகை : அவனுடைய அழகென்ன?

பபூன் 2 : ம். என் அழகென்ன? (அழகென்ன) என் வவுறு சைஸென்ன? என் வாய் சைஸென்ன? உன்னைய நான் கைவிட மாட்டேன் என் கண்ணே... என் பொண்ணே.

சூர்ப்பநகை : ஏய்.

பபூன் 2 : வ்வ்வேய்.... {சிரிப்பு}.

பபூன் 3 : மாப்ள பத்து பைசா.

பபூன் 2 : போடா... {சிரிப்பு}

சூர்ப்பநகை : சரி. என்ன அழகாயிருக்கிறான் இந்த வேடுவன்? மாதர்களை மயக்க வல்லவனோ? ஒய்யாரனோ? கெம்பீரனோ தெரியவில்லை. இவனை நான் மயக்க வேண்டும். என் மகனை வெட்ன பாவி இவன்தான். அதனால் என் மகனை வெட்ன பாவிகளை... இவன்தான். இவனை நான் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்றால் மோகினியாக வேஷத்தை எடுத்து, இவனை நான் கல்யாணம் செய்து, இவனை நான் பழிக்குப் பழி

வாங்க வேண்டும். இதோ நான் மோகினியாக வேஷத்தை எடுக்கிறேன் (மோகினி... எடுங்கள் மோகினி)...

பாடல் : **மோகினி அவதாரம் கொண்டாளே**
சூர்ப்பநகையானவள்
மோகினிப் பெண் ரூபங் கொண்டாளே!
பத்தரை மாசத்தங்கம் போல
மோகினி அவதாரங் கொண்டு
ஸ்ரீராமரைத் தான் மயக்க
தாடகை தண்டை கொலுசு
வீடு உண்டுமா புதுசு
பத்தரை மாசத் தங்கக் குட்டி ஆனை
- அவளைப்
பார்க்கப் பதினாயிரங் கண் வேண்டுமாம்!
நாகரீகக் கம்மலாம்
வைரக்கல்லு மூக்குத்தியாம்
முத்துப்போலப்
பல்வரிசையைக் காட்டினாள்
தங்க மோதிரத்தைக் கையில்போட்டு
நீட்டினாள்
பார்த்தவர்கள் மனம் பளபளங்க
கண்டவர்கள் மனம் குலுகுலுங்க
காசிலோர் புகழும் பெற்றிடச் சீலையாம் -அவள்
உடம்பெல்லாம் தங்கச் சரிகைச் சேலையாம்!

அண்ணே! (என்னம்மா) என்னையப் பாத்த வொடன மயங்கிருவாரா? (ஒன்னையப் பாத்த வொடன அப்படியே கீழ வுழுந்திருவாரு.) நான் அவ்வளவு அழகாயிருக்கிறேனா? (ஆமா ரொம்ப அழுக்கு இருக்கு) {சிரிப்பு}

அண்ணே! (என்னம்மா தங்கக்கிச்சி) அண்ணே! அவரு எப்ப வருவாரு வெளிய (அவசரமாயிருந்தா கதவத் தட்டு). கதவத் தட்டினால் வெளிய

வருவாரா? (வெளிய வந்தவொடனஒங்களுக்குப் பூச குடுப்பாங்க) ஏ! அத்தான். ஏ! நாதா! (நாதா) என் காதலா (காதலா)... என் அத்தான்... நீங்கள் வெளியே வர வேண்டும் அத்தான்.

இராமர் : ஏய். வா இங்கே! யாரது... ஆண் குருவி, பெண் குருவி சப்தமில்லாத கானகத்திலே? (கானகத்தில்) ஒருவருமில்லாத கானகத்தில் இங்கெ கதவைத் தட்ட வேண்டிய காரணமென்ன? (காரண மென்ன? சொல், சீக்கிரம்) ஒன் ஊர் பேர் என்ன? ஒன் தாய் தந்தையர்களுடைய பேர்கள் என்ன? (சொல்லம்மா சீக்கிரம்) இங்கு எதற்காக வந்தாய்? சொல் சீக்கிரம் (ம். சொல்).

சூர்ப்பநகை : சுவாமி. இந்தக் காட்ல நானே பிறந்தேன் (ஆமா). நானே வளர்ந்தேன். எனக்கெசந்த மாப்ள யார் வருவாரோ அவுங்களிடத்ல சேர்ந்து வாழலா மென்று நான் ஓடோடி வந்திருக்கிறேன். எனக் கெசந்த மாப்ள நீங்கள்தான். என்னைய நீங்கள் கைவிட வேண்டாம். அத்தான் என்னையக் கல்யாணம் முடிக்க வேண்டும் அத்தான்.

இராமர் : ஆக வந்ததும் வரங்காட்டியும் கல்யாணம். வாராய் பெண்ணே (பெண்ணே) என்னுடைய நாடு நகரங்களை இழந்து, என்னுடைய,.. இந்தக் காட்டு வழியாக வந்து, இங்கொரு பர்ணசாலை கட்டி நான் இருக்கிறேன். ஒன்னைய நான் கல்யாணம் செய்தால் இன்னும் எந்தக் காட்டுக்குப் போகணுமோ தெரியாது. ஆகையினால் என் தம்பி லெட்சுமணன் இருக்கிறான். அவன் நித்ய பிரமச்சாரி. அங்கே சென்று விட்டால் உன்னை-யத் திருமணம் செய்து கொள்வான்... ஓடிப் போ.

சூர்ப்பநகை : அப்படியா. ரொம்ப அழகாயிருப்பாரா (நல்லா. ரொம்ப அழகாயிருப்பாரு).

இராமர் : என்னைய விட அழகாயிருப்பான்.

சூர்ப்பநகை : அப்படியா. ஓங்கள விட அழகாயிருந்தாதான் அவருகூட நான் சேந்துக்கிருவேன். இல்லேன்னா ஓட்டமா ஓடியாந்திருவேன்.

இராமர் : அப்படியா... என்னைய விட அழகாயிருப்பான் (போம்மா) போ.

சூர்ப்பநகை : சரி. நான் போய் வருகிறேன். உங்கள் கையெழுத்து ஒன்று வேணும்.

இராமர் : (கையெழுத்து) கையெழுத்து வேணுமா? சரி என்னிடத்தில் பெனுசல் ஒன்றுமே கிடையாது. உன்னுடைய முதுவைக் காமி. முதுவில எழுதி விடுகிறேன்... [இசை]

வாராய், தம்பி லெச்மணா! இவள் நல்லோர் பெண்ணென்று மோகிக்க வேண்டாம். காமங் கொள்ள வேண்டாம். (உண்மைதான்). இவளை ஓடிப் போ கழுதையென்று ஓட்டி விடு. போகாத பட்சத்தில் இவள் காது, மூக்கு அறுத்து மான பங்கம் செய்து விடு.

சூர்ப்பநகை : என்ன எழுதியிருக்கீங்கள்?

இராமர் : போனவுடனே கல்யாணம் முடியும்.

சூர்ப்பநகை : அப்படியா, போனவொடன கல்யாணம் முடியுமா? (போனவொடன கிசாப்) அப்படியா? அத்தான்! எனக்கும் எம் புருஷனுக்கும் வீடு வேணுமே. வீடு... (வீடு வேணுமாக்கும் ஒங்களுக்கு).

இராமர் : வீடு தேவையாயிருந்தால், நீங்கள் சந்தோஷமாகக் கல்யாணம் செய்து, விவாகங்கள் செய்து வந்தால், இந்தப் பர்ணசாலையைக் கொடுத்து விடுகிறேன். சென்று வாருங்கள்.

சூர்ப்பநகை : சரி. நான் பொய்ட்டு வாரேன்.

இராமர் : போய் வா.

சூர்ப்பநகை : அத்தான் (ம். பொய்ட்டு வாம்மா). எங்களுக்கு வீடு தேவை.

இராமர் : சரி, நீ போ (போம்மா).

சூர்ப்பநகை : அத்தான், சீக்கிரம் வீட்டக் காலி பண்ணுங்க (சரி வீட்டக் காலி பண்ணிடுவோம்).

இராமர் : நீ போய் வா. நான் வீட்டைக் காலி பண்ணி விடுகிறேன்.

சூர்ப்பநகை : அய்யோ... நின்று கொண்டிருக்கிறீர்களே (டான்ஸா ஆடுவாங்க. போ). அய்யோ. இவரு எப்ப வீட்டக் காலி பண்ணுவாரு. நாங்க எப்பக் குடியிருக்கிறது?

பபூன் 1 : அவ்ளவு அவசரமாயிருந்தா... இதுல அஞ்சாறு புடுங்கிட்டுப் போ (போம்மா கூர மேயலாம்மா. கூர மேய்றதுக்கு நல்ல ஈஸியா முடிஞ்சிரும்) {சிரிப்பு}. ஏண்டா கல்யாணம் முடிக்கதுக்கு முன்னாலேயே இந்த வீடு கேக்றாங்களே... ஏம்மா, எந்த ஒலகத்லயாவது இருக்குதா?

சூர்ப்பநகை : ம். ஒனக்கென்னா?

பபூன் 1 : ம். ஒன்ற துட்டு போம்மா. {சிரிப்பு - 'மாப்ளயும் இவனும் வர்றாங்க'}

பபூன் 2 : என்னடா அண்ணே.

பபூன் 1 : ஒரு வீடு கெடைக்குமா?

பபூன் 2 : வீடா... யார்க்கு? பொம்பளைக்கா, ஆம்பளைக்கா? (ஆம்பளைக்கி) ஆம்பளைக்கின்னா கெடைக் காது. பொம்பளைக்கின்னா ஏர்க்கண்டிஷன் போட்டது கெடைக்கும் (பார்ரா ஏய்).

பபூன் 1 : ஏம்மா. வாம்மா. ஏர்க்கண்டிஷன் இருக்குதாம். ம். எங்கடா இருக்குது?

பபூன் 2 : ம்... எப்படிக் காத்தடிக்கணுமாம் அந்த வீட்ல? (ஆமா காத்தடிக்கணும்).

பபூன் 1 : ஆமா. காத்து வேணும். காத்து இல்லாம இருந்தா மூச்சு முட்டிச் சாகவா?

பபூன் 2 : சரி. கவலைப்படாத. காத்து வேணும்னா (ஏர்க்கண்டிஷன்) ஏர்க்கண்டிஷன் போடணும் (அப்படின்னா என்னப்பா அது). ஏர்க்கண் டிஷன்னா... நம்ம வந்து... ஏர்க் கண்டிஷன். புது தினுசானது {சிரிப்பு}. (எப்படி... எப்படி) எப்படித் தெரியுமா? நாலு குச்சிய வாங்கணும் (எதுக்குப் பாட கெட்றதுக்கா?) நாலு குச்சிய வாங்கிப் பக்கத்லயிருக்ற ஆத்லெ குடிசெ போட்டு, இந்த அம்மாவையும், இந்த அம்மாளுடைய புருஷனையும் உள்ளத் திணிச்சி தாப்பாளப் போட்டு, ஒரு தீக்குச்சி பொருத்தி வைக்கணும். இந்த ஆடிக் காத்துக்கு நல்லாக் காத்து வாங்குவாங்க {சிரிப்பு}

பபூன் 1 : ஏண்டா வேகுறதுக்கா? {சிரிப்பு}.

பபூன் 2 : ரெண்டு பேர்த்துக்கும் கைலாசபதி அனுப்பு றோம். ஆமா. தத்தனேரி*க்குப் போகக் கூடாதுல்ல (ஆத்துக்குள்ள). ஆத்துக்குள்ள ஜோலிய முடிச்சிறலாம் (நல்லது).

பபூன் 1 : அடப் பாவிப் பயலே! ஏ அம்மா. ஒன்னைய... ஒன்னையக் குளோஸ் பண்ணணும்னு பாக்கான். நீ போம்மா. நீ போ.

பபூன் 2 : ஏண்டா... அந்தப் புள்ள என்னா அழகாயிருந்தா? என்னயப் பாத்துக் கண்ணடிச்சா.

பபூன் 1 : எப்ப?

★ தத்தனேரி - மதுரையில் மாநகராட்சி மயானம் உள்ள இடம்.

பபூன் 2 : இப்பத்தான் {சிரிப்பு}.

பபூன் 1 : அய்யோ! (வெளக்கு மாத்தால அடிச்சா) ஏய் பொய் சொல்லாத.

பபூன் 2 : ஆமாடா. அண்ணே... அண்ணே! அந்தப் புள்ளையக் கல்யாணம் முடிச்சிக் குடுடா.

பபூன் 1 : சரி வாடா. சரி, ஆயிரம் ரூபா வேணும்.

பபூன் 2 : அப்பா... ஆயிர ரூபாய்க்கி எங்க போறது? {சிரிப்பு} எங்கிட்ட முக்கா... ஒரு பைசா இல்ல. அப்புறம் நான் எப்படிடா கல்யாணம் முடிச்சிக்கிறது?

பபூன் 1 : கல்யாணம் முடிக்கணும்னா காசு வேணும்டா (பருசப் பணம் வேணும்லாடா).

பபூன் 2 : காசுக்கெங்க போறதப்பா? அண்ணே! ஒங்கிட்ட யிருந்தா ஆயிரம் ரூபாய் செலவழிச்சி கல்யாணம் முடிச்சிக் குடு. எனக்கொரு அஞ்சாறு புள்ள பெறந்த பெறவு ஒனக்குக் குடுத்திர்றேன்.

பபூன் 1 : (நல்லாருக்கில்ல) அது நல்லாருக்குடே. சரிடா. எப்பா, என்னால முடியாது.

பபூன் 2 : அண்ணண்ணே! ஏல அண்ணண்ணே!

பபூன் 1 : ஏல ஏல முடியாதுடா.

பபூன் 2 : புர்ர்... {சிரிப்பு}... [இசை]

பபூன் 3 : மாப்ளே!

பபூன் 2 : வாங்க மாப்ளே. எப்ப வந்தீங்க?

பபூன் 3 : இப்பத்தான் வந்தேன். நம்ம பத்து பைசா.

பபூன் 2 : போங்க. படுவா [அடிக்கிறான்]... [இசை]

சூர்ப்பநகை : இவர்தான், அவர் தம்பி லெச்மணரா? (ஆமா, அவருதான் அவர் தம்பி லெச்மணர்) என்ன அழகாயிருக்றாரு? அத்தி (என்ன அத்தி?) இவரு அழகுக்கும் என் அழகுக்கும் ரொம்பப் பொருத்தம் (ஆகா... பொருத்தம்). அத்தான்! நாதா! (கையத் தொட்டுப் பாரு). கையத் தொட்டுப் பார்ப்போமா? (தொட்டீன்னா பொயிருவ மதுர மார்க்கெட்டுக்கு) அத்தான்!

இலக்கு. : ஏய் (பொய்ட்டா... ஆத்துக்குள்ள ஓடிப் பொய்ட்டா) {சிரிப்பு} {''வந்துட்டா, வந்துட்டா''} வா இங்கே... யார் நீ? ஆண் குருவி, பெண் குருவி சப்தமில்லாத கானகத்தில் ஆடவனுடைய கைகளைத் தொட வேண்டியவள் யார்? ஒன் பேரென்ன? சொல் சீக்கிரம்.

சூர்ப்பநகை : அத்தான். இந்தக் காட்ல நானே பிறந்தேன். நானே வளர்ந்தேன். (உண்மைதான்). என்னுடைய பேரு வந்து... சொல்லின் செல்வி சூர்ப்பநகை என்று சொல்லுவார்கள். அத்தான், என்னைய நீங்கள் கைவிட வேண்டாம் அத்தான். என்னையக் கல்யாணம் முடிக்க வேண்டும் (அய்யோ).

இலக்கு. : என்னடா இது. வந்ததும் வராங்காட்டியும் கல்யாணத்துடைய பேச்சுகள் எடுக்றாள். ஏ பெண்ணே! ஊன் உறக்கம் ஸ்திரிபோகம் இல்லாமல் நித்ய பிரும்மச்சாரியாக இருக்கிறேன். என்னுடைய அண்ணன் இராமர் இருக்கிறார். அங்கே சென்றுவிட்டால் உன்னையத் திருமணம் செய்து கொள்வார். அங்கே ஓடிப் போ.

சூர்ப்பநகை : அப்படியா? நான் அங்கே சென்றேன். அங்கே போனவுடன், 'வாராய் பெண்ணே! முன்பதாக ஒரு விவாகங்களைச் செய்து விட்டேன். அதனால் இப்பொழுது நான் விவாகங்களைச் செய்ய மாட்டேன். இரண்டாவது மனைவி நாங்கள்

சேர்ப்பது கிடையாது. அதனால் என் தம்பி இருக்கிறான். அங்கே சென்று விட்டால் உன்னையத் திருமணம் செய்து கொள்... செய்து கொள்வார்கள். போ' அப்படியென்று, கண் ஜாடை காமித்து, இதோ முதுவுலே எழுதி விட்டிருக்கிறார்கள்.

இலக்கு. : ஓகோ... கையெழுத்து?

சூர்ப்பநகை : ஆமாம். இதோ பாருங்கள்.

இலக்கு. : கையெழுத்து முதுவிலே எழுதியிருக்கிறாரே? பாத்தியா... எங்கே பார்ப்போம்? 'வாராய், தம்பி லெட்சுமணா! இவள் நல்லோர் பெண்ணென்று மோகிக்க வேண்டாம் (உண்மைதான்). ஓடிப் போ கழுதை என்று விரட்டி விடு. போகாத பட்சத்தில் காது, மூக்கு அறுத்து விடு,' அய்யோ பாவம். இவளை ஓடிப் போ கழுதை என்றால் ஓடி விடுகிறாள். இவளைப் பிடித்து நாங்கள் ஏன் காது மூக்கு அறுக்க வேண்டும்? (அறுத்து விடுங்க சுட்டுத் திங்கலாம்).

சூர்ப்பநகை : என்ன எழுதியிருக்கிறார்.

இலக்கு. : கல்யாணத்துக்குள்ள கோரிக்கைதான் எழுதியிருக்கிறார்.

சூர்ப்பநகை : அப்படியா, சீக்கிரம் கல்யாணம் முடிங்கள். சீக்கிரம் கல்யாணம் முடிங்கள். சீக்கிரம் கல்யாணம் முடிங்கள்.

பபூன் 2 : கொஞ்சம் பொறுங்கள். அவசரப்படாதீர்கள்.

பபூன் 3 : (ஆமாங்கள்) பத்து பைசா குடுங்கள்.

பபூன் 2 : தள்ளிப் போங்கள் [அடிக்கிறான்] {சிரிப்பு}.

இலக்கு. : ஓய் பெண்ணே! கல்யாணத்துக்குள்ள கோரிக்கை தான் எழுதியிருக்கிறார். இன்னுமொரு இரண்டு மாதம் கழித்து வந்தால் நான் திருமணம் செய்து கொள்வேன் (பொய்ட்டு வாம்மா. பொய்ட்டு வாம்மா).

சூர்ப்பநகை : அய்யோ. ஆசை வார்த்தைக் குடுத்து மோசம் செய்து விட்டீர்களே அத்தான்.

இலக்கு. : ஏனென்றால் என் தந்தையானவர் இறந்து இரண்டு மாதமாகவில்லை. அதற்குள்ளாக உன்னை நான் திருமணம் செய்து விட்டால் மகாக் கொடிய பாவங்கள் (ஏய் ஏய் சத்தம் போடக் கூடாது). ஆகையால் இன்னும் ஒரு இரண்டு மாதங் கழித்து வர வேண்டும்.

சூர்ப்பநகை : அய்யோ, என்னைய நீங்கள் கல்யாணம் முடிக்க வேண்டும்.

இலக்கு. : முடியாது, போ. என் முகத்தில் முழிக்காதே. ஒரு இரண்டு மாதம் கழித்து வா. போ.

சூர்ப்பநகை : சரி. இவன்தான் என் மகனை வெட்ன பாவி. (விடாதீர்கள். விடாதீர்கள்) இவனை நான் சும்மா விடக் கூடாது. அடே லெச்மணா!

இலக்கு. : நீ ஆணாகப் பிறந்தவனா பெண்ணாகப் பிறந்தவளா?

சூர்ப்பநகை : நான் பெண்ணாகப் பிறந்தவள். உன்மேல் ஆசைப்படுகிறேன். நீ ஆணாகப் பிறந்தவன். ஏனடா என்மேல ஆசை இல்லை.

இலக்கு. : ஏய். வார்த்தைகள்லாம் மீறிக் கொண்டு போகிறது. மரியாதையாக வந்த பாதை பிடித்து ஓடிப் போ. இல்லையென்றால் உன்னுடைய தலையை அறுத்து விடுவேன்.

சூர்ப்பநகை : ஏய். உன்னையக் கண்டு நான் பயந்து விழுந்து ஓடுவதா? இதோ பார்... உன்னைய நான் செந் தூக்காகத் தூக்கிட்டுப் போறேன். என்னுடைய அண்ணனிடத்தில் கொண்டு போகிறேன் பார்.

பாடல் : ராமா ராகவா ராஜி பரோஜன
சாமித்த வரவா ஜீயராகவா

சூர சங்கார தேவா
கோவிந்த கிருஷ்ணா
நந்த நந்தன கோவிந்தா

பாவையாட்டி: ஏய்! சூர்ப்பநகையைக் கல்யாணம் செய்தால் செய்ய வேண்டும் (உண்மைதான்). இல்லை யென்றால்... விவாகம் செய்தால் செய்ய வேண்டும். இல்லையென்றால் சண்டைக்கு வர வேண்டுமென்று கத்தி, கேடயம், வாளாயுதம், சூலாயுதங்களை எடுத்துக் கொண்டு சண்டைக் காக நிற்கின்றாள் சூர்ப்பநகை.

சூர்ப்பநகை : ஏய்! வெட்ட வா (ஓடாதே). மரியாதையுடன் என்னையக் கல்யாணம் செய்து கொள். இல்லை, ஒன்னையும் ஒன் அண்ணனையும் வெட்டிப் பலி குடுத்து விட்டு சீதையைக் கொண்டு போய் என் அண்ணனுக்கு நான் வைப்பாட்டியாக வைக்கப் போறேன். டேய்... ஓடாதே... ஓடாதே... ஓடாதே...

இலக்கு. : ஆகா. இந்த அரக்கியைப் பார்த்து, நான் பயந்து விழுந்து ஓடினால் மகாக் கொடிய கேவலங்கள். சரி, அண்ணன் எழுதுன எழுத்துப் பொய். இவள் காது, மூக்கு அறுப்பது மெய் (அறுத்திடுங்க) இதோ வாரேண்டி இராட்சதி...

பாடல் : **ராமா ராகவா ராஜீ பரோஜன**
சாமித்த வரவா ஜீய ராகவா
ராமா ராகவா ராஜீ பரோஜன
சாமித்த வரவா ஜீயராகவா

சூர்ப்பநகை: (போட் போட்... விடாத... விடாத...) அய் யய்யோ காது அந்து போச்சே... அய்யய்யோ காது போச்சே... போச்...

இலக்கு. : வந்த்ராத, கொடிய ராட்சதியே. இனிமேல் வந்தால் உன் தலையை அறுத்து விட்ருவேன் ஜாக்கிரதை (அறுத்து விட்ருங்கள்).

சூர்ப்பநகை : அண்ணா!...

பாடல் : மோகங் கொண்டேன்
மூக்கிழந்தேன் அண்ணன்மார்களே - நான்
காதல் கொண்டு
காதிழந்தேன் அண்ணன்மார்களே - நீ
இருக்கும் வனமதிலே அண்ணன்மார்களே - நான்
இப்படிப் புலம்புவதோ அண்ணன்மார்களே,
[உரைப்பாட்டு]
அய்யோ! பாண்டியராஜ சீமையிலே
பழிகாரச் சீமையில (என்னம்மா)
என்னை வாடின்னு கையப் புடிச்சிழுத்து (ம்... செவத்த புருஷன்)

அவமானம் செய்தானோ (என்னம்மா செவத்த புருஷன் வேணுமாம்மா)

ஆ! மூக்கு வலிக்குதே... கண்ணு (அய்யய்யோ. அம்மா நான் ஒரு மருந்து சொல்றேன் கேளம்மா)

காது வலிக்குதே... கண்ணு (அம்மா பச்ச மொளகாவ அரச்சி வைம்மா) {சிரிப்பு}

அட

பாடல் : மாடமுங் கட்டி வச்சேன்
மாடமுங் கட்டி வச்சேன்
மாடம் இருக்கையிலே
மயில் போன மாகையென்ன?
கூடம் இருக்கையிலே
கூடம் இருக்கையிலே
என் குயில்போன மாகை என்ன?
என்ன வச்சான் ஏதுலச்சான்
எம்புருஷன் வீட்டைக் கொண்டு அடகு வச்சான்
வெட்கக் கேடுமாச்சுதே அண்ணன்மார்களே

மாடம் இருக்கையில (மாடம் இருக்கையில) -
எம் மயிறு போல மாலையிருந்து
(ஏ கழுத! 'மயிலு போல மாலையின்னு' சொல்லு கழுத)
அட என்ன மச்சான் ஏது மச்சான்
எம் புருஷன் வீட்டச் சுத்திப்
பேண்டு வச்சான்
(இந்தாக் கழுத {சிரிப்பு} வெறும் செண்டு நாத்தமில்லா அடிக்கும்).
நாத்தமெடுக்க நாத்தமெடுக்க
ஊத்தப்பம்லாம் நாறிவிடும்

பபூன் 1 : ஏய் யார்ரா இது? என்னம்மா அழுதுக்கிட்டிருக்கீங்க.

பபூன் 2 : பெண்மணிப்பா.

பபூன் 1 : என்னா மணி?

பபூன் 2 : ஏ! பெண்.

பபூன் 1 : இவ்ளவு அகலமிருக்குமா அந்தப் புண்.

பபூன் 2 : ஏ... ரம்பை.

பபூன் 1 : அட இந்த வயக்காட்டுக்குப் போடுறாங்களே அந்தக் கரம்பையா?

பபூன் 2 : ஏ... பூலோக ரம்பை.

பபூன் 1 : என்னா ரம்பை?

பபூன் 2 : ஏய் ஒங்கூட யார்யாரப்பா பொறந்திருக்கா.

பபூன் 1 : எங்கூடயா? என் கூடப் பெறந்தது எங்க அக்கா... என்னா... எங்க மதினி (ஏலே) எங்க... என் வொய்ப்... {சிரிப்பு} (ஏல அப்பன்னா ஒந்தங்கச்சியயே கட்டிக்கிட்டியா) என்ன... எங்க மாமியா (ஏய் மாமியான்னு சொல்றேல்லா) எங் கொழுந்தியா...

பபூன் 2 : ஏலே பொர்ரா.

பபூன் 1 : ஏழு புள்ள பெத்த எங்க மாமியா, (ஏலே கொஞ்சம் பொர்ரா) எங்க மாமன் (போச்சி போ), என் பெரியாப்பன் (என்னது பெரியத்தேயா), ஆமா, சின்னத்த, எம் மருமகன் (ஏலே) என்னா... எல்லாரும் எங்கூடப் பெறந்திருக்காங்க (ஏ! ஒங்கூட அத்தேன்னு சொன்னீல்ல. அதுபோல அது ஒரு பெண்மணிப்பா) அத்த போல இது ஒரு பெண்மணி. ஏ அத்த! (ஏல கருமம் புடிச்ச பயலே! கருமம்... கருமம்... எங்க அத்தேன்னு போய் நின்னுக்கிர்றாம் பாரு). அம்மா! நீங்க யாரம்மா நீங்க? பேசலாங்களா? (ஏ! அவுங்க பேசுனாங் கன்னா இந்த ஒலகமே கிடுகிடுன்னு பதறும்). ஓ அவ்வளவு செந்தமிழ் (ஆகா, அப்படிப் பேசுனாங்கன்னா) இசைத் தமிழே! என் இசைத் தமிழே... நீங்க பேசணும்மா ஒங்க பேரென் னம்மா? (ஏ! சொல்லின் செல்வி சூர்ப்பநகை). என்னா செல்வி? (சூர்ப்பநகை) என்னத்தப் புடுச்சிச் சூப்புனாக? (பனங் கொட்டயப் புடிச்சிச் சூப்புனாங்க) {சிரிப்பு} சரி. சரி. பரவாயில்ல. பரவாயில்ல. நல்லதுதான். அம்மா! ஒங்க பேரென்ன? (சூர்ப்பநகை) சூர்ப்பநகை. நீங்க எதுக்கு இங்க வந்தீங்க? (ஏய். தெக்க லெங்கை தெரியுமாப்பா). தெற்கை... இலங்கை (இராவணன் இலங்கை) ஆமா இராவணன் லெங்கை (இலங்கை. இராவணன் தங்கை சூர்ப்பநகை) என்னா... (அதான்... சூர்ப்பநகை). சரி, பரவாயில்ல. எதுக்கு வந்தாங்க? (இங்கயிருந்து இராமரிடம் கல்யாணம் முடிக்க வந்திருக்கா). கல்யாணம் முடிக்க வந்திருக்காங்க இலங்கையிலிருந்து (ஏ! காத்து வாங்க வந்தாங்கப்பா). ஏன் இங்க அடிக்ற காத்து வாங்கிட்டுப் போறாங்க? (அங்க கடல்குள்ள

எப்படிக் காத்து அடிக்கும்?) சரி சரி (அதனால இங்க காத்து வாங்கிட்டுப் போயி அங்க விடலாமுன்னு) பரவாயில்லை. இந்த அம்மா டாபர் மாமா {சிரிப்பு} (அங்க வந்த வொடன இராமர்கிட்ட கல்யாணம் முடிக்கச் சொல்லி யிருக்கா). இராமர்கிட்ட கல்யாணம் முடிக்கச் சொல்லிருக்கா (அவரு வேண்டாமுன்னுட்டாரு). சரி (லெச்மணர்கிட்ட வந்திருக்கா). சரி (அவரும் வேண்டாமுன்னுட்டாரு). அடப் பாவி, நான் ஒத்தேல தானயிருக்றேன். *எம்மாமன் எனக்குக் கல்யாணம் முடிச்சிக் குடுக்றம்னு... என் அண்ணன் இருந்துகிட்டு... எனக்குப் பரிசம் போட்டுக்கிட்டு ஐநூறு ரூபா கேக்றான் எம்மாமன். அதுனால எனக்குப் பொண்டாட்டி இல்லாம தான இருக்குது (ஆமா). அது... நீ இங்கிட்டு வந்திருந்தா நல்லாருக்குமில்ல (யாரு) இந்தப் பொண்ணு. (ஏய்! ஏண்டா சொல்றதக் கேளுடா). ம். ம் (கல்யாணம் முடிச்சா முடி. இல்லேன்னா சண்டைக்கு வா). எந்த ஊரு சந்தைக்கு? (திருநெவேலி சந்தைக்கு) நாள... நாள கழிச்சி நம்ம மதுர சந்த. (ஏலே சண்டை. போர்க்களம்... யுத்தம்) சரி, என்னென்ன போச்சி? (மூக்கு, காது, தலமுடி) அய்யய்யோ என்னென்ன போச்சி? (மூக்கு, காது, தலமுடி) பரவாயில்ல... பேசுவாங்களா? (அழகாப் பேசுவாங்க) ('ஏய் சத்தம் போடாத') அம்மா... தங்கச்சி?... அம்மா... அக்கா. ஏ அம்மா... மதினி (ஏலே. என்னா... இருக்க இருக்க ரேட்டு கொறை யிது). ஏ அம்மா! வொய்ப் {சிரிப்பு} ஏ அத்தே!

சூர்ப்பநகை : என்னாடா... நாயெ... தூ... தூ... (கழுதெ இருந்திருந்தும் அய்யய்யோன்னு வருது)

★பாவையாட்டியின் சொந்த வாழ்க்கை விமர்சனங்கள் அவ்வப்போது இதுபோல் வருவதுண்டு (பார்க்க. பக்.203).

பபூன் 1 : *சரி. அம்மா, இப்ப என்ன செய்யப் போறீங்க?

சூர்ப்பநகை : அண்ணே! இந்த ராமனெ நான் லேசா விடப் போறனா? இப்பொழுதே சென்று என் அண்ணன்மார்கள் அறுபது பேர் ராட்சதர்களை அழைத்து வந்து இந்த ரர்மனை நான் கண்டந்துண்டமா வெட்டி (வெட்டி) காக்கைக் கழுகுகளுக்கு நான் இரை கொடுக்கப் போகிறேன். கரதூஷனாதிப் படைகளை நான் அழைத்துக் கொண்டு வரப் போறண்டா அண்ணே.

பபூன்1 : சரி, அப்படியா? எங்க கூப்பிடு உன் அண்ணனெ.

சூர்ப்பநகை : அண்ணே! எம் மூக்கு தகதகன்னு எரியுதடா அண்ணே. ஒரு மருந்து வேணும் (ஏ! ஒந் தம்பியக் கூப்பிடப்பா பாவம்ட).

பபூன்1 : மருந்தா? பரவாயில்ல. பாவம். அடே தம்பி! கிழிஞ்ச வாயா...

பபூன் 2 : ஏண்டா [அடிக்கிறான்]. அயோக்கியங் கெட்ட படுவா {சிரிப்பு}அய்யாயிருக்ற, சோக்கென்ன, நைஸென்னா, போக்கென்னா? சண்டியரு மகன் சண்டியரு, ஊருக்குப் பெரிய மனுஷன். அய்யா பேரச் சொன்னாலும் சுண்ணாம்புச் சட்டிய நாய் நக்காது.

பபூன் 1 : எங்ன நக்காது? [அடிக்கிறான்]

பபூன்2 : இங்னத்தான் நக்காது? [அடிக்கிறான்] {சிரிப்பு} கொண்டா ரிவால்வெடி (ஏ! வேண்டாம்ப்பா) புர்ர்... {சிரிப்பு} (இவந் தொறந்தான்னா ஒரே முட்டுக்குத்தான்).

★'ஏய். அந்தப் புள்ளயத் தூக்குப்பா. தூக்கிட்டு வெளியே போ' என்று அழுகின்ற குழந்தையைத் தூக்கச் சொல்கிறார்.

பபூன்1 : அடே தம்பி! இந்த அம்மா மூக்கெல்லாம் எரியுதாம். லெச்மணரு அறுத்துப்புட்டாரு (மூக்க). அதுனால கொஞ்சம்போல... அந்த மருந்து கொஞ்சம் வச்சி வுடு (வைடா)

பபூன்2 : ஏப்பா. நான் ஆப்பிரிக்காவுல போயி படிச்சிட்டு வந்திருக்கேன் (எங்க போயி படிச்ச?) ஆப்பிரிக்கா, ஆப்பிரிக்கா (ஏய்யா அமெரிக்கா. அமெரிக்கா... என்னா... அங்க பேரிக்காவ்ல போயி படிச்சிருக்கேன். (ம்... பேரிக்காவ்ல) {சிரிப்பு} நான் வைக்கற மருந்து மூண்ணாளைக்கி எடுக்கக் கூடாது. மூணு நாளைக்கிப் பசியில்லாம பட்னியாக் கெடக்கணும் (பத்தியங் கித்தியம் வேற). அதான் பட்னியாக் கெடக்கணும்.

பபூன்1 : ஏல... சரி வச்சி வுடுடா.

பபூன்2 : நம்ம வாகுதான். அம்மா குனிங்க. எப்படி எப்படி பிளாஸ்திரி ஒட்றதுன்னு பாத்துக்கோ. பிளாஸ்திரி ஒட்றது சரியாயிருக்குது. என்னா... அண்ணே நீ கொஞ்சம் புடிச்சுக்கோ.

பபூன்1 : ஏண்டா தம்பி?

பபூன்2 : நான் வச்சவொடன கொஞ்சம் காட்டம் புடிக்கும்.

பபூன்1 : எரிச்சல்...

பபூன்2 : எரிச்சல்... ஒரு ரெண்டு நிமிஷத்துக்கு... அதும் பெறவு தளதளன்னு போயிரும்.

பபூன்1 : சரியப்பா. அதப் புடிச்சிக்கிருதம்ப்பா.

பபூன்2 : புடிச்சிக்க.

பபூன்1 : ஒரு ரெண்டு மாசத்திக்கி.

பபூன்2 : புர்ர்... {சிரிப்பு}(பொய்ட்டான்டா ஆத்துக்குள்ள)

பபூன்3 : மாப்ள, பத்து பைசா.

பபூன்2 : [அடிக்கிறான்] போடா {சிரிப்பு}....

பாடல் : **காட்டுக்குள்ளே மனிதன் இருந்தான்டா -**
எனது காலைப் பிடித்து அறுத்தான்டா!
பஞ்சவடி தனிலே மூவர் தஞ்சமும்
வாழ்க்கையிலே காதுமூக்கும் போச்சுதே -
உன்னைக் காண வெட்கமாச்சுதே -
அண்ணா கரதூசனா!

பாவையாட்டி: இதோ, சூர்ப்பநகை காது, மூக்கு பறிகொடுத்து அறுபது பேர் ராட்சதர்களை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாள். இப்பொழுது இதோ ராமருடைய கைப்பட இவ்வளவு பேரும் மாண்டு மடியச் செல்கிறார்கள்.

பாடல் : **ராமா ராமா ராஜிபரோஜன**
சாமித்த வரவா ஜீயராகவா
ராமா ராகவா ராஜிப்ரோஜன
சாமித்த வரவா ஜீயராகவா...

பாவையாட்டி: இவன்தான் கரதூஷனன் வந்திருக்கிறான். கரதூஷனன். (கரதூஷனன்) எல்லாத்தையும் அழித்துக் கொல்ல வேண்டுமென்று.

சூர்ப்பநகை: அண்ணே! அந்த ராமன் அதோ அந்தப் புது வீட்டுக்குள்ள இருக்றாண்டா அண்ணே. (ஆமாண்ணே)

கரதூசனன் : அப்படியா தங்கையே? நீ உக்காரு. என்னுடைய படைகளை விட்டு அடித்து எல்லாத்தையும் அடித்துக்கொன்னு போடுறோம்.

சூர்ப்பநகை : சரிடா அண்ணே.

கரதூசனன் : **உக்கார் (உக்கார்)**

பாடல் : **கோசலைப் பாலகன்**
ராஜ சிகாமணி
குலரபி சேகரா
கோதண்டபாணி
கோதண்டபாணி
ராஜ சிகாமணி
குலரபி சேகரா
கோதண்டபாணி

இராமர் : தம்பி லெச்சுமணா!

இலக்கு. : அண்ணா!

இராமர் : அந்த சூர்ப்பநகை, ஓடிப் போடி கழுத என்று விரட்டி விடாமல், *அவளைப் பிடித்துக் காது, மூக்கு அறுக்கப் போக, ராட்சதர்கள்... அரக்கர்களை அழைத்து வந்திருக்கிறாள். எங்களுடைய பர்ண சாலையைச் சுத்தி 'டென்டு'கள் அடித்து விட்டார்கள். எங்களைச் சூழ்ந்து விட்டார்கள். அவர்களை நாங்கள் எப்படிக் கொல்வது?

இலக்கு. : அண்ணா! நீங்கள் கவலைப்பட வேண்டாம். அவர்களைக் கொல்ல வேணுமென்றால், என்னுடைய வீரவாளால் இவ்வளவு பேர்த்துடைய தலையை அறுத்துக் குவித்து விடுகிறேன் அண்ணா. கவலைப்பட வேண்டாம்.

இராமர் : தம்பி! இந்த வீர வாளை வைத்துக் கொண்டு சீதையிடத்திலே நீ காவலாக இருந்தால், இந்த அரக்கர்களை என் வீரப் பிரசண்ட கோதண்டத்தினால் கொன்று விடுகிறேன். நீ அழைத்துச் செல்ல வேண்டும்.

இலக்கு. : சரி அண்ணா! நான் காவலாக இருக்கிறேன். வாருங்கள் அண்ணியரே.

★ 'ஏய்! இங்க எந்திரிப்பா'என்று ராமுராவ் முன்னால் படுத்திருக்கும் சிறுவனை எழுப்புகிறார்.

பாடல் : **ராமா ராமா ராஜிபரோஜன**
சாமித்த வர வா ஜீயராகவா
ராமா ராகவா ராஜிப்ரோஜன
சாமித்த வரவா ஜீயராகவா...

(விடாதே... விடாதே... போர்... போர்... விடாதே... விடாதே... போர்... போர்...)... [இசை] (விடாதீங்க சூர்ப்பநகையை... அடிங்க சூர்ப்ப நகையை)... [இசை] (ஓடியாங்கடா. விடாதீங்க... விடாதீங்க... போர்... போர்..) அய்யய்யோ... அய்யய்யோ... அய்யய்யோ...

சூர்ப்பநகை : ஏலே அண்ணே! அட ஓடியாடா... அட ஓடியாடா... அட ஓடியாடா... [இசை]

கொல்றா அண்ணே! கொல்றா அண்ணே!

அய்யோ... என்னடா அண்ணே - அட

செத்தயாடா அண்ணே.

செத்தானே... என் கரதூஷன அண்ணன் செத் தானே... (ஒரு பல்லு இல்ல பயலுக்கு) அய்யோ. நான் என்னாத்த சோளப் பொறி (போ. கம்பம் பொறி) சரி. இந்த ராமனை நான் சும்மா விடுவதா? டேய் ராமா... அத்தான் என்னைக் காப்பாற்றுங் கள். ஆசை மிகுந்த அத்தான் என்னைக் காப்பாற்றுங்கள்... அய்யய்யோ... அய்யய்யோ.... (விடாத... விடாத...)

பபூன் 1 : அமுக்குடா. கிழிஞ்ச வாயா. போடுறா... போடு... போடு.. [அடிக்கிறான்] {'ஏய் மாப்ளயும் வந்திட்டான்'} செத்தே பொய்ட்டான்டா {சிரிப்பு}. ஏய் ஒலகத்ல பொம்பளைகளும் பொம்பள பாத்திருக்கேன். இந்த மாதிரி பொம்பள நான் எங்கயும் பாக்கலடா (எங்கப்பா... எங்கப்பா பாத்தே?) யார் தெரியுமா? (யாரு) சூல்ப்பநகை (ஏய்! சூர்ப்பநகை) இராமர்கிட்ட போடுறா.... போடுறாங்றா. எல்லாப் படைகளையும் கொன்று

விட்டார் ராமர். ஆக இப்ப ஒத்தேல நின்னுகிட்டு போடுறா போடுறான்னா அவா... எனக்குன்னா கோபம்... நாய்க்கும் பீய்க்கும் வந்ததுபோல வந்திருச்சி {சிரிப்பு}. குடுமியத் தீட்டிக்கிட்டு வச்சேம் பாரு, நாலு கும்மாங்குத்து. டிஸ்ஸூம் போட்டுட்டேன். போட்டவொடன நீட்டி நிமுந்து படுத்திட்டா (ஏய் சூர்ப்பநகை இல்லப்பா. ஒந் தம்பிப்பா). சரி. பரவாயில்லை... அய்யய்யோ தம்பி (அட நீட்றா கம்பி)... அட செத்தியாடா எந்தாம்பி {சிரிப்பு} சரி இவனக் கொண்டு போய் சுடுகாட்ல பொதைக்கணும் நான். (ஏ! டாக்டரக் கூட்டிட்டு வாப்பா) சரி. நான்.... டாக்டர் எங்கயிருப்பாரு? (ஏய். அந்தக் காப்பிக் கடயில உக்காந்திருப்பாரு) டாக்டரய்யா.

பபூன் 4 : என்னா மேன்... என்னா மேன்... என்னா மேன்? {சிரிப்பு}

பபூன் 1 : இவரு மேன் விக்றவராயிருப்பாரு (ஏ! மேன் இல்லப்பா என்னா வேன்)

பபூன் 4 : என்னா மேன்? வாட் இஸ் எ... {சிரிப்பு} ஓ! ஆண் பிள்ளை. அய்யா தேன் பிள்ளை.

பபூன் 1 : நான் சொல்றதக் கேளுங்க. என்னா... இந்தா இவரக் கொஞ்சம்... என்னா சீக்கு? என்ன சீக்குன்னு நாங்கப் பாக்கணும்.

பபூன் 4 : யாருக்கு சீக்கு? ஒனக்கு சீக்கா?

பபூன் 1 : ஒனக்கிருக்கு சீக்கு {சிரிப்பு} (ஏய்! இவரு தம்பிக்கு) யோவ்! ஒரு ஆளுக்கு சீக்கு. என்ன சீக்குன்னு நீங்க கண்டுபிடிக்கணும்.

பபூன் 4 : ஒரு ஆளுக்கு சீக்கு. அது என்ன சீக்குன்னு நாங்க கண்டு புடிச்சித் தவளயாக்கணும்.

பபூன் 1 : ஏய். தேவலயாக்கணும். (தேவலயாக்கணும்)

பபூன் 4 : ம். தவளயாக்கணும் {சிரிப்பு} (நண்டாக்கணும்)

பபூன் 1 : யோவ்! ஒழுங்காச் சொல்லய்யா.

பபூன் 4 : சரி.. ஏய்! பீஸ் தெரியுமா பீஸ் (என்னா பீஸ்?)

பபூன் : என்னா பீஸய்யா (ஏய்).

பபூன் 4 : ஏய்! தொகை.

பபூன் 1 : தொகை எப்டி? (எப்டி)

பபூன் 4 : நான் பிளஸர்ல ஏர்றதுக்குப் பத்து ரூபா குடுத்திறணும்.

பபூன் 1 : (பத்து ரூபா) அட எழவே.

பபூன் 4 : அங்க போய் எறங்னவொடன இருபது ரூபா குடுத்திறணும்.

பபூன் 1 : சரி குடுத்திருவோம்.

பபூன் 4 : ஆளப் பாத்தவொடன அம்பது ரூபா குடுத்திறணும்.

பபூன் 1 : சரி... குடுத்திருவோம்.

பபூன் 4 : அந்த டிகிரி வச்சி, இன்ன சீக்குன்னு சொன்ன வொடன, ஆயிர ரூபாய் குடுத்திறணும்.

பபூன் 1 : சரி.

பபூன் 4 : அவன எழுப்னவொடன ரெண்டாயிர ரூபா குடுப்பயா? அப்படிக் குடுத்தா நான் வருவேன். இல்லேன்னா ஒனக்கு கேஸ் பாக்க மாட்டேன். ஐ வில் மீட் பார் ஆக்ஸன்* {சிரிப்பு}

பபூன் 1 : ஏய்! சார் (சார்). ஏ! சார். சரி சார். அங்க செத்துக் கெடக்றாம் பாருங்க, சீக்குக்காரன். அவங் கைல

★ தொடர்ந்து ஆங்கிலம் பேசுகிற தொணியில் உளறுகிறார்

ஒரு நூறு ரூபா. நான் ஒரு நூறு ரூபா. ரெண்டு பேரும் குடுத்திர்றோம்.

பபூன் 4 : சரி. பிளஸர் வேணும்.

பபூன் 1 : அய்யா... எங்க போறது பிளஸருக்கு? பழைய சோறுகூடக் கெடைக்காது (ஏய் டாக்டருகிட்ட ஒரு கேள்வி கேக்கணும்ப்பா) என்னது? (டாக்டர்)

பபூன் 4 : என்னா சார். (ஒங்க கை எங்க) எங்கை...? அது... அங்க குடுத்திருக்கனே. பெறவு வந்து மாட்டிக்கு வேன் (சரி) {சிரிப்பு} (சரி சரி... நல்லது) பரவாயில்லை. அய்யோ டேஞ்சர். அய்யா கை பெண்ட்டு (டாக்டருக்கே ஒரு கை இல்லேன்னா எப்படியிருப்பாரு டாக்டர்?)

பபூன் 1 : சரி அய்யா. வாங்க... கொஞ்சம் நடந்து, ஒரு எட்டு தான். பக்கத்லதான் இருக்காங்க.

பபூன் 4 : சரி. அங்க போனவொடன நூறு ரூபா அட்வான்ஸ் குடுத்திறணும் (சரி).

பபூன் 1 : (தொழிலாளிங்களுக்கு இரக்கங் காட்டுங்க) மறக்காம குடுத்திருவோம். மறக்காம குடுத்திரு வோம். ம். புறப்படுங்க... [இசை]

பபூன் 4 : அய்யய்யோ [அடிக்கிறார்கள்]

பபூன் 1 : ஏ! டாக்டருக்கு நல்லா வச்சாச்சிடா (ஏ! ரெண்டு ஊசி, ரெண்டு புளியங்கொட்ட மாத்ர குடுங்கப்பா டாக்டருக்கு).

பபூன் 4 : அடச் சைய்! மனுஷனா நீ... மாடா? (என்ன?) அட இந்தப் போடு போடுறானே.

பபூன் 1 : அய்யா! நீங்க அட்வான்ஸ் கேட்டிங்கல்ல. அட்வான்ஸுக்குப் பதிலா அடிவான்ஸ் குடுத்தி ருக்கேன் {சிரிப்பு}. அவரை எழுப்புங்க. இன்னும் நெறைய தந்திருவோம் (நல்லது).

பபூன் 4 : நல்ல மனுஷன்டா. நல்லா குடுத்தான்டா. அடிவான்ஸு

பபூன் 1 : சரி எழுப்புங்க.

பபூன் 4 : சரி. என்ன டிகிரின்னு. பாப்பமா? டிகிரி வச்சிப் பாப்பம் {சிரிப்பு}. ம். நூத்தி அம்பத்தஞ்சி டிகிரிலே பேசுது. (சார் உயிருக்கு ஆபத்தோ) இப்பவோ பெறகோன்னு... தூக்கணுமோ இல்ல பொதைக்கணுமோன்னு இருக்கு.

பபூன் 1 : அதுக்கென்ன செய்யணும்.

பபூன் 4 : சரி. நான் சொல்ற மருந்து கொண்டு வா.

பபூன் 1 : என்ன மருந்து?

பபூன் 4 : இங்கயிருந்து* துருவா சென்ட்ரல் மார்க்கெட் போ (சரி). அங்க போனவொடன ஒரு நாலு பொரட்டா (யாருக்கு).

பபூன் 1 : யாருக்கய்யா?

பபூன் 4 : எனக்குத்தான் (ஏய் சொல்றதக் கவனிச்சிக் கோடா) ரெண்டாவது...

பபூன் 1 : ரெண்டாவது... ஒரு ரெண்டு சுக்கா வருவல்.

பபூன் 4 : சரி.

பபூன் 1 : ரெண்டு அவிச்ச முட்ட.

பபூன் 4 : அவிச்சமுட்ட.... சரி.

பபூன் 1 : ரெண்டாவது ஒரு பிஸ்கட் பாக்கெட்... பிஸ்கட்.. ஒரு ஐநூறு மில்லி சாராயம் (பையன் மில்லிலேல்லா போறான்... மில்லியிலே).

பபூன் 4 : சரி, ரெண்டாவது...

பபூன் 1 : அப்புறம் ஜோடா பாட்டில். ஒரு தீப்பெட்டி வாங்கிட்டு சட்னு வா. {சிரிப்பு}

★ துருவா = நேரே

பபூன் 4 : ஏன்ய்யா. இவ்ளவும் ஒங்களுக்காக்கும்.

பபூன் 1 : ஆமா. நம்ளுக்குத்தான்.

பபூன் 4 : இவ்ளவும் தின்னுபுட்டு.

பபூன் 1 : நான் அவர எழுப்புறேன்.

பபூன் 4 : ஏன்யா. நீ திங்றதுக்கு முன்ன அவன் உயிர் போயிருமுல்ல. அவர எழுப்புய்யா ஒனக்குத் தர்றேன். மொத்தமா வாங்கித் தர்றேன்.

பபூன் 1 : மறந்திரக் கூடாது.

பபூன் 4 : மறக்க மாட்டேன். எழுப்பு.

பபூன் 1 : ஒன், டூ... இஞ்செக்ஷன் போடு... போடு இஞ்செக்ஷன். போடு இஞ்செக்ஷன் {சிரிப்பு}

பபூன் 4 : அய்யா ஆளப் பெறட்டுவாய்யா (ம்.... ஆளப் பெறட்டுவாயா) ம். பெறட்டியாச்சி... வாய்யா {சிரிப்பு}

பபூன் 1 : சரி. ஏய்! கும்ப வாய்வு, அனாந்தர வாய்வு, சுந்தர வாய்வு (எத்ன வாய்வு சார்) மூணு வாய்வு (சரி) இந்த மூணு வாய்வுல இப்ப சுந்தர வாய்வு கலக்கப் போறேன்.

பபூன் 2 : .... புர்ர்ர்......{சிரிப்பு}

பபூன் 1 : ஏய்... ஏய்... டாக்டர்! என்னாப்பா அது? இவன் என்னா காத்து கீத்து ஏதாவது தின்னிருக்கானா? (ஆமா, இங்ன அடிக்கிற காத்தெல்லாம் பயாதான் வச்சிருக்கான்).

பபூன் 4 : அவன் நெறைய தின்ருக்கான். ஊத்த மாம்பலம். பெலாக்கொட்ட (எல்லாம் அவனுக்குத்தான்) நெறைய தின்ருக்கான். (சொந்தந்தான் அவருக்கு) சரி பரவாயில்லை. அனாந்தர வாய்வு அடிப்பமா (ம்... சரி). அனாந்தர வாய்வு (ம்... அடி...)

பபூன் 2 : புர்ர்... {சிரிப்பு} (ஏய்! பொய்ட்டார்டா டாக்டர் ஊருக்கு)

பபூன் 1 : யோவ் டாக்டரய்யா! வாங்க மெதுவா வாங்க.

பபூன் 4 : அடேச் சேய். ஏய் இங்க அடிக்கிற பொசல் காத்து இவந்தான் வச்சிருக்காண்டா {சிரிப்பு}. அடத் தொறந்து வுட்டுட்டாண்டா. நான். போயி... கேட்ல போயி உழுந்தேன்டா. எப்பா... இந்தக் கும்ப வாய்வு கலைக்கப் போறேன். நீ என்னையக் கொஞ்சம் புடிச்சிக்கிறணும் (சரி. சரிங்க).

பபூன் 1 : கலைங்க... கலைங்க... கும்ப வாய்வு. கலைங்க.

பபூன் 2 : ....புர்ர்... {சிரிப்பு} எவன்டாவன் என்னைய அடிச்சவன்?

பபூன் 3 : {மாப்ள காசு} மாப்ள பத்து பைசா.

பபூன் 2 : போடா {சிரிப்பு} {மாப்ள பத்து பைசா}... [இசை]

சூர்ப்பநகை : இந்த ராமன் என் காது, மூக்கு அறுத்து விட்டான் பெண்ணென்று தெரியாமல்! என் அண்ணன்மார் களை எல்லாம் கொன்று விட்டான். இவன் பெரிய கெட்டிக்காரனாயிருக்கிறான். இப்போது இவனைக் கொல்ல வேணுமென்றால் இவன் செல்வத்தை... சிரிக்கும் சீதையை நான் சிறை எடுக்க வேண்டும். என் அண்ணன் பத்துத் தலை ராவணனிடத்திலே சொல்லி நான் சீதையை சிறையெடுக்கும்படியாக நான் சொல்லப் போறண்டா அண்ணே (பொய்ட்டு வாம்மா).

பாடல் : காணவேணும் லச்சம் கண்கள் சீதாதேவியை
காலுக்கு நிகரோ பெண்கள்
தென்னிலங்கை எங்கும் ஆடி
திசையெங்கும் சீப்பினாடி
திருகு ராவணா உந்தன்

இருவது கண் போதுமா
தேவேந்திரன் மனைவி
இந்துராணி இருக்கிறாளே
காலுக்கு நிகராகுமோ - சீதையின்
காலுக்கு நிகராகுமோ?
காணவேணும் லச்சம் கண்கள் சீதாதேவியை!

பபூன் 2 : ஏய்! ஏலெய்... எங்கிட்ட எரநூறு ரூபா இருக்குடா. எரநூறு ரூபா இருக்கு (ஏய் எங்கிட்ட குடுப்பா). தாறுமாறா மானாங்கண்ணியமா செலவழிச்சி இப்ப செலவழிக்கப் போறேன் (ஏய் அப்படிச் செய்யாதப்பா, பத்து ஊரு ஆளக் கொண்டு வந்து சோறு பொங்கிப் போடப்பா). இவன் சோத்லயே கெடக்றான்.

பபூன் 1 : அடே தம்பி! பத்து ஊரு ஆளக் கூட்டிக்கிட்டு வந்து சோறு பொங்கிப் போட்டீன்னா (நீ மட்டும் யோக்யமோ) ஓம் பேரச் சொல்லிச் சாப்டுட்டுப் போவாங்க.

பபூன் 2 : அடப்பாவி எரநூறு ரூபாய்க்கு வேக்காடு* வைக்க வந்திட்டான். டேய்! எர நூறு ரூபாய்க்கிச் சோறு பொங்கிப் போட்டா... வந்தவன் போனவன்... இருக்றவன் இல்லாதவன் நல்லா மூக்கு வரைக்குந் திம்பான் (திம்பான்). கண்ட பக்கமெல்லாம் பேண்டு வைப்பான்.

பபூன் 1 : ஆமா. அது நாயந்தான் (ஏய் ஒரு தண்ணிக் கெணறு வெட்டப்பா. குடி தண்ணிக் கெணறு).

பபூன் 2 : தண்ணிக் கெணறு வெட்னா வந்தவங்கெல்லாம் தண்ணியக் குடிப்பாங்க (ஆமாம்). பொண்டாட்டிக்கும் புருஷனுக்கும் சண்ட வரும். பொண்டாட்டிக்காரி பொத்தடீர்னு உழுந்திருவா (ஆத்தே) {சிரிப்பு}.கெணத்துக்குள்ள பொத்தடீர்னு உழுந்தவொடன கேஸூ நம்ம மேல வருமேடே! {சிரிப்பு}

---

*வேக்காடு = 'செலவு' (*பார்க்க. பக்.439, 273*)

பபூன் 1 : ஏய் இப்ப என்ன செய்யணுங்ற?

பபூன் 2 : இன்ரஸ்ஸா இருக்கணும். என்னா... பாக்றதுக்குக் கவர்ச்சியா இருக்கணும்.

பபூன் 1 : இன்ரஸ்...

பபூன் 2 : ஓ இன்ரஸ்...

பபூன் 1 : ஏ! அப்படீன்னா... பொம்பள டான்ஸு

பபூன் 2 : அடே பொம்பள இருக்காளா? எங்கடா... எங்கடா...

பபூன் 1 : [அடிக்கிறான்] அத மட்டும் எவ்ளவு நைஸாக் கேக்றாம் பாரு {சிரிப்பு}

பபூன் 2 : [அடிக்கிறான்] அடிக்காதடா. படவா ராஸ்கல் {சிரிப்பு}

பபூன் 1 : அடே! அந்தப் பொம்பள எங்கயிருக்கா தெரியுமா?

பபூன் 2 : எங்கடா இருக்கா?

பபூன் 1 : ஏய்...இங்கயிருந்து... என்ன... அதனால அந்தப் பொம்பளயானவள்... தூத்துக்குடி டில்லி முத்தம்மாள் (நாட்டியக் கலாராணிப்பா)

பபூன் 2 : தூத்துக்குடீல தின்னி முத்தம்மா.

பபூன் 1 : ஏய்! டில்லி முத்தம்மான்னா... தின்னி முத்தம்மா [அடிக்கிறான்]

பபூன் 2 : ஏய் கிளிக்குஞ்சி மொதலாளிய அடிக்காதடா (அடிக்கக் கூடாதப்பா, கைய நீட்டிப் பீச்சக்கூடாது). கைய நீட்டிப் பீச்சினால் உன்னை டுப்பாக்கியால் சுடப்படும். {சிரிப்பு}ரிவால்வெடி தோட்டாவைத் தொறந்து விட்டால், ஒன் மூஞ்சி

மொகரையெல்லாம் பேந்துகிட்டு போகப்படும். (வேண்டாம்ப்பா ஒன் தோட்டா. நிறுத்து கொஞ்ச நேரத்துக்கு).

பபூன் 1 : அடே தம்பி! அந்தப் பொம்பளைய நான் கூட்டிக்கிட்டு வாரேன்டா.

பபூன் 2 : ஏல... ஆமா... அந்தப் பொம்பளைக்கி எத்தன வயசு?

பபூன் 1 : பதினாறு வயது பருவ மங்கை.

பபூன் 2 : பதினாறு வயது பருவ மங்கை... யாத்தாத்தோ.. யாத்தாத்தோ... யாத்தாத்தோ... யாத்தாத்தோ.. உம்மஉம்மா உம்மஉம்மா உம்மஉம்மா... {சிரிப்பு} பதினாறு வயசுப் புள்ள. நல்லாருப்பாளா? (ஏ யய்பா! ஏ கிளாஸாயிருப்பா).

பபூன் 1 : ஏ ஒன்னாயிருப்பா.

பபூன் 2 : அப்பன்னா பரவாயில்ல. ஏல! ஆமா, அந்தப் புள்ளைக்கிக் கல்யாணம் முடிஞ்சிருச்சா? (ஏ! கல்யாணமே இல்லப்பா).

பபூன் 1 : கல்யாணங் கெடையாது.

பபூன் 2 : அவளுக்குப் பீஸ் எவ்வளவு? (நூத்தி ஒண்ணு)

பபூன் 1 : நூத்தி ஒரு ரூபா.

பபூன் 2 : சரி, போனாலுஞ்சரி... வந்தாலுஞ்சரி. இந்தாப் புடி... ஓர் ரூபாயப் புடி. இங்கேயிருந்து தூத்துக் குடிப் போறச் செலவு, அங்கயிருந்து வர்ற செலவு, அவளுக்குக் காப்பி, அவளுக்குக் கலர், டீ, பார்ட்டி இதெல்லாம் போக மிச்சம் தொண் ணூறு பைசா கொண்டு வந்திரு {சிரிப்பு} (ஏலே பத்து பைசால என்னடா பண்றது)

பபூன் 1 : ஏண்டா பத்து பைசாவ்ல என்னடா செய்றது?

பபூன் 2 : மொச்சப் பயறு வாங்கித் தின்னுட்டுப் போ {சிரிப்பு}

பபூன் 1 சரி. நான் கூட்டிட்டு வர்றேன்.

பபூன் 2 : சீக்கிரம் கூட்டிட்டு வாடா. தந்திர்றேன் காசு.

பபூன் 1 : சரி. நான் போய்ட்டு வாரேன்.

பபூன் 2 : ஏல... ஒரு ரூபாய்க்கு மில்லியப் போட்டுறாத.

பபூன் 1 : அதெல்லாம் போட மாட்டேன். போ {'மாப்ள பத்துக் காசு'}

பபூன் 2 : ஏலய்! பொம்பளயக் கூப்புடப் போயிருக்கான் அண்ணேன். பொம்பள வருவா... செவத்த பொண்ணு (நீயே பாத்துகிட்டு இரு) ஆடப் போற.

பபூன் 5 : மாப்ள {சிரிப்பு}
(பார்வையாளர்1)

பபூன் 2 : வாங்க நீங்க யாருங்க?

பார்வை.1 : அந்த டான்ஸு பாக்க வந்திருக்கோம் (எந்த ஊர்லயிருந்து வந்திருக்கீங்க)

பபூன் 2 : எங்கயிருந்து வந்திருக்கீங்க.

பார்வை.1 : மதுரக்குள்ளயிருந்து வந்திருக்கோம்.

பபூன் 2 : பரவாயில்லை. ஒங்க பேரென்னா.

பார்வை.1 : எம்பேரு வந்து போன வருஷம் {சிரிப்பு} (பேரப் பாரய்யா போன வருஷம்)

பபூன் 2 : அய்யா போன வருஷம்! சரி. நீங்க எவ்ளவு குடுக்றீங்க. பொம்பள டான்ஸு பாக்க (வரி வரி போட்ருக்கோம். எவ்ளவு குடுக்றீங்க) எவ்ளவு குடுக்றீங்க.

பார்வை.1 : நான் வேணுமினா நாலணா தர்றேன் (சரிடா).

பபூன் 2 : நாலணா (ஆகா). ஏ ஒன். எப்ப தர்றீங்க?

பார்வை.1 : பொம்பளயப் பாத்து தான்.

பபூன் 2 : சரி (பொம்பளயப் பாத்துட்டு) போன வருஷம் நாலணா வரவு (ஒம் பேரென்னா?)

பார்வை.1 : போன வருஷம்.

பபூன் 2 : போன வருஷம் நாலணா வரவு (வரவு) {சிரிப்பு} வரவு. நாளைக்கிச் செலவு!.

பபூன் 6 : ம்ம்... ம்ம்... டான்ஸு நடக்கப் போதாமே (ம்ம்.. (பார்வையாளர்2) டான்ஸு நடக்குது. டான்ஸு நடக்குது).

பபூன் 2 : செத்தான் இன்னைக்கோட. அய்யா! பொம்பள வந்து ஆடப் போறாங்க. நீங்க எவ்ளவு குடுக்றீங்க?

பார்வை.2 : நானு பதினஞ்சி பைசா தர்றேன் (அட).

பபூன் 2 : எப்பத் தருவீங்க?

பார்வை.2 : கொஞ்ச நேரங்கழிச்சி.

பபூன் 2 : ஒங்க பேரு.

பார்வை.2 : எம் பேரு வந்து... ம்... ம்... மொளு மொளு {சிரிப்பு} (ஏய்! முளு முளு).

பபூன் 2 : சரி... மொளு மொளு பதினஞ்சி.

பார்வை.1 : ஏய்! பாரப்பா நாலணாவுக்கு மறைக்குதில்ல.

பபூன் 2 : அடாடா சரி. பின்னால உக்காருங்க பதினஞ்சி. மின்னால உக்காருங்க நாலணா {சிரிப்பு} (அது ஏறுன டிக்கெட்டோ.) ஆமா. எறுன டிக்கெட்டு முன்னால... எறங்ன டிக்கெட்டு பின்னால (ஒண்ணு முப்பது... ஒண்ணு நாற்பது... அது போல) ... [இசை] நீங்க யாருங்க?...

பபூன் 7 : அப்பா... வந்து... டான்ஸு பாக்க வந்திருக்கோம் (பார்வையாளர்3) (அய்யோ).

பபூன் 2 : ஒங்க பேரென்னா?

பார்வை3 : எம் பேரு வந்து... நொண்ணக் கொட்ட {சிரிப்பு} (பேரு தினுசு தினுசா)

பபூன் 2 : என்னடா தினுசு தினுசாயிருக்குது. நொண்ணக் கொட்ட. அய்யா நொண்ணக் கொட்ட (நீங்க எவ்ளவு தாறீங்க) நீங்க எவ்ளவு தர்றீங்க?

பார்வை3 : நான் வேண்ணா பத்து பைசா தருவேன் {சிரிப்பு}

பபூன் 2 : பத்து பைசா. எப்பத் தருவீங்க?

பார்வை3 : நான் பீடி வாங்கிக் குடிக்கணும்னு வச்சிருக்கேன், பத்து பைசா (போச்சிடா). என்னா... பொம்பளயப் பாத்தவொடன தந்திர்றேன் (ஒங்க பேரென்னா) நொண்ணக் கொட்ட.

பபூன் 2 : நொண்ணக் கொட்டயா? பலாக் கொட்ட. பிலாக் கொட்ட... பிலாக் கொட்ட {சிரிப்பு} (பாரு பிலாக் கொட்டேங்றான்) பிலாக் கொட்ட. பிலாக் கொட்ட... பலாக் கொட்ட {சிரிப்பு}

பார்வை1 : ஏய் நாலணாவுக்கு மறைக்குது.

பபூன் 2 : அய்யா! பத்து பைசா நீங்க. கடேசி... லாஸ்டுக்குப் போங்க {சிரிப்பு}. நீங்க முன்னால உக்காருங்க (மொதல்லயிருக்றவரு மூணு நுப்பது குடுத்தாரோ அதான் முன்னால உக்கார்ந்திருக்காரு.) ஏய். நீங்க பின்னால உக்காருங்கய்யா... அறுபத்தி... பின்னால உக்காருங்க.. ஏய் வாங்கப்பா... டான்ஸு நடக்கப் போவுது *ம். வாங்க நேரமாவுது. டைம் கட்டியாவது... [இசை]

பபூன் 3 : (வந்திட்டான்) மாப்ள பத்து பைசா.

★ ஏதோ மராட்டிய மொழில் ராமுராவிடம் கேட்கிறார் கோபால் ராவ். நேரம் பற்றிக் கேட்டிருக்க வேண்டும்

பபூன் 2 : ஏல. பொம்பள வந்து ஆடப் போறா. என்னா... பொம்பள ஆடுன பெறவு... அண்ணாச்சி காச வாங்கிட்டுப் போயிருக்காரு நோட்டு பெறகு தந்திர்றேன். போடா போ.

பபூன் 3 : சரி தந்திறணும்.

பபூன் 2 : சரியப்பா (போய் சரியப்பா)

பபூன் 3 : மாப்ள பத்து பைசா தந்திறணும்.

பபூன் 2 : (சரியப்பா) தர்றேன். உக்கார்ரா {சிரிப்பு} சரி. இப்ப என்ன பண்றது? இன்னுங் காணமே (நீ டான்ஸ் ஆடு).

பபூன் 8 : ஏய்... ஏய்... (இவரு யாருப்பா) நான்தான் (பார்வையாளர்4) சண்டியர்... சண்டியர்...{சிரிப்பு}

பபூன் 2 : இவருதாம்ப்பா சண்டியரு. ஆளப்பாரு இவருதான். அய்யா சண்டியரய்யா.

பார்வை.4 : என்னா... என்னா... என்னா... ஏய்! யாரக் கேட்டு கூட்டத்தப் போட்ட? யாரக் கேட்டு கூட்டத்தப் போட்ட? ஏய்...

பபூன் 2 : அய்யா! ஏதோ ஒரு கலா நிகழ்ச்சி... டான்ஸு நடக்கப் போகுது. நீங்க கொஞ்சம் தலம தாங்கணும்.

பார்வை.4 : ஏய்! எந்தல என்ன அவ்ளவு *தண்டியா யிருக்குது? (ஏய் தலம).

பபூன் 2 : அய்யா! ஏதோ ஒரு பெரிய மனுஷனா நீங்க நின்னு குடுக்கணும்.

பார்வை.4 : ஒரு கெலாட்டா இல்லாம... ஒரு கச்சடா இல்லாம செய்வோம். ஒரு காப்பி வாங்கிட்டு வரச்சொல்லு.

பபூன் 2 : எதுக்கு?

பார்வை.4 : எனக்குத்தான்... ஒரு காப்பி வாங்கிட்டு வரச் சொல்லப்பா (காசு). இல்லேன்னா நூறு மில்லி

★ தண்டி = தடிமன், பருமன்

சாராயத்த வாங்கிட்டு வரச் சொல்லு (ஏலே! இவன் காசு திங்ற பய டோய்). போய்ச் சொல்லப்பா தருவாங்க. காசு குடுத்து அனுப்பு போ.

பபூன் 2 : ஏய் யார்ரா இங்க. அடேய் சீசாவ எடுத்துக்கிட்டு வாடா.

பார்வை.1 : பாரப்பா. காசு குடுக்றதுக்குப் பதிலா சீசாவை எடுத்துக்கிட்டு வரச் சொல்றாரு {சிரிப்பு} (அவரு கஸ்டமர்)

பார்வை.4 : டேய் வாங்கிட்டு வரச் சொல்றா {சிரிப்பு} (ஏய் நீ சொல்லீர்றா வாங்கிட்டு) சண்டியர் சொல்றதக் கேள்ரா டேய் {சிரிப்பு}

பபூன் 2 : அய்யா சண்டியரய்யா! ஏதோ கொஞ்சம் மன்னிக்கணும்.

பார்வை.4 : ஏய். பேசக்கூடாது {சிரிப்பு}. அடி நொறுக்கிருவேன்டா.

பபூன் 2 : அய்யா. சண்டியரய்யா.

பார்வை.4 : ஏய். சொல்றதக் கேள்ரா டேய்.

பபூன் 2 : சரிங்க. ஏதோ டான்ஸு... முடிஞ்சப் பெறவு பாப்போம். நீங்க ஒண்ணும் குடுக்க மாட்டீங்களா? (வரி... வரி போட்ருக்கோம் மொதலாளி) வரி போட்ருக்கோம். நீங்க ஏதாவது குடுக்கணும்.

பார்வை.1 : வரியா. ஒரு பைசா குடுக்க மாட்டேன் (போச்சிடா). ஓசியாத்தான் நின்னு பாப்பேன் (எமுட்டி பாக்கெட்டு).

பபூன் 2 : இவருதான் ஓவன்னா சீயன்னா ஓசி. இவரு வந்து ஓவன்னா சியன்னா ஓசி {சிரிப்பு}

பார்வை.4 : ஏய் ஓசின்னு சொல்லாத (என் கேவலமாயிருக்கோ?).

பபூன் 2 : நீங்க எவ்வளவு குடுத்தீங்க?

பார்வை.4 : சரி. சரி. சொல்லிட்டுப் போ. நான் முன்னால தான் உக்காருவேன்.

பார்வை.1 : ஏய்... நாலணா குடுத்தவன்... மறைக்குதில்ல {சிரிப்பு}

பபூன் 2 : அய்யா சண்டியரய்யா! இவுங்கள்ளாம் காசு குடுத்தவங்க. நீங்க ஓசிதான். ஓவன்னா சீயன்னா. இப்டி லாஸ்ட்டுக்குப் போங்க.

பார்வை.4 : ஏண்டா டேய்! சண்டியரப் பின்னாலத் தள்ளலாமா (போடா ஓசி)

பபூன் 2 : [அடிக்கிறான்] சும்மாயிருடா ஓசி (அவுங்கள்ளாம் ரெண்டு நாப்பது). காசு குடுக்றவன் முன்னால உக்காந்திருக்கான். இவன் வந்து பின்னால போக்கூடாதாம் {சிரிப்பு}. ஏய் யாரு இது? {யார்ரா}

பார்வை.5 : நா வந்து, அந்த டில்லி முத்தம்மாவுடைய தம்பி.

பபூன் 2 : டில்லி முத்தம்மா தம்பி (இவனைப் பாத்தது போதாதாக்கும்) சரி. பரவாயில்லை. இவுங்களப் பாத்தாலே எனக்கு வாயால எடுக்க வருது (பேரென்ன பேருன்னு கேளு).

பார்வை.5 : ஏய் அப்படிச் சொல்லாதய்யா. எங்கக்கா எவ்வளவு அழகா டான்ஸாடுவா தெரியுமா?

பபூன் 2 : சரி, நீங்க எவ்வளவு வரி குடுக்றீங்க (ஏல).

பார்வை.5 : ஏய்யா, எங்க அக்காதான் டான்ஸு ஆட வர் ராங்க. நான் வேற வரி குடுக்கணுமா? (சரி எப்ப வருவாங்க).

பபூன் 2 : இவன் நமக்கு வேண்டிய ஆளு. உக்காரு உக்காரு (ஏய்! இவன் எப்டி வந்தானாம்?)

பபூன் 3 : மாப்ள பத்து காசு.

பபூன் 2 : [அடிக்கிறான்] உக்கார்றா {சிரிப்பு} (ஏய் எப்ப வருவாங்கன்னு அவங்கிட்ட கேள்ரா) {சிரிப்பு} {'கரெக்ட்ரா}

பார்வை.1 : டேய்! எங்கடா அந்த அவுங்க... டான்ஸு போடுறவுங்க (இதோ வந்திருவாங்க).

பார்வை.4 : ஏய். ஆரம்பிங்கடா டேய். கல்லத் தூக்கி எறியுங்கடா டேய். ஆரம்பிங்கடா.

பபூன் 2 : ஏய் [அடிக்கிறான்] உக்கார்றா ஓசி {சிரிப்பு}.

பார்வை.4 : (என்னடா இது) டேய் பெரிய அறுவகேஸா இருக்குதடா. எங்கடா பொம்பள?

பபூன் 3 : யோவ்! மாப்ள பத்து பைசா.

பபூன் 2 : தர்றேன்டா [அடிக்கிறான்] {சிரிப்பு}

பார்வை.4 : ஏய் ஆரம்பிங்கடா டேய்.

பபூன் 2 : உக்கார்றா ஓசி [அடிக்கிறான்] {சிரிப்பு}

டேய் வர்றாடா நாட்டியக் கலாராணி சினிமா நட்சத்திரம் எதிரொலியா நடிக்க வேண்டிய பதினாறு வயது பருவ மங்கை டில்லி முத்தம்மாள் வருகிறாள் (வர்றாள்). வருகிறாள். எல்லோரும் கை தட்டுங்கோ. கை தட்டுங்கோ (ஜோரா தட்டுங்க)... [இசை]

பபூன் 1 : ஏய் இவுங்கதாண்டா பதினாறு வயது பருவ மங்கை (ரெண்டு பல்லுதான் மிச்சம்).

பார்வை.5 : இவுங்கதான்யா எங்க அக்கா (ஒங்க அம்மாவப் போல பெரியவா).

பபூன் 2 : அக்காவா பாட்டியா?

பார்வை.5 : எங்க அக்காவுக்கு அக்கா. பாட்டிக்கிப் பாட்டி.

பபூன் 2 : போடா [அடிக்கிறான்] {சிரிப்பு}

பார்வை.4 : அய்யய்யோ கெழவிடா... டேய். போரடிக்குதுடா. டேய்! கெழவிடா... டேய்! போரடிக்குதுடா டேய்.

பபூன் 2 : ஏய் [அடிக்கிறான்] உக்கார்றா {சிரிப்பு}. ஓசீ பாக்றவனுக்குப் பார்ரா... அவனுக்கு அதிகாரம் {சிரிப்பு}.

பார்வை.1 : ஏய்? என்னய்யா அது கெழவி.

பபூன் 2 : ஏய்! உக்கார்ரா [அடிக்கிறான்] பேசாம!

பபூன் 3 : மாப்ள அந்தக் கெழவியப் பாத்தவொடன எனக்கு எப்படியோயிருக்கு. வாயால எடுக்க வருது {சிரிப்பு} (வாயால எடுத்தா...)

பபூன் 2 : சரி, அடேய்! என்னடா கெழவியக் கூட்டிட்டு வந்திருக்க. ஒரு ரூபாய நல்லா வாங்கித் தின்னுப் புட்டு மதுர பிளாட்பாரத்ல படுத்த கெழவியப் போய் இழுத்துக்கிட்டு வந்திருக்கியே... ஏண்டா?

பபூன் 1 : டேய். இல்லடா. இப்ப அப்படித்தான் இருப் பாங்க. வேஷம் போட்டா... ஏ ஒண்ணா யிருப்பாங்க.

பபூன் 2 : (சரி போய் உக்காரு). என்னமோ தெரியலப்பா. டான்ஸு நடத்தும்போது செத்துகித்துப் போறவன எவந் தூக்கிப் போடுறது? {சிரிப்பு}.

பபூன் 1 : அதெல்லாம் நல்லா ஆடுவாங்க.

பபூன் 2 : எங்ன ஆடப் போறாங்களோ...

டில்லி முத்தம்மா : ம்... வர்றவால்லாம் கெமரியாத்தான் வந்து ஆடுவாளாக்கும்.

பபூன் 3 : இல்ல ஒங்களப் போல ஜவ் மிட்டாய் வந்து ஆடுவாங்க (ஜவ் மிட்டாய் வந்து ஆடுவாங்க) {சிரிப்பு} {'ஏய் மாப்ள பத்து காசு'}

டில்லி முத்தம்மா : நான் போயி... நான் போயி வேஷம் போட்டுட்டு வர்றேன். பாருங்க மாமா (போம்மா. போம்மா).

பபூன 2 : அய்யோ மாமான்னுட்டா. போய்ட்டு வாடி யாத்தா... [இசை] (கை தட். கை தட். கை தட்) அய்யோ.... ஏ ஒன்... பரவாயில்ல. நல்லாருக்கா புள்ள.

பார்வை.1 : அடடா. நல்லாருக்காடா புள்ள. புள்ள நல்லாருக்காடா.

பார்வை.4 : யாத்தாத்தே. நல்லாருக்காடா பொண்ணு {'ஏ ஓசி'} பொண்ணு {'ஏ ஓசி'} ஏ பொண்ணு.

பபூன் 2 : [அடிக்கிறான்] ஏண்டா ஓசியா பாக்றவன் இங்க ஏண்டா வாரே.

பார்வை.4 : ஏய் சண்டியரு தெரியுதில்ல {சிரிப்பு}. சண்டியர்.

பபூன் 2 : ஏய், போடா ஓசி [அடிக்கிறான்] {சிரிப்பு}.

பபூன் 3 : ஏய் மாப்ள! பொண்ணு நல்லாருக்கு. பத்து பைசா குடு. {சிரிப்பு}.

பபூன் 2 : போடா [அடிக்கிறான்] {சிரிப்பு} ஏய் டான்ஸ் ஆடப் போறாங்க. தள்ளி உக்காருங்கடா. தள்ளி உக்காருங்க. எம்மா. ஒன் டான்ஸு போடு.

டில்லி முத்தம்மா:

பாடல் : மாமா மாமா மாமா
ஏம்மா ஏம்மா ஏம்மா
சிட்டுப் போல பெண்ணிருந்தா
வட்டமிட்டு.... (ஹை ஹை ஹை ஹை)

....

....

....

கன்னிப் பெண்ணப் பாத்தவொடன
காதலிச்சி.....

....

(போட் போட் போட் ஆ! ஆ! ஹை அப்படித் தான் விடாத. போட்... போட்... போட்)

பார்வை.4 : டேய் சண்டயர்ரா. டேய் சண்டியர் {'ஏய் ஓசி'}

பபூன் 2 : என்னத்தக் குடுத்த?

பார்வை.4 : என்னத்தக் குடுத்தா ஒனக்கென்ன {சிரிப்பு}...
ஏய் காப்பி குடுடா டேய்.

பபூன் 2 : கொண்டா ரிவால் வெடி... புர்ர்ர்... {சிரிப்பு} {ஏய் மாப்ள பத்து காசு}.

பார்வை.1 : டேய் காப்பி கேட்டனெ. காப்பி வாங்கிக் குடுத்தியா?

பபூன் 2 : காப்பிதான அய்யா. நம்மூர் காப்பி நீங்க குடிக்க மாட்டீங்க (ஏய் ஒரு ஆளு பேள்றதுல நாலு பேரு பங்கு காப்பி) {சிரிப்பு}.

பார்வை.1 : எங்கே, ஒரு கலராவது வாங்கிக் குடுத்தியா.

பபூன் 2 : என்ன கலரு வேணும்.கெழவி கோலா கலர் வேணுமா.

பார்வை.1 : எங்கே குடுங்க பாப்போம்.

பபூன் 2 : புர்ர்ர்.... {'மாப்ள பத்து காசு'}.

பபூன் 1 : டேய். அந்த அம்மாவுக்குக் காசு குடுத்து அனுப்பணும். ரூபா குடுறா.

பபூன் 2 : எவன்டா கூட்டிட்டு வரச் சொன்னது?

பபூன் 1 : நீதான.

பபூன் 2 : நான்தானா கூட்டிட்டு வரச் சொன்னேன். கூட்டிட்டு வரச் சொன்னா, அவா வந்து டான்ஸு போட்டா, நான் ஒத்தேலயா பாப்பேன். எல்லாரும் பாத்தீங்கல்லா... காசு குடுங்க {சிரிப்பு}.

பபூன் 1 : டேய் காசு.

பபூன் 2 : போடா [அடிக்கிறான்] {சிரிப்பு} {'ஏய் மாப்ள பத்து காசு'}.


டில்லி
முத்தம்மா : இந்தாங்க ரூபாய் குடுங்க.

பபூன் 2 : [அடிக்கிறான்] பொய்ட்டு வாங்க.

பபூன் 3 : மாப்ள பத்து பைசா.

பபூன் 2 : போடா {சிரிப்பு} [அடிக்கிறான்]

சரி எல்லாத்துக்கும் வணக்கம். ஏனென்றால் முதல் நாள் ஆட்டமாக இருப்பதனால் இதோட எங்களுடைய கதையை நிப்பாட்டுகிறோம். நாளைய தினம் ராவணன் சீதையைச் ஜிறை எடுப்பது. ஜடாயுவுடைய சண்டைகள். அனுமார் அடைக்கலமாகச் சேருவது. நாளைய தினம் இதைவிடப் பிரமாதமாக இருக்கும். எல்லாரும் நாளைக்கு ஜல்லிக் கெட்டு மஞ்ச வெரட்டு காமிக் (நாளைக்கிக் கொறவன் கொறத்தி ஆட்டங்கள் நல்லாருக்கும் நாளைக்கி)



இராமாயணம்

சீதை சிறைப்படல்

பதிவு செய்த நாள் : 17.05.1974

இடம்: நரசிங்கம் மதுரை.

நிகழ்த்துநர் : பாபுராவ் குழுவினர்.

பாடல் : திருப்பதி மலை வாழும் வெங்கடேசா...

கடவுள் வாழ்த்துப் பாடல்
வந்தருள்வாய் தாயே!
சரஸ்வதியே!
வந்தருள்வாய் தாயே!
வந்தருள்வாய் தாயே!
சரஸ்வதியே!
வந்தருள்வாய் தாயே!
பாரதம் போற்றிடும் பார்வதியே தாயே!
பாரதம் போற்றிடும் பார்வதியே தாயே!
பாங்குடனே உன்னை அடிபணிந்தேன் தாயே!
வந்தருள்வாய் தாயே
சரஸ்வதியே
வந்தருள்வாய் தாயே!
பாரதம் போற்றிடும் பார்வதியே தாயே!
பாங்குடனே உன்னை அடிபணிந்தேனே...

பாடல் : ஏய் அம்பது கோழி எம்பது முட்ட வேகாமத் திம்பேன்
அம்பது கோழி எம்பது முட்ட வேகாமத் திம்பேன்
ஆறண்டா சோறு நூறண்டா காபி
பத்தும் பத்தாமப் போச்சே
அம்பது கோழி எம்பது முட்ட வேகாமத் திம்பேன்
ஆறண்டா சோறு நூண்டா காபி
பத்தும் பத்தாமப் போச்சே
ஏய் அம்பது கோழி எம்பது முட்ட வேகாமத் திம்பேன்...
அம்ப்து போழி எம்பது முட்ட.....
சத்தோம்! சத்தோம்! சைலன்ஸ்... இரைச்சல்!

ஆனால், சீர்புகழும் நன்நகரிலே, இந்தக் கிராமத்தில் குலதெய்வமாக விளங்கக் கூடிய கிராம தேவதிகளுக்கு, அடியேன் வணக்கம் செய்தேன்... பபூன் கோமாளி! (அங்க கிழிக்ற வங்களுக்கு வணக்கம் பண்ணு). இந்தக் கிராமத்தில் இருக்கக் கூடிய, ஆனால் பெரியோர் களும், இளவட்ட வாலிபர்களும், தாய்மார்கள் அனைவர்களுக்கும் வந்திருப்பதினால், ஆனால், ஒரு ஏழைகள் நடத்த வேண்டிய ஒரு சரித்திரக் கதைகளிலே, யாதொரு குற்றம் குறைகள் இருந்த போதிலும் தாங்கள் பெற்ற பிள்ளை களைப் போல எங்களை ஆதரித்து தனம் கொடுத்து இரட்சிப்பதற்கு அனைவருக்கும் வணக்கமாய்க் கேட்டுக் கொண்டேன்... பபூன் கோமாளி! ஆனால் கதை நடத்தும்போது வெளியே இருக்கக் கூடியவர்கள் – பெரியோர்களும், தாய்மார்களும், சிறுவர்களும் – டிக்கட் வாங்கி உள்ள வந்திருக்கக் கூடிய பெரியோர்களும், தாய்மார்களும், வாலிபர்களும், சிறுவர்களும், ஆனால் சத்தமில்லாம அமதியுடனேயிருந்து கேட்டால் கத புரியும். ஆனால் ஊட ஊட நீங்கள் சத்தம் போட்டீங்கன்னா கத ஒண்ணும் புரியாது. நாங்களும் சத்தம் போட, நீங்களும் சத்தம் போட ஒண்ணுமே தெரியாது. ஆனால் ஏழைகள் மீது தயவு செய்து, சத்தமில்லாமல் அமதியுடனேயிருந்து கதை வரலாறுகளைக் கேட்டு, எங்களுக்கு, ஆனால் சந்தோஷப்படுத்து வதற்கு அனைவர்களுக்கும் வணக்கமாய்க் கேட்டுக் கொண்டேன் பபூன் கோமாளி! எங்க நம்ம மொட்டயன ஆளக்காணம! (போயிருப் பான் காபிக் கடைக்கு).

பபூன் 2 : அட சக்கைய்! நாந்தாண்டா மொட்டப் பயலுக்குப் பெறந்த பையன் {'வந்துட்டாண்டா

மொட்டைப்பையன்'} படுவா நா இருக்கிற சோக்கென்ன, ரைட்டென்ன, ஒழுங்கென்ன, பருத்தென்ன, குருத்தென்ன? சைசென்ன?

பபூன் 1 : அது எங்க? [அடிக்கிறான்]

பபூன் 2 : [அடிக்கிறான்] அது இங்கத்தான்.

பபூன் 1 : எப்ப? [அடிக்கிறான்]

பபூன் 2 : அது இப்பத்தான்.[அடிக்கிறான்]

பபூன் 1 : என்னடா மக்காகோழி... டப்புடப்புனு அடிக்கெ... மக்கா...கோழி மேல கோழி வைக்கப் படுவா (ஏய்! அடிச்சுக்கிடா தேங்கப்பா).

பபூன் 2 : எடுடா டுப்பாக்கிய, எடுடா ரிவால்வார.... ப்பூஊஊ {சிரிப்பு}.

பபூன் 1 : சரியான டுப்பாக்கி வச்சிருக்காண்டா இவன்.

பபூன் 2 : இது ரெட்டக்கொழல் டுப்பாக்கிடா. அண்ணே... ஏஏ {சிரிப்பு}.

பபூன் 3 : மாப்ளே!

பபூன் 2 : வந்துட்டான் எம்மச்சான் மொளு மொளு... இவம் பேரு வந்து மொளு மொளு, (மொளு மொளு) எம் மச்சினன்.

பபூன் 3 : ஏலே! அஞ்சி பைசா கடன் வாங்கினியே அது எங்கடா அது?

பபூன் 2 : எடுடா டுப்பாக்கிய ரிவால்வெடிய... சூத்தங்கி, புர்ர்ர் {சிரிப்பு}.

பபூன் 3 : சரியான துப்பாக்கி வச்சிருக்காண்டா இவன் (ஆமா).

பபூன் 2 : இது ரெட்டக்குழல் டுப்பாக்கிடா அ ஏஏ... (ஆஹாம்).

பபூன் 1 : டேய் தம்பி! கதைய ஆரம்பிக்கலாம்.

பபூன் 2 : ஏலே மொளு மொளு! எப்பப் பார்த்தாலும் அஞ்சு பைசான்னு கேவலப்படுத்தினெ... படுவா... சாணியப் பிதுக்கிப்பிடுவேன் (ஏலே வேண்டாம்பா).

பபூன் 3 : ஏய், அஞ்சு பைசா குடுடான்னா.

பபூன் 2 : ஆமா, கதைய ஆரவைய்யி.

பபூன் 1 : இன்னிக்கி வந்த வசூல்ல நமக்கு பங்கு.

பபூன் 2 : பங்கு... எத்தினிப் பங்கு வேணும்?

பபூன் 1 : ரெண்டு பங்கு வேணும்.

பபூன் 2 : ஒண்ணு ரெண்டு [அடிக்கிறான்] {சிரிப்பு}.

பபூன் 1 : என்னடா அது?

பபூன் 2 : இதான் பங்கு (சர்தான்). ஏல! உளுவத் தலையான்னு பேசாதடா (அப்ப ஓம்பேருதான் என்னா?) சுப்பிரமணியசாமி, கிளிக்குஞ்சி முதலாளி அப்படீன்னு சொல்லணும்! கிளிஞ்ச வாயான்னு சொன்ன... டுப்பாக்கில சுட்டுப் போடுவேன் {சிரிப்பு}.

பபூன் 1 : ஏய் தம்பி! ஆனால் இவ்வளவு நேரமாக தமாஷா நடத்னோம். ஆனால் இனிமேல் கதை ஆரம்பம். கதையின் வரலாறுகள் வந்து... இராவணன் சீதையைச் செறை எடுப்பதும், இராமர்மான வெரட்டிப் பிடிப்பதும், ஆனால் இராவண னுக்கும் ஸ்ரீ சடாயுக்கும் சண்டையும், ஆனால் இந்த விதமாக கதை ஆரம்பங்கள்... கடைசி முடிவு,... ஆனால், சடாயு அரசரை எடுத்து மோட்சங் கொடுப்பது ஸ்ரீ இராமர். ஆனால் இது வெறும் கதை ஆரம்பம். இதுக்கு இடை

யிடையில், ஆனால் தமாஷுகள் நடைபெறும். ஆனால் 'காமிக்கு' ஆட்டுக் கிடாய் சண்டை 'காமிக்கு'. ஆனால் இங்கு வந்திருக்கக்கூடிய வர்கள் சத்தமில்லாமல் அமதியுடனேயிருந்து கதை கேட்பதற்கு அனைவர்களுக்கும் வணக்க மாய்க் கேட்டுக் கொண்டேன்... பபூன் கோமாளி! (கோமாளி).

பபூன் 2 : அடேயப்பா. இது சொல்றதுக்கு இவ்வளவு நேரமா? நானாயிருந்தா அப்பவே சொல்லியிருப் பனே அப்பா (அடேங்கப்பா).

பபூன் 1 : ஏன் சொன்னாயென்ன? (ஏமிராப்பா).

பபூன் 2 : நீ தான் சொல்லிட்டயே.

பபூன் 1 : போடா மொட்டப்பயல [அடிக்கிறான்]
(ஏய் அடிக்காத அடிக்காத... ஏ அடிக்காதப்பா)

பாடல் : **காக்கைச் சிறகளிலே நந்தலாலா**
காக்கைச் சிறைகளிலே நந்தலாலா – உந்தன்
கரிய நிறம் தோணுதடா நந்தலாலா
காக்கைச் சிறைகளிலே நந்தலாலா
தேக்கும் கரங்களெல்லாம் நந்தலாலா – உந்தன்
தெய்வமொழி தோணுதடா நந்தலாலா

இராமர் : வருவாய்த் தம்பி லக்ஷ்மணா!

இலக்கு. : அண்ணா! அடியேன் வணக்கம் செய்து வருகிறேன்.

இராமர் : மங்களம் உண்டாகட்டும். அயோத்திமாநகரத்தை அரசு புரிய வேண்டிய தசரத சக்கரவர்த்தி குழந்தைகள்... ஆனால், இந்த சடாயு வனத்தில் வந்து நாங்கள் பர்ணகசாலை வீடுகள் கட்டியிருக்கும்

போது, இராவணனுடைய தங்கையாகிய சூர்ப்பநகை, கல்யாணம் முடிப்பதற்காக வர, அவளுடைய முதுகில் நான் எழுதிவிட... ஆனால், அவளைப் பிடித்து நீ மூக்கு, காதுகள் எல்லாம் நீ அறுத்து வந்தாய். தலைமேல் கைவைத்துக் கொண்டு நேர் தெற்கே போயிருக்கிறாள். எப்பேர்ப்பட்ட வீரமுடைய வர்களை அழைத்து வருவதாகவும் தெரிய வில்லை. நாங்கள் இருப்பதை அதிகம் உஷாராக இருக்க வேண்டும் தம்பி.

இலக்கு : அண்ணா! இதப்பத்தி நீங்கள் கலங்க வேண்டாம். எப்பேர்ப்பட்ட ஒரு ராட்சதர்கள் வந்த போதிலும், என்னுடைய மந்திர வாளுக்கு நான் அவர்களை... நான் இரையாக்கி விடு கிறேன். இதப்பத்தி நீங்கள் கலங்க வேண்டாம் அண்ணா! உஷாராயிருக்க வேண்டும்.

இராமர் : ஜானகி... ஆனால் ராட்சதர்கள் வாழும் வனங் கள்... ஆனால் அடிக்கொரு தரமாக பர்ணக சாலையை விட்டு வெளியே வரவே கூடாது.

சீதை : சந்தோஷம் பிரபு...

சூர்ப்பநகை : மோகம் கொண்டேன்
மூக்கிழந்தேன் அண்ணன்மார்களே!
அதிமானத்தோடு
காதிழந்தேன் அண்ணன்மார்களே!
அதிமானத்தோடு காதிழந்தேன் அண்ணன் மார்களே!
நீ இருக்கும் வனமதிலே அண்ணன்மார்களே!
நீ இருக்கும் வனமதிலே அண்ணன்மார்களே!
நான் எப்படிப் புலம்புவது அண்ணன்மார்களே!

அண்ணே!(ஏம்மா) அந்தச் சண்டாள பாதகன் இராமன், அவன் தம்பி லக்ஷ்மணன், சீதை மூணு

பேர்களும் பர்ணகசாலை வீடு கட்டியிருக்கிறார் கள். புதுசா வீடிருக்குதென்று நான் எட்டிப் பார்க்க (எட்டிப் பார்க்க) வாடியென்று கையைப் பிடித்திழுத்து, என்னைய மூக்க... ம்... ம்... (அழுகாத, அழுகாத, அழுகாத) நான்... என்னத்தச் சோளப் பொரி (என்னத்த சொல்லப் போறயா, என்னத்தச் சோளப் பொரியா?) அய்யோ மூக்கையும் அறுத்தான். நான்... என்னத்தச் சோளப் பொரி (அழுகாத... அம்மா அழுகாத... அழுகாத) அண்ணன்! முன்ன இருந்ததுக்கு இப்ப ரொம்ப அழகாயிருக்கிறேன். இப்பயாவது அந்த வேடன் ராமன் என்னைக் கல்யாணம் செய்ய மாட்டானா? அண்ணன்! (என்னமோ போய்ப்பாரு). எதற்கும் நான் கேட்டுப் பார்க்க வேண்டும் (கேட்டுப் பாரு). நாதா! (வா), பிராணபூபதி! (வா), அத்தான்! (வா).

இராமர் : யாரது? ஆனால் பர்ணகசாலை வீடுகளைத் தட்டக் கூடியவன் யார்? உன்னுடைய ஊர் எது? பேர்கள் எது? உள்ளதைச் சொல்.

சூர்ப்பநகை : சுவாமி! ஆள அடயாளம் தெரியவில்லையா? உங்களுடைய தம்பியாகிய (ஆமா) இளைய பெருமாள் மூக்கைக் காதை அறுத்து வந்தாரே, அந்த மோகினி நான் (ஓகோ... சூர்ப்பநகை) என் பேர் சூர்ப்பநகை என்று சொல்வார்கள்.

இராமர் : அப்படியா?

சூர்ப்பநகை : உன்னுடைய தம்பிதான் என்னைய அவமானப் படுத்தி விட்டார்கள். நீங்களாவது என்னையக் கல்யாணம் செய்யப்படாதா சுவாமி? (ஆகூம்... கோயில்ல).

இராமர் : இராட்சதியே! உன்னுடைய... நீ செய்யவந்த ஒரு அக்குறுமங்களுக்கு மூக்கு, காதுகள்லாம் நீ

பறிகொடுத்து வந்தாய். உன் உடன்பிறந்த அண்ணன்மார்களையும் அதனால் பறிகொடுத்து விட்டாய். மீண்டும் கல்யாணம் செய்வதற் காகவே வாதாடுகிறாய். மரியாதையாக வந்த வழியைப் பார்த்து ஓடிப் போ. இல்லை யென்றால் என்னுடைய தம்பியுடைய வீர வாளால் உன்னுடைய தலையானது அறுத்து விடுவான். போய்விடு... நிக்காதே... போ.

சூர்ப்பநகை : அத்தான். அவர் என்னை வெட்டுனாலும் சரி (வெட்னாலும் சரி), என்னையக் கொலை செஞ்சிட்டாலும் சரி (சரி), ஒங்கள விட்டுப் பிரிய மாட்டேன் சுவாமி! (அட, காமவெறி பிடிச்ச நாயே).

இராமர் : அப்படியா? தம்பி லக்ஷ்மணா! இந்த இராட்சதி யானவள் கேட்க மாட்டாள். உன்னுடைய மந்திர வாள் உருவி இவளுடைய தலையை அறுத்து விடு (விடாத... விடாத).

சூர்ப்பநகை : அஞ்ஞஞ்ஞோ (என்ன நொஞ்சஞ்ஞோ).

இலக்கு. : அண்ணா! இராட்சதியானவள் தப்பி விட்டாள். இனிமேல் வந்து விட்டால் என்னுடைய மந்திர வாளுக்கு இரையாக்கி விடுகிறேன். பயப் படாதீர்கள்.

சூர்ப்பநகை : ஆனால், என்னுடைய மூக்கு, காதுதான் பறி கொடுத்து விட்டேன். இனிமேல் இந்த இராம இலட்சுமணனை நான் சும்மாவா விடப் போகி றேன்? (என்ன செய்யப் போற?) என்னுடைய அண்ணன்மார்களை கரதூசனாதிப் படைகளை அழைத்து வந்து (வந்து), அவர்களை நான் கொல்ல வேணுமென்று நான் சொல்லி வந்தேன். அவர்களையும் கொன்று விட்டான். இதோ என்னுடைய அண்ணனான பத்துத் தலையும்

இருபது கையாயும் இருக்கிறான் இராவணேஸ்வரன் (இலங்கை வேந்தன்). இராவணனுடைய அரமனைக்குச் சென்று இல்லாத போறாமைகளை நான் எடுத்துச் சொல்லி, அந்தச் சீதையை, நான் சிறை எடுப்பதற்காகச் சொல்லப் போறண்டா அண்ணேன் (போம்மா போ! இலங்கைக்குப் போ).

பபூன் 2 : ஏம்மா! புது மாப்ளயத் தேட வந்தியா? எங்க... உங்க மூக்கு போச்சே... ஏ... ஏ... (ஏ மொட்டையா! அம்மா புதுப் பொண்ணு) அம்மா புண்ணு (பொண்ணு, பொண்ணு).

சூர்ப்பநகை : என்னடா அண்ணன்?

பபூன் 2 : இந்தா... நான் பேசற மாதிரியா நீ பேசுற... படுவா... அய்யா என்ன... சுப்பிரமணிய சுவாமி, கிளிக்குஞ்சு முதலாளி. நான் பேசுன மாதிரி பேசுன...டுப்பாக்கியால சுட்டுப் புடுவேன்... இப்ப எங்க போற?

சூர்ப்பநகை :இப்ப என்னுடைய அண்ணன் இராவணனுடைய அரமனைக்குப் போறேன்.

பபூன் 2 : உங்க அண்ணன்கிட்டப் போறயா? (ஆமா) போ. இங்க இருக்கிறவன பூரா வேக்காடு* வச்சுப் பூட்ட. உங்க அண்ணன் அங்க எதுக்கு உயிரோட இருக்கான்? (போ! அங்க போ). அவனையுங் கொண்டு வா. அவன் வாயிலயும் மண்ணப் போடுவோம்.

சூர்ப்பநகை : அண்ணன், மூக்கு எரியுதடா அண்ணன்.

பபூன் 2 : மருந்து போடுவமா? (வேண்டாம், வேண்டாம்)

பபூன் 1 : கொஞ்சம் போல போடுடா அண்ணன்.

பபூன் 2 : புர்ர்ர்... {சிரிப்பு}.

★ வேக்காடு = சாவு (பார்க்க.பக்.39, 250)

பபூன் 3 : மாப்ள அஞ்சி பைசா.

பபூன் 2 : போடா மொளு மொளு.

பாடல் : திரிலோகமும் புகழும் சுந்தர
திரிலோகமும்.... அ... அ... அ... அ...
திரிலோகமும் புகழும் சுந்தர
திரிலோகமும் புகழும் சுந்தர
வீர வீர தீர தீர
சூரன் நான் வந்தேன்
வீர வீர தீர தீர
சூரன் நான் வந்தேன்
சுத்த வீர... நல்ல வீர
சூரன் நான் வந்தேன்

பாவையாட்டி: இராவணனுடைய முதல் மந்திரி மகோதர மந்திரி. இராவணேஸ்வர மகாராஜாவுக்கு ஏற்பட்டது (ஏற்பட்டது), அறுபது பேர் மந்திரிகள், எக்கூர்ணவல்லபசேனை காலாட்கள். எல்லாம் இராட்சதப் படைகளாக இருக்கிறார்கள். மகோதர மந்திரி முன்பதாக வந்திருக்கிறார்.

இராவணன்: பின்பதாக, இராவணன் சிம்மாதனம் வருகிறார் கள். அமதியுடனிருங்கள்...

பாடல் : மன்னவனப்படி மலர்ந்ததப்படி – இதோ
வந்தேன் வந்தேன்
மன்னவனப்படி மலர்ந்ததப்படி – இதோ
வந்தேன் வந்தேன்
யார்ரா... சகோதரமான மகோதர மந்திரி! டேய்!

மகோதரன் : மகாராஜா! மகாராஜா! நர மனிதரும் குரங்குகளும் தவிர... சகல வரங்களெல்லாம் வாங்கிக் கொண்டு வீரராகயிருக்கின்றீர்கள் பிரபு (ஆமாம்). முப்பத்து முக்கோடி முனிவர்கள், நாற்பத்தி எண்ணாயிரங் கோடி ரிஷிமார்கள், சந்திரன், சூரியன், வாயு பகவான், அக்கினி பகவான், எமன் அத்தனை

பேர்களும், தாங்களிடம் அடிமையாக இருக்கின்றார்கள். முதல் மந்திரி... மகோதர மந்திரி... அடியேன் வணக்கம் செய்தேன் மகாராஜா.

இராவணன்: சபாஷ்! சபாஷ்! ஆஹ்ஹாஹ்ஹாஹ்ஹா சபாஷ்! ஆஹ்ஹாஹ்ஹா... டேய் மகோதர மந்திரி!

மகோதரன் : மகாராஜா!

இராவணன்: சிவபெருமானிடம் வாங்கிக் கொண்ட ஒரு வரங்கள்... அது உனக்குத் தெரியுமல்லவா?

மகோதரன் : தெரியும் மகாராஜா.

இராவணன்: எப்படி வரங்கள் வாங்கியிருக்கிறோம்? அக்கினி பகவான் நம்முடைய கோட்டைக்குள்ளாக என்ன வேலை செய்து வருகிறான்?

மகோதரன் : அக்கினிகளை மூட்டுகிறார் அக்கினி பகவான்.

இராவணன்: எமன்?

மகோதரன் : எதமர்மராஜன் மாட்டுக்கறியைச் சமைக்கிறார், கும்பகர்ணனுக்காக!

இராவணன்: சந்திரன், சூரியன்...?

மகோதரன்: வடக்கும் தெற்குமாக விலகி வருகிறார்கள் (அப்படியா).

இராவணன்: ஆனால் வாயு பகவான்...?

மகோதரன் : நம்முடைய அரமணை பூராகவே தூத்து*த் துப்புரவு செய்து கொண்டு வருகிறார்.

இராவணன்: ஹாஹ்ஹாஹ்ஹாஹ்ஹா...

மகோதரன் : ஆனால், சந்திரன் சூரியன் வடக்கும் தெற்குமாக விலகி வருகிறார்கள். வரங்குடுத்த ஈஸ்வரனும் ஈஸ்வரியும் உங்களுடைய பாதப் பணிவிடை செய்து வருகிறார்கள். நீங்கள் இருக்க வேண்டிய

★ தூத்து = குப்பைகளைக்கூட்டி/பெருக்கி (பார்க்க.பக்.305)

சிம்மாதனங்கள் பூராக அலங்கரணம் செய்து வைக்கிறார்கள்.

இராவணன் : சபாஷ்! சபாஷ்! ஹஹ்ஹஹ்ஹா. ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு மந்திரியை நான் காவலாக வைத்திருந்தேன். அந்த மந்திரிமார்கள் எங்கே? (எங்கே?)

மகோதரன் : வரக் கூடிய நேரமாகி விட்டது.

இராவணன்: அழைத்து வா அவர்களை (இதோ வருகிறார்கள்).

மகோதரன் : மகாராஜா உங்களை அழைத்துக் கொண்டு வருவதாகச் சொல்லியிருககிறார். அழைத்ததுக் குப் பதிலாகச் சொல்ல வேண்டும். போய் வாருங்கள்... வருகிறார்கள் மகாராஜா.

இராவணன் : ஹஹ்ஹஹ்ஹா. டேய் உன்னைய நான் எந்த இடத்தில் காவல் வைத்திருந்தேன்.

மந்திரி : உங்களுடைய தம்பி... கும்பகர்ணன் மகாராஜா விடம் காவலாக இருக்க வேண்டுமென்று சொல்லித் தெரியப்படுத்தி வந்தீர்கள்.

இராவணன்: என் தம்பி கும்பகர்ணனுடைய ஒரு வீரம், ஒரு பராக்கிரமங்கள் எப்படி?

மந்திரி : அவருக்கு ஏற்பட்டது ஆறு மாசம் ஒறக்கம். ஒரு நாளைக்கு முழிப்பு (அப்படியா). ஆறு மாசத்துக்கு உண்டான சாப்பாடு ஒரு நாளைக்கிச் சாப்பிடுகிறார்.

இராவணன்: எப்படிச் சாப்பிடுகிறான்?

மந்திரி : அறநூறு சேவிடை சோறுகள், லட்சம் கிடாய்கள், மாட்டிறைச்சிகள், பன்னிராயிரம் பீப்பாய்த் தண்ணீர்கள்... இதுகளையெல்லாம் சாப்பிட்டு மைநாக மலையப்போல் ஒறங்கப் போயிருக்கிறார் கும்பகர்ணன்.

இராவணன்: சபாஷ்!

மந்திரி : கும்பகர்ணனை வெல்லக் கூடியவர்கள் இந்த உலகத்தில் யாருமில்லை மகாராஜா (ஒருவரு மில்லை).

இராவணன்: சபாஷ்! சபாஷ்... சபாஷ்... ஹஹ்ஹஹ்ஹா.

மந்திரி : போய் வருகிறோம்.

இராவணன்: யார்ரா அக்கினிக் கண்ணன் மந்திரி? (டேய் அக்கினிக் கண்ணு).

அக்கினி. : ராஜாதி ராஜனே! ராஜ மார்த்தாண்டனே! கோலா காலனே! அடியேன் வணக்கம் செய்தேன்... ஆனால்... அக்கினிக் கண்ணன் மந்திரி.

இராவணன்: உன்னை நான் எந்த இடத்தில் காவல் வைத்திருந்தேன்?

அக்கினி. : உங்களுடைய மகனாகிய இந்திரசயத்தனிடம் நீங்கள் காவல் பார்க்க வேண்டுமென்று தெரியப்படுத்தி வந்தீர்கள். உங்கள் மகனாகிய இந்திரசயத்தனுக்கு ஏற்பட்டது பிரம்மாஸ்திரம், ஆனால், திருமலயாகம், நாகபாஷங்கள். இந்த மூன்று யாகத்தில் அவரைக் கொல்லக் கூடியவர்களுக்கு எப்பேர்ப்பட்ட வீரமுனிவர்க ளாக இருக்க வேண்டும்? பதினான்கு வருஷம் பதினான்கு நாள் பதினான்கு நாழிகை ஊண் உறக்கம் இல்லாமல் ஒரு பிரம்மச்சாரியாக இருக்கக் கூடியவர்கள்தான் இந்திரசயத்தனைக் கொல்ல முடியும். இல்லையென்றால் கொல் வதற்கு முடியாது மகாராஜா.

இராவணன்: பேஷ்! பேஷ்! சபாஷ்! ஹாஹ்ஹஹ்ஹா. அக்கினிக் கண்ணன் மந்திரி மகா திறமை படைத்தவன். மகா கெட்டிக்காரன். மகா சாமர்த்தியசாலி (ஆமாம்). போர் வரும்வரை அதிஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

அக்கினி. : உத்தரவு.

இராவணன்: யார்ரா நான்காவது மந்திரி. அடே கெந்துகால் மந்திரி! டேய் (கெந்துகால்). டேய் கெந்துகால்!

கெந்துகால் : ராஜாதி ராஜனே! ராஜ மார்த்தாண்டனே! ராஜாதி ராஜனே! நாசமாப் போனவனே! (டேய் ராஜாதி ராஜனே! ராஜ ராஜ கம்பீரனே) அடியேன் வந்தனம் செய்தேன் பிரபு.

இராவணன்: டேய் உன்னைய நான் எந்த இடத்தில் காவல் வைத்திருந்தேன்? அரும்சிறை அசோக வனத் தில் எப்படிக் காவல் புரிந்து வருகிறீர்கள்?... ... [இசை] மகோதர மந்திரி!

மகோதரன் : மகாராஜா!

இராவணன்: நான் என் அரமணைக்குள்ளாக சிம்மாதனத்தில் தேஜ விஜாரணை செய்திருக்கும்பொழுது... ஒரு... யாரோ ஒரு பெண் அழுது புலம்பிக் கொண்டு வருகிறாளே! அது யாரப்பா அவர்கள்?

மகோதரன் : யார் எவரென்றும் தெரியவில்லை மகாராஜா.

இராவணன்: அதைச் சீக்கிரமாகவே விசாரித்து வரவேண்டும்... [இசை]

மகோதரன் : விசாரித்து வருகிறேன்... அம்மா இங்க வாங்கள்.

சூர்ப்பநகை : என்ன மந்திலி?

மகோதரன் : என்ன மந்திலியா... என்ன மந்திரி என்று கேளுங் கள்*.

சூர்ப்பநகை : என்ன மந்திலி?

மகோதரன் : சரி. எப்படியும் சொல்லிட்டுப் போ. மகாராஜா சிம்மாதனத்தில்... இராவணேஸ்வரன் சிம்மாதனத் தில் இருக்கும்போது, பெண்களுடைய சத்தமே

★ 'ஏய் போமாட்ட இந்தப் பக்கம்' - எட்டிக்கூடாரத்துக்குள் பார்க்கின்ற பார்வையாளர் சிலரை விரட்டுகிறார்.

ஆகாது. நீங்கள் அய்யோ அப்பாவென்று அலறிக்கொண்டு வருகிறீர்கள். அரசர் அதைக் கேட்டு அது யார் எவரென்று கேட்டு வருவதாகச் சொல்லியிருக்கிறார். நீங்கள் யாரம்மா? உன்னுடைய ஊர் எது? உன்னுடைய பேர்கள் என்ன? உன்னுடைய தாய் பேர் என்ன? உன்னுடைய அப்பாவுடைய பேர்கள் என்ன? உள்ளதச் சொல்லுங்கள். இப்படி மூக்கறுத்தது யார்? தலை ரோமங்களை அறுத்தவர்கள் யார்? ஆனால்... காதுகளை அறுத்தவர்கள் யார்?

பபூன் 2 : ஒங்க சித்தப்பனும் ஒங்க அப்பிச்சியும் {சிரிப்பு} இரண்டு பேருஞ் சேந்து அறுத்து, சாராயங்குடிக்க வறுக்கக் கொண்டு போய்ட்டாங்க, வருவலுக்கு! (போடா டேய். அரசாங்கத்தினுடைய பொல்லாப்பு உனக்கு எதுக்கு?)

பபூன் 3 : ஏய் அஞ்சி பைசா.

பபூன் 2 : போடா மொளு மொளு [அடிக்கிறான்]

சூர்ப்பநகை : அப்பா மகோதர மந்திரி! என்னை யார் யார்னு உனக்குத் தெரியவில்லையா? மூன்று மதி உலகத்தையும் அடக்கி அரசு புரிய வேண்டிய அந்த இராவணேஸ்வரனுடைய சகோதரி. என் பேர் சூர்ப்பநகை. அந்தச் சடாயு வனத்தில் சென்று வனங்களைப் பார்த்து வருமிடத்தில் நர மனிதர்கள் பர்ணகசாலை வீடு கட்டியிருக்கிறார்கள்... இராமன், லக்ஷ்மணன், சீதை மூன்று பேர்களும். புதுசா வீடிருக்குதென்று நான் எட்டிப் பார்க்க, வாடி என்று கையைப் பிடித்து இழுத்து, என்னைய மூக்கைக் காதறுத்துப் பங்கம் செய்திட்டாண்டா மந்திலி... (கவலப் படாத, கவலப்படாதம்மா).

மகோதரன் : ஆ! என்ன சாமர்த்தியமாக இருக்கும்? மூன்று மதியுலகத்தையும் அடக்கி அரசு புரிய வேண்டிய

மகாராஜாவினுடைய சகோதரி என்று சொல்லி விட்டால், உலகமே கிடுகிடு கிடுகிடுன்னு பதற வேண்டும் (ஆமா). அவ்வளவு வரங்கள் வாங்கி யிருக்கிறார் அரசர். இப்படி அவமானப்படுத்தி விட்டார்கள். ஆனால்... சூர்ப்பநகை இந்த இடத்தில் உட்காருங்கள். அரசரிடம் நான் தெரியப்படுத்தி விடுகிறேன்... [இசை]

இராவணன்: யார் வந்தது அங்கே?

மகோதரன் : உங்களுடைய தங்கை சூர்ப்பநகை வந்திருக்கிறாள்.

இராவணன்: எதற்காக?

மகோதரன் : அந்தப் பஞ்சவடிகள் சென்று வனங்களைப் பார்க்கப் போன இடத்தில் நர மனிதர்கள் வாடி என்று கையப் பிடித்திழுத்து, மூக்குக் காதுகள்-லாம் அறுத்துப் பங்கப்படுத்தியிருக்கிறார்கள் மகாராஜா.

இராவணன்: உண்மைதானா?

மகோதரன் : உண்மைதான். போய்ட்டு வாங்க.[இசை]

இராவணன்: ஆ! என் தங்கை... அதோயிருக்கின்றாள்.

....

தங்கையே ஏ... ஏ... தங்கையே ஏ... ஏ...

அம்மா... அ... அ...

உன் மூக்குகள் எங்கேயிருக்குது தங்கா ஆ... ஆ...

உன் காதுகள் எங்கேயிருக்குது தங்கா ஆ... ஆ...

உன் அழகுகளை நான் எப்போது நான் காண்பேன்

யாரம்மா உனை யாக்கினை செய்தவர்?

என் அண்டம் பயமில்லாமல் அருமையான தண்டம்

யாரம்மா உனை ஆக்கினை செய்தவர்?

தங்கை சூர்ப்பநகை... சகோதரி! தங்கை!

சூர்ப்பநகை : நான் என்னத்தச் சோளப் பொரி... (அழுகாத, அழுகாத, அழுகாத) அண்ணன்! வட தேசத்தில் உண்டான இராமனை, அவன் தம்பி லட்சுமணன், சீதை மூணு பேர்களும், அந்தப் பஞ்சவடியில் பர்ணகசாலை வீடு கட்டியிருக் கிறார்கள். நான் ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்க, வாடி என்று கையைப் பிடித்திழுத்து என்னுடைய மூக்கு, காது, தலை ரோமங்க ளெல்லாம் அறுத்து விட்டார்கள். அண்ணா... ம்... ம்... ம்...

இராவணன்: ஆ! என்ன சாமர்த்தியாக இருக்கணும். ஏடா மகோதர மந்திரி!

மகோதரன் : மகாராஜா!

இராவணன்: தங்கையை அவமானப்படுத்தி வந்திருக்கிறார்-கள் நர மனிதர்கள். அதிசீக்கிரமாகப் படை யெடுத்து வேடன் இராமனுடைய தலையை வெட்ட வேண்டும்... புறப்படு!

சூர்ப்பநகை : அண்ணன்! இந்த ராமன வெட்ட வேண்டாம். கொல செய்ய வேண்டாம்.

இராவணன்: என்ன செய்யலாம்? நீயே சொல் பார்ப்போம்.

சூர்ப்பநகை : அந்த ராமன் கைகளை... நான் மூக்குக் காதுகளையெல்லாம் அறுபட்டு நான் எவ்வளவு கஷ்டப்படுகிறேன்... அதைப்போல் வேடன் ராமனுடைய மனைவி,... ஆனால் சீதாலட்சுமி இருக்கிறாள்... அவளை நீ செறை யெடுத்துக்

கொண்டு வந்து விட்டால் நான் எவ்வளவு கஷ்டம் அடைகிறேனோ, அதைப் போல் வேடன் ராமன், தன்.... ஆனால், மனைவியாகிய சீதை அழுது விகாரமடைந்து, ஆனால் கணவன் காணாமல் ஏக்கமாகவேயிருந்து அவளுடைய பிராணன்களை விட்டு விடுவாள். உயிரானது விட்டு விடுவாள்.

இராவணன்: சபாஷ்! சபாஷ்! சபாஷ்! சபாஷ். ஹஹ்ஹஹ்ஹா மகா தந்திரங்கள். மகா ராஜ தந்திரங்கள். ஆனால் தெரியப்படுத்தி வந்திருக்கின்றாய், தங்கையே! அந்தச் சீதையை நான் சிறையெடுத்து விட்டால், நீ அழுது துயரமுற்றது போல் சீதையும் அழுது துயரமடைந்து... ஆனால், தற்கொலையாகவே மாண்டு விடுவாள் (ஆமாம்). பழிக்குப் பழி. சரியாகவே முடிந்து விடும். ஹஹ்ஹஹ்ஹஹ ஹாஹ்ஹ... தங்கை! அந்தச் சீதையை நான் எப்படிச் சிறையெடுப்பது?

சூர்ப்பநகை : அண்ணே! அந்தச் சீதையும் ராமனும் எப்பவும் சூதாட்டம், சொக்காட்டம் விளையாடுகிறார்கள் பர்ணகசாலை முன்பதாக! மான் மீதில் ரொம்பப் பிரியப்படுகிறாள் அந்தச் சீதா லட்சுமி. நம்முடைய மாமன் மாரீசன் இருக்கிறானே, அந்த மாரீசனை, ஒரு மானாக வேஷத்தைப் போடச் சொல். நீ ஒரு பண்டாரமாக வேஷத்தை எடுத்து அந்த மாரீசனைத் துள்ளி விளையாடச் சொல். சீதையானவள் மான் பிடித்துத்தர வேண்டு மென்றே சொல்லிவிடுவாள். இராமன் மான் பிடிப்பதற்கு ஓடிப் போவான்... வேடராமன். தம்பி லட்சுமணன் சீதை அருகில் காவல் பார்த்துக் கொண்டு இருப்பான். மாரீசனை, சீதாவபயம் லட்சமணா அபயமென்று அபாய சத்தங்கள் போட வேண்டுமென்றும் சொல்லிவிடு. அந்த மாரீசன் போட்டு விடுவான். அண்ணனுக்கு ஆபத்து வந்துவிட்டதென்று சீதையை

விட்டு விட்டு (சீதையை விட்டு விட்டு), ஆனால் ராமனைத் தேடுவதற்கு ஓடிப் போவான். சீதை தனியாக இருப்பாள். நீ பண்டாரமாகப் பரதேசி வேஷங்களை எடுத்து, அந்தச் சீதையைத் தூக்கிட்டு வந்திரனும் அண்ணே.

இராவணன்: சபாஷ்! சபாஷ்! சபாஷ்! சபாஷ்! ஹஹ்ஹஹ்ஹா. மகா தந்திரங்கள். மகா ராஜ தந்திரங்கள் படித்து வந்திருக்கிறாள் என் தங்கை. சகோதரி... தங்கையே! அப்படியே நான் அந்தச் சீதையை ஜெஹை எடுத்து வருகிறேன். கவலைப்பட வேண்டாம். ஆ!

சூர்ப்பநகை : அண்ணன்! அந்தச் சீதையை சீக்கிரமாகத் தூக்கிட்டு வரனும்.

இராவணன் : சரி. நீ போமா.

சூர்ப்பநகை : சட்டுப்புட்டுன்னுத் தூக்கிட்டு வரனும் (போம்மா போ).

இராவணன்: சரி, நீ கவலைப்படாதே. போ!

சூர்ப்பநகை : சீக்கிரமாகத் தூக்கிட்டு வரனுமடா அண்ணன்.

இராவணன்: வருகிறேன் போம்மா. டேய் மந்திரி!

மகோதரன் : மகாராஜா!

இராவணன்: தங்கையை அழைத்துக் கொண்டு போய், ஆனால் வேண்டிய... ஆனால், காயங்களா யிருக்கிறது. வேண்டிய மருந்துகளைப் போட்டு, அந்த மூக்கு, ஆனால் காயங்கள் பூராக... ஆனால் சுத்தப்படுத்தி விடுங்கள் (போ) போ.

பபூன் 1 : வாம்மா. வாங்க பெரியாஸ்பத்திரிக்குப் போவோம்.

பபூன் 2 : இருக்கிற மூக்க அறுத்து, உள்ள காரத்துணி வச்சித் திணிச்சிருவோம்.

பபூன் 1 : வாம்மா போவோம்.

பபூன் 2 : நாங் கூட்டிக்கிட்டு வர்றேன். நீ போ! நீ வாம்மா. போவோம் வா. மெட்ராசு பெரிய ஆஸ்பத்திரிக்-குப் போவோம். அங்க கொண்டு போய் உன்னைய... மோர்மார்க்கட்ல உன்னைய வித்துப்பூட்டு நாங்க லாரி ஏறி வந்திருவோம் (அதுதான்). இருந்தாவது பஸ்ல வந்திருவோம் நாளக்கே!

சூர்ப்பநகை: அண்ணன்! மூக்க எரியுதடா அண்ணன்.

பபூன் 2 : எங்க எரியுது? [அடிக்கிறான்].

பபூன் 3 : மாப்ள அஞ்சு பைசா.

பபூன் 2 : மாப்ள மொளு மொளு... எப்பப் பார்த்தாலும் அஞ்சு பைசான்னு கேவலப்படுத்றானே [அடிக்கிறான்]. வராத... கிட்ட வராத.

இராவணன்: தங்கை! என்னுடைய மாமன் மாரீசன் இருக்க வேண்டிய அரமணைக்கு நான் போய் வருகிறேன்.

பாடல் : **நீல மாரீசன் சூரன் வந்தானே**
தேவர் கையால் அடிபட்ட
கவரிமான் வேடமிட்ட
தேவர் கையால் அடிபட்ட
கவரிமான் வேடமிட்ட
நீல மாரீசன் சூரன் வந்தானே!
கவரி மானான
நீல மாரீசன் சூரன் வந்தானே

பாவையாட்டி: தாடகை மகன் மாரீசன் இவர்தான். ஆனால் இவன் பேரு வந்து மாரீசன். இவருடைய அண்ணம் பேரு சுதாராட்சதன். இவர்கள் அண்ணன் தம்பி இருபேர்கள். இராமர் பிறந்து ஏழு வயதில், அந்தத் தாடகையைக் கொல்வதற்காக விஸ்வாமி-த்திருடைய முன்பதாகப் போய், அந்தத் தாடகை-யைக் கொல்லும் பொழுது, இவன் 'இராமா'

என்றே போனவனை, இவன் நெஞ்சிலே ஒரு அம்புகளைப் போட்டு, ஏழு கடலுக்கு அப்புறத்தில் கொண்டு வந்து தள்ளிவிட்டார் அந்த ஸ்ரீ ராமர். அதிலிருந்து இன்று வரையிலும் ராம மந்திரம் படித்துக் கொண்டு வருகின்றான். இந்தச் சமயத்தைப் பார்த்த இராவணன் மான் வேஷம் போட வேணுமென்று சொல்வதற்காக வருகிறான் இராவணேஸ்வரன்.

மாரீசன் : **இராமா... இராமா... இராமா... இராமா.**
ராம ராம ராம சீதா
ராம ராம ராம சீதா
ராம ராம ராம சீதா
ராம ராம ராம ஜெய
ராம ராம ராம்.

இராவணன்: ஹஹ்ஹஹ்ஹா. தாடகை மகன் மாரீசன், 'இராம' மந்திரம் படித்துக் கொண்டு வருகிறான். மதுவன மாரீசா!

மாரீசன் : யாரப்பா அது?

இராவணன் : இராவணேஸ்வரன் வந்திருக்கிறேன். இராவணன். திரும்பிப் பார்.

மாரீசன் : அந்த இராமருடைய பூஜையைக் கெடுக்க வேண்டாம். இன்னுங் கொஞ்சம் நேரம் போய் விட்டால் இராமருடைய மந்ரங்கள் முடிந்து விடும். இரண்டாவது, உன்னுடன் நான் கண்டு பேசுகிறேன். இந்த சமயத்தில் என்னை *ஒபத்திரவப்படுத்த வேண்டாம் இராவணேஸ்வரா.

இராவணன்: டேய்! திரும்படா என்று சொன்னால் ராம மந்திரம் படித்து வருகிறாயா? எனக்கு மேலான ராமனா அந்த ராமன். எனக்கு மேலான கடவுளா அந்த வேட ராமன். ஹஹ்ஹஹ்ஹா திரும்படா சீக்கிரம். திரும்படா.

★ ஒபத்திரவம் = தொந்தரவு

மாரீசன் : அடப்பாவி. அந்த ராமருடைய மந்திரத்தை எதற்காக நீ கெடுத்து வந்தாய்? நான் என்ன குற்றம் செய்தேன் ராவணேஸ்வரா! நீ இருக்க வேண்டிய அரமணையெ விட்டு இவ்வளவு தூரமாக வந்த காரணமென்ன?

இராவணன்: மாமா! மாரீசா! ஏய் சபாஷ். சபாஷ். ஹஹ் ஹஹ்ஹா... மகா சாமர்த்தியம் உடையவன். மாமா மாரீசா! உன்னுடைய சின்ன ஓதவியை நாடி நான் வந்திருக்கிறேன்.

மாரீசன் : ராவணேஸ்வரா! என்னுடைய உதவிகள் உனக்கு என்ன தேவை. சொல் பார்ப்போம்.

இராவணன்: என்னுடைய தங்கை சூர்ப்பநகை, அந்தப் பஞ்ச வடியில், பர்ணகசாலை வீடுகள் கட்டியிருக் கிறார்களாம், வேட ராமன், லட்சுமணன், சீதை மூன்று பேர்களும்! அந்தச் சீதையை நான் ஜிறை எடுக்க வேண்டும்... ஒரு மானாக வேஷங் களைப் போட்டு!

மாரீசன் : அடே சண்டாளா! அடே ராவணேஸ்வரா. இருந்திருந்தும் யாருடைய பொல்லாப்புக்களை இழுத்து வருவதாக நீ மனதிலே நினைத்து வந்திருக்கிறாய்? அந்த ராமரைக் கொல்லக் கூடியவர்களும், ராமரை ஏமாத்தக் கூடியவர் களும், ராமருடைய மனைவியை நீ ஜெறை யெடுப்பதாகச் சொல்கிறாயே... உன்னுடைய லெங்கைதான் பிழைத்து விடுமா? ஆக, நீ தான் உயிரோட இருந்து விடுவாயா? என்னுடைய அங்கங்களெல்லாம் பதறுகிறது. என் மேனிக ளெல்லாம் பம்பரம் போலவே ஆடுகிறது. ராவணேஸ்வரா, அந்த இராமர் என்று சொன்னவுடனே 'இராமா'!

பாடல் : சாகாத தாடகையை
சாகாத தாடகையை
ஒரு கணையால் கொன்றவர்

வீணரை விலக்கழிப்பவர் - அட ராவணா
வீணரை விலக்கழிப்பவர்
அப்பப்பா ராமரென்றால்
அய்யய்யோ ராமரென்றால்
அங்கம் பதறுதே
அங்கெல்லாம் செல்லக் கூடாதே - ஏ ராவணா
அங்கெல்லாம் செல்லக் கூடாதே!

வம்பாகக் கெட்டுப் போக வேண்டாம். அந்தச் சீதையுடைய ஒரு நினைவுகளை விட்டு விடு. உனக்குப் பெண்களில்லையா? வைப்புகள் கிடையாதா? சொந்த மனைவி... பட்டத்து ராணி மண்டோதரி இருக்கிறாள். அறுபது பேர் வைப்புகள் இருக்கிறார்கள். இவ்வளவு பெண்களை வைத்து நீ அரசு புரிந்தால் காணாதா? (போதும்). அந்தச் சீதையுடைய ஒரு ஞாபகத்தை விட்டு விடு. வம்பாக உன்னுடைய லெங்கை மண்ணொடு மண்ணாகவே போய்விடும் ராவணேஸ்வரா. நான் சொல்வதைக் கேள்.

இராவணன்: டேய்! மானாக வேஷத்தைப் போடடா என்று சொன்னால், எனக்கே புத்திமதிகள் சொல்லுகிறாயா? ஏய் மாரீசா! மான் வேஷம் போடுகிறாயா? இல்லை என் வீரவாளுக்கு நீ இரையாகப் போகிறாயா? (வேண்டாம்) ஹாஹஹ்ஹஹ் ஹா.

மாரீசன் : பெண்ணாசை உன்னை விடுவது கிடையாது. ஆனால் கெட்டவர்கள் ஒருவரும் கிடையாது. பெண்ணாசை பத்திப் போனவர்கள்... அநேக கோடி ஜனங்கள்... அரசர்கள் மரணமடைந்திருக்கிறார்கள். சனீஸ்வர பகவான் உன்னுடைய இடது புஜத்தில் உட்கார்ந்திருக்கிறார். சனியன் பிடித்து விட்டது. உன்னுடைய உயிரு போனாத் தான் சனியனும் உன்னை விட்டு விலகிப் போகும். அது வரையிலும் சீதை மேல் உனக்கு

ரொம்ப ஆசையாகத் தானிருக்கும் ராவணேஸ்வரா! ஆனால் நீ, மான் வேஷம் போடவில்லையென்றால் உன்னுடைய மந்திர வாளால், என்னைய நீ வெட்டி விடுவாய். போட்டு விட்டால், என்னைய நீ உயிரோடு விட்டு விடுவாயா?

இராவணன்: ஓ! மான் வேஷம் போட்டால் நீ உயிர் தப்பித்துக் கொள்வாய். மான் வேஷம் போடவில்லை... என் வீர வாளுக்கு நீ இரையாகிப் போய் விடுவாய்... ஜாக்கிரதை!

மாரீசன் : பயப்படாதே. மான் வேஷம் போடுகிறேன். அட, உன் கைல இறந்தால் நரகத்ல போய்ச் சேர வேண்டும். அந்த இராமர் கையில் இறந்தால் நல்ல மோட்சம் வாங்கலாம்... தெய்வ லோகத்தில்! மான் வேஷம் போடத்தானே வேண்டும் (ஆமா). நான் போடுகிறேன்.

பாடல் : **மாரீசன் வந்தெடுத்தார் - நல்ல**
மான்போல வடிவெடுத்தார் - அவர்
மானாக வடிவெடுத்தார்
மாரீசன் வந்தெடுத்தார் - நல்ல
மான்போல வடிவெடுத்தார் - அவர்
மான்போல வடிவெடுத்தார்

ராவணேஸ்வரா! இதோ நான் மான் வேஷம் போட்டிருக்கிறேன் பார்.

இராவணன்: சபாஷ். சபாஷ். ஹஹ்ஹஹ்ஹா. மகா தந்திரங்கள். மகா மாயா ஜாலங்கள் படைத்தவன் மாரீசன். ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா. இதோ என்னுடைய பண்டார வேஷம், பரதேசி வேஷங்களைப் பார்.

பாடல் : **நானோர் பரதேசி**
நடக்க முடியவில்லை வயசாச்சி

நானோர் பரதேசி
நடக்க முடியவில்லை வயசாச்சி

எப்படி என்னுடைய பண்டார வேஷம்?

மாரீசன் : ரொம்பப் பொருத்தமாக இருக்கிறது ராவணேஸ்வரா (ஆமா).

இராவணன்: பத்துத் தலைய மறைத்து, ஒரு தலைய வைத்திருக்கேன். இருபது கைகளை மறைத்து, இரண்டு கை, தாடி, தலைஜடை, லங்கோடுகள், மிதியடி, ஜோல்னாப்பை, பாம்பா, ஜோலிக்கி, இதுகளெல்லாம் நான் வைத்திருக்கிறேன். திருவோடுகள்... பாதாள ரதம்! திருவோடு மாதிரியா வைத்திருக்கிறேன். (அப்படியா?) மாரீசா! உன் உயிர் போய்விடுமென்று நீ ரொம்ப வருத்தப்படுகின்றாயா?

மாரீசன் : ரொம்ப நாள் கவலைப்பட்டு... ஆனால் கவலைப் பட்ட வண்ணமாகத்தான் இருக்கிறேன்.

இராவணன்: கவலைப்படாதே. உன் உயிரை நான் காப்பாத்துகிறேன். ராமனும், சீதையும், சூதாட்டம், சொக்காட்டம் விளையாடுவாங்களாம். அப்ப நீ துள்ளி விளையாட வேண்டும். சீதையானவள் உன் மீது பிரியப்பட்டு, மான் பிடித்துத் தரவேண்டுமென்று கணவன் ராமனிடமே சொல்லி விடுவாள்... சீதை. சீதைச் சொல் தவறாமல்.... மனைவி சொல் தவறாமல், வில்லெடுத்து உன்னை விரட்டுவதற்கு ஓடி வருவான் இராமன். கையிலே கிடைக்காமல் வெகு தூரத்திலே போய் 'சீதா அபயம்', 'லெட்சுமணா அபயம்' என்று அபாயச் சத்தங் களைப் போட்டு விடு. சீதாவைக் காவல் காத்துக் கொண்டிருக்கிறானே லட்சுமணன், அண்ணனுக்கு ஆபத்து வந்துவிட்டதென்று சீதையை விட்டு விட்டு அண்ணனைத் தேடுவதற்கு ஓடிப்

போவான். சீதை தனியாயிருப்பாள். நான் தூக்கிக் கொண்டு வந்து விடுகிறேன். நீயும் வந்துவிடலாம். நானும் வந்து விடலாம். எப்படி என்னுடைய ராஜ தந்திரங்கள்? (ஆகா பரவாயில்லை).

மாரீசன் : அதான் முடியாது. அட எப்பேர்ப்பட்ட ஒரு தந்திரம், மந்திரம், மாயா ஜாலங்கள் செய்தாலும், அந்த ராமர், கையிலே கிடைக்கவில்லையென்றால் அந்த ராமருடைய அம்பு இருக்கிறதல்லவா, எங்க போனாலும் என்னைய விடாது. கண்டிப்பாய் என் தலைய வெட்டுவதற்குத் தயாராய்க் காத்திருக்கும் (யாரப்பா பின்னால?) என் உயிரை ஒனக்கு என்று உபகாரம் பண்ண... உதவி செய்யப் போகிறேன் தெரிய வருமா? மயானக் கரையில் போய் இடம் பாத்து வைத்திருக்கிறேன்.

இராவணன்: அந்தக் கவலை உனக்குத் தேவையில்லை. பெறப்படு போவோம்.

மாரீசன் : புறப்படுங்கள்.

பபூன் 2 : ஏல மாங்காக் கொட்டை பாரடா... மாங்காக் கொட்டை பாரடா (அட மாங்காக் கொட்ட இல்லடா, மான்குடி) மாங்காக் கொட்ட பாரடா. ஏய்! பண்டெருமயப் பாத்தியா... பண்டெரும (ஏய் பண்டாரம்ப்பா பண்டெருமயில்ல) ம்... பரதேசி (பரதேசி, பரதேசி) பரதேசி (ஆமாம் பரதோச). ஏ! பரதோச, ரோஸ்ட் தோச (பரதேசி டான்னு சொன்னா பரதோசமா). இவன்... யாரு குடிகெடுக்க ஆண்டி வேஷம் போட்டுக் கிட்டான்? (அவங்குடி கெடுக்க அவனே ஆண்டி வேஷம் போட்டுக்கிட்டான்.) இப்ப எங்க போறாங்க? (பஞ்சவடி போறாங்க. சீதையை சிறை எடுக்கப் பேறாங்க) அங்குதான் வரனும். வாங்க ஒங்க டொப்பியக் கழட்டி விடுதேன்.

இராவணன்: மாரீசா! புறப்படு. சடாயு வனம்... பஞ்சவடி ஆசிரமத்துக்குச் செல்வோம்.

பபூன் 2 : ஏய்! எங்கேயோ ஓடிப் போய்ட்டாங்களே! (அட பஞ்சவடி போனாங்களப்பா) எதுக்கு? (சீதையை செறை எடுக்க) சீதைய செறை எடுக்கவா? (ஆமாம்).

பபூன் 1 : அவக எங்கவும் போயிட்டுப் போறாங்க. ஒனக்கென்னடா உளுவத்தலப் பயலே!

பபூன் 2 : ம்ம்... உளுவத்தலையான்னு பேசாதடா படுவா. அண்ணன் சுப்பிரமணியசுவாமி, கிளிக்குஞ்சு முதலாளி... அட அழகா, அட செகப்பா அப்படின்னு சொல்லு. பெறகு தைர்யமாப் பேசு னேன்னா குண்டீல நான் சுட்டுப்புடுவேண்டா. {சிரிப்பு}.

பபூன் 1 : எரும மாட்டுப் பயலே! அகராதியப் பாத்தியா அந்தப் பயலுக்கு!

பபூன் 2 : நிலவப் பாத்து மானம் தொடாதே (சே! சே! சே! சினிமாப் பாட்ட வேற பாடுறாண்டா இவன்).

பபூன் 1 : நெலமப் பாத்து... (நிலவைப் பாத்து வானம் சொன்னது என்னையத் தொடாதேங்கிறான்).

பபூன் 2 : நிலவப் பாத்து...

மானம் சொன்னது தொடாதே (அடடே)

ஆம்பளைங்களப் பொம்பளைங்கத் தொடாதே (அகராதிப் புடிச்ச பயா)

பபூன் 1 : நல்ல பாட்டுப் பாடுறாண்டா இவன்

பபூன் 2 : இதான் நாகரீகப் பாட்டு. நாகரீகம்... நவநாகரீக உலகப் பாட்டு.

பபூன் 1 : இதான் பாட்டாக்கும்.

பபூன் 2 : இதான் ரசிக்குது. இதான் இன்ரெஸ்ட். இனா ரெனா குனா இன்ரெஸ்டா இருக்குமடா நொண்ணே {சிரிப்பு} (சரி, இதெல்லாம் புடிக்காது. வேற பாட்டு அழகா சினிமாப் பாட்டுப் பாடு). ம்... ம்... ர்ர்... (இதென்ன கழுத கனச்ச மாதிரி) இது வந்து... தொண்டையச் சரிப்படுத்துறது. தொண்டைய சீர்திருத்தம் பண்ணிக்கிடறது. சீர்திருத்தம் பண்ணுறது சீர்திருத்தம்.

பபூன் 1 : சீர்திருத்தம் பண்ணுறதா... சீர் திருத்தம் பண்ணுறதா (அடத் தொண்டயத் தீட்டிக்கிடுறேம்பா).

பபூன் 2 : அப்படித் தீட்டினா அருமையா ராகம் வரும். கர்... கர்ம்... கர் (ஏன்) நெஞ்சு, சளிப் புடிச்சிருக்கு.

பபூன் 1 : டேய் ஏதாவது பாட்டுப் பாடுடா.

பபூன் 2 : ம்... சத்தம்! சைலன்ஸ்! எல்லாம் அமதியாயிருக் கணும். நான் படிக்கிறப் பாட்டுப் பழகிக்கிடா தீங்க. பழகிக்கிட்டு வெளியே சொல்லிறாதீங்க (சர்தான்)... ஏன்... எல்லாரும் பழகிருவாங்க. அப்புறம் எனக்கு மதிப்பில்லாமப் போயிரும். (ஆஹாஂம்).

: குமரிப் பெண்ணின் உள்ளத்திலே

குசுவிட நான் வரவேண்டும் (டேய் குடியிருக்க நீ வரவேண்டுமடா).

பபூன் 1 : எங்க போய் குசுவிட? {சிரிப்பு} ஏய்! ஏண்டா இந்தப் பாட்டா உன்னையப் பாடச் சொன்னாங்க?

பபூன் 2 : இதான் இன்ட்ரெஸா இருக்கு.

பபூன் 1 : டேய் வேற பாட்டுப் பாடுறா.

பபூன் 2 : சரி, இது புடிக்காது. நல்லால்ல. பக்கப் பாட்டுக்கு ஆள் வேணுமே.

பபூன் 1 : நான் வேணும்னா படிக்கறேன்.

பபூன் 2 : பீச்சுசில்லா படிச்சது போல் படிக்கணும். (பி. சுசிலா) பீச்சுசிலா (அதென்னடா பீச்சுசில்லா) டி.ஆர். சௌரராஜம்.

பபூன் 1 : ஏய் சௌந்தர்ராஜன் (டி.ஆர். சௌந்தர்ராஜன்).

பபூன் 2 : ம். அவரும்... பி. சுசிலா படிச்சது போல ரெண்டு பேரும் படிக்கிற பாட்டு... நம்ம ரெண்டு பேரும் படிக்கணும். நீ சுசிலா படிக்கிறது போல படி. நான் வந்து சௌலராஜன் (சௌந்தரராஜன்) என்னா ராஜன்? (அட சௌந்தர்ராஜன்) சௌலராசன் (என்ன சவலயே போ படி). கூந்தல் கறுப்பு.

பபூன் 1 : பஸ்ட், பஸ்ட், வண்ணாங்கிளாஸ்.

பபூன் 2 : ஒண்ணாங்கிளாஸ் சொல்டா. வண்ணாங் கிளாஸ்ங் றான். டேய் கூந்தல் கறுப்புன்னு சொல்லும் போது 'ஓகோ' அப்படீன்னா (பின்னணி) பின்னணி.

பபூன் 1 : அப்படிச் சொன்னமுன்னா?

பபூன் 2 : பாட்டுக்கு ரொம்ப அழகாயிருக்கும். இன்ட்ரெஸ்ட் அது. நீ படிக்கலேன்னா போரடிக்கும் போர். (போரடிக்கும்) படிக்கிறேன் படி. கூந்தல் கறுப்பு.

பபூன் 1 : ஓகோ...

பபூன் 2 : அப்படி... அப்படித்தான்... அப்படித்தான்... எலே! அப்படித்தாம்லே... விட்டுறாத... அப்படித் தாம்லே... அப்படித்தான் நல்லாயிருக்கு... சோக்காயிருக்கு (படி, படி) கூந்தல் கறுப்பு.

பபூன் 1 : ஓகோ...

பபூன் 2 : அப்படித்தான்... அப்படித்தான். டேடேடே ரொம்ப இன்ட்ரஸ்டா இருக்கு. யாத்தாத்தோ... யம்மம்மோவ்... (சரி, படி, படி) சத்தம்... சத்தம்... போடாதீங்க. ஏன்னா... சத்தம் போட்டீங்கன்னா

சுதி சேராது எனக்கு. சத்தம் மாறிப் போகும் அதுக்குத்தான். கூந்தல் கறுப்பு...

பபூன் 1 : ஒகோ...

பபூன் 2 : கூந்தல் கறுப்பு...

பபூன் 1 : இதான் ஒனக்குப் பொளப்பா... {சிரிப்பு} ஏலே! ஒரு தடவ ரெண்டு தடவ சொல்லு. ஓயாம இதவே சொல்லிக்கிட்டிருக்க.

பபூன்2 : ஏய். இனிமதாண்டா அடுத்த அடிய எட்டிப் புடிக்கணும் (சரிதான் இதப் புடிக்காம வேற எடத்ல புடிக்க முடியாது). இனிமதான் அடுத்த அடி வரப் போகுது. சைலன்ஸ்! சைலன்ஸ்! சத்தம்!

பபூன் 1 : அடுத்த அடி படிக்கப் போறான்.

பபூன் 2 : கூந்தல் கறுப்பு...

பபூன் 1 : ஒகோ!...

பபூன் 2 : என் குண்டல கொழுப்பு {சிரிப்பு}...

பாடல் : **நீல மேகக் கார்வண்ண ரூபா நீ வா வா...**
நீல மேகக் கார்வண்ண ரூபா நீ வா வா...
.....
....

இராமர் : ஜானகி!

சீதை : நாதா!

இராமர் : ராட்சதியானவள் வந்ததிலிருந்து சண்டை ஒரே குதூகலமாகவேயிருந்தது. இன்றைய தினத்தில், நின்றாலும் நேரங்கள் போகவில்லை. இன்றைய தினத்தில் நாம் இரு பேருமாக... ஆனால் இன்றைய தினத்தில் பர்ணகசாலைக்கு முன்ன

தாக சூதாட்டம், சொக்காட்டம் ஆகியவை விளையாட வேண்டும். அந்தச் சூதாட்டத்தை எடுத்துக் கொண்டு வா சீக்கிரம்.

சீதை : சுவாமி! உங்கள் தம்பியை அழைத்து இரு பேருமாக உக்காந்து... மூன்று பேருமாக உக்காந்து விளையாடலாம்.

இராமர் : தம்பியாகிய லட்சுமணன், ஒரு நல்ல பாடங்களைக் கேட்டுத் தண்ணீரை எடுப்பதற்காகவே போயிருக்கிறான். அவன் வருவதற்கு நேரங்கள் ஆகும். நாம் இரு பேருமாக உட்கார்ந்து விளையாடலாம்.

சீதை : அப்படியானால் எடுத்துக் கொண்டு வருகிறேன்.

பாடல் : பகடக்காய் ஆடுவம் நீ வாராய்
பகடக்காய் ஆடுவம் நீ வாராய்...
....
...
ஆடுவம் நீ வாராய்
பகடக்காய் ஆடுவம் நீ வாராய்
பகடக்காய் ஆடுவம் நீ வாராய் (பகடக்காய்)★
......

இராமர் : ஆடுகின்ற சொக்கட்டாங்களை நீ எதற்காக நிறுத்தி வந்தாய்?

சீதை : இப்பொழுது நாங்கள் வெளயாட வேண்டுவது சூதாட்டங்கள் தான். இப்பொழுது நாங்கள்

★ பாபுராவ் திடீரென்று எழுந்து வந்து, ''என்ன கத கேட்க வந்தியா, கூச்சல் போட வந்தியா'' என்றார். ''பெரிய ஆட்கள்ளாம் உக்காந்திருக்கீங்க. கொஞ்சம் வெளியே போய் அவுங்கள அதட்டுங்களேன்'' என்றார் வெளியிருந்து வந்த சப்தம் மிகத் தரக் குறைவான மொழியாக இருந்ததால் பாபுராவ் வெளியே எழுந்து சென்று சச்சரவில் கலந்து கொள்கிறார். கொஞ்ச நேரத்தில் சண்டை முடிகிறது. சண்டைக்குக் காரணம் தனபால் ராவ். கதை ஆரம்பமாகிறது.

புதுசாக, நாங்கள் வெளயாடவில்லை. ஒரு மானானது ஒளியாகத் தெரியப்படுகின்றது. ஆக, மான் வந்திருக்கிறது.

இராமர் : எங்கே வந்திருக்கிறது?

சீதை : இங்கே பாருங்கள். எவ்வளவு அழகுடனே இருப்பதென்று. ஆனால் மான் பிடித்துக் கொடுத்து விட்டால், மான் நான் பிடித்து, நான் வெளயாடுவேன்.

இராமர் : ஜானகி! நமது சித்தப்பனான சடாயு பறவையான வர், ராட்சதர்கள் மானாக வந்திருக்கிறார்கள், யானையாக வேஷங்கள் போட்டு ஏமாற்றி விடுவதாக, எவ்வளவோ புத்திமதியான வார்த் தைகளைச் சொல்லி வந்தார். அதையெல்லாம் நீ கேட்டிருந்தும் மான் பிடித்துத் தர வேண்டு மென்பதாகச் சொல்கிறாயே. இந்த மான் நமக்கு வேண்டாம். இந்த மானுக்குப் பதிலாக வேற மான் நான் பிடித்துத் தருகிறேன். இந்த மான் மீதில் நீ ஆசைப்பட வேண்டாம் ஜானகி.

சீதை : அருகே வந்திருக்க வேண்டிய ஒரு மானைப் பிடித்துக் கொடுக்காதவர்கள், எதிர்லே காமிக்கவும், பகையாளி காமிக்கவும், வேற மான்களைப் பிடித்துத் தருவதாக நீங்கள் தெரியப்படுத்தலாமா? ஆனால் கண்டிப்பாக நீங்கள் இந்த மானைப் பிடித்துக் குடுக்கத்தான் வேண்டும்.

இராமர் : முடியவே முடியாது. இந்த மானுக்குப் பதிலாக வேறு மான் பிடித்துத் தருகிறேன். இந்த மான் மீதில் நீ ஆசைப்பட வேண்டாம்.

சீதை : உங்களுக்கு மான் பிடிப்பதற்கு திறமையில்லை யென்றால், உங்கள் கையிலே இருக்க வேண் டிய ஒரு ஆயுதங்கள் என் கையிலே நீங்கள்

குடுத்தீர்களானால் அந்த மானை நான் பிடித்து வருகிறேன். நீங்கள் உக்காந்து வேடிக்கை பார்க்கலாம்.

இராமர் : ஆடவர் கையிலே இருக்க வேண்டிய ஒரு ஆயுதங்கள்... பெண்களிடம் கொடுப்பது!... நீ போய் மான் பிடிப்பது... எவ்வளவு கேவலமாக மதித்துவிட்டாய்? மானை நான் பிடித்து வருகிறேன். போ. பர்ணகசாலைக்குள்ளாக... [இசை]

இலக்குமணர் : சுவாமி! நீங்கள் வேட்டையாட வேண்டா மண்ணா.

அண்ணா...ஆ...ஆ...அண்ணா...ஆ...ஆ...

அண்ணா...ஆ...ஆ...அண்ணா...ஆ...ஆ...

அண்ணா...ஆ...ஆ...ஆ...

நமது சித்தப்பன் சடாயு பறவையானவர் எவ்வளவோ புத்திமதியான வார்த்தைகளைச் சொல்லியிருந்தும், மான் பிடித்து வருவதாக வில்லெடுத்து நீங்கள் போகலாமா? இராட்சதர் கள் எங்களை ஏமாற்றுவதற்காக இப்பேர்ப்பட்ட வேஷங்களை எடுத்திருக்கிறார்கள். நீங்கள் போக வேண்டாம். நான் போய் வருகிறேன். நீங்கள் பர்ணகசாலைக்குள்ளாகப் போயிருக்க லாம் அண்ணா.

இராமர் : தம்பி! சீதையானவள் எங்களைக் கேவலப் படுத்தி விட்டாள். அது எப்பேர்ப்பட்ட ஒரு மானாக இருந்தாலும் சரி, ஓர் அடியை விட்டு இரண்டு அடிக்குள்ளாக நான் அந்த மான் பிடித்து வருகிறேன். பர்ணகசாலைக்கு முன்பதாக அதிகக் காவலாக நீ இருக்க வேண்டும், நான் வருகிற வரையிலும்!

இலக்குமணர் :ரொம்ப சந்தோஷம்.

பாடல் : **ராமா ராகவா ராமா ராகவா**
ராமா ராகவா ராஜீ பரோஜனா
சாமித்த வரவா ஜீயராகவா
ராமா ராகவா ராமா ராகவா

இராமர் : மான் வேட்டையாடி முடிந்து விட்டது. எப்பேர்ப்பட்ட ஒரு மான்களெல்லாம் ஒரு அடிவிட்டு இரண்டு அடிக்குள்ளாக நான் பிடித்திருக்கின்றேன். இது மான்களில் சிறந்த மானாகவே தெரியப்படுத்துகின்றது. இந்த உலகத்தில் என்னை ஏமாற்றக் கூடியவர்கள் யாராக இருக்கலாம்? என்னுடைய ஞான திஷ்டியில் நான் பார்க்கும் பொழுது தாடகை மகன் மாரீசனாக இருக்கிறான். அடே! மாரீசா! என்னுடைய மாயா ஜாலங்கள் இன்னதென்று உனக்குத் தெரிந்திருந்தும், என்னை நீ இவ்வளவு தூரமாக, நீ ஏமாற்றி விட்டாய். என்னுடைய கைக்குத்தான் அகப்படவில்லை. என்னுடைய அம்புகளுக்கு நீ பறந்து விட முடியுமா?

மாரீசன் : கோட்டைக்கு நான் அழிவு காலத்தை நான் தேடிட வேண்டும். அபாயச் சத்தங்களைப் போடு வோம். அபாயச் சத்தங்களைப் போடுவோம்.

சீதா உனக்கபயோம்...

லட்சுமணா உனக்கபயோம்...

சீதா உனக்கபயோம்

....

....

இராமர் : மான் மறைந்தது. மாரீசன் இறந்தான். இவன் இறந்ததைப் பத்திக் கவலையில்லை. சீதா அபயம், லட்சுமணா அபயம் என்று அபயச் சத்தங்கள் போட்டு விட்டான். இவன் போட்ட சப்தங்கள் தம்பி இலட்சுமணனுடைய காதிலே

கேட்டு விட்டால் எனக்கு ஆபத்து வந்து விட்டதென்று சீதையை விட்டு விட்டு என்னையத் தேடிக் கொண்டு வந்தாலும் வந்து விடுவான் தம்பியாகிய லட்சுமணன்! இவன் போட்ட சத்தங்கள் தம்பி லட்சுமணனுடைய காதுகளில் கேட்காமல் இருக்க வேண்டும். சாபத்தை நான் குடுத்து விட்டேன். காட்டுக்குள்ளாகச் சென்று உண்மையான மான் பிடித்துக் கொண்டு, நெசமான மான் பிடித்துக் கொண்டுதான் பர்ணக சாலைக்குப் போக வேண்டும். அப்படியில்லையென்று, நான் வெறுங் கையாகப் போய் விட்டால் சீதை என்னையக் கேவலமாக நினைப்பாள். மான் பிடிப்பதற்கு ஒரு தைரியமில்லாமல் மானை எந்தக் காட்டிலோ கொண்டு போய் விரட்டி விட்டு வெறுங் கையாக வருகிறார்களென்று கேவலப்படுத்தி விடுவாள். உண்மையான மான் பிடித்துக் கொண்டு பர்ணகசாலை நான் போகிறேன்.

சீதை பாடல்: **வாவா என்று கூவி அழைத்த சத்தம்**
வருவாயோ லச்மணா!
என்னைக் கூவி அழைத்த சத்தம்
வருவாயோ லச்மணா!
மானைப் பிடிக்கப் போன மன்னவர்
இன்னும் காணோமே!
அங்கம் பதறுதே - நெஞ்சம் புண்ணாகுதே!
அய்யய்யோ... லச்மணா அய்யா!

இலக்குமணா்: எந்த ராட்சதர்கள் வந்தவர்கள்? எந்த அரக்கர்கள் வந்தவர்கள்? சொல்லுங்கள். என்னுடைய மந்திர வாளுக்கு அவர்களை இரையாக்கி விடுகிறேன். ஏன் இப்பேர்ப்பட்ட அபாயச் சத்தங்கள்? தெரியப்படுத்த வேண்டும் தேவி!

சீதை : இளைய பெருமானே! இங்கு ஒருவரும் வரவில்லை. எந்த இராட்சதர்களும் வரவில்லை.

இலக்குமணர் :ஏனிப்பேர்ப்பட்ட அபாயச் சத்தங்கள்?

சீதை : ஒரு மானானது ஓட்டமாகவே ஓடி வந்தது. மான் பிடித்துத் தருவதாக நான் சொல்ல, மான் பிடிக்கப் போன சுவாமி அன்னவர்கள், சீதா அபயம், இலட்சுமணா அபயம் என்று அபயச் சத்தங்களைப் போட்டு விட்டார்கள். எந்த ராட்ச தர்களோ? எந்தத் திருடர்கள்தான் சுவாமிகளை... ஆனால் உபத்திரவப்படுத்தி வருவதாகவும் தெரியவில்லை. அதி சீக்கிரமாகச் சென்று சுவாமிகளை அழைத்துக் கொண்டு வாருங்கள். புறப்படுங்கள். பெருமாளை அழைத்து வாருங் கள் இளைய பெருமானே!

இலக்குமணர் : இந்த உலகத்திலே அண்ணன் ஸ்ரீ ராமரைக் கொல்லக் கூடியவர்களும், ஜெயிக்கக் கூடியவர் களும் இந்த உலகத்தில் யார் இருக்கிறார்கள்? ஒருவருங் கிடையாது. நீங்கள் அபாயச் சத்தங் களை நீங்கள் போட வேண்டாம். வேற யாராவது ஒரு கேலிக்காக சப்தங்களைக் குடுத்திருப்பார் கள். அண்ணனுடைய அபாயச் சத்தமென்று நினைக்க வேண்டாம் தேவி! இன்னுங் கொஞ்ச நேரம் போய் விட்டால் அண்ணன் ஓட்டமாக ஓடி வந்து விடுவார்கள்... பயப்பட வேண்டாம்.

சீதை : அய்யா, இளைய பெருமாளே! சுவாமிக்கு அபாயங்கள் நேர்கிறது. நீங்கள் என்னையச் சமாதானங்கள் படுத்த வேண்டாம். உண்மையாக, பகவானுடைய சப்தங்கள் தான். சீக்கிரமாகச் செல்லுங்கள்.

இலக்குமணர் : அண்ணன் வர்ற வரையிலும் இந்த இடத்தை விட்டு நான் போகவே மாட்டேன்.

சீதை : சுவாமியவர்கள் அபாயச் சத்தங்கள் போட்ட தற்கும் நீங்கள் போக முடியாதென்று சொல்வ தற்கும் நான் நினைத்த நெனவுக்கும் ரொம்பப் பொருத்தமாயிருக்கிறது.

இலக்குமணர் : அம்மா! அப்படி நான் என்ன கெட்ட எண்ணமாக நான் நினைத்திருக்கிறேன்?

சீதை : அண்ணன் சென்று காட்டில் இறந்தால் கவலை யில்லை. அண்ணனுடைய மனைவி தனக்கு ஆகுமென்று உங்கள் மனதிலே எண்ணி வந்திருக்கிறீர்கள்.

இலக்குமணர் : அய்யய்யோ... அம்மா... அம்மா... அம்மா... ஆ... ஆ...

இப்பயங்கர வார்த்தைகளைச் சொல்வதற்கு எத்தனைக் காலமாகத் தவமிருந்தாய்?

அம்மா... அம்மா... அம்மா! தாயே! 'அண்ணன் சென்று காட்டில் இறந்தால் கவலையில்லை. அண்ணனுடைய மனைவி தனக்கு ஆகுமென்று நீ மனதில் நினைத்து வந்திருக்கயா' என்று கீழ் வார்த்தை நீ சொல்வதற்கு நீ எவ்வளவு நாளாகத் தவமாக நீ தவமிருந்தாய். இந்தக் கீழ் வார்த்தையைச் சொல்வதற்கு, எவ்வளவு கால மாகக் காத்திருந்தாய்? அண்ணன் வரவரயிலும் நான் காவல் பார்க்க வேண்டுமென்றுதான் நான் நினைத்திருந்தேனே தவிர, நீ நினைத்தது போல் மனதில் நினைக்கவேயில்லை. தாயான சுமத் திரையானவள் எனக்குத் தாயில்லையென்று, நீ தானே எனக்குத் தாயென்று நினைத்திருந்தேன். என்னுடைய தகப்பன் தசரதர் எனக்குத் தந்தையில்லையென்று... அண்ணன்தான் எனக்குத் தகப்பனாரென்று நான் நினைத்திருக்க, இந்த நினைவுகளை வீணாக்கி விட்டாளே சண்டாள துரோகி. ஆனால் இந்த வார்த்தை நீ சொன்னபடியால், கால் நிமிஷமும்... அர நிமிஷமும் நான் இங்க இருக்கவே மாட்டேன். அண்ணன் எந்த வனம் போயிருக்கிறார்களோ, அந்த வனத்து வழியாக நான் போய் வருகிறேன். நான் வரவரையிலும் ஏழு கோடானது

கிழித்திருக்கிறேன். இந்த ஏழு கோடுகள்தான் உங்களுக்குக் காவல். யார் வந்தாலும் இந்த ஏழு கோடுகளைத் தாண்டி நீங்கள் வந்து விடாதீர்கள். அப்படி வந்து விட்டால் பத்து மாசம் சிறையிலிருந்து நீங்கள் கஷ்டப்படுவீர்கள். சென்று வருகிறேன்... [இசை]

இராவணன்: அரோகரா...

......

கானக பாணிக்குப் பிச்சை போடம்மா

ஆ... பிச்சை போடம்மா...

அட... அட... அட... அட...

அந்தச் சீதாலட்சுமி பர்ணகசாலைக்குள்தான் இருக்கிறார்களா, பர்ணகசாலையை விட்டு ஓடிப் போயிட்டாங்களான்னு தெரியலையே (இருக்கு றாங்க. இருக்குறாங்க). ஆனால் பிச்சை கேட்டால் கிடைக்குமோ, கிடைக்காதோ, தெரியலையே (கேட்டுப் பாருங்க) அரகரா... அரகரா... தாயே... ஊ... பிச்சையும் உவந்திட்ட தனங்களும் சாரிட்ட குதிரை போல் தருமம் வந்து செழிக்க வேண்டும். சாப்பிட்டு மூன்று நாட்கள் ஆகிறது. நடக்க முடியவில்லை. நாவுகளும் தடுமாறுகிறது. எனக்கு அர வயித்து அன்னம் போட வேண்டும் தேவி. மகாலட்சுமி... அன்ன பூரணி... தேவி... ஆ! ஏ பாம்பு! ஏ அப்பா! எம்மாந்தண்டி யிருக்குடா பாம்பு... எளவு. அம்மா! வருது பாம்பு... ஓடிப் போ. எவ்வளவு பெரிசா இருக்குடா எளவு? அட மொக்கப்* பாம்புடா. ஏல ஓடியாங்கடா. தடியெடுத்துட்டு வாங்கடா தடி. எம்மா எம்மாம் தடியிருக்கு பம்பு. ஏ! மொக்கப் பாம்புடா மொக்கப் பாம்புடா.

★ மொக்க = பருமன்

பபூன் 2 : கொஞ்சம் நக்கிப் பாருடோ... டேய்! டேய்! டேய்! எரும மாட்டுப் படுவா! பாம்பிருந்தா அடிக்கணும். விழுந்து ஓடிப் போயிடும். எரும மாடாட்டம் சத்தம் போடுறானே... எங்கடா நிக்குது பாம்பு? (ம் அதோ நிக்குது). என்ன பண்ணும்? (அட கடிக்கும்). கடிக்கும். அந்தப் பாம்பு கடிக்கும்? (ஆமா கடிக்கும்). கடிச்சிட்டா என்ன பண்ணும்? (அட மனுஷன் செத்துப் போயிருவான்). சரி, செத்துப் போனா என்ன பண்ணும்? (ம். குழியில போட்டு அமுக்கு வான்). குழியில அமுக்குனா தோண்டி வந்திரு வேன். (அது சரி). என்னடா பண்ணுவ மக்கா கோழி பாம்பு? (அந்தப் பாம்ப இப்பப் புடிக்கணும்).

பபூன் 3 : மாப்ள டேய்! கிளிஞ்ச வாயா! போகாதடா. டேய்! பாம்பு கிட்டப் போகாதடா. வம்பாச் செத்துப் போயிருவடா... டேய்!

பபூன் 2 : டேய்! போடா மொளு மொளு பயலே. நான் எத்தினியோ பாம்ப நான் பிடிச்சிருக்கிறேன். இது எனக்கொரு பெரிசா? (ஆமா). இந்தப் பாம்பக் கண்டிப்பாப் புடிக்கணும்.

பபூன் 3 : வேண்டாமடா மாப்ள. வம்பா செத்துப் போயிருவ.

பபூன் 2 : போடா தடிப் பயலே! பாம்பப் புடிக்கும்போது வேண்டாங்றாம் பாரு... மக்காக் கோழி படுவா.

பபூன் 3 : மாப்ள... ஒந்தங்கச்சியெ நான் கெட்டியிருக் றேன். எந்தங்கச்சியெ நீ கட்டியிருக்றே. ரெண்டு பேரும் மச்சினன் மச்சினி. நீ செத்துப் போயிட்டேன்னா எந்தங்கச்சி வாளக்கா போயிருமடா மாப்ள (அட, வெள்ளரிக்கா விக்குது வாளக்கா போனா).

பபூன் 2 : தங்கச்சி வாளக்கா போயிடும்மா? ஒந்தங்கச்சி வாளக்கா போணம்னா நீ பழமாப் போ. அட

வாழ்க்கை போயிரும்னு சொல்லத் தெரியல. வாளக்காப் போயிருமாம். போடா படுவா. மொளு மொளு பயலே! போடா அந்தப் பாம்ப நான் புடிக்கணும்.

பவூன் 3 : டேய் வம்பா செத்துப் போயிருவடா.

பவூன் 2 : செத்துப் போனா மசிரு போச்சி... போடா {சிரிப்பு}.

பவூன் 3 : டேய் மாப்ள போகாதடா டேய்.

பவூன் 2 : டேய் படுவா கூப்பிட்டீன்னா டிஸ்மிஸ் பண்ணிப்பூடுவேன். ஏய்!

பவூன் 3 : மாப்ள!

பவூன் 2 : ஏய்...

பவூன் 3 : மாப்ள...!

பவூன் 2 : ஏய் மொளு மொளு! போக மாட்டே...

பவூன் 3 : மாப்ள... சரி இன்னொரு விஷயம்... நீ கண்டிப்பா பாம்பு புடிச்சிடுவே?

பவூன் 2 : சத்தியமாப் புடிச்சுடுவேன்.

பவூன் 3 : சரி. பாம்பு உன்னக் கடிச்சி நீ செத்தாலும் சரி, நீ பொழச்சாலுஞ் சரி... அதப் பத்தி எனக்குக் கவலையேயில்ல. ஆனால் அஞ்சு பைசா மட்டுங் குடுத்திடு. (ஆமா).

பவூன் 2 : [அடிக்கிறான்] மனுஷன் சாவுறது பெருசில்ல. இவனுக்குக் காசு பெருசாருக்கு. இங்க வா ஒன்னையத் துப்பாக்கியால சுடுதேன்.

சீதை : அய்யோ பாவம்! ஒரு பிச்சைக்காரன் வரு கிறான். பரதேசி... ஒரு பண்டாரம் வருகிறார்கள். ஆனால் நம்முடைய வீட்டைத் தேடி வந்தவர்களை ஒரு அரவயத்து... ஆனால் அவர்கள்... அர வயத்து ஒரு அன்னங்கள்

ஆகாரங்களைக் கொடுத்து நான் வழியனுப்ப வேண்டும். அவர்களை வர விடாமல் வாசலுக்கு முன்பதாக நின்று அவர்களை நீ சீறிக் கொத்தலாமா? வேண்டாம். அந்த பரதேசி யானவன் அடுத்த வீட்டில் நின்று பேசுவான்... திட்டுவான்... மண்ண வாரித் ★தூத்துவான். 'சண்டாளி வீட்டிற்குப் போனேன். பெரிய பாம்பைக் கட்டி வளர்க்கிறாள்' அப்படியென்று ஒரு கேவலமாகவே சொல்லுவான். ஆகவே பரதேசியானவன்... வேண்டாமய்யா நீங்கள் இருக்கும் இடத்திற்குப் போய் விடுங்கள். நிற்க வேண்டாம். அந்தப் பரதேசிக்கு நான் அர வயத்துச் சாப்பாடுகளை நான் போட வேண்டும். (போ மாட்டாராம்). அதான் சொல்வார்கள் சுலோவங்கள் (எப்படி?) இடுவார் பிச்சை கெடுவார் கெடுத்துக் கூலிக்குப் பாம்பு குறுக்க வந்து, குடுக்க வேண்டிய ஒரு இடத்தில் ஏனைய்யா நீங்கள் கெடுக்க வேண்டும்? நாகேந்திரா! பரதேசி அவர் கோபமாகவே போய் விட்டார். ஆனால் வாருங்கள் பரதேசியே... ஓட்டமாக ஓடி வாருங்கள்.

பாடல் : **எங்க போறாய் வாரும்**
சரணாகதி தாராய்
எங்க போறாய் வாரும்
.....
....

பரதேசியே! எந்த ஊர் எந்த ராஜ்யங்கள்? அதர்வான காட்டுக்குள்ளே தனியாக நீங்கள் வந்திருக்கின்றீர்களே. உங்களுடைய பேர்களைச் சொல்லுங்கள் பார்ப்போம்.

இராவணன்: நான் எம் பேத்தியப் பாக்கதுக்குப் போறேன். அம்மா... பேத்தி! என்னுடைய ஊர் பேர்களைக்

★ தூத்து = திட்டு (பார்க்க பக். 275)

கேட்கிறாயா? பேரிலே பெரியவன் ஆகியும் உன் சங்கிருதங்கள் கத்திருக்க வேண்டிய பிரும தேவனுடைய பேரனென்றும் சொல்வார்கள். அதும் சொல்லத்தான் கேள்வி. அதுகூட எனக்குத் தெரியாது. ஆனால் சாப்பிட்டு மூன்று நாட்களாகிறது. நடக்க முடியவில்லை. நாவுகள் தடுமாறுகிறது. எனக்கு அர வயித்து அன்னம் போட வேண்டும் மகாலட்சுமி... அம்மா சீதாலட்சுமி!

சீதை : அடடா! ஆடவர்கள் மான் பிடிப்பதற்காகப் போயிருக்கிறார்கள். அவர்கள் வர வேண்டிய தொரு நேரமாகி விட்டது. நான் போடக் கூடியவற்றை வாங்கிக் கொண்டு அடுத்த வனம் போய் விடுங்கள்.

இராவணன்: அடடாடா... அம்மா சொல்றதுதான் உண்மை. அம்மா இந்த ஏழுகோடு சத்தியம்போல் இருக்குது. இந்த ஏழு கோடு... வந்து தாண்டிக் கிட்டுப் போட்டால் உடலுக்குச் சேரும். இல்லையென்றால் என்னுடைய உடம்புக்குச் சேராது. அம்மா...

சீதை : ஏழு கோடுகளைத் தாண்டி வந்து நான் பிச்சை போட வேண்டுமா? இதோ நான் வந்து விட்டேன். பின்ன எத்தனை கோடுகள்?

இராவணன்: அடடா. அம்மா சொல்றதெல்லாம் கேக்குறாங்க. அம்மா பேத்தி! ஒன்னையப் பாக்கும்பேது ரொம்ப அசிங்கமாக இருக்கிறது. குளித்து முழுகி நள பாகங்களைச் செய்து அர வயித்து அன்னம் போட வேண்டும்.

சீதை : நான் கொண்டு வருகிறேன்... [இசை]

எண்ணெய்க்காரன் : ஏ! நல்லெண்ண... தேங்கா வெண்ணே... வெளக்க வெண்ணே (ஏ, வெளக்கெண்ணை,

வெளக்கவெண்ணயில்ல) ஏ தேங்காவெண்ண... நல்லெண்ணே வெளக்க வெண்ணே... ஏ! தேங்கா வெண்ண... நல்லுண்ண... வெளக்க வெண்ண... ஏ! தேங்கா வெண்ண... நல்லுண்ண... வெளக்க வெண்ண (ஏய், ஏய், ஏய்... வியாபாரி எங்கடாயிருந்து வந்தான்).

மாம்பழக் காரன் : மாமம்பழோம்... மாமம்பழோம்... மாமம்பழோம்... மாமம்பழோம்... கொட ஆரஞ்சி... தாத்தாப் பழோம்... (அது சரி) கொட ஆரஞ்சி... தாத்தாப்பழோம்.

பேரிச்சம் பழம் : பேரம்பழம்... பேரம்பழம்... ஏய்... பேரம்பழம்... பேரம்பழம்... பேரம்பழம்... (ஏய் பேரம்பழம்! அது என்ன பழம்டா அது).

வெத்தலை : ஏ! வெத்தலப்பாக்கு செருப்படி... வெத்தலப் பாக்கு செருப்படி... ஏ! வெத்தலப் பாக்கு செருப்படி... வெத்தல பாக்கு செருப்படி... ஏ! சோடக் கல்லே.

பபூன் 1 : என்னடா இந்தப் பையங்க ஒரே வரிசேல வந்து நிக்குறாங்க (அட் வியாபாரிப்பா). வியாபாரிகள் சீதாலட்சுமி வந்து இராவணனுக்குப் பிச்சை போடும்போது, ஒரு சகுனமாக வருகிறார்கள் (ஆமாம்). ஒவ்வொரு பயங்க என்னென்ன வியாபாரங்கொண்டு வந்திருக்கான்னு அவங்க கிட்ட கேக்கணும் (கூப்பிட்டுக் கேளு). ஊர் மகம்* எடுத்திருக்கிறேன். ஒவ்வொருத்தன்ட்ட யும் இருபது ரூபா வாங்கணும் (அடப்பாவி). ஏய்! நீ என்னப்பா வியாபாரம்?

எண்ணெய் : ஏ! நல்லுண்ணே... தேங்காவெண்ண... வெளக்க வெண்ண.

பபூன் 1 : நல்லெண்ண. தேங்காவெண்ண. வெளக்க வெண்ணயா? (வெள்ள வெண்ண) ஏ! ஒரு

★ மகம = பொதுப்பணம்

லிட்டர் நல்லெண்ணே எவ்வளவு அய்யா? ரூபா எவ்வளவு?

எண்ணெய்: போன வருஷத்ல எம் மூத்த பொண்டாட்டி செத்துப் போனா... இப்ப ரெண்டாவது பொண்டாட்டி கட்டியிருக்கேன். நல்லெண்ண, தேங்கா எண்ண, வெளக்க வெண்ண.

பபூன் 1 : ஒரு லிட்டர் நல்லெண்ண ரூபா எவ்வளவுன்னு கேட்டா... ஒம் பெண்டாட்டி செத்ததா நாங் கேட்டேன். செவிட்டுப் பயலாயிருப்பாம் போலத் தெரியுதே. ஏ! ஒரு லிட்டர் நல்ல ெண்ண... அதாவது ரூபா எவ்வளவு அய்யா? சில்லறை எவ்வளவு?

எண்ணெய்: அப்படிக் கேட்டாதான தெரியும். மூத்த பொண்டாட்டிக்கு நாலு புள்ளே. எளைய பொண்டாட்டிக்கு மூணு புள்ள.

பபூன் 1 : எரும மாட்டுப் பயலே! நான் என்ன கேக்குறேன். அவன் என்ன சொல்றான் பாரேன். ஏய் நீ யார்?

மாம்பழம் : மாமம்பழோம்... மாமம்பழோம்.

பபூன் 1 : மாமம்பழோம் ... மாம்பழமா... மாமம்பழோமா?

மாம்பழம் : அதுதான் மாமம் பழமுங்கிறேன்... மாமம்பழோம்.

பபூன் 1 : ஏய் மாம்பழம்! ஒரு பழம் எவ்வளவு?

மாம்பழம் : அறுவத்தி அஞ்சு பைசா.

பபூன் 1 : ஏயப்பா.

மாம்பழம் : ஆமா மூணே முக்கால் ரூபா விக்குதுல்ல அரிசி!

பபூன் 1 : ஆமா. ஏன் இவ்வளவு ஏறிப் போச்சி?

மாம்பழம் : அங்கேருந்து வர்றதுக்கு. செமந்துகிட்டு வர்றேனில்ல. அதனால டாக்சி செலவு, பஸ் வரி, சாப்பாட்டுச் செலவு, எல்லாஞ் சேந்துதான் அறுபத்தி அஞ்சி பைசா.

பபூன் 1 : அங்க வெல எவ்வளவு?

மாம்பழம் : அங்க வெல... ஒரு பழம் வந்து பதினஞ்சி பைசாதான்.

பபூன் 1 : அங்க பதினஞ்சி பைசா. இங்க அறுபத்தஞ்சி பைசா (ஆமா). இது மாதிரி கொள்ள அடிச்சா, வர்ற மொதலும் போகாதா நாசமா (ஆமா). கொளளயடிக்கிற பயலே!

மாம்பழம் : ஏய்! இஷ்டமிருந்தா வாங்கு. கஷ்டமிருந்தா போ. ஏய்! மாமம்பழோம்.

பபூன் 1 : மாமம்பழோம் அறுபத்தஞ்சி பைசாவா? அதுல கொஞ்சம்போல அறுத்துக்குடு. இனிப்பா இருக்கா புளிப்பா இருக்கான்னு பாப்போம்.

மாம்பழம் : காசு குடுத்தாத்தான் அறுத்துக் குடுப்பேன். இல்லேன்னா குடுக்க மாட்டேன்.

பபூன் 1 : கொஞ்சம் போல 'சேம்பள்' குடுப்பா.

மாம்பழம் : எங்க மாமங்கிட்டவா அறுத்துத் தர்றேன் {சிரிப்பு}.

பபூன் 1 : அவுங்க மாமங்கிட்ட வந்தா அவன் அறுத்துக் குடுப்பானாம். அவன் என்ன பண்ணுவான்? ஏய்! நீ என்ன வியாபாரம்.

மாம்பழம் : கொட ஆரஞ்சி... தாத்தாப்பழம்.

பபூன் 1 : கொட ஆரஞ்சி... தாத்தா... தாத்தா பழமா?...

பாடல் : *நிலவே நிலவே ஆடி வா
நீ என் முகமே ஓடி வா (நிலவே)

★ உள்ளே, வெத்தலை போடும் சமயம், தண்ணீர் குடிக்கும் சமயம், வெளியே இது போன்ற சினிமாப் பாடல்கள் பாடுவதுண்டு.

பபூன் 1 : ஏ! நீ என்னப்பா வியாபாரம்?

மாம்பழம் : கொட ஆரஞ்சி... தாத்தா பழம், கொடை ஆரஞ்சி... சாத்துக்குடி ஆரஞ்சிப் பழம்.

பபூன் 1 : ஓகோ... ஆரஞ்சிப் பழம், ஒரு பழம் எவ்வளவு?

மாம்பழம் : எழுபத்தி அஞ்சி பைசா.

பபூன் 1 : இருக்கயிருக்க வெல ஏறிக்கிட்டே ஏறி போவுது. சரி கொஞ்சங் கொறைக்கப்படாதா?

மாம்பழம் : ம்ஹூம்... தாத்தா பழமெல்லாம் வெல கொறைக்கப்படாது.

பபூன் 1 : கொஞ்சம் போல வெல கொறைச்சிச் சொல்லப்பா.

மாம்பழம் : ஏ! இஷ்டமிருந்தா வாங்கு. கஷ்டமிருந்தா போ. கொட ஆரஞ்சி, தாத்தாப் பழோம்.

பபூன் 2 : கோலா கலர் இருக்கு (கோலா) கோலா கலர் இருக்கு. பெறவு ஷிஞ்சர் பீர் இருக்கு (ஜிஞ்சர் பீர்). பெறவு ஆரஞ்சு இருக்கு. (ஆரஞ்சு). அப்புறம் டாம் டாம் இருக்கு. (டாம் டாம்), {டாம் டாம்னா என்னா}, எல்லாக் கலரும் சேத்திருக்கும். ரொம்ப ருசியாயிருக்கும். மணங்கொணம் நிறைந்தது. சோடாக்கல்லே (இன்னும் சோறாக்கல).

பபூன் 1 : கலர் எவ்வளவு?

பபூன் 2 : அம்பத்தி மூணு ஐயா பைசா.

பபூன் 1 : அம்பத்தி மூணு நயா பைசாவா? ஐயா பைசாவா? (அம்பத்தி மூணு நயா பைசா).

பபூன் 2 : ஆமா. அதுல கொறைக்கப்படாது. அதுல கொறைச்சம்னாக்க மொதலாளி செத்துப் போய்ருவான்.

பபூன் 1 : ஏன்?

பபூன் 2 : காசு கொறஞ்சி போய்ட்டுன்னா மொதலாளி செத்துப் போயிடுவான்.

பபூன் 1 : ம். சரி, இந்தா அம்பது பைசா வாங்கிக்க... காலைல அஞ்சி... மூணு அஞ்சி பைசா குடுத்திருதேன்.

பபூன் 2 : நோட்டு எழுதிக் குடுப்பயா?

பபூன் 1 : அஞ்சி பைசாவுக்கு நோட்டு வேறயா எழுதிக் குடுப்பாங்க (அதான).

பபூன் 2 : நம்பிக்க இல்லடா. நோட்டு எழுதிக் குடுத்தால் உனக்குக் குடுப்பேன். இல்லேன்னா குடுக்க முடியாது... அய்யா அட்வான்ஸ். டோன்ட்கேர். பிளீஸ் (பிளீஸ்) {டோன்ட்கர், பிளீஸ்}.

பபூன் 1 : டேய்! அஞ்சு பைசாவ வாங்கிக்க. கலர் ஒடச்சிக் குடு.

பபூன் 2 : கலர, 'கேஸ்' போறதுக்குள்ள சடார்னு குடிச்சிப் போடணும். கேஸ் போய்ட்டமின்னா கம்பேனி பேரு கெட்டுப் போய்ரும்... ஒடச்ச வொடன சர்னு வாயில வச்சிக் குடிச்சிறணும் {சிரிப்பு}.

பபூன் 1 : சரி குடிச்சிட்றேன்.

பபூன் 2 : அப்படிக் குனிஞ்சிக்க. கலர் ஒடச்சித் தர்றேன். ம்ம்ம்...

பபூன் 1 : ஏண்டா இந்தப் பயலா இப்படி முக்கறான்.

பபூன் 2 : இப்பத்தாண்டா கேஸை ஏத்துறேன் {சிரிப்பு} (முக்குறானா. அதான் இப்ப கேஸை ஏத்துறாராம்).

பபூன் 1 : இப்பத்தான் கேஸ் ஏத்துறயா?

பபூன் 2 : ஆமாண்டா... இப்பத்தான் கேஸ் ஏத்துறேன் {குசுவப் போட்டுட்டு ஒடப் போறான்}.

பபூன் 1 : சீக்கிரம் ஓடச்சிக் குடு.

பபூன் 2 : அப்படிக் குனிஞ்சிக்க. சடார்னு புடிச்சிக குடி {சிரிப்பு}. கேஸூ போயிருமடா (ஓடச்சிக் குடு).

பபூன் 1 : ஏண்டா, குண்டியக் கொண்டு வந்து மூஞ்சில இடிக்கிற?

பபூன் 2 : இப்பத்தாண்டா கேஸ் ஏத்துறேன்னா... புர்ர்... புர்ர் {சிரிப்பு}.
(சரியா கேஸ் ஏத்துறான்) {சிரிப்பு}.

பாவையாட்டி: சத்தம் போடாதீங்க. கதை ஆரம்பம். சத்தம் போடாதீங்க.

சீதை : பரதேசியே! நான் போடக் கூடிய பிச்சையை வாங்கிக் கொண்டு அடுத்த வனம் போய் விடுங்கள்.

இராவணன்: அட அட... உன்னையதான அம்மா! சொல்றதெல்லாம் உண்மைதான். அம்மா... தேவி! ஆனால் பரதேசிக்குப் பிச்சை போடுவதற்காக வந்திருக்கிறாயா? பிடிங்கள் திருவோடுகள்... யாருக்கு வேணும் பிச்சை? ஜானகி! என்னையப் பாத்து பண்டாரம் பரதேசி யென்று மனதிலே நினைத்துக் கொண்டாயா? உன்னையச் சிறையெடுப்பதற்காக இந்த வேஷத்துடனே நான் வந்திருக்கிறேன். என்னுடைய சொய ரூபங்களைப் பார்க்கிறாயா?

சீதை : அய்யய்யோ நாதா...!
சண்டாள ராட்சதன்
இப்படிச் செய்வானென்று
நான் எண்ணவில்லையே நாதா!
நாதா... நாதா... நாதா... அ... அ...

இராவணன்: ஹஹ்ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா. இந்தக் கேவலமாக இருக்க வேண்டிய பெண்ணை, நான் சிறை

தூக்குவதற்காக வந்து விட்டேன். ஆனால் அக்கினி தேவன் என்னைய வழிமறித்து விட்டான். அட அக்கினி தேவா! மரியாதை யாகப் போகிறாயா... இல்லை என்னுடைய சூலாயுதத்தால் உன்னையக் குத்தி எமலோகத் துக்கு அனுப்ப வேண்டுமா?

அக்கினிதேவன் : என்னைய அடிக்காதே.

இராவணன்: போ. அக்கினிதேவன்... என்னை வழிமறிக்கக் கூடியவன்? இந்தப் பர்ணகசாலையை நான் தூக்கி ரதத்தில் வைத்து வருகிறேன்.

சீதை : நாதா!

பாடல் : ராமா... ராமா...
ராமா... ராமா...
சண்டாள ராட்சதன்
இப்படிச் செய்வதாக
நான் கனவிலும் நினைக்கவில்லையே
என்னையக் காப்பாத்த குடிசையில
ஒருவரும் இல்லையே...
என் மன்னவா!
நாதா... ஆ... நாதா... ஆ...
நாதா... ஆ... நாதா... ஆ...

சண்டாள அரக்கர் இப்படிப் படை எடுப்பதாக இப்படி நான் கனவிலும் நினைக்கவில்லை. என்னையக் காவல் காத்துக் கொண்டிருந்த லச்சுமணரையும் ஆகாத வார்த்தைகள் நான் சொல்லி விட்டேன். ஆனால், பஞ்ச பாதகியாக நான் போய்விட்டேன். அய்யோ நாதா... என் உயிரைக் காப்பாத்துங்கள்.

பாடல் : பெண்ணாகப் பிறந்ததால்... நாதா... நா... தா...
நாதா... ஆ... நாதா... ஆ... நாதா...
பெரும்பழி நான் செய்தேன்

மண்ணும் மலைகளும் நான்
பாவி நான் பாவியானேன்
அய்ய்யயோ... நாதா
என் உயிரைக் காப்பாத்தக் கூடாதோ
என் நாதா...

பாவையாட்டி: இந்தச் சடாயு பறவை தெய்வ லோகத்தில் சிவ பெருமானுடைய கோவிலுக்கு முன்பதாகவே அர்ஜனை செய்து வருகிறது... 'இராம இலட்சுமணன் காணவில்லை... சீதா லட்சுமி அழுது துயரப்படுகிறாள்' அப்படீன்னு சீதையி னுடைய உயிரைக் காப்பாற்ற வந்திருக்கிறார் சடாயு பறவையானவர்.

சடாயு : அட, பர்ணகசாலை இருந்த இடம் இடி விழுந்த கிணறு போல் இருக்கிறது. எந்த ராட்சதனோ எந்தத் திருடந்தானோ தெரியவில்லை, சீதையை ரதத்தில் உட்கார வைத்துக் கொண்டு போகின்றான். அவனுடைய வழி மறித்து ராம லச்சுமணர் வர வரையிலும் ராட்சதப் பயலை விடக் கூடாது. போகிறேன்... [இசை] அட! கருவாடு களவாணிப் பயலே! கருவாட்டுக் கடையில் நாய் புகுந்து, கருவாடு எப்படித் திருடும்? அதைப் போல் திருட்டுத்தனமாக சீதையைத் திருடிக் கொண்டு போகிறாயே... திருட்டு நாயே... உன்னுடைய லெங்கைதான் பிழைத்து விடுமா? உன்னுடைய உயிர்தான்... ஆனால் உன்னுடைய லெங்கைதான் பிழைத்து விடுமா?... உன்னுடைய பத்துத் தலைதான் பிழைத்து விடுமா? உன்னுடைய லெங்கை மண்ணோடு மண்ணாகப் போய் விடும். மரியாதையாகச் சீதையை விட்டு விட்டு வந்த வழியாகப் பார்த்து ஓடிப் போ. போடா. நிக்காதே போ.

இராவணன்: ஆ! அற்பக் கேவலமாக இருக்கக்கூடிய பறவை, ஒரு பெண்ணை நான் சிறை தூக்குவதற்காக

வந்தால், அது பற்றிக் கேட்பதற்காக வந்து விட்டாயா? ஆனால் மரியாதையாக வந்த வழியைப் பார்த்து விழுந்து ஓடிப் போ. இல்லை என் மந்திர வாளுக்கு நீ இரையாகப் போய் விடாதே. ஆனால், சடாயு பறவையே நிக்காதே, போடா...

சடாயு : அடே ராவணேஸ்வரா! உன்னுடைய மிரட்டுக்கும், உன்னுடைய, ஆனால் அதிகாரங்களுக்கும் நான் பயந்து விடுவனா, இந்த சடாயு அரசன்? ராமர் எனக்கு மகன். தசரதர் எனக்கு அண்ணன். சீதை எனக்கு மருமகள்*. மரியாதையாக சீதையை விட்டு விடு. இல்லை உன்னுடைய பத்துத் தலைகளையும் பனங்காய் பிய்த்து எறிந்தது போலவே எறிந்து விடுவேன் ஜாக்கிரதை!

பபூன் 2 : எனக்கு ரெண்டு பனங்காய்க் கொடுங்க.

இராவணன்: டேய் பறவையே! உயிருள்ள வரை சீதையை நான் விடுவதில்லை. மரியாதையாகப் போய் விடு. இல்லை...

சடாயு : என்னைய மிரட்டுகிறாயா? இதோ பார். உன்னுடைய பத்துத் தலைகளையும்...

பாடல் : **ராமா ராகவா ராஜி பரோஜனா**
சாமித்த வரவா ஜீயராகவா
....
....

இராவணன்: என்னடா இது? **மூன்று உலகத்துக்கு ஒரு அரசன்... கேவலமாக இருக்க வேண்டிய ஒரு பறவையுடனே எதித்து நின்று என்னால் சண்டை செய்ய முடியவில்லையே!

★ *'ஏய்! போ மாட்டீங்களா அந்தப் பக்கம்' - சின்னச்சாமிராவ் விரட்டுகிறார் சிலரை.*

★★ *'ஏய்! யாரம்மா அது?' - மீண்டும் சின்னச்சாமி ராவ் குரல்.*

பபூன் 2 : முட்ட... முட்ட... கிழவி முட்ட {சிரிப்பு} கிழவி முட்ட... சாப்பிட்டா, வீனாவ நக்குன வீரம் வரும். பேசாம போயிரு. இல்ல? ஒஞ்சாணிய பிதுக்கிரும் {சிரிப்பு}.

இராவணன்: ஏய்! இந்தப் பறவையுடனே எதுத்து நின்று சண்டை செய்தால் வேட ராமன் வந்து விடுவான். சீதையை என்னால் கொண்டு போக முடியாது. தந்திரமாக உயிரைக் கேட்டு இந்தப் பறவையை நான் கொல்ல வேண்டும்... ஏ பறவையே ! சபாஷ்... சபாஷ்... ஹஹ்ஹஹ் ஹஹ்ஹஹ்... பறவையே நீயும் கெட்டிக்காரன். நானும் மகா சாமர்த்தியம், பராக்ரமம் உடையவன். இரு பேருமாக, ஒரு பெண்ணுக் காக இருவரும் சண்டை செய்து கொண்டிருந் தால், பார்க்கக்கூடியவர்கள் ஒரு கேவலமாகவே சொல்வார்கள். ஒங்களுடைய உயிர்கள் இருக்க வேண்டிய ஒரு இடம் என்னிடம் சொல்லுங்கள். என் உயிர் உங்களுக்கு நான் சொல்லுகிறேன். யாராவது ஒருவர் இறந்து போனால் அந்தச் சீதையைக் கொண்டு போய் விடலாம். எப்படி என்னுடைய ராஜ தந்திரங்கள்?

சடாயு : போடா... போடா திருட்டுப் பயலே! சண்டை செய்ய முடியாமல், உயிர் இருக்க வேண்டிய உயிர் நிலையைக் கேட்கிறாய். டேய் ராவணேஸ்வரா! நீ மூன்று உலகத்துக்கு அரசன். பொய்யில்லாமல் உண்மையான வார்த்தை-யைச் சொல். உன் உயிர் முதலாவது சொல்ல வேண்டும். இரண்டாவது என் உயிர் இருக்கும் இடத்தைச் சொல்கிறேன்.

இராவணன்: ஹஹ்ஹஹ்ஹஹ்ஹஹ. ஏ பறவையே! என்னு டைய உயிர்களைக் கேட்கிறாய். என்னுடைய உயிர்கள்... நீ பொய் சொன்னாலும்... என்னுடைய நாவினால் பொய் என்பது கிடையாது. என்னுடைய உயிர்கள்... இதை

துண்டாய் வெட்டிவிட்டால் என்னுடைய உயிர் போய் விடும்.

சடாயு : டேய்! மூன்று உலகத்துக்கொரு அரசன்... நீ பொய் சொல்வதில்லையென்று சொன்னாயே! இடது கால் பெருவிரலை வெட்டினேன் ஏண்டா நீ சாகவில்லை? ஏன் உயிர்கள் போகவில்லை?

இராவணன்: மூன்று உலகத்துக்கும் ஒரு அரசன். ராஜ தந்திரங்களைச் செய்வேன். நீ பொய் சொல்லாத தொரு மனிதன். உண்மையாகச் சொல்லடா பார்ப்போம்.

சடாயு : நீ பொய் சொன்னாலும் சரிதான். நீ நெசமாகச் சொன்னாலும் சரிதான். நாங்கள் சூரிய குலத்தில் பிறந்த அரசர்கள். நாங்கள் பொய் சொல்வது கிடையாது. என் உயிர்களைக் கேட்கிறாயா? இது என்னடா தெரிகிறது? (இடது கால் பெருவிரல்) இந்த இரண்டு இறக்கைக்குள்ளாக இருக்கிறது என்னுடைய உயிர்கள்.

இராவணன்: இரண்டு இறக்கைக்குள்ளாக இருக்கிறதா...ஆ! வெட்டி விட்டேன்.

சீதை : ஆ! மாமா!

என்னுடைய மாமா...

சதிகார ராட்சதன் பொய் சொன்னதைக் கேட்டு உயிர்களைக் கூறியதென்ன... மாமா... மாமா...

மா.... மாமா... அ...

மாமா! சண்டாளன் அரக்கன் பொய் சொன்னது போல், நீங்களும் பொய்களைச் சொல்லாமல் நிஜத்தைச் சொல்லப் போக, இறக்கையை வெட்டி விட்டானே சண்டாள அரக்கனாகிய இராட்சதப் பயல். அய்யோ! உங்களை நான் எந்த ஜென்மத்தில் நான் காணச் செல்கிறேன்.

நான் பத்தினியாக இருந்தால் என்னுடைய கணவன் வர்ற வரையிலும் தங்களுக்குப் பாதி உயிர்கள் இருக்க வேண்டும். ஆனால் ஒரு அரக்கன் இருக்க வேண்டிய... ஒரு இட மெல்லாம் சொல்லிக் குடுத்து, என்னுடைய கணவனுடைய முன்னாலே நல்மோட்சம் பெற வேண்டும் மாமா.

இராவணன்: ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா. அவர் அற்பக் கேவலமாக இருக்கக்கூடியவர். பறவை என்னுடனே எதுத்து நின்று சண்டை செய்வதா? தந்திரமாக உயிரைக் கேட்டேன். ஒரேயடியாக வெட்டி விட்டேன். என்னையப் போல் கெட்டிக்காரர்கள் இந்த உலகத்தில் வேறு யாருமேயில்லை. ஹஹ் ஹஹ்ஹா. இதே போல் நாளைக்கு இராமன் என்னுடைய *அரவணைக்கு வந்து விட்டால், தந்திரமாக உயிரைக் கேட்டு, ஒரு வெட்டு கபக்குன்னு வெட்டி விடுவேன். இவளை நான் என்னுடைய அரவணைக்கு நான் கொண்டு போகிறேன்.

பபூன் 2 : பேசாம விழுந்து ஓடிப் போயிரு. இது பேர்த்திட்டுப் போனா, அங்க ராமரும் லச்சுமணரும் பாத்துக்கிட்டா. ஒரு முழம் விட்ட வெளியே வரும் {சிரிப்பு}.பேசாம ஓடிப் போயிரப்பா.

பபூன் 3 : மாப்ள! அஞ்சி பைசா.

பபூன் 2 : ஏல மொளூ மொளூ. [அடிக்கிறான்]...{சிரிப்பு}

இராவணன்: இதோ சீதையை என்னுடைய அரவணைக்கு... அசோவனத்துக்குக் கொண்டு செல்கிறேன்... [இசை]

பபூன் 2 : ஏலே சட்டக் குருவி (அடே! சிட்டுக் குருவி) ம்தர்ர்... ம்தர்ர்... ம்தர்ர்.

பபூன் 1 : அடே! ஏதுடா கிடா? டேய்...

★ அரவணை = அரண்மனை (பார்க்க. பக்.15)

பபூன் 2 : நான் வளர்த்த கெறாக்குட்டி. நான் வளர்த்த கெறாக்குட்டி. யாத்தாத்தோ {கெடாக் குட்டி} நான் வளர்த்த கெறாக் குட்டி...

பபூன் 1 : ஏ தம்பி! அடே உளுவத் தலையா.

பபூன் 2 : டேய் உளுவத் தலையான்னு சொல்லாதடா... சுப்பிரமணியசாமி, கிளிக்குஞ்சு மொதலாளி... (ஆமா, கிளிக்குஞ்சு மொதலாளி).

பபூன் 1 : இது ஏ்தடா கிடாயி?

பபூன் 2 : இது என்னுடைய கிடா. இதுக்கு எதிர் போட்டியாகக் கிடா இருந்தா கொண்டா. சண்டைக்கு விட்டுப் பார்ப்போம்.

பபூன் 1 : அப்படியா. எங்கிடாயப் பத்திக்கிட்டு வரட்டுமா... ம்திர்ர்... கர்ர்... ர்ர்.

பபூன் 2 : ஏய்! இது அவ்வளவு சரியில்லியே. இன்ரஸ் ஸில்லயே. போரடிக்கு... போர்.. இன்ரஸ் ஸில்லயே. ரசிக்கலையே... ரசிக்கலையே (எது). கிடா ரசிப்பு இல்லையே (யாரு கிடாயி). அண்ணங்கிடாயி ரஸ்பெக்டில்லயே ரஸ்பெக்ட் [இஸ்பேஸ்ட் இல்லையே]. ரஸுபேட்டு இல்லையே இஸுபேட்டு ராணி தான இது (சரிதான்).

பபூன் 1 : உங்கிடாயி, ரொம்ப அழகாயிருக்குது.

பபூன் 2 : எங்கிடாயி ரொம்ப 'சோ'னாங்கி நக்குன ஜோக்காயிருக்குது. 'இ'னாங்கி நக்குன இன்ரஸ்டா இருக்கும். யாத்தாத்தா கொழுப்பு ஒழுகுதே... {சிரிப்பு} அண்ணே! இங்க பாருண்ண எங்கிடாய்க்கு கொழுப்பு ஒழுகுது (உனக்குத் தான் கொழுப்பு ஒழுகுது)

பபூன் 1 : ஏல மூக்குச் சளி வடியுதா? கொழுப்பு ஒழுகுதா?

பபூன் 2 : இது வெள்ளக் கொழுப்பு. யாத்தாத்தோ, யாத்தாத்தோ, யாத்தாத்தோ.

பபூன் 1 : டேய் சரி இருக்கட்டும். எந்தக் கிடாயி பெருசு. எந்தக் கிடாயி சின்னக் கெடாயி அப்படீங்கற கிலோ கணக்குப் பாக்கணுமில்ல.

பபூன் 2 : நான் வேணும்னா பாத்திடுறேன் கிலோ கணக்கு... வீசை...

பபூன் 1 : ஏய்! வீசையெல்லாம் அந்தக் காலம். மாறிப் போச்சு.

பபூன் 2 : இப்ப வந்த கொல (டேய்! கிலோ கணக்கு) கொல (யாரக் கொல பண்ணப் போற). அண்ணன் இந்தக் கொலக் கணக்கு... கொலக் கணக்கு... கொலக் கணக்கு (கிலோ கணக்கு) கிலோ... என்ன எளவோ, இந்தக் காலத்ல கொல... கொல... அந்தக் காலத்ல ஈச.

பபூன் 1 : அது எந்த எளவாயிருந்திட்டுப் போவுது... பாத்துச் சொல்லு.

பபூன் 2 : உங்கிடாயப் பாக்கட்டுமோ? கிலோ கணக்குப் பாக்கேன். உங்கிடா எட ஒண்ர கிலோ... எங்ககிடாயப் பாக்கட்டா (பாரு) {ஏ! நக்குறான்} எங்கிடாய் மூன்று கிலோ. ஏடா! திறயப் பாத்தா பெருசாயிருக்கு... ஒண்ரக் கிலோ மூண்ரக் கிலோங்கறயே.

பபூன் 1 : ஏண்டா ஒரு கிடாய் பாத்தாம்னா... ஒரு பன்னண்டு பதிமூன்று, இருபது இப்படில்ல விழுகும். ஒண்ர மூண்ரங்றியே.

பபூன் 2 : ஏல கிடாயவா தூக்கிப் பாக்கச் சொன்ன (அப்புறம்) நீ? (என்னத்தப் பாத்தே?)

பபூன் 1 : வேறென்ன பாத்த நீ?

பபூன் 2 : நான் வெதக் கொட்டயப் பாத்தண்டா... கொட்ட.. கொட்ட.... {சிரிப்பு}*

★பதிவுநாடா மாற்றத்தினால் ஏற்படும் சிலநிமிட இடைவெளி.

பபூன் 1 : பந்தயங் கெட்டிக்கிடுவோமா? எந்தக் கிடாயு ஜெயிக்குது, எந்தக் கெடாயு தோக்குதுன்னு? பந்தயத்தக் கட்டிக்கிடுவோம். பொது ஆளு கிட்ட குடுத்து வச்சிருவோம். ஒரு அம்பது ரூபா குடு.

பபூன் 2 : அப்படியா? ஒனக்கு நான் மெலிஞ்ச புள்ளின்னா பாத்துகிட்ட? ஒனக்கு நான் மெலிஞ்ச புள்ளின்னா பாத்துக்கிட்ட? (அது ஒண்ர மொழ மிருக்கும்) ஏலே... ஒங்கிட்ட எவ்வளவிருக்கு? ஆளுக்கு அம்பது ரூபா தானே? ஒங்கிட்ட எவ்வளவிருக்கு?

பபூன் 1 : நூறு ரூபா நோட்டிருக்கு. வச்சிருவோம்... ஒங்கிடா ஜெயிச்சிட்டால், அந்த நூறு ரூபாயும் எங்கிடாயும், தோத்த கிடாயும் ஜெயிச்ச கிடாயும் கொண்டுட்டுப் போ. என்னுடைய கிடா ஜெயிச்சா ரூபாயும் ஒங்கெடாவையும் பத்திட்டுப் போயிடுறேன்.

பபூன் 2 : சரி. ஆனாலும்சரி, போனாலுஞ்சரி. பாத்திர்றேன் ஒரு கை. சரி அந்த நூறு ரூபாய் எங்கைல குடு.

பபூன் 1 : அம்பது ரூபா வேணுமில்ல {மொங்காம்* போடப் போறான்}.

பபூன் 2 : அந்த நூறு ரூபாய எடுத்துக்கிட்டு ஆளுக்கு அம்பது ரூபா வச்சிக்கிடுவோம். {சரியான யோசனை, - சிரிப்பு}

பபூன் 1 : ஏய்... நல்ல யோசனை சொல்றாண்டா இவன்! என் ரூபாய வாங்கி எங்கிட்டயே பந்தயத்தக் கட்டப் பாக்றான்.

பபூன் 2 : ஏய்! அதே வேண்டாம். ஆளுக்குப் பத்துப் பத்துப் பைசா மொச்சப் பயிறு {மொச்சப் பயிறு திங்கப் பல்லில்ல}எங்கிடா ஜெயிச்சிட்டா நான் பத்து பைசாவுக்கு - அஞ்சு பைசாவுக்கு- நான்

★மொங்காம் போடல் = ஏமாற்றல்

வாங்கித் தர்றேன். ஓங்கிடா ஜெயிச்சிட்டா பத்து பைசாவுக்கு நீ வாங்கித் தரணும்.

பபூன் 1 : அதுலயும் கொறைக்கத்தான் பாக்குறான்.

பபூன் 2 : ஒண்ணுமே வேண்டாம். வெரட்டி விடு. கிடாயச் சொல்லிக் குடுக்கப்படாது. வெரட்டக் கூடாது. கிடா ஒண்ணுக்கொண்ணு சண்டை போடும் போது குறுக்க நிக்கப்படாது.

பபூன் 1 : நீ வரப்படாதில்ல.

பபூன் 2 : நான் வரமாட்டேன்னப்பூ... அப்பூ... நான் வரமாட்டேன் அப்பூ (தாமரப் பூ)

பபூன் 1 : எந்தப் பூவு?

பபூன் 2 : ஏய்! வெரட்டாதே. கிடாய வெரட்டாத. இழுத்துப் புடிடா. இந்தாப் பாரு, எங்க அண்ணங்கிடாய! டாம் டாம் டாமுன்னு முட்டித் தள்ளிரும்... என்ன... சூ... ஆ.. போ கிடாயி எளவு... என்னடா போக மாட்டேங்குது.. சூ... யாத்தே... (ஏய் அது தன்னப் போல முட்டிக்கிடும்டா) ஏய்! என்னையத்தான் முட்ட வருது ஓடுடா... டேய்... அங்க போய்... முட்டுவயா? என்னையத்தான மொறச்சிப் பாக்குது. அண்ணே! கிடா வருது. தள்ளி நில்றா அண்ணே. கிடாயி பாக்குது. எப்படி முட்டுவம்னு சைடுல பாக்குது பார்... ஏய் 'சைடு' குடுக்குது. போடு... போடு... போடு (கிடாச் சண்டை). போடு... விடாத... போடு கொம்பு ஒடியணும் (சண்டை). போடு போடு... போடு... போடு... போட்போடு... போடு போடு போடு... போட்... போட்... (சண்டை)... {சிரிப்பு}.

ஓங்கிடா செத்துப் போச்சி. செத்துப் போச்சி... அய்யோ! ஓங்கிடா செத்துப் போச்சி... செத்துப் போச்சி... செத்துப் போச்சி. எங்கிடா தான்

சண்டியர் கிடாயி... ஆத்தாத்தோ... யாத் தாத்தோ. எங்கிடா தூக்கி எறிஞ்சிட்டுடா ஒங்கி டாய. செத்துப் போச்சிடா.. (ஒண்ணுக் கொண்ணு கெடாச் சண்டை போட்டமின்னா... என்னெ வெளுக்கிறான்... அவுங்க அண்ணன் வெளுக்கிற மாதிரி) ம்திர்ர்... இந்தா வச்சிருச் சிடா... விடாத... குத்து... குத்து (கிடாச் சண்டை)

பபூன் 1 : ஏண்டா இப்படி ஒளிக்கிறே. உன்னைய மானாங் கண்ணியாப் போட்டு நொறுக்குதே. ஒங்கிடாயத் தூக்கிப் போட்டிருச்சில்ல எங்கிடாயி.

பபூன் 2 : எப்படா தூக்கிப் போட்டிச்சி? {'ஏ புளுகிறான்'}

பபூன் 1 : எங்க போயிருக்கு?

பபூன் 2 : எங்கிடா தண்ணி குடிக்கப் போயிருக்கு {சிரிப்பு}.

பபூன் 1 : பார்ரா அவன் தந்திரத்த. அப்ப... எங்கிடா தூக்கிப் போடல?

பபூன் 2 : ம். கிட்ட நெருங்குமா?... ம்...இந்தா... ச்ச... அய்யா சுப்பிரமணிய சுவாமி கிடாயின்னு சொன்னா பேர்போன கிடாயா நீ வெளங்குற. உம்மேல ரொம்பப் பிரியமாயிருக்குது. அந்தக் கிடாயி தூக்கிப் போட்டவொடன என்து ஓடிப்போயிருச்சே. எம் மானங் கப்பல்ல ஏறுதே (ஆமா கப்பல்ல ஏறுது). எம் மானங் கப்பல்ல ஏறுதே.

பபூன் 1 : மானுக்கு மேலதான் கப்பல் ஏறுது.

பபூன் 2 : டேய் சும்மாயிர்ரா. எங்கிடா தண்ணி குடிக்கப் போயிருக்கு. இப்பத்தான் தேங்கா எண்ண உருக்கி உருவிவுடணும்.

பபூன் 1 : என்னத்த?

பபூன் 2 : கொம்பு ஒடிஞ்சிருக்கு {'கொட்டய உருவி விடு'} போ... போ... போ... விடாத... போ... மாட்டிக் கிட்டு...

பபூன் 1 : ஏ! கொம்புக்குள்ள வந்து மாட்டிக்கிட்டுடா.

பபூன் 2 : ஏ! கொம்புக்குள்ள வந்து மாட்டிக்கிட்டே. ஏ அண்ணே!

பபூன் 1 : ஏ! தம்பி! விடாதடா டேய். ரெண்டு கிடாயும் ரொம்பக் கோபத்ல நிக்குது. படுவா தொட்டுட்ட... போடா... இன்னிக்குச் செத்த... இன்னக்கி (அவன் பொளைக்க மாட்டாம்பா).

பபூன் 2 : போடா! எங்கிடாயப் பதினஞ்சி வருஷமா வளத்துக்கிட்டு வர்றேன். என் அழகு பெத்த கெடாயி. கெடாயி கொம்பு ஒடிஞ்சிட்டா, மதிப்பு இன்ரஸ்ட் போயிரும்டா. ஆத்தாத்தோ... யம்மம்மோ... யாத்தாத்தோ... எங்கிடாய அடிச்சிப் போட்டே...! அம்மா... [கிடா முட்டுகிறது] {சிரிப்பு}. ஏ! ஒடியாடா தடிப் பயலே ஏய்!

பபூன் 1 : மொட்டப் பய செத்தாண்டா இன்னக்கி.

பபூன் 2 : அய்யோ... வயித்ல குத்திப் போட்டிடுச்சே (அட வயித்ல குத்திடுச்சாம்ப்பா). அப்பா! நானு உன்ன என்னமோன்னு நெனச்சிருந்தேன். அய்யோ ரெண்டு கெடாயுஞ் சேந்து என்னையச் செனையாக்கிடுச்சே [கிடா முட்டுகிறது]. அப்பா... அப்பா... ஏய்! அந்தக் கெடாயப் புடிடா... அந்தக் கெடாயப் புடிடா... ஏய் குலுங்கக் குலுங்க ஆட்டி வெரட்டிப் புட்டான்.

பபூன் 1 : எரும மாட்டுப் பய. கிடாயப் புடிக்கத் தெரியல. கிடா கைல முட்டு வாங்குனாண்டா இவன்... [இசை].

இராமர் : வனங்களெல்லாம் தேடிப் பாக்கிறேன். உண்மையான மான்கள் இருக்க வேண்டிய இடங்கள் தெரியவில்லையே. நெசமான மான் பிடித்துக் கொண்டு அடுத்த வனம் நான் போக வேண்டும். {'மாட்டுச் சண்டை, மாட்டுச் சண்டை} ['இல்ல, இல்ல, நாளைக்கு'].

இலக்குமணர் : அண்ணா!

இராமர் : தம்பி! பர்ணகசாலையில் அதிக ஜாக்கிரதையாக இருப்பதாக நான் சொல்லி வந்தேன். இவ்வளவு தூரமாக, பர்ணகசாலையை விட்டு வந்த காரணமென்னப்பா?

இலக்குமணர் : மன்னிக்க வேண்டும் அண்ணா★. எங்களைக் காவலாக வைத்திருந்தீர்கள். நீங்கள் அபாயச் சத்தம் போட்டதாகத் தேவியன்னவர்கள் என்னிடம் ஆகாத வார்த்தை சொல்லி விட்டார்கள். அத நான் மனதிலே பொறுக்க முடியாமல், ஓட்டமாக நான் ஓடி வந்து விட்டேன் அண்ணா!

இராமர் : தம்பி! எனக்கொரு ஆகாத வார்த்தையைச் சொல்லி விட்டாள். உனக்கும் ஆகாத வார்த்தையைத் தெரியப்படுத்தி விட்டாள். பர்ணகசாலையில் எப்பேர்ப்பட்ட ஒரு ஆபத்து நடக்குதோ தெரியவில்லை. கூடிய சீக்கிரத்தில் பர்ணகசாலையை நாங்கள் தேடிப் போகலாம். புறப்படு... [இசை]

[உரைப்பாடல்]

மான் வேட்டை ஆடுவதற்காகப் போன பின்னால் சனகரின் குழந்தை என் தேவி முதலிழந்தேன் லச்மணா ...தம்பி... லச்மணா

மூன்று பேர்கள் இருந்த இடந்தனிலே

மூன்று பேர்கள் இருந்த இடந்தனிலே

★'ஏம்மா கதய நடத்தனுமா. இல்ல ஒங்க நாடகத்த நீங்க நடத்றீங்களா?' என்று பாபுராவ் சத்தமிடுகிறார்.

எந்த மிருகங்கள் தானோ
எந்த ராட்சதர்கள் தானோ
எந்த திருடர்கள் தானோ
இன்னுந் தெரிய வரவில்லை
....
வா லச்மணா தேடுவோம். லச்மணா
...ததன... அ... அ... அஅ...
அஅ...ஆஆஆ... அஅ...

இராமர் : ஆனால், உண்மையான மான்களை நான் கொண்டு வந்திருக்கிறேன். பர்ணகசாலை விட்டு இவ்வளவு தூரமாக எங்குச் சென்றாய்? என்னை விட்டு நீ பிரிந்து விட்டாயே ஜானகி. மிருகங்கள் சாப்பிட வேணுமென்றால்... சீதா லட்சமியத் தான் சாப்பிட வேண்டும். பர்ணகசாலை இருக்கவேண்டுமல்லவா? இது மனிதர் செய்த காரியமே தவிர, மிருகங்கள் சாப்பிட வர வில்லை. இந்த வழியே நாங்கள் பார்த்துச் சென்றால், சீதையைப் பார்த்தவர்கள், கண்ட வர்கள், யாராவது... கண்டவர்கள் சொல்லி விட்டால்...*

பால் : வாராயோ வெண்ணிலாவே
கேளாயோ எந்தன் கதையை
அகம்பாவம் கொண்ட சகியால்

பாவையாட்டி : யஷோர் சத்தம் போடாதீங்க. சத்தம் போடா தீங்க. மீண்டும் இரைச்சல் சத்தம் போடாதீங்க. சத்தம் போடாதீங்க. சத்தம் இல்லாமல் இருந்தா வில்ல கதைய நடத்தலாம்.

---

* சிறு சலசலப்பு. 'தூ என்ன...யாரு அவரு?' என்று பாபுராவ் கேட்க, காளியம்மாள் ''இவ்வளவு பெரிய மனுஷன் சின்னப் புள்ளைட்ட ஏன் வாயக் குடுக்கிறே'' என்க, பாபுராவ், ''அது எவன்னு பாரு அவன, அவனால என்ன வந்திடும் பாப்போம்'' என்று எழுந்திரித்தார். பின் சலசலப்பு சிறிது நேரத்தில் அடங்கியது.

ஊட ஊட சத்தம் போட்டா எப்படி? ஒரு ஆளு சொல்றது, இவ்வளவு பேருக்கும் கேக்கணும். ஊட ஊட சத்தம் போடறீங்களே... சத்தம் போடாதீங்க. சத்தம் போடாம உக்காருங்க.

பாடல் : **எந்தன் ஆசையுள்ள சீதை நான்**
எந்தன் ஆசையுள்ள சீதை நான்
......

ஜானகி வித்தைதானோ என்னவோ தெரிய வில்லை. சீதையை மாயமாக சிறை எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள். [அய்யய்ய. சத்தம் போடாதீங்கம்மா] (வெளியே போடுறாங்க சத்தம்... ம்ம்)

இலக்குமணர் : அண்ணா. இதற்கு அடுத்த வனம் நாங்கள் தேடிப் போகலாம் வாருங்கள்...

பாடல் : **ஆகாரம் ஒன்றில்லாமல்**
அலைந்தேன்... மலைப் பக்கமாய்
நீல வண்ண மேகக் குயிலே
தேடி வந்தேன் நானே - சீதா மயிலே!
தேடி வந்தேன் நானே சீதா மயிலே!

இராமர் : தம்பி! யாரோ ஒருவன், நமது சித்தப்பன் சடாயு அரசரை, இரண்டு இறக்கைகளை வெட்டியி ருக்கிறான். எந்த ராட்சதன்தானோ தெரிய வில்லை

இலக்குமணர் : அண்ணா! ம்ம்ம்* - ஆனால் உன்னுடைய கைல இருக்க வேண்டிய அவயங்களை எடுத்து வாருங்கள். இரண்டாவது, உயிர் உண்டாகும். யாருடன் நாங்கள் சண்டை செய்தது என்று வரலாறுகள் கேட்கலாம்.

★'இப்படி ஒரு குட்டிக் கலாட்டா ஊடால. இப்படி ஒரு சண்டை' என்கிறாள் காளியம்மாள்.

பாடல் : மோட்சம் கிடைத்ததே! சடாயுக்கு
மோட்சம் கிடைத்ததே! சடாயுக்கு
மோட்சம் கிடைத்ததே!
.....
அமிர்தம் தெளித்தாரே ராமர் - சடாயுவை
அமிர்தம் தெளித்தாரே ராமர்.

இராமர் : சித்தப்பா சடாயு அரசரே! தங்களுடைய இறக்கையை வெட்டினவர்கள் யார்? எந்த ராட்சதர்கள்? சொல்லுங்கள். ஆனால் அவர்களுடைய சிரசை நான் அறுத்து வருகிறேன்.

சடாயு : மகனே ராமா! மகா கெட்டிக்காரர்கள்தான். என்னுடைய காட்டிற்கு நீங்கள் வந்ததனால், ராட்சதர்கள், அரக்கர்கள் சீதையை மாயமாகக் கொண்டு போய் விடுவார்கள் என்று நான் எவ்வளவோ புத்திமதியான வார்த்தைகளைச் சொல்ல, ஆனால் நீங்கள் இரு பேருமாக மான் பிடிப்பதற்காகப் போய் விட்டீர்கள். ராவணன் பண்டார வேஷமும், மாரீசன் மான் வேஷங்களை எடுத்து வந்து, சீதையை மாயமாகவே கொண்டு போய் விட்டான். ஆனால், சீதாலட்சுமி சொன்ன வாக்குகள்... என் உயிர் போவதற்கு இன்னும் ஐந்து நிமிஷம் இருக்கிறது. இன்னும் அஞ்சி நிமிஷத்துக் குள்ளாக பாதையை எல்லாம் சொல்லித் தர்றேன். கவனமாகவே கேளுங்க்ள். இந்தப் பாதையில் சென்றால், முன்பதாகக் கவந்தன் பிராமணனுடைய வனங்கள். அதற்கு அடுத்த வனம் சௌரி கெந்துருகனுடைய வனம். அதற்கு அடுத்த வனம் மதுகவாரிசி வனம். கெங்கா நதிகள் தங்க நிற்பவர். பிரம்மாண்டமான ஆலமரம். அதற்கு அடுத்த வனங்கள் கிஷ்கிந்தா நகரங்கள். துஷ்ட வாலியோட அரவணை. வாலியானவன் மூத்தவன். சுக்ரீவன் இளையவன்.

சாந்த குணம் படைத்தவன். ஆனால் துஷ்ட வாலியானயவன் மகா முரடன். எதுத்து வரக்கூடிய வீரர்களில் பாதி வீரத்தை வாங்கக் கூடிய ஒரு கெட்டிக்காரன்... மகா சாமர்த்திய முடையவன். துஷ்ட வாலியைக் கொன்று சுக்ரீவனுக்கு முடிசூட்டு விழா நடத்தி வைத்தால், எழுபது வல்ல வானரர் படைகளும், எழுபத்து நாற்படை வீரர்களும் தாங்களுடைய பாதாரம் அடைக்கலமாகவே சேருவார்கள். அந்த இராவணனை லேசாகவே ஜெயித்து விடலாம் ராமா! சீதை சொன்ன வாக்கு சரியாகவே முடிந்தது... என் பிராணன்கள் போகிறது. ராமா...!

இராமர் : தம்பி! பாதைகள் எல்லாம் சொல்லிக் கொடுத்து, கடைசியில் நம் கண்ணுக்கு முன்பதாகவே மரண மடைந்து விட்டார். சிவனுடைய கோயிலில் அர்ஜனை செய்து கொண்டு இருக்கக் கூடியவர். இவரை நாங்கள் சுடுகாடில்லாத இடங்களைப் பார்த்து நாங்கள் தகனம் செய்ய வேண்டும்.

இலக்குமணர் : சுடுகாடு இல்லாத இடம், எந்த இடம் இருக்குது அண்ணா? ஜான் மண்ணுக்கு மூணு சுடுகாடா இருக்குது. உங்கள் உள்ளங்கை தான் சுடுகாடு இல்லாத இடம். உள்ளங்கையில் வைத்துத் தகனம் செய்யுங்கள் சடாயு அரசனை...

பாடல் : **சடாயு அரசரைக்**
கனிவுடனே தகனம் செய்யத்
தகனம் செய்தாரே ராமர் - சடாயுவைத்
தகனம் செய்தாரே ராமர் - சடாயுவைத்
தகனம் செய்தாரே.

இராமர் : தம்பி! இந்தப் பாதையிலே நாங்கள் செல்ல வேண்டும்.

இலக்குமணர் : முன்பதாகக் கவந்த பிராமணனுடைய வனம் இருக்கிறதாம். அதற்கு அடுத்த வனம் சௌரி கெந்துருகனுடைய வனங்கள், மதுகவாரிசி வனம், கிஷ்கிந்தாபுரிப் பட்டணம். அங்கே நாங்கள் போகலாம். புறப்படுங்கள் அண்ணா!...

பாடல் : ஆகாரம் ஒன்றில்லாமல்
அலைந்தேன் மலைப் பக்கமாய்
....
நீல வண்ணமேகக் குயிலே
தேடி வந்தேன் நானே சீதா மயிலே
தேடி வந்தேன் நானே சீதா மயிலே

பாவையாட்டி :இவன்தான் கவந்த ராட்சதன். முன் காலத்தில் இவன் பிராமணனாக இருக்கக் கூடியவன். ராட்சதனாக இப்படி மாறி விட்டான். ஆலயங்கள் முழுவதும், கோயில் பூராவும் பூஜை செய்வதற்குப் பூக்கள் கொண்டு வந்து குடுக்க வேண்டிய ஒரு வழக்கம். ஒரு நாள் தினத்தில் ஈஸ்வரனுடைய ஆலயத்துக்குப் போக வேண்டிய கோவிலினுடைய பூக்களை இவன் மகர்ந்து பார்த்தான். மோந்து பார்க்க, அவர், ஈஸ்வரர் வந்து, ''அடே கவந்த பிராமணா! எப்படி என்னுடைய கோவிலுக்கு வரவேண்டிய பூக்களை மகர்ந்து பார்க்கலாம்'' என்று கவந்த பிராமணனுக்குக் கவந்த ராட்சதனாகவே சாபத்தைக் கொடுத்து விட்டார். இவர், இராமருடைய கால்கள் இவனுடைய திரேகத்தில் பட்டவுடனே, இவனுடைய சாபங்கள் எல்லாம் விமோசனங்களாகச் செய்து விடுகின்றன.

பாடல் : ராம... ராகவா... ராம... ராகவா...
ராமா... ராகவா... ராம... ராகவா
.....
.....

இராமர் : ஏய்! நீ யார்? முன்பதாகப் பார்க்கும்போது பிரம்மாண்டமான பூதமாக இருந்தாயே! என்னுடைய கால்கள் பட்டவுடனே சுயரூபமாக வந்த காரணமென்ன? உள்ளதைச் சொல்.

கவந்தன் : ஏ நாராயணா! பரந்தாமா! இது என்னுடைய வனந்தான். நான்தான் கவந்த பிராமணன் என்று தெரியப்படுத்தி வருவார்கள். ஈஸ்வரன் கொடுத்த ஒரு சரபங்கள்...

இராமர் : ஈஸ்வரர் எப்படி உனக்குச் சாபத்தைக் கொடுத்து வந்தார்? நீ என்ன குத்தங்கள் செய்து வந்தாய்? வரலாறுகளைச் சொல்.

கவந்தன் : சுவாமி. ஈஸ்வரனுடைய ஆலயத்துக்குப் பூக்கள்லாம் கொண்டு போய்க் கொடுக்க வேண்டிய ஒரு வழக்கம். ஒரு நாள் தினத்தில் மலர்களை நான் கொண்டு போகும் சமயத்தில் அந்த மலர்களை நான் மகர்ந்து பார்த்தேன். மகர்ந்து பார்க்க, ஈஸ்வரர் நேருக்கு நேராக வந்து, 'கவந்த பிராமணா! என்னுடைய ஆலயத்துக்கு நீ பூஜை செய்தது தெரியாமல், நான், என்னுடைய மலர்களை நீ மகர்ந்து பார்த்து விட்டாய். கவந்த பிராமணனுக்கு கவந்த ராட்சதனாகப் போகக் கடவாய்' என்று சாபத்தைக் கொடுத்து விட்டார். நான் இரண்டாவது முறை வரங்களைக் கேட்டேன். 'தெரிந்தும் தெரியாமலும் இந்தக் காரியத்தைச் செய்து விட்ட என்னை மன்னிக்க வேண்டும். சாபத்தை உதாசனம் செய்ய வேண்டும்'' என்று நான் கேட்க, ஆனால், 'ராமர்' லச்சுமணர் உன்னுடைய காட்டுக்கு வருவார்கள். அவர்களை எதிர்த்து நின்று நீ சண்டை செய்ய வேண்டும். ராமருடைய கால்கள் உன்னுடைய திரேகத்தில் பட்டவுடனே சாபங்கள்லாம் விமோசனமாகி விடும்' என்று ரெண்டாவது

வரங்கள் கொடுத்தார். ஈஸ்வரனார் கொடுத்த சாபங்கள் விமோசனம் ஆகி விட்டது. நாராயணா! எனக்கு நல் மோட்சம் தரவேண்டும் பரந்தாமா!

இராமர் : கவந்த பிராமணா! நீ செய்து வந்த அக்குறுவங்கள் இனிமேல் செய்ய வேண்டாம். ஓடிப் போ... தேவலோகம்.

பபூன் 2 : யம்மா.. ய்யம்மா... (ஏ! அய்யரப்பா... அவரு அய்யரு.) அட நம்ம அயிர மீனா? அயிர {அய்யரு} அயிர மீனு (அய்யருரன்னா அயிரமீனா) அயிர மீனு... யாத்தாத்தோ... அம்மாம்மோ... யாத்தாத்தோ...

கவந்தன் : டேய்! ஆனால் பிராமணாளிடம் வந்து இப்படி யெல்லாம் இடக்கு பேசலாமோ?

பபூன் 2 : என்னது? {அவரு அய்யரு} பிராமணாள்ட்ட எடக்கு பேசலாமாங்கறார்?

கவந்தன் : பிராமணாள் வந்திருப்பதானால், நீ சூஸ்திரன், ஆனால், அசிங்கமான வார்த்தைகள்லாம் பேசலாமோ?

பபூன் 2 : ப்ழப்பு... ப்ழப்பு... ஒரே மூச்சா இழுக்குறாரே எளவு? ஏய்! எங்க பாட்டி செத்து நாலு வருஷமாகுது. அதுக்கு வந்து இந்தக் கருமாதி நான் செலுத்துகிறேன். என்ன... இந்த மாதிரியா அய்யமார்களை நான் தேடிக்கிட்டே அலையறேன். எனக்கு எசந்த ஐயர் கெடைக்கல (சர்தான்). கருமாதியும் செலுத்தல... என்ன... இவர வச்சி அந்த நல்ல காரியத்தை முடிக்கணும். இவரு என்ன கேக்குறாரோ? (என்னமோ கேட்டுப்பாரு).

பபூன் 2 : ஸ்வாமி! அதாவது, கருமாதி செலுத்தணும் எங்க பாட்டிக்கி. அதுக்கு என்னென்ன சாமான்

வேணும்? அதுக்குத் திதி குடுக்கணும். திதி குடுக்கணும்.

கவந்தன் : அடே! உன் பாட்டி இறந்து விட்டாள்... அவளுக்கு நல்ல காரியம் செய்ய வேண்டும்... திதிகள் செய்ய வேண்டும் அப்படீன்னு சொல்லுகிறாய். அப்படித்தானே.

பபூன் 2 : அதுக்கென்னென்ன சாமான் வேணும்?

கவந்தன் : அடேய்! அதாவது... தேங்காய் வந்து, இரண்டு மூடை தேங்காய் வேணும் (ஒரு வருஷத்துக்குப் பாக்குறாரு சாப்பாட்டுக்கு)

பபூன் 2 : ரெண்டு மூட்டைத் தேங்காய் வெல இப்ப என்ன தெரியுமா? (தேங்கா ஒண்ணு ஒண்ணேகால் ரூபா). ஒரு தேங்கா ஒண்ணரை ஒண்ணே முக்காலுக்குக் கொறஞ்சி கெடையாது. ரெண்டு மூட்ட தேங்கான்னு சொன்னா... கொஞ்சமா யிருக்கும்? எரநூறு தேங்கா ஆகுதே!

கவந்தன் : அடேய் அவ்வளவும் வேணுமடா.

பபூன் 2 : வேற எதுக்கு சாமி?

கவந்தன் : அடேய். அவ்வளவும் உடைத்து, வரக்கூடிய வர்களுக்கு ஆளுக்கு ஒரு சில்லாகக் கொடுக் கணும்டா.

பபூன் 2 : சரி இருங்க. கொஞ்சம் எடுத்திட்டு வந்திடுறேன் சாமி... கடையெல்லாம் பூட்டியிருக்காங்க. மதுர டவுணெல்லாம் அடங்கிப் போச்சு. மார்க்கெட் டெல்லாம் பூட்டிட்டாங்க. மார்க்கெட்டுக்குப் போயிருந்தேன். பத்து இருபது செரட்டக் கெடந்தது. என்ன... தேங்கா செரட்ட கெடந்தது.. அதப் பெறக்கி கொண்டு வந்தேன். ஒரு சாஸ்திரத்துக்குத் தானே... (ஆமாம்) {போட்டு ஒடச்சிருக்குங்க}.

கவந்தன் : அடேய் தேங்காய் கெடைக்லையோ?

பபூன் 2 : கெடைக்ல சாமி.

கவந்தன் : அடேய் பச்சரிசி வந்து ஒரு ஒண்ணரை மூடவேணும்.

பபூன் 2 : பச்சரிசி ஒண்ணரை மூட {வருஷத்துக்கு} பரவா யில்லையே. சாமி வீட்டுக் காட்ல போயி கேட்டேன். அம்மா சொன்னாங்க. 'நெல்லெல் லாம் அவிச்சிட்டோம்' அப்படீன்னாங்க. பச்ச நெல்லு உமி கெடந்திச்சி. அதக் கொண்டாந்து வச்சிட்டேன். சாஸ்திரத்துக்குத்தான சாமி!

கவந்தன் : அடே! என்னடா அது. நான் கேக்கிறதெல்லாம் சும்மா கொண்டு வந்து வச்சிக்கிட்டிருக்கியோ?

பபூன் 2 : சும்மாதான் வச்சிட்டிருக்கணும் சொமந்து கிட்டா இருக்கணும்.

கவந்தன் : சர்தான். அடே! நல்லெண்ணெய் வேணுமே.

பபூன் 1 : நல்லெண்ணெய் என்னத்துக்கு? எண்ணெய் தேச்சி முழுகவா? (அடே இல்லப்பா... யட்சத் துக்கு) என்னது? (வெளக்குக்கு ஊத்றதுக்கு) வெளக்குக்கு ஊத்றதுக்கா? எவ்வளவு வேணும்?

கவந்தன் : அடே! ஒரு மூணு லிட்டர் வேணும்.

பபூன் 2 தாயோளி! மூணு லிட்டருக்கு எவன் வீட்ல கொள்ளயடிக்க? சாமி! கொஞ்சம் பொறுங்க. வீட்ல இருக்கான்னு பாத்துட்டு வந்திடுறேன்... சாமி... கடையெல்லாம் பூட்டிட்டாங்க. நல் லெண்ண பாட்டில்... வாங்கின பாட்டில் இருக்கு. அதுல கொஞ்சம்போல தூர்ல ஒட்டியிருந்தது. அதைக் கொஞ்சம், அந்தப் பாட்லக் கொண்டு வந்து வச்சிருக்கேன். ஒரு வாடக்கித்தான.

கவந்தன் : அடே! நெய் வேணுமடா நெய்.

பபூன் 2 : நீ எதுக்கு (அடேய்... நெய்! யட்ஷத்துக்கு ஊத்றதுக்கு நெய் வேணும்) எச்சியக் காரித் துப்பவா? (டேய் யட்ஷத்துக்கப்பா... யக்ஷயம் வளர்க்கிறதுக்கு) யட்சயம்னா அர்த்தமென்னா எளவு? (அடா ஓமகண்டம் வளர்க்கிறதுக் குப்பா). ஓகோ... சர்தான். சர்தான். நெய் வேணும். அது எவ்வளவுக்கு வேணும்.

கவந்தன் : அடா... அது வந்து, ஒரு நாலு படி நெய் வேணும்.

பபூன் 2 : ரொம்பக் கொறச்சித்தான் சொல்றீங்க சாமி! வேணும்னா டவுனுக்குத்தான் போவணும். காலேலதான் வரும். அதுவும் வடக்கயிருந்து வரணும். திண்டுக்கல் பக்கமிருந்து வரணும். என்ன... பால் வந்து, நெய் வந்து... இதுக் கெல்லாம்... அதெல்லாம் ஒண்ணுங் கெடயாது. யாரோ ஒரு ஆளு, பாவம் எலையில் வழிச்சிப் போட்டிருந்தாங்க. அந்த எலையக் கொண் டாந்து வச்சிருக்கேன். நெய் வாட அடிக்கும். அது நெய் வாடயோ, இல்ல ''பீ'' வாடயோ {சிரிப்பு}. அது என்ன வாடயா இருந்தாலும் சரி. அத வச்சிக்கிட்டு வெளுத்துக் கட்டிடுவோம்.

கவந்தன் : அதெல்லாம் ஒண்ணும் வேண்டாமடா (சரி. அப்படிச் சொல்லுங்க). அடே எட்டி வெறகு வேணும். ஆல வெறகு வேணும். புளிய வெறகு வேணும்.

பபூன் 2 : வெறகு எதுக்கு? (அட, யக்ஷம் வளர்கறதுக்கு வேணும்ப்பா. அரச வெறகு, ஆலம் வெறகு, பொங்கம் வெறகு, புளிய வெறகு). ஓகோ யாகம் வளத்றதுக்கு வேணுமா?.... அடடே சாமி! அதெல்லாம் ஒண்ணுமில்ல. வாழ மட்ட ரெண்டு... இதுல கெடந்தது {சிரிப்பு}. அதக் கொண்டாந்து வச்சிருக்கேன். அதான் நல்லா

குப்புனு புடிக்கும். அது இதுன்னா ஊதிக்கிட்டு கிடக்கணும். வாழ மட்ட... புடிச்சமன்னா படார்னு ஒங்க தாடிலகூட புடிச்சுக்கும் {சிரிப்பு}

கவந்தன் : அட... நாசமாப் போக! மடையன் குட்டிச் சொவரே. அட... சும்பத் தேவடியா மகனே! பல தேவடியா மகனே! {சிரிப்பு}

பபூன் 2 : அட, என்ன ரொம்ப அகராதியா பேசுற? சும்பத் தேவடியா மகனே... பல தேவடியா மகனேங்ற. நான் பல தேவடியா மகன்னா... நீ ஒரு தேவடியா மகனா? {சிரிப்பு}

கவந்தன் : ஏய். அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். நேரமாகுது. ஆனால் சொல்றது போல சொல்ல வேண்டும்.

பபூன் 2 : எப்படிச் சொல்றது?

கவந்தன் : அடே, இந்தா இந்தத் தர்ப்பப் புல்லானது மோதிரமாகச் செய்திருக்கிறேன். அதை இந்த விரல்ல மாட்டு.

பபூன் 2 : மாட்டிட்டேன்.

கவந்தன் : நான் சொல்றது போல நீ சொல்ல வேண்டும்.

பபூன் 2 : நீங்க சொல்றது போல நான் சொல்லணுமா? [சத்தம் போடாதீங்க] சொல்லுங்க சாமி!

கவந்தன் : அடே! ஈ சுந்தரானமகா. அடே இந்த வெறக எடுத்து அந்தத் தீயில போடு. அந்த வெறக எடுத்துத் தீயில் போடுடா.

பபூன் 2 : இத எடுத்து அதுல போடணுமா?

கவந்தன் : அட, நான் சொல்றது போலச் சொல்லு. ஆனால் இந்த எண்ணெய எடுத்து ஊத்த வேண்டும். அடே! ஈ சுந்தான மகா.

பபூன் 2 : வாயில நொழயிலயே.

கவந்தன் : அடே, ஈ சுந்தான மகா... அட செவிடா... அடே தடிப் பயலே!

பபூன் 2 : சொல்லுங்க சாமி.

கவந்தன் : அடே! ஈ சுந்தானமகா {'வாயிலே நொழயிலயே'} {சிரிப்பு}

பபூன் 2 : என்னடா இது? (அட, அய்யர் சொல்ற மாதிரி சொல்லப்பா). என்னென்னமோ மொண மொணங்கறாரே (ஏ சுத்தமான மகா).

கவந்தன் : அடே! ஈ சுந்தான மகா.

பபூன் 2 : அடே, ஏ சாந்தான மகா. என்னத்த சாந்தானுமோ?

கவந்தன் : அடே, ஈ திர்தான மகா...

பபூன் 2 : தீயக் காமிச்சுக்கிட்டு லைட்டப் பொருத்தாம*

கவந்தன் : ஏ! யக்கூர்னமகா.

பபூன் 2 : என்னது.

கவந்தன் : அட... யக்கூர்னமகா.

பபூன் 2 : அடே. பயலே! ஒனக்கு அக்குறுமமா** {சிரிப்பு}

கவந்தன் : அடித் தடிப் பயலே! அட, அகராதியாப் பேசுறயே. அகராதியா பேசுறயே!***

பபூன் 2 : நீ அகராதியாப் பேசுறயே!

★செருப்பைத் தூக்கி எறிந்து சிறுவர்களுக்குள் சண்டை.. என் செருப்பையும் காணவில்லை.

★★'செருப்பில்ஒண்ணக்காணம், ஒண்ணுதான்கெடக்குது' என்கிறார்ஒருவர்.

★ஒண்ணுதான் கெடக்குது. ஒண்ணக் காணோம் என்று, சின்னச்சாமிராவ் கூற, 'நான் முடியட்டும் முடியட்டும்' என்கிறேன்

கவந்தன் : அட நாசமாய்ப் போக.

பபூன் 2 : நீ நாசமாப் போக {சிரிப்பு}

கவந்தன் : டே! என்னடா திருப்பித் திருப்பிச் சொல்றியே.

பபூன் 2 : சாமி எம்மேல குத்தமா? நீங்க தான சொன்னீங்க. திருப்பித் திருப்பிச் சொல்லணும்னு. 'நான் சொல்றது போல சொல்லடான்னு சொன்னே.' நான் சொல்லிட்டேன். எம்மேல குத்தமில்ல.

கவந்தன் : அடே. அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. ஏ சுந்தான மகா.

பபூன் 2 : ஏ சுந்தாயமா.

கவந்தன் : தீவர்த்தனமகா.

பபூன் 2 : தீ வட்டிப் பாடட்டுமா.

கவந்தன் : அக்கூர் மகா.

பபூன் 2 : அக்குறுமமா.

கவந்தன் : சுக்லாம்ப்ரதமா. அடே, சுக்லாம்ப்ரதம்.

பபூன் 2 : என்னடா இது (சுக்லாம்ப்ரதனம்)

கவந்தன் : அடே! சுக்லாம்ப்ரதம். என்ன ப்ரதம்? (சுக்லாம்ப்ரதனமாம்).

பபூன் 2 : சுக்க, நல்லா இடிச்சி, சாமிக்கி வச்சிச் சாப்பிடணும் {சிரிப்பு}. அப்பத்தான் காரமாயிருக்கும்.

கவந்தன் : அடே! ஓம் பாட்டி பேரென்னடா?

பபூன் 2 : அடே! ஓம் பாட்டி பேரென்னடா? {சிரிப்பு}

கவந்தன் : ஒந் தாத்தா பேரென்ன?

பபூன் 2 : ஒந் தாத்தா பேரென்ன {சிரிப்பு}

கவந்தன் : ஒன் அப்பன் பேரென்ன?

பபூன் 2 : ஒன் அப்பன் பேரென்ன {சிரிப்பு}

கவந்தன் : சும்பத் தேவடியா மகனே! [அடிக்கிறான்]

பபூன் 2 : என்னத் திருப்பித் திருப்பி அடிக்ற படுவா (படுவாப் பயலே)... ஒரு தடவ அடிப்பியா... என்ன... ஒயாம அடிக்கிற [இருவரும் அடிக்கிறார்கள்]...

பாடல் : ஈசனே உண்மை நிகர் வாசகனே.

....

....

இராமர் : தம்பி! சௌரி கெந்துருவனுக்கு மோட்சங்கள் கொடுத்தோம். கவந்த பிராமணனுக்கு மோட்சங்கள் கொடுத்தோம். ஆனால் இன்னும் அதிக தூரம் போகணும். கங்கா நதிகள்... சவுகரியமான ஒரு இடமாக இருப்பதனால் இந்த இடத்தில்... வரங்கள்லாம் வாங்கி வந்தது எனக்கொரு ஆயாசமாக இருக்கிறது. களைப்பாக வருகிறதனால இந்த மரத்துக்கடியில் சிறிது நேரம் படுத்து நித்திரை செய்ய வேண்டும்.

இலக்கு. : அண்ணா! என்னுடைய மடி மீதில் நீங்கள் நித்திரை செய்யலாம்.

பாடல் : நித்திரை செய்தாரே
தசரத ராமர் நித்திரை செய்தாரே
நித்திரை செய்தாரே... ராமர் நித்திரை செய்தாரே
ரகுராமர் நித்திரை செய்தாரே*

அனுமன் : ஆம்! என் தாய் பேர் ஆஞ்சனா தேவி! தகப்பன் பேர் வாயு பகவான். என்னுடைய தாயிடம் நான் கேட்டேன், "தாயே இந்த உலகத்தில்

★இன்னுங் 'காமிக் சீன்' என்று யாரோ கூற, நாளைக்கி, ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு 'காமிக்' என்கிறார் பாபுராவ்.

என்னைக் காப்பாத்தக் கூடியவர்கள் யார்?''
ஆனால் என்னுடைய தாயிடம் நான் கேட்க, என்னுடைய தாயானவள் சொல்லி வருவாள், தாயே, 'அனுமாரே, ஒவ்வொரு அசுரர்களைக் கண்டு பிடிப்பதற்கு உன்னால் முடியும். நான் சொல்லக் கூடிய ஒரு அடையாளங்கள் கண்டு பிடித்தால் அவர்தான் ஸ்ரீ நாராயணர், ஸ்ரீராமர் என்று சொல்லி வந்தார். எப்படி அடையாளம்? 'காதிலே கவச குண்டலம். நெற்றியிலே திருநாமம். இடுப்பில் ஒட்டியாணம். தூக்க முடியாத வீரப்பிரசண்ட கோதண்டம். ஒருவர் பச்சை நிறமாக இருப்பார்கள். ஒருவர் சூரியப் பிரகாசமாக இருப்பார்கள்' என்று என்னுடைய தாயானவள் சொல்லி வந்தாள். இராமர் உறங்குகிறார். அவர் தம்பி இளைய பெருமாள் ஏக விழிப்பாக இருக்கிறார்கள். இவர்கள் உறக்கத்தை நான் கெடுக்க வேண்டும். இவருடைய முகத்துக்கு நேராக ஒரு கொப்புகள் வைத்துவிட்டு, அந்தக் கொப்புகள் இலையை நான் கிள்ளி எறிய வேண்டும். அப்பாவாவது 'எந்திரிக்க மாட்டாரா?' நான் செய்து வருகிறேன்.

இராமர் : தம்பி!

இலக்கு. : அண்ணா!

பாவையாட்டி : இராமர், 'ஒரு குரங்கு பார்த்தாயா? என்னுடைய உறக்கத்தைக கெடுத்து விட்டது' என்று சொல்லவும் அந்தக் குரங்கை நான் வெட்டி வருகிறேன் என்று இளைய பெருமாள் விரட்டிச்செல்கிறார்

இராமர் : தம்பி! குரங்கு கொல்வது ஒரு வீரமல்ல.

இலக்கு. : உன்னுடைய நித்திரை கெடுத்த குரங்கை என்னுடைய வீர வாளால் வெட்டி அதம் செய்து

விடுகிறேன். உத்தரவு கொடுக்க வேண்டும் அண்ணா!

இராமர் : ஆனால், அந்தக் குரங்குடைய தேகத்தில்... நாங்கள் போட்ட அடையாளங்கள் போல் அந்தக் குரங்குகளும் போட்டிருக்கிறது. அந்தக் குரங்கை மெதுவாக அழைத்து வா. யார் எவரென்று நாங்கள் கேட்கிறோம்.

இலக்கு. : அப்படியா? அழைத்து வருகிறேன்... [இசை]

இராமர் : அனுமாரே! யாரப்பா நீ?

அனுமன் : தாய் பேர் ஆஞ்சனா தேவி. தகப்பன் பேர் வாயு பகவான். ஆனால் தங்களிடம் சம்பளமில்லாமல் அடிமை வேலை செய்ய வேண்டி..... என் பெயர் ஆஞ்சநேயர், அனுமார் என்று சொல்வார்கள்.

இராமர் : அனுமாரே! ஆஞ்சநேயரே! இருந்திருந்தும் என் மகனாக வந்து சேர்ந்தாயே! மிகவும் சந்தோஷ மடைந்தேன். ஆனால், இப்பேர்ப்பட்ட ஒரு பராக்கிரமம் படைத்தவன் -கெட்டிக்காரன். உன்னுடைய தாயாகிய சீதா லட்சுமியை இராவணன் சிறை எடுத்துக் கொண்டு சென்ற தைக் கண்ணால் கண்டாயா அனுமாரே! ஆஞ்சநேயரே!

அனுமன் : ஆ! திருட்டுப் பயல்... பத்துத் தலைப் பூச்சியானவன்... கருவாடு தின்னிப் பயல். சீதாலட்சுமியைச் சிறை எடுத்துச் சென்றதைக் கண்ணால் பார்த்திருந்தால் லேசாக விட்டு விடுவனா? அவனுடைய பத்துத் தலைகளும் பனங்காயை வெட்டி எறிந்தது போல் எறிந்து விடுவேன். இருபது கைகளும் கரும்புச் சக்கைகள் ஒடித்தது போலவே ஒடித்து விடுவேன். சுவாமி! எனக்குக் கொஞ்சம் உத்தரவு

கொடுங்கள். அந்த லெங்கையை அப்படியே தூக்கிக் கொண்டு வந்து விடுகிறேன்.

இராமர் : அடேயப்பா... எவ்வளவு வீரம்? எவ்வளவு சாமர்த்தியமாகப் பேசுகிறான்? அறியாத குழந் தையும் தெரியாத சிறுவனாக இருக்கிறாயே. ஆஞ்சநேயரே! இதுதான் ரூபங்களா? வேறு ரூபங்கள் இருக்கிறதா?

அனுமன் : இதுதான் ரூபமென்று நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். ஆதிபிரம்ம தேவன் கொடுத்த என்னுடைய விஸ்வரூபத்தைக் காமித்து வருகிறேன்.

இராமர் : காட்டு பார்க்கலாம்.... [இசை]

அனுமன் : ஆதி பிருமதேவன் கொடுத்த என்னுடைய விஸ்வரூபத்தைத் தாங்கள் காண வேண்டும் ராகவா!

இராமர் : இப்பேர்ப்பட்ட சுய ரூபங்களை வைத்துக் கொண்டுதான் அறியாத குழந்தையாக வந்து சேர்ந்தாயா அனுமாரே! உன்னுடைய சுய ரூபங்களைப் பார்க்கும் போது எனக்கே பயங்கரமாகவே தெரியப்படுத்துகின்றது. உன் சுய ரூபத்தை மறைத்து விடு பார்ப்போம்...இந்த வனத்தில் நீ ஒருவன்தானா? வேறு யாராவது இருக்கிறார்களா?

அனுமன் : ஒருவர் இரண்டு பேரென்று நினைத்து விடாதீர்கள். இந்த வனத்துக்கு அடுத்த வனம் கிஷ்கிந்தாபுரி பட்டணம். அந்தக் கிஷ்கிந்தை யில், வாலி, சுக்ரீவன் அரசர்கள். துஷ்ட வாலியானவன் மூத்தவன். சுக்ரீவன் இளைய வன். சுக்ரீவன் சாந்த குணம் படைத்தவன்... நல்லவன். துஷ்ட வாலியானவன் மகா முரடன்.

எதுத்து வரக் கூடிய பேர்பாதி வீரத்தை வாங்க வேண்டிய கெட்டிக்காரன்... துஷ்ட வாலியான வன். துஷ்ட வாலியைக் கொன்று சுக்ரீவனுக்கு நீங்கள் முடிசூட்டு விழா நடத்தி விட்டால் எழுபது வல்ல வானரர்கள், இருபது நாற்படைத் தலைவர்கள் தங்களிடம் அடிமையாகவே இருந்து விடுவார்கள். ராவணனை லேசாக ஜெயித்து விடலாம் ராகவா!

இராமர் : என்ன? சுக்ரீவன் இருக்கிறான். வாலி இருக்கிறானா? எங்கேயிருக்கிறார்கள்?

அனுமன் : நான் காண்பித்து வருகிறேன்... [இசை]

பபூன் 2 : போனால் போகட்டும் போண்டா... இந்த {'போண்டா, வடை'}

பூமியில் பேண்டது யாரடா {சிரிப்பு}.

பபூன் 1 : டேய் டேய்!. நல்ல பாட்டு பாடுறாண்டா இவன்.

பபூன் 2 : ஒன்னச் சொல்லிக் கொத்தமல்லி

என்னச் சொல்லிச் சீரகமல்லி {சிரிப்பு}

பபூன் 1 : டேய் டேய்! நல்ல பாட்டு பாடுறாண்டா இவன்.

பபூன் 2 : ஒன்னச் சொல்லி கொத்தமல்லி

என்னச் சொல்லிச் சீரகமல்லி {சிரிப்பு}

பபூன் 1 : சீரக மல்லி... கொத்த மல்லி. [அடிக்கிறான்]

பபூன் 2 : ஏல டப்பு டப்புன்னு அடிக்காதடா. டப்பு டப்புன்னு அடிக்கப்படாது.

பபூன் 1 : ஏல! பாட்டு படிக்கிறதுன்னா ஒழுங்கா படிக்கணும்.

பபூன் 2 : ஒரு வருஷம் ஒரு வருஷம் காத்திருந்தா கைல ரெண்டு டப்பா {சிரிப்பு} (ஆமா ஒண்ர டப்பா... டப்பாவா)

பபூன் 1 : ஏல! இப்படியா படிக்கிறாங்க?

பபூன் 2 : ஆமா இப்படித்தான் படிக்கிறாங்க?

பபூன் 1 : எப்படிப் படிக்கிறாங்க?

பபூன் 2 : ஒரு வருஷம் ஒரு வருஷம் காத்திருந்தா கைல ரெண்டு டப்பா {சிரிப்பு}

பபூன் 1 : கைல ஒரு பாப்பான்னு சொல்லப் பாத்திருக்கேன்... டப்பான்னு சொன்னா?

பபூன் 2 : அது கெடைக்காட்டா டப்பாதான் (அது சரி).

பபூன் 1 : டப்பா எதுக்கு?

பபூன் 2 : உப்பு, புளி, மொளகாத்தல் போட்டு வைக்க.

பபூன் 1 : அது அவங்களுக்குத் தெரியாதாக்கும்?

பபூன் 2 : நாந்தானே வாங்கிக் குடுக்கணும்.

பபூன் 1 : ஏய். எனக்கு ரெண்டு டப்பா குடுடா.

பாடல் : ஒரு வருஷம் ஒரு வருஷம் காத்திருந்தா
கைல ஒரு டப்பா
சுத்தி முத்திப் பாப்பா
இல்ல முக்குல வந்து பேளுவா (பரவாயில்ல)
அட முத்தம் ஒண்ணு கேப்பா, முக்ல வந்து பேளுவா... இல்ல...

பபூன் 1 : முக்ல வந்து பேளாம... தெருவிலயா வந்து பேளுவா?

பபூன் 2 : சுத்தி முத்திப் பாப்பா

முக்ல வந்து பேளுவா {சிரிப்பு}

பபூன் 1 : பேள மாட்டாங்கடா [அடிக்கிறான்]

பபூன் 2 : ஏய்! டப்பு டப்புன்னு அடிக்காதடா.

பபூன் 3 : ஏலே அஞ்சு பைசா {மாப்ள அஞ்சு பைசா}

பபூன் 2 : எங்ன அஞ்சு பைசா?

பாவையாட்டி : வாலி சுக்ரீவன் சண்டை. வாலியைக் கொன்று சுக்ரீவனுக்கு பட்டாபிஷேகம். ஆனால் நாளைய தினத்தில் 'காமிக்' மஞ்ச விரட்டுக் 'காமிக்கு', எல்லோரும் நாளைக்கு வந்து சேருங்கோ...



இராமாயணம்

வாலிவதை

பதிவு
செய்த : 30.05.1974
நாள்

இடம்: திருமோகூர்
மதுரை.

நிகழ்த்துநர் : ராஜுராவ் குழுவினர்.

கடவுள் வாழ்த்துப் பாடல்	:	ஆரிய பாலா துவாரக சீலா புண்ணிய தேவா பூசிக் கோமா கணபதி ஆடினரே! யானைமுகக் கணபதி ஆடினரே! யானைமுகக் கணபதி ஆடினரே!
பபூன் 1 பாடல்	:	ஆத்தோரமாயிருக்கும் காத்தாடித் தோப்புக்குள்ளே சேக்காளியோடு நான் உலாத்திடப் போனேன் - அங்கெ கண்ணால கண்டேனொரு பெண்ணாலே - அவா பப்புளிக்கா ரோட்டுமேல நின்னாளே...*
		சத்தோம். சைலேன்... இரச்சல். ஏனென்று கேட்டால் சீர்புகழும் நமது திரும்பூர் ஊர்ல இருக்க வேண்டிய அந்தக் குலதெய்வம், திரும் பூர்ல இருக்கக்கூடிய அனைபேர்களையும் ஆதரிக் கிற அந்தக் குலதெய்வமாகிய அந்தப் பெருமா ளுக்கும், காளியம்மன் தேவதைக்கும் அடியேன் அன்பார்ந்த வணக்கம் செய்தேன்... பபூன் ஆக்ட்... பபூன்... ஆக்ட் (ஏ!... ஏய் இங்க வாய்யா...) இன்றைய தினம் இராமாயணக் கதை... தொடர்ந்து இன்று வாலி சுக்ரீவனுடைய யுத்த களத்தை நாம் நடத்திச் செல்லுகின்றோம். சபையி லிருப்பவர்கள் எல்லாரும் சத்தம் போட்டுக்கிட்டு கதையக் கேளுங்கள். எல்லாத்துக்கும் வணக்கம் செய்தேன் பபூன் ஆக்ட்.**

★ பார்வையாளர்களிடம் இரைச்சல். 'எல்லாரும் இப்படி ஒசிலதான் வர்றாங்க... வீடுகள்ள எழவு விழுக' என்கிறார் ராஜீராவ்.

★★ 'ஏய்போகலவாயமூடிக்கிட்டு... கீழ்தண்ட புடுச்சிக்கிட்டு வந்திற்றிங்க அங்கயிருந்தது' என்று ராஜீராவ் கூறவும் பார்வையாளர் பகுதியிலிருந்து ஒரு சிறுவன் மிக மோசமாகப் பதில்கூற, ராஜீராவ் மனைவி! 'ஏய் யார்ரா' என்று கூற, ராஜீராவ் 'போய்ப் புடி' என்கிறார். அமைதியாகிறது.

பபூன் 1 : வாங்க வாங்க, குண்டோதரன் மாப்ளே! வாங்க வாங்க (ஆமா... வாங்க வாங்க)

பபூன் 4 : வாங்க! பபூன் ஆக்ட்காரரே வாங்க... உக்காருங்க. திருப்பூர்ல பத்து முப்பது ரூபா கடன்பட்டு சாப்பிட்டிருக்கீகளே.. காணாதுக்கு... காப்பி சாப்பிடுங்க. [அடிக்கிறான்] {சிரிப்பு}

பபூன் 1 : வாங்க! காப்பி குடுத்திகளே. வீங்கிப் போச்ச கீழ்ே {சிரிப்பு} சூடு 'ஓவராய்ப்' போச்சி. வீங்கிப் போச்சி.

பபூன் 4 : ஏய் இடிக்கிறாம் பார்ரா அவன் {சிரிப்பு}

பபூன் 1 : யோவ்! வாங்க மாப்ளேன்னு கூட்பிட்டேன். காலச்சேத்து சப்புன்னு குடுக்றேகளே! {சிரிப்பு}

பபூன் 4 : பார்ரா, அகராதி புடிச்ச பயா இடிக்கிற இடிய. டேய்! அடி வச்சன்னா சாணி பிதுங்கிறும். (ஏய்) நமக்குக் கோபம் வந்திச்சின்னா எதிர்பாராம அடில கைய வச்சிப்புடுவேன். (ஏய்! அடிமேல கைய)

பபூன் 1 : அடிமேல கைங்றதுக்கு அடீல கைய வைப்பாராமில்ல (ம். அவரு... அதுலதான் கைய வைப்பாரு) இவம் பரம்பரப் பழக்கம், அடீல கை வச்சித்தான் பழக்கம்.

பபூன் 4 : அடீலயும் கைய வைப்பேன். காசு குடுக்காம பொத்தல் போட்டுகிட்டும் பாப்பேன். {சிரிப்பு} (பாரு இன்னக்கி) ஓசிலயும் வந்து பார்பேன். (பாரு) அது பரம்பரத் தொழில்.{தாக்கு}

பபூன் 1 : காசுக்குக் கபோதிப் பயலெ {சிரிப்பு} பதினைஞ்சு பைசாவுக்கு லோபித்தனம் பண்ணி இந்த அநியாயம் பன்றியே... நீ வெளங்குவியா?

பபூன் 4 : யோவ்! அநாவசியமாப் பேசாத. எனக்குக் கோவம் வரும். ரோசம் வரும்.

பபூன் 1 : காசக் குடுத்துப் பாத்தால்ல கோவமும் ரோசமும் வராது.

பபூன் 4 : ஓசீலப் பாக்றவனுக்குத்தான் கோவமும், ரோசமும் வரும். {சிரிப்பு}

பபூன் 1 : ம்ஹூம். பரவாயில்லயே. ரோசம் வரும்... ம்.

பபூன் 2 : ஏய் மக்காக் கோழி. படுவா... {சிரிப்பு}

பபூன் 1 : வந்துட்டாண்டா துண்டுபீடி. திருப்பானந் தெக்கே அல்லிநகரம் ஊர்ல அநியாயம் பண்ண பயா. இந்தப்பய இங்கயும் வந்திட்டான்.

பபூன் 2 : டேய் எவன்டா அநியாயம் பண்ணவேன்? [அடிக்கிறான்]அய்யா, நானிருக்கிற சோக் கென்ன. அய்யா இருக்கற ஒரு மதிப்பென்ன அழகென்ன? நான் மெட்ராஸ் ரௌடி. ஜென்ரல் மேன்..., அய்யா சென்ட்ரல் மேன். சண்டியர் மவன் சண்டியரு. அய்யா பேரச் சொன்னாலும் சுண்ணாம்புச் சட்டிய நாய் நக்காது. (ஒன் அப்பங் காலத்த நக்கும்) என்னடா மக்கா கோழி மொட்டையாங்றே? ம்... இனும மொட்டை யான்னு சொன்ன... துப்பாக்கி வச்சிருக்கேன் சுட்டுப்புடுவேன். (எங்க வச்சிருக்க?)

பபூன் 1 : பிளாட்பாரங்கிட்ட... துப்பாக்கி வச்சிருக்கா மில்ல... பிளாட்பாரம்

பபூன் 2 : டேய்! அப்படி அநாவசியமாப் பேசாத. பீரங்கிக் குண்டு வச்சிருக்கேன்.

பபூன் 1 : எங்க அந்தக் குண்டப் பாப்போம்?

பபூன் 2 : நான் எடுத்துவிட்டா நீ செத்துப் போவ. {சிரிப்பு} (செத்தாப் பரவாயில்ல)

பபூன் 1 : செத்தாப் பரவாயில்ல. எடுத்துவிடு.

பபூன் 2 : டேய்! நீ புள்ளக்குட்டிக்காரன்... சுட்டா நீ செத்துப் போவ. {சிரிப்பு}

பபூன் 1 : அய்யோ. [அடிக்கிறான்]

பபூன் 2 : அய்யோ. [அடிக்கிறான்]

பபூன் 1 : எப்போ? [அடிக்கிறான்]

பபூன் 2 : எப்போ?... எடுடா துப்பாக்கிய... டுர்ர்ர்...* {சிரிப்பு}

பபூன் 1 : டேய் சரியான டுப்பாக்கி வெடி இது. ஏண்டா, இந்த அநியாயமா விடுறியே... நாத்தமெடுத்த பயலே...

பபூன் 2 : டேய், சும்மாயிருடா ராஸ்கல். {சிரிப்பு} இது சாதாரணமான குண்டு. இனும பயங்கர அணுகுண்டு வேற வந்திரும். (எங்க வச்சிருக்க?) நான் எடுத்தன்னா... ஒன்னைய 'அவுட்' பண்ணிப்போடும்.

பபூன் 1 : எங்க... அந்த அணுகுண்டைப் பாப்போம்.

பபூன் 2 : வேண்டாம்ப்பா. நீ புள்ளக்குட்டிக்கார மனுஷன். செத்துப்போவ. {சிரிப்பு-'அடி குடுக்கப் போறான் பாரு'} புள்ளக்குட்டிக்கார மனுஷன்... செத்துப் போவ.

பபூன் 1 : செத்தா பரவாயில்ல. அணுகுண்டைப் பாப்போம். {சிரிப்பு}

பபூன் 2 : இந்தாடா அணுகுண்டு. டுர்ர்ர்.... டுர்ர்ர்... {சிரிப்பு}**

★ ஏதோ மராட்டியில் பேசிக் கொள்கின்றனர்.

★ ராஜுவிடம் 'போட்டுக் கேட்போமா' என்று கேட்ட அவர் மனைவி காளியம்மாள் என்னைப் போட்டுக் காண்பிக்கச் சொல்கிறாள். உடனே நான் 'இப்ப ஒடனேயா, கடசீல போட்டுக் காமிக்கிறேன். கடசீல' என்கிறேன். மீண்டும் 'பேசுனது எல்லாங் கேக்குமில்ல' என்று காளியம்மன் கூற, ''கடசீல போடுவோம்'' என்று நான் கூறுகிறேன்.

பபூன் 3 : மாப்ள...மாப்ள...அடக் கடன்காரப் பய... அடேய்! (கபோதிப் பயலே) ஏலே அஞ்சி பைசாக் குடுடா.

பபூன் 2 : வந்துட்டாண்டா கடங் குடுத்த பய... என்னா?... ஒனக்கு அறிவு இருக்காடா? (ஏன்?)

பபூன் 3 : ஏண்டா?

பபூன் 2 : அஞ்சி பைசாக் குடுத்திட்டு, ஏண்டா பொழு தன்னைக்குங் கேக்றே. (நீ ஏன் வாங்ன?)

பபூன் 3 : அப்ப, அஞ்சி பைசாக் குடுத்தவங் கேக்கப் படாதா?

பபூன் 2 : என் வாழ்நாளேலயே அஞ்சுபைசாக் கடன் வாங்குனது. குடுத்துப் பழக்கமில்லையே. {சிரிப்பு}

பபூன் 3 : அடப்பாவி. இப்படின்னு தெரிஞ்சிருந்தா காசு குடுத்திருக்க மாட்டேனே' எம்பொண்டாட்டி உப்பு வாங்கற காசில்ல ஒங்கிட்டக் குடுத்திட் டேன்.

பபூன் 2 : ஏங் குடுத்தே?

பபூன் 3 : நீ ஏன் வாங்குன?

பபூன் 2 : நீ ஏண்டா குடுத்தே [அடிக்கிறான்]{சிரிப்பு}

பபூன் 3 : அட அஞ்சி பைசா வாங்கிட்டு அடிச்சி அநி யாயம் பண்றான். நீ நாசமாப் போக!

பபூன் 2 : அட, என்னையப் போயி நாசமாப் போகச் சொல்றான். {சிரிப்பு}ஏண்டா நீ சொன்னப் பெறகு நான் நாசமாப் போயிருவேனா? நீ நல்லா பேசப்பேச நல்லா தெம்பாதான் இருப்பேன்... தெம்பா. {சிரிப்பு}

பபூன் 3 : அடப்பாவி. அஞ்சி பைசாக் குடுக்க முடியாம லோபித்தனம் பண்றயடா... நீ வெளங்குவியா?

எம் பொண்டாட்டிலாடா என்னையக் கஞ்சி ஊத்தாம அடிக்கிறா.

பபூன் 2 : புத்திசாலிப் பொம்பிள. அஞ்சி பைசாக் கடன் ஏங் குடுத்தேன்னு அடிக்கிறா. ஒன்னையப் போல ஏமாளி புருஷன் அவளுக்குக் கெடச்சது தப்பாப் போச்சே.

பபூன் 3 : ஏய்! அஞ்சி பைசா குடு.

பபூன் 2 : நடக்காதுடா. [அடிக்கிறான்] அஞ்சு பைசா எனக்குக் கேவலமாயிருக்கு. கேக்காத.

பபூன் 3 : கேவலமாயிருந்தா அஞ்சு பைசாக் குடு.

பபூன் 2 : பார்ரா. இன்னும் அஞ்சு பைசாங்கறான். டேய்... {சிரிப்பு} அட எளவுல.. பின்னால ஒட்டப் பெருசா போடுறான்ய்யா. *(கொஞ்சமாக் குத்திக்க) ஏய்! இந்தப் பயதாண்டா அல்லிநகரம் ஊர்ல டேராவ ஓட்டப் போட்டுக்கிட்டு வந்த பய. டேராவ ஓட்டப் போட்டு ஓசீலப் பாத்தப் பழக்கத்லயே பின்னால ஓட்டப் போடுறாண்டா. {சிரிப்பு}

பபூன் 3 : ஏய்! நான் எங்கயும் ஓட்டப் போடல.

பபூன் 2 : கொஞ்சம்... ஊர் ஊருக்கு ஒன்னைய பொம்ம கெட்டி அடிக்கப் போறேன்.

பபூன் 3 : அடி... அடி...

பபூன் 2 : அட மானங் கெட்ட பயலே. ஏய்! நீ செஞ்சதுக்கு ஊர் பேர்லாடா கேவலமா அடையுது.

பபூன் 3 : அடைஞ்சா அடஞ்சிட்டுப் போவுது.

★பபூன் 3, தன் கையிலுள்ள கத்தியால் பபூன் 2 இன் புட்டத்தில் குத்துகிறான். அது தொடர்பான உரையாடல் இது. இதன் மூலம் காசு கொடுக்காமல் வரும் பார்வையாளர்களுக்கு வார்த்தைச் சூடு வைக்கப் படுகிறது.

பபூன் 2 : அப்படிக் கேவலமா அடஞ்சி... ஏண்டா இப்படி ஒசிலப் பாக்கணும்?

பபூன் 3 : ஏய்! காசு இல்ல. பாத்தேன். அதுக்காக என்ன? ஊர் ஊராச் சொல்றியே. நீ சொன்னா எனக்குக் கேவலம் வந்திருமோ?

பபூன் 2 : வராது. மழுங்கப் பயலுக்கெல்லாம் எப்படி வரும்? {சிரிப்பு} நல்லா ஒருத்தனுக்குப் பொறந் திருந்தா ரோசம் வரும். நீ பலபட்டறைக்குப் பெறந்த பயலாச்சே. [அடிக்கிறான்].

பபூன் 3 : ஏய்! அஞ்சிபைசா வாங்கி எத்தனத் தடவ அடிக்கிறான் பாருடா. [அடிக்கிறான்] {சிரிப்பு}

ஒருவன் : ஏய் மாப்ளேய்! கதைய ஆரம்பிய்யி. ஏய்! கதைய ஆரம்பிய்யி. நேரமாகுது. ஏய்க் கதைய ஆரம்பிய்யா.

பபூன் 2 : எத்தினிப் பைசா குடுத்து இந்த அதிகாரம் பண்ற?

ஒருவன் : ஏய் பதினைஞ்சு பைசாவுக்கு மூணு பேரு வந்திருக்கோம். இந்தா... ஆரம்பிய்யி. சீக்கிரம் ஆரம்பிய்யி.

பபூன் 2 : அடப் பாவிப் பயலே! பதினைஞ்சு பைசாவுக்கு மூணு பேரு வந்து இந்த அதிகாரம் பண்றயே.

ஒருவன் : என்ன, பதினைஞ்சு காசென்ன லேசா?

இன்னும் ஒருவன் : ஏய் அஞ்சி பைசாவுக்கு நாலு பேர் வந்திருக் கோம். சீக்கிரம் ஆட்டத்த ஆரம்பி. (ஆரம்பிய்யி)

மற்றொருவன் : ஏய் மூணு பைசா குடுத்து வந்திருக்கேன். சீக்கிரம் ஆட்டத்தைப் போடு. ஏய்! ஆட்டத்தப் போடு.

வேறொருவன் : வோய்! சீக்கிரம் ஆரம்பிங்க வோய். நேரமாகுது ஒய்.

பபூன் 2 : சே! காசக் குடுத்திட்டு வாப்பா.

வேறொருவன்: இந்தா... இந்தா பன்னண்டு பைசாவுக்கு நாலுபேர உள்ள வுடு.

பபூன் 2 : பன்னண்டு பைசாவ்ல எத்தினிப் பேரு சாப்பிட முடியும்?

வேறொருவன் : நீ சாப்பிட்டா என்ன? பட்டினியாக் கெடந்தா எனக்கென்ன? இந்தா பன்னண்டு பைசா. இத வச்சிக்கிட்டு ஆள வுடுறியா... இல்லப் பொத்துக்கிட்டு வரணுமா?

பபூன் 2 : அடப் பாவிப் பயலே! (நல்ல காலத்துக்குப் பொத்துட்டு வராம வந்தான்.)

வேறொருவன் : இந்தா பன்னண்டு பைசா புடி. இல்ல... ஒரு பக்கத்து டேராவைக் கிழிச்சிடுவேன். {சிரிப்பு}

பபூன் 2 : டேராவைக் கிழிக்காத. என்ன... *இதுல கையப் போட்டு மோந்து பாரு. {சிரிப்பு}

பபூன் 1 : ஏய் இப்படியெல்லாம் பேசாதீங்க. அப்புறம், அவுக, திரும்பூர்லயிருக்க வேண்டிய அனைவர்களும், எங்கள் மேல் அளவற்ற அன்புடன் இருக்கிறார்கள். இந்த மூன்று தினங்களாக மழையின் காரணத்தால் ஒரு கொடத்த முப்பது ரூபாய்க்கி அடகு வச்சி சாப்பிட்டுருக்றோம். ஒங்களுக்குத் தெரியும். அப்படியாயிருப்பதுனால... அப்படியெல்லாங் கொற பேசாதீங்க. கதைய நடத்துங்க. அந்த எம்பெருமான் கதைய அரயுங் கொறையுமா நடத்தக் கூடாது. ஊருக்கு ஆகாது. பத்து நாள் திருவிழா...** அவர்... சிரஞ்சீவியாக இவ்வளவு சிறப்புடன் நடைபெறுகிறதோ, அந்த எம்பெருமாளுடைய சரித்திரங்களைத் தான் நாங்கள் நடத்துகிறோம்,

---

★ பின்புறம் திரும்பி புட்டத்தைக் காட்டிக் கூறுகிறான்.

★★ திரு மோகூரில் அந்தச் சமயம் பெருமாள் கோயிலில் திருவிழா.

இந்த மந்தையில்! அப்படியாயிருப்பதுனாலே வஞ்சகம், விரோதம், லோபித்தனம் செஞ்சி ஓசில வரமாட்டாங்க. பொத்துக்கிட்டு வரமாட் டாங்க. பெரியோர்களுடைய ஆதரவு நமக்கு இருக்கிறது. மற்றபடியாக வாலிபர்கள் எல்லாம் ரொம்ப ஆர்வும் செய்கிறார்கள். கதை நடத்து.

பபூன் 2 : என்னத்தச் செய்வாங்க? என்னத்தச் செய் வாங்க?... அப்படி அதட்றாக இப்படி அதட்றாக. அவுகதான் ஓசில வந்து* மின்னால உக்கார்றாக.

பபூன் 1 : வரத்தான் செய்வாங்க.

பபூன் 3 : டேய்! என்ன இப்படியெல்லாம் பேசுறயே. அஞ்சு பைசா குடுத்திட்டுப் பேசு.

பபூன் 2 : கெட்ட பயலாயிருக்கான்.

பபூன் 1 : டேய் மாப்ள! நேரமாகுது. என்ன... கதைய ஆரம்பிங்க.

பபூன் 2 : இன்னக்கி எப்படிக் கதைய ஆரவைக்கப் போறீங்க? {சிரிப்பு}

பபூன் 1 : இன்றிரவில் ராமாயணத்தில் தொடர்கதை. கிட்கிந்தா காண்டம் என்ற ஒரு காண்டத்தை நாம் நடத்தி முடிக்கப் போகிறோம்.

பபூன் 2 : அதென்ன... அதென்ன பிஷ்கிந்தா காண்டம்? {அதுகூட சிரிப்பு} {சிரிப்பு}

பபூன் 1 : யோவ்! ஒன்னைய மாதிரி அகராதி புடிச்சவுங் களுக்குத்தான இந்த காண்டத்தினுடைய கதைகளும், இதனுடைய... கதையினுடய நுட்பங்களும் தெரியாம அலமோதுவீங்க.

பபூன் 2 : ஏய்! எனக்கு எல்லாந் தெரியும். அதென்ன பிஷ்கிந்தா காண்டம்? {சிரிப்பு}

★ மின்னால = முன்னால

பபூன் 1 : யோவ்! கிஷ்கிந்தா காண்டமென்றால், அதாவது வாலி மோட்சம் என்ற ஒரு சரித்திரம்.

பபூன் 2 : வாலியப் போயி கயிர்ல கட்டித் தண்ணி எறைக்கிற கட்டமா? {சிரிப்பு}

பபூன் 4 : இந்தத் துண்டுபீடி பிளாட்பாரத்துக்கு என்னா தெரியும்? இவங்கிட்ட போய்க் கதையச் சொல்றியே. ஏ... பபூன் ஆக்டரு... கதைய நடத்துங்க. இன்னிக்கி வந்த வசூல்ல பங்கு வேணுமே.

பபூன் 2 : ஏய் பங்கா வேணும்? (ஆமா) மனுஷன் கடனும் ஒடனும் பட்டுக்கிட்டுக் கெடக்கான். ஒனக்குப் பங்கா வேணும். மரியாதையாப் போயிரு. இல்ல... ஒரு கைய ஒடிச்சிப் போடுவேன்.

பபூன் 1 : யோவ்! எங்க... கைய ஒடிய்யா பாப்போம். எங்க... ஒடி பார்ப்போம்.

பபூன் 2 : என்னடா நிமிந்து பேசற. [அடிக்கிறான்]{சிரிப்பு}

பபூன் 3 : ஏய் அஞ்சுபைசா... ஏய் அஞ்சபைசா...

ஏய்... ஏய்... ஏய்... [அடிக்கிறான்]... *

பாடல் : சத்தியமே லட்சியமாக் கொள்ளடா செல்லடா

....

எத்தனையோ மேடு பள்ளம் வழியிலே உன்னை
இடறவைத்துத் தள்ளப் பார்க்கும் குழியிலே
அத்தனையும் கண்டுக்காமல் உள்வையடா நீ
அஞ்சாமல் கடமையில கண் வையடா நீ
அஞ்சாமல் கடமையல கண் வையடா (சத்தியமே)
குள்ள நரி கூட்டம் வந்து குறுக்கிடும்
நல்லவர்க்குத் தொல்லை தந்து தடுக்கிடும் நீ
எள்ளளவும் பயங்கொண்டு தயங்காதேடா
(சத்தியமே)

---

*வெற்றிலைபோடும் நேரத்தில் இப்படிப் பாடச் சொல்லி விடுவது உண்டு. வெற்றிலை போட்டு முடியும்வரை பாட்டும் இசையும்.

பபூன் 1 : சத்தோம்!. சைலன்ஸ்!, இரச்சேல்!,. மதிப்புக் குரிய பெரியோர்களே! தயாள உள்ளம் படைத்த தாய்மார்களே! வாலிபத் தோழர்களே! எங்களுடைய கதாப்பிரசங்கங்களைக் கேட்க வந்த மதிப்புக்குரிய பெரியவர்களும், சபை யோர்கள் இருப்போர்கள் அனைவர்களுக்கும், ஆனால் முக்கியமான விபரங்கள் தெரிவிப்பது என்னவென்றால், இன்றைய இராமாயணத்தில் தொடர்கதைகள் அதாவது வாலிக்கும் சுக்ரீவனுக் கும் யுத்தகளம்... ஸ்ரீராமர் மறைந்துநின்று வாலியைக் கொன்று, வாலியங்கு மோட்சங்கள் கொடுப்பது. அனுமார் ஸ்ரீராமரிடம் கணையாழி என்ற ஒரு மோதிரத்தை அடையாளமாக வாங்கிக் கொண்டு ஏழு சமுத்ரம், எழுநூற்றுக் காதவழி கடல் பாய்ந்து சென்று, இலங் கிணியைக் கொன்று, சீதையம்மனைக் காண்பது. சீதையைக் கண்டுபிடிக்கும் வரையிலும் இன்று கதைகள் நடைபெறும். இன்று இராமாயணத்தில் தொடர்கதை. அனுமார் போய் சீதையைக் கண்டுபிடித்து கணையாழியைக் கொடுத்து சூடாமணி அடையாளங்கள் வாங்ற வரயிலும் ஆட்டம் நடைபெறும். நாளை, பெண்ணின் பெருமை வாய்ந்த, அறிவில்லாத ஆண்களுக்கு அறிவூட்டுங் கதை. நாட்டிலே ஒவ்வொரு குடும் பத்தில், ஆனால் நான்... நாத்தனார்மார்களை யும், ஒறமுறையார்களையும், இனபந்துக்களை யும் கொடுமை செய்ய வேண்டிய பெண்களும் ஆண்களும் நம் நாட்டில் பலபேர்கள் இருக்கின் றார்களல்லவா? அவர்களுடைய சரித்திர அமைப்பாக அமைந்த நல்லதங்காள் என்ற சரித்திரம் நாளை ஒருநாள் மட்டும் நடைபெறும். நாளையோட எங்களுடைய ஆட்டம் கண்டிப் பான முறையில் கடைசி. நல்லதங்காள் கதை மிக அற்புதமாகவும், மிகத் தெளிவுடன் அற்புத மாகச் செய்த படங்களைக் கொண்டு நவீன

முறையில், நாகரீக முறையில் நாளை நல்ல முறையில் நடத்திக் காண்பிக்கப்படும். நாளை ஒரேநாள் ஆட்டம்தான். நல்லதங்காளின் பரிதாபங்களும், ஏழு குழந்தைகள் படும் ஒரு பரிதாபகரமான காட்சிகளும், அலங்காரி செய்யும் ஒவ்வொரு கொடுமையான காட்சிக ளும், ஏழு குழந்தைகளைத் தூக்கி நல்லதங்காள் பாழுங் கிணற்றில் போடும் ஒரு பரிதாபகரமான நிலைகளும் மிக அற்புதமாகவே இருக்கும். நாளை ஒரேநாள் ஆட்டம். எட்டு மணிக் கெல்லாம் எங்களுடைய சரித்திரம் ஆரம்பமாகி விடும். அனைபேர்களும், இத்தினை நாட்களாக எங்களுக்கு நல்லாதரவு செய்தவர்கள்... நாளைக்கு வந்து ஆதரவு அளிக்க வேண்டும். இன்னிக்கி வசூல் ஏழு, எட்டு, ஒன்பது ரூபாய்தான் இருக்கும். என்ன... இங்கயும் பத்து முப்பது ரூபா கடன்பட்டுட்டோம். பதினஞ்சி பைசாவுக்கு வேண்டி ஒசில வராதீங்க. பொத்துக்கிட்டு வராதீங்க. ஒங்கக் கைல ஏண்டது... ஆனால், பத்து பைசா இருந்தாலும் குடுத்திட்டு வாங்க. ஆனா அதுலயுங் கொறச்சிடாதீங்க. பதினஞ்சி பைசாயிருந்தாலும் குடுத்திட்டு வாங்க. பதினைஞ்சு பைசாவுக்கு நாலு பேரு ஏழு பேரு வர்றதாக வராதீங்க. இந்தப் பாவதோஷம் பலநாள் நீங்கள் அனுபவிப்பீங்க. அந்த எம்பெருமாளுடைய கிருபையிலும், காளியம்மனுடைய தேவதை புண்ணியத்திலும் நல்ல முறையில் இருக்க வேண்டும். கிராமம் க்ஷேமம் அடைய வேணு மென்றுதான் நாங்கள் நல்ல வாக்குகள் சொல்ல வேண்டும். அப்படியிருப்பதினால் என்னுடைய கதை களைத் தொடங்குகிறேன். நான் நடத்தும் சரித்திரங்களில் யாதொரு பிழைவுகளும், குற்றங்களும் இருந்தால், குற்றங்களையும், பிழைவுகளையும் நீக்கி, சகோதர வாஞ்சனையாக என்னை நீங்கள் நல்லாதரவு செய்ய வேண்டும்.

அமதியாக இருந்து கதைகளைக் கேட்க வேண்டும். எல்லாருக்கும் அடியேனுடைய வணக்கம்...

பாடல் : ராம பஜே ராம பஜே - சீதா
ராம பஜே ராம பஜே (ராம பஜே)
கோகுலப் பாலகா
ராஜா சிகாமணி (கோகுலப்)
சீதா ராம பஜே - சீதா
ராம பஜே ராம பஜே
கோகுலப் பாலகா
ராஜ சிகாமணி (கோகுலப்)
குலரபி சேகரா
கோதண்டபாணி (குலரபி)
கோதண்டபாணி
குலரபி சேகரா
கோதண்டபாணி (குலரபி)

இராமர் : தம்பி, சகோதர லட்சுமணா!

இலக்கு : அண்ணா!

இராமர் : தருமபூமியென்னும் அயோத்தி நகரத்தை பரிபாலனம் செய்யும் தசரதருடைய, சக்கரவர்த்தியினுடைய குழந்தையாகிய நாம் ஸ்ரீராமன், லட்சுமணன், பரதன், சத்ருக்கனன் என்ற நான்கு பேர்கள் நாம் பிறந்தவர்கள்.

இலக்கு. : உண்மைதான் அண்ணா.

இராமர் : சிற்றன்னை கைகேயி அம்மாள், எங்களுடைய மணிமகுடத்தைப் பறித்துக்கொண்டு, எங்களைப் பதினாலு வருஷம் எங்களை வனவாசம் அனுப்பிவிட்டாள் கைகேசி அம்மாள்.

இலக்கு. : உண்மைதான் அண்ணா.

இராமர் : பதினாலு வருஷம் நாம் வனவாசம் வந்து பஞ்சவடி ஆச்ரமங்களிலெல்லாம் பர்ணக சாலை

அமைக்கும் நேரங்களில் ராவணேஸ்வரன் தங்கையான சூர்ப்பநகை மானபங்கம் அடைந்து சென்றாள். அரக்கனாகிய இராவணேஸ்வரன் சீதாலட்சுமியைச் ஜிறை எடுத்துச் சென்று விட்டான்.

இலக்கு. : ஆமாம் அண்ணா.

இராமர் : ஜடாயு அரசர் வழிமறித்து யுத்தகளத்தைச் செய்திருக்கின்றார். உயிர்நிலையைக் கேட்டு றெக்கையை வெட்டிவிட்டான் ராவணேஸ்வரன். நாம் சீதையைக் காணாமல் அழுது துயரமடைந்து, ஜடாயு அய்யனை எடுத்து நாம் நல்லடக்கம் செய்து... இதுதான் கிஷ்கிந்தாபுரி என்று சொல்லியிருந்தார்... சிற்றப்பன் ஜடாயு அய்யன். இந்த ஆலமரத்துக்கடியில் நாம் சற்று நேரம் நித்ரை செய்து, அடுத்த வனம் கிஷ்கிந்தாபுரிக்குச் சென்று வானரர்களைச் சேர்த்து நாம் லங்கைமா நகரத்துக்குப் போக வேண்டும்.

இலக்கு. : அவ்வண்ணமே. உங்களுக்கு நித்திரை வருவதால் என்னுடைய மடிமீதில் நித்திரை செய்யலாம் அண்ணா.

இராமர் : அப்படியே நான் செய்து வருகின்றேன்.

பாடல் : **நித்திரை செய்தாரே ரகுராமர்**
நித்திரை செய்தாரே (நித்திரை)*
அழகுள்ள தம்பி லச்மணர் மடிமீது
சந்திர சூரியர் ஒன்றாய் விளங்கிட (நித்திரை)

அனுமன் : தாய் பெயர் ஆஞ்சனாதேவியென்றும், தந்தை பெயர் வாயுபகவான் என்றும் சொல்லுவார்கள். என்னுடைய பெயர்தான் அனுமான்... ஆஞ்சநேயர் என்று தெரிவிப்பார்கள். சபையோர்களே! நான் பிறந்து ஏழு வயதில்

★பின்னணியில் அனுமார் பறந்து வரும் ஓசை ர்ர்ர்.... என்று கொடுக்கப்படுகிறது.

என் தாய் ஆஞ்சனா தேவியிடம் அல்லும் பகலும் இருந்து...இருபத்து நான்கு மணி நேரமும் என்தாய் ஆஞ்சனாதேவி, 'ராமா, ராமா, நமோ நாராயணா எம் பெருமாளே' எனறு ராமமந்திரத்தைப் படித்துக் கொண்டிருப்பாள், என் தாய் ஆஞ்சனாதேவி. நான் ஒருநாள் 'தாயே அந்த எம்பெருமாளை வணக்கம் செய்துக் கொண்டிருக்கின்றாய். அல்லும் பகலுமாகவே 'ராம ராமா' வென்றே ராமதோத்திரத்தைச் செய்கின்றாய். அந்த ராமபிரான் என்பவர் எப்படியிருப்பார், அவர் எங்கேயிருப்பார், அவருடைய அடையாளம் என்ன?' அப்படி யென்று நான் விபரங்களைக் கேட்டேன். என் தாய் ஆஞ்சனா தேவி தெரிவித்தாள், 'மகனே அனுமானே! அந்த எம்பெருமானை நீ காண வேண்டுமென்றால், நான் சொல்லும் அடை யாளங்களைக் கண்டு பிடித்தால்... அந்த மகாவிஷ்ணுவை, நமோ நாராயணனை உன்னால் காண முடியும். அப்படிக் கண்டுபிடித்து விட்டால் உன்னை என்றும் சிரஞ்சீவியாகவும், உன்னைக் குழந்தையாகவும் உன்னை எவ்வளவு பாதுகாப்பு செய்வார்? உன்னைய ஆதரிப்பார் அந்தத் தெய்வம். நான் சொல்லும் அடையாளங்களை நன்றாகத் தெரிந்துகொள்' என்றாள். 'சொல்லுங்கள் அம்மா' என்றேன். அவர் அடையாளத்தை எப்படிச் சொன்னார்க ளென்றால், 'அந்த எம் பெருமாள் பச்சநிறந் தனிலேயிருப்பார். அவருடைய காதிலே கவசகுண்டலம் அணிந்திருப்பார். இடுப்பிலே ஒட்டியாணம் போட்டிருப்பார். தூக்க முடியாத வீரப்பிரசண்ட கோதண்டம் என்ற வில் வைத்திருப்பார். அவருடைய பக்கத்துணைக் காக, நரஜென்ம அவதாரமாக எடுத்து வருவார், ஆதிசேடன் லட்சுமணராக! இந்த அடையாளங் களை நீ எப்படியாவது கண்டுபிடித்தால், உன்னை ஆதரிக்கும் தெய்வம் அவர்தான்' அப்படியென்று என்தாய் ஆஞ்சனாதேவி சொன்னாள். ஆனால், இந்த பன்னிரண்டு வருட

காலமாகவே எந்த தெய்வத்த நாம் எதிர்பார்த் தமோ அந்தப் பரந்தாமன் தான் இங்க வந்து படுத்து நித்திரையாக இருக்கின்றார். ஆக, இவருடைய நித்ர பங்கங்களை நாம் கலைத்து, இவரிடம் நாம் சீக்கிரமாகவே, நாம் அடைக்கல மாகவே சேர வேண்டும். ஆ... ஆ... [இசை]

பாவையாட்டி : 'இராமருடைய முகத்துக்கு நேராக ஒரு கொப்பை விலக்கி வைத்த அனுமார், பல கொப்புகளும் எலையெல்லாம் ஒடித்து அவருடைய மேல் போட்டார். அப்பவும் அவருடைய நித்தரைகள் கலையவில்லை. அச்சமயம் இராமருடைய முகத்துக்கு நேராக இருக்கும் கொப்பை ஒருபுறம் சாய்த்தார் அனுமார்... சூரிய பகவான் பிரகாசித்தது ராமரின் முகத்தில்.'

இராமர் : லட்ச்மணா!

இலக்கு. : அண்ணா!

இராமர் : ஒரு குரங்கைப் பார்த்தாயா? ஆல மரத்துக் கடியில் நாம் படுத்து நித்திரை செய்வது, அந்தக் குரங்குக்குக் கூட கேவலமாகப் போய்விட்ட மென்று என்னுடைய உறக்கத்தைக் கெடுத்து விட்டதே லட்ச்மண்ணா?

இலக்கு. : அண்ணா! ஒங்களுடைய நித்திரையைக் கெடுத்த அந்தக் குரங்கை, அடியேனுக்கு உத்தர விட்டால், என் மந்த்ர வாளுக்கு நான் இரையாக்கி விடுகிறேன் அண்ணா.

இராமர் : லட்ச்மணா, வேண்டாமப்பா வேண்டாம். அறி வில் சிறந்த மனிதர்களே அறிவிழந்து போகின் றார்கள். அப்படியிருக்கும் காலத்தில் ஒரு மூர்க்கமான ஒரு வானரம் செய்த குற்றத்துக்காக, அந்தக் குரங்கைக் கொல்வது பெரும் பாவம். நான் அழைத்ததாகவே அழைத்து வா.

இலக்கு. : ஏன் அண்ணா நான் அழைத்து வரவேண்டும்?

இராமர் : அந்தக் குரங்கினுடைய காதில் கவசகுண்டலம் அணிந்திருக்கிறது கண்களால் கண்டேன்.

ஒருவேளை எங்களுடைய இனபந்துக்களாக இருந்தாலும் இருக்கலாம். அதை, அக்குரங்கை நாம் அழைத்ததாகச் சீக்கிரமே அழைத்து வரவேண்டும்.

இலக்கு. : அழைத்து வருகிறேன் அண்ணா.

இராமர் : உன்னுடைய மந்த்ர வாளை உறையில் போடு. உன்னுடைய மந்த்ர வாளுடனே சென்றால், பயந்து வராது அந்தக் குரங்கு!

இலக்கு. : சரி அண்ணா.

பாடல் : யாரடா குரங்கே நீ தான்
எங்களை மிரட்ட வந்தாய் (யாரடா)
சமத்துள்ள குரங்கானால்
நேராக வருவாய் நீ!
......
அனுமர் வாராரே
சாமியைத் தேடி
ஆஞ்சனாதேவிபாலன்
வாயுகுமாரன் அனுமன் வாராரே
ஆஞ்சநேயர் வாராரே (அனுமார்)

அனுமன் : ஐயனே! ஆதிநாராயணா! எம்பெருமானே! மகாவிஷ்ணு! சாமி! தாய் பேர் ஆஞ்சனா தேவி. தகப்பன் பேர் வாயுபகவான். என் பேர் அனுமான் என்று சொல்வார்கள் சுவாமி. நான் செய்ததோர் பிழைகளையும் குற்றங்களையும் மனம் பொறுத்து என்னை ஆதரிக்க வேண்டும் பகவானே!

இராமர் : ஆகா. ஆஞ்சனாதேவியின் குமாரனே! வாயு பகவானுடைய புத்ர பாக்கியமே! இருந்திருந்தும் என்னுடைய மகனாக வந்து சேர்ந்தாய். உன்னைய நான் பார்த்ததும் பெருமைப் படுகிறேன் ஆஞ்சநயா. அனுமாரே! உன் தாயான சீதாதேவியை அரக்கனான இராவணன் சிறையெடுத்துக் கொண்டு போனதை உன் கண்களால் கண்டாயா?

அனுமன் : ஆ...ஹ். திருட்டுப்பய. கருவாடு களவாணிப் பயலாகிய இராவணேஸ்வரன், அதர்மம் படைத்தவன். என் தாய் சீதையை ஜிறை எடுத்துக்கொண்டு போவதை என் கண்களால் கண்டிருந்தால், பகவானே! அவன் பத்துத் தலையும் தேங்கா ஒடைப்பது போல் ஒடைத்திருப்பேன்.

பபூன் 2 : எனக்கொரு தேங்காத்துண்டு வேணும். {சிரிப்பு}

அனுமன் : என் தாயைச் ஜிறை எடுத்துக் கொண்டு போனது... என் கண்களால் பார்த்திருந் தேனானால், அவனது இருபது கரங்களையும் கரும்புத் தட்டை ஒடிப்பது போல் ஒடித் திருப்பேன். அவனது இரண்டு காலையும் பிடித்து அவற்றை நார் கிழிப்பதுபோல் கிழித்திருப்பேன்.

அனுமன் : பரந்தாமா! லங்கையில் இருக்கிறான்... அந்த அரக்கனாகிய ராவணேஸ்வரன். ஏழ் சமுத்திரம் நடுதீவில் இருக்கின்றார்கள்... லங்கையில்! பகவானே! எனக்கு உத்தரவிட்டால், இப்படி நான் பறந்த சென்று, என்னுடைய வால்முனை யிலே, ஆனால்... அவனுடைய லெங்கை மாநகரத்தை அடியோடு நான் கெட்டி இழுத்துக் கொண்டு வர நான் தயாராயிருக்கிறேன். உத்தரவிடுங்கள் பரந்தாமா.

இராமர் : அடாடாடா. ஆஞ்சநேயா! 'சீதையை இராவணன் ஜிறை எடுத்துச் சென்றதை கண்களால் கண்டாயா?' அப்படியென்று கேள்க்கும்போது, எத்தனையோ வல்லமைகளையும், பராக்கிரமங் களையும் கூறுகிறாய். உன்னைப் பார்க்கும் போது தலையானது எலுமிச்சம்பழம் போலிருக் கிறது. கைகால்கள் வெறகுக் குச்சியைப் போலிருக்கிறது. ஆனால் சிறு குழந்தையாக இருக்கின்றாய். வல்லமையாகப் பேசுகிறாய். நீ எப்படி ராவணனை ஜெயிக்க முடியும்?

அனுமன் : சுவாமி! நீங்க சொல்ல வேண்டிய ஒரு வார்த்தைகள்... என்னுடைய ரூபத்தைப் பார்த்து, நீங்கள் அறியாத குழந்தை என்று ஆச்சிரியப்படவேண்டாம். அடியேனிடம்... பிரமதேவனிடத்தில் வாங்கிய ஒரு வரத்தானத்தில் என்னிடம் விஸ்வரூபம் இருக்கிறது... விஸ்வரூபம். நீங்கள் காமிக்கச் சொன்னால் என்னுடைய விஸ்வரூபத்தைக் காட்டுகிறேன் பரந்தாமா.

இராமர் : என்ன... பிரம்மதேவனிடம் வாங்கிய வரத்தானத்தில் உன்னிடம் விஸ்வரூபங்கள் இருக்கின்றதா? அதை எடு... நான் பார்க்க வேண்டும்.

அனுமன் : இதைப் பாருங்கள்... ம்ம்ம்....

பாடல் : **ஆஞ்சநேயர் வாராரே**
ஆஞ்சநேயர் வாராரே
ராமா ராகவ ராஜி பரோஜன
சாமித்த வரவா ஜீயாராகவா...

பகவானே! பிரம்மதேவன் எனக்களித்த விஸ்வரூபங்களைப் பாருங்கள்.

இராமர் : சபாஷ். பிள்ளைகள் தாயாருடைய வயிற்றில் ஜனித்தால் இப்பேர்க்கொண்ட வல்லமை சாலியுடன் பிறக்க வேண்டும். அனுமானே! உன்னுடைய விஸ்வரூபத்தைக் கண்டு நான் ரொம்ப ஆச்சரியப்படுகிறேன். சரி, இந்த விஸ்வரூபம் இருக்குமட்டிலும், உன்னுடைய வால் ரோமத்தில் லங்கையை அடியோடு பெயர்த்துக் கொண்டு வருவதற்கு உன்னிடம் அதிக வல்லமைகள் இருக்கின்றது. அனுமானே! நீ ஒருவன்தான் இந்தக் கானகத்தில் இருக்கின்றாயா? உன்னுடன் சேர்ந்த வானரங்களும் இருக்கின்றார்களா.

அனுமன் : பரந்தாமா! சுவாமி! ஒருவன் இரண்டு பேர்களில்லை. எழுபது வல்ல வானரங்கள் இருபத்து நான்கு படைவீரர்களாகிய அந்தக் கிஷ்கிந்தாபுரியில்... பரிபாலனம் செய்யும் வாலி,

சுக்ரீவன் இரண்டு பேர்கள் அண்ணன் தம்பிகள். வாலி இருக்கின்றானே, அதிக... ஆனால் பெலமுள்ளவன். எதுத்தவன் பேர்பாதி பலம் வாங்கக்கூடியவன் துஷ்ட வாலி. அந்த வாலியானவன் சுக்ரீவனை அதிக அநியாயம் செய்து, பன்னண்டு வருட காலமாகவே அவனுடைய ராஜ்யங்களையெல்லாம் பறித்துக் கொண்டு, பெருத்த அநியாயம் செய்கிறான். முரடனாகிய அண்ணன் வாலியைக் கண்டு பயந்து சுக்ரீவன் கானகத்து வழியாகவே அலமோதுகிறான். ஆனால், பகவானே நீங்கள் உதவி செய்தால், அந்த வாலியை நீங்கள் கொன்றுவிட்டால், சுக்ரீவனும் அவனுடைய படை வீரர்களும் ஓங்களுக்கு அடிமையாகி விடுவார்கள். இராவணேஸ்வரனை லேசாகவே ஜெயித்து விடலாம் பகவானே!*

இராமர் : ஆஞ்சநேயா! துஷ்டத்தனம் செய்யும் அரக்கர் கூட்டங்களைக் கொல்வதற்காகவும், என்னை நம்பி வந்தவர்களை ரட்சித்துக் காப்பாற்று வதற்காகவும் நான் பூலோகத்தில் நரஜென்ம அவதாரம் எடுத்து வந்திருக்கிறேன். பன்னிரண்டு வருட காலமாகத் தன் அண்ணனைக் கண்டு பயந்து கிடக்கும் சுக்ரீவனை நல்லாதரவு செய்து நாம் காப்பாற்றத்தான் வேண்டும். நான் அழைத்ததாகவே அந்த சுக்ரீவனை அழைத்து வரமுடியுமா?

அனுமன் : பகவானே! அய்ந்து நிமுஷத்தில் நான் சுக்ரீவனை... நான் அழைத்து வருகிறேன்.

இராமர் : சீக்கிரமாகவே புறப்படு.

அனுமன் : ம்...ஏ. சுக்ரீவ அரசரே ஓடி வாருங்கள்...

பாடல் : **ராஜ ராஜ மகாராஜ சுக்ரீவனும்**
ராஜசபைதனில் வந்தனரே!
தகர்தத்த தகர்தத்த தாளங்கள் மேளங்கள்

★'யாரு அது பொத்துக்கிட்டு வந்து சிரிக்றது?' என்று சிரித்துக் கொண்டிருக்கும் ஒரு சிறுவனைப் பார்த்து ராஜீராவ் சப்தம் போடுகிறார்.

ரம்பைகள் நளினங்கள் ஆடவே
தெய்வக் கணிகைகள் வந்து கூடவே
....
ராஜ சுக்ரீவனும் வந்தேனிதோ
ராஜ சுக்ரீவனும் வந்தேனிதோ.

நபர் 1 : ஏம்ப்பா சத்தம் போடக்கூடாது?

நபர் 2 : டேய்!... காச வாங்கிட்டியே., பின்ன சத்தம் போட்டா ஒனக்கென்ன?

பபூன் 2 : ஏய் கத கேக்றதுக்காக வேண்டி பெரியாட்கள்ளாம் வந்திருப்பாங்க. இப்படிச் சத்தம் போட்டா...

பபூன் 1 : அண்ணே எப்படிச் சத்தம் போடுறாங்கன்னா, 'ஏய்! நான் நான்... நாந்தான் பத்துபைசாக் குடுத்துட்டு மூணு பேரு வந்திருக்கோம். ஏய்! நாந்தான் • இந்தப் பக்கம் பொத்துக்கிட்டு வந்தேன் அப்படீனு ஆளுஆளுக்குச் சொல்லிக் கிட்டுச் சிரிச்சிகிட்டு வெளயாடறாக. கதக் கேட்க வரல. சரி, எவ்வளவு காசு குடுத்தாலும், நாலு கூட்டத்துல அமதியாயிருந்தாதான கத வெளங்கும்.

பபூன் 2 : சரி, அவுங்க சத்தம் போட்டுக்கிட்டுத்தான் இருப்பாங்க. நீ கதய நடத்து.

பபூன் 1 : ஒன்னைய மாதிரி இருக்கணும்டா கெடுகாலிப் பயல.[அடிக்கிறான்]

பபூன் 2 : இப்ப நான் என்னடா சொல்லிட்டேன்... அடிக்கிறே... மக்காக்கோழி படுவா. {சிரிப்பு} பெரிய மனுஷன். சென்ட்ரல் மேன். சண்டியரு. எனக்குக் கோபம் வரும். அடிக்கா... அடிக்கா... அடிக்காதே... நான் அணுகுண்டு வச்சிருக்கேன்.

பபூன் 1 : பொல்லா அணுகுண்டு வச்சிருக்காண்டா இந்தப் பய.

★பார்வையாளர்களிடம் இரைச்சல். காளியம்மாளும், ராஜுராவும் சத்தம் போடாதீங்க சத்தம் போடாதீங்க என்கின்றனர்.

பபூன் 3 : ஏ மாப்ள! போனதெல்லாம் போகட்டும். அஞ்சி பைசாக் குடுத்திடு.

பபூன் 2 : போடா எளவு. கடங்காரப் பயா [அடிக்கிறான்]

பபூன் 3 : நல்லா கடன் வாங்னாணடா இவன்.

அனுமன் : வாருங்கள் சுக்ரீவ அரசரே! பன்னிரண்டு வருட காலமாகவே தன் அண்ணனைக் கண்டு பயந்து ஆருண்யமான கானகத்தில் அலமோதிக் கொண்டு அலைகின்றீர்கள் இன்றிரவு- இன்றையதினம் உங்களுக்கு நல்ல விமோசனம் அடை.வதற்காக, உங்களுடைய கஷ்டகாலங் களை யெல்லாம் நிவர்த்தனை செய்வதற்காக அந்த நமோ நாராயணன் - எம்பெருமான் ராமபிரான் வந்திருக்கின்றார். ஒங்களுடைய கஷ்டங்களையெல்லாம், ஒங்களுடைய அண்ணன் செய்யும் அநியாயங்களை யெல் லாம், அந்த ராமரிடம் நீங்கள் போய்த் தெரிவித்துவிட்டால், ராமர் நினைத்தால் வாலியை ஒரே ராம பாணத்தில் மாரைப் பிளந்துவிடுவார்.*

சுக்ரீவன் : அனுமானே! என்னுடைய உயிரைக் காப்பாற் றுவதற்காக என்னுடைய அண்ணனை வதை செய்வதற்காக ராமபிரான் வந்திருக்கின்றாரா? அவர் எங்கேயிருக்கின்றார்? என்னுடைய கஷ்டங்களைச் சொல்லிவிட்டால், என் கஷ்டங்களையெல்லாம் நிவர்த்தனை செய்து விடுவாரா?

அனுமன் : பைத்தியக்கார சுக்ரீவரே! ராமர் நினைத்தால் உன் அண்ணன் இறந்து போவான். அதனால் சீக்கிரத்தில், அந்த ஆலமரத்துக்கடியில் உட்கார்ந் திருக்கின்றார்... அவரிடம் போய் உன்னுடைய மனக் கஷ்டங்களையெல்லாம் தெரிவித்துவா.

★மீண்டும் ஏதோ இரைச்சல், கசமுசா சததம் 'என்ன எளவு வெளங்குது இவுங்களுக்குக் கத, போ' என்று சலிக்கிறார் ராஜீராவ்.

சுக்ரீவன் : அப்படியே புறப்படுகிறேன். பரந்தாமனைச் சந்திக்கிறேன். என் பரிதாபங்களைச் சொல்லு கிறேன். துஷ்டனாகிய வாலியை நான் வதம் செய்யச் சொல்கிறேன். பரந்தாமா! எம்பெரு மானே! ராமா!

பாடல் : **பாதமே கதி**
ராம பாதமே கதி - ராகவ
பாதமே கதி
பரந்தாமனே கதி
பாண்டவர்கள் தூதரோடு
பார்க்க முடியாத பாதமே உன்
பாதமே கதி
அனுமனே நீ சென்றிடுவாய்
பரமனே இங்குவர (அனுமனே)
ராம பாதமே கதி
ராம பாதமே கதி
பாதமே கதி - ராகவா
பாதமே கதி

சுக்ரீவன் : பரந்தாமா!

இராமர் : யாரய்யா வானரமே! என்னுடைய பாதார வணக்கம் செய்யுங் காரணம்?

சுக்ரீவன் : நாராயணா! பரந்தாமா! என்னுடைய பேர்தான் சுக்ரீவ அரசன். சண்டாளனாகிய அண்ணன் வாலி, எதுத்தவன் பேர்பாதி பெலம் வாங்க வேண்டியவன். என் ராஜ்யங்களையும், என்னு டைய மனைவி மக்களையும், என் ராணுவப் படைகளையெல்லாம் பிடுங்கி வைத்துக் கொண்டு, என்னை அடிச்சி அநியாயம் செய் கிறான். சுவாமி! என் அண்ணனை நீங்கள் கொன்றுவிட்டால் உங்களுடைய பாதாரம் எங்கும் மறக்காமல் பாத... பணிவிடை செய் வதற்குத் தயாராக இருக்கின்றேன்.

இராமர் : சுக்ரீவ அரசரே! கவலைப்படவேண்டாம். உன் அண்ணனாகிய வாலியை நான் கொன்று விடுகிறேன். உன்னுடைய வானரப்படைகளை உன்னிடம் நான் சேர்த்து விடுகின்றேன்.

கிஷ்கிந்தாபுரியெல்லாம் உனக்கே நான் முடிசூட்டி விடுகின்றேன். ஆனால், உன்னுடைய வானரங்களையெல்லாம் அழைத்துக் கொண்டு, என் பின்பதாக வந்து, லங்கை மாநகரத்துக்குச் சென்று, துஷ்டனாகிய இராவணனைக் கொன்று, சீதையை நான் ஜிறை மீட்பதற்காகச் சொல்ல வேண்டும். அது உன்னால் முடியுமா?

சுக்ரீவன் : முடியும் பரந்தாமா. என் அண்ணனை மட்டும் நீங்கள் கொன்றுவிட்டால் என்னுடைய எழுபது வல்ல வானர சேனைகளையும், இருபத்துநாலு படை வீரர்களையெல்லாம், இருபத்துநாலு படை வீரர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு, உங்களுடைய பின்புறமாக வந்து, இராவணேஸ்வரனைக் கொன்று, சீதாலட்சுமியை மீட்டு உங்களிடம் சேர்ப்பதற்கு நான் தயாராகயிருக்கிறேன்.

இராமர் : அப்படியானால் உன்னுடைய அண்ணனான வாலியுடனே மல்யுத்தத்தை நீ ஆரம்பம் செய்யலாம்.

சுக்ரீவன் : அப்படியே செய்து வருகிறேன்... [இசை]*
டேய் வாலி... டேய் வாலி... டேய் வாலி...
ராம ராமா ராம ஜெயம் - ஹரி
ராம ராமா ராமஜெயம்
நந்தா ரகுபதி ராம ஜெயம்

வாலி : ஏய். ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா...(சிரிப்பு) சின்னப் பயலாகிய சுக்ரீவன், என்னைக் கண்டு பயந்து ஓடினவன், இன்று போர் முழக்கம் ஆரம்பம் செய்கின்றான். என்னை... சண்டைக்காகவே அழைக்கின்றான். அவனை ஒரே குத்தில், அவனுடைய உயிரை நான் எமலோகத்துக்கு நான் அனுப்பிவிட்டு வரவேண்டும். இப்ப நான் போர்க்களத்துக்குப் புறப்படுகிறேன்...

சுக்ரீவன் : **ராம ராம ராமஜெயம் - ஹரி**
ராம ராமா ராமஜெயம்

★ பதிவுநாடா மாற்றத்தினால் ஏற்படும் சில நிமிட இடைவெளி.

ஏய் வாலி... ஏய் வாலி... ஆ... [அடிக்கின்றனர்]

ராம ராமா ராமஜெயம் - ஹரி

நந்தா ரகுபதி ராமஜெயம்

ராமா ராமா ராமஜெயம் - ஹரி

நந்தா ரகுபதி ராமஜெயம்...

ஏய்...ஏய்... ஏய்... ஆ!...ஆ!... {சிரிப்பு}*

வாலி : டேய் சுக்ரீவா! தாய் ஒன்று தகப்பன் இரண்டாக நாம் பிறந்து வளர்ந்தவர்கள். நீ யாருடைய மகனென்றால், சூரிய பகவானுடைய மகனாகிய சுக்ரீவனும், தெய்வேந்திரனுடைய மகன் என்பேர் வாலியென்றும் நாம் பிறந்தவர்கள். சகோதர வாஞ்சனையாகவே உன்னைப் பாதி உயிருடனே விட்டிருக்கின்றேன். இப்போது யுத்தகளத்துக்கு நீ வந்ததுபோல் இன்னொரு **தபா நீ என்னைச் சண்டைக்காக அழைத்தால், தம்பி என்கிற ஒரு பாசத்தை நான் பார்க்கவே மாட்டேன். உன்னுடைய உயிரை என்னுடைய உள்ளங்கையில் நான் வாங்கிவிடுவேன், ஜாக்ரதை! உயிர் தப்பித்துப் பிழைத்துக் கொள். ஒடிப்போ.

பபூன் 3 : மாப்ள! மாப்ள அஞ்சு காசு. பின்னால கொரங்கு வருதாம். (ஆமா. கொரங்கு பின்னால வருது)

பபூன் 2 : வந்திட்டு பாரு கொரங்கு.

பபூன் 3 : கொரங்கு வருதாம்.

பபூன் 2 : தடங்கூட காணமே? {சிரிப்பு}

பபூன் 3 : அடுப்புக்குள்ள காணமே. {சிரிப்பு}

பபூன் 2 : அய்யய்யோ. கொரங்கு ஓட்டம் போடுது... ஆச்சி... {சிரிப்பு}. மொட்டப் பயால்ல பின்னால வந்து நிக்கிறான். ஏலே! கொரங்கு தாம் புடுங்குதுன்னு பாத்தேன். இந்தப் பயால்லா வந்து பின்னால குத்தியிருக்கிறான். {சிரிப்பு}

★வாலி, சுக்ரீவன் இரண்டு பேரும் 'கொர்', 'கொர்' என்று திடீர்த் திடீரென்று சப்தங்கள் எழுப்ப, குழந்தைகள் எல்லாம்சிரிக்கின்றனர்.ஏய்! விடாதே... பிடி' என்று சிறுவர்கள் குரங்குளைப் பார்த்துக் கத்துகின்றனர். ராஜாராவும் காளியம்மாளும் ஏதோ மராட்டியில் பேசிக் கொள்கின்றனர். சிரிப்பு சப்தம் கேட்டுக் கொண்டேயிருக்கிறது. ★★ தபா = தடவை

பபூன் 3 : அஞ்சி பைசா குடுக்ற வரையிலும் நீ எங்க போனாலும் பின்னால் வந்து குத்துவேன்.

பபூன் 2 : அட வெளங்காத பயலே... {சிரிப்பு}ஏலே ஒனக்கு அறிவு இருக்கா? அஞ்சி பைசா என்ன காசு. அதப் புடிச்சி... இப்படிப் பேளப் போனாலும், ஒண்ணுக்கு இருக்கப் போனாலும் {சிரிப்பு} ஈஸிஸ்குப் போனாலும் {சிரிப்பு} ஈஸிஸ்க்குப் போனாலும், எங்க போனாலும் அஞ்சி பைசாக் கேட்டுக் கேவலப்படப் போறீல்லா? ஒனக்கு அறிவிருக்கா?

பபூன் 3 : கேவலமாயிருந்தா அஞ்சி பைசா கொடு.

பபூன் 2 : இருந்தா... குடுத்திருவனே.

பபூன் 3 : பின்ன ஏன் ஒனக்கு ரோசம் வருது?

பபூன் 2 : ஆம்பளேன்னு பெறந்தா ரோசமில்லாமயே-யாடா இருக்கும்.

பபூன் 3 : சரி அஞ்சி பைசா குடு.

பபூன் 2 : விட்டிர்ரா மாப்ளே மொளு மொளு {சிரிப்பு}. ஒன் அக்காள எனக்குக் குடுத்திருக்குற. எந்தங்கச்சிய ஒனக்குக் குடுத்திருக்கிறேன். ரெண்டு பேரும் சம்பந்தம் பண்ணிக்கிட்டோம். நீ வந்து எனக்கு மாப்பூளே. நான் வந்து ஒனக்கு மாப்பூளே {சிரிப்பு}

பபூன் 3 : எந்த வொறவிருந்தாலும் இது காசு விஷயம். அஞ்சி பைசாக் குடுத்திரு. {சிரிப்பு}

பபூன் 2 : மலையேறிப் போனாலும் மச்சினன் ஒதவி வேணும். அஞ்சி பைசாவுக்கு இந்த அநியாயமா தீட்டுறியே?

பபூன் 3 : அஞ்சு பைசாங்கறே. பிளாட்பாரம்...! ஒனக்கு என்னா தெரியுது குடும்ப விஷயம்? நாலு புள்ள குட்டி வச்சிருக்கிறேன் நானு. அஞ்சு பைசாவுக்கு

அரும்பாடு பட்டாதான பைசாவப் பாக்க முடியும்.

பபூன் 2 : அப்ப என்னையப் பிளாட்பாரம்னா பாத்துக் கிட்ட? ஏய்! நான் பெரிய மொதலாளிடா. மெட்ராஸ்ல பீரீஸ்லாம் நம்மகிட்டதான் இருக்கு. ஏழு மெத்த வீடெல்லாம் எங்கிட்ட இருக்கு. (அப்பன்னா அஞ்சு பைசாக் குடுத்திரு)

பபூன் 3 : இவ்ளவு வசதியாக இருக்கிறவர்தான் அஞ்சு பைசாக் குடுக்க முடியலயோ? {சிரிப்பு}

பபூன் 2 : பிச்சக் காசு அஞ்சு பைசாக் குடுக்றதான்னு ஒரு வைராக்கியந்தான். {சிரிப்பு}

பபூன் 3 : அப்ப பிச்சக்காரங்கிட்ட அடிச்சித் திம்ப போலயிருக்கு.

பபூன் 2 : அதும் உண்டு. கடசீல, அஞ்சி பைசா கேட்ட, [அடிக்கிறான்]அப்படித்தான்.

பபூன் 1 : என்னடா தம்பி?

பபூன் 2 : அண்ணே! பத்து பைசாவுக்கு பொட்டுக்கடல வாங்கிட்டு வந்தேன். மடீல கட்டியிருந்தேன். டேராவப் பிச்ச ரெண்டு புள்ளைங்க ஓடியாந் திச்சி. அவுங்ள வெரட்னம்பாரு... கடல கீழ சிந்திடுச்சி.

பபூன் 1 : எங்கடா தம்பி? நாம் பெறக்றேன் அந்தப் பொட்டுக் கடலய.

பபூன் 2 : இங்கதான்... இங்கதான்... பெறக்கு... பெறக்கு...

பபூன் 1 : எங்க? எங்க?

பபூன் 2 : இங்கதான்...இங்கதான்... பெறக்கு... பெறக்கு... டுர்ர்ர்... ஏய்! கடல பெறக்கி மடீல வச்சிக்கிட்டுப் பொய்ட்டான்டா அந்தப் பய. {சிரிப்பு} ஏய்! எங் கடலயக் குடுடா.

பபூன் 3 : ஏய்! என் அஞ்சு பைசாக் குடுடா.

பபூன் 2 : ஏல [அடிக்கிறான்]... [இசை]

சுக்ரீவன் : அனுமாரே! அனுமாரே! அய்யோ பனிரண்டு வருட காலமாக மொரட்டுப் பயல் அண்ணன் வாலி என்னைய அடித்து அநியாயம் செய்கிறான். கடைசியில் அந்த ராமர் என் அண்ணனைக் கொன்று விடுவார் என்ற தைர்யத்தை வைத்துக் கொண்டு முதல் யுத்தகளத்துக்குப் போனேன். முரட்டுப் பயலாகிய அண்ணன் வாலி, பாதி உயிரை வாங்கிவிட்டான் அனுமாரே! இந்த ராமராலயும் அண்ணனைக் கொல்ல முடியாது. ஒருவராலயும் முடியாது. அண்ணன் கையில் அடிபட்டு விழுறதுதான் மிச்சம். அய்யா! வாருங்கள். எப்போதும் போல நாங்கள் காய் கனிகளைப் பெறக்கிச் சாப்பிட்டே வாழ்ந்து கொண்டிருக்கலாம். ஒருவருடைய பேச்சும், ஒருவருடைய நட்புறவும் நமக்கு வேண்டா மய்யா... அனுமாரே!

அனுமன் : கவலைப்படாதே. ஆனால் யுத்த களத்துக்காகப் போகச் சொன்ன பரந்தாமன் மவுனமாகயிருக்கும் காரணங்கள் யாதென்றே புரியவில்லை. நான் விவரங்களைக் கேட்டு வருகிறேன். இவ்விடத்தில் அமருங்கள்... [இசை]

பரந்தாமா! துஷ்டர்களைக் கொல்வதற்கும், நம்பி வந்தவர்களை ரட்சிப்பதற்காகவும் நீங்கள் பிறந்தவர்கள். பனிரண்டு வருட காலமாகவே ஏகப்பட்ட துன்பங்கள்... அடியும் ஒதையும் பட்டுக்கொண்டிருக்கிறான் வாலியுடன் சுக்ரீவன். அவனை ஏன் நீங்கள் கிருபை செய்யக்கூடாது? அவனுக்கு நீங்கள் ஏன் ஆதரவு அளிக்கக் கூடாது? பரந்தாமா! மீண்டும் ஒருபாவமும் அறியாத சுக்ரீவனை நீங்கள் சோதிப்பது சரியில்லை பரந்தாமா.

இராமர் : அனுமாரே! யுத்த களத்துக்குப் போகச்சொல்லி நான் மவுனமாக இருந்தக் காரணத்தைக் கேட்கிறாயா? அண்ணன் தம்பி முகத்தைப் பார்க்கும் போது ஒரே முகமாகவே தெரியப்படுகிறது. யார் வாலி? யார் சுக்ரீவன்? என்று என்னால் அடையாளம் கண்டு பிடிக்க முடிய

வில்லை. அதனால் நான் மவுனம் சாதித்து இருந்துவிட்டேன். இப்போது என்னாகி விட்டது. இதோ... இரண்டாவது யுத்த களத்திற்குப் போகச் சொல். நான் அடையாளங் களைத் தருகிறேன். ராமக் கட்டியைக் குழைத்து சுக்ரீவனுடைய திரேகங்களில் பனிரண்டு ராமங் களைப் போடு. காட்டு ஆவ்ரங் குழைகளைப் பிடுங்கி சுக்ரீவனுடைய தலையில் மணி மகுடமாகவே கட்டிவிடு. என்னுடைய கழுத்தி லிருக்கும் துளசி மாலையை எடுத்து உன் கையில் குடுத்தேன். சுக்ரீவனுடைய கழுத்தில் போடு. இந்த மூன்று அடையாளத்தில் அந்த வாலியை நான் கொல்வது நிச்சியந்தான். இந்த இரண்டாவது யுத்த களத்துக்குத் தைரியமாகப் போகச் சொல்... ஆஞ்சநேயா!

அனுமன் : அப்படியே நான் போகச் சொல்கிறேன் பரந்தாமா... [இசை]

சுக்ரீவ அரசரே! அண்ணந்தம்பிடி முகத்தைப் பார்க்கும் போது ஒரே முகமாகத் தெரியப்பட்ட தால் மவுனம் சாதித்து இருந்து விட்டார். இந்த இரண்டாவது யுத்த களத்திற்குப் போ. ஒன் திரேகம் பூராவும் ராமங்களைப் போட்டிருக்கி றேன். பச்ச ஆவரங் கொழைகளைப் பிடிங்கி உன் தலையில் கிரீடமாகச் சூட்டியிருக்கின் றேன். ராமருடைய கழுத்தில் அணிந்திருக்கும் துளசிமாலை உன் கழுத்தில் போட்டிருக்கிறேன். வெற்றி மாலையாகவே அமைந்துவிடும். தைரியமாகவே இந்த இரண்டாவது சண்டைக் குப் போ...[இசை]

சுக்ரீவன் : என்னையச் சாகச் சொல்கிறாயா? உயிரோடப் பிழைக்கச் சொல்கிறாயா? முரட்டுப் பயல் வாலி என்னை அடித்து அநியாயம் செய்கிறான்.★

★ பார்வையாளர்களிடம் இரைச்சல். 'எல்லாம் அந்தச் சைடுல பொத்துக் கிட்டு வந்தது தான்... காசு குடுத்ததேயில்லை. பூரா பொத்துக்கிட்டு வந்தது தான்... அது சத்தம் போடுறது,... 'காசு குடுத்திருந்தா கம்னு இருப்பாங்க. சும்மா பொத்துக்கிட்டு வந்தா... சத்தம் போட்டுக்கிட்டு' என்று ராஜூராவ் சத்தம் போடுகிறார்.

பபூன் 2 : வந்துட்டாள் புஷ்க்குமுட்ட ரோஷக்காரி. ஆப்பிள் பழம் நெறம். பதினாறு வயசுப்புள்ள. பாத்தா என்ன மாதிரிதான் இருக்கிறா?*போடு போடு கரகடான்ஸை போடு.

பாடல் : அஞ்சாறு ரூபாய்க்கு மணிமேலை - உன்
கழுத்துல தொங்குதடி (அஞ்சாறு)
அம்மூரு மீனாட்சி பாத்தாலும் - அவ
கண்ணுக்கு வருத்தமடி
ஹை... ஹை... ஹை...
சின்னாளப் பட்டியில கண்டாங்கி எடுத்து
என் கையாலக் கட்டி விடவா.
அத்த... நீ மெத்த... நீ அத்த... கொத்தோடு முத்து தரவா.
... போடு... போடு .....
என்னடி ராக்கம்மா பல்லாக்கு நெளிப்பு
என் நெஞ்சுக் குலுங்குதடி ...
கண்ணாடி மூக்குத்தடி மாணிக்கச் சிகப்பு
மச்சான இழுக்குதடி... (அஞ்சாறு)
போடு... போடு... ஹை... ஹை... ஏ! குத்து...
ஏ! குத்து...

பபூன் 2 : நல்லா குத்துறாங்கடா {சிரிப்பு}... நல்லாக் குத்துறானுகடா... இப்படிக் குத்துனாதான்டா நல்லாயிருக்கும் டான்ஸு. {சிரிப்பு}... டேய் ... ஏண்டா ... ஆடுற ... பதினாறு வயசுப்புள்ள... கல்யாணம் ஆகாத குட்டி... அல்வாத்துண்டு போல இருக்குறா. அவா கையப் புடிச்சிக்கிட்டு நான் எப்படி 'ஜில்'னு ஆடுனேன். ரெண்டு பேரும் எப்படிப் பெரண்டுக்கிட்டுப் படுத்தோம். {சிரிப்பு} நீ பின்னால வந்து அடிச்சிப் போட்டயே. {சிரிப்பு} எடுடா... நல்ல நேரத்தக்

★பார்வையாளர்களிடம் இரைச்சல். 'கரகாட்டம்' பாத்து எல்லாரும் வீட்டுக்குப் போய்ட்டு வாங்க.' என்று ராஜ்ராவ் கூறுகிறார்.

கெடுத்துப் போட்டயே... மக்காக் கோழி மேல கோழி வைக்க {சிரிப்பு} ஒன்ன 'அவுட்' பண்றம் பார். ஒன்னைய 'சூட்' பண்றம் பார். 'சூட்டிங்'ல கொல்றம் பார்... டுர்ர்ர்... {சிரிப்பு}

பபூன் 4 : படு குசு விடுறான்டா இந்தப் பய... '(இன்னுங் கொஞ்ச நேரங் கெடாசுங்க')

பபூன் 3 : அஞ்சி பைசா. அஞ்சி பைசா.

பபூன் 2 : செத்தாலும் விடமாட்டான்டா இந்தப் பய.

பாவையாட்டி : வாலி சுக்ரீவன் இரண்டாவது யுத்த களம் நடக்கப் போவுது... எல்லோரும் சத்தம் போட்டுக் கிட்டுக் கேளுங்க. ம்.

பாடல் : **வாலி ராஜனுக்கும் சுக்ரீவனுக்கும்**
நடந்ததே சண்டை நிகழ்ந்ததே சண்டை
உறமுறையான சண்டை நடந்ததே. - இப்ப
வேடிக்கையான சண்டை நடந்ததே.
விநோதமாகவே சண்டை நடந்ததே!
அவனை இவன் அடிக்க
இவனை அவன் அடிக்க
இருவர் கண்களும்பொறிபோல் பொறியவே
கோடையிடியைப் போல அடிகள் முழங்கவே (வாலி)

சுக்ரீவன் : ஏ! வாலி... வாடா சண்டைக்கு... ஆ! ஆ!...
ராம ராமா ராமஜெயம் - ஹரி
ராம ராமா ராம ஜெயம்...

வாலி : ஆகா... சாகின்ற ஆண்மை படைத்தவனாகிய சுக்ரீவன்... இப்போதுதான் முதல் யுத்த களத்தில் அவனை அடித்து வெரட்டி விட்டு வந்தேன். அதற்குள்ளாக என்னை யுத்த களத்துக்கு அழைக்கின்றான். எவ்வளவு ஆணவமாக இருக்கலாம் அவனுக்கு? சகோதர வாஞ்சனையென்று பாவ புண்ணியங்களைப் பார்த்தால்

என்னைய அவன் அவமதித்துக் கொண்டிருக் கின்றான். இதோ... ரெண்டாவது யுத்த களத்துக்குச் சென்று அவனுக்கு நான் முடிவு காலத்தை ஏற்படுத்திவிடவேண்டும். இதோ வருகிறேன். யுத்த களத்திற்குப் போகிறேன்... ஆ!....

அங்கதன் : அப்பா! என்னைப் பெற்றெடுத்த தந்தையே! எங்கே போகிறாய் அப்பா? இவ்வளவு பெரிய கோபத்துடன் போகும் காரணம்? சொல்ல வேண்டும் தந்தையே.

வாலி : மகனே அங்கத குமாரா! உன் சித்தப்பனாகிய சுக்ரீவ அரசன் என்னை யுத்த களத்திற்காக அழைக்கின்றான். அவனுடைய உயிரை நான் வாங்கி எமலோகத்துக்கு அனுப்ப வேணு மென்றே புறப்படுகிறேன் அங்கத குமாரா.

அங்கதன் : அய்யா தந்தையே! சகோதர பாசம் அறியாமல் ஏனய்யா இப்படி அநியாயமாகச் சண்டை போட்டுக் கொண்டு கிடக்க வேண்டும். இருபேர்க்குள்ளாக இப்படி... சமாதான முறையில் போகாமல் ஏனிப்படியெல்லாம் தகறாரு செய்ய வேண்டும்? வேண்டாம். நீங்கள் பொறுமையுடனே போகத்தான் வேண்டும். சண்டைக்குப் போக வேண்டாம்.

வாலி : சின்னப் பயலே! எனக்குப் பிறந்த மகன் எனக்குப் புத்தி சொல்லவேண்டிய அளவுக்கு வந்துவிட்டான். ஆ!... என்னடா... சண்டை க்குப் போறவனைத் தடுக்கிறானாம் முட்டாப் பய... ஆ...

பாடல் : **ராம ராமா ராமஜெயம் - ஹரி**
ராம ராமா ராமஜெயம்
.....
வாசு தேவகுமரா...

பாவையாட்டி : அரண்மனை விட்டு வெளியேறும் போது தன் மகனாகிய அங்கதகுமாரன் வேண்டாமென்று தடுத்தான். ஊர்வலத்திற்காக வரும் நேரங்களில் நடுப்பாதையில் பிரும்மாண்டமான ஒரு நாகம் தடுத்துக் கொண்டிருக்கின்றது.

வாலி : ஹஹ்ஹஹ்ஹா... ஹஹ்ஹஹ்ஹா .... பாம்பினுடைய சகுனத்தை நாம் பார்ப்பது தவறு. என்னைப் போல் கெட்டிக்காரன் யாரிருக்கிறார்கள், இந்நாட்டில்? ... அந்த சுக்ரீவனைக் கொன்று விட்டுத்தான் நான் வரவேண்டும். பாம்பு அய்யோ பாவம். இறை தேடுவதற்காகப் போகின்றது. நான் போர்க்களத்துக்குப் புறப்படுகிறேன்... ஆ ... ஆ...

பாடல் : ராம ராமா ராமஜெயம் - ஹரி
ராம ராமா ராமஜெயம்
......
வாசு தேவகுமரா...
ஆ!... ஆ'... [அடிக்கின்றனர்]... அப்பா... அப்பா...

வாலி : ராமா... ஏய் ... ஆ!... [இசை]

வாலிராஜர்க்கும் சுக்ரீவராஜர்க்கும்
உறமுறையான சண்டை நடந்ததே.
வேடிக்கையான சண்டை நடந்ததே.
ராம ராமா ராமஜெயம் - ஹரி
ராம ராமா ராமஜெயம்...
ம் ..ம் ... அ! ..ம் ... ம் ...

...

*உள்ளம் என்பது ஆமை - அதில்
உண்மை என்பது ஊமை
சொல்லில் வருவது பாதி - அதில்

★ பொம்மைகளைத் தேடுகையிலும் இது போன்ற இடைவேளை உண்டு. வெத்தலைப் போடுவதற்காக ஒதுக்கிய நேரம் இது. வெத்தலப் போடுறாங்களா? என்று நான் கேட்க' அச்சிறுவன் 'ஆமாம்' என்கிறான்.

தூங்கிக் கிடப்பது மீதி... (உள்ளம்)
உண்டு என்றால் அது உண்டு
இல்லை என்றால் அது இல்லை (உள்ளம்)

பாவையாட்டி : மதிப்புக்குரிய பெரியோர்களே! தாய்ர்களே! வாலிபர்களே! கதைதளைக் கேட்க வந்த சகலமான பிரபுக்களே! வாலிக்கும் சுகரீவனுக்கும் சண்டை நடந்து, மறைந்து நின்று ராமபிரான் வாலியை வதை செய்திருக்கிறார். வாலியானவர் ராமரிடம் நல் மோட்சம் வாங்கப்போகின்றார். இது முடிந்ததும் அனுமார் ராமரிடம் கணையாழி என்ற அடையாளங்களை வாங்கிக் கொண்டு லங்கை போய்ச் சேர்ற வரையிலும் ஆட்டம் நடைபெறும். கடைசீல மஞ்சி வெரட்டு என்ற ஜல்லிக்கட்டு. மாட்டு வேடிக்கைகளைக் காமித்து ஆட்டங்களை முடிக்கப் போகிறோம். நாளை ஒரே நாள் ஆட்டம் நல்லதங்காள் கதை. நல்லதங்காளின் சோகக் கதைகளும், குழந்தைகள் படும் பரிதாபங்களும், அலங்காரி செய்யுங்கொடுமைகளும், ஏழு குழந்தைகளைத் தூக்கிப் பாழுங் கெணத்தில் போடும் பரிதாபங்களையும்... நாளை நல்லதங்காள் கதைகளை அனைபேர்களுமே வந்து எங்களுக்கு நல்லாதரவு செய்து காப்பாற்ற வேண்டும்.

பபூன் 2 : நாளைக்கு, காசா ஓசியா. (நான் ஓசிதான் வருவேன்) அதையுந் தெரிஞ்சுக்குவோம். {சிரிப்பு}

பபூன் 2 : அப்ப... காசிருந்தா, லேட்டா வந்தாலும் காசக் குடுத்திட்டு உள்ள வருவோம். காசு கெடைக் காட்டிப் போனா டேராவக் கிழிச்சித் தான் பாப்போம். பைய* நீட்டிக்கிட்டுப் பார்ப்போம். **அதுதண்டியும் மனம் சங்கடப் பட்டுக்காதப்பா. {சிரிப்பு} மொதவே சொல்லிட்டேன்.

★பைய = மெதுவா ★★ அதுதண்டியும் = அதுவரையும்

பபூன் 1 : சரி.

பபூன் 2 : சரின்னு இப்பச் சொல்லு. நாளைக்கி விட மாட்டயே.

பபூன் 1 : நாலு காசு குடுத்தாத்தான் நம்மளும் பிழைக்க முடியும்.

பபூன் 2 : நாலு பேர் குடுக்கவேண்டியது தான். அப்படி நேரமாயிருக்குதே. அதுக்கு என்னா பண்றது?

பபூன் 1 : ஏய்! சரி. அப்போ, ஓசிலப் பாத்தாப்ல... எங்களுடைய வயிறு என்ன செய்யும்?

பபூன் 2 : அது ஒன்னுஞ் செய்யாது.

பபூன் 1 : கெடுகாலிப்பய. [அடிக்கிறான்]

பபூன் 2 : அய்யா! பார்யா.. நல்லதச் சொன்னாலும் அடிக்கிறான். கெட்டதச் சொன்னாலும் அடிக்கிறான். ஏல என்னைய யாருன்னு பருத்திக் கொட்ட நீ? (புளியங்கொட்ட) [அடிக்கிறான்] டப்புடப்புன்னு அடிக்காத. எனக்குக் கோபம் 'சள்'ளுன்னு வரும். 'சள்'ளுன்னு வந்துது... சூத்தங்கிய எடுத்திருவேன். {சிரிப்பு}எடுத்திட்டு சுட்டுப்புடுவேன். {சிரிப்பு}

பபூன் 1 : சுட்டா?

பபூன் 2 : நீ செத்துப் போவ.

பபூன் 1 : இவன் சுட்டுத்தான் நாலுபேர் செத்துக் கெடக்குறாங்க. [அடிக்கிறான்] {சிரிப்பு}

வாலி : ஏய் தெய்வமே! இதென்னா.... இது சோதனை? பனிரண்டு வருட காலமாக தம்பியான சுக்ரீவனும் நானும் யுத்தகளத்தைச் செய்துக் கொண்டிருந்தோம். ஒரு நாளும் என்னுடைய மார்பில் ஆயுதங்கள் விழுந்ததேயில்லை. இந்தப்

பன்னிரண்டு வருஷ காலமாக... என்னுடைய மார்பில் ஆயுதங்கள் படாத ஆயுதங்கள் இன்று புதிதாக எங்கயோயிருந்து என்னுடைய மார்பில் ஆயுதங்களைப் பிரயோகம் செய்திருக்கின்றார்கள். யாரென்பது எனக்குத் தெரியவில்லை. திடீரென்று என்னுடைய மார்பில் ஆய்தம் விழுந்தது. என் இடது கையில் என் பெலத்தைக் கொண்டு பிடித்திருக்கின்றேன். இந்த ஆயுதங்கள் என் இடது கையால் பிடிக்காமல் இருந்தால் என் உயிர் இதற்குள்ளாகவே போயிருக்கும். ஆனால், நீ... கொல்ல வேண்டிய வீரர்கள் யார்? இது யாருடைய ஆய்தம்? அப்படியென்பதை நாம் தெரிந்துகொண்டுதான் உயிர்களை விட வேண்டும். ஆம். இந்த ஆய்தங்களை என்னுடைய பெலத்தைக் கொண்டு பூமியிலே நிறுத்தி நான் பார்க்கவேண்டும். அப்போது நன்றாகப் புரியும். ஹஹ் ஹஹ்ஹா.. யார் எவர் என்றே சிந்தித்தோம். கடேசியில் இந்த ஆய்தங்களில் 'ராமா' என்று ஓர் பெயர்களைப் போட்டிருக்கிறான். பூமி சூழ் உலகமெங்கும் மூலமந்திரத்தை முற்றும் எண்ணிய... மறுமநோய்கள் பொழுதென்னும் ராமா ராமா என்று செம்மை சேர் நாமம் தன்னைக் கண்களால் தெரிந்துகொண்டேன்... அந்தக் கிருஷ்ண பரமாத்மா செய்த ஒரு அக்கிரமங்களை...! டேய்! நயவஞ்சகத் துரோகி... பாவி ராமா... அல்லும் பகலுமாகவே 'ராமா' 'கிருஷ்ணா' 'எம்பெருமாளே' என்று நான் வணங்கிக் கொண்டிருக்கின்றேன். என்னையே இந்த நயவஞ்கத் துரோகம் செய்து விட்டான். பூனையுடைய வார்த்தையைக் கேட்டு மதயானையைக் கொன்றது போல என்னைக் கொன்றுவிட்டாயே ராமா. அப்படி ஒனக்கென்ன அக்கிரமங்களைச் செய்தேன்? என்ன கொடுமை செய்தேன்? என்ன குற்றம் செய்தேன்? எக்காரணத்தை

முன்னிட்டு என்மேல் ஆயுதங்களைப் பிரயோகம் செய்தாய்? ஏனிந்த... உனக்கு இந்த மதிகள் வந்தது. ஏனிந்த அறிவு வந்தது உனக்கு?...

பாடல் : **ஏனிந்த மதிகுறைத்தாய்**
மறைந்து ராமா
எதுக்குநீ கணை தொடுத்தாய்?
மறைந்து ராமா
எதுக்குநீ கணை தொடுத்தாய் (ஏனிந்த)
வான விபூஷணா தசரதன் உன்னைப் பெற்றான்
வரமும் தந்திரமில்லாமல் குரங்கைக் கொல்லவா சொன்னாய்?
ஏனிந்த மதிகுறையாய்?
மரத்தின் மறைவில் நின்று மார்பில் அம்பைக் கொண்டு எய்த ஸ்ரீ ராமா
ஏனிந்த மதி குறைத்தாய்?
எதுக்குநீ கணைதொடுத்தாய்?

வாலி : ஏய்! ஏனிந்த மதிகுறைத்தாய்? மறைந்து நின்று அம்புகளைப் பிரயோகம் செய்தாய், மதிகெட்ட ராமா! வான விபூஷணான தசரதன் உனைப் பெற்றான். உனக்கு வரங்குடுத்தல்லாமல், மர்க்கடமான வானரங்களையும், ஆடுமாடுகளையும், மனிதர்களையும் கொல்வதற்காக உனக்கு வரங்களைக் கொடுத்தார்களா? என் தம்பியான சுக்ரீவன் உனக்கு என்ன உபகாரம் செய்தான்? நான் என்ன உனக்கு அபகாரம் - அநியாயத்தைச் செய்தேன்? மறைந்து நின்று என்னுடைய திரேகத்தில் ஆயுதங்களைப் பிரயோகம் செய்திருக்கின்றாய். அப்படி எனக்கு நீ எதிரியாக வரவேண்டியவன்... என்.. ஆயுதங்களைப் பிரயோகம் செய்ய வேண்டிய வீரன், மறைந்து நின்று... எதிரில் வந்து என்னுடன் யுத்த களத்தைச் செய்திருந்தால் இந்த வாலி ஒன்னைய

லேசா விட்டுவிடுவானா? அதுக்கொரு உதாரணத்தைச் சொல்லுகிறேன் கேள். நெஞ்சிலே பட்ட பாணம் இடது கையால் பிடித்த வாலி நான்! வஞ்சகமற்ற ராமா! வருகின்ற இடத்தைப் பார்த்து, என் எதிரே நீ நின்று ஆயுதங்களைப் பிரயோகம் செய்திருந்தாயானால் உன்னுடைய வில்களுக்கும், உன்னுடைய பத்து விரலுக்கும், உன்னுடைய அம்புறாத் துணிகளுக்கும், உன்னுடைய ராம பாணங்களுக்கும் இந்த வாலி, பஞ்சில் வைத்தத் தீயது போல் உன்னை நான் பஞ்சாப் பறக்க வைத்திருப்பேன். இந்த வாலி, சாதாரணமான குரங்குதானே அப்படியென்று ஒரு கௌரவமான முறையில் மறைந்துநின்று என்மேல் ஆயுதங்களைப் பிரயோகம் செய்துவிட்டாய். வழி வழி முறமையைக் காட்டிவிட்டான் இராமன். எப்படி வழி வழி முறமையைக் காட்டினாரென்றால், இந்த ராமர் பிறக்காததுக்கு முன்னால், தர்மபுத்ரராகிய தசரதர் ஈவு இரக்கம், தயவு தாட்சண்யம், தரும சிந்தையைச் செய்து கொண்டிருந்தார். அவருக்குக் குழந்தையே பிறக்கவில்லை. அப்போது தேவர்கள், முனிவர்கள் எல்லாஞ் சேர்ந்து, 'வாருங்கள் தசரதரே! இத்தனைத் தருமங்களைச் செய்திருக்கின்றாய்... உனக்குக் குழந்தை பாக்கியமே கிடைக்கவில்லை. ஒருவேளை நீ கருமம் செய்தால் ஒனக்குக் குழந்தைகள் பிறந்தாலும் பிறக்குமென்று அன்று தேவர்கள் சொன்னார்கள். அப்போது ஆயிரம் யானைகளைக் கொல்வதற்காய் வேட்டைக்குப் புறப்பட்டார் தசரதர். மறைந்து நின்று ஆயிரம் யானைகளைக் கொன்று வேட்டையாடச் சென்ற இடங்களில், ஆயிரம் யானைகளில் ஒரு யானை வரவில்லை. அப்போது ஐந்தின் மகா முனிவர்களாகிய தாய்தகப்பனைச் சுமந்து கொண்டு வந்த குருபத்ரனைத் தசரதர் யானை என்றே கொன்றுவிட்டார். கொன்றபடியால்

ஐந்தின் மகாமுனிவர்கள் கொடுத்த சாப காரணத்தின்... அன்று தசரதர் இறக்கும் காலத்தில் ஒரு குழந்தைகளும் பக்கத்தில் இல்லாமல் போய் விட்டார்கள். தகப்பன் மரத்திற்கு மரமாக நின்று குருபத்திரனைக் கொன்ற ஒரு பழக்கம்... பரம்பரையில் சரியாக எடுத்துக் காட்டி விட்டான் ராமன். ஏன் மௌனம் சாதித்து விட்டாய்? நான் பேசியது ஒரு வார்த்தைகளுக்குப் பதில் சொல்லாமல் ஏன் தலை குனிந்து விட்டாய் ராமா? எதிரே வரவேண்டும். சே!

இலக்கு. : டேய் வானரமே! இராமரைப் பார்த்துக் கேவல மாகவே பேசுகிறாய். அடிபட்ட வேதனையில் உளராமல் கவனமாகவே பேச வேண்டும். மீண்டும் தவறான முறையில் பேசினால் என்னு டைய மந்த்ர வாளுக்கு உன்னை இரையாக்கி விடுவேன் ஜாக்கிரதை!

இராமர் : லட்சமணா!

இலக்கு. : அண்ணா!. ஒரு வானரம் எங்களுடைய ஜாதிக் குலாச்சாரப்படிகளெல்லாம் வீரமடித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் குரங்கை என் மந்த்ரவாளுக்கு இரையாக்கி விடுகிறேன். விடை கொடுங்கள் அண்ணா.

இராமர் : தம்பி! அடிபட்ட நாய்கள் குரைத்ததுபோல் வாலியானவன் அடிபட்ட வேதனையில் பேசு கிறான். மீண்டும்... வாலி சொல்வதற்கு நாம் குற்றவாளிதாம். அதை நாம் ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும். அந்த வாலியினுடைய பாதாரம் விழுந்து சரணாகதி அடைவதற்கு நான் செய்து விடுகிறேன். என் பின்புறமாக வா.... [இசை]... வாலி!

வாலி : யார் பேசக்கூடியது?

இராமர் : மரத்துக்கு மரமாக இருந்து உன்னை நான் பாணப் பிரயோகத்தில் கொன்றேன். அந்த ராமன் பேசுகிறேன்.

வாலி : ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா. என்ன பொறுமை? என்ன அறிவுகள்? ஒருவனைக் கொன்றுவிட்டு இப்போது சாந்த குணத்தில் வந்து பேசிக் கொண்டிருக்கின்றீர்கள். ராமா! நான் செய்த குற்றம் என்ன? எதற்காக என் மார்பில் ஆயுதங்களைப் பிரயோகம் செய்தீர்கள்?

இராமர் : எனக்கு நீ ஒரு குற்றமும் செய்யவில்லை. உன்னை நான் வஞ்சகமாகவும் பாணப் பிரயோகத்தில் நான் செய்யவில்லை. ஆனால் உடன்பிறந்த தம்பியை வஞ்சகம் செய்வது தவறல்லவா?

வாலி : அப்படி என்ன வஞ்சகம் செய்தேனென்று ஓங்களுக்குத் தெரிந்தது?

இராமர் : தம்பியுடைய மனைவி மக்களையும், ராணுவங்களையும், ராஜ்யங்களையும் பறித்துக் கொண்டு பனிரண்டு வருட காலமாக அடித்து இம்சை செய்வது பாவமல்லவா?

வாலி : அடேயப்பா... தம்பியை நான் பாவம் அநியாயம் செய்ததற்காக வேண்டியே அவனை ஆதரித்தீர்கள். என்னுடைய மார்பில் ஆயிதத்தைப் பிரயோகம் செய்தீர்கள். அய்யா ராமா! உன்னுடைய மனிதருடைய ஜாதியில் நீதி, நேர்மை தவறாமல் ஒரு பெண்ணை அழைத்து வந்து ஊரறிய உலகமறிய திருமணங்களைச் செய்வீர்கள். எங்களுடைய பழக்கம் அப்படி யில்லை. நாங்கள் வரமுறையில்லாமல் திரு மணம் செய்து கொள்வோம்.

இராமர் : எப்படி?

வாலி : தம்பியினுடைய மனைவி அண்ணன் சேர்த்துக் கொள்வோம். அண்ணனுடைய மனைவியைத் தம்பி சேர்த்துக் கொள்வோம். அதுமட்டுமல்ல, எங்களைப் பெற்றாளே தாய், அவளும் எங்களுக்கு மனைவிதான் (செலவில்ல). எங்கள்

உடன்பிறந்திருக்கின்றார்களே சகோதரிகள் அவர்களும் எங்களுக்கு மனைவிதான் (காலம் மாறிரிச்சி) எங்களுக்குப் பிறந்த மக்களும் எங்களுக்கு மனைவிதான்.

இராமர் : ஏன் இப்படிப் புரியாமல் உளறுகிறாய் வாலி? எல்லோருக்கும் புரியும்படி விளக்கமாகச் சொல்லவேண்டும்.

வாலி : அய்யா! ஆனால், ஏன் இப்படிப் பேசினதாகவே மனம் வருத்தம் செய்துகொள்ள வேண்டும்? நாட்டில் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றதே ஆடுமாடுகள், ஆடுமாடுகளுக்கு ஏதாவது வரமுறை தெரிகிறதா? இல்லை. அதைப்போல் நாங்கள் வானரக் கூட்டங்கள். எங்களுக்கு ஒரு வரை முறையும் தெரியாது. ஜாதி மதமும் புரியாது. உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்றும் எங்களுக்குத் தெரியாது. அதனால் எங்களுடைய பழக்கமே இப்படித்தான்.

இராமர் : ஆ! உன்னுடைய அறிவை நான் பாராட்டு கிறேன் வாலி. இவ்வளவு அறிவுடன் பேசுகிறாய். தெய்வலோகத்தில் வைகுண்ட பதியில் நான் பேசிய ஒரு ரகசியங்கள் உனக்குத் தெரிவருமா?*

சுக்ரீவன் : அண்ணே! செத்துப் போனயா அண்ணே!

வாலி : தம்பி! உன்னைப் பகைவன், வஞ்சகன் என்றே நினைத்தேன். கடைசியில் நரகத்தில் சேர வேண்டியவனை அந்த ராமபிரான் கையில் மோட்சம் வாங்கிக் கொடுத்தாய். அதே எனக்குப் போதுமப்பா. அந்த ராமரை நயவஞ்சகம் செய்து விடாதே. நம்பிக்கைத் துரோகம் செய்யாதே. உன்னை அன்புடனே ஆதரிப்பார்.

சுக்ரீவன் : அதெல்லாம் எனக்கு நல்லாத் தெரியும். நீ சட்டுபுட்டுன்னு செத்துப்போ. {சிரிப்பு}

★ பார்வையாளர்களிடம் இரைச்சல் 'ஏய்' 'ஏய் கல்லத்தூக்கி எறியுறாக' என்று அநேகம் பேர் கத்துகின்றனர். ராஜீராவ் சப்தமிடுகிறார்.

அங்கதன் : அப்பா!

வாலி : தம்பி!

அங்கதன் : அன்று நான்.... நல்ல அறிந்ததுகளைச் சொல்லும்போது, என்னை அடித்து மிரட்டி விட்டு வந்தீர்களே சண்டைக்காக! கடைசியில் உங்களை நான் பறிகொடுத்துவிட்டேன். இனிமேல் யாரை நான் தந்தை என்று அழைக்கப் போகின்றேன்?

வாலி : மகனே அங்கத குமாரா! இனிமேல் நான் உனக்குத் தகப்பன் இல்லையப்பா. அதோ நிற்கின்றாரே வைகுண்டபதியிலிருக்கும் கிருஷ்ண பரமாத்மா... அந்த ராமர்தான் உனக்குத் தாய் தகப்பன் தெய்வம். உன்னை ஆதரிக்கும் கடவுள் அவர்தானப்பா. சுவாமி! ஒரு பாவமும் அறியாத என் மகனை நீங்கள் ஆதரிக்க வேண்டும்.

இராமர் : வாலி! உன் தம்பி சுக்ரீவனையும் உன் மகனாகிய அங்கத குமாரனையும் சர்வ ஜனங்களையும் நான் ஆதரிக்கின்றேன். என்னுடைய ராம பாணத்தை நீ எடது கையால் பிடித்திருக்கின்றாய். இந்த ஈரேழ் பதினாலு லோகத்லயும் என்னுடைய ராமபாணத்தைப் பிடித்தவர்கள் யாருமேயில்லை. நீ துஷ்ட வாலியாக இருந்தபடியால், எதுத்தவன் பேர் பாதிப்பெலம் வாங்கவேண்டிய ஒரு வீரனாக இருந்ததால், என்னுடைய ராமபாணத்தை இடது கையால் பிடித்திருக்கின்றாய். இடது கையால் பிடித்த ராமபாணங்களை விட்டுவிடு. எமலோகம் போய்ச் சேருவாய். வைகுண்ட பதியில் வந்து நான் உனக்குண்டான மோட்சங்களைத் தருகிறேன்.★

★பாவையாட்டி ராஜுராவ் முன்னால் அமர்ந்து இசைத்துக் கொண்டிருக்கும் சிறுவனிடம் 'முடிச்சிடலாமா' என்று கேட்டு என்னிடம் கேட்கச் சொல்கிறார்.

பாவையாட்டி : நெஞ்சிலே பட்ட ராம பாணங்களை இடது கையால் பிடித்த வாலி, விட்டவுடன் எமலோகம் போய்ச் சேர்ந்தார். வாலி மோட்சம் முடிந்தது.

வாலி : ஆ! ஆஆ...[இசை]*

பபூன் 2 : அதச் செய்ங்க மொத.

பபூன் 1 : ஒன்னைய மாதிரி கெடுகாலிப் பய இருந்தா அப்படிச் செய்வாங்க.

பபூன் 2 : அப்படித்தான் செய்வாங்க [அடிக்கிறான்]* *

இராமர் : ஏய் சுக்ரீவா! உன் கஷ்டகாலங்களை நிவர்த்தனை செய்து விட்டேன். உன் வாலியை எடுத்து நல்லடக்கம் செய்து, உன் பட்டா-பிஷேகத்தை முடித்துக் கொண்டு சீதையம் மனைத் தேடுவதற்காக முயற்சி செய்ய வேண்டும்.

சுக்ரீவன் : சுவாமி! என் அண்ணனைக் கொண்டுபோய் நல்லடக்கம் செய்துவருவதற்கு ஆறு நாளைக்கு 'லீவு' கொடுங்கள். ஆறு நாளைக்குள் என் படைகளை அழைத்துக்கொண்டு வந்து நான் சேருகிறேன்.

இராமர் : சரி புறப்படு...

பாடல் : **வாலியைத் தான் இப்ப**
வதம் செய்தேன்
கோவிந்தா... கோவிந்தா....
...

★பார்வையாளர்களிடம் இரைச்சல்.கற்களைத் தூக்கி எறிகின்றனர். 'சோத்தத் தின்னாத் தெரியும் அறிவிருக்கும்' என்று ராஜுராவ் கூற 'அதோ அந்தப் பய' என்று சிறுவன்கூற, 'ஏறியறதே ஏறியுறீங்க, மண்ட கிண்டய ஒடச்சிப் போடுங்க... லைட்ட கிய்ட்ட அடகு வச்சி அவனுக்குப் பிளாஸ்திரி போட்டிடுவோம்' என்று எரிச்சலுடன் ராஜுராவ் கூறுகிறார்.

★★மீண்டும் பார்வையாளர் பக்கமிருந்து கல்லெறி நடைபெற இரைச்சலும் கூச்சலுமாக இருக்கிறது.

சுக்ரீவன் : அனுமாரே! வாலியை எடுத்து நாம் நல்லடக்கம் செய்து விட்டோம். இந்தப் பட்டாபிஷேகம்... அங்கத குமாரனுக்கு முடிசூட்டுவோமா? இல்லை... நமக்கு முடிசூட்டுவோமா?

அனுமன் : இந்த யோசனை சொல்வதற்கு எனக்குத் தெரியாது. எங்களுடைய கூட்டத்துக்கெல் லாம்... எங்களுக்கெல்லாம், பெரிய மனிதர் ஜாம்புகர் இருக்கிறார். அவரை அழைத்து யோசனைகள் நாம் கேட்போம். வாருங்கள் ஜாம்புகரே!...

சாம்புகர் : ஏன்டாப்பா... நாராயணா! பகவானே! கட வணக்கம் (ம்... போறவனே வாரவனே) ஏம்ப்பா அனுமாரே! கூட்டங் கூட்டமா நிக்றீங்களே? என்னா விஷயமப்பா? (வாலி செத்துப் போனான்) ம்... (வாலி செத்துப் போனான்) துஷ்டப்பயா வாலி செத்துப் போனானா? யாரப்பா கொன்னது? (இராமரு) அந்த எம்பெருமான், நமோ நாராயணன் வந்திருக்கின்றார்களா? (ஆமாம்) நாராயணா! பகவானே! கடவணக்கம் (ம். இங்கயிருந்து போறவனே... அங்கயிருந்து வருவானே) வாலி எப்பச் செத்தான்? (இப்பத்தான்) யாரு கொன்னது? (ராமரு) வாலி செத்துப் போனானா? (ஆமாம்) நாராயணா கடவணக்கம்...(வாய் இழுக்குது இந்தக் கொரங்குக்கு) யாரப்பா வாலியக் கொன்னது? (அட ஒனக்கு எத்தனத் தடவச் சொல்றது?)

பபூன் 2 : கெழட்டுப் பயா... இந்த அகராதிச் செஞ்சா (கொமரனுக்கு என்னா அகராதி இருக்காது) இப்ப இருக்ற வாலிபப் புள்ளைகளுக்குச் சொல்லியாக குடுக்கணும்! எத்தினித் தடவச் சொல்றது? ம். ஒரு தடவச் சொன்னாக் கேக்கல. ஏ மக்காக் கோழி கொரங்கே... {சிரிப்பு}

பபூன் 3 : ஏலே! பார்லே! அந்தக் கொரங்கு எப்படியும் போவட்டும். அஞ்சி பைசா குடுலே {சிரிப்பு}... [இசை]

அனுமன் : சாம்புகரே! இந்த கிஷ்கிந்தாபுரியை சுக்ரீவனுக்கு நாம் முடிசூட்டுவோமா? இல்லை அங்கத குமாரனுக்கு நாம் முடிசூட்டுவோமா? யோசனை களை நீங்கள் எடுத்துச் சொல்லவேண்டும்.

சாம்புகர் : அடாடா. முடி சூட்ற விஷயமா ஏன்ட்ட கேக்றீங்கப்பா? (ஆமாமா) ஏ அப்பா! அண்ணன் செத்துப் போனா அண்ணனுடைய ராஜ்யம், நாடு, நகரம், வீடு வாசல் தம்பிக்குத் தான் சேரும். அண்ணன் மகன் ஒருத்தன் இருக்றான்ல. பங்காளி மகன் இருக்கும் போது ரெண்டு பேத்துக்கும் சேராது* அத எங்கிட்ட குடுங்க.

பபூன் 2 : அதத் தின்னுட்டுப் போகலாம்னு பாக்குறியோ. ராஸ்கோல். பழத்த உறிச்சித் தின்னுப் போட்டு வாழப்பழத் தொலியத்தான் ஒனக்குக் குடுப்பேன். {சிரிப்பு}

பபூன் 3 : ஏல! என்னமுந் தின்னுட்டுப் போறான். அஞ்சி பைசா குடடா. {சிரிப்பு}

பபூன் 2 : ஏல... [இசை]

சாம்புகர் : எப்பா! அங்கத குமாரனுக்கும் சுக்ரீவனுக்கும் பகை ஏற்படாமலே கிஷ்கிந்தாபுரி முழுவதும் சுக்ரீவனுக்கு அரசனாக்கி விடுவோம். அங்கத குமாரனை இளவரசனாகவே அமைத்து விடு வோம். சரி, அப்படிச் செஞ்சாதான் ரெண்டு பேத்துக்கும் சண்ட வராது. இல்லாட்டி ஒண்ணுக் கொண்ணு அடிச்சிக்கிட்டுக் கெடப்பாங்க.

★பதிவுநாடா மாற்றத்தினால் ஏற்படும் சிலநிமிட இடைவெளி.

அனுமன் : அப்படியே நாம் செய்து விடுவோம்.

சாம்புகர் : செஞ்சிட்டு, நம்முடைய ஜாதிக்குலாச்சார மெல்லாந் தீத்திட்டு வருவோம். (எப்படி?) மதுவனத்ல போயி மதுக்கனியச் சாப்பிட்டா தான் எங்களுடைய ஜாதி மதமெல்லாந் தீரும். புறப்படுங்கள். மது வனத்துக்குப்போகலாம். ஓடியாங்க...

பாடல் : **கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும்**
கந்தனே உன்னை மறவேன் (கற்பனை)
அற்புதமாகிய அருட்பெருந் சுடரே.
....
நிற்பதும் நடப்பதும் நின் செயலாலே
காண்பதெல்லாம் உந்தன் கண் விழியாலே!

இராமர் : வாருங்கள் சுக்ரீவ அரசரே! ஆறு நாளைக் குள்ளாகவே படைவீரர்களை அழைத்துக் கொண்டு வருவதாக விடைபெற்றுச் சென்ற வர்கள்... இப்போது ஆறுமாதம் ஆகிவிட்டதே. எங்களை ஏன் மறந்து விட்டீர்களா?

சுக்ரீவன் : பரந்தாமா! மன்னிக்க வேண்டும். என்னுடைய அண்ணனாகிய வாலிக்கும் எனக்கும் சண்டை நடக்கும் நேரங்களில், என்னுடைய வானரக் கூட்டங்கள் ஆளுக்கொரு திசையாக பயந்து விழுந்து ஓடிப்போய் விட்டார்கள். அவர்களைக் கண்டுபிடித்து வருதற்குச் சிலது நாள் ஆகி விட்டது. சிலநாள் மதுகளை சாப்பிட்டு நான் மயங்கி விட்டேன். இப்போது என்னுடைய வீரர்களுடனே வந்திருக்கின்றேன். 'கால்'னால் ஏவுன வேலைகளை என் இரண்டு கையால் செய்வதற்கு நான் தயாராகியிருக்கின்றேன்.

இராமர் : சுக்ரீவ அரசரே! தென்னிலங்கையாளும் இராவணேஸ்வரன் சீதாலட்சுமியைச் ஜெறை எடுத்துச் சென்றவன் இலங்கை மாநகரத்தில் தான்

வைத்திருப்பதும் தெரியவில்லை. இல்லை... கொன்று விட்டதாகவும் புரியவில்லை. சீதை இருக்கும் இடங்களைக் கண்டுபிடிப்பதற்கு யார் போய் வருவது?

சுக்ரீவன் : என்னுடைய வானரங்களை நாலு திசைக்கும் நான் அனுப்பித்து வருகிறேன். எந்தத் திசையில் சீதாலட்சுமி இருக்கின்றார்களோ அந்தத் திச நோக்கி நாம் படை எடுத்துச் சென்று அந்தப் பகைவனை வென்று சீதையம்மனைச் ஜெறை மீட்டி வரலாம் பகவானே!

இராமர் : நல்ல யோசனைதான்! அப்படி உன் படைகளை நான்கு திசைகளுக்கும் அனுப்பி வரவேண்டும்.

சுக்ரீவன் : யாரங்கே?... அங்கதகுமாரா!

அங்கதன் : சித்தப்பா (செத்தப்பா)

சுக்ரீவன் : ஆனால் எழுபது வல்ல வானர ஜைனியங்களை யெல்லாம் நான்கு திசைகளுக்கும் அனுப்புவித்து வரவேண்டும். சீதையிருக்கும் எடங்களைக் கண்டுபிடித்து வரச்சொல். நீயும் சில வீரர்களை அழைத்துக்கொண்டு நேர் தெற்கில் மகேந்திர பர்வதம். அதிலயிருந்து எழுநூற்றுக்காத வழியில் ஏழு கடல் தாண்டிச் சென்று லெங்கையிலிருக் கும் சீதையம்மனைக் கண்டுபிடித்து வர வேண்டும்.

அங்கதன் : தந்தையே! எனக்குப் பாதை தெரிவராதே.

சுக்ரீவன் : ஆனால் சாம்புகர் இருக்கின்றார். அவருக்குப் பாதை தெரியும். கூட்டிச் செல்.

அங்கதன் : சாம்புகரே! லெங்கைக்குப் போவதற்கு ஒங்களுக்குப் பாத தெரிவருமா?

சாம்புகர் : அட பைத்தியக்காரப் புள்ள. நீ இப்ப பெறந்த புள்ள. ஒனக்கென்ன தெரியும்? நான் அந்த காலத்து மனுஷன். எல்லாம் எனக்குத் தெரியும்.

வெள்ளையானை, வெள்ளைக் காக்கை, அண் டோரண்ட பட்சிகள், சிம்மங்கள், பாற்கடல், செங்கடல், வெறுங்கடல், எல்லாம் எனக்குத் தெரியும். இப்ப எங்க பாதையக் கேக்குற? ராவணன் ஒட்டைக்குத் தானெ? (ஏய்! கோட்டைக்கி) இராவணன் ஒட்டைக்கி எனக்கு நல்லாப் பாத தெரியும். (ஏய்! கோட்ட) வாங்கப்பா போயி ராவணன் ஒட்டைல சீதையம்மனைப் பாத்திட்டு வருவோம்.

அங்கதன் : அய்யா! இங்க தெரியுமென்று, அங்க போய்த் தெரியாதென்று வம்புகள் செய்யக் கூடாது.

சாம்புகர் : அப்படியெல்லாஞ் சொல்லமாட்டேன். பாத தெரியும். வாங்க. பொறப்படுங்க. பொறப்படுங்க... [இசை]

இராமர் : அனுமானே!

அனுமன் : பரந்தாமா! ஆதிநாராயணா! விடைதாரும் ராமா. அடியேன்... லெங்கைக்குப் போய் வருகிறேன். ஆதவன் காணாத லங்கையில் அரும்பாடுபட்டு என் தாயான சீதாதேவியைக் கண்டுபிடித்து வருகிறேன். எனக்கு விடைதந்து அருள்புரிய வேண்டும் பரந்தாமா.

இராமர் : அனுமாரே! மற்ற வீரர்கள் போனதால் எனக்கு நம்பிக்கை இல்லை. நீ சென்றால் எப்படியும் சீதையம்மனைக் கண்டுபிடித்து வருவாய். இதோ கணையாழி என்ற ஒரு அடையாளங் களை உன் கையில் குடுத்தேன். கணை யாழியைக் கொண்டு போய் சீதாலட்சுமியிடம் கொடுத்துப் பதிலடையாளம் சூடாமணி என்பதை வாங்கிக்கொண்டு ஏழு நாளுக்குள்ளாக நீ எனக்குப் பதில் சொல்ல வேண்டும்.

அனுமன் : அப்படியே நான் வந்து சொல்லுகிறேன் பகவானே! அஞ்ச வேண்டாம்.

இராமர் : மகனே வெற்றியோடு திரும்பி வா... [இசை]

சுக்ரீவன் : வாருங்கள் பகவானே.. வானரங்கள் போயிருக்கி றார்கள். அனுமாரும் போயிருக்கிறார். எப்படி யும் சீதையம்மனைக் கண்டுபிடித்து வருவார். அஞ்ச வேண்டாம். கிஷ்கிந்தா புரிக்குப் போகலாம் புறப்படுங்கள்.

பாடல் : **ராம ராமா ராமஜெயம் - ஹரி**
ராம ராமா ராமஜெயம்

அங்கதன் : ஜாம்புகரே! கிஷ்கிந்தாபுரியில் இருந்து நாம் இந்தத் தென் கடற்கரையோரமாக வந்து இறங்கி விட்டோம். ஆனால் லெங்கைக்கு நாம் எப்படிப் போவது? பயங்கரமான கடலாக இருக்கின்றதே. பாதைகளைக் காமிக்க வேண்டும் ஜாம்புகரே.

சாம்புகர் : அடப் பைத்தியக்காரப்புள்ள... இப்பத்தான வந்திருக்கிறோம். கொஞ்ச நேரம் படுத்துத் தூங்கிட்டில்ல பாதையப் பாக்கணும்...இரப்பா... பாதையப் பாத்துட்டு வந்து சொல்றேன்... ஒரு எழவுந் தெரியலையே பாத.

அங்கதன் : அய்யோ... ஏனய்யா இந்த அநியாயம் செய்ய வேண்டும்? பாதை தெரியுமென்று அழைத்து வந்து, பாதை தெரியவில்லை என்றால்... திரும்பி நாம் போய்விட்டால், சுக்ரீவ அரசர் என்னைக் கொன்றுவிடுவாரே.

சாம்புகர் : கவலப்படாதே. பாத தெரியுமின்னு கூட்டிக் கிட்டு வந்து இப்பப் பாதை தெரியல. எங்கப் பின்னால அனுமார் வந்தாலும் வந்திருப்பாரு. தேடி அலசிப் புடிச்சிகிட்டு வர்றேன்... [இசை] அனுமார் வந்திட்டாரு... அனுமாரே!

அனுமன் : ஏ வானரவீரர்களே! லெங்கைக்கு போவதாக அதிக பராக்கிரமத்துடன் வந்தீர்கள். ஏன் போகவில்லை?

ஜாம்புகர் : ஏம்ப்பா பாத தெரிஞ்சாதான போவோம். பாத தெரியாம முழிச்சிக்கிட்டு நிக்றோம்.

அனுமன் : ஜாம்புகரே! உங்களால்... இந்த ஏழு சமுத்ரம் தாண்டிச் செல்ல உங்களால முடியாது. வாலிதான் இந்த ஏழுகடல் தாண்டிப் போக முடியும். அது தவறினால் நான் ஒருவன். இரு பேர்களால் தான் இந்த ஏழு சமுத்ரம்... நாம் தாண்டிச் செல்ல முடியும். மற்றவர்கள் போய்விட்டால் சமுத்ரத்துக்குள்ளாக விழுந்து விட்டால் மீனெடுத்து உங்களை விழுங்கி விடும். இதோ ராமபிரானிடம் கணையாழி மோதிரங் களை, அடையாளங்களை வாங்கிக் கொண்டு வந்திருக்கின்றேன். லெங்கை மாநகரத்திற்குப் போய் சீதாலட்சுமியைக் கண்டுபிடித்துப் பதிலடையாளத்தை வாங்கிக் கொண்டு வருகிறேன். அதுவரையிலும் இவ்விடத்தில் இருங்கள். லெங்கைக்கு நான் போய் வருகிறேன்... [இசை]

சாம்புகர் : அப்பா அங்கத குமாரா! எங்களுக்குப் பதுலா அனுமார் போய்ட்டாரு. நீஅழுகாத. அனுமாரு சீதையப் பாத்திட்டு வந்தப் பெறகு எல்லாருஞ் சேந்துப் போகலாம். வா... [இசை]

அனுமன் : ஆகா. இந்த இரு சமுத்ரங்களைக் கண்டு வானரங்கள் பயந்து விட்டார்கள். ஆகாயத்திற் கும் மண் புவனத்திற்கும் நான் ஒன்றாக விஸ்வரூபங்களை எடுத்திருக்கின்றேன். இதோ மகேந்திர மலை மேல் நின்று ஏழு வழி, எழுநூற்றுக் காதவழி நான் கடல் பாய்ந்துச் சென்று லெங்கை மாநகரத்திற்குள்ளாக சீதையம் மனைக் கண்டுபிடித்து வருகிறேன். ...

பாடல் : **ராம ராமா ராமஜெயம் - ஹரி**
ராம ராமா ராமஜெயம்.

இலங்கிணி : ஹஹ்ஹஹ்ஹா. இலங்கை வாசலைக் காவல் காக்கும் இலங்கிணி என்னுடைய பெயர். யார் வந்தாலுமே என்னுடைய உத்தரவு இல்லாமலே அரண்மனைக்குள்ளாகப் போகக் கூடாது. அப்படி மீறிப் போய் விட்டால் நான் சூலாயிதத் தினால் குத்தி அவுங்களை இரையாக்கி விடுவேன். யாரோ தெரியவில்லை அரண்மனைக் கதவை உடைத்திருக்கின்றார். அப்பேர்க் கொண்ட கெட்டிக்காரனை நான் பார்த்துவிட்டால், என் சூலாயிதத்தினால் குத்தி இரையாக்கி விடுவேன். டேய்! யார்ரா கதவ ஒடைச்சது? டேய்! யார்ரா வந்தவன்? டேய்! வாடா டேய் வெளியில!... ஹஹ்ஹஹ்ஹா... குரங்கே எவ்வளவு ஆணவமாக இருக்கலாம் உனக்கு? இலங்கை வாசல் காவல் பார்க்கும் இலங்கிணி என்றால் உலகமே கிடுகிடுன்னு கதற வேண்டும். அப்படி நான் கெட்டிக்காரியாயிருக்கும் நேரங்களில், நீ குரங்கு அரண்மனைக் கதவை உடைத்திருக்கிறாய். டேய்! வந்த வழியைப் பார்த்துப் பிறமுதுகு காட்டி விழுந்து ஓடிப்போ. இல்ல... என் சூலாயிதத்தினால் உன்னைக் குத்தி இரையாக்கி விடுவேன். போடா.

அனுமன் : அடி ஊள மூக்குக் கழுத! தான் என்ற ஆண்மை படைத்த அரக்கியை... என்னைப் பிறமுதுகு காட்டி விழுந்து போகச் சொல்லுகிறாள். மரியாதையாகச் சொல்லுகிறேன்... இலங்கைக் குள் போக வேண்டும். பாதையை விடு. அப்படி யில்லை என் தண்டாயுதத்தினால் உன் மண்டையை இரண்டு சுக்கலாகவே நொறுக்கி விடுவேன்.

பபூன் 2 : மண்ட ஒடு போனாப் போவுது. மூளைய எனக்குக் குடுத்திடுங்க. {சிரிப்பு}

இலங்கிணி : ஏய் குரங்கே! அய்யோ பாவம் குரங்கே என்று பாவபுண்ணியங்களைப் பார்த்துச் சொன்னால்,

என் மண்டையைக் கணீரென்று சுக்கலாகவே நொறுக்கி விடுவாயா? என்ன ஆணவத்தில் பேசுகிறாய்? இதோ என் சூலாயுதத்தினால் உன்னையக் குத்தி இரையாக்குகிறேன்... [இசை]

பபூன் 1 : ஏல! எள நொங்கு வேணுமா... எள நொங்கு (ஏய் எங்கப்பா?) இந்தாக் கெடக்கப்பா (ஏய் எள நொங்கு இல்லப்பா. இலங்கமாகாளி) இலங்க மாகாளி ஏன் இப்படிப் பல்லத் தொறந்து படுத்துக் கெடக்கா? (ஏய்! அனுமாரு பாதைய விடச்சொன்னாருப்பா.) அனுமாரு லெங்கைக்குப் போகணும்... பாதையை விடச்சொல்லியிருக் காரு சரி. (இவ விட மாட்டேனுட்டுச் சண்டைக்கு வந்திருக்கா) ம். அப்புறம்? (ஒரே குத்து) யாரு? (இவள) அனுமாரு இந்த இலங்கிணிய ஒரே குத்துல என்ன பண்ணிட்டாரு? (வாயப் பௌந்திட்டாரு). யாரு? (இவா) இலங்கிணி. (ஆமா) அனுமார் குத்னதே குத்னாரு இப்படிக் கொடல் குந்தாணி பிதுங்கறதுக்கா குத்னாரு. (டேய் தூக்கிப் போடப்பா) கொடல் வேற குந்தாணி வேற... எல்லாம் புளுக் புளுக்னு கழிஞ்சி போய்க் கெடக்கும். (ஏய் தூக்கிப் போடு) ஏய் இந்த நாத்தம் எடுத்த கழுதயை எவன்டா தூக்றது? (டேய் ஒந் தம்பியக் கூப்பிடு) ஒருத்தன் எப்படித் தூக்க முடியும்? (ஒந் தம்பியைக் கூப்பிடு) அவன் வர்றானோ என்னமோ? சென்ட்ரல் மேன் (ஏய் காசு குடுத்தா வர்வாம்ப்பா) டேய் கவள வாயா... {சிரிப்பு} (ஏய் சண்டியர்) டேய் அடமுக்கா! (ஆமா. அடமுக்கா) ஏய் கிழிஞ்சவாயா! {சிரிப்பு}ஏல சண்டியர்! இங்க வாடா டேய். (ஏய்.)

பபூன்2 : கருப்பட்டி என்றாலும்

சக்கரத்தூள் என்றாலும்

காப்பிப் போட்டே நான் சாப்பிடுவேன்... {சிரிப்பு}

பபூன்1 : நல்ல பாட்டுடா இது [அடிக்கிறான்] {சிரிப்பு} காப்பிக் குடிக்றதுக்கெல்லாம் ஒரு பாட்டு.

பபூன்2 : ஏய்! காப்பி மனுஷன் சாப்பிடாம என்னடா செய்வான்? {சிரிப்பு}

பபூன்1 : அதுக்கு இப்படியா படிக்கிறது.

பபூன்2 : நான் அப்படித்தான் படுப்பேன்.

பபூன்1 : ஏலே! பெறகு படுக்கலாம். இங்க ஒரு பெணங்கெடக்கு. தூக்கிப் போடுவோம். வா.

பபூன்2 : அடப் பாவிப்பயலே. இவங் கஞ்சம் புடிச்சிப் பணத்தச் சேத்து வச்சிருக்காம் போலத் தெரியுது. இப்ப எங்கயோ கீழப் போட்டுட்டு என்னையத் தேடுறதுக்குக் கூப்பிடுறான். எவ்ளவு பணமுடா நீ போட்டுட்டே?

பபூன்1 : ஏலே பெணத்தத் தூக்கலாம் வாடங்றேன். பணம் போட்டுட்டேன்னா சொன்னேன். பணமில்லடா.

பபூன்2 : பின்ன... நோட்டுப் போட்டிட்டயா.

பபூன்1 : பிணம். ஒரு பொம்பள செத்துக் கெடக்கிறா... தூக்கிப் போடுவோம். வா

பபூன்2 : பொம்பள செத்துக் கெடக்காளா? அவா எப்படிச் செத்தா? ஏன் செத்தா? மரியாதயாச் சொல்லிப்புடு. இல்லேன்னா இன்னிக்கிக் கேஸ் போட்டு நடவடிக்க எடுப்பேன். {சிரிப்பு} அப்படி மீறிப் பேசுனே ஒன்னையப் போலீஸ் பேனுகிட்ட புடிச்சிக் குடுத்திருவேன். {சிரிப்பு} (போலீஸ் பேனுகிட்ட)... போலீஸ் பேனா வேனா? (பேனு... ஈறு)

பபூன்1 : டேய்! இலங்கை வாசல் காவல் பார்க்கும் இலங்கிணி. அனுமார் கொன்னுப்போட்டாரு.

இங்க கெடக்கு. நாறிப் போகும். தூக்கித் தூரப் போடுவோம் வா.

பபூன்2 : எங்க... அந்த எளநொங்கப் பாப்பம். ஏல மக்காகோழி படுவா! இந்தப் பெணத்தையாடா என்னைத் தூக்கச் சொல்ற.

பபூன்1 : ஏன்?

பபூன்2 : ஏல! நல்ல பொணமா இருந்தாலும் பரவாயில்ல. கொடலு குந்தாணி பிதுங்கிபோய்க் கெடக்கு. இந்த அசிங்கம்புடிச்ச கழுதய... நான் இருக்ற ஒரு இன்ரஸ் என்னா... மதிப்பு என்னா... என்னையப் போய்த் தூக்கச் சொல்றயே. இனும சொல்லுவியா அப்படி! [அடிக்கிறான்] {சிரிப்பு}

பபூன்1 : ஏலே! செத்தவங்களைத் தூக்கிப் போட்றது எவ்வளவோ தருமமடா.

பபூன்2 : என்னுடைய வாழ்நாளேளயே பழக்கமேயில்ல செத்தவங்களைத் தூக்கி! {சிரிப்பு}

பபூன்1 : பின்ன யாரத் தூக்கிப் போடுவ?

பபூன்2 : உயிரோட இருக்றவனத்தான் குழியவெட்டிப் பொதைப்பேன். {சிரிப்பு}

பபூன்1 : வாடா ரெண்டு பேரும் ஆளுக்கு ஒரு பக்கம் தூக்கி எட்டத்ல கொண்டு போய்ப் போட்ருவோம்.

பபூன்2 : சரி அண்ணே! நீ சொன்னதுக்காக வேண்டி நான் தூக்றேன். நீ வேண்ணா கால்ப்பக்கம் தூக்கு. நான் தலப்பக்கம் நான் தூக்றேன். (ஏ! தலப்பக்கம் தூக்னா என்ன?)

பபூன்1 : நீ கால்ப்பக்கம் தூக்னா என்ன?

பபூன்2 : அட மக்காக் கோழி படுவா. கால்ப்பக்கம் தூக்கச் சொல்றியே. செத்தவ, புளுச்சின்னு பேண்டுட்டா? {சிரிப்பு}

பபூன்1 : ஏண்டா செத்த பெணமாடா பேளப் போவுது?

பபூன்2 : உயிரோடு இருக்றவங்களயே அடப்பு தொறப்பு பாக்கமுடியலயே. செத்தவள நீ பாத்துக்கிட்டா யிருக்ற. புளுச்சின்னு பேண்டுட்டா அது அசிங்கமில்லே. {சிரிப்பு}

பபூன்1 : சரி. அப்படி அசிங்கமாயிருச்சின்னா சோப்பு வாங்கித் தர்றேன். போய்க் குளிச்சிட்டு வா.

பபூன்2 : நான் போறேன் சோப்பு வாங்க. ஒனக்கு வாங்கத் தெரியாது.

பபூன்1 : அது என்னா சோப்பு? (நாலணா சோப்பா?)

பபூன்2 : சும்மாயிரு மக்காகோழி படுவா. என் ஒடம்புக்கு நாலணா சோப்பு புடிக்காது.

பபூன்1 : பின்ன என்ன சோப்பு?

பபூன்2 : சினிமா நடிகர்கள், தற்கால நாகரீக முறையில மைனர்கள் போடுற சோப்புத்தான் நான் போடுவேன்.

பபூன்1 : அதென்னா சோப்பு?

பபூன்2 : நக்குன சோப்பு. {சிரிப்பு}

பபூன்1 : அந்த சோப்பு வேற விக்குதா?

பபூன்2 : அதான் நல்லாயிருக்கும். வாசமாயிருக்கும். {சிரிப்பு}

பபூன்1 : புதுசாயிருக்குடா பேரு. சோப்புப் பேரு. {சிரிப்பு} டேய்! நீ சொல்ற சோப்பெ வாங்கித்தர்றேன், தூக்கு.

பபூன்2 : நான் கால்ப்பக்கம் தூக்கமாட்டேன். நீதான்...

பபூன்1 : சரி. நானே தூக்றேன். தூக்கு... தூக்... தூக்டா தம்பி... டேய் தூக்டா டேய்... தம்பி! தூக்டா தம்பி.

பபூன்2 : தூக்கு... தூக்கு...

பபூன்1 : தூக்குடா டேய்... மண்ட வலிக்குது.

பபூன்2 : ஏலப்பா ஏலேசா... இன்னுங்கொஞ்சம்.

பபூன்1 : ஏ! மண்ட வலிக்கு... தூக்டா.

பபூன்2 : எப்பா எங்குச்சி காந்துதே... யாத்தாத்தோ... அம்மம்மோ.. இந்தப் பயலச் செமந்து கொஞ்ச நாழியிலே!... தூக்கு... தூக்கு... தூக்கு.

பபூன்1 : ஏலே! நான் தூக்கிகிட்டு நிக்றேன். அவன் சும்மா நின்னுகிட்டு, தூக்குதூக்னு ஆட்டம் போட்றான் பாரு... தூக்குடா.

பபூன்2 : டேய் மக்காக்கோழி! நான் தூக்கிட்டுதாண்டா இருக்றேன். {சிரிப்பு} மண்ட காந்தலெடுக்கு... நல்லெண்ணெ கொண்டாந்து தேய்டா.

பபூன்1 : டேய்... தூக்டா

பபூன்2 : ஏலே அண்ணே! தூக்கிகிட்டே நில்லு. என்னா? இட்லி ஒரு பதினாறு இட்லி சாப்டேன். சட்னி ஒறப்பாயிருந்திச்சி. இப்ப என்னடான்னா, கடபுடான்னு வயித்தக் கலக்குது. {சிரிப்பு} டவுசர்ல முட்டிருச்சி. {சிரிப்பு} கொஞ்சம் போல 'ஈஸாக்' பண்ணிடுறேன். ஈஸாக் பண்ணிட்டு வாரேன்.

பபூன்1 : எங்கடா போனான் அவன்? (டேய்! பேள்றதுக்குப் போய்ட்டாம்ப்பா) டவுசர்ல முட்டிக்கிட்டு 'ஈஸாக்' பண்ணப் போய்ட்டான். நானே தூக்கிப் போட்டிருறேன். இந்தாடா... இந்தா... இந்தா... இந்தா... இந்தா... கழுதே! தூக்கிப் போட்றேன். இங்கயா வர்றே? 'இடுவார் பிச்ச கெடுவார் கெடுத்து'... ஒரு பதினஞ்சி பைசாக் குடுத்துப் பாக்க முடியாம... ஒரு போலித்தனம் பண்ணிட்டு டோராவக் கிழிச்சி அநியாயம் பண்ணி ஊரோடு ஒசீல பொத்துக்

கிட்டுப் பாத்தாங்களே... எங்கே? (எங்கே?) அல்லி நகரம்... அந்த ஊருக்கு இந்தப் பொணத்தத் தூக்கிப் போட்டுட்டேன்.

பபூன்2 : மக்காக் கோழி படுவா [அடிக்கிறான்] ஏண்டா! சண்டியரு.. செண்டில்மேன்... ரோட்டு மேல பேண்டுக்கிட்டிருக்றேன் {சிரிப்பு} எம் மேலை யாத் தூக்கிப் போட்ற?

பபூன்1 : ஏய்! ஒம்மேல எவன்டா தூக்கிப் போட்டான்?

பபூன்2 : நீ தான் தூக்கிப் போட்ட... அங்க... 'பீயும் 'நா'னும் உருண்டுட்டமே! {சிரிப்பு}

பபூன்1 : டேய், அசிங்கம் புடிச்சப் பயலே! போய்க் கழுவிட்டு வாடா.

பபூன்2 : ஏ! அண்ணே! அண்ணே! கூடப் பெறந்த அண்ணந்தானே. இந்த இருட்ல நான்... தண்ணீல எறங்க மாட்டேன். பயமாருக்கு. இந்தப் 'பீய' ஒன் நாக்ல கொஞ்சம் வழிச்சிப் போடேன். {சிரிப்பு} ...

பாடல் : கண்டு கொண்டேனே
இலங்கையின் ராஜ்யம்
காரியம் கைக் கொண்டேனே - ராமா
காரியம் கைக் கொண்டேனே! - ராகவா
காரியம் கைக் கொண்டேனே!
கதறக் கதற வைத்த ராவணன் லெங்கையை
கதறக் கதற வைத்த ராவணன் லெங்கையை
பார்க்காமலே விடுவேனோ
என்பேர் அனுமார் தானோ
கண்டு கொண்டேனே
இலங்கையின் ராஜ்யம்
காரியம் கைக் கொண்டேனே - ராமா
காரியம் கைக் கொண்டேனே...
பாவி ராவணனை
தாயாராம் சீதையை - பாவி ராவணனை

தாயாராம் சீதையை
பார்க்காத இடமில்லை; தேடாத இடமில்லை
இந்த இலங்கை நகர் எழுநூறு யோஜனை
எங்கெங்கு போய்த் தேடுவேனோ?

ஆகா. ஏழு சமுத்ரம். நடுதீவில் இரு நூற்றுக் காதவழி சுற்றளவில் மாட மாளிகை, கூட கோபுரம், தங்கத்தினால் அமைக்கப்பட்ட சிம்மாதனங்கள், கடைவீதித் தெருவுகள், பாதாளம் செல்லும் ஒரு கிணறுகளையெல்லாம் மிக அற்புதமாகவே அமைத்திருக்கிறான்... இராவணேஸ்வரன்! பார்க்கப் பார்க்க, அதிக மிக அற்புதமாகத்தான் இருக்கிறது லெங்கை மாநகரம். இந்த லெங்கையில், ராவணேஸ்வரன், தாயான சீதையை எந்த இடத்தில் வைத்ததாக வும் தெரியவில்லை. அரக்கர்களுக்குத் தெரி வராமல் யாருக்கும் தெரிவராமல் வண்டுபோல் நான் வேஷங்களையெடுத்து... இதோ நான் அரண்மனைக்குள்ளாகப் போய், எல்லா இடங்களையும், என்தாய் இருக்கும் இடங்களை யும் நான் கண்டுபிடித்து வருகிறேன். தேடிப் பார்க்கிறேன்... [இசை]*

பபூன்2 : டேய்! நானூறு ரூபா செலவு பண்ணி மஞ்ச வெரட்டு மாடு விடுவேன். எவன்டா அணஞ்சி புடிக்கிறவன்? டேய் எவன்டா மாட்டப் புடிக்க வர்றவன். ஏய்! வாங்கடா.

நபர்1 : டேய்! நான் புடிக்கிறேன்டா மாட்ட, மடத் தேவடியாமவனே! எந்த மாடு அடங்காத மாடாயிருந்தாலும் அப்படி அணஞ்சிர்றன்டா மடத் தேவடியாமவனே! தொறந்து விடுறா மாட்ட... டேய்... மாட்ட உருவி விடுறா.

★ மணி என்ன என்று ராஜுராவ் சிறுவனிடம் கேட்க, சிறுவன் என்னிடம் கேட்கிறான். மணி 12 1/4 என்று நான் கூறுகிறேன்.

பபூன்2 : கொஞ்சம் பொறப்பா. ஆளுசேரட்டும் {சிரிப்பு}. ஆள் சேந்தப் பெறகுதான உருவிவுடணும். நீ ஒருத்தன் புடிச்சிருவியா மாட்ட?

நபர்2 : நான்... நான் புடிக்றண்டா மாட்ட....

நபர்3 : ஏய்! நான் புடிக்றன்ய்யா மாட்ட.

நபர்4 : ஏய்! மாடு நான் புடிக்றேன்.

நபர்5 : ஏய்! நான் புடிக்றேன் மாட.

நபர்6 (பபூன் 3) : நான் மாட்டுக்குச் சாணி எடுத்துப் போட்றேன். (மொளு மொளு) மாட்டப் புடிச்சி அம்கிக் குடுங்க. {சிரிப்பு}

பபூன்2 : ஏலே! ஆளு சேர்ந்திருச்சி டோய். மாடு புடிக்றவன். மாட்டுச் சாணிய எடுக்றவ்ன். ஏலே! வம்பா சாகப் போறீங்கடா.

நபர்1 : டேய்! எடுறா மாட்ட. புடிபடாத மாட்ட யெல்லாம் நான் புடிச்சிருக்றேன். ஓம்மாடு என்னா எனக்குப் பிரமாதமா? அணஞ்சிர்றன்டா மாட்ட. எடுடா மாட்ட.

பபூன்2 : ஏலே! பயங்கர மாடு. கொடல் எடுக்கப் போவுது. பாத்துப் புடி. இல்ல கொடல சரிச்சிடும். பாத்துப் புடி...

டேய் வருதுடா மாடு... டேய் விடாதடா மாடெ... டேய் வருதுடா... மாடு... அப்பா... அப்பா... ஆ! ஆ!

நபர்1 : இந்தாடா அமுக்... இந்தாடா அமுக்... ஏ! எவன்டா அவன் சாணி எடுக்றவன் (ஏ! சாணி எடுக்றவன் ஓடியா) {சிரிப்பு}... எவங்குண்டீ லடா சாணி எடுக்கற {சிரிப்பு} மாட்டுக் குண்டீல எடுடா... மடப்பயலே... எடு சாணிய.ம்ம்.... எடு சாணிய.

நபர்6 : ஏய் விடுடா மாட்ட... விடுடா மாட்ட.. அசந்துபோயிருக்கு மாடு....

நபர்1 : ஓடிப்போ... ஏய் நானூர் ரூபா தர்றேம்னயே... மாட்ட அணஞ்சிட்டேன்... நானூர் ரூபாயக்குடு.

பழூன்2 : அடச்சீ மடப்பய மவனே! ஏலே! வண்டி மாட்டப் புடிச்சி அமிக்கீட்டு நானூறு ரூபா கேக்றான். {சிரிப்பு} டேய்! ஏரப்ளான் காள வருது... ஏரப்ளான் காள. அந்தக் காளய அமுக்கு... ஒனக்கு நானூர் ரூபா தாரேன். {சிரிப்பு}

நபர்6 : ஏய்! ரூபா கொண்டா. யார்ப்பா போய்ச் சாணிய எடுக்றது?

பழூன்2 : மாப்ள மொளு மொளு! சாணியப் பிதுக்கப் போதுகு... டேய் வருது... (மொளு மொளு) டேய் வருது. டேய் வருது... விடாதடா மாட்ட.... ஏ! அம்மா.. வுடாத... வுடாத... புடிங்கடா... புடிங்கடா. மாடு நின்னு வெளயாடுது. மாடு நின்னு வெளயாடுது. புடிங்கடா மாட்ட.... சூ... சூ....! ஏய்! ரூபா நானூறு மாட்டப் புடிங்கடா டேய்.

நபர்1 : சே! பாவிப்பய மாடு எத்தனப் பேரக் குத்திப்புடிச்சிப்பா... சூ... சூ.. {சிரிப்பு}

பழூன்2 : விடாத. இருக்கறவனயெல்லாங் கொடலப் புடுங்கு... {சிரிப்பு}

நபர்1 : சூ... சூ... சீ! தரித்தினியம் புடிச்சமாடு.

பழூன்2 : ஏண்டா மாட்ட வெரட்ன [அடிக்கிறான்]

நபர்1 : அட பாவிப் பயலே! கொலக்காரப் பயலே! எத்தனப் பேர்த்த... கொடல உருவிடுச்சி?

பழூன்2 : செத்தா ஒனக்கென்னடா. {சிரிப்பு} தலவிதி... அவுங்க சாகட்டும் ஒனக்கென்னடா?

நபர்1 : ஆமடா எத்தினிப் பேரக் குத்திப்புடிச்சி?

பழூன்2 : எத்தினிப் பேருன்னு கணக்குப் பண்ணிவையி. நீயும் போகலாம். {சிரிப்பு} இவந்தான்

சண்டியரா? மாடு புடிக்க வந்த சண்டியர். வாயப் பாரு [அடிக்கிறான்] {சிரிப்பு}. ஏலே! அஞ்சு பைசா கடங்காரனும் போனான்டா. அய்யய் யோ எம் மாப்ள. எப்பப் பார்த்தாலும் அஞ்சி பைசாக் கேப்பியே. எனக்கு நேரப் போக்கா யிருந்திச்சே. நீ வாயப் பெளந்திட்டியே {சிரிப்பு}

நபர்1 : டேய் சீக்ரமா அவனக் கொண்டுபோயி... ஆஸ்பத்திரில கொண்டுபோயி... நாமக் கொணத்தப்படுத்தீட்டு வருவோம். தூக்குடா.

பபூன்2 : ஏண்டா மக்காக்கோழிப்பயடுவா. இவன் உயி ரோடிருந்தது எனக்கு *ஒபத்ரவமாயிருக்கு. சாணித்தின்ன பயா.

நபர்1 : வேண்டாமடா பாவம்.


பபூன்2 : சே! சும்மாயிருடா.. ஏ மாப்ள மொளு மொளு!.... ஓனக்காகப் பத்து பைசாவ சில்லரை முறிச்சி அஞ்சி பைசா வச்சிருந்தனே! நீ செத்துப் போனியே! அந்த அஞ்சிபைசா யாருடா வாங்குவா? {இப்ப கேக்கப் போறாம்பாரு.}

பபூன்3 (நபர்6) : ஏலே எனக்கு அஞ்சி பைசா. {சிரிப்பு}

பபூன்2 : ஏலே. செத்தவன் அஞ்சி காசுங்கவும் எந்திரிச்சிக்கிட்டான் பாத்தியா?

பாவையாட்டி: சரி மதிப்புக்குரிய பெரியோர்களே! தாய்மார் களே! நாளை நல்லதங்காள் கதை. ஒரே நாள் ஆட்டம்தான். அனைபேர்களும் வந்து எங்க ளுக்கு நல்லாதரவு செய்ய வேண்டும். இதோட எங்களுடைய ஆட்டம் முடிந்ததால் அனை வரும் சந்தோஷமாச் சென்றுவர வேண்டும். மகாபிரபுக்களே! நாளை நல்ல தங்காள் கதை. அற்பு தமாயிருக்கும். எல்லோரும் போய்ட்டு வாங்கோ.

★ஒபத்ரவம் = தொந்தரவு



இராமாயணம்

மயில்ராவணன் கதை

பதிவு
செய்த : 17-11-1973
நாள்

இடம்: பெருங்குடி
மதுரை.

நிகழ்த்துநர் : கோபால்ராவ் குழுவினர்.

பாடல் : எல்லாம் மாயைதானா – ஏழை
எண்ணம் யாவும் வீணா
ஏழை எந்தன் வாழ்வில் – இனி
இன்பம் காண்பேனா...

கடவுள் வாழ்த்து : ஆதிமூலபல ஜோதி பாலகனே
அருள் செய்வாய்...
நம்பினேனே கணேசா நம்பினேனே.....

பபூன்1 : ஏய் போடு! ஒண்ணு ரெண்டு மூணு நாலு
அஞ்சாம் நம்பருடா – சோக்கா
அஞ்சாம் நம்பருடா – டேக்கா
அஞ்சாம் நம்பருடா – போடு
ஒண்ணு ரெண்டு மூணு நாலு அஞ்சாம்
நம்பருடா – சோக்கா
அஞ்சாம் நம்பருடா
அஞ்சாம் நம்பர் பாட்டுப் பாடி
சபையில் வந்தேன்டா – சோக்கா
சபையில் வந்தேன்டா!

சைலேன்ஸ்! இரைச்சல் (அமைதி! கூச்சல்), கூடியிருக்கும் பெரியோர்கள், எனதருமை தாய்மார்கள், சிறுவர்கள் அனைவருக்கும் ஓர் வணக்கம் செய்துகொண்டேன் பபூன் ஆக்ட்காரன் (அன்பார்ந்த வணக்கம்). பெரியோர்களே! தாய்மார்களே! இன்று இரவு நடைபெறும் சரித்திரங்கள், மயில்ராவணன் சரித்திரம் என்ற... இன்றைய தினம் மயில் ராவணனுடைய சரித்திரங்கள் நடைபெறச் செல்கிறது (ஆமா). எப்படியென்று கேளுங்கள்? அந்த ராவணன்–பத்துத்தலை ராவணன் – சீதையைச் சிறையெடுத்து வந்ததனால் அவன் கஷ்டப்படுவதும், மயில்ராவணன் அவனுடைய தம்பி, ராவணனுடைய தம்பி மயில்ராவணன் பாதாள லங்கையி லிருந்து வருவதும், அண்ணனிடத்தில் சத்தியங்கள் செய்து

கொடுப்பது எப்படி யென்றால் 'அந்த ராமரையும் லட்சுமணரையும் இரண்டு பேர்த்தையும் காலை விடிவதற்குள் ளாக அவனை நான் வெட்டிப் பலியிடுகிறேன்' அப்படி என்று சத்தியம் செய்து கொடுப்பது (ஆமா), அனுமன் வால் கோட்டை செய்து – அனுமாருடைய வால்கோட்டையிலிருப்பது அந்த ராமருடைய பெட்டிகள் (ஆமா) – ராமரையும் லட்சுமணரையும் மாயமாக சிறையெடுத்துக் கொண்டு போவது, அந்த மயில்ராவணன் அனுமான் தூதாகச் செல்வதும், அனுமாருடைய மகன் மச்சபல்லவனுக்கும் அனுமானுக்கும் சண்டை. அனுமான், இந்த பெட்டி வைத்த இடத்தைப் பார்த்து... ராமருடைய பெட்டி தூக்குவதும் மயில்ராவணனுக்கும் அனுமானுக்கும் பயங்கர சண்டைகள் நடப்பது, மயில்ராவணனுடைய தங்கை தூரசண்டிகை என்ற பெண்ணை அனுமாருடைய கைவசமாகச் சேர்த்துக் கொள்வதும், அந்த மயில்ராவணனைக் கொன்று நீலமேகனுக்குப் பட்டாபிஷேகங்கள். இராமரையும் இலட் சுமணரையும் மீட்டிவந்து இங்கே இராவண... இராமருடைய பட்டாபிஷேகங்கள் (ஆமா). இப்படியாகச் சரித்திரம். நாங்கள் நடத்த வேண்டிய சரித்திரத்தில் எதோ ஒரு சொல் குத்தம், பொருள் குத்தம், நாவில் குத்தம், எழுத்தில் குத்தங்கள், ஏதோ ஒரு குத்தம் இருந்தாலும் சத்தமில்லாமல் அமைதியாக இருந்து எங்களைக் கேட்டு எங்களுக்குத் தனம் கொடுப்பாருக்கு எல்லாத்துக்கும் ஒரு வணக்கமாக....

வொய்... வொய்... வொய் (வொய்!) வொய்... வொய்... (வொய்!) டேய்! நம்ம மாப்ள எங்கவோய்? (ஏன்? காப்பி குடிக்கப் போயிருக்காரு.) என்னது? (காப்பி!) காப்பி குடிக்கப் போயிருக்காரா? (ஆமா.... ஆமா...) எங்க... போடுங்க பாப்போம், உங்க மேளதாளமெல்லாம்! (போடுங்க பாப்போம்!)

பபூன்1 பாட்டு : ஏ அம்பது கோது எம்பது முட்டை வேகமாத் திம்பேன்

அம்பது கோழி எம்பது முட்டை வேகாமத் திம்பேன்!

யாரு கண்ணு பட்டுதோ எவரு கண்ணுபட்டுதோ
பத்தும் பத்தாமப் போச்சே!

பபூன்2 : வாங்கவோய்! வாங்க வோய்! வாங்க வோய்!

பபூன்1 : வாங்க... கை குடுங்க.... கை குடுங்க... கை குடுங்க... கை குடுங்க! (கையக் குடுங்க)

பபூன்2 : வாங்க உக்காருங்க... சாப்பிடுங்க (சாப்பிடுங்க) [அடிக்கிறான்]

பபூன்1 : ஏய்! என்னமோ படுத்துக்கிட்டாரு. (ஏய் காப்பி பத்தலப்பா) ஜீனி காணல (ஆமா). யோவ் எந்திரிய்யா.

பபூன்2 : அய்யா! நீங்க அடிச்ச அடி நிமிந்து போச்சு (சரி). நிமிந்து போச்சி.. நிமிந்து போச்சி (நிமிந்து போச்சி). கொஞ்சம்போலத் தண்ணி குடுங் கய்யா. (தண்ணி கொடு)

பபூன்1 : தண்ணிக்கு ரொம்ப தூரம் போகணும்... தூ

பபூன்2 : அடச்சே! நல்ல மனுஷனாயிருக்கியே.... மனுஷந் தராதரம் தெரியாம. காப்பி... காப்பி குடுத்தவுடன... கிரக்கமா வந்தவுடன... தண்ணி கேட்டவுடன... காரி மூஞ்சில துப்பறயே! (அப்படியில்ல இருக்கணும்).

பபூன்1 : அடி படுவா மகனே.

பபூன்2 : ஏய்! என்னமாரி இடிக்கிறான் பாத்தியா? (ஆமாம்பா). குடுமியைத் தூக்கிட்டு, அறை வச்சண்டா (வச்சண்டா) ஒரு அறைக்கு மேலே ஒன் பல்லெல்லாம் விழுந்திடும்... ஆமா. (ஆமாப்பா).

பபூன்1 : ஒய்... ஒய்.... (ஒய்)... ஒய் என்னன்னு பாத்துக்கிட்ட ஒய்? (வேண்டாமப்பா அடி) நீ என்னன்னு பாத்துக்கிட்ட ஒய்? ஏய்! (பாத்து... அடிக்காமச் சொல்லுங்க!) நீ என்ன பாத்துக் கிட்ட? ஏய்! இல்ல... கேட்டுக்கிட்டேன். (சரி) [அடிக்கிறான்]

பபூன்2 : ஏய் மக்கா கோழி மேல கோழி வைக்கோய். அடி சோக்கு மேல சோக்கு போட்டு நைக்கு மேல நைக்கு போட்டு....

பபூன்1 : இவந்தான் நம்ம கூடப்பொறந்த தம்பி. (தம்பி) பெரியோர்களே! இவந்தான் சிரிப்பு நடிகன் (ஆஹாங்).

பபூன்2 : அய்... மக்கா கோழிமேலே கோழி வைக்கப் படுவா! அய்யாதான் ஊருக்குப் பெரிய மனுஷன் (இருக்கட்டும்). சண்டியரு மகன் சண்டியரு (இருக்கட்டும்). அய்யா பேரச் சொன்னாலும் சுண்ணாம்புச் சட்டிய நாய் நக்காது (நக்காது).

பபூன்1 : எப்ப நக்காது?[அடிக்கிறான்]

பபூன்2 : இப்பத்தான் நக்காது. [அடிக்கிறான்]

பபூன்1 : டபடபடோய்... அடிக்காதடா (ஆமாம்பா)

பபூன்2 : அய்யா ரெட்டக்குழல் துப்பாக்கிய எடுத்தன்னா சுட்டுப்புடுவேன். (வேண்டாம்ப்பா.... அதெல்லாம் இப்ப வேண்டாம்).

பபூன்1 : அது எங்கடா இருக்கு ரெட்டைக் குழல் துப்பாக்கி, எடுடா டுப்பாக்கி. கொண்டாடா ரிவால்வரு.

பபூன்2 : ர்ர்ர்ர்... (வெறும் சோடா மூடி... சே!) [அடிக்கிறான்]

பபூன்1 : ஏய்! வெறும மொச்சப் பயராத் தின்னுப்புட்டு பூத்பூத்துன்னு விடுறான்டா (ஆமாப்பா).

பபூன்2 : இது ரெ.கு. ரெட்டக்குழல் டுப்பாக்கிடா வெண்ணெ (ஏ! அண்ணே!) [அடிக்கிறான்] அய்யோ சாமி!

பபூன்3 : ஏ! மாப்ள.... ஏ! மாப்ள... முந்தா நேத்து எம்பொண்டாட்டி பூ வாங்கக் கொடுத்தப் பத்து பைசா (கையில கொடு), உங் கையில

கொடுத்திட்டு இப்ப மூணு நாளா ஓம் பின்னாலயே அலயறேன். எம் பத்து பைசா குடு மாப்ள (ஆமாப்பா)... எம் பத்து பைசா குடு மாப்ள (புள்ளக் குட்டிக்காரன்).

பபூன்2 : இன்னிக்கி வசூல் ஒண்ணும் சரியில்ல. (ஆமா) என்ன... நம்மளப் பார்ப்பதற்காக... என்ன... அயல்நாட்டிலிருந்து * என்ன... அவுங்களிடத்தில் வாங்கி உனக்குத் தாரேன் (சரி! குடுக்கலாம்).

பபூன்3 : ஏய்! நீ வாங்கினத அவுங்க எப்படிக் கொடுப்பாங்க? (ஆமா... அது எப்படிக் குடுப்பாங்க?). ஏய்! நீ வாங்கினத அவுங்க எப்படிக் குடுப்பாங்க? (குடுக்க மாட்டாங்க).

பபூன்2 : அட... வாங்கித் தர்றேம்ப்பா (ஆமாப்பா).

பபூன்3 : இப்ப வேணும்ப்பா...

பபூன்2 : அட வாங்கித் தர்றேம்பா.

பபூன்3 : வேணும்ப்பா... இப்ப வேணும்ப்பா (குடுத்திடலாம்)...

பபூன்2 : அட... பிறகு தர்றேம்ப்பா.

பபூன்3 : வேணும்ப்பா (அடிச்சிரு... முகரை)...

பபூன்2 : இந்தாப்பா... [அடிக்கிறான்] (அடிச்சான் அடி... கெடக்கு) வாங்கிட்டுப் போயிட்டயாப்பா (ஆங்... வாங்கிட்டுப் போய்ட்டான).

பபூன்3 : ஏ மாப்ள! இன்னிக்கி வந்த வசூல்ல பேர்வாதி பங்கு வேணும் (குடுத்திடலாம்).

★ 'தமிழக நாட்டுப்புறக் கூத்துகள்' எனும் பொதுத் தலைப்பில் முனைவர் பட்டத்திற்கு முனைவர் முத்துச் சண்முகன் அவர்களிடம் பதிவு பண்ணிருந்தமையால், மதுரையைச் சுற்றி நடந்த அனைத்துக் கூத்துவடிவங்களையும் பதிவு செய்து கொண்டிருந்தேன். முதன்முதலாகத் தோற்பாவை நிழற்கூத்தைப் பதிவு பண்ணப் போகிறேன் என்று கூறவும், பேராசிரியர் முத்துச்சண்முகன் அவர்களும் அவரின் கீழ் தமிழ் பயின்று வந்த அமெரிக்க மாணவர்களும் இக்கூத்து பார்க்க வந்திருந்தனர்.

பபூன்2 : எத்தனப் பங்கு வேணும்? சுடச்சுட வேணுமா... பழசா வேணுமா? (ரெண்டும் குடுக்கலாம்)

பபூன்3 : சுடசுட எப்படி? பழசு எப்படி? [அடிக்கிறான்] இதென்ன?

பபூன்2 : 'ப'னால நக்கின பழைய சாப்பாடு

பபூன்3 : சுடு சாப்பாடு? [அடிக்கிறான்] ஏ அப்பா! (அப்பா) இது கொஞ்சம் ஒறப்பா இருக்கு.

பபூன்1 : ஏ! என்னய்யா அடிச்சிக்கிட்டிருக்க? (ஏய்! சண்டை போடாதீங்க) பத்து பைசாவும் தரமாட்டேங்கிறான்... ஒன்னோடொன்னு கடிச்சிட்டுப் போறான் (ஏ! அடிச்சிட்டுப் போறான்). நடக்கட்டும் (ஆமா). கதைகள் நடக்கப் போவுது. எல்லாரும் சத்தமில்லாமலிருங்க.

பாடல் : **காக்கைச் சிறகினிலே நந்தலாலா – உந்தன்**
கரிய நிறம் தோணுதடா நந்தலாலா
பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா – உந்தன்
கரிய நிறம் தோணுதடா நந்தலாலா....

இராமர் : வருவாய் தம்பி லட்மணா!

இலக்கு. : அண்ணா! அடியேன் நான் வணக்கம் செய்தேன்.

இராமர் : மங்களம் உண்டாகட்டும். எங்களுடைய தசரதன் வயிற்றில் பிறந்தவர்கள் இராமர், லட்சுமணன், பரதன், சத்ருக்கனன் நான்கு பேர். நாங்கள் பிறந்து எங்களுடைய சிறிய தாயார் கைகேசி அம்மாள் செய்த கொடுமையினால் இந்தக் காட்டு வழியாக பதினாலு நாள் பதினாலு நாழிகை நாங்கள் மூவரும் வந்தவர்கள்... காட்டில் வந்து ஜடாவி அரசனுடைய... அவருடைய வனத்தில் வந்து நாங்கள் வீடுகள் கட்டியிருக்கும்போது சண்டாள சூர்ப்பநகை

வந்து எங்களிடத்தில் மோகிக்கலாமென்று வந்தாள். அவளைப் பிடித்து நீ, காது, குழல், மூக்கை அறுத்து விட்டாய். அந்த ராட்சசி சென்று ஏராளமான ராட்சதர்களை அழைத்து வந்தாள். அந்த ராட்சதர்களை என்னுடைய கோதண்ட பாணியினாலந்த படைகளையெல்லாம் கொன்று விட்டேன். அந்த ராட்சசி சூர்ப்பநகை சென்று அவளுடைய அண்ணன் பத்துக்கை இருபது தலைகளாக இருக்கவேண்டிய இராவணேஸ் வரனை அழைத்துவந்து, இராவணன் சன்னியாசி போல் வேஷங்களெடுத்து... மாரீசன் மான் போல் வேடங்கள் எடுத்துவந்து... சீதையை ராவணன் சிறையெடுத்துக்கொண்டு போய் விட்டான் (உண்மைதான்). சீதையை சிறை யெடுத்துக் கொண்டு போனவுடன் நாங்கள் சீதையைக் காணாமல் அழுது கவலைப்பட்டு... ஜடாவியிடத்துத் தவனம் செய்து, இந்தக் கிஷ்கிந்த மாநகரம் வந்து, வாலி, சுக்ரீவன் இரண்டுபேர் அண்ணன் தம்பி... வாலியைக் கொன்று சுக்ரீவனுக்கு நாங்கள் ராஜரிக பட்டா பிஷேகம் அளித்தோம். இந்த அனுமனிடத்தில் நாங்கள் கணையாழி மோதிரத்தைக் குடுத்து, சூடாமணி மோதிரத்தை வாங்கி வரவேணும், சீதையிடத்தில், இலங்கையில் இருக்க வேண்டிய சீதையிடத்தில்... அப்படின்னு தெரிவித்தவுடன் அனுமன் ஏழுகடல் பாய்ந்து சென்று சீதையைக் கண்டு தெளிந்து, சீதையிடத்தில் இருக்க வேண்டிய சூடாமணியை வாங்கிக் கொண்டு வந்து விட்டார். வாங்கி வந்தவுடன், இந்த ஏழு சமுத்திரமும் நாங்கள் அணைகளைக் கட்டி, இந்த இலங்கை மாநகரத்திற்கு வந்து மொதநாள் சண்டை! ராவணன்–பத்துத் தலை ராவணன்– பதினெட்டு ஆயுதங்களைக் கொண்டு மொத நாள் சண்டைக்கு வந்தான். அந்த ராவணனை, என்னுடைய வீரப் பிரசண்ட கோதண்டத்தி னால், அந்த ராவணனை நான் தோர்வை செய்து

விட்டேன். அந்த ராவணன் தோர்வையாகச் சென்றுவிட்டான். சென்றவுடன், அவனுடைய மகன் இந்திரஜியத்தன் வந்தான். இந்திரஜியத்தனை நான் கொன்றுவிட்டேன். அகம்பன், நிகும்பன், அச்சுதகுமாரன், ஜம்புகவாலி, கும்பகர்ணன் இவ்வளவு பேரும் வந்தார்கள், சண்டைக்காக! எல்லாத்தையும் நாங்கள் கொன்றுவிட்டோம். தம்பி! இன்னம் இருப்பது யார்?

இலக்கு. : யாரென்று தெரியவில்லை, அண்ணா. எங்களிடத்தில் சேர்ந்திருக்கிறானே அந்த ராவணனுடைய தம்பி விபுசனன் (ஆமா), அந்த விபுசனனை நாங்கள் அழைத்ததாக அழைத்து அவனிடத்தில் கேட்டால், அந்த இராவணனிடத்தில் இன்னம் ராட்சதர்கள் இருக்கிறார்களா இல்லையா என்று நாங்கள் கேட்டுவிடலாம் அண்ணா.

இராமர் : அப்படியா! சரி! நான் அழைத்ததாக அந்த விபுசனனை அழைத்து வா.

இலக்கு. : இதோ அழைத்து வருகிறேன்.. இதோ வருகிறான்.

பாடல் : ராகவரே சரணம் ஸ்ரீராமா உந்தன் சரணம்
நம்பி வந்தேன் விபீஷணனே - உன்
சென்ற பாதம் சரணம்
நாராயணா நமோ நாராயணா
தாடகையை வதம் செய்த நாராயணா!
....

விபீடணன் : லோகாயராமா! லோக ரட்சகா! பரந்தாமா! பத்துத் தலையும் இருபது கைகளாக இருக்கவேண்டிய ராவணேஸ்வரனுடைய தம்பி. என் பேரே விபுசனப் பெருமாள். வணக்கம் செய்தேன் சுவாமி!

இராமர் : மங்களம் உண்டாகட்டும் விபுசனா! உன்னுடைய அண்ணனுடைய இடத்தில் ராட்சதர்கள், அரக்கர்கள் இன்னும் யாராவது இருக்கிறார்களா... வீரமுடையவர்கள்....?

விபீடணன் : சுவாமி! எல்லாரும் மாண்டு மடிந்துவிட்டார்கள். இன்னம் இருப்பது ராவணன் மட்டும்தான் இருக்கிறான். மகோதரன், இந்திரஜித்தன், அகம்பன், நிகும்பன், அச்சுதகுமாரன், பாசி படர்ந்த மூலபல சேனைகள், இவ்வளவு பேரும் மாண்டுவிட்டார்கள். சுவாமி. இனிமேல் யாருமே கிடையாது. இராவணன் ஒருவன்தான் எங்கயோ இலங்கைக்குள்ளாகப் பதுங்கிப் போய்ப் படுத்திருக்கிறான். எங்கே இருக்கிறான் என்றே நாங்கள் கண்டுபிடிக்க முடியவில்லை.

இராமர் : அப்படியா? ஏ! விபுசனா! இந்த 12 நாளாக, நான் இந்தக் கஷ்டகாலத்தில் போர்கள் செய்ததனால், யுத்தம் செய்ததனால், எனக்கு உறக்கமானது நித்திரையாக வருகிறது. நான் நித்திரை செய்ய வேண்டும்.

விபீடணன் : அப்படியா சுவாமி! யோசனை செய்து நாங்கள் நித்திரை செய்யலாம்.

இராமர் : அப்படியா.... சரி. இராவணன் எங்கேயிருக் கிறானென்று நீங்கள் தேடி அலைந்து வாருங்கள் பார்ப்போம். நான் போய் வருகிறேன்.

பபூன்1 : சாமி! ராவணன் இருக்கற எடம் தெரியல (ஆமா).

இராமர் : கண்டு தெரிந்துவரவேண்டும் குமரதாரகா.

பபூன்1 : அப்படியே....

இராமர் : அனுமாரே!

அனுமன் : சுவாமி!

இராமர் : அந்த இராவண பாதகன் எந்த இடத்திலிருக் கிறான் என்பதை நீங்கள்தான் கண்டு தெளிந்து வரவேண்டும்.

அனுமன் : கவலைப்படாதீர்கள். அந்த இராவணான் எங்கயிருந்தாலும் அவனுடைய குடுமியைப் பிடித்து இழுத்துக்கொண்டு வருகிறேன்.

இராமர் : தம்பி! இன்னும் சிலது நேரம் பார்ப்போம். இராவணனை அழைத்து வந்தால் பார்ப்போம். இல்லையென்றால், நாங்கள் புஷபவாணிப் பெட்டியில் நாங்கள் இரண்டுபேரும் நித்திரை செய்யலாம்.

இலக்கு : அண்ணா! அப்படியே செய்யலாம்.

இராமர் : வாருங்கள். போவோம்.

பாடல் : **திரலோகமும் புகழும் சுந்தர**
வீரதீர சூரன்நான் வந்தேன்

பாவையாட்டி : இவன்தான் இராவணன் (ஆமா).

இராவணன்: சண்டாள சூர்ப்பநகை வார்த்தை கேட்டு, நான் சீதையை, நான் சிறையெடுக்கப் போக (ஆமா) சண்டாள ராமன் குரங்குப் படைகளை அழைத்துக் கொண்டுவந்து என்னுடைய தம்பிமார்கள் கும்பகர்ணனையும் கொன்று விட்டான். என்னுடைய படைகளையெல்லாம் தோர்வையடைந்துவிட்டு நான் தனிமரமாக நிக்கிறேன். ஐயோ பரமேஸ்வரா! எனக்கு ஆறுதல் கூறுவதற்கு ஒருவருமே இல்லையே! அய்யய்யோ! இந்த நேரத்தில் யார் வருவார்கள்? ஆ! சீதா! ஜானகி! பெண்ணே! கண்ணே! மானே! தேனே! ரஞ்சிதமே! எவர்க்கும் கிடைக்காத சீனிக் கற்கண்டே! (கிறுக்குப் பிடிச்சுப் போச்சி

இவனுக்கு) ஆகா! டேய் ராமா! வந்து பார்ர சண்டைக்கி! டேய் குரங்கே! எவன்டா வர்றது.. அய்யோ... குரங்கு அடிக்குமே... அய்யோ... ராமன் அடிப்பானே... நான் கிறுக்கனாக உளறிக் கொண்டிருக்கிறேன். அய்யய்யோ மந்திரி மகோதரா... அவனும் செத்துப் போய்ட் டானே!... அய்யய்யோ! யாருமே இல்லாத அனாதையாகி விட்டேனே!... பரமேஸ்வரா! வெளியே சத்தம் தெரிஞ்சால் குரங்குகள் வந்து விடும், இந்த இருட்டுக் கோட்டைக்கு! யாருக்கும் தெரியாத இந்த இருட்டுக் கோட்டையில் நான் புலம்பிக் கொண்டிருக்கிறேன். இந்த நேரத்தில் ஆறுதல் கூறுதற்கு யாருமே இல்லையே!

பிரகஸ்பதி (பிரகேசன்) : நானிருக்கிறேன் மகாராஜா. அஞ்சாமலிருங்கள், மகாராஜா. ராஜாதிராஜனே! ராஜகம்பீரனே! புத்திவீர கண்டனே! நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்கள் உயிரைக் காப்பாத்த நானிருக்கிறேன்.

இராவணன்: யார் நீ?

பிரகேசன் : நான்தான் பிரகேச மந்திரி மகாராஜா!

உங்களுடைய மந்திரிமார்கள்அறுபதுபேர் மந்திரிமார்கள். எங்கூர்ன வல்ல காணர்கள். நான் அறுபது பேர் மந்திரிமார்களில் கோர்னமந்திரிக்கு அடுத்தார்ப்பில் நான்தான் இரண்டாவது மந்திரி. பிரகேச மந்திரி மகாராஜா! நீங்கள் கவலைப்பட வேண்டாம். அந்த ராமனை ஒழிப்பதற்கு நானொரு திட்டம் செய்துவிட்டேன். (என்னப்பா திட்டம்?)

இராவணன்: எப்படி? அந்த ராமனை நாங்கள் எப்படிக் கொலை செய்யலாம்? அவனை எப்படிக் கொன்றுவிடலாம்? மகா கெட்டிக்காரனாக இருக்கிறானே!

பிரகேசன் : கவலைப்படாதீங்க, (அதுக்குத் தந்திரம் இருக்கு) உங்களுடைய சகோதரர்... உங்களுடைய சகோதரர் இருக்கிறார் மயில்ராவணன். மாயையில் சிறந்தவர். யானை, சிங்கம், கரடி, புலிகள் சிலநேரம் என்னைப்போல் வேஷம் எடுப்பாரு. உங்களைப்போல் வேஷத்தை எடுப்பாரு. மகா மாயாஜாலம் படைத்தவர். அவரிடத்தில் போய்த் தெரிவித்தால் அந்த இராமனையும் இலட்சுமணனையும் அந்தக் குரங்குப் படைகளையெல்லாம் ஒரேயடியாகத் தீர்த்திடுவார்.

இராவணன்: டேய்! சபாஷ்! சபாஷ்! சபாஷ்! மந்திரியாரே!

பிரகேசனன்: மகாராஜா!

இராவணன்: நீ சென்று அந்த ராமனைக் கொல்வதற்கு ஒரு திட்டம் செய்து கொடு. என்னுடைய தம்பி இருக்கிறானல்லவா... பாதாள உலகத்தில் இருக் கிறான். அவனை அழைத்து வரவேண்டுமே யார் இருக்கிறார்கள்?

பிரகேசன் : நான் போய் வருகிறேன் மகாராஜா.

இராவணன்: அட உனக்கு எப்படிப் பாதை தெரியும்?

பிரகேசன் : எனக்கு நன்றாகப் பாதை தெரியும். நான் போய் வருகிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

இராவணன்: விரைவாகச் சென்றுவர வேண்டும். இந்தக் காரியங்கள் நடந்துவிட்டால்... இந்த இலங்கை யிலே உனக்குப் பாதிவெற்றியாக, உனக்குப் பட்டங்கள் சூட்டிவிடுகிறேன்.

பிரகேசன் : அய்யோ, இந்தப் பட்டம் நமக்கு வேண்டாம். உள்ள பட்டமே வச்சிப் பொழச்சா போதும். இந்தப் பட்டம் பெத்ததும் போதும். அடி வாங்குனதும் போதும், குரங்கு கையில!... மகாராஜா, நான் போய்ட்டு வர்றேன்.

இராவணன்: போ. செல். விரைவாக அழைத்துவா. சீதையை நான் பார்க்க வேண்டும். (இன்னுமா ஆசை யிருக்கு கழுதைக்கு) கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்க வேண்டும்.

பிரகேசன் : கவலைப்படாதீங்க. குலாவுவீங்க. போங்க. உக்காருங்க... அய்யோ... நான் வீரமா சொல் லிட்டேன்... எப்படிரா போறது?... அய்யோ... ஏதோ ஒரு குரங்கு வருதுடா. (மாறுவேஷம் போடு!) குரங்கு வருது. எனக்குத் தெரிஞ்ச வேஷத்துல நான் போறேன். (போ, போ)

சாம்புகர் : ஏலே! இங்க ஒரு பய நின்னுருந்தான். எங்கிட்டுப் போனானோ தெரியல. ஏல... கைல புடிச்சன்னா சங்கரங்கோயிலப் புடிச்சிக் கடிச்சிப் போடுவேன் (ஆமா... சங்கரங்கோயிலைக் கடி). என்னை யாருன்னு பார்த்த? சாம்புகரு (சாம்பக்கரை). நான் போய்ட்டு வர்றேன். ஏல... ஓடாதீங்கடா... டேய்... டோய்!

பிரகேசன் : ஏ அப்பா! இந்தக் குரங்குதான் சாம்பக்கரை (ஏய்! சாம்புகர்). சாம்புகர். மகா கெட்டிக்காரக்குரங் குடா.... அனுமார் குரங்கு வருது. ஏய்... எங்க இலங்கையெல்லாம் தீய வச்சிக் கொளுத் துனக்குரங்கு. அய்யோ வருது.... பயமாயிருக்கு துடா அப்பா (மாறுவேடம் போடப்பா).

அனுமன் : இந்த இடத்தில் ஒருவன் பேசிக்கொண்டு நின்றிருந்தான். அவனைக் காணகவில்லை. டேய்! நீ எங்கே சென்றாலும் என்னுடைய கைப்பட நீ மரணகதியாவாய்! ஜாக்கிரதை! நான் போய்வருகிறேன்.

பிரகேசன் : ஏய்.... எந்தக் குரங்கு கையில அம்ட்டாலும் இந்த அனுமார் குரங்குக் கையில அம்புட்டோம் நம்மள சட்னி ஆக்கிடும். (சந்தனம்) சரி, இதோர்

பார்தை. ஏழு கடல் நடுதீவில் தாமரை புஷ்பமானது இருக்கின்றது. அந்தத் தாமரை புஷ்பம் வழியாக நூறு யோசனை தூரம் நடந்துசென்றால் தங்கக் கோட்டை, பித்தளைக் கோட்டை, இப்படிப்பட்ட கோட்டைகளை யெல்லாம் தாண்டிப் போகவேண்டும். நான் போய் வருகிறேன்.... இதன் நடுதீவில் தாமரைப் புஷ்பமானது இருக்கின்றது. வெயில் அடிக்காத, சூரிய பகவானுடைய வெளிச்சம் ஒட்டாத... இந்த புஷ்பமானது மலரும். இப்ப மலர்ந்திருக் கின்றது. இதோ நான் தண்டு வழியாக நான் போய் வருகிறேன்.... [இசை]

பாடல் : ....

பிரகேசன் : ஏய்! இது யார் தெரியுமா? மச்சபல்லவன். இந்த மச்சபல்லவனுக்கு இருக்க வேண்டிய ஒரு பெலங்கள் யாருக்குமே கிடையாது. இந்த உலகமே ஒன்றாகச் சேர்ந்து வந்தாலும் இந்த மச்சபல்லவனைக் கொல்வதற்கு ஒருவரினாலயும் முடியாது. இவரு கண்ணுல தென்பட்டோம் நம்மளக் கோவிந்தா பண்ணிடுவாரு. இதோ நான் மாறுவேடத்தில் போகிறேன்.... [இசை]

பாடல் : ....

பபூன்1 : இந்தப் பாதாள உலகத்துல ராட்சதர்களைப் பார்த்தாயா? எவ்வளவு தண்டி* இருக்கண்டா. ஏய், அங்க ஒரு அஞ்சாறு பேரு வர்றான்டா.... [இசை]

பாடல் : ....

அரக்கன்1 : டேய்! டேய்! யார்ரா நீ? யார்ரா நீ? வேற்று மனிதனாக இருக்கிறாய்? இந்தப் பாதாள இலங்கையை உனக்கு எப்படிடா தெரியும்? சொல்றா சீக்கிரம்.

★ தண்டி = பருமன்

பிரகேசன் : ஏய்; அதட்டாதே! அதட்டாதே! உன்னையப் போல அதட்டி அதட்டிதான் நான் இப்படி உக்கார்ந்திருக்கேன். கவலைப்படாதே. நான் மயில்ராவண மகாராஜாவைப் பார்க்கணும்.

அரக்கன்1 : ஏய், யாரைக் கேட்டு வந்தாய்? மரியாதையாக ஓடிப் போ. இல்லை, உன்னைய வெட்டி.... ஏ, மாப்ள!

அரக்கன்2 : என்னங்க மருமகனே?

அரக்கன்1 : இனிமே நாம திகைச்சிக்கிட்டிருந்தோம்... இன்னும் ஒரு அஞ்சாறு பேரு வந்திடுவான். பிறகு இவர் கரி நமக்குக் கிடைக்காது.

அரக்கன்2 : வெட்டு, அவனை வெட்டு, சாப்பிடுவோம்.

அரக்கன்1 : வெட்டு, வெட்டு (வெட்டு.... வெட்டு.... ஓடியே போய்ட்டான்.)

அரக்கன்2 : எங்கடா அவன்?

அரக்கன்1 : எங்கிட்டுப் போனான்னு தெரியலையே? (ஏய், தேடிப் பாருங்க.) சரி. ஏய், நீ அந்தப் பக்கமாப் போ. நான் இந்தப் பக்கமாப் போறேன்.

பாடல் : ....

பிரகேசன் : கொஞ்சம் ஏமாந்திருந்தேன்னா என் தலை துண்டுக்காப் போயிருக்கும். சரி. இதுதான் உத்தேக வனம். பாதாள லங்கையிலிருந்து யாராவது தண்ணீர் எடுக்க வரவேண்டு மென்றால் இந்த உத்தேக வனத்திற்குத்தான் வரவேண்டும். இந்த இடத்தில் நாலு திசையும் மாறிவிடும். இதோ நான் ராவண மகாராஜா... மயில் ராவண மகாராஜா இருக்கவேண்டிய அரண்மனைக்குப் போகிறேன்.

பாடல் : ....

அரக்கன்3 : ஏய்! ஏய்! எவனோ வேத்து மனுஷன் வாடை அடிக்குது. ம்... ம்.. (ஆமா) ஏய்! யார்ரா நீ? எந்த ஊர்ரா? காவல்காரன்டா.

பிரகேசன் : எப்பா! அதட்டாத நீ. அதட்ற அதட்டப் பாத்தா கட்டிப் பீயெல்லாம் கஞ்சிப் பீயாப் போவுது. மெதுவாப் பீசு (பேசு). இந்த... நான் நம்ம மயில்ராவண மகாராஜாவைப் பார்க்கணும்.

அரக்கன்3 : யாரைக் கேட்டு இந்த இலங்கைக்கு வந்த?

பிரகேசன் : மயில்ராவண மகாராஜாவைப் பார்க்கணும்னா, யாரைக் கேட்டு வந்தியான்னு....

அரக்கன்3 : முடியாது... ஏய்! ஏய்! அந்த அருவா எடுத்திட்டு வாடா. வெட்ரா இவனை!

பிரகேசன் : அடப் பாவிகளா. வர்ரவன்லாம் வெட்டத்தான் வர்ரான். இது என்னா உத்தேகம்?

அரக்கன்3 : ஏய், இதுதான் துலா இந்திரம். இந்தத் திராசில உக்காந்து நிறுவை சரியாயிருந்தா உட்டுருவோம். இல்லேன்னா கொஞ்சம் கொறஞ்சாலும் வெட்டிச் சாப்பிட்டுருவோம்.

பிரகேசன் : ஓ! இதைத் திராசுல நிறுக்கணுமோ?

அரக்கன்3 : ஆமா. திராசுல உக்காரு.

பிரகேசன் : எதுக்கு?

அரக்கன்3 : உன்னைய நிறுக்க.

பிரகேசன் : அடப்பாவமே! நிறுத்துதான் நீங்க வெட்டுவீங்களோ?

அரக்கன்3 : ஆமா (குறைஞ்சா வெட்டுவாக).

பிரகேசன் : அடப்பாவிப் பசங்களா! இப்ப என்ன செய்யறது?

அரக்கன்3 : இப்ப ஒன்னைய வெட்டணும். இல்லேன்னா திராசுல உக்காரு.

பிரகேசன் : முடியாது. உட்கார முடியாது.

அரக்கன்3 : ஏய், பிடிடா! ஏய், எங்கன போய்ட்டான்?

அரக்கன்4 : அவன் ஓடியே போய்ட்டான்.

அரக்கன்3 : நீ இந்தப் பக்கம் போ... நான் இந்தப் பக்கம் போறேன்.

பிரகேசன் : இதோ இருக்கின்றது, நமது மகாராஜாவுடைய அரண்மனை. மயில்ராவணன் மகாராஜாவுடைய அரண்மனைக்கு வந்தாச்சி... [இசை]

பாடல் : ....

கடகன் : டேய்! டேய் அக்கினிக்குண்டா!

அக்கினிக் கண்ணன் : என்னப்பா கடகா?

கடகன் : நம்ம மகாராஜா, மயில்ராவணன் மகாராஜா வருகிறார். மாகையில் சிறந்த மயில்ராவண்ன், உஷார்!

அக்கினிக் கண்ணன் : உஷார்.

கடகன் : உஷார்.

அக்கினிக் கண்ணன் : உஷார்...

பாடல் : **திரிலோகமும் புகழும் சுந்தர**
தீரதீரன் சூரன் நான் வந்தேன்
தென்னாட்டுக் கதிகாரன்
வடநாட்டுக்கதி தீரன்
வீரதீர சூரன் நான் வந்தேன்

மயில் ராவணன் : யார்ரா இங்கே சகோதரமான மகோதர மந்திரி? மந்திரியாரே... கடகன் மந்திரி.

கடகன் : ராஜாதிராஜனே! ராஜகம்பீரனே! இந்தப் பாதாள உலகம் அரசு புரிய வேண்டிய மாகையில் சிறந்த மயில்ராவண மகாராஜாவே! நான் வணக்கம் செய்தேன், கடகன் மந்திரி!

மயில் ராவணன் : பேஷ்! சபாஷ்.... சபாஷ்.... சபாஷ்.... டேய் கடகா!

கடகன் : மகாராஜா!

மயில் ராவணன் : டேய் இந்த அரண்மனையில் என்னுடைய மைத்துனன் காலத்தத்துவனை நான் வெட்டி அதம் செய்துவிட்டேன்.

கடகன் : உண்மைதான் மகாராஜா.... உங்களுக்கு எதிரியான... உங்களுடைய தங்கையுடைய வயிற்றில் நீலமேகன் ஒருவன் பிறந்தான். அதற்காக அவனுக்குப் பதிலாக அவனுடைய அப்பனுடைய உயிரை வாங்கிட்டோம். அவுங்க இரண்டு பேர்த்தை... தாயும் மகனையும் ஜிறைச்சாலையில் வைத்துக்கட்டி வைத்திருக்கிறோம்.

மயில் ராவணன் : அன்னம் தண்ணி ஆகாரம் குடுக்கக்கூடாது.

கடகன் : குடுக்க மாட்டோம்.

மயில் ராவணன் : சரி,

கடகன் : மகாராஜா! நமது ஆலயம்... காளியம்மன் கோயிலில் ஆறுகால பூஜைகள் தவறில்லாமல் நடந்துகொண்டு வருகின்றன மகாராஜா.

மயில் ராவணன் : பேஷ்! சபாஷ், டேய்! (சத்தமில்லாம இருக்க மாட்டாங்க... அய்யா!) டேய் மந்திரியாரே! நேற்றைய தினம் பஞ்சணை மெத்தையில் நான் படுத்திருக்கும்போது ஒரு கனவு வரக் கண்டேன்.

கடகன் : என்ன கனவு மகாராஜா?

மயில் ராவணன் : எப்படிக் கனவென்றால் என்னுடைய அண்ணன் இருக்கின்றானே... பத்துத் தலையும் இருபது கைகளாகவும் இருக்கவேண்டிய இராவணேஸ்வரன்.

கடகன் : ஆமா.

மயில் ராவணன் : அவனுடைய இலங்கையில் மகாகஷ்டங்கள் ஏற்பட்டுவிட்டது. எவனோ தெரியவில்லை. சண்டைக்காக – போர்க்காக – வந்துவிட்டான். என் அண்ணன் இருந்துக்கொண்டு அழுது புலம்பிக் கொண்டிருக்கிறான். அது என்னுடைய கனவில் தெரிந்தது.

கடகன் : அப்படியா? ஏதாவது ஒண்ணு நடந்திருந்தா ஆள் வந்திருக்குமே! ஆ! அதோ ஒரு மனிதன் வருகிறான்.

அக்னிக் கண்ணன் : யார்னு பாருப்பா. யார்னு பாரு.... [இசை]

பாட்டு : ....

கடகன் : யாரப்பா நீ?

பிரகேசன் : எப்பா. நான் தென்னிலங்கையாளும் இராவணேஸ்வரனின் மந்திரிமார். என் பேர் பிரகேசன்.

கடகன் : ஓஹோ... பிரகேச மந்திரியா? போ, போ. மகாராஜா கிட்ட போ. மகாராஜா கிட்ட போ... [இசை]

பாட்டு : ....

பிரகேசன் : ராஜாதி ராஜனே! ராஜ கம்பீரனே! இந்தப் பாதாள உலகம் அரசு புரிய வேண்டிய மாகையில் சிறந்த மயில்ராவண மகாராஜாவே! அடியேன் நான் வணக்கம் செய்தேன் பிரகேச மந்திரி.

மயில் ராவணன் : டேய்! சபாஷ்.... எந்திரி. நீ யாரப்பா நீ? உன்னைப் பார்த்தால் ஆச்சரியமா இருக்குதே!

பிரகேசன் : மகாராஜா, நான் யாரென்று கேளுங்கள். தென்னிலங்கையாளும் பத்துத்தலை இருபது கைகளாகவும் இருக்கின்றானே இராவணப் பெருமான் மகாராஜா... அவருடைய இலங்கையில் மகா கஷ்டங்கள் ஏற்பட்டு விட்டது. ஆயிரம் மைலுக்கு அப்பாலிருந்து இராமன் எழுபது வல்ல வானரப் படைகளை அழைத்துக்கொண்டு எங்களுடன் சண்டைக்காக வந்துவிட்டான். மகாராஜா எல்லாப் படைகளையும் தோர்வையடைந்து நிராயுதமாக நிற்கிறார். நீங்கள் வந்து உதவி செய்ய வேண்டும். இல்லையென்றால் நாளைக் காலையில் அவர் உயிர் போயிடும்.

மயில் ராவணன் : ஆ! அவன் யாராக இருக்கலாம்... என்னுடைய அண்ணனுக்கு எதிரியாக வரவேண்டும். கவலைப்பட வேண்டாம், டேய் மந்திரியாரே!

பிரகேசன் : என்ன மகாராஜா?

மயில் ராவணன் : நீ விரவாகச் சென்று அண்ணனிடத்தில் தெரிவி. நான் பின்பதாக வருகிறேன். வருகிறேன் என்று போய்ச் சொல். போ.

பிரகேசன் : மகாராஜா! விர்ன்னு வரலேன்னா காலையில் உங்க அண்ணனோட உயிர் ஊசலாடிடும்.

மயில் ராவணன் : ஏய், நான் வருகிறேன். போ.

பிரகேசன் : வாருங்க... வாங்க... சட்ன்னு வந்திருங்க.

மயில் ராவணன் : ஏய்!

கடகன் : என்ன மகாராஜா?

மயில் ராவணன் : புறப்படுங்கள். காளியம்மன் கோவில் சென்று நாங்கள் உத்தரவு வாங்கிக் கொண்டு போக வேண்டும்.

கடகன் : அப்படியா? புறப்படுங்கள் மகாராஜா. புறப்படுங்கள்.

பாடல் : **திருவருள்தர இன்னும் மனமில்லையா**
....

மயில் ராவணன் : காளிக்காதேவி! என்னுடைய அண்ணனுக்கு ஏக கஷ்டங்கள் ஆகிவிட்டது. இலங்கையில் நான் சென்று நான் அவனுக்கு உதவி செய்ய வேண்டும். அந்த வேட இராமனைக் கொண்டாந்து நான் உனக்குப் பலியிடுகிறேன். காலை விடிவதற்குள்ளாக நாங்கள் இராமனையும் லட்சுமணனையும் கொண்டாந்து உன்னுடைய வாசலுக்கு முன்பதாக நான் பலியிடுகிறேன் தாயே.

காளி : அடே மயில்ராவணா!

மயில் ராவணன் : தாயே! வணக்கம் செய்தோம்.

கடகன் : சாமி வந்துட்டாங்க. சாமி வந்துட்டாங்க. (கும்பிடுங்க. கும்பிடுங்க)

அக்னிக் கண்ணன் : சாமி வந்துட்டாங்க. (கும்பிடுங்க) தாயே!

காளி : மயில்ராவணா! உன்னுடைய அண்ணனுடைய இலங்கைக்குப் போவது நியாயமில்லை. உனக்குப் பிடித்துவிட்டது. நீ போக வேண்டாம். உன்னுடைய அண்ணனுக்குப் பட்ட கஷ்டங்கள் உனக்கும் வந்துவிடும். அதனால் ராமரைச் சிறையெடுத்து வரவேண்டாம். உன்னுடைய உயிர்கள் அபாயமாகப் போய்விடும்... ஜாக்கிரதை! அனுமாருடைய கைப்பட இந்தப் பாதாளலங்கை அழிந்துவிடும். போ, போ!

கடகன் : மகாராஜா! மகாராஜா! மகாராஜா!

மயில் ராவணன் : என்னடா?

கடகன் : காளியாத்தா சொல்லிட்டாங்க...

மயில் ராவணன் : என்னடா சொல்லிவிட்டாள்.

கடகன் : நீ தாராளமாப் போயி அந்த ராமனைச் சிறை யெடுத்திட்டு வா. வெட்டிரு. நான் பலியை வாங்கிக்கிர்றேன். (அடப்பாவி!)

மயில் ராவணன் : உண்மையாகவா?

கடகன் : உண்மைதான்.

மயில் ராவணன் : இன்னொரு தடவை கேட்போமா?

கடகன் : வேண்டாம். காளியம்மாவுக்குக் கோபம் வந்து பிறகு அடிச்சிப் போடுவாங்க.

மயில் ராவணன் : அப்படியா? புறப்படுங்கள்.... புறப்படுங்கள்.

அக்னிக் கண்ணன் : காளியம்மா, புத்தியம்மா! புத்தியான வார்த்தை சொன்னாங்க. அதையும் கேட்காம இந்தக் கடகப் பயல் இழுத்திட்டுப் போறான். (ஆமா, கடகன்). சரி தாயே! எனக்கு ஒரு உயிருக்கு ஆபத்து வரவேண்டாம். உன்னையக் கை யெடுத்துக் கும்புடுறேன். தாயே! கையெடுத்துக் கும்புடுறேன்... [இசை]

பாடல் : ....

மயில் ராவணன் : டேய்! இந்த துலா இந்திரத்தில் யார் வந்தாலும் நிறுவையில்லாம விடக்கூடாது.

அரக்கன் : சரி. நாங்கள் யாரையும் விடமாட்டோம்., யாரையும் விடமாட்டோம்... எல்லோரும் உஷார்!

மயில் ராவணன் : இதான் உத்தேக வனம். இந்த இடத்தில் யார் வந்தாலும் புத்தி மாறாட்ட வேண்டும். சாபத்தைக் கொடுத்துவிட்டேன். புறப்படு... மச்சபல்லவா!

மச்ச பல்லவன் : யாரது?

மயில் ராவணன் : கோபப்படவேண்டாம். நான்தான் மயில்ராவணன்.

மச்ச பல்லவன் : மயில்ராவணா! இந்த நேரத்திலே என்ன....?

மயில் ராவணன் : மச்சபல்லவா! என்னுடைய அண்ணனுக்கு ஏக கஷ்டங்கள். விடியவரைக்கும் யாராவது வந்துவிட்டால் நீங்க விடக்கூடாது. அடித்து நொறுக்க வேண்டும்.

மச்ச பல்லவன் : கவலைப்பட வேண்டாம், மயில்ராவணா! உன்னுடைய உப்புந் தண்ணியைக் குடித்த நான் துரோகம் செய்யமாட்டேன். நீ போய் வா! பிறப்படுங்கள்.... பிறப்படுங்கள்!... [இசை]

பாடல் : ....

மயில் ராவணன் : ஏய்! இந்தத் தாமரைத் தண்டுக்க ஒருத்தன் காவலாக இருக்கவேண்டும். யார் அங்கே?

அரக்கன் : என்ன மகாராஜா?

மயில் ராவணன் : இந்த இடத்தில் காவலாக இருக்க வேண்டும். யாரையும் உள்ளே போகவிடக் கூடாது.

அரக்கன் : நாங்க பாத்துக்குறோம். நீங்க போய்ட்டு வாங்க... [இசை]

பாடல் : ....

இராமர் : தம்பி!

இலக்கு : அண்ணா!

இராமர் : என்னால் இந்தத் துக்கங்கள் தாங்க முடிய வில்லை. நான் நித்திரை செய்ய வேண்டும்.

இலக்கு : அண்ணா! சுக்ரீவனிடத்தில், அங்கதனிடத்தில், அனுமானிடத்திலெல்லாம் யோசனை கேட்டுக் கொண்டு தாங்கள் நித்திரைக்குப் போகலாம்.

இராமர் : அப்படியா? சாம்புகரே!...

சாம்புகர் : என்ன சாமி?

இராமர் : நான் பன்னிரண்டு நாளாக சண்டைகள் செய்த தனால் எனக்குத் தூக்கங்கள் தாங்க முடிய வில்லை. நித்திரையாக இருக்கின்றது. நான் நித்திரைக்குப் போகவேண்டும்.

சாம்புகர் : சாமி! இங்கதான் ஒருத்தருமில்லையே. நீங்கள் தாராளமா நித்திரைக்குப் போங்க சாமி. எவனாவது வந்தா அவன் *கொதவளையைப் புடிச்சுக் கடிச்சிப் போடுதேன் சாமி.

இராமர் : அங்கதா!

அங்கதன் : சுவாமி, நீங்கள் கவலைப்பட வேண்டாம். எந்த அரக்கர் வந்தாலும் நான் பார்த்துக் கொள் கிறேன். நீங்கள் தாராளமாக நித்திரைக்குப் போகலாம்,

இராமர் : சுக்ரீவா!

சுக்ரீவன் : சுவாமி! நீங்கள் உஷாராயிருக்க வேண்டும், பதுனஞ்சி நாள் வரைக்கும்.

இராமர் : அப்படியா?

சுக்ரீவன் : நீங்க கவலைப்பட வேண்டாம். நான் இருக்கிறேன்.

இராமர் : அப்படியா. சரி... அனுமார் எங்கே?

அனுமன் : இதோ வருகிறேன் சுவாமி.

★கொதவளை = குரல்வளை

பாடல் : அனுமார் வாராரே....

....

இராமர் : பெருமாளே! உன்னிடத்தில் நான் முக்கியமாகக் கேட்க வேண்டும்.

அனுமன் : என்ன சுவாமி?

இராமர் : நான் பன்னிரண்டு நாளாக, நான் சண்டைகள் செய்ததினால், ரத்தக் களத்தில் சண்டைகள் செய்ததினால், எனக்கு உறக்கங்கள் தாங்க முடியவில்லை. நான் நித்திரைக்குப் போக வேண்டும்.

அனுமன் : சுவாமி! நீங்கள் தாராளமாக நித்திரைக்குப் போங்கள். நான் விடியறவரைக்கும், நான் உங்களைப் பார்த்துக் கொள்கிறேன்.

இராமர் : சரி. எல்லோரும் ஒப்பந்தமாக இருக்கீங்கள். இதோ நான் நித்திரைக்குப் போகவேண்டும்... அங்கதா!

அங்கதன் : சுவாமி!

இராமர் : நீ சென்று அந்த புஷ்பவாணிப் பெட்டியை எடுத்துக்கொண்டு வா.... [இசை]

பாடல் : ....

இராமர் : எல்லோரும் எங்களை விடியவரைக்கும், நீங்கள் பாதுகாத்த வண்ணமாக இருக்க வேண்டும். நாங்கள் நித்திரைக்குச் செல்கிறோம்.

அங்கதன் : சுவாமி! நீங்கள் தாராளமாகப் போங்களேன். ('எல்லோரும் கைதட்டுங்கள்... கை தட்டுங்கள்') ஓய் பெரியவரே! ஜாம்புகரே!

சாம்புகர் : என்ன?

அங்கதன் : இதைக் கதவுகள் சாத்தி நமது பச்சை டேராவுக்குள் கொண்டுபோய் வையுங்கள்... [இசை]

பாடல் : நித்திரை செய்தாரே
ராமரும் லச்மணரும்
தங்கப் பெட்டகத்தில்
நித்திரை செய்தாரே!

மயில் ராவணன் : என்ன?... நீங்கள் விரவாகச் சென்று என்னுடைய அண்ணன் இருக்கவேண்டிய இடத்தைப் பார்க்கவேனும்.

கடகன் : நாங்க போய்ட்டு வர்றோம்.

மயில் ராவணன் : டேய்! குரங்குகள்... அனுமாருமாத் திரிகிறது.

கடகன் : நாங்க குரங்குகளையெல்லாம் பாத்துக்கிர்றோம்.

பபூன்1 : ஏ அண்ணே! (அண்ணே!)

பபூன்2 : என்னா தம்பி?

பபூன்1 : (என்னப்பா அது? அட எளவே!) டேய்! நமது கிராமத்தில், பெருங்குடி கிராமத்தில் இருக்க வேண்டிய புண்ணியவான்கள் எல்லாம் நமது மேல் ரொம்பப் பிரியமாக இருக்கிறார்கள் அப்பா. இன்றைய தினம் ராமருடைய பட்டாபிஷேகம் நடப்பதினால் பெரியோர்களும் தாய்மார்களும் எல்லாருமாகச் சேர்ந்து ராமருக்குச் சரியான எட்டுமுழ வேஷ்டிகளும், சீதைக்குச் சரியான சீலைகளும், வெத்தலை பாக்கு, என்ன... தேங்கா பழம் சூடம் சாம்ராணி இதெல்லாம் கொண்டுட்டு வரலாமுன்னு... எல்லாரும் எங்கமேல ரொம்பப் பிரியமா இருக்கிறாங்க. இன்றைய தினம் ராமருடைய பட்டாபிஷேகத்துனால பெருங்குடி கிராமத்தினர் ரொம்ப க்ஷேமமாக இருக்க வேண்டும்.

பபூன்2 : அதச் சொல்லத்தான் வந்தியாக்கும்.

பபூன்1 : ஆமா. டேய்! நீ அதெல்லாம் வாங்கிக்கிட்டா...? நமது பிரஸிடெண்ட் அய்யா இருக்காருல்ல...

பபூன் 1 : ஆமா... பிரஸிடெண்ட் அய்யா இருக்காரு.

பபூன்2 : பெருங்குடி பிரஸிடெண்ட் அய்யா (பெரிய கருப்பணம்பலம்) பெரிய கருப்பன் அம்பலம் அன்னவர்கள் எங்க மேல ரொம்பப் பிரியமா இருக்கிறாரு... என்ன... (ஆமப்பா) அடே குண்டோதரா! நீ ஜோக்கா கதை நடத்து... என்ன... நீ போகும்போது ஒரு அஞ்சிபடி அரிசியும்... என்ன... பத்துபடி உப்பும்....

பபூன்1 : என்னத்துக்கு அப்பா?

பபூன்2 : கரச்சி ஒங் காதுல ஊத்திக்க... படுவா பயலே! [அடிக்கிறான்] அதெல்லாம் நம்மளுக்குத்தான் குடுக்கணும்னு எம்மேலே பிரியமாயிருக்காரு.

பபூன் 1 : டேய்! அது எனக்குடா.

பபூன் 2 : அது எனக்குடா (வேண்டாம். உங்களுக்குள்ள அடிச்சுக்க வேண்டாம்)

பபூன் 1 : அது எனக்குடா.

பபூன் 2 : அது எனக்குடா.

பபூன் 1 : டேய்! சும்மாயிருடா. [அடிக்கிறான்]

பபூன் 2 : டேய் அடிக்காதடா. மக்கா கோழி படுவா. அய்யா சண்டியரு மகன் சண்டியருன்னு தெரியல. சப்பு சப்பு சப்புன்னு அடிக்காதடா... ரெட்டைத் துப்பாக்கி கொண்டா... ரிவால்வரு ர்ர்ர்... [அடிக்கிறான்]

பபூன்1 : வாயில மண்ணு போட! என்னா குசு உடுறான்டா... [இசை]

பாட்டு : திரிலோகமும் புகழும் சுந்தர
தீரதீரன் சூரன் நான் வந்தேன்
தென்னாட்டுக் கதிகாரன்
வடநாட்டுக் குபதீரன்
வீரதீர சூரன் நான் வந்தேன்.

இராவணன்: அய்யோ... என் மயில்ராவணன் வரமாட்டான். என் அண்ணன்... என்னுடைய தம்பியே வரமாட்டான். இனிமே நான் என் செய்வேன்?

அக்கினிக் கண்ணன் : ஏலே! ஏலே கடகா! இங்கே வாடா டேய்.

கடகன் : என்னடா?

அக்கினிக் கண்ணன் : இந்தா இருக்கிறாரு மகாராஜா.... ஏய் நான் தாண்டா முதன்மந்திரி. நான்தான் சேவை செய்வேன்... மகாராஜா! நான்தான் முதன் மந்திரி வந்திருக்கிறேன்.

இராவணன்: பிராணசேகிகா! ஜானகி! சீதா! அடி பெண்ணே! வா கண்ணே! மானே! தேனே! ரஞ்சிதமே! எவர்க்கும் கிடைக்காத என் சீனிக் கல்கண்டே!

அக்கினிக் கண்ணன் : ஏ! சரியான கிறுக்குப் புடிச்சிருக்கு. மரியாதயா இந்த எடத்தை விட்டுப் போறது ஞாயம்.

இராவணன்: அய்யோ குரங்கு... அப்பா குரங்கு... ஆ! யாரென்று தெரியவில்லையே! ஏ அப்பா! குரங்கு.

கடகன் : என்ன மனுஷன்டா நீ? மகாராஜா குரங்கு கைல நல்ல உதையும் அடியும் தின்னிருக்காரு. சீதையைப் பத்தி ரொம்பவே பொலம்பிக் கிட்டிருக்காரு மகாராஜா. நம்ம மயில்ராவண மகாராஜா கிட்டப் போய்ச் சொல்வோம்.

அக்கினிக் கண்ணன் : அதுதாண்டா ஞாயம்... [இசை]

கடகன் : மகராஜா! சரியான பைத்தியம்... இராவண மகராஜா. நல்லா அந்த ராமனிடத்தில் அடியும் ஒதையும் தின்று, குரங்குகளிடத்தில் அடியும் ஒதையும் தின்று, அவனுடைய பைத்தியங்கள் பிடித்துக் கொண்டது. சீதையா, ஜானகியா, பெண்ணே, கண்ணே, ராமா, அனுமாரு அப்படியிப்படின்னு பேசிக்கிட்டிருக்காரு. எங்களுக்குப் பயந்து நாங்க ஓடியாந்திட்டோம்.

மயில் ராவணன் : டேய் சோம்பேறி புடிச்ச பசங்களா! நான் போய் வருகிறேன்.

கடகன் : சரி... நீங்க போயிட்டு வாங்க.

மயில் ராவணன் : டேய்! குரங்கு அணுஅணுவாகத் தேடுகிறது. அவுங்களுடைய கண்ணுக்கு நீங்க தென்படக் கூடாது.

கடகன் : நாங்க பாத்துக்கறோம். குரங்கை ஒரு கை பாக்கறோம்.

மயில் ராவணன் : டேய்! குரங்கு... ஜாக்கிரதையா இருக்க வேண்டும். டேய்! எங்கடா இருக்கிறார்?

கடகன் : அந்த இருட்டுக் கோட்டைக்குள் இருக்கிறாரு.

மயில் ராவணன் : இருட்டுக் கோட்டைக்குள்....

அக்கினிக் கண்ணன் : ஏ! என்னடாது கறுப்பாத் தெரியுது? (என்னான்னு பாரு?) ஏய்! அது என்னடாது கறுப்பாத் தெரியுது? ஏய்! ஏ! கருப்பாத் தெரியுதே! (என்னன்னு பாரு) என்னன்னு தெரியலயே? ஏய்ய்!

குரங்கு : என்னடா இரண்டு பயல்கள் இந்த இடத்தில் பேசிக் கொண்டிருந்தான்... இப்ப ஒருத்தரையும் காணோமே! எங்கெ ஓடிப்போயிட்டான்? திருட்டுப் பயல்களே! நீங்க எங்கெ ஓடினாலும் என் கைப்பட மாண்டு மடிவீர்கள்.

கடகன் : ஏலே! குரங்கு சரியான குரங்கு. அடி நொறுக்கிப்புடும். ஓடியா... நாம் பேசாமப் போய்ப் படுத்துப் போடுவோம்.... [இசை]

மயில் ராவணன் : அண்ணா ராவணேஸ்வரா! நான்தான் உன்னுடைய தம்பி வந்திருக்கிறேன், மயில்ராவணன்.

இராவணன்: மயில்ராவணா! ஆ! தம்பி மயில்ராவணா...

பாடல் : **ஆனை சேனைகள் இழந்தேன்**
அரும்பாவி ஆகிவிட்டேன்
தங்கை சூர்ப்பநகையால்
எலங்கையை நானிழந்தேன்
அரும்பாவி ஆகிவிட்டேன்
மதி மோசம் ஆனேன் தம்பி ராவணா!
அய்யோ நான் என்ன செய்வேன்?

மயில்ராவணா! என்னுடைய நிகழ்ச்சிகளைப் பாத்தியா? சண்டாள ராமன்... படைகளை...

மயில் ராவணன் : அண்ணா! கவலைப்படவேண்டாம். எல்லாம் எனக்குத் தெரியும். நீ சத்தம் போடாதே! சத்தம் போடாதே! வெளியே தெரிந்துவிட்டால் உன்னுடைய உயிர் அபாயமாகப் போய்விடும். சத்தம் போடாதே!

இராவணன்: அப்படியா... சரி. தம்பி! இவர்களைக் கொல்வதற்கு ஒரு திட்டம் செய்ய வேண்டும்.

மயில்ர ாவணன் : அண்ணா! நீ கவலைப்பட வேண்டாம். இந்த ராமனையும் லட்சுமணனையும் ரவு விடிவதற்குள்ளாக அவர்கள் இரண்டு பேர்களுடைய தலையைநான் அறுத்து விடுகிறேன். காளி கோயிலுக்கு நான் பலி விடுகிறேன். நீ கவலைப்பட வேண்டாம். இதோ சத்தியம்!

பாவையாட்டி : இந்தச் சத்தியம் செய்ததை யார் பார்த்தாரு? அனுமாருடைய தகப்பன் வாயு பகவான் பார்த்துக் கொண்டார்.

இராவணன்: தம்பி! விடிவதற்குள்ளாக அவர்களைக் கொல்ல வேண்டும்.

மயில் ராவணன் : நீங்கள் கவலைப்பட வேண்டாம். இது.... சத்திய மாக அவர்களை நான் கொன்று விடுகிறேன்.

இராவணன்: சபாஷ்! நீ இராமனையும் லட்மணனையும் கொன்றுவிட்டால் அந்தக் குரங்குப் படைகளை நான் கொன்று விடுகிறேன். சீதையை அழைத்து வருவேன். சிம்மாசனத்தில் உக்காரவைப்பேன். கொஞ்சிக் குலாவிக் கொண்டிருப்பேன். (எடு வௌக்குமாரை!)

மயில் ராவணன் : அப்படித்தான் இருக்கவேண்டும். அண்ணா! நான் போய்வந்து உனக்கு நான் அந்தச் சீதையை ... உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன்.

இராவணன்: சரி, சரி. நீ போயிட்டு வா. போயிட்டு வா. என்னுடைய தம்பி எல்லாத்தையும் கொன்று விடுவான். பேஷ்!...

பாட்டு : உள்ளம் என்பது ஆமை - அதில்
உண்மை என்பது ஊமை

வாயு பகவான் : ஏய்! யாரது! ஏய் விபுசனா! இங்க வாப்பா சீக்கிரம்.

விபீடணன் : என்ன வாயு பகவானே?

வாயு பகவான் : டேய்! இராமர் இப்போது எங்கேயிருக்கிறார்?

விபீடணன் : புஷ்பவாணிப் பெட்டியில் படுத்திருப்பார்.

வாயு பகவான் : அடப்பாவிங்களா! மாகையில் சிறந்த மயில் ராவணன் பாதாள லங்கையிலிருந்து வந்து இராவணனிடத்தில் சத்தியம் செய்து கொடுத்து விட்டான்.

விபீடணன் : எப்படி?

வாயு பகவான் : விடிவதற்குள்ளாக அந்த இராமனை நான் கொலை செய்கிறேன். காளி கோயிலுக்கு நான் பலியிடுகிறேன் என்று சத்தியம் செய்து விட்டான். போய்த் தெரிவிக்க வேண்டும். சட்னுபோ. நான் வருகிறேன்... [இசை]

விபீடணன் : அனுமாரே!

அனுமன் : என்னப்பா அபாயக் குரலாக வருகிறான். யார் உன்னை அடித்தவன்? சொல் சீக்கிரம்.

விபீடணன் : அனுமாரே! உயிருக்கே ஆபத்து வந்துவிட்டது.

அனுமன் : என்ன ஆபத்து?

விபீடணன் : இராம லட்சுமணர் எங்கே?

அனுமன் : இப்பொழுதுதான் புஷ்பவாணிப் பெட்டியில் படுத்திருக்கிறார்கள்.

விபீடணன் : அய்யய்யோ.. படுத்ததும், அவன் சத்தியம் செய்ததும்... முடித்துவிடுவான் அவனுடைய காரியத்தை!

அனுமன் : என்னப்பா உளறிக் கொண்டிருக்கிறாய்?

சாம்புகர் : ஏலே! என்னலெ இந்தப் பயா அழுது கிட்டிருக்கான்?

அனுமன் : ஏ! என்னப்பா அது? சொல்ல வேண்டும் சீக்கிரம்.

விபீடணன் : என்னவென்றால், மாகையில் சிறந்த மயில் ராவணன் மகாக் கெட்டிக்காரன், மகாசாமர்த்தியம் உடையவன். ஏராளமான வேஷங்கள் எடுப்பான். அவனைக் கண்டு பிடிப்பதற்கு எங்களால் முடியாது. நான் சொல்வதைக் கேள்! இராமரை நாங்கள் மறந்துவிட்டோம்.

அனுமன் : உண்மையைச் சொல்லப்பா.

விபீடணன் : அந்த மயில்ராவணன், வந்து... பாதாள லங்கையில் இருந்தவன். துப்பு எப்படியோ தெரிந்து லெங்கைக்கு வந்து இருட்டுக் கோட்டை யில் இருக்கிறானாம், அந்த ராவணன்... ராவணனிடத்தில் வந்து மயில் ராவணன் சத்தியம் செய்து கொடுத்து விட்டானாம்.

அனுமன் : எப்படி?

விபீடணன் : விடிவதற்குள்ளாக, இந்த இராமனையும் லட்மணனையும் கொண்டுபோய்... அந்தக் காளிகோயிலுக்கு நான் பலியிடுகிறேன் அப்படியென்று சபதம் கூறிவிட்டான். அவன் சபதத்தைக் கூறிவிட்டான் என்றால் அதை நிறைவேற்றாமல் இருக்கவே மாட்டான். மகாக் கெட்டிக்காரன் அனுமாரே!

அனுமன் : ஆ! உண்மையாகத்தானா?

விபீடணன் : உண்மைதான்.

அனுமன் : யார் தெரிவித்தது?

விபீடணன் : உங்களுடைய தகப்பன் வாயு பகவான்.

அனுமன் : உண்மைதானா?

வாயு பகவான் : உண்மைதான். இராமருடைய உயிரைக் காப் பாத்துங்கள். இல்லையென்றால், மாகையாக வந்து.... இராவணன், அந்த மயில்ராவணன் சிறையெடுத்துக் கொண்டுபோய் விடுவான்.

அனுமன் : ஆ! இப்பொழுது என்ன செய்வது?

சாம்புகர் : அடப் பாவிப் பயலே! ராவணன் வேற... மசுறுராவணன் வேற இருக்குறானா? (ஏ! மயில்ராவணன்)

விபீடணன் : யோவ்! மயில்ராவணன்.

சாம்புகர் : மயிறுராவணன் வேற இருக்குறானா? (யோவ்! மயில்ராவணன் சாம்புகரே!)

விபீடணன் : யோவ்! சில நேரம் என்போல் வேஷங்கள் எடுப்பான்.

சாம்புகார் : அய்யோ!

விபீடணன் : சிலது நேரம் உங்களைப்போல் வேஷத்தை எடுப்பான்.

சாம்புகர் : அப்பா! (அப்பா) உதறுது அப்பா... வந்துச்சுடா கண்டம். ஏடா சுக்குமுக்கு. (ஏ! சுக்ரீவன்)

சுக்ரீவன் : என்னய்யா பெரியவரே!

சாம்புகர் : எலே! இப்ப என்னடா பண்றது? (ஏதாவது யோசனை செய்யுங்க)

சுக்ரீவன் : யோவ்! இப்பொழுது என்ன செய்வது?

சாம்புகர் : நமது பச்ச டேராக்குள்ள வச்சி.... எழுபது வல்ல வானரப் படைகள், இருபத்நாலு படைத்தலைவர்கள் எல்லாம் சுத்தி உக்காந்து 'ராமாராமா'ன்னு தோத்திரம் செய்தால்... விடியவிடிய வரைக்கும் நாம முழிச்சிக்கிட்டிருந்தா தூக்கிட்டுப் போயிடுவானோ? (போக மாட்டான்)

விபீடணன் : காத்தால வந்து தூக்கிட்டுப் போயிருவான். (போச்சுடா பொழப்பு)

சாம்புகர் : போச்சுடா பொழப்பு.

விபீடணன் : எறும்புபோல் வேஷங்கள் எடுப்பான்.

சாம்புகர் : அய்யய்யோ! ஏலே! இனிம நாங்க கஷ்டந்தான்.

அனுமன் : இன்னொரு யோசனை.

சாம்புகர் : என்னடா யோசனை?... சட்னு சொல்றா... ஏஏஏ...

அனுமன் : எப்படியென்றால், நான் வால்கோட்டை கட்டுகிறேன். ஆகாயத்துக்கும் மண்புவனத்துக்கும் ஒன்றாக நான் வால்கோட்டை கட்டி, அதற்குள்ளாக இந்த இராமனுடைய பெட்டியை வைத்துக் கொண்டு... நீங்கள் சிலது வானரர்களை வைத்துக்கொண்டு உஷாராக இருக்க வேண்டும். எப்படி வாசலென்றால் வாய்க்குள்ளாகப் புகுந்து காதுவழியாகப் போகவேண்டும்.

சாம்புகர் : ஏல, இது நல்ல தந்ரம்டா (நல்ல தந்ரம்). ஒருத்தனும் போகமாட்டான். (ஆமா. ஆமா)

விபீடணன் : இதுதான் நல்ல தந்திரம். சரி, சீக்கிரம் முடியுங்கள். வந்துட்டான் மயில்ராவணன். வந்துட்டான் வந்துட்டான்... [இசை]

அனுமன் : ஓய் பெரியவரே! ஜாம்புகரே!

சாம்புகர் : என்னடா?

அனுமன் : அந்த இராமனுடைய பெட்டியைத் தூக்கிக் கொண்டு, மருதாடகன், கெத்து மாதகன்... இவ்வளவு பேர்த்தையும் அழைத்துக்கொண்டு, நீங்கள் உள்ளே உக்காந்திருங்கள்... ராமனுடைய கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டே இருக்கவேண்டும்.

சாம்புகர் : சரிடா, அப்படியே செய்றேன்டா. பெட்டி எங்கடா?... [இசை]

பாடல் : ....

....

விபீடணன் : ஏய்! இங்கே இருக்கிற வானரங்கள் எல்லாம்... வானரங்களே! எல்லாருஞ் சேர்ந்து வெளிக் கோட்டையை நாங்கள் சுற்றிவருவோம். வாருங்கள்...

பாடல் : **உஷார் உஷார் உஷார் வானரசேனைகளே**
உஷார் துணிவில் நிற்க வேண்டும் சிப்பாய்மார்களே!
உஷார்! உஷார்! உஷார்! உஷார்மார்களே!
கோட்டை சுத்தி நிற்கவேண்டும் சிப்பாய்மார்களே!

மயில் ராவணன் : டேய்! இங்கெ பாருங்கள்... விரவாகச் சென்று அந்த இராமனையும் லட்மணனையும் தூக்கிக் கொண்டு வரவேண்டும்.

கடகன் : மகாராஜா! நீங்க கவலைப்பட வேண்டாம். நான் இருக்கிறேன். அந்த ராமனை நான் தூக்கிட்டு வந்துட்றேன்.

அக்கினிக் கண்ணன் : நான் அந்த லட்சுமணனைத் தூக்கிட்டு வந்துட்றேன்.

மயில் ராவணன் : போங்கடா சீக்கிரம்....

பாடல் : **உஷார்! உஷார்! உஷார்! உஷார்மார்களே!**
கோட்டை சுத்தி நிற்க வேண்டும் சிப்பாய் மார்களே!

விபீடணன் : அனுமாரே! இராமர் இருக்கிறாரா இல்லையா என்று பெட்டியைப் பார்த்து வருகிறேன். வாயைத் திறக்க வேண்டும்.

அனுமன் : போய்வா!

விபீடணன் : உஷாராகவே இருக்கிறார்கள். பிறப்படுங்கள். பிறப்படுங்கள்....

பாடல் : **உஷார்! உஷார்! உஷார்! உஷார்மார்களே!**
கோட்டை சுத்தி நிற்கவேண்டும் சிப்பாய் மார்களே!

கடகன் : ஏலே! ராமனெ எங்கெனடா போய்ப் பார்க்கிறது?

அக்கினிக் கண்ணன் : ராமன் எங்கனெ படுத்திருப்பான் பாரு, இந்த இருட்டு நேரத்திலே.

கடகன் : ஏய்! என்னடா இது... மெதுக்மெதுக்குன்னு இருக்குது. (ஏய்! கோட்டப்பா. (ஏலே! நாங்க வந்த சேதி எப்படியோ தெரிஞ்சிட்டு... தெரிஞ்சிபோய் வால்கோட்டை கட்டியிருக்குது குரங்கு. ஏய்! நான் வந்து... பருந்து வேஷத்தை எடுத்து மேலோகத்துக்குப் போயி... அந்த வாசல் வழியா இறங்கி இராமனைத் தூக்கிட்டு வந்துட்றேன்.

அக்கினிக் கண்ணன் : ஏய்! நீ அப்படிப் போய்க்க. நான் பெருக்கா வேஷம் எடுத்து (ம்ம்... பெருச்சாளி)... என்ன... நான் பூமியைத் தொளச்சிக்கிட்டே போயி... என்னா... அந்த லட்சுமணனை நான் தூக்கிட்டு வந்துட்றேன்....

பாடல் : **உள்ளம் என்பது ஆமை - அதில்**
உண்மை என்பது ஊமை!
சொல்லில் வருவது பாதி - அதில்
தூங்கிக் கிடப்பது மீதி! (உள்ளம்)

பாவையாட்டி : கடகன் இதோ பருந்துபோல் வேஷங்கள் எடுத்து சூர்யமண்டலம், நட்சத்திர மண்டலம் வரைக்கும் பார்த்துவிட்டான். அனுமார் அதுக்கு அங்கிட்டே வால்கோட்டை கட்டியிருக்கிறார். முடியாமல் அந்த சூரிய பகவானுடைய வெளிச்சங்கள் அடிபட்டு அந்தக் கடகனுடைய இறக்கையெல் லாம் வெந்துபோய்... இதோ... கீழெ பூமியில... கீழெ விழுந்துவிட்டான். (இவன் துளச்சிக் கிட்டே இருக்றான்)

கடகன் : அடப்பாவி! மேலோகத்து வரைக்கும் கட்டி யிருக்குது அந்தக் குரங்கு வால்கோட்டை.

(ஆமா. அக்கினிக்கோட்டை வரைக்கும் கட்டி யிருக்கு. முடியாது) நான் ராமனைத் தூக்க முடியலெ. இவன் லட்சுமணனைத் தூக்கிடு வான்... துளச்சிகிட்டே இருக்கான் தெரியுது (தொளச்சிகிட்டேயிருக்கான்). நான் பொய்ட்டு வாரேன். (மூக்கப் பறிகொடுத்துட்டு வரப் போறான்).

பாவையாட்டி : பெருச்சாளிபோல் வேஷங்கள் எடுத்து அனுமா ருடைய வால் தோண்டிக்கொண்டே இருக்றான் பூமியில்! அனுமார் என்ன செய்தார்? கொஞ்சம்... வாலைக் கொஞ்சம் மெதுவாகத் தூக்கினார். தூக்கினவுடன், இந்த... அக்கினிக் கண்ணன் தலையை விட்டுவிட்டார். மூஞ்சி முகரையெல்லாம் பேந்துகொண்டு... இதோ மூக்குப் பறிகொடுத்து வருகிறார்.

அக்கினிக் கண்ணன் : அய்யய்யோ! மூக்கு போச்சே... அய்யய்யோ.

மயில் ராவணன் : என்னடா? இவுங்க ரெண்டு பேரும் போய் ராமனையும் லட்மணனையும் தூக்கிட்டு வர்ரவுங்க... ஆட்கள் ஒருத்தனையும் காணமே! எங்கெ போய்விட்டார்கள்? (இதோ வர்றாங்க. தூக்கிட்டு வர்றாங்க) எங்கடா? எங்கடா ராமன்? (அதோ வர்ரான்)

கடகன் : அய்யோ மகாராஜா. ரொம்பக் கஷ்டங்கள்...

மயில் ராவணன் : என்ன கஷ்டம்?

கடகன் : நாங்கள் வந்ததெப் பார்த்து... நாங்கள் வந்தது பார்த்து, அந்தக் குரங்கானது மேலோகம் வரைக்கும், சூரிய மண்டலம் வரைக்கும்... அந்தக் குரங்கானது வால்கோட்டை கட்டியிருக்கிறது. நான் பருந்து போல் வேஷமெடுத்து சூரிய மண்டலம் வரைக்கும் போய்ப் பார்த்தேன்.

என்னுடைய இறக்கையெல்லாம் வெந்துபோய் பூமியில் வந்து பொத்துன்னு விழுந்தேன். அக்கினிக்கண்ணன் பூமியைத் துளைத்துக் கொண்டு போய் இருக்கிறான். அவன் தூக்கிட்டு வந்தாலும் வந்திருவான் (வர்ரான்).

மயில் ராவணன் : அப்படியா? (அந்தா வர்ரான்) சோம்பேறி பிடிச்ச பயலே! அவன் எவ்வளவு கெட்டிக்காரன் தெரியுமா? தூக்கிட்டு வந்திருவான்.

கடகன் : வரட்டும்... வரட்டும்... வரட்டும். (ஏய்! தூக்கிட்டுத்தான் வர்ரான்.)

மயில் ராவணன் : டேய்!

அக்கினிக் கண்ணன் : அய்யோ வெட்கமா இருக்கு.

மயில் ராவணன் : டேய்!

அக்கினிக் கண்ணன் : அய்யோ வெட்கமா இருக்கு.

மயில் ராவணன் : டேய்!

அக்கினிக் கண்ணன் : அய்யோ வெட்கமா இருக்கு.

மயில் ராவணன் : டேய்! வாடா இங்கே. அடே! வாடா இங்கே.

அக்கினிக் கண்ணன் : அய்யோ வெட்கமா இருக்கு.

மயில் ராவணன் : டேய்! ஏய் மூக்காய்! (ஏ மூக்காய்) டேய்! டேய் என்னடா, மூக்கையெல்லாம் பறிகொடுத்து வந்திருக்கிறாய்?

அக்கினிக் கண்ணன் : அய்யோ... நான்... இந்த... பெருக்கா வேசமெடுத்து பூமியைத் தொளச்சிகிட்டே போனேன் (ஆமா). அங்கெ வாலு புசுக்குன்னு தூக்கிச்சி. தலையை விட்டவொடனே நசுக்கிடுச்சி. (ஆமா). மூக்காய்ச் (மூக்காய்ச்சி).

மயில் ராவணன் : ஏய்! எவன்டா இவன், திருடத் தெரியாமல் திருடி மூக்கையும் காதையும் பறிகொடுத்து வந்திருக் கிறான்? (ஆமா) சோம்பேறி புடிச்ச பயல்களே! நீங்கள் எல்லாம் அரண்மைனக்குப் போங்கள். நான் தூக்கிட்டு வர்ரேன்....

பாடல் : **ஏ! உஷார்! உஷார்! உஷார்! உஷார்மார்களே!**
கோட்டை சுற்றி நிற்க வேண்டும் சிப்பாய் மார்களே!

ஏய்! இந்தக் குரங்கானது, பூமியிலிருந்து சந்திர மண்டலம்... நட்சத்திர மண்டலம் வரைக்கும்... இந்தக் குரங்கானது வால்கோட்டைக் கட்டியிருக் கின்றது. யாருமே தெரியவில்லை. வெளிக் கோட்டையைச் சுற்றிக்கொண்டே வருகிறார் கள். நான் கவனித்துப் பார்க்கிறேன். (ஆமா)...

பாடல் : **ஏ! உஷார்! உஷார்! உஷார்! சிப்பாய்மார்களே!**
கோட்டை சுத்தி நிற்க ணேவ்டும் சிப்பாய்மார்களே!

விபீடணன் : அனுமாரே! ஸ்ரீராமரை நான் பார்க்க வேண்டும். நீங்கள் வாயைத் திறக்க வேண்டும்.

அனுமன் : தாராளமாகச் சென்று வரலாம். விபுசனா!... [இசை]

விபீடணன் : எல்லோரும் உஷாராகத்தான் இருக்கிறார்கள். மயில்ராவணன் வரவேண்டிய நேரங்கள் ஆகி விட்டது. வாருங்கள். சுத்தடித்துப் பார்ப் போம்... [இசை]

மயில் ராவணன் : பாதைகள் எனக்கு, நன்றாகப் புரிந்துவிட்டது. விபுசனனைப் போல் நாங்கள் வேஷங்கள் எடுத்தால்... இந்தப் பெட்டியை நாங்கள் கைப்பத்தலாம். இப்ப நான்... விபுசனனைப் போல் வேஷங்கள் எடுக்கிறேன்... இந்த... அனுமாரே! அனுமாரே! அனுமாரே!

அனுமன் : யாரப்பா நீ?

மயில் ராவணன் : நான்தான் விபுசனன் தெரியாதா?

அனுமன் : வாப்பா... வா வா வா.

மயில் ராவணன் : வாயைத் திறக்க வேண்டும். இங்கெ இராமர் இருப்பதை, இல்லையென்பதைப் பார்த்து வர்ரேன்.

அனுமன் : சரி! தாராளமாகப் போயேன்.

மயில் ராவணன் : பாதை எப்படி?

அனுமன் : பாதை வந்து... வாய்க்குள்ளாகப் புகுந்து காது வழியாகப் போக வேண்டும்.

மயில் ராவணன் : அப்படியா? போய்ட்டு வர்ரேன்.

பாவையாட்டி: அங்கே கோட்டைக்குள்ளாகப் போய் சாம்புகர் மேல் பொடியைத் தூவிவிட, பின், அவர் மயக்கமாகவே படுத்துவிட்டார். இதோ பெட்டியைத் தூக்கிட்டு வர்ரார்.

மயில் ராவணன் : அனுமானே! இப்பொழுது மயில்ராவணன் வரவேண்டிய நேரமாகிவிட்டது. நீ ஜாக்கிரதை யாக இருக்க வேண்டும். இல்லையென்றால் மாயமாகத் தூக்கிட்டுப் போயிருவான்... ஜாக்கிரதை! நான் போய் வருகிறேன். நான் போய் வருகிறேன்... [இசை]

அக்கினிக் கண்ணன் : ஏங்க நம்ம மகாராஜா போனவரு காணமே? (காணமே)

கடகன் : அட சும்மா இருடா. இவன் வேற எடக்கு பண்ணிகிட்டு இருக்கான்.

அக்கினிக் கண்ணன் : ஏ! மகாராஜா வர்ராரு.

மயில் ராவணன் : டேய்! விரவாகப் புறப்படுங்கள்... நாங்கள் அரண்மனைக்குப் போய்விட வேண்டும்.

கடகன் : ஏன் ஏன் ஏன்? என்ன பண்ணிருவாங்க?

மயில் ராவணன் : குரங்கு கண்டுவிட்டால் கொன்றுவிடும்.

கடகன் : ஆ... குரங்கு! ஒரு கை சண்டை பார்த்திடுவோம்.

மயில் ராவணன் : டேய்! தூக்கிட்டுப் பெறப்படுடா.

கடகன் : டேய்! வாடா டேய்! வாடா அக்கினிக்கண்ணா!

அக்கினிக் கண்ணன் : அய்யய்யோ... மூக்கு போச்சி... மூக்காய்ச் (மூக்காய்ச்).

கடகன் : சும்மா வாடா.

அக்கினிக் கண்ணன் : சரி. தூக்கு தூக்கு... [இசை]

விபீடணன் : அனுமாரே! அனுமாரே!

அனுமன் : யார்ரா அது?

விபீடணன் : நான்தான் விபுசனன். நான் இராமரைப் பார்க்க வேண்டும்.

அனுமன் : டேய் திருட்டுப் பயலே! (ஆமா) யாரை ஏமாத்லாமென்று பார்த்துக் கொண்டாய்? இப்பதானே நீ வந்து என்னிடத்தில் கேட்டுப் பார்த்துச் சென்றாய் (ஆமா). அதற்குள்ளாகவே வந்துவிட்டாயா?

விபீடணன் : இல்லை. நான் வெளிக்கோட்டை சுற்றி வருகிறேன்.

அனுமன் : யோவ்! உனக்கென்ன மண்டையிலெ?... என்ன... மசாலா இருக்கா இல்லையா? (ஆமா) யோவ்! எங்களுடைய இடத்தில் விபுசனன் சுற்றிக்கொண்டே வருகிறான். அவனைப் பாத்து என்னென்னமோ பேசிக்கிட்டு இருக்றயே!

விபீடணன் : இல்லை. அவன் மயில்ராவணன்தான் (இல்லை). உண்மைதான் ஆஹா... உங்களுடைய வால் கோட்டையைக் கலைத்து விடுங்கள்... [இசை] சண்டாள மயில்ராவணன் என்னையப் போல் வேஷங்கள் எடுத்துவந்து உங்களை ஏமாத்திப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு போய்விட்டான்.

அனுமன் : ஆ! திருட்டுப் பயல் தூக்கிட்டுப் போய்ட்டானே! என்னிடத்தில் பாதை எப்படியென்று கேட்டான். அவன்தான் மயில்ராவணன். அட திருட்டுப் பயலே! சரி. அவனுடைய இலங்கைக்கு நான் போய்வர வேண்டும். அந்தப் பாதை எப்படி?

விபீடணன் : அனுமாரே! நீங்கள் போக முடியாது. நான் சொல்வதைக் கேளுங்கள். போக வேணுமென்றால் அங்கே சென்றவுடன் ஏழு கடல் தாண்டிப் போக வேண்டும். நடுத்தீவில் தாமரைப் புஷ்பம். அந்தத் தாமரைப் புஷ்பமானது, இந்த இருட்டு வேளையில் எப்படி மலரும்? மலராது (ஆமா). அந்த மயில்ராவணனைப் பார்த்தவுடன் மலரும்.

அனுமன் : நான் எப்படியாவது... இராமருடைய கிருபையினால்... மலர்ந்துவிடும். சொல் சீக்கிரம். பாதையைக் காமி.

விபீடணன் : சரி. அந்த நூறு யோசனை தூரம் வழியாகச்

சென்றால் மச்சபல்லவன் என்று ஒருவன் இருக்கிறான். அவன் ஒரு குரங்கு. அந்தக் குரங்கை நீங்கள் ஜெயித்துப் போக முடியாது. இந்த உலகமே ஒன்றாகச் சேர்ந்து வந்தாலும், குரங்கை ஜெயித்துப் போக முடியாது. (ஆமா)

அனுமன் : எப்படியாவது இராமருடைய கிருபையினால் ஜெயித்து விடுவேன். சொல் சீக்கிரம்.

விபீடணன் : அதுக்கு அடுத்த வனமானது உத்தேக வனம். உத்தேக வனத்துக்குச் சென்றவுடன் நாலா பக்கமும் பாதைகள் தெரியாது. நான் சொல்வதைக் கேளுங்கள்.

அனுமன் : அங்கே உன்னையப் போல் நல்ல மனிதர்கள் இருக்கிறார்களா?

விபீடணன் : இருக்கிறார்கள்.

அனுமன் : யார்?

விபீடணன் : இந்த மயில்ராவணனுடைய தங்கை. அவள் பேர் தூரசண்டிகை என்றே சொல்வார்கள். ஜிறைச் சாலையில் கட்டி வைத்திருக்கிறான். அவளை நீங்கள் பார்க்க முடியாத.

அனுமன் : சரி. இவ்வளவே போதும். விடிவதற்குள்ளாக... சூரியன் உதிப்பதற்குள்ளாக நான் வந்து விடுகிறேன். நான் வரவில்லையென்றால்... சூரியன் வந்துவிட்டால், அனுமாரும் ராமருடன்... இறந்துவிட்டார் அப்படியென்று நீங்கள் இறந்தாலும் சரி (சரி), நீங்கள் உயிருடன் இருந்தாலும் சரி, நான் போய் வருகிறேன்.

குரங்கு : அய்யய்யோ! சண்டாள மசிர்ராவணன் (ஏய் மயில்ராவணன்) மயில்ராவணன் தூக்கிட்டுப் போயிட்டான். சாம்புகர் என்ன பண்றாரு? (தூங்குறாரு) யோவ் சாம்புகரே!

சாம்புகார் : ஏடா! சும்மா இருடா. உறக்கம் வருது. (ஏய் சாம்புகரே! இராமர் பெட்டி எங்கெ?)

குரங்கு : ஏய் ஜாம்புகரே! ராமர் பெட்டி எங்கெ?

சாம்புகர் : ராமர் பெட்டி எம் பக்கத்துலதான் இருக்குது. (தல மாட்லெ இருக்கு)

குரங்கு : ஏய்! எங்கெய்யா இருக்கு? மயில்ராவணன் தூக்கிட்டுப் போய்ட்டான்.

சாம்புகர் : ஆமா... மயில்ராவணன் தூக்குனான்....

குரங்கு : யோவ்! தூக்கிட்டுப் போய்ட்டான்யா.

சாம்புகர் : ஏல... இருக்குடா. (இருக்கு).

குரங்கு : எந்திரிய்யா.

சாம்புகர் : அய்யய்யோ... நாராயணா! கடவுளே! அய்யய்யோ.

குரங்கு : யோவ்! அனுமார் போயிருக்கிறார்.

சாம்புகர் : அப்படீன்னா... அடிச்சிக் கொண்டுட்டு வந்திடுவாரு. ஏல! வாங்கடா எல்லாரும் போய் மூக்குல போய் உக்காருவோம்....

பாடல் : பாய்ந்தாரே ஹனுமான்
பாதாள இலங்கை நோக்கிப்
பாய்ந்தாரே ஹனுமான்
பாய்ந்திட மேவி குலாவிட
பாய்ந்தாரே ஹனுமான்.

மயில்
ராவணன் : ஏய்! பாதையை உடுரா.

அரக்கன் : போய்ட்டு வாங்க... போய்ட்டு வாங்க.

மயில்
ராவணன் : டேய்! யார் வந்தாலும் விடக்கூடாது.

அரக்கன் : நான் பார்த்துக்கறேன்... நீங்க போய்ட்டு வாங்க... [இசை]

மயில் ராவணன் : மச்சபல்லவா எங்கே? போய்வந்து விட்டீர்களா?

மச்ச பல்லவன் : முடிந்தாச்சு...

மயில் ராவணன் : இனிமேல் யார் வந்தாலும் இனி விடக்கூடாது.

மச்ச பல்லவன் : நான் விடமாட்டேன். நீங்க போய்ட்டு வாங்க... [இசை]

மயில் ராவணன் : காளியம்மன் கோயிலுக்குக் கொண்டு போய் வைத்துவிட்டு வாருங்கள்... [இசை]

கடகன் : மகராஜா. நானூத்தி நாப்பத் தெட்டு கதவுகளைத் திறந்து, அதற்குள்ளாக... மூலஸ்தானத்தில் வைத்துவிட்டோம்.

மயில் ராவணன் : சரி. கொலையாளிகளை அழைத்து நாங்கள் வெட்ட வேண்டும். பொங்கல்கள் செய்ய வேண்டும். தங்கையை அழைத்து நாங்கள் தண்ணிக்குப் போகும்படியாகச் சொல்ல வேண்டும்.

கடகன் : சரி. புறப்படுங்கள்... புறப்படுங்கள்... [இசை]

அனுமன் : இந்தத் தாமரைப் புஷ்பமானது மலரவேண் டுமே!... அய்யோ! பரமேஸ்வரா! ஜெகதீசா!

அரக்கன் : ஏய்! காவல் உஷார்!... ஏ மாப்ள! (காலெப் புடுச்சி நெலத்ல அடி) ஏ மாப்ள! எங்கேயிருந்து வர்றே! (வர்றாங்க) ஏய்! யாராவது வந்தா நீ பாத்துக்கடா. போய்ட்டு வர்றேன். ஏய்! என்னடா பேசாம இருக்றே? (ஏய்! இருட்டு நேரம் பாவம்!) ஏலே! குரங்கு... ஏலே! எல்லாரும் ஓடிவாடா....

அனுமன் : சரி. பரமேஸ்வரா! ஜெகதீசா! பரந்தாமா! எம்பெருமானே! உங்களுடைய உயிரை நான்

காப்பாத்த வேண்டும். சூரிய பகவானே! இந்த மலர்கள் மலர வேண்டும்... [இசை] வாயு பகவானே!

வாயு பகவான் : என்ன அனுமானே!

அனுமன் : என்னுடைய உத்திரவு இல்லாமல் இந்தத் தாமரைத் தண்டு வழியாக எவனாவது... இந்த பூமியில், பூமிக்கு மேல் வந்துவிட்டால்... பாதாள லங்கைக்கு மேல் வந்துவிட்டால்... யாரையும் விடக்கூடாது.

வாயு பகவான் : நான் பாத்துக்கிறேன்... நீ போய்ட்டு வா... [இசை]

அனுமன் : என்னடா ஆச்சரியமாயிருக்கின்றது? இந்தப் பாதாள உலகத்லேயும்... இந்தப் பாதாள லெங்கையிலயும் குரங்குகள் இருக்குதா? (என்னமோ?) அடக்காவல் பாக்றவன் ஏன் தூங்கிக்கிட்டு இருக்கான்? (என்னமோ எழுப்பிப் பாரு) டேய்! இவனை எழுப்பாமல் போனால் மகாப்பெரிய கேவலம். சரி. இவனை எழுப்பி... இவனுடைய பேர்தான் இருக்குமோ... மச்ச பல்லவன். (அவன்தான், அவன்தான்). மகா... கெட்டிக்காரன் என்று தெரிவித்தான் விபுசனன்! சரி. இவனுடைய கெட்டிக்காரத்தன்மை எவ்வளவு இருக்குன்னு பாக்கணும்? டேய்! டேய்! அடே எந்திரிடா! டேய்!

பபூன் 2 : எந்திரிச்சா ஓம் பீ நாத்தமெடுக்கும்.

அனுமன் : டேய் டேய்! எந்திரிடா.

மச்ச பல்லவன் : [அடிக்கிறான்] டேய்! எஙகெயும் ஓடாதே. நொறுக்கிவிடுவேன். வாடா, சீக்கிரம்... என்ன ஒரு துணிச்சலாக இருக்கும்? நான் படுத்திருக்கும்போது என்னை அடிச்சி எழுப்ப வேண்டும். வாடா இங்கே.

அனுமன் : அய்யய்யோ... நான்தான் கெட்டிக்காரன் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். எனக்கு மேல் கெட்டிக்காரனாக இருக்கிறானே! சரி, இவன் யார் எவரென்று நாங்கள் விசாரித்து, நாங்கள் சண்டைக்குப்போகவேண்டும்.... அய்யா! நீங்கள் யார்? உங்களுடைய தகப்பனுடைய பேர் என்ன? (தாய் தந்தையர் பேர் என்ன?) ஏன் நீங்கள் ஒருவர்தானா? இல்லை... இந்தப் பாதாள உலகத்திலே யாராவது இருக்கிறார்களா?

மச்ச பல்லவன் : ஏய்! சண்டைக்கு வந்தவன் சண்டைக்கு வர வேண்டும். இதெல்லாம் ஏண்டா கேக்ற?

அனுமன் : இதெல்லாம் சொன்னாதான் நான் சண்டைக்கு வருவேன்.

மச்ச பல்லவன் : சண்டைக்கு வருவாயா?

அனுமன் : சொல்லுங்க.

மச்ச பல்லவன் : என்னுடைய தாய் பெயர் மச்ச.. மச்சகேந்தி என்று சொல்வார்கள். நான் மச்சத்தில் பிறந்தவன். என்னுடைய தகப்பன் பெயர் அனுமான். என்னுடைய பாட்டியார் பெயர் வந்து ஆஞ்சனாதேவி. பாட்டன் பேர் வந்து.... வாயு பகவான் என்று சொல்வார்கள். இதாண்டா என் கதை. என் பேர் வந்து... மச்சபல்லவன்டா. வாடா சண்டைக்கு!

அனுமன் : அய்யோ. அனுமாருக்கு இன்னும் கல்யாணமே முடியலயே. (நான் என்ன பாத்துக்கிட்டா இருக்கிறேன்?) எப்படிக் கொழந்தை பிறந்தது?

மச்ச பல்லவன் : ஏண்டா, நான் பாத்துக்கிட்டா இருக்கிறேன்? [அடிக்கிறான்]

அனுமன் : அடிக்க வேண்டாம். அடிக்காமல் சொல்ல வேண்டும்.

மச்ச பல்லவன் : விவரமா சொல்றேன் கேள். ராமராம்... அவரிடத்தில்சேவகம்செய்து கொண்டிருக்கிறாராம். அந்த இராமரிடத்திலிருந்து கணையாழி மோதிரத்தை வாங்கிக் கொண்டு, ஏழு கடல் பாய்ந்து சென்றாராம். அவரிடத்தில்... என்னுடைய தந்தையிடத்தில் விஸ்வரூபம் இருக்கின்றதாம். அந்த விஸ்வரூபத்தை எடுத்துக்கொண்டு, ஏழுகடல் பாய்ந்து போகவேண்டிய சமயத்தில், அவருடைய வேர்வைத் தண்ணியானது சமுத்திரத்தில் விழுந்ததாம். அந்த சமுத்திரத்தில் விழுந்தவுடன் மச்சமென்று சொல்லவேண்டிய மீனானது எடுத்துச் சாப்பிட்டு விட்டது. சாப்பிட்டவுடன் அந்த மச்சத்தில் நான் குழந்தையாக ஜனித்து, நான் பிறந்துவிட்டேன். பிறந்து, தரையில் நான் விளையாடிக் கொண்டிருக்க வேண்டிய சமயத்தில், என்னுடைய பாட்டன் வாயுபகவான் என்னை வளர்த்தார். வளர்த்துக் கொண்டிருக்க வேண்டிய சமயத்தில் இந்த மயில்ராவணன் வேட்டைக்காக வந்தான். வேட்டைக்காக வந்த இடத்தில், என்னைய அழைத்துக்கொண்டு வந்து விட்டார்... அந்த மயில்ராவணன். அவருடைய உப்புந்தண்ணியும் குடித்த நான் வஞ்சகம் செய்ய மாட்டேன். யார்ரா நீ? இப்ப வாடா சண்டைக்கு.

அனுமன் : அய்யய்யோ... நான்தான் அனுமான்.

மச்ச பல்லவன் : ஏண்டா டேய்! வழித்துறையெல்லாம் கேட்டுட்டு... நான்தான் அனுமான்! மரியாதையா வந்த பாதையை உட்டுட்டு ஓடிப்போ.

அனுமன் : அய்யா! என்னுடைய விசுவரூபத்தை நீங்கள் பார்க்க வேண்டுமா?

மச்ச பல்லவன் : உண்மைதான். விசுவரூபத்தைப் பார்க்க வேண்டும்.

அனுமன் : விஸ்வரூபத்தைப் பார். நான்தான் மகனே!

மச்ச பல்லவன் : விசுவரூபத்த எடுத்தா நான் மயங்கிருவேனோ... முடியாது. யார்ரா நீ? சண்டைக்கு வாடா. இல்லேன்னா ஓடிப் போடா.

அனுமன் : அய்யய்யோ! தந்தையே, வாயு பகவானே! வாருங்கள் சீக்கிரம்.

வாயு பகவான் : ஏய் மச்சபல்லவா! இது உன்னுடைய தகப்பன். நீ மனம் நோக அடித்துவிட்டாய். உனக்குக் குடுத்த பெலங்கள்... அனுமானுக்கு இருக்க வேண்டிய பெலங்களை விட ஏராளமான பெலங்கள் கொடுத்தேன். அதையெல்லாம் நான் வாங்கிக் கொண்டேன். மரியாதையாக உன் தகப்பனுடைய காலில் விழுந்து மன்னிப்புக் கேள்.

மச்ச பல்லவன் : ஆ! தந்தையே!... [இசை]

அனுமன் : மகனே மச்சபல்லவா! கவலைப்பட வேண்டாம், இப்பொழுது நாங்கள்... தகப்பனும் மகனுமாக ஆகிவிட்டோம். நான்... நான் உன்னை அடித்துவிட்டேன். இந்தக் கஷ்டங்களை எங்கு போய் நான் தீர்த்து வழிசெய்வேன்? (ஆமா, பாவம்!) இந்தப் பாவத்தை எங்குபோய் நான் தீர்த்து வழிசெய்வேன்?

பபூன் 2 : கம்மாக்கரையிலே போய் தீர்த்திருங்க. (கரைச்சி விட்டிருங்க.) ரொம்பக் கஷ்டம்... யத்தாடி.

மச்ச பல்லவன் : அய்யோ! தந்தை என்று தெரியாமல் உங்களை நான் மனம் நோக அடித்துவிட்டேன். உதைத்து விட்டேன். இந்தப் பாவத்தை நான் எங்கெ கொண்டுபோய் விட்டு விடுவேன்?

பபூன் 2 : என்ட்ட குடுத்திடு. நான் பைக்கட்டுக்குள் போட்டுக்கிருதேன். ரொம்பக் கஷ்டம்டா.

பபூன் 3 : மாப்ள! அந்தப் பத்துப் பைசா.

பபூன் 2 : போடா. ஒக்கா கோழி மகனே.

அனுமன் : சரி. மகனே! ஸ்ரீராமருக்குச் சீரான ஆபத்தாயிருக்கின்றது. பாதையை விட வேண்டும். நான் போக வேண்டும்.

மச்ச பல்லவன் : தந்தையே! அதுதான் முடியாது. அந்த மயில் ராவணனிடத்தில் நான் உப்புந் தண்ணியும் குடித்ததனால் உங்களை நான் துரோகம் செய்ய மாட்டேன். அவனையும் நான் துரோகம் செய்ய மாட்டேன். மகன் வேணுமென்றால், இந்தப் பாதை வழியா ஓடிப்போங்க. (ஓடிப்போங்க) மகன் வேண்டாம், ராமர்தான் பெரிதென்றால் என்னையக் கொன்றுவிட்டு ராமரை நீங்கள் சிறை மீட்கலாம்.

அனுமன் : அப்படியா? எனக்கு மகன் பெரிதில்லை. இராமர்தான் பெரிது. மகனைக் கொன்று... இரண்டாவது... இவனது உயிர்களை வாங்கிக் கொள்ளலாம். டேய்! பாதையை விடடா.

மச்ச பல்லவன் : முடியாது.

அனுமன் : ஏய்! பாதைய விடுடா. டேய்! [அடிக்கிறான்] மயக்கமாக விழுந்துவிட்டான். இந்த இடத்தில் வைத்தால் மயில்ராவணன் வந்து... மயக்கத்தைத் தெளிவித்து, என்னுடன் சண்டைக்கு வரும்படியாகச் செய்வான். இவனை எடுத்து... ஒரு பந்தோபஸ்தான இடத்தில் வைக்கிறேன்... [இசை]

அனுமன் : இதுதான் உத்தேக வனம். இந்த இடத்தில்தான் தண்ணி எடுக்க வருவாங்களாம். சரி. இந்த

எடத்தில் வந்தவொடனே நாலு பக்கம் திசையும்... எனக்கு எந்தப் பக்கம்னு தெரியலையே! சரி. இந்த மரத்திற்கு ஓரமாக நாங்கள் உட்கார்ந்திருப்போம். யாராவது வரமாட்டார்களா? அவர்களைப் பின்தொடர்ந்து போவோம்.

பாடல் : **திரிலோகமும் புகழும் சுந்தர**
வீரதீர சூரன் நான் வந்தேன்
....

மயில் ராவணன் : ஏய்! டேய் மந்திரி யார்!

கடகன் : மகாராஜா!

மயில் ராவணன் : தூரசண்டிகையை அழைத்துவா. போ.

கடகன் : ஏய்! நீ போய் தூரசண்டிகையை அழைச்சுகிட்டுவா.

அக்கினிக் கண்ணன் : அய்யய்யோ. மூக்கு போச்சி... மூக்காய்ச்...

கடகன் : டேய்! மூக்கு பெறவு தருவம்டா. ஒம் மூக்குபோனா நான் என்னடா பண்ணுவேன்? போய்ட்டு வாடா... [இசை]

தூரசண்டிகை: அய்யோ நீலமேகா!

நீலமேகன் : அம்மா! மாமன், என்னை வெட்டாமல் என்னுடைய தகப்பனை வெட்டி விட்டான், சண்டாளன்! நான் அவனுக்கு... நான் எமனாகப் பிறந்துவிட்டேன் இன்று!

தூரசண்டிகை : மகனே! கவலைப்பட வேண்டாம் பாலகா. அய்யோ... இந்த சிறைச்சாலையில் வைத்து அடைத்துவிட்டான். அன்னந்தண்ணி ஆகாரங் கூட குடுக்க மாட்டேங்கிறான்.

அக்கினி கண்ணன் : ஏ தூரசண்டிகை! நீ மட்டும் வா. ஏய்! நீ உள்ள உக்காருடா. ஏ தூரசண்டிகை! மகாராஜா உன்னையக் கூப்பிட்டாரு. (எதுக்கு?)

தூரசண்டிகை : எதற்காக?

அக்கினி கண்ணன் : என்னமோ தண்ணி எடுக்கப் போகணுமாம். (ஆமா) உன்னைய வரச்சொன்னாரு.

தூரசண்டிகை : அப்படியா? ஏனப்பா உன்னுடைய மூக்கு போய்விட்டது. (அது பெரிய ரகசியம்)

அக்கினி கண்ணன் : அய்யோ! நீங்க வெளியெ கேட்காத... பெரிய ரகசியம். (ஆமா) வெளியெ கேட்காத, பெரிய ரகசியம். (ரகசியம்மா... சொல்லக்கூடாது)

தூரசண்டிகை : அய்யோ! நீங்கள் சொல்லத்தான் வேண்டும்.

அக்கினி கண்ணன் : பெறகு சொல்றேன். நீ மொதப் போ... [இசை]

மகாராஜா! தூரசண்டிகையைக் கூட்டிட்டு வந்திட்டேன்.

மயில் ராவணன் : அடியே தூரசண்டிகை!

தூரசண்டிகை : அண்ணா! என்னுடைய கணவரைத்தான் கொன்று விட்டாய். என்னுடைய... என்னுடைய குழந்தையும் விட்டுவிட்டால் நாங்கள் எப்படி யாவது பிழைத்துக் கொள்வோம்.

மயில் ராவணன் : அடி பாதகி! எனக்கு எமனாகப் பெத்திருக்கும்... பெத்து வைத்த சண்டாளியே! பாதகி! மரியாதை யாக இப்போது சென்று நீ தண்ணீரானது எடுத்து வரவேண்டும்.

தூரசண்டிகை : அய்யோ! நான் எங்கு சென்று தண்ணீர் எடுத்து வருவது? என்னுடைய இரண்டு கைகளும் விலங்குகள் போட்டுவிட்டாய். இரண்டு கால் களுக்கும் நீ விலங்குகள் போட்டுவிட்டாய். நான்

எப்படி.... நான் குடத்தில் தண்ணீர் எடுத்து வருவது?

மயில் ராவணன் : தண்ணீர் எப்படியாவது எடுத்து வரவேண்டும். இல்லையென்றால் உன்னையக் கொன்று விடுவேன். [அடிக்கிறான்]

தூரசண்டிகை : அய்யோ, அடிக்க வேண்டாம்.

மயில் ராவணன் : கொண்டுட்டு வாடி. [அடிக்கிறான்]

அக்கினி கண்ணன் : ஏய் ஏய் ஏய்! கொல்லாதடா. டேய்! அடிக்காதடா. டேய்!

தூரசண்டிகை : அய்யோ! இந்தக் கொடுமை செய்ய வேண்டாம்.

மயில் ராவணன் : போ சீக்கிரம்... ஐந்து நிமிஷத்திற்குள்ளாக வரவேண்டும்.

தூரசண்டிகை : அய்யோ! நான் போய் வருகிறேன்.

மயில் ராவணன் : போ என்றால்...

கடகன் : மகாராஜா!

மயில் ராவணன் : டேய்! கொலையாளிகளையெல்லாம் தயார் செய். இராமனை வெட்ட வேண்டும். நேரங்கள ஆகிவிட்டது.

கடகன் : சரி, வாங்க... வாங்க.

அக்கினி கண்ணன் : ஏலே! உங்கள வெட்றதுக்கு நேரம் வந்திருச்சி. (நெருங்கிருச்சி காலம்) உங்கச் சாணியப் பிதுக்க வந்திட்டான் உங்க சித்தப்பன்... கவலைப் படாதே... ம்... நான் போய்ட்டு வரட்டா. (போ... போ...) நூறு மில்லி சாராயம் குடிச்சிட்டு வாரேன். (சாப்பிட்டு வா).

தூரசண்டிகை : வா சீக்கிரம்..., அய்யய்யோ! இந்தக் கொடுமை செய்கிறான் சண்டாளன்.

அக்கினி கண்ணன் : அம்மா அழுகாதே!

தூரசண்டிகை : யாரை வெட்டுவதற்காக? என் மகனை வெட்டவா? இல்லை என்னைய வெட்டவா?

அக்கினி கண்ணன் : ஒண்ணையுமில்ல... ஒம் மகனையுமில்ல... என்னா... அந்த இராவண மகாராஜா இருக்கிறாரில்ல... அந்த இராவண மகாராஜா (ஆமா), அந்த இராவண மகாராஜா என்னமோ சீதையாம் சீதையை, சிறை எடுத்து வந்தாராம். சீதையை, சிறை எடுத்து வந்தவுடனே இராமராம்... அந்த இராமரு குரங்குக் கூட்ட மெல்லாம் கூட்டிக்கிட்டு வந்து, இரவுப் பொழுதா அணையைக் கட்டி, இலங்கைக்கு வந்து... இந்த இராவண மகாராஜா ஆளுகளை எல்லாம் கொன்னுப்புடுச்சாம்... கொன்னுப்பூட் டாராம்... எல்லாம் செத்துப் போனாங்களாம். அங்கிருந்து ஒரு படுவாப் பய இங்கு வந்திட் டான். இங்கு வந்து மகாராஜாகிட்ட சொன்ன வுடனே... இங்கிருந்து மகாராஜா போயி, அந்த இராவண மகாராஜாட்ட சத்தியம் செஞ்சி, விடிவதற்குள்ளாக அந்த இராமனை நான் கொலை செய்றேன், அப்படீன்னு சொல்லிட்டு வந்திட்டாரு. அந்த இராமரையும் தூக்கிட்டு வந்திட்டாரு. இராமரை வெட்றதுக்குத்தான் உன்னை... உன் கையில தண்ணி கொண்டுட்டு வரச் சொல்லியிருக்கிறாரு.

தூரசண்டிகை : அய்ய்யோ! இராமரை நான் கொல்ல வேண்டுமா? (அட, பாக்கியம்!)... உன்னுடைய மூக்கு எதற்காகப் போய்விட்டது? (அதுக்குத் தான்)

அக்கினி கண்ணன் : நான் லட்சுமணரைத் தூக்கிட்டு வரணுமின்னு பெருக்கா வேஷமெடுத்து இந்தப் பூமியத் தொளச்சேன். (பூமியத் தொளச்ச). அந்தக் குரங்கு ஒரே அமுக்கு (ஒரே அமுக்கா அமிக்கி

மூக்குப் பிஞ்சிக்கிருச்சி) மூக்கு பிஞ்சிக்கிருச்சி. மூக்கு போச்சி... மூக்காய்ச் (மூக்காய்ச்)

துாரசண்டிகை : கவலைப்பட வேண்டாம். அய்யோ! அந்த இராமருடைய உயிர்களைக் காப்பாத்த வேணுமே!

அக்கினி கண்ணன் : நானென்ன பண்றது?

துாரசண்டிகை : அந்தக் கூட்டத்தில் யாராவது கெட்டிக்காரர்கள் இல்லையா? (யாரும் வருவாங்க)

அக்கினி கண்ணன் : அனுமார் இருக்கான்.... அனுமாரு (அனுமாரு இருக்காரு)

துாரசண்டிகை : அனுமார்... வேற யாராவது சேர்ந்திருக்கிறார் களா?

அக்கினி கண்ணன் : ம்ம்... பிபிசி... பிபிசினன் (விபுசனன்)... விபுசனன். (ம்ம்... இராவணன் தம்பி விபுசனன்) அவரு சேர்ந்திருக்காரு.

துாரசண்டிகை : அடப்பாவி! அவருக்குக் கூட இவனுடைய வழிதுறைகள் தெரியாதா?... ஒரு கெட்டிக் காரனைப் பார்த்து அனுப்பினால் என்ன?

அக்கினி கண்ணன் : நீ அழுகாமப் போய்ட்டு வா... அழுகாமப் போ... போ...

பாடல் : அய்யய்யோ தெய்வமே,
கண்ணான தெய்வமே! - நான்
ஆதியில பாவியானனே!
அய்யய்யோ தெய்வமே!

துாரசண்டிகை : ஸ்ரீ ராமருடைய பிராணங்களை வாங்குவதற்காக நான் தண்ணீர் எடுத்துச் செல்ல வேண்டுமாம். அய்யோ! என் அண்ணன் மாறுவேடம் கொண்டு, எங்கே இதைக் கேட்டுக் கொண்டிருந்

தாலும் இருப்பான். சரி, நான் தண்ணீரானது எடுத்துக்கொண்டு போகிறேன்.

அனுமன் : ராமரைப் பற்றிப் புகழ்ந்த வண்ணமாய் இருக்கின்றாள். நாங்கள் யார் எவரென்று கேட்க வேண்டும்.

பாடல் : **அஞ்சாதம்மா பயப்படாதே**
அஞ்சாதம்மா பயப்படாதே! - ராமசாமி
தூதன் வந்தேன் நான்
அஞ்சாதம்மா பயப்படாதே!

தாயே! அஞ்சாதே நீ. பயப்படாதே. நீ யார்? எந்த ஊர்? உன்னுடைய பெயர்கள் என்ன?

தூரசண்டிகை : அண்ணா! உன்னுடைய மாறுவேடங்க ளெல்லாம் எனக்குத் தெரியும். மயில்ராவணா! என்னைக் கொன்றுவிட வேண்டாம். நான், தண்ணீரானது எடுத்துக்கொண்டு வருகிறேன். என்னை மன்னித்துவிடு அண்ணா!

அனுமன் : எழுந்திரி அம்மா! உன்னுடைய அண்ணன் என்னையப்போல வேஷமெடுப்பானா? (ஆமா.)

தூரசண்டிகை : என்ன, கேலியா செய்கிறாய்?

அனுமன் : இல்லை. சத்தியமாக ராமர் மேல் ஆணையாக! இந்தப் பூமாதேவி மீது ஆணையாக! நான் அனுமன். சத்தியம். பார்!

தூரசண்டிகை : ஹனுமாரே! எப்படி வந்தீர்கள்?

அனுமன் : நான் இராமருடைய கிருபையினால் வந்து விட்டேன். நீ யார்?

தூரசண்டிகை : என்னுடைய அண்ணன்தான் மயில்ராவணன். எம்பேருதான் தூரசண்டிகை. நான் தண்ணீர் கொண்டுசென்று குடுத்தவுடன் இராமருடைய சிரசை வெட்ட வேண்டுமென்றிருக்கிறான்.

அனுமன் : அடப்பாவி! சண்டாளன். நீ கவலைப்பட வேண்டாம். கால் விலங்கை உடைத்தேன். கைவிலங்குகளை உடைத்து விட்டேன். கவலைப்பட வேண்டாம். நீ குடத்து நெறய தண்ணியெடு. நான் தவளைபோல் வேஷத்தை எடுத்து, உள்ளே உக்காந்துக்கிடுறேன். இதற்கு அடுத்த வனம் என்ன வனம்?

தூரசண்டிகை : அதுதான் துலா இந்திரம். நிறுவையாடிதான் போக வேண்டும். அந்தத் திராசில் இந்தக் குடமானது வைக்கவேண்டும். நான் குடத்துக் குப் பதிலாக நான்... அந்தப் பக்கம் இருக்க வேண்டிய திராசில்... நான் உட்கார வேண்டும். குடமும் திராசும் ஒன்றாக இருந்தால் என்னைய விட்டுவிடுவார்கள். இல்லையென்றால் என்னைய வெட்டிச் சாப்பிட்டு விடுவார்கள்.

அனுமன் : அப்படியா? நீ அங்கெ கொண்டுபோய் மட்டும் நீ குடுக்க வேண்டாம். அவுங்களுடைய கைலயே குடுக்க வேண்டாம். நீ. (ஆமா). கோயிலுக்குப் போகவேண்டிய தண்ணீர், (தண்ணீர்) தொடக்கூடாது அப்படீன்னு சொல்லிப் பார். அத மீறி வந்து தொட்டால், கீழே போட்டு உடைத்துவிடு. உடைத்தவுடன் நான் வண்டுபோல் வேஷமெடுத்து அங்னெ இருக்கிற பயலுகள நான் சட்னி பண்ணிருதேன். (ஆமா)

தூரசண்டிகை : சரி. விரவாகத் தண்ணீரானது எடுக்கிறேன்... [இசை]

அரக்கன் 1 : ஏய்! யார்நீ? எந்த ஊர்?

அரக்கன் 2 : அடடா. நம்ம மகாராஜாவுடைய தங்கை.

அரக்கன் 1 : இந்தாம்மா... யாரைக்கேட்டு இப்படிப் போற? நாங்க போகும்போது... நாங்க நிறுத்தாம உட்டுட்டமே! (ஆமா. தூங்கிக்கிட்டிருந்தீங்க)

தூரசண்டிகை : நீங்களெல்லாம் உறங்கிக் கொண்டிருந்தீர்கள். நான் போய்விட்டேன்.

அரக்கன் 1 : அட, எங்க மேல தப்புதான். (தப்பு, தப்புத் தான்). நாங்க படுத்தது எங்க மேல தப்புத்தான். சரி. அந்தக் குடத்தைத் தூக்கி இந்தத் திராசுல வை. வை தராசில!

தூரசண்டிகை : அய்யோ, இது கோவிலுக்குப் போகவேண்டிய தண்ணீர். தொடக்கூடாதுன்னு என்னுடைய அண்ணனுடைய 'ஆடர்'.

அரக்கன் 2 : ஏய்! அவர்தான் சொல்லியிருக்கிறார், எந்தக் குடமாயிருந்தாலும் நிறுவையாடித்தான் விட வேண்டும். இல்லேன்னா... வெட்டிச் சாப்பிடுங் கடான்னிருக்கார். நேரமாகுது, பங்காளிப் பயலுக வர்ரது மூன்ன நீ வைம்மா. இல்ல உன்னைய வெட்டிச் சாப்பிடணும்.

தூரசண்டிகை : அய்யோ, இது கோவிலுக்குப் போக வேண்டியது.

அரக்கன் 1 : அட வையம்மா. கோயிலென்ன, சாமியென்ன, பூஜையென்ன? வை. [உடைக்கிறாள்] அய் யய்யோ (உடஞ்சி போச்சி, உடஞ்சி போச்சி) அட ஒடச்சிட்டா, அட தூரசண்டிகை ஒடச்சிட்டா. (ஆமா)

அரக்கன் 2 : ஏய்! எப்படியிருந்தாலும் நமக்கு நிறுவை தானடா. பெறக்குடா அத. பெறக்குடா. (திராசுல வை) ஏல மாப்ள! நீ அதப் பெறக்குடா. (ஆமா. திராசுல வை) அந்த ஓட்டை நீ பெறக்கு. இந்த ஓட்டை நான் பெறக்கறேன். (இந்தா வர்ரான் ஒங்க அப்பன்) ஏல! என்னடா இது?

அரக்கன் 1 : ஏல! காளியாத்தா கோவிலுக்குப் போறது... என்ன... காளியம்மா கோவமா வந்திருக்காங்க. அம்மா காளியம்மா! எங்கள மன்னுவைச்சிரு

அம்மா. (ஏ! மன்னிச்சிரு அம்மா). ஏந்தா என்ன மன்னிச்சிரு அம்மா. (தாயே!) தொடாம தொட்டுட்டோம் தாயே! தாயே! கோவப்பட வேண்டாம். ஏலஏல! கும்புடுல. (கும்புடுங்க, கும்புடுங்க).

அரக்கன் 2 : தாயே! கோவப்பட வேண்டாம். அம்மா தாயே! கோவப்பட வேண்டாம் அம்மா... என்னடா இருக்க இருக்கப் பெரிசா வருது. (அதான் ஒங்களப் பொங்கலு வைக்க)

அரக்கன் 1 : என்னடா இது?

பபூன் 2 : உங்க சாணி பிதுக்கப் போவுது.

அரக்கன் 2 : தாயே! என்னைய மன்னிச்சிரு தாயே! மன்னிச்சிரு அம்மா.

அரக்கன் 1 : ஏலே! நெசமா இது கொரங்குதாண்டா. தூரசண்டிகை போய்க் கொரங்கைக் கூட்டிக் கிட்டு வந்திருக்கா. நீ தள்ளிப் போகவேண்டும். தள்ளிப்போ. சண்டை நடக்கப் போவுது.

அரக்கன் 2 : ஏய்! யாரைக் கேட்டுக்கிட்டு வந்தே? என்னன்னு பாத்துக்கிட்ட?

அனுமன் : டேய்! மரியாதையா ஓடிப் போங்க.

அரக்கன் 1 : ஏய்! உன்னையக் கண்டு நாங்க பயப்படணுமா? ஏல ஓடியாடா, பரக்காளிப் பயலுகளா, ஓடியாடா... [இசை]

அனுமன் : தங்கை தூரசண்டிகை!

தூரசண்டிகை : சுவாமி! நான் இப்படியானது யாருக்காவது தெரிந்துவிட்டால், என்னுடைய மகனைக் கொலை செய்திருவார்கள்.

அனுமன் : ஆ! அப்படியா? எங்கேயிருக்கிறான் உன் மகன்?

தூரசண்டிகை : ஜெறசாலையில் இருக்கிறான்.

அனுமன் : அப்படியா? நான் போய் வருகிறேன். இந்தப் பளிங்கு மாமண்டபத்தில் உட்கார்... [இசை] டேய்! வெளிய வாடா.

நீலமேகன் : அய்யோ, எனக்குப் பயமாயிருக்குது.

அனுமன் : வாடா வெளியே!

நீலமேகன் : அய்யோ, எனக்குப் பயமாயிருக்கு. எங்க அம்மா எங்கெ?

அனுமன் : இருக்கிறாள் வா சீக்கிரம்.

நீலமேகன் : முடியாது.

அனுமன் : இந்தச் சின்னப் பயலுடன் நான் பேசிக் கொண்டிருந்தால், நேரங்கள் வீணாகும். வாடா இங்க... [இசை]

தூரசண்டிகை : இப்பொழுதுதான் உங்களை நான் நம்பினேன். அனுமாரே! நீங்கள் எங்களுக்கு ஒரு தெய்வமாக வந்திருக்கிறீர்கள்.

அனுமன் : சரி.

நீலமேகன் : அம்மா! இந்தக் குரங்கு யாரம்மா? (குரங்குன்னு சொல்லாதே!)

தூரசண்டிகை : குரங்குங்காதப்பா. அவர்தான் ஹனுமார்.

நீலமேகன் : ஹனுமாரா? எங்கம்மா போய்க் கூட்டியாந்தே?

தூரசண்டிகை : இல்லை. எங்களுடைய உயிரையெல்லாம் காப்பாத்த வந்திருக்கார்.

நீலமேகன் : அப்படியா... அனுமாரே வணக்கஞ் செஞ்சோம்.

அனுமன் : எந்திரி. உங்களுக்கு ஏதாவது ஆபத்துகள் வந் தால் என்னுடைய பெயர்களைச் சொன்னால், உடனே நான் வந்துவிடுவேன்.

தூரசண்டிகை : அனுமாரே! இப்பொழுது எங்கே செல்கிறீர்கள்?

அனுமன் : இராமரை எங்கே வைத்திருக்கிறான்? காளி கோவில் எங்கே இருக்கின்றது?

தூரசண்டிகை : அதோ தெரிகிறது பாருங்கள், பன்னண்டு கலசம். அதான் காளிகோவில். கோவிலினுடைய கதவுகளைத் திறக்க முடியாதே.

அனுமன் : ஏன்?

தூரசண்டிகை : ஒவ்வொரு கதவுகள் இருபது வண்டி பாரங் களும், முப்பது வண்டி பாரங்களும், எழுபது வல்ல ஏராளமான கதவுகள் சாத்தியிருக் கிறார்கள்.

அனுமன் : ஆ! அப்படியா? எப்படியாவது நான் கதவு களைத் திறந்து என்னுடைய ஸ்ரீராமரைப் பார்க்க வேண்டும். உங்களுக்கு உயிருக்கு ஆபத்து வந்துவிட்டால், 'அனுமாரே!' என்று சத்தங்கள் குடுத்தால் போதும். போய் வருகிறேன்.

நீலமேகன் : அம்மா உயிருக்கு ஆபத்து வந்திரிச்சே! அம்மா! நாங்கள் இப்படி வந்தது என்னுடைய மாமன் பார்த்துக் கொண்டால்... மயில்ராவணன் எங்களைக் கொன்றுவிடுவாரே!

தூரசண்டிகை : கவலைப்பட வேண்டாம்... அனுமார்!

அனுமன் : என்ன?

தூரசண்டிகை : இல்லை... மகன் கேட்டான்... அதற்கு நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

அனுமன் : உயிருக்கு ஆபத்துன்னா... என் பேரைச் சொல்லு.

நீலமேகன் : அம்மா! இந்த அனுமாரு... (சரியாப்போச்சி)

அனுமன் : என்னப்பா?

நீலமேகன் : இல்லை. உங்களச் சொல்லல. இங்க பேசிக்கிட்டிருக்கோம்.

அனுமன் : உங்களுக்கு.... உயிருக்கு ஆபத்து வந்தா என் பேரைச் சொல்லுங்க.

தூரசண்டிகை : மகனே! அவருடைய பெயர் அனுமாருன்னு சொல்ல வேண்டாம்.

அனுமன் : என்ன?

தூரசண்டிகை : கோயிலுக்குப் போகாத முன்னால... ஆச்சே... போய்வாருங்கள். இங்கே பேசிக் கொண்டிருக் கிறோம்.

நீலமேகன் : அய்யோ...

தூரசண்டிகை : பேசாதே!

நீலமேகன் : அனுமாரேன்னு சொல்லிவிட்டால்... {சிரிப்பு}

அனுமன் : என்னப்பா அது. என்னையக் கோவிலுக்குப் போகவுடமாட்டீங்களா?

தூரசண்டிகை : அய்யோ... இனும சொல்ல மாட்டோம். வாப்பா! இனிமேல் அனுமார் வந்திருவார். {சிரிப்பு}

அனுமன் : என்னப்பா?

தூரசண்டிகை : ஒண்ணுமில்லை. நீங்கள் போங்கள்... [இசை]

அனுமன் : காளியம்மா! தேவி! இராமருடைய துரோகத்தை நீ ஏத்துக்கொள்ள வேண்டாம். அவனுடைய பலியை நீ ஏத்துக்கொள்ள வேண்டாம். இந்த மயில்ராவணனுடைய பலியை நான் குடுக் கிறேன். ஸ்ரீராமருடைய பெட்டியைக் குடுத்து

விடு... சீக்கிரம்... என்னுடைய கோபத்தைக் கிளற வேண்டாம். மரியாதையாகக் குடுக்கி றாய்.... சரி, எனக்கு மேல நீ தெய்வமா? மரியாதையாக இப்பொழுது நீ பெட்டியைக் குடுக்கிறாயா?... உன்னுடைய அரண்மனை யெல்லாம்... உன்னுடைய கோயிலெல்லாம் இப்பொழுது இடித்துத் தள்ளவேண்டுமா? ஆ! உனக்குக் காதுகள் மந்தமாகி விட்டதா? இதோ பார்... [இசை]

காளி : அய்யய்யோ... அனுமார்!

அனுமன் : ஏ! காளிகாதேவி! உனக்கு எவ்வளவு ஒரு நெஞ்சு ஊக்கங்களாயிருக்கும், ஸ்ரீராமருடைய உயிர்களை வாங்க வேண்டுமென்று!

காளி : இல்லை. அந்த மயில்ராவணன்தான் வேண்டு மென்று வைத்திருக்கிறான்.

அனுமன் : ஏய்! இனிமேல் நான் அழைத்தால்தான் வரவேண்டும். எனக்கு வரங்களைக் குடு. உன்னுடைய கைப்பட அந்த மயில்ராவணன் செத்துப் போயிடுவான். சரி, நீ போ... என் மூஞ்சில முழிக்காதே. நான் கூப்பிடும்போது வரணும்... போ... ஏய்! ராமருடைய பெட்டி எங்கேயிருக்கு?

பாடல் : ஜெயகிருஷ்ணா முகுந்தா முராரே
ஜெயகிருஷ்ணா முகுந்தா முராரே

ராமரைக் கொன்றுவிட்டானோ? எங்கே? இந்தப் பெட்டிதானே?... வேற பெட்டியோ?... தெரியவில்லை. நான் திறந்து பார்க்கிறேன்... ராமா! வணக்கம்.

இராமர் : அனுமானே!

அனுமன் : சுவாமி!

இராமர் : நாங்கள் இருந்த இடம் யாது? இப்போது இருக்கவேண்டிய இடங்கள் வேறயாக இருக்கின்றதே!

அனுமன் : உண்மைதான் சுவாமி!... ஆ! படுத்துவிட்டார். மாயப்பொடிகளைத் தூவி விட்டான் சண்டாளன். சரி, இந்தப் பெட்டியைக் கொண்டுபோய் நான்.... பூமாதேவியிடத்தில் கொண்டுபோய் வைத்துவிடுகிறேன்.

பாடல் : ஜெய கிருஷ்ணா முகுந்தா முராரே
ஜெய கிருஷ்ணா முகுந்தா முராரே

மயில்
ராவணன் : ஏய்!

கடகன் : என்ன மகாராஜா?

அக்கினிக்
கண்ணன் : என்ன மகாராஜா?

மயில் இராவணன் : நீ சென்று அந்தத் தூரசண்டிகையைச் சீக்கிரம் அழைத்து வா... [இசை]

அக்கினிக் கண்ணன் : தூரசண்டிகை! என்னம்மா... ஜெறசாலைய விட்டு இங்க வந்து உக்காந்திருக்கீங்க. என்னன்னு தெரியலையே?

நீலமேகன் : அம்மா! அந்த அனுமாரைக் காண்கவில்லையே... இந்த நேரத்தில் அந்த அனுமானைக் காணமே! (இந்தா வர்ரான்)

அக்கினிக் கண்ணன் : அய்யோ... குரங்கு! இந்தக் குரங்குதான் மூக்க மிதிச்ச குரங்கு... இந்தக் கொரங்குதான் மூக்க மிதிச்சக் கொரங்கு.

அனுமன் : டேய்! இங்க வாடா!

தூரசண்டிகை : அனுமாரே! இவன்தான்... நல்ல மனிதன்... எங்களுடைய உயிர்களைக் காப்பாத்தினவன்.

அனுமன் : அப்படிப்பட்ட மனுஷங்கதான் வேணும். ஏய்! நீ போய் மயில்ராவணனைச் சண்டைக்கு வரும்படியாகச் சொல்லு.

அக்கினிக் கண்ணன் : அய்யோ... நான் போய்ச் சொன்னா ஒதச்சிருவான்.

அனுமன் : போடா சீக்கிரம்.

அக்கினிக் கண்ணன் : சரி ஆகட்டும் போறேன்.

நீலமேகன் : அனுமாரே!

அனுமன் : சரி, வாங்க, சீக்கிரம் போயி உக்காருவோம்... [இசை]

மயில் ராவணன் : ஏய்! அட... இந்த அக்கினிக்கண்ணன் போனவன் ஒரே போக்காப் போய்ட்டான். கடகா! நீ சென்று அந்த தூரசண்டிகையைத் தலைமயிரைப் பிடித்துச் சுழற்றி இழுத்துக்கொண்டு வா.

கடகன் : டேய்! அட சோம்பேறி புடிச்ச பயலே! எங்கடா தூர்சண்டிகை?

அக்கினிக் கண்ணன் : அட போடா. தூரசண்டிகையும் நீலமேகனும் அந்தப் பளிங்கிமா மண்டபத்ல கால நீட்டி உக்காந்திருக்காங்க.

கடகன் : ஆ! என்ன ஒரு நெஞ்சு ஊக்கம்?

அக்கினிக் கண்ணன் : நீ அங்க போயி ஒன் ஊக்கத்தக் காமி. உன் மூக்குகுள்ள விரலை உடுவாங்க. போடாப்பா... போடாப்பா... கொஞ்சம் போல மருந்து குடுப்பாங்க. படுவாப் பயா... இவன் நல்லா உதச்சி... பட்டுக்கிட்டுத்தான் வரப்போறான்.

பபூன் 2 : உங்களுக்கு என்ன வேணும்? கொஞ்சம் போல மருந்து வேணுமா?... புர்ர்ர் {சிரிப்பு} படுவாப் பய, இவன் போறானாம்!

பபூன் 3 : மாப்ள பத்து பைசா குடு [அடிக்கிறான்]... (இசை)

கடகன் : உன்னுடைய... டேய்! அடி...ஏ பெண்ணே! உனக்கு என்ன ஒரு ஊக்கமாக இருக்கும்? என்ன ஒரு ஆணவமாக இருக்கும்? ஜெறசாலையை உடைத்து உன்னுடைய மகனை அழைத்து வந்து பளிங்குமா மண்டபத்தில உக்காந்திருக் கிறாயே, உனக்கு எவ்வளவு ஒரு ஆணவமாக இருக்கும்? அடி பெண்ணே! மரியாதையாகப் பெறப்படு.

தூரசண்டிகை : அடப்பாவி! தங்கையை இந்தமாதிரி வார்த்தை சொல்லலாமா?

கடகன் : ஏய்! எங்கே தங்கே என்று பேசிக் கொண்டி ருக்கிறாய்?

நீலமேகன் : அடே என்னடா வார்த்தை சொல்லிக் கொண்டி ருக்கிறாய்? உன்னுடைய மகாராஜாவை என்ன சொல்வாய்?

கடகன் : மகாராஜா என்று சொல்வேன்.

நீலமேகன் : மகாராஜாவுடைய தங்கையை...?

கடகன் : வாடி.... போடி...

நீலமேகன் : அடக் கிறுக்குப் பயலே! என்ன வார்த்தை உளறிக் கொண்டிருக்கிறாய்?... டேய்! ஓடிப்போ [அடிக்கிறான்]

கடகன் : அட சின்னப் பயலே! [அடிக்கிறான்] (என்ன மாதிரி அடிக்கிறான் பாருடா) டேய்! நில்லு. கட்டு... கட்டு... கட்டு (அனுமாரே!) கட்டுடா சீக்கிரம் (அனுமாரேன்னு சொல்லு)... இனும நீங்க தப்பிக்க முடியாது... போடி... (அனுமாரே!)

நீலமேகன் : அனிமானே!... அனிமானே!... (அனுமாரே!) அனிமானே!... அனிமானே!... (அனுமாரேன்னு சொல்லு) அய்யோ... அனுமாரே! ஆ!

அனுமன் : இவ்வளவு நேரம் ஏன் என்டைய பெயர்கள் மறந்துவிட்டீர்கள்?

தூரசண்டிகை : அய்யோ... இவன்தான் ரொம்பக் கொடிய அரக்கன். இவனைக் கொன்று விடுங்கள். (ம்ம்... பூஜை போடுங்க)

கடகன் : ஏய்! குரங்கே! உனக்கு எவ்வளவு ஒரு நெஞ்சூக்கமாக இருக்கும்? நான் யாரென்று உனக்குத் தெரியுமா? என்னுடைய பெலங்கள் தெரியுமா? (தெரியாது)

அனுமன் : அட திருட்டுப் பயலே! அட கருவாடு களவாணிப் பயலே! மரியாதையாக அவர்கள் இரண்டு பேர்களுடைய காலில் விழுந்து மன்னிப்புக் கேளு.

கடகன் : ஆ! மன்னிப்பு நான் கேட்பதா?

அனுமன் : [அடிக்கிறான்] ஏய்! இனிமேல் மயில்ராவணன் சண்டைக்கு வருவானா?

நீலமேகன் : இனிமேல் சீக்கிரமா வந்திடுவான்.

அனுமன் : வரட்டும்.

அக்கினிக் கண்ணன் : அடப்பாவி! அட என்னப்பா படுத்திட்டெ. (சாப்பாடு சாப்பிட்டுப் படுத்திட்டான்) ம்ம்... அவன் படுத்திட்டான். நீ எங்க போவ? (மகாராஜா கிட்ட போவான்) அட, தூக்கிட்டுப் போப்பா.

மயில் ராவணன் : என்ன இது? போன இரண்டு பயல்களையும் காணவில்லையே!

அக்கினிக் கண்ணன் : மகாராஜா பெரிய கஷ்டம் வந்துவிட்டது.

மயில் ராவணன் : என்னடா கஷ்டம்? ('சப்தம் இல்லாமலிருங் களேன்') என்னா கஷ்டங்கள்?

அக்கினிக் கண்ணன் : நம்ம... வால்கோட்ட கட்டியிருந்திச்சில்ல அனு மானு (அனுமாரு)

மயில் ராவணன் : அனுமார் (அனுமான்)

அக்கினிக் கண்ணன் : அந்தக் கொரங்கு வந்திடுச்சி. வந்து... நீலமேகன், தூரசண்டிகை, அந்த அனுமாருக் கொரங்கு மூனுபேரும் வந்து பளிங்குமா மண்டபத்ல... பளிங்குமா மண்டபத்ல உக்காந்திருக்காங்க. அத என்னான்னு கேக்கப் போன எடத்ல எனக்கொரு அற விழுந்துச்சி, இவன்... கடகன்போய்க் கடகடன்னான்... கடஞ்சி உட்டிருச்சி.

மயில் ராவணன் : ஆகா. மோசங்கள் நெருங்கிவிட்டன. நான் விர வாகச் சென்று... அந்த இராமனுடைய பெட்டியை எடுத்து வேற இடத்தில் வைத்துவிடுகிறேன்.

கடகன் & அக்கினிக் கண்ணன் : சீக்கிரம் போங்க... சீக்கிரம் போங்க. (போங்க... போங்க)

அக்கினிக் கண்ணன் : அடப் பாவிப் பயலே!... பாவிப்பயலே! ஏய் ஏய்! உயிருக்கு ஆபத்து வந்திருச்சி. வா... போய்ச் சொல்லிடுவோம்... அனுமாரு! ஏ அனுமாரு!.... அனுமாரு

அனுமன் : என்னடா?

அக்கினிக் கண்ணன் : அய்யா! உயிருக்கு ஆபத்து.

அனுமன் : என்னடா ஆபத்து?

அக்கினிக் கண்ணன் : அந்தக் காளியம்மன் கோயில்ல இருக்ற... இராமுரு... இராமுரு பெட்டி... (இராமர் பெட்டி) அந்த இராமுரு பெட்டியைத் தூக்கிட்டுப் போறான்.

அனுமன் : அப்படியா? நான் போய் வருகிறேன். இவர்களை ஜாக்கிரதையாப் பாத்துக்க.

அக்கினிக் கண்ணன் : நான் பாத்துக்கறேன். நீங்க போய்ட்டு வாங்க... [இசை]

மயில் ராவணன் : என்னுடைய வாக்குகள் கொடுத்தேன்... அந்த இராமனைக் கொலை செய்வேன் என்று!... தாய்... அந்தக் காளியம்மன்... தாய்க்கு கோபம் வந்தது. ஏராளமாக வந்து... கோட்டையை இடித்துத் தவிடுபொடியாக்கி விட்டாளே... தாயே அம்மா! இப்பொழுது நான் கொலை செய்கிறேன் தாயே. அம்மா!

அனுமன் : ஆ! இன்னும் மயில்ராவணன் வரவில்லை. காளியைப்போல் வேஷங்கள் எடுக்கிறேன்... மயில்ராவணா!

மயில் ராவணன் : என்ன தாயே! வணக்கம் செய்தேன்.

அனுமன் : டேய்! நீ செய்துவந்த... நீ சொன்ன வார்த்தைகள் என்னாகிவிட்டது? அந்த இராமனை எடு. கண்ணுக்கு முன்பதாகக் கொலை செய்.

மயில் ராவணன் : கொலை செய்கிறேன்.

அனுமன் : பலி செய்.

மயில் ராவணன் : பலி செய்கிறேன்... செய்கிறேன்... (போ... போ)

அனுமன் : திருட்டுப் பயல் போயிருக்கிறான். (வரட்டும்) வரட்டும்.

மயில் ராவணன் : தாயே! பெட்டி காண்கவில்லையே.... அம்மா!

அனுமன் : அட திருட்டுப் பயலே! கொஞ்சம் கண்ணைத் தெறந்து பார்.

மயில்
ராவணன் : ஆ! குரங்கு... [இசை]

பாடல் : **அடித்தானே ஹனுமான் - மயில் வீரனை**
உதைத்தானே ஹனுமான்.
அவனை இவன் அடிக்க
இவனை அவன் அடிக்க
இருபேர் கண்களும் பொறிமேல் பொறிய
(அடித்தானே)

அனுமன் : அவன் சண்டை செய்வதுபோல் செய்து கொண்டிருந்தான். எந்தப் பக்கமோ மறைந்து ஓடிவிட்டானே! சரி... நான் தேடிப் பார்க்கிறேன்.

மயில் ராவணன் : ஆகா. இந்தக் குரங்கானது மகாக் கெட்டிக்காரக் குரங்காயிருக்குது. எப்படியாவது என்னுடைய தங்கையையும் என்னுடைய தங்கை மகனையும் கொன்றுவிட வேண்டும். (ஆ! ஆ! ஓடு)... [இசை] ஏய் தங்கையே! உன்னை நான் தண்ணிக்காக அனுப்பப்போக... வேறு... அந்த... இராமனுடைய பாளையத்திலிருந்த அந்த அனுமார்க் குரங்கை அழைத்து வந்து விட்டாயோ? எங்கே உன்னுடைய வீரத்தைப் பார்ப்போம்? உன்னுடைய தலையை நான் இப்ப வெட்டாமல் போவதில்லை.

தூரசண்டிகை : அய்யய்யோ... உயிர்கள் போகுதே. அனுமாரே!

அனுமன் : ஏய் திருட்டுப் பயலே! டேய்! எங்கதாண்டா தப்பிச்சிப் போவ? நீ போகலாம்.

தூரசண்டிகை : அனுமாரே!

அனுமன் : சண்டை செய்வதுபோல் செய்து கொண்டிருந் தான். ஒரு மானாக வந்து... அந்த மானைப் பார்த்து நான் ஓடிப் போய்விட்டேன்... இந்தத் திருட்டுப் பயலாகத்தான் இருக்குமோ?

தூரசண்டிகை : இவன்தான். எந்த வேஷங்கள் எடுத்தாலும் உங்களுடைய கண்ணுக்கு என்ன தெரியுதோ... இவன்தான் மயில்ராவணன்.

அனுமன் : டேய்! இனிம நீ எங்கயும் ஓட முடியாதுடா [அடிக்கிறான்]... [இசை] ஆ! அட சண்டை செய்ததுபோல செய்து கொண்டிருந்தான்... எடுத்த வேஷங்களையெல்லாம் நான் மாறிமாறி அடித்துக் கொண்டிருந்தேன்... பெரிய நாகப்பாபம்பு போல் வேஷம் எடுத்தான். (அவன்தான்) எங்க ஓடுதுன்னு பார்ப்போம்... [இசை]

மயில் ராவணன் : தங்கையே! அந்தக் குரங்கு என்னையக் கண்டு பிடிக்க முடியுமா? (முடியாது) ஒன்னைய இந்தத் தபா... ஒன்னையக் கொல்லாமல் விடுவதில்லை.

தூரசண்டிகை : அய்யோ அனுமாரே!

அனுமன் : திருட்டுப் பயலே! எங்கடா ஓடுவாய்? நீ போகலாம்... போகலாம்... [அடிக்கிறான்] [இசை]

மயில் ராவணன் : ஓம் நமச்சுவாயா! நாராயணா! ஓம் நமச்சுவாயா! இளிச்சவாயா!

(மாறுவேடம்)

அனுமன் : ஓ, சுவாமி! அடியார்களே! இந்தப் பக்கம் மயில்ராவணன் ஓடுனதைப் பார்த்தீர்களா?

மயில் ராவணன் : அடப்பாவி! இப்பத்தானே இந்தப் பக்கம் ஒருத்தன் ஓடுறான்.

அனுமன் : ஆ! அப்படியா?

மயில் ராவணன் : அடே! குரங்கே! என்னை யாரென்று பார்த்தாய்? அனுமாரே என்று அழைத்தால் உடனே வருகின்றானே!

அனுமன் : யாரழைத்தது?

மயில் ராவணன் : ஓம் நமச்சுவாயா! நமச்சுவாயா! நமச்சுவாயா!

அனுமன் : ஓய்! யாரய்யா அழைத்தது? மயில்ராவணன் வந்தானா?

மயில் ராவணன் : அடப்பாவி! இப்பத்தானே இங்கிருந்து ஓடுறான்... ஆகா! இந்தக் குரங்கானது என்னவொரு கெட்டிக்காரக் குரங்காக இருக்கின்றது. 'அனுமாரே' என்று...

அனுமன் : ....

மயில் ராவணன் : ஓம் நமச்சுவாயா! நமச்சுவாயா! நமச்சுவாயா! (இவன்தான் விடாதே!)

அனுமன் : இந்தத் திருட்டுப்பயல்தான் என்னையக் கெடுத்துக் கொண்டிருக்கிறான். (நொறுக்கு.... நொறுக்கு) இவன் தாடியப் புடிச்சி 'பீ'யில அமுக்கி, (அமுக்கு) டேய்! உண்மையாச் சொல்லுடா.

மயில் ராவண : டேய்! உன்னைய நான் சவட்டி விடுவேன். கண்ணக் கெடுத்து விடுவேன். உன்னையக் கண்ணைக் கெடுத்துப் புடுவேன். [அடிக்கிறான்]... {இசை]

அனுமன் : இறந்துவிட்டான் சண்டாளன். துரோகி! மாண்டுவிட்டான்... வருகிறேன்.

மயில் ராவணன் : டேய் குரங்கே! என்னை யாரென்று பார்த்துக் கொண்டாய்? டேய்! இதோ பார்.

அனுமன் : எங்கடா இருக்கான்? (இங்கதான் இருக்கான்) டேய்! திருட்டுப் பயலே! (உள்ள பார்), அட, கருவாடு களவாணிப் பயலே! எங்கடாயிருக்க?

மயில் ராவணன் : நான் இங்கதாண்டா இருக்கே

அனுமன் : இதுக்குள்ள இருப்பானா
தான் இருக்கான், தூக்கி
போயிட்டானே! தன

மயில் ராவணன் : டேய்! இங்கதாண்டா இருக்கிறேன். அட குரங்கே!

அனுமன் : என்னடா? (அவன்தான்) தலை பேசுகிறது. டேய்! யார்ரா நீ? (நொறுக்கு) நான்தான் தெரியலையாடா. அடத் திருட்டுப் பயலே! உள்ள நுழஞ்சி உக்கார்ந்துட்டு யாரடா குரங்குன்னு கேக்றியா? [அடிக்கிறான்]... [இசை] இனிம இவன விட்டுவிட்டால் என்னால சண்டை செய்ய முடியாது. (ஆமா) இவன இழுத்துக்கிட்டுப் போகணும்... [இசை] ஏய்! இவனுடைய உயிர் எங்கேயிருக்குது? உண்மையைச் சொல். இவனால... என்னால இனிமே சண்டை செய்ய முடியாது. அடேயப்பா! என்னென்ன வேஷங்கள் எடுக்கிறான்.

தூரசண்டிகை : அனுமானே! இவனுடைய உயிர்கள்... ஏழுகடல் நடுத்தீவில் வித்தேசமலை என்று ஒரு மலையானது இருக்கின்றது. அந்த மலையில் மூன்று பொந்துகள் போகும். அந்த மூன்று பொந்தில் வண்டுகள் இருக்கின்றன. அந்த மூன்று வண்டைப் பிடித்து நசுக்கினால் இவனுடைய உயிர்கள் அபாயமாகப் போகும்.

மயில் ராவணன் : அய்யய்யோ தங்கையே! நீ சொல்லாதே தங்கா. உன் கால்ல விழுந்து மன்னிப்புக் கேட்கிறேன். [அடிக்கிறான்]

பபூன் 2 : ஏன்ட்டாப்பா... ஏன்டாப்பா... இப்ப சாணி பிதுங்குதாப்பா...

அனுமன் : சரி, நான் போய்வருகிறேன். இவனை விட்டுட்டுப் போகட்டா.

தூரசண்டிகை : வேண்டாம். இங்கு விட்டுச் சென்றால் என்னை வெட்டிவிடுவான்.

அனுமன் : சரி. நான் கூட்டிட்டே போறேன்... [இசை]

பாவையாட்டி : 'இவனுடைய நெஞ்சிலே ஒரு கால் வைத்துக்கொண்டு, அனுமார் தன்னுடைய வாலினால் அந்த மலையைக் குடைந்தார். குடைந்தவுடன் அந்த வண்டுகள் இதோ ஒன்று ஒன்றாக வருவதைப் பாருங்கள். ஒண்ணு... இரண்டு... மூணு (நீ ரெண்டப் புடிச்சிக்க)

மயில் ராவணன் : அய்யய்யோ அனுமாரே! (அனுமாரே!) என்னால் எந்திரிக்க முடியவில்லை. அந்த உயிர் வண்டை விட்டுவிடுங்கள். என்னை உயிர் பிழைக்க விடுங்கள் அனுமாரே!

அனுமன் : டேய்! உன்னை... உயிருக்குயிராக இருக் காளே.... காளிக்காதேவி, அங்க வந்து பேசு.

மயில் ராவணன் : அய்யோ அனுமாரே!... [இசை] அய்யய்யோ அனுமாரே! அனுமாரே!

அனுமன் : ஏய்! உன்னுடைய உயிருக்குயிராக இருக் கிறாளே காளிக்காதேவி, இப்போது அவளை அழைத்துப் பார்ரா. அழைத்துப் பார் சீக்கிரம்.

மயில் ராவணன் : அய்யோ காளிக்காதேவி! இந்தக் குரங்கு என்னு டைய உயிரை வாங்குதே. காளிக்காதேவி! இந்த நேரத்தில் வந்து அந்தக் குரங்கைக் கொல்ல வேண்டாமா?

அனுமன் : டேய்! நீ அழைத்தபடி வரவில்லை. நான் அழைக்கிறேன். வருகுதான்னு பாக்கிறாயா?... ஏய்! ஏய் காளிக்காதேவி! வா சீக்கிரம்... வந்திட்டியா? என்னமோ உன்னுடைய அரசன் கேட்கிறான்... என்னன்னு கேள்.

மயில் ராவணன் : தாயே! கொஞ்சம் உத்தரவு கொடுங்கள். இந்தக் குரங்கை நான் வெட்டிப் போட்டு விடுகிறேன்.

காளி : அடப்பாவி! நான் முன்பதாகவே தெரிவித்தேன் அந்த ராமருடைய பொல்லாப்பு வேண்டாமென்று! நீ கெடுத்துவிட்டாய். நீ எப்படின்னாலும் அந்தக்

குரங்கு... அந்த அனுமாருடைய கைப்பட மாண்டு மடிய வேண்டும். அப்பொழுதுதான் நன்மை.

மயில் ராவணன் : ஆ! தாய் எனக்கு உத்தரவு கொடுத்துவிட்டாள், குரங்கைக் கொல்லென்று! வெட்டென்று! அடே குரங்கே! நீ என்னை என்ன செய்துவிடுவாய்? உன்னைய நான் என்ன செய்வேன்...?... அய்யோ நசுக்காதே! நசுக்காதே! அந்த வண்டைப் புடிச்சி நசுக்காதே.

அனுமன் : ஏய்! உன்னுடைய உருட்டல் புரட்டலை இனிமேல் காமிக்காதே! யாரங்கே? தூரசண்டிகை, நீலமேகன் எல்லோரும் வாருங்கள் இங்கே! உன்னுடைய மாமனுடைய உயிர் போக வேண்டிய போக்கைப் பார். டேய்! ராமருடைய பழியை வாங்க வேணுமின்னு நினைத்தாய். நீ காளிக்காதேவி! இதோ உன்னுடைய மயில் ராவணனுடைய உயிர்களை வாங்கிக் கொள். இதோ... வாங்கிக் கொள்... [இசை]

பாவையாட்டி : அனுமார் கைப்பட மாயையில் சிறந்த மயில் ராவணன் இதோ மரணமாகச் சென்றானே! மயில்ராவணன் இறந்தான்'.*

நீலமேகன் : அம்மா! மாமனைத் தூக்கிட்டுப் போயி, நாங்கள் மயானக் கரையில் வைத்துத் தகனம் செய் வோம். அனுமானே! மயானக்கரையில் வைத்து நாங்கள் அவரைத் தகனம் செய்துவிட்டோம்.

அனுமன் : சரி. உன்னுடைய மாமன் மகள் இருக்கிறார்கள் இல்லையா? அவர்களை அழைத்துவா... [இசை]

மயில்ராவணன் மகள் : ஜோரா, என்னைத் தள்ளிவிடு.

★ பதிவு நாடா மாற்றத்தினால் ஏற்பட்ட சில நிமிட இடைவெளி.

நீலமேகன் : இந்தா, என் மாமன் மகளே! இல்லேன்னா அனுமார் கைல சொல்லிப் போடுவேன்.

மயில்ராவணன்
மகள் : அய்யய்யோ! நான் யார் மூஞ்சிலும் முழிக்காமல் மூலை வீட்ல உக்காந்திருந்தேனே... இப்பக் கையைப் புடுச்சி இழுத்திட்டு வந்திட்டாங்களே!

அனுமன் : மரியாதையாக நீலமேகனுடைய பக்கத்தில் உட்கார். உங்கள் இரண்டு பேர்களுக்கும் திருமணம். டேய்! கட்ரா தாலிய! மகனே! மகனே மச்சபல்லவா! வா இங்கே! ஏ நீலமேகா! உன்னுடைய மூக்குகள் நல்லாயில்ல. 'ராமாராமா' என்று தோத்திரம் சொல்.

நீலமேகன் : ராமா ராமா! ராமா ராமா!

அனுமன் : ஏய்! தாலியைக் கட்டு. தாலியைக் கட்டு சீக்கிரம். கட்டிவிட்டாயா? இந்த அரசாங்கமெல்லாம்... பாதாள லங்கையை உன்னுடைய கையில் கொடுத்தேன். நீ இனிமேல் அரசாங்கம் செய்ய வேண்டும். உன்னுடைய மாமன் செய்துவந்த ஒரு அட்டகாசங்கள் இனிமேல் செய்யக் கூடாது. ஜாக்கிரதை! உனக்கு மந்திரி... இந்த நீலமேகன். நீலமேகா! உனக்கு மந்திரியாக இந்த மச்சபல்லவனை அறிவிக்கிறேன். ஏ காளிக்காதேவி!

காளி : அனுமானே!

அனுமன் : அந்த மயில்ராவணனை நீ எவ்வளவு (எப்படி) பாதுகாத்த வண்ணமாக இருந்தயோ, அதுபோல் இனி... நீலமேகன் அறியாத பாலகன், தெரியாத சிறுவன்... இவனைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

காளி : நானிருக்கிறேன், போய்வருகிறேன்.

அனுமன் : எல்லோரும் இருங்கள்... போய்வருகிறேன்... [இசை]

பாடல் : **கொண்டு வந்தாரே ஹனுமான்**
பகவான் பெட்டியைக்
கொண்டு வந்தாரே ஹனுமான்
எல்லோரையும் காத்திட
ஸ்ரீராமமூர்த்தியைக் கொண்டு வந்தாரே ஹனுமான்
....

ஆ! பூமாதேவி! அந்த இராமருடைய பெட்டியைக் கொடு, நேரமாகிவிட்டது. சரி. நேரங்கள் ஆகிவிட்டது. சூரிய பகவான் வர வேண்டிய நேரங்களாகிவிட்டது. நான் கொண்டுபோகிறேன்.... [இசை]

பூமாதேவி : சீக்கிரமாகக் கொண்டுபோ. அங்கே ராமருடைய படைகள் எல்லாரும் உயிருக்கு ஆபத்தாகும். போ சீக்கிரம்.

இராமர் படைகள் : அனுமார் போனவரைக் காண்கவில்லையே! அய்யோ பரமேஸ்வரா! ராமா!

பாடல் : **நாராயணா நாராயணா**
....

அனுமன் : ஆ! இதோ இராமருடைய பெட்டியைக் கொண்டு வந்து விட்டேன். ஆ! ராமர் வந்துவிட்டார்... ராமர் இன்னும் படுத்திருக்கிறாரா ஜாம்புகரே?

சாம்புகர் : என்ன? இராமரு இன்னும் படுத்திருக்காரா? எங்க... கதவத் தெறந்து பாப்போம்.

இராமர் : என்ன... நான் நித்திரை செய்யப் போகும்போது வானரங்களெல்லாம்... எல்லா வானரங்களெல் லாம் சந்தோஷமாக இருந்தார்களே! இப்போ ஏன் அழுத வண்ணமாக இருக்கிறார்களே? உடம்பெல்லாம் சோர்ந்துபோய் இருக்கின்றதே!

என்ன காரணமென்று தெரியவில்லையே? யாரங்கே? விபூஷணா! வா இங்கே சீக்கிரம்.

விபீடணன் : சுவாமி!

இராமர் : என்ன காரணங்கள்?

விபீடணன் : வேறொன்றுமில்லை. என்னுடைய அண்ணன் எத்தனையோ தூதாக ஆட்களை அனுப்பி... பாதாள லங்கையில் இருக்க வேண்டிய மயில் ராவணனை அழைத்து வந்து... சத்தியங்கள் வாங்கிக் கொண்டானாம். மாகையில் சிறந்த மயில்ராவணன் மகாக் கெட்டிக்காரன். அவன் சத்தியங்கள் எப்படியோ செய்துவிட்டான். எப்படியென்றால் உங்களை 'இன்று விடிவதற்குள்ளாக.... உங்களுடைய தலையை நான் வாங்குவேன்' என்று சத்தியம் செய்து, உங்களைப் பிடிப்பதற்கான தந்திரம் செய்து விட்டான். அந்த நேரத்தில் அனுமான் வால் கோட்டை செய்து, வால்க்கோட்டைக்குள்ளாக உங்களைப் பாதுகாத்த வண்ணமாக வைத்திருந் தார். அந்த மயில்ராவணன் என்னையப்போல் வேஷத்தை எடுத்து உங்களச் சிறையெடுத்துக் கொண்டுபோய்விட்டான். அனுமன், பின்ப தாகவே சென்று, அந்தத் துப்புகளைத் துலக்கி, மயில்ராவணன் தங்கையைக் கைவசமாக வைத் துக்கொண்டு, மயில்ராவணனைக் கொன்று, உங்களை சிறை மீட்டுக்கொண்டு வந்தார். இப்பொழுதுதான் கொண்டு வந்தார்கள்.

இராமர் : ஆகா... உண்மைதான். எங்கேயோ ஒரு பெரிய ஆலயத்தில் அனுமாருடைய நெழலைக் கண்டேன். நான் அழைத்ததாக அழைத்து வா. ஏய் ஆஞ்சநேயா! தம்பி, தமையன், மாமன், மைத்துனன் எங்களுடைய உயிர்களை... யாரும் காப்பாத்தவில்லை. நீ வானரமாயிருந்து... நீ

குரங்காக இருந்து... எங்களுடைய உயிர்களைக் காப்பாற்றிவிட்டாய்! நீ சிரஞ்சீவியாக என்றும் பதினாறு வயதாக இருக்க வேண்டும்.

அனுமன் : போதும்! இதே போதும்.

இராமர் : சரி, அந்த இராவண பாலகன் எங்கிருக்கிறா னென்று அவனுடைய குடுமியைப் பிடித்து இழுத்துக்கொண்டு வாருங்கள்.

அனுமன் : சுவாமி! வேண்டாம். உங்களைக் கொன்று விட்டான் என்று அவனுக்குத் தெரியும். இரா வணனே தன்மையில் வருவான், சண்டைக்காக! அந்த நேரத்தில் தாங்கள் கொன்றுவிடலாம். வாங்கள்... *தெகைப்பாருங்கள்.

பாடல் : **திரிலோகமும் புகழும் சுந்தர**
வீரதீர சூரன் நான் வந்தேன்.

இராவணன்: இன்னேரம் என்னுடைய தம்பி சிறையெடுத்துக் கொண்டு போயிருப்பான். இன்னேரம் காளிகாதேவி முன்பதாக வெட்டியிருப்பான். பலியாகியிருக்கும். ஏய்! இந்தக் குரங்குகள் இங்கு ஏன் இருக்க வேண்டும்? தெண்டச் சோறுக. இந்தக் குரங்குகளை நான் விரட்ட வேண்டும். ஏய் குரங்குகளே! ஓடுங்கள்... டேய்! போங்கடா குரங்கு... போங்கடா குரங்கு... டேய்! போங்கடா குரங்கு... [இசை] ஏய்! இன்னும் ஏண்டா நிக்கறீங்க? குரங்கு! மரியாதையா ஓடிப்போ. உன் அரசனைத்தான் கொன்னு போட்டாங்களே!

குரங்கு 1 : அய்யோ ராவணா! ஏதோ உன்னை நாடி நாங்கள் வந்திருக்கின்றோம். நீதான் எங்களுக்குப்படி அளக்க** வேண்டும்

★ தெகைப் பாருங்கள் - இளைப்பாருங்கள்

★★ படி அளக்க – சோறு போட

குரங்கு 2 : ஏலே ராவணா! நீதாண்டா எங்களுக்குச் சோறு போடணும்.*

....

....

பாவையாட்டி : இராவணன் ஏழு பிறப்பு. இவன் கடைசிப் பிறப்பு. ராமருடய கைப்பட மரணகதியாகிப் போனான். பெரியோர்களும், தாய்மார்களும், எல்லாரும் அவன் செத்துக் கீழே விழுந்தவுடன் எல்லாரும் கைதட்டுங்கள். உங்களைப் பிடிச்ச பீடை எல்லாம் இவனோட போகும். செத்து விழுந்தவுடன் கைதட்டுங்கள்.

பாடல் : **அண்ணா அண்ணா ராவணா**
உன் பெருமையெல்லாம் யாரிடம் சொல்லு வேனண்ணா?
அடங்காதே தேவர்களை அடக்கி வைத்தாயே!
அண்ட கிடாரமும் அடக்கி வைத்தாயே!
அத்தனையும் இழந்து வெறுங்கையாய்ப் போனேயே!
அண்ணா அண்ணா ராவணா!

இராமர் : ஏன் ராவணனைப் பற்றி அழுது கொண்டிருக் கிறாய்? அவனுக்கு நான் பாதி மோட்சம் பாதி நரகம் கொடுத்துவிட்டேன். அவனை எடுத்து நீங்கள் தகனம் செய்து வரலாம். யாரங்கே? அனுமானே!

அனுமான் : என்ன சுவாமி?

இராமர் : என்னுடைய சீதையை அழைத்து வாருங்கள். இவனை எடுத்துத் தகனம் செய்து....

★ இதிலிருந்து இரண்டு பக்கங்கள் முழுவதுமாக நொறுங்கிப் போய்விட்டன. நொறுங்கிய பகுதிகளை இணைத்துப் பார்க்கையில் முக்கியப் பகுதிகள் விடுபட்டுள்ளன. ஆகவே எடுத்தெழுத முடியாது போய்விட்டது. ஆயின் மயில்ராவணன் கதை முடிந்து இராவண சம்ஹாரம் நடக்கும் பகுதியாகும் அது. இராவண சம்ஹாரம் முடிந்த இறுதிப் பகுதி மிகுந்த சிரமத்திடையே எடுத்தெழுதப்பட்டது.

அனுமன் : சரிசரிசரி... [இசை] ராவணனை எடுத்து நூறு பெரிய விறகுகள் வெட்டிப் போட்டு... அதுக்குள்ள ராவணனைப் போட்டுத் 'தீ'களை மூட்டி, அவனுடைய சொந்தப் பொண்டாட்டி மண்டோதரியும் வெந்தாள் தீயில். அவனுடைய வைப்பாட்டிகள் அறுபதுபேர்... வைப்பாட்டி மார்களும் வந்து விழுந்தார்கள். எல்லாத்தையும் தூக்கி நாங்கள் தகனம் செய்துவிட்டு கங்கையில் சென்று காரியங்கள் செய்து, ஜெறையில் இருக்கவேண்டிய சீதாதேவியை அழைத்து வந்திருக்கிறேன். நீங்கள் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இராமர் : முடியாது. அந்தச் சீதையானவள் மகாப்பாவம் செய்தவள். அக்கினிக்குள்ளாக இறங்கி வரும் படியாகச் சொல்ல வேண்டும்.

அனுமன் : அம்மா! நீங்கள் அக்கினிக்குள்ளாக இறங்கி வரவேண்டுமாம்.

சீதை : நான் அப்படியே இறங்கி வருகிறேன்.

பாடல் : **அக்கினியில் இறங்கினாளே**
பத்தரை மாத்துத் தங்கம்
அக்கினியில் முழுகினாளே
பத்தரை மாத்துத் தங்கம்

இராமர் : சீதா!

சீதை : நாதா!

இராமர் : ஒரு பெண்ணுக்காக நாங்கள்... சண்டாள ஒரு மானுக்காக இருபேரும் தர்க்கங்கள் செய்து... உன்னையே ராவணன் ஜிறை எடுத்துச் சென்று விட்டான். அவனுடைய குடும்பத்தை நாங்கள் கெடுத்துவிட்டேன். சரி, இப்புறத்தில் வா! சரி. திரிச்சடை.*

★இத்துடன் முடிந்துள்ளது. அடுத்த 'இராமர் பட்டாபிஷேகம்' கதை நிகழ்வில் இதன் மீதிப் பகுதிகள் உள்ளன.



இராமாயணம்

இராமர் பட்டாபிஷேகம்

பதிவு செய்த நாள் : 02.06.1974

இடம்: வௌவால் தோட்டம் மதுரை.

நிகழ்த்துநர் : பாபுராவ் குழுவினர்.

கடவுள் : கணபதி ஆடினரே!

வாழ்த்து கூத்தாடும் பிள்ளையாரே
கணபதி ஆடினரே!
தொந்திக் கணபதியே
கூத்தாடும் பிள்ளையாரே! (கணபதி)

பபூன் 1 : அம்பது கோழி எம்பது முட்ட
வேகமாகத் திம்பேன் (அம்பது)
ஆறண்டா சோறு நூறண்டா காப்பி
பத்தும் பத்தாமப் போச்சே

சத்தோம்! சத்தம். சைலன். இரைச்சல். ஆனால் சீர்புகழும் நன்னகரிலே.... ஆனால் இக்கிராமத் தில் இருக்கக் கூடிய பெரியோர்களும், தாய் மார்களும், வாலிபர்களும் அனைத்துப் பேர் களுக்கும் அடியேன் வணக்கம் செய்தேன் பபூன் கோமாளி! ஆனால், காசிருக்கக் கூடியவர்கள் காசு குடுத்திட்டு வாங்க. ஆனல் ஓபத்ரம் செய்யாதீர்கள்.

பபூன் 2 : அடி சக்கேய்! {'மொட்டையன் வந்துட்டாண்டா'}

பபூன் 1 : வந்துண்டாண்டா மொட்டப் பயலுக்குப் பொறந்த பய.

பபூன் 2 : ஏய். கோழி மேல கோழி வைக்க {சிரிப்பு}.*

பபூன் 1 : ஏல! அடமுக்குக்காரப் பயலே!

பபூன் 2 : ஏய்! அடமுக்கான்னு பேசாதடா படுவா {சிரிப்பு}. படுவா நான் இருக்கிற சோக்கென்ன, ரைட்டென்ன, ஒழுங்கென்ன, மருத்தென்ன, குருத்து என்ன...? படுவா என்னையப் பாத்து அடமுக்காங்றான். எடுடா டுப்பாக்கிய ரிவால் வெடிய... புர்ர்.... {சிரிப்பு}.

★ 'ஏய் பொத்திட்டு வந்திட்டான். ஏய்' என்பது போன்ற சப்தங்கள் பார்வையாளர் பகுதியிலிருந்து வருகின்றன.

பபூன் 1 : சரியான டுப்பாக்கி வச்சிருக்கான்டா இவன். டேய் தம்பி உளுவத்தலையா!

பபூன் 2 : ஏய்! உளுவத்தலையான்னு சொல்லாதடா. அய்யா... சுப்ரமணியசாமி, கிளிக்குஞ்சு முதலாளி {சிரிப்பு}. அப்படீன்னு சொல்லணும். இல்லேன்னா டுப்பாக்கில சுட்டுப்பூடுவேன் {சிரிப்பு}.

பபூன் 1 : ம். டுப்பாக்கீல சுடப்போறாரு [அடிக்கிறான்].

பபூன் 2 : *சத்தோம்...! ஆனால், இந்த நாலு நாளாக எவ்ளவோ அமதியாயிருந்தார்கள். ஆனால் இன்னக்கி ஏகப்பட்ட சலம்பல் தெரியுது சலம்பல்.

பபூன் 1 : அதெல்லாம்... ஆனால் அம்பலகாரர்கள் அத்தனை பேரும் எங்கள் மீதில் தயவுடனே இருக்கிறார்கள். ஆனால் அப்படியெல்லாம் சலம்பல் செய்ய மாட்டார்கள். என்ன... கதைய ரொம்ப சோக்கா நடத்திப்பிடு.

பபூன் 2 : ஆனால், கதையின் வரலாறுகள்... ராவணனுக்கும் ஸ்ரீ ராமருக்கும் சண்டயும், அதிகாயனுக்கும் லச்மணருக்கும் சண்டயும், ஆனால் இராவணனைக் கொன்று, சீதையைச் சிறை மீட்டி, ஆனால் ஸ்ரீ ராமருடைய மங்களம் படிக்கச் செல்கிறோம். {'ஏய்! ஏய்! ஏய்!'} அமதியுடனிருந்து ஆனால் இந்த மங்களத்தைப் பார்த்துச் செல்வதற்கு அனைவருக்கும் வணக்கமாய்க் கேட்டுக் கொண்டேன் உளுவத்தலையன் .... உளுவத்தலையன்.

பபூன் 1 : அடேய்யா [அடிக்கிறான்].

★ பார்வையாளர்களிடம் இரைச்சல்.

பபூன் 2 : ஏய்! டப்பு டப்புன்னு அடிக்காதடா [அடிக்கிறான்] {சிரிப்பு} எப்பப் பார்த்தாலும் ஓயாம அடிச்சிக்கிட்டிருக்கிற!

பபூன் 3 : மாப்ளே!

பபூன் 2 : ஏலே மொளு மொளு! (ஏலேய்! இந்த டொக்கு குள்ள நொழைஞ்சி பார்க்குறாங்க பாரு... அவுங்ககூடப் பாக்க விடணும் இவன) மொளு மொளு பயா... அஞ்சி பைசா விடமாட்டான். [அடிக்கிறான்].

பபூன் 1 : வாடா கதைய ஆரம்பிக்கலாம்.

பபூன் 2 : கதைய ஆரம்பிய்யி. கதைய ஆரம்பிக்கப் போகிறோம். வெளியயிருக்கக் கூடியவர்கள் 'டிக்கெட்' வாங்கிக் கொண்டு உள்ள வர வேண்டுமென்று நாங்கள் தாழ்மையாக.... நாங்கள் கேட்டுக் கொண்டோம்.

பபூன் 1 : [அடிக்கிறான்] ஏய்! ஏண்டா அடிக்கிறே? [அடிக்கிறான்]

பபூன் 2 : ஏய்! நீ ஏண்டா அடிக்கிறே?

பாடல் : **குலரபி சேகரா - கோதண்டபாணி**
ராஜசிகாமணி கோதண்டபாணி
குலரபி சேகரா கோதண்டபாணி

இரபமர் : வருவாய்... தம்பி லக்ஷ்மணா!

இலக்குமணர் : அண்ணா! அடியேன் வந்தனம் செய்து வருகிறேன்.

இராமர் : மங்களம் உண்டாகட்டும். அரக்கனான இராவணன் நமது சீதா லச்மியாம்... சிறை எடுத்துக் கொண்டு போனபடியால், ராவணன்... ஜிடாயுவுக்கும் ராவணனுக்கும் சண்டை நடந்து, கொத்துக்கு ஆயிரம் தலைய வெட்டிப் போட, தந்திரமாக உயிரைக் கேட்டு ஜிடாயு அரசருடைய... ஆனால் ரெக்கையை வெட்டி

விட்டான். நாங்கள் சீதையைக் காணாமல் அழுது துயரமடைந்து, ஜிடாயு அரசரை எடுத்து மோட்சத்தைக் குடுத்தோம். ஆனால் கவந்த ராட்சதனான.... மோட்சங்கள் கொடுத்து வந்தோம். கௌரிகந்தனுடைய மோட்சங்கள் கொடுத்து இந்தக் கிஷ்கிந்தாபுரிப் பட்டணமான துஷ்ட வாலியைக் கொன்று, சுக்ரீவனுக்கு நாங்கள் முடிசூட்டு விழா நடத்தி வந்தோம். நாங்கள் வர எழுபது வல்ல வானரப் படைகளுடனே இருபத்நாலு படைத்தலைவர்கள்... சுக்ரீவன் எங்களிடம் அடிமையாகவே இருந்தான். ஆனால் சுக்ரீவ அரசன்... நான் அவனுடைய படைகளை நாலு பாகமாகப் பிரித்து, வடக்கை, தெக்கை, மேற்கை, கிழக்கை நான்கு திசைகளுக்கும்... ஆனால் ஜனங்களை அனுப்பி சீதையைத் தேடுவதற்காகவே அனுப்பி வந்தான். அனுமாராகிய ஆஞ்சநேயன் கணையாழி மோதிரத்தை வாங்கி, சீதா லச்மியிடம் பதில் அடையாளம்... சூடாமணி மோதிரத்தை வாங்கிக் கொண்டு வந்தான். இந்த ஏழு கடலிலே நாங்கள் அணை கட்டி ராவணனுடைய லெங்கைக்குள்ளாக நாங்கள் இறங்கிக் கொண்டோம். ராவணனுடைய தம்பியாகிய விபூஷணன் நம்முடைய பாதாரம் அடைக்கலமாகவே சேர்ந்தான். ஆனால், அந்த விபூஷணரை இன்றைய தினத்தில் அழைத்து, நாங்கள் கேட்க வேண்டும். ராவணன் இன்றைய தினத்தில் சண்டைக்கு வருவானா? அவன் வரக்கூடிய நேரங்கள் என்ன? அப்படீன்னு நாங்கள் கேட்க வேண்டுமே தம்பி.

இலக்குமணர் : அண்ணா! ராவணனுடைய தம்பியாகிய விபூஷணனை நாங்கள் அழைத்து... நாங்கள் விசாரிக்க வேண்டும் அப்படீன்னால்... நாங்கள் விபூஷணரை நான் அழைத்து வருகிறேன் ஆனால் கவலைப்பட வேண்டாம்.... [இசை]

உரைப் பாட்டு : ராவணன் தம்பி விபூஷணன் அடியேன் வந்தனம் செய்து வருகிறேன். நான் செய்து வந்த குத்தத்தை மன்னித்து நல் மோட்சம் தர வேண்டும் ராமா... ராமா... {'உக்கார்ரா ... உக்கார்ரா'}

இராமர் : ராவணனுடைய தம்பியாகிய விபூஷணரே!

விபீடணன் : பிரபு!

இராமர் : உன்னுடைய அண்ணனாகிய ராவணன்.... இன்றைய தினத்தில் போர் முனைக்காக வரு வானா? வருவதற்கு நேரங்களாகுமா? உனக்குத் தெரியும்... சீக்கிரமாகத் தெரியப்படுத்தி விடு.

விபீடணன் : சுவாமி! ஆனால், இராவணன் மந்திரி ஆலோ சனை செய்து... ஆனால், சண்டைக்கிக் கண்டிப் பாகவே வருவான். நம்முடைய வானரசேனங் களை எங்கயும் போக விடாமல்... அதிக ஜாக்கிரதையாக இருப்பதாக நீங்கள் தெரியப் படுத்தி விடுங்கள்.

இராமர் : சரி. அப்படியே நான் சொல்லி வருகிறேன்.

விபிடணன் : ரொம்ப சந்தோஷம்.

இராமர் : யாரப்பா?

சுக்ரீவன் : துஷ்ட வாலியுடைய தம்பியாகிய சுக்ரீவன் அரசரே!.... சுவாமி!

இராமர் : உன்னுடைய வானரப் படைகளை எங்கயும் போக விடாமல் அதிக ஜாக்கிரதையாக நீ பார்த்துக் கொள். ஆனால்... பார்த்துக் கொள்ளவேண்டும். ராவணன் திடீரென்று போர் முனைக்கி வந்தாலும் வந்து விடுவான்.

சுக்ரீவன் : அதைப் பற்றிப் பயப்படாதீர்கள். ஆனால்... நம்முடைய வானரப் படைகளை... ஜாக்கிரதை

யாக இருப்பதாக நான் தெரியப்படுத்தி விடுகிறேன். எப்பேர்ப்பட்ட ஒரு ராட்சதர்கள் வந்தாலும் அவர்களுடைய இரண்டு கால்களைப் பிடித்து நெற்கதிர்களை அடித்தது போலவே அடித்து வருகிறேன். உஷாராயிருக்கவேண்டும்!

இராமர் : ரொம்ப சந்தோஷம்... அனுமாரே!

அனுமன் : சுவாமி!

இராமர் : நீயும் சில வானரப் படைகளும் அதி உஷாராகயிருக்க வேண்டும்.

அனுமன் : இந்த ராட்சதர்களைக் கண்டு நீங்கள் எதற்காகப் பயப்பட வேண்டும்? எப்பேர்ப்பட்ட ஒரு ராட்சதப் படைகள் வந்த போதிலும்... ஆனால்... அவர்களுடைய உயிர்களை நான் வாங்கி விடுகிறேன். பயப்பட வேண்டாம் ராகவா! ஜாக்கிரதையாக இருங்கள்.

இராமர் : ஜாம்புகரே!

சாம்புகர் : நாராயுணா! பரந்தாமா! கடவுளேக்க.... (ஆமா ராமாயணா கடவொளக்கு)

இராமர் : எங்களுக்கெல்லாம் நீங்கள் பெரிய மனுஷன் அல்லவா?

சாம்புகர் : பெரிய மனுஷன்னு மெதுவாச் சொல்றீங்களே சுவாமி! நீங்க ஒண்ணும் பயப்பட வேண்டாம். எந்த ராட்சதப் பயா வந்தாலுஞ் சரி... அவங்கழுத்தப் புடிச்சிக் கடிகடின்னு கடிச்சி வச்சிப் போட்றேன்.

இராமர் : உஷாராயிருக்க வேண்டும்.

சாம்புகர் : ரொம்ப சந்தோஷம் பிரபு! வாங்க போவோம்... [இசை]

மந்திரி 1 : அடடாடாடா (என்னடா?) ராவணேஸ்வர மகாராஜா!.... ஆனால்... வேட ராமனுடைய

அரமணைக்குள்ளாக வந்து விட்டானா வரவில்லையா, பார்த்துட்டு வாடான்னு சொன்னாரு... என்னா... இங்க வந்து பாக்க... ஏராளமான குரங்குப் படைகளுடனே... ஆனால் கூட்டமா வந்திருக்காகளே?

மந்திரி 2 : இதப் போய் ராவணேஸ்வர மகாராஜாவிடம் நான் தெரியப்படுத்தி வருகிறேன்...

பாடல் : **திரிலோகமும் புகழும் சுந்தர**
வீர வீர தீர தீர
சூரன் நான் வந்தேன்.

இராவணன்: டேய் மகோதர மந்திரி!

மகோதரன் : மகாராஜா!

இராவணன் : அற்பக் கேவலமாக இருக்கவேண்டிய கொரங்கு... அந்தக் கொரங்கு வாலிலே நாங்கள் துணியச் சுத்தித் தீயப் பொருத்திவிட, நம்முடைய லெங்கை பூராக அக்கினி தகனம் செய்து விட்டது அந்தக் குரங்கானது! (ம். இன்னக்கிப் போங்க. ஒங்களக் கட்டேல போட்டு எரிச்சிடுவாங்க) ஆனால் கொரங்கு பின்னதாக இரண்டு மந்திரிமார்களை அனுப்பி... வேடராமனிடம் சேர்ந்துக் கொண்டதா இல்லை கடல்க்குள்ளாக விழுந்து செத்துப் போய் விட்டதா என்றும் தெரியவில்லையே.

மகோதரன் : மகாராஜா! நம்முடைய மந்திரிமார்கள்... ஆனால்... அதைப் பார்த்து வருவதாகவே அனுப்பி வைத்திருக்கிறேன். அவர்கள் வர வேண்டிய ஒரு நேரமாகிவிட்டது.

இராவணன்: வருவதை எதிர்பார்... சீக்கிரம்.

மகோதரன் : அதோ வருகிறார்கள்...

பாடல் : **எங்க மகாராஜா - எங்க**
தங்க மகாராஜா!
பெழைக்க மாட்டோம் மகாராஜா - நாங்க

செத்துப் போவோம் மகாராஜா
அய்யோ மகாராஜா - எங்க
தங்க மகாராஜா!

மந்திரிமார் : நாங்க பெழைக்க மாட்டோம் மகாராஜா - நாங்க
செத்துப் போவோம் மகாராஜா
அய்யோ மகாராஜா - எங்கப்
பொன்னு மகாராஜா!

இராவணன்: டேய்! அடே மந்திரிமார்களே!

மந்திரி : பிரபு!

இராவணன்: அந்தக் கொரங்கு பின்னதாகப் போனீர்களே. எதிரிகள் நம்முடைய கோட்டைக்குள்ளாக வந்து விட்டார்களா? வரவில்லையா? சொல்லடா சீக்கிரம்.

மந்திரி : மகாராஜா! அந்த அனுமார் என்று சொல்லக் கூடிய கொரங்கு வாலிலே துணி சுத்தித் தீயப் பொருத்திவிட, இங்கயிருந்து வேகமாக ஓடுன கொரங்கு.... தண்ணிக்குள்ளாக விழுந்து, அந்தக் கொரங்கு செத்துப் போச்சி.

இராவணன்: சபாஷ். சபாஷ்... சபாஷ்... சபாஷ்... சபாஷ்... (மந்திரிக்கிப் பெறவு சாப்பாடு கிழிஞ்சி போயிரும்) மகா... தந்திரங்கள். மகா மாயா ஜாலத்தைச் செய்துவிட்டோம். அந்தக் குரங்கு அடியோடு ஒழிந்துவிட்டது. மரணமடைந்து விட்டது அக்குரங்கு.

மந்திரி : ஆமா. செத்துப் போச்சின்னு நெனச்சி, கொஞ்ச நேரம் நின்னு வேடிக்க பாத்தோம். அந்தக் கொரங்கு.... ஏழு கடலுக்குள்ள விழுந்த கொரங்கு குபுக்குன்னு மேல வந்திருச்சி.

இராவணன்: அயோக்கியப் பயலே. இங்க வாடா இங்க. செத்த கொரங்கு எப்படிடா உயிரோட வரும்?

மந்திரி : அந்தக் கொரங்கு வால்ல துணியச் சுத்தித் தீயப் பொருத்திவிட்டமா, அந்தத் தீய அமத்ரதுக்குத் தான் தண்ணிக்குள்ள விழுந்திருக்கு*.

இராவணன்: எங்களைக் கேலி**...

பபூன் 2 : ஏய்! பொத்துக்கிட்டு வர்றாகளே. மாப்ளே மொளு மொளு!

பபூன் 3 : நானே அஞ்சி பைசாக் குத்திட்டு ஒம் பின்னாலயே அலயறேன். இவ்வளவு நாளா இவ்வளவு சலம்பல் இல்ல. இன்னக்கி எல்லாம் அம்மாக்கமார்கள் எல்லாம் பொத்துக்கிட்டு வர ஆரம்பிக்கிறாக. புள்ளைகளும் பொத்துக்கிட்டு வருது. சுத்தி நின்னு கூச்சல் போடுறாக. இந்த ஊருக்குப் போனோம். இப்படியெல்லாம் கேவலமாகவே எங்களை... அப்படிச் சொல்லி... ஒரு கேவலந்தான! ஒரு 'டீ' குடிக்கிற செலவு - 'டீ' கூட இருவது பைசா இப்ப. ஆனால், கிடைத்தாலும் கிடைக்கவில்லை என்றாலும் பட்டாபிஷேகத்தை, ராமருடைய பட்டாபிஷேகம் முடிக்கலாமென்று எங்களுடைய மனதில்... அவுக அத முடிக்க விடாமயே கெடுக்குறாக.

பபூன் 2 : ம். அதெல்லாம் செய்ய மாட்டாக. ஆளில்லாத சமயம் பார்த்துத்தான் பொத்துக்கிட்டு வருவாக @

பபூன் 3 : அட... அவுக எப்படியுயும் பொத்துட்டுப் போறாக. அஞ்சி பைசாவக் குடு.

பபூன் 2 : பொத்துக்கிட்டு ஒசில வர்றாக பாரு. அவுங்க வீட்டுக்குப் போ. குடுப்பாங்க போ.

பபூன் 3 : ஏய்! அவுங்க எப்படிக் குடுப்பாங்க?

★ பார்வையாளர்களிடம் இரைச்சல் - சலசலப்பு.

★★ பார்வையாளர்களிடம் இரைச்சல்

@ மீண்டும் பார்வையாளர்களிடம் சலசலப்பு.

பபூன் 2 : இங்கெ பொத்துக்கிட்டு பாக்றாகல்லா. அங்கெ குடுப்பாங்க.

பபூன் 3 : சே! நீ கடன் வாங்கிகிட்டு... அவுகளா குடுப்பாக.

பபூன் 2 : அவுக குடுத்தாத்தான் ஒனக்கு நான் குடுப்பேன்.

பபூன் 3 : ம். நீ குடுடா.

பபூன் 2 : புர்ர்... {சிரிப்பு}. மொத்தமா வாங்கிட்டுப் போய்ட்டான். சத்தம் போடாதீக.

மந்திரி : மகாராஜா! ஒங்களுக்கு எதிரியான ராமன்... அவனுடைய தம்பியாகிய லச்சுமணன் குரங்குப் படைகளுடனே நம்முடைய சுபேட மலையில் வந்து டேரா அடித்துக் கொண்டு, உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ராவணன் எப்போ... சண்டை... போர்முனைக்கு வருவதாக! உங்களுடைய தம்பி விபூஷணரும் அந்த ராமரிடம் அடைக்கலமாகவே சேர்ந்துக் கொண்டார்.

இராவணன்: ஹா! ராஜ துரோகியானவன்... தம்பியாகிய விபூஷணன் எதுராளி முன்னதாகவே அடைக் கலமாகச் சேர்ந்துக் கொண்டான் (.... சாணி வெளிய வரப்போவுது) டேய். மகோதர மந்திரி!

மகோதரன் : மகாராஜா!

இராவணன்: ஒன்னுடைய யோசனைகள் எப்படி?

மகோதரன் : மகாராஜா! எப்ப நம்முடைய எதிரிகள் நம்முடைய அரமணைக்குள்ளாகப் புகுந்து விட்டார்களோ, அவர்களை நாங்கள் ஜெயிக்க வேண்டும். பழிக்கப் பழி வாங்க வேண்டும். பிறப்படுங்கள். முதலாவது போர்முனைக்கிப் பிறப்படுங்கள். அறுபதுபேர் மந்திரிகளையும். யக்கூர்ன வல்லபசேனை காலாட்களை

அழைத்துக் கொண்டு பிறப்படுங்கள் மகாராஜா! ரெண்டாவது சண்டைக்கி நான் போய்ட்டு வர்றேன். அந்தக் கொரங்குகளை.... ... அப்படிப் பட்டாக் கத்தீல அப்படிச் சொழட்டீர்றேன் (ஏய்! மீசைய முறுக்கீட்டுக் கடசீல நக்கிட்டுப் போங்க). ஒவ்வொரு வெட்டு... கதக்... கதக்... கதக்... கதக்... கதக்னு வெட்டிர்றேன். (அங்கப் போனீங்கன்னா கொதக் கொதக்னு பேளுவீங்க) {சிரிப்பு}

இராவணன்: படைகளெல்லாம் தயாராகட்டும். நான் மொத நாள் போர் முனைக்கிச் செல்கிறேன்.

மகோதரன் : புறப்படுங்கள்... புறப்படுங்கள்... டேய்!. மகாராஜா மொத நாள் போர்முனைக்கிச் செல்கிறார், புறப்படுங்கள்... புறப்படுங்கள்..

பாடல் : ராம ராகவா ராஜிபரோஜிதா
சாமித்த வரவா ஜீயராகவா
சூர சங்கார தேவா
கோவிந்த கிருஷ்ணா
நந்த நந்தன கோவிந்தா.

இராமர் : விபூஷணரே!

விபீடணன் : சுவாமி!

இராமர் : ஒன்னுடைய அண்ணன்... இவர்கள் யார்? ஏராளமான படை வீரர்களை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார்களே! இவர்களுடைய பேரென்ன? இது யாருடைய படைகள்? ராவணன் அறுபது பேர் மந்திரிகளும்... ஆனால் யக்சூர்ன வல்லப சேனை காலாட்களை அழைத்துக் கொண்டு குபேரன் ஏற வேண்டிய வெங்கல ரதத்தில் ஏறி, ஆனால்... ராவணேஸ் வரன் முதல் நாள் போர் முனைக்காக வந்திருக்கிறான்.

விபீடணன் : ஆனால்... இவர்களை நீங்கள் கொன்றுவிட வேண்டும் சுவாமி.

இராமர் : ஆனால்... இவன் ரதமேறி போர் முனைக்கி வந்ததனால்.... எங்களுக்கு ரதமானது இல்லயே? எப்படி இவர்களை நாங்கள் ஜெயித்து வருவது?

விபீடணன் : சுவாமி... நீங்கள் ரதமேறி... போர்முனை நீங்கள் சென்றுவிட்டால், ஒங்களுடைய சண்டை.... ஆனால் தோல்வியாகவே போய்விடும்* (ஏய் சத்தம் போடாதே). ஆனால்... பூமியில் நின்று, நீங்கள் போர்முனையானது முடிக்க வேண்டும்.

இராமர் : சரி. அப்படியானால் இன்று வில் வளைத்து, ராட்சதப் படைகளை நான் கொன்று விடுகிறேன்.

விபீடணன் : ரொம்ப சந்தோஷம்.

பாடல் : ராமருக்கும் ராவணனுக்கும்
பல நாள் சண்டை
நடந்ததே - சண்டை தொடர்ந்ததே!
முதல் முறையாகச் சண்டை நடந்ததே
விரோதமாகச் சண்டை நடந்ததே
வந்தானே ராட்சதன் - கொலைகள் செய்ய
வாரானே ராட்சதன்
வாலி மார்தன வானவர் பூஜன
வாசுதேவ குமரா - அரே ராம
வாசுதேவ குமரா!
ராமருக்கும் ராவணனுக்கும்
பலநாள் சண்டை
நடந்ததே - சண்டை தொடர்ந்ததே!
ராம ராகவ ராட்சத ராவண
நாளைக்கு வருவான்...

★ பார்வையாளர்களிடம் இரைச்சல் - சலசலப்பு.

பபூன் 2 : ..... யம்மாடி! {சிரிப்பு}

பாவையாட்டி : ராவணன் அறுபது பேர் மந்திரிகளையும்... யக்கூர்ன வல்லப சேனை காலாட்களும், ரதங்களும் ஏறி வந்தான் போர்முனைக்காக! வானரப் படைகளுடைய கைப்படவும் ராமருடைய அம்புனாலயும்... ஆனால்... எல்லாப் படைகளும் இறந்து, குனிந்த தலை நிமுர முடியாமல் நிற்கிறான் ராவணேஸ்வரன். அதை அறிந்த ஸ்ரீராமர் அன்னவர்கள், அதைப் பாராமல் ராவணனுக்கு இரண்டு புத்திமதியான வார்த்தையைச் சொல்லப் போகிறான்... [இசை]

இராமர் : ராவணேஸ்வரா! உலகத்தைப் பூராகவே அடக்கி அரசு புரிய வேண்டிய ஒரு மனிதன், கைலேங்கிரி மலையை ஒரு கையினால் அசைத்துப் பிடுங்கி, எடது தோளில் உட்கார வைத்து, சங்கீதங்களைப் பாடின ஒரு வீரன்... வெற்றிகரமான ஆயுதங்கள்ளாம் கொண்டு வந்தாயே! ஒன்னுடைய ஆயுதங்களை எங்கே? ஒன் படை வீரர்களை எங்கே? ஆனால் நீ வரக்கூடிய ஒரு வேகத்தைப் பார்த்தவொடனே எனக்கே பயங்கரமாகவே போயிவிட்டது. ராவணன், இப்பொழுது... இன்றைய தினத்தில் ஜெயித்து விடுவானென்னு நான் எவ்ளவு... நான் யோசனை செய்து கொண்டிருந்தேன். கடசியில் வானரப் படைகளுடைய கைப்படவே நீ மரணம்... ஆனால் உன்னுடைய படைகளையும், உன்னுடைய ரதங்களையும் இழந்து குனிஞ்ச தலையை நிமிர முடியாமலேயே நின்று கொண்டிருக்கிறாய். ராவணேஸ்வரா! ஏதடா ராவணா! நீ... உன்னுடைய சம்மதங்கள்... ஆதி முதலாகவே நீ சண்டைக்கு வந்தாயா? அலங் கோலமாக நின்று... நிலங்கீறி நின்றுக் கொண்டிருக்கிறாயே ராவணேஸ்வரா! வம்பாக்

கெட்டுப் போக வேண்டாம். துஷ்டர்களைக் கொல்வதும், நம்பி வந்தவர்களை ரட்சிக்க வேணுமென்று... நான் பூலோகத்தில்... நான் பெறந்து வந்திருக்கிறேன். இந்த லெங்கையை முதலாவது அரசு புரிகின்றவன் யார் தெரிவருமா? (யார்?) குபேர ராவணன். குபேர ராவணனை ஜெயித்தவன்... ஆனால்... இரண்ய சம்காரம் முடித்தவன். அடங்காசூரனை ஜெயித்து வந்தவன். உன்னுடைய பாட்டி இருக்கிறாளே தாடகை, தாடகையை ஒரே அம்பினால் ஜெயித்து வந்தவன். ஒவ்வொரு அரசர்களையும் ஒவ்வொரு அவதாரத்தில் நான் ஜெயித்து வருகிறேன். அப்பா ராவணேஸ்வரா! வம்பாக நீ கெட்டுப் போக வேண்டாம். உன்னுடைய லெங்கையை மண்ணோடு மண்ணாக நீ செய்துவிட வேண்டாம். ஆனால் உனக்கு மனைவி, மக்கள் இருக்க... நாடு நகரங்கள் இருக்க... ஏன் வம்பாக நீ தொலைக்கச் செல்கிறாய்? நீ கொண்டு வந்த சீதாலக்ஷ்மியைக் கொண்டாந்து, என்னுடைய பாதாரத்தில் விட்டு, நீ சரணாகதி அடைந்து... நீ வந்து விட்டால்... ஒனக்கு இன்னுஞ் சில நாள் இந்த லெங்கையை அரசு புரிவதற்கு நான் நல் மோட்சம் தருகிறேன். ஏன் பேசவில்லை? ஓ! சீதையை விடுவதற்கு, ஒனக்கு மன சமாதானமானது கிடையாது. இன்றைய தினத்தில் நீ சண்டைக்கு வந்தது போதும். நீ... நாளைய தினத்தில் நீ போர்முனைக்கி வரலாம். போ.

பாவையாட்டி : ராமன் சொன்னதே போதுமென்று எடுத்தான் ஓட்டம் அரமணைக்குள்ளாக. ஆனால் எந்தவிதமாகப் போகிறான். வாரன பொருது மார்பன், வலியக் கொன்றணைத்த தோளன்,, நாரத முனிவர்க்கெல்லாம் நயம்பட உரைத்த நாவன், தாருணியில் மகிழும் பெற்று... சங்கரன்

குடுத்த வாளும் வீரங்களும்... வரங்கள் சுவாமிகளிடத்திலே இழர்ந்து நிராயுதமாகவே, வெறுங்கையாகவே அரமணைக்குள்ளாகப் போகிறான் இலங்கை வேந்தன். ஆனால் இவனுடைய வைப்புப் பெண்கள் அறுபது பெண்களும் தங்கள் தாம்பாளத்தில்... மகாராஜா ராவணேஸ்வரர் இன்னக்கிப் போர்முனைக்கிப் போயிருக்கிறார். எப்படியாவது வேட ராமனை ஜெயித்து விடுவதாகத் தங்கத் தாம்பாளத்தை... ஆரத்தி எடுப்பதற்காக வைப்புப் பெண்க ளெல்லாம் இந்த ராவணனை எதிர்பார்க்கிறார் கள். (இந்த மொகரக் கட்டைக்கி!) இதைப் பார்த்தான் ராவணேஸ்வரன். அடடா, நாங்கள் இங்க அடியும் ஒதயும் பெற்று பொறுக்க முடியாமல் அங்கப் போகிறோம். இந்தப் பெண்களெல்லாம் சேர்ந்து என்னை ஆராத்தி எடுப்பதற்காக வரிசை வரிசையாகத் தெருவிலே நின்று கெண்டிருக்கிறார்கள். இந்தப் பெண்களு டைய மின்பதாகப் போய்விட்டமோ..., வெட்கக் கேடு, மானக் கேடாகப் போய்விடு மென்று (வெளக்கமாத்தால தூக்கி அடிப்பாங்க), ஆனால்... பெற வாசல் வழியாக... அந்தப்புறம் வழியாகச் சென்று, இவன்பட்ட கஷ்டங்களை மந்திரிமார்களிடம் போய்ச் சொல்லப் போகிறான் ராவணன்'... [இசை].

இராவணன்: அய்யய்யோ... அய்யய்யோ... ஏய் மந்திரி மகோதரா...! (வெளக்க மாத்தால இந்த மந்திரி மேல போடுங்கய்யா).

மகோதரன் : பயப்படாதீங்க [அடிக்கிறான்]. மகாராஜா...!

பபூன் 2 : இவரு நல்லா அங்க மொணங்கத் தின்னுட்டு வந்திருக்றாரு. அதுக்கு மேலே இவரு மே ஒத்தனம் ஒதைக்றாரு (ம். அவன் நல்லா தின்னுக்கிர்றான் பாரு). சர்த்தான்... சர்த்தான்...

சர்த்தான்... இவன ஒதைக்கணுமே {'நாளைக்கி அனுப்பு'}. இன்னக்கித் திம்பாரு (ஆமாம்). நாங்க ஒனக்குச் சுடச்சுட வச்சிருக்கோம் {சிரிப்பு}.

இராவணன்: மகோதரரே! எங்களுடைய மதிப்பெல்லாங் கெடுத்துவிட்டான் அந்த வேடன் ராமன்.

மகோதரன் : மகாராஜா! பயப்படாதீர்கள். நீங்கள்.... போர் முனைக்கி நீங்கள் போனது எனக்குத் தெரிவரும். ஆனால் யாரு ஜெயித்தீர்கள்? குரங்குப் படைகளைப் பூராவும் கொன்றுவிட்டீர்களா? ஆனால், நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண் டாம். வேட ராமனைக் கண்டு கவலைப்பட வேண்டாம் மகாராஜா. யாரை ஜெயித்தீர்கள்? குரங்குப் படைகளைக் கொன்று விட்டீர்களா?

இராவணன்: மகோதர மந்திரி! ஆனால்... போர்க் களத்தில் நானும் அம்புகளை... நான் பிரயோகம் செய்தேன். அந்த வேடராமனும் அம்புகளைப் பிரயோகம் செய்தான். அந்த அம்புக்குள்ளாகப் போன எனது ராட்சதப் படைகள் ஒருவனாவது உயிருடன் வந்தது இல்லை. ஒருவருமே உயிருடன் வரவில்லை... அந்தக் குரங்குக் கூட்டத்துக்குள்ளாக இருந்து!... ஆனால், ஒரு பத்துக் கொரங்கு ஓட்டமாக வந்து - ஓட்டமாக ஓடி வந்து... ஒரு குரங்கு என்னுடைய பத்துத் தலைகளையும் போட்டு அமுக்கி விட்டது. அதுல ஒரு குரங்கு, இருபது கைகளையும் போட்டு அமுக்கிவிட்டது. அதுல ஒரு குரங் கானது இரண்டு கால்களும் பிடித்து அமுக்கி விட்டது. அதுல ஒரு கிழட்டுக் குரங்கு ஒன்று இருக்கிறது. ஜாம்புகர் குரங்கு. என்னுடைய நெஞ்சில ஏறி உட்கார்ந்து கொண்டு, அந்தக் குரங்கானது என்னுடைய இடது செவிட்லயும், வலது செவிட்லயும் அடித்தால்... இரண்டு கன்னங்களிலும் அடித்தால்... எப்படி அடித்து வருகிறது?

[உரைப்பாட்டு]

முட்டாப் பயல் ராவணா!

திருட்டுப் பயல் ராவணா!

சீதையை விடடா என்றே இரண்டு கன்னங் களிலும் அடித்து என் கன்னமானது வீங்கிப் போய்விட்டதே மகோதரா! நர மனிதர்கள் என்று நாங்கள் பார்க்க தெய்வப் பெலமாக இருக் கிறார்கள். வேட ராமனை ஜெயிக்கவும், கொல் வதற்கும் எங்களால் நினைப்பதே முடியாது.

....

மகோதரன் : மகாராஜா! பயப்படாதீங்க [அடிக்கிறான்] {'நல்லாக் குடுத்தான்டா இவன்'} ஆனால் ஒங்களுக்குச் சண்டை செய்யவே தெரிய வில்லை. நீங்கள் சண்டைக்குப் போனது போல நான் மட்டும் சண்டைக்குப் போயிருந்தால், அந்தக் கொரங்குப் படைகளையும் வேட ராமனையும் நான் சும்மா விடுவனா? ஆனால் என்னுடைய பட்டாக் கத்தீல அப்படி ஒரு வெட்டு... அப்படி... அப்படி..... அப்படி... அப்படி..... (அங்க நெருங்குனாருன்னு நறுக்கி வாயில போட்டுத் தண்ணியக் குடிச்சிருப்பாங்க)

பபூன் 2 : நீங்க வெட்டி வெட்டிக் கத்தி மழுங்கியிருக்கும். என்ன... இதுல வச்சித் தீட்டுங்க {சிரிப்பு} (எதுலடா) எங்குண்டீல வச்சித் தீட்டுங்க கத்திய. (பாருடாடோய்) அப்பத்தான் நல்லா வெட்டும். இப்பப் பாத்தவங்களப் பூரா வெட்டீரும் {சிரிப்பு}.

பபூன் 3 : இங்க வா! ஒனக்குப் பெரிய குழி வெட்டி வச்சிருக்கேன் {சிரிப்பு}. அட, அது போகட்டும்... அஞ்சி பைசா குடுடா.

பபூன் 2 : ஏல மொளு மொளு! [அடிக்கிறான்].

இராவணன்: மகோதர மந்திரி! ஆனால் அந்தச் சீதையைக் கொண்டு போய்விட்டு விட்டால் என்ன?

மகோதரன் : விடக்கூடாது மகாராஜா. விடக்கூடாது. நம்முடைய லெங்கை மண்ணோடு மண்ணாகப் போனாலும் சரி. பத்துத் தலை பூமியில் விழுந்து உருண்டாலும் சரி. ஆனால்... எங்களுடைய உயிர்கள் போனாலும் சீதையை விட்டுவிடக் கூடாது. வேட ராமனாவது ஜெயிக்க வேண்டும் இல்லை நாங்களாவது ஜெயிக்க வேண்டும் மகாராஜா.

இராவணன் : அப்ப... வேட ரமனை ஜெயிக்கக் கூடிய வீரர்கள் இன்னும் யாரிருக்கிறார்கள் கோட்டைக்குள்ளாக?

மகோதரன் : ஏன் இல்லை? நீங்க இருக்கீங்க. சிங்கம் நானிருக்கிறேன். எங்கள் மகன் அதிகாயன் இருக்கிறான். அதிகாய மகாராஜாவை மட்டும் போர்முனைக்கி அனுப்புங்கள். அந்தக் கொரங்குப் படைகளைப் பூரா சட்னி... சட்னியாக்கிடுவாரு (ஏய் கொஞ்சம் இட்லியாக் குங்கப்பா).

இராவணன்: சபாஷ்! என் மகன் அதிகாயனை நான் அழைத்ததாகவே அழைத்து வா.

மகோதரன் : வருகிறேன்... [இசை]

அதிகாயன் : அப்பா! என்னை அழைத்த காரணமென்ன?

இராவணன்: மகனே அதிகாயனே!

அதிகாயன் : அப்பா!

இராவணன்: கடன்பட்ட நெஞ்சிது போல் கலங்கிக் கொண்டிருக்கிறேன்! ஆனால்... ராவணேஸ்வரன்!... எதிரிகளுடைய... கோட்டைக்குள்ளாக சூழ்ந்து கொண்டார்கள். அந்த எதிரிகளைக் கொல்லக் கூடிய வீரர்கள் உலகத்திலே யாருமில்லையென்று... ஆனால்... வேட ராமனை ஜெயிக்கவும் குரங்குப் படைகளைக் கொல்வதற்கும் என்னாலே கூடமுடியவில்லையே!.

அதிகாயன் : தந்தையே! ஆனால்... நாங்கள் வீரர்கள். நாங்கள் இருக்க, நீங்கள் எதற்காகப் போர் முனைக்குப் போக வேண்டும்? கவலைப்பட வேண்டாம். என் படை வீரர்களை அழைத்துக் கொண்டு, அந்தக் கொரங்குப் படைகளையும், வேட ராமனையும் நான் ஜெயித்து வருகிறேன். உத்திரவிடுங்கள் அப்பா.

இராவணன்: ஏய்.... சபாஷ்... சபாஷ்...! ஹஹ்ஹஹ்ஹா ஹஹ்ஹா (சிரிப்பாணி வந்து களவாணி புடுங்குது). ஏய்! உன்னால் இலங்கையை நான் அடைய வேண்டும். அந்தச் சீதையை நான் அழைத்து வரவேண்டும். சிம்மாதனத்தில் உக்கார வேண்டும். சீதையும் நானும் பேசவேண்டும். சாமரங்கள் தரித்துக் கொஞ்சிக் குலாவியிருக்க வேண்டும்.

பபூன் 2 : கொலாவப் போறீகளாக்கும். அங்கப் போனா-விலா தெரியும். ஒங்க நாத்தம் (ஒரு மொழம் விட்ட, புதுக்குன்னு வரணும்).

பபூன் 3 : அட, அவுக எப்படியும் பொய்ட்டுப் போறாக. அஞ்சி பைசாவக் குடுடா.

பபூன் 2 : இவன் விடமாட்டான் மொளு மொளு. [அடிக்கிறான்]

இராவணன்: மகனே, போ. வேட ராமனை ஜெயித்து வா.

அதிகாயன் : வருகிறேன்.

இராவணன்: மகோதரா!

மகோதரன் : மகாராஜா! பயப்படாதே! [அடிக்கிறான்] (போட்டான்டா ஒரு போடு)

பபூன் 2 : இவன் உயிரு போறதுக்குள்ள, இவன் பாதி உயிர வாங்கிருவான்.

மகோதரன் : ஆனால் பிறப்படுங்கள். அரமணைக்குள்ளாகச் சென்று நாங்கள் ஓய்வு எடுத்துக் கொள்வோம். பரத நாட்டியங்களைப் பார்க்கலாம் (நெறைய

சட்டப் போட்டு. ஆடுறா பாருங்க) பிறப்படுங்கள் மகாராஜா... [இசை]

அதிகாயன் : மந்திரி! வா இங்கே.

மந்திரி : மகாராஜா!

அதிகாயன் : நம்முடைய படை வீரர்களை அழைத்துக் கொண்டு மின்பதாகப் புறப்படுங்கள். ஆயுதங்களை எடுத்துக் கொண்டு நான் ரதத்தில் வருகிறேன்.

மந்திரி : உத்தரவு பிரபு. வேட ராமனை இன்றைய தினத்தில் நாங்கள் ஜெயித்து விடலாம்...

பாடல் : **ராம ராகவ ராட்சத ராவணா**
நாளைக்கு வருவான்....
ராமருக்கும் ராவணனுக்கும்
நடந்ததே சண்டை தொடர்ந்ததே!

இராமர் : யாரப்பா விபூஷணரே!*

விபீடணன் : சுவாமி! ஏராளமான ராட்சதப் படைகளை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்!

இராமர் : இவர்கள் யார்?

விபீடணன் : இராவணனுடைய மகனாகிய அதிகாயன். மகா... கெட்டிக்காரன். மகா... சாமர்த்தியம் உடையவன். நீங்கள் இன்று சண்டைக்கி வேண்டாம். ஒங்களுடைய தம்பியை அழைத்து... ஆனால்... இவனுடைய போர் முனையை முடித்து வருவதாகச் சொல்லுங்கள்.

இராமர் : அப்படியா அப்படியே நான் தெரியப்படுத்தி வருகிறேன்.

இலக்குமணர் : அண்ணா!

இராமர் : ராவணனுடைய மகன் அதிகாயன் வந்திருக்கிறான். நீயும், சில வானரப் படைகளை வைத்துக் கொண்டு இவனுடைய போர் முனையை முடித்து வா.

★ சிறு சலசலப்பு

இலக்குமணர் : அப்படியே நான் முடித்து வருகிறேன்.. [இசை]...

அனுமன் : சுவாமி! அம்புனால் பிரயோகம் செய்யுங்க. இந்த ராட்சதப் படைகளை என் காலினால் நசுக்கி விடுகிறேன்.

இலக்குமணா : அனுமாரே! ஆஞ்சநேயரே! ஜாக்கிரதையாக இருந்து போர் முனையை முடிக்க வேண்டும்.

அனுமன் : ரொம்ப சந்தோஷம்...

பாடல் : **அடி என்னடி ராக்கம்மா**
பல்லாக்கு நெளிப்பு
என் நெஞ்சு குலுங்குதடி*

பபூன் 2 : திருப்பரங்குண்டியில் நீ சிரித்தால் - முருகா {சிரிப்பு} (ஆமா பழைய ஓரணா)

பபூன் 1 : திருப்பரங்குன்றம்னு சொல்லியிருக்றாரு. இவந்திருப்பரங் குண்டீங்கா. {சிரிப்பு} (அகராதி புடிச்ச படுவா)

பபூன் 2 : அடி என்னடி ராக்கம்மா
பல்லாக்கு மூக்குக்குத்தி {சிரிப்பு}

பபூன் 1 : மூக்கு யாரு குத்னா?

பபூன் 2 : அது யாரு குத்னாங்களோ? எனக்கெப்படி தெரியும்? தெய்வான சக்களக்களுத்தி (ஏய் தெய்வான சக்காளத்தியா சக்களக்களத்தியா?) வள்ளிக் கொளத்தி (ஏய் வள்ளிக் கொறத்தி வள்ளிக் கொளத்தியில்ல)

பபூன் 1 : அழகா படிக்கணும். இல்ல. தப்புத் தவறாப் படிச்சிக்கிட்டிருந்தேன்னா மூக்க உள்ள திணிச்சிருவேன்.

★ பதிவுநாடா மாற்றும் சில நிமிட இடைவெளி.

பபூன் 2 : தெய்வான சக்களக் களத்தி
வள்ளிக் குறத்தி
ஓங் கதையில வருதடி {சிரிப்பு}

பபூன் 1 : கதையிலதான் வருமாங்கும்.

பபூன் 2 : இல்லேன்னா காலேல வருமடி {சிரிப்பு}

எங்க வூரு மீனாச்சி களவாண்டு கிட்டுப் போனா {சிரிப்பு}

பபூன் 1 : ஆமா நல்ல பாட்டு பாடுறாண்டா இவன்! (ஏலே வேற பாட்டு நல்ல பாட்டா பாடுரா)

வேற பாட்டு அழகான பாட்டு பாடுரா.

பபூன் 2 : ஒன்னச் சொல்லிக் கொத்தமல்லி

என்னச் சொல்லிச் சீரகமல்லி

யாரு வாங்ன சீரகமல்லி

எங்க அண்ணன் வாங்ன சீரகமல்லி {சிரிப்பு}

பபூன் 1 : எருமை மாட்டுப் பயல! [அடிக்கிறான்]. நல்லாப் பாட்டுப்பாடி நாசமாப் போனான். இனிம ஓம் பாட்டும் வேணாம். ஒண்ணும் வேண்டாம். இங்க ஒரு பிரேதம் செத்துக் கெடக்கு. அந்தப் பெணத்தத் தூக்கித் தூரப்போட்ருவோம்.

பபூன் 2 : எங்க கெடக்கு பணம்? (ஏய்! பெணம்ப்பா)

பபூன் 1 : பெணங் கெடக்குடாங்றேன். பணத்தக் கேக்றான். பாத்தயா அவன்... {சிரிப்பு}. ஏடா! பெணங் கெடக்குடா.

பபூன் 2 : அட எங்கென பணம்? (டேய் பிரேதம்) பிளேதம். (ஆமா... பிரேதம்). ஏலே படுவா ராஸ்கல்! நான் இருக்ற ஒரு சோக்கென்னா, ரைட்டென்னா, ஒழுங்கென்னா, மருத்தென்னா, குருத்தென்னா, சைஸென்னா? அய்யா நான் இருக்ற ஒரு 'இன்ரெஸ்ட்' **என்னா**? செத்த

மனுஷனத் தூக்றதா நான்? (ம்... தூக்னா என்னா?)

பபூன் 1 : தூக்னா என்னா?

பபூன் 2 : அது 'கே'னா 'வு'னா 'கு'னா கேவலமடா நொண்ணே! (கேவலம்... அண்ணனா நொண்ணனா?)

பபூன் 1 : செத்த மனுஷனத் தூக்கிப் போடுறது அது ஒரு தர்மம்தான்டா.

பபூன் 2 : அப்ப எனக்குத் தடுமம் பிடிக்கல. ம். தடுமம் புடிக்காது எனக்கு... பொடி போட்றேன்.

பபூன் 1 : தர்மம்னு சொல்றான்னா... தடுமம்னு சொல்லிக்கிட்டு... மண்ட அகராதி புடிச்ச பயலே.

பபூன் 2 : சரி ஒனக்காக... கூடப் பெறந்த ஆண (ஏய்! அண்ணெ). அதனால நான் வேண்ணா, தலப் பக்கந் தூக்றேன். நீ வேண்ணா காலுப் பக்கந்தூக்கு. (ஏலே! காலுப் பக்கம் தூக்னா என்ன?) அட மக்காக் கோழி படுவா... காலுப் பக்கம் தூக்குனம்னா... நாள்பட்ட பெணம்... என்னா... தூக்கும் போது புளிச்சின்னு பேண்டிருவான் {சிரிப்பு} (சட்னு போடு நேரமாகுது).

பபூன் 1 : செத்த மனுஷந்தான் பேளப் போறானாங்கும்?

பபூன் 2 : பேண்டுட்டான்னு வை. யார்ரா கழுவுறது? {சிரிப்பு}

பபூன் 1 : சரி. நான் வேண்ணா சோப்பு வாங்கித் தர்றேன்.

பபூன் 2 : நான் போடுற சோப்பு நம்ம இந்தியாவ்லயே கிடையாது (வேற என்ன சோப்பு?)

பபூன் 1 : வேற எங்கிருந்து வரவழைக்கிறது?

பபூன் 2 : இது வந்து... கொழும்பு கொழும்பு.

பபூன் 1 : கொழம்பா?

பபூன் 2 : அமரிக்கா... அமரிக்காவ்லயிருந்து வருது இந்தச் சோப்பு.

பபூன் 1 : அந்தச் சோப்பு பேரென்ன?

பபூன் 2 : நக்குன சோப்பு {சிரிப்பு} (பாருடா டேய். நக்குன சோப்பா?)

பபூன் 1 : நக்ன சோப்பு. அந்தச் சோப்பு நீதான் போடணும்... தூக்குடா.

பபூன் 2 : நீ காலுப் பக்கந் தூக்கு.

பபூன் 1 : ஏல! தூக்கடா தம்பி.

பபூன் 2 : ஏல! தூக்குடா அண்ணே.

பபூன் 1 : ஏலே.... தூக்குடா.... டேய்....

பபூன் 2 : தூக்கு... தூக்கு... ஏய் ஜம்புலி... தூக்கு... தம்புடிச்சித் தூக்குடா... தூக்கு... இந்தா புடி.. அப்பா முதுகுல வலிக்குது... (டேய் டேய்! தூக்குடா மொட்டையா) அய்யய்யோ உச்சிக் குடுமி... {சிரிப்பு}

பபூன் 1 : ஏல தூக்குடா, கனமாயிருக்குடா.

பபூன் 2 : அய்யய்யோ... மொட்டத்தல வலிக்குதே...

பபூன் 1 : ஏல தூக்குடான்னா. தூக்கிக் குடுத்திட்டு... சினிமா டான்ஸ் போடுறான் பாத்தியா அவன்.

பபூன் 2 : டேய் படுவா. அயோக்கியப் பயலே. சும்மாயிருக்ற மனுஷனைக் கூப்புட்டுக் கொண்டாந்து தலயில தூக்கிக் குடுத்திட்டு, சும்ம நீ வேடிக்க பாத்துக்கிட்டாயிருக்கே... படுவா நீ! (பாத்தியாடா டேய்) {சிரிப்பு}

பபூன் 1 : டேய் நெசமாவா தூக்கிக்கிட்டு நிக்றே?

பபூன் 2 : சத்தியமா. இருபது புள்ள சத்தியமாத் தூக்கிக்கிட்டுத்தான் இருக்கேன். {சிரிப்பு}

பபூன் 1 : டேய் தூக்குடா. கனமாயிருக்குடா.

பபூன் 2 : அண்ணே! தூக்கிட்டேயிரு. கொஞ்சம்போலப் பேண்டுட்டு வந்துடுறேன். {சிரிப்பு}

பபூன் 1 : எங்கடா போய்ட்டான் அவன்? (பேளுறதக்குப் பொய்ட்டாண்டா). தூக்கச் சொல்வாங்கண்ணு பேள... 'பீ' வந்திருச்சுன்னு விழுந்து ஓடிப் பொய்ட்டான். நான் தூக்கிப் போட்றேன். ஏடா!... இந்தா... நாசமாப் போக. செக்கு ஒலக்கையாட்டம் இருக்கான்டா இவன்... [இசை] ஏய்! ஏன்டா எங்கடா போயிருந்த?

பபூன் 2 : பீ பேளப் போயிருந்தேன். {சிரிப்பு}

பபூன் 1 : இவ்ளவு நேரமா?

பபூன் 2 : நீ தூக்கிப் போட்டுட்டீல்ல. இனும எவனாவது செத்தான்னா நான் தூக்கிப் போட்றேன். {சிரிப்பு} செத்தவங்களப் பாத்து நீ தூக்கிக் கொண்டாந்து எங் கைல குடு. நான் தூக்கிப் போட்றேன்.

பபூன் 1 : நான் தூக்கிக் கொண்டாந்து... ஓங்கைல கொண்டாந்து குடுக்கணுமாக்கும். நான் அப்படீன்னு... நான் தூக்கிப் போட மாட்டனாங்கும்?

பபூன் 2 : அப்புறம் எதுக்கு என்னையக் கூப்புடுற? {சிரிப்பு} ஏண்டா மக்கா கோழி மேல கோழி வைக்கப் படுவா ராஸ்கோல் (மக்கா கோழி! ஏய் நல்ல வேட்டு ஒண்ணு வெடிடா) எடு எடு டுப்பாக்கிய... ரிவால்வார எடு... எடு எடு... டுப்பாக்கிய... சூத்தங்கிய எடு... புர்ர்... {சிரிப்பு}... [இசை]

பபூன் 1 : சரியான சூத்தங்கி வச்சிருக்கான்டா.

பாடல் : கற்பனை என்றாலும்
கற்சிலை என்றாலும்

கந்தனே உனை மறவேன்

....

திரிலோகமும் புகழும் சுந்தர
வீர வீர சூரன் நான் வந்தேன்.

இராவணன்: மகோதர மந்திரி!

மகோதரன் : மகாராஜா!

இராவணன்: என்னுடைய மகனாகிய அதிகாயன், வேட ராமனை ஜெயித்தானோ ஜெயிக்கவில்லையோ, யாது காரணமென்றும் தெரியவில்லை.

மகோதரன் : மகாராஜா! பயப்பட வேண்டாம். ஒங்களுடைய மகன் அதிகாயன்... போனவர்கள் கொரங்கு படைகளைப் பூராவும் ஜெயித்திருப்பார். அது எனக்குத் தெரியும் (ஆமா. அப்பவே பாத்திட்டாரு) {'அவன் அப்பவே காலி'} ஒங்களுடைய தம்பி ஜெயிக்கவில்லையென் றாலும், சிங்கம் நானிருக்கிறேன். என் பட்டாக் கத்தியினால் ஒவ்வொரு சொழட்டு - ஒவ்வொரு சொழட்டு - ஆஹாஹாஹா... நீங்கள் இதைப் பத்தி... நீங்கள் கலங்க வேண்டாம் மகாராஜா. யார் ஜெயித்தது, யார் ஜெயிக்கவில்லையென்று பார்த்து வருவதாகச் சொல்லி வந்தோம். அந்தா வருகிறார்கள்.

இராவணன்: வரட்டும்... [இசை]

மந்திரி : மகாராஜா!

இராவணன்: டேய் மந்திரிமார்களே! என் மகன் அதிகாயன் வேடராமனை ஜெயித்தானா? இல்லை வேட ராமன் கையினாலேயே உயிர்களை விட்டு விட்டானா? சொல்லடா சீக்கிரம்.

மந்திரி : மகாராஜா! உங்கள் மகன் அதிகாயனுக்கும் அந்த வேட ராமனுடைய தம்பியாகிய லட்சுமணனுக்கும்

சண்டை நடந்ததைப் பார்த்தால்... அடடாடா பயங்கர சண்டை. அப்பேர்ப்பட்ட சண்டை... போர்களும் நடந்து கொண்டு வருகிறது.

இராவணன்: சபாஷ்... சபாஷ்... (செத்துப் போனான்... நீ சபாஷ் போட்ற!) கடைசியில் ஜெயித்தவர்கள் யாரடா?

மந்திரி : கடசீல...

இராவணன்: யாரடா ஜெயித்தவர்கள்?

மந்திரி : வேட ராமனுடைய தம்பியாகிய லெட்சுமணனுடைய கைப்படவே ஒங்களுடைய மகன் அதிகாயன் மரணமடைந்து விட்டான் மகாராஜா! ஒங்களுடைய தம்பி... ஆனால்... மகனாகிய அதிகாயன் இறந்து விட்டான்.

இராவணன்: அய்யய்யோ... மகனே...! [அடிக்கிறான்] (அய்ய மங்குமங்குன்னு குத்றான்)

பபூன் 2 : பாதி உயிர வாங்கிறணும்.

இராவணன்: போகும் எடங்களைப் பூராகவே கொன்று விடுகிறான் வேட ராமன். அவனைக் கொல்லக் கூடியவர்கள்... ஜெயிக்கக் கூடியவர்கள் நம்முடைய அரமணைக்குள்ளாக ஒருவருமில்லாமல் போய்விட்டார்களே!

மகோதரன் : மகாராஜா! ஏனில்லை? நீங்கயிருக்கீங்க. சிங்கம் நானிருக்கிறேன். என்னுடைய பட்டாக் கத்தியிருக்கிறது (எதுக்கு... கௌப்றதுக்கா? கொஞ்சம் தண்ணி கொண்ட்டுட்டுப் போங்க).

பபூன் 2 : வட்டய எடுக்க {சிரிப்பு - 'சபாஷ்... சபாஷ்'}.

மகோதரன் : பெறப்படுங்கள். இந்தக் கடசி நாள் அமர்... களம் போய்ச் சேரலாம். ஆனால் இந்தக் கடசி நாள் போர்முனைக்கிச் சென்று கொரங்குப் படை

களையும் வேட ராமனையும் ஜெயித்து வரலாம் மகாராஜா! பிறப்படுங்கள், நான் வருகிறேன்.

இராவணன்: நாங்கள் என்னத்த ஜெயிக்கப் போகிறோம்?

மகோதரன் : அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். என் வீரம், என்னுடைய சாமர்த்தியங்களைப் பாருங்கள். ஆனால்... என்னுடைய மந்த்ர வாளால் எத்தனை பேர் மரணம் அடைகிறார்கள் என்று!

இராவணன்:சரி புறப்படு.

மகோதரன் : வாருங்கள். போகலாம்... [இசை]

பபூன் 2 : தனனத்தான... தனனத்தான... தனன... தனன... சரணம் சரணம் சட்டி நெறயாப் போடு சரணம்... ஆ... ஆ... (ம். இவரு எந்த ஊரு?) அய்யா எம்பேரு கருப்பண்ண.. கருப்பண்ண.. எம்பேரு (கருப்பண்ண! எந்த ஊரு நமக்கு?). நமக்கு வந்து வெயிலடிச்சாம்பட்டி (ம். எல்லா ஊர்லயும் நெழலடிக்குது. ஒங்க ஊர்ல வெயிலு) நம்ம குடும்பத்ல ஏகத் தகராறு... சண்ட.... எனக்கு ரெண்டு பொண்டாட்டி. (சண்ட வருமே). ரெண்டு பொண்டாட்டியாகயிருந்தால்... ரெண்டு பொண்டாட்டி பேர் ஒங்களுக்குத் தெரியுமா அய்யா? (தெரியாது). மூத்தவ பேரு வந்து ஒறமொற குந்தாணி (மூத்தப் பொண்டாட்டி பேரு வந்து ஒறமொற குந்தாணி. எளயவா பேரு?) எளயவ பேரு வந்து மந்தகுந்தாணி (பரவாயில்ல. ரெண்டு குந்தாணியும் நெல்லுக் குத்த ஆகும்). ரெண்டு... ஆனால் ரெண்டு குந்தாணிகளையும் என் அத்த (அத்த... மாமியா) எம் மாமியா கல்யாணம் முடிச்சிக் குடுத்தா... என்ன... ஆனா ஒருத்தி கிட்ட வந்து தண்ணி கேட்டமுன்னா தண்ணிச் செம்பக் கொண்டாந்து மூஞ்சில இடிக்க வர்றா

(இடிக்கத்தான் செய்வா. விடுவாகளா). அட, தோச கேட்டமுன்னா, சட்டி நெறைய சோறு போட்டுத் தலயில கொண்டாந்து கொட்ரா (பெறவு.... கொட்டாம வேற வேல?) ஏய்! சே! எந்த வாழ்க்கை செய்யலேன்னாலும்... எங்கயாவது சன்னியாசி சாமியாராப் போயிரலா மினுட்டு அப்படி அவுக கூட சண்ட போட்டுட்டு (எந்த ஊருக்குப் பெறப்பட்டாச்சி இப்ப) அப்படியே கண்டி கதிர்காமம்... என்ன... ரங்கூன், சிலோன், பர்மா, மெட்ராஸ் அப்படியே கௌம்பியாச்சி. (சம்பாதிக்க) ஆமா. (பரவா யில்ல) அய்யா! நா இங்க சாப்பிட்டுக்கடம்ட யிருக்கிறேன். முக்கியமா... வந்து... எம் மாமியா தான் வந்து தேடுவா. (தேடுவாளா) ம்.. ம் (சரி) ஆனால், நான் இங்க இல்லேன்னு சொல்லி வுடுங்க (சரி). பாத்துட்டான்னா கையோட இழுத்துக்கிட்டுப் போயி அந்தப் பிசாசுகூட சண்ட போட வுட்ருவா. (ம். இப்படி அழகு மருமகன விட்டுட்டா வேற வழி வேணுமே) ம். அப்ப சாப்பிட்டுக்கிட்டிருக்கேன்... [இசை]

மாமியார் : (இந்த மாமிதானா? மாமியா... இப்படிச் சட போட்ருக்காளே!) ஏ! அணச்சி (ஏய், என்ன? அண்ணாச்சின்னு கூப்பிடு. அணச்சியில்ல) ஏ! அணச்சி (என்ன அணச்சி? ஏ கழுத! அணச்சின்னு கூப்பிடாத. அண்ணாச்சின்னு கூப்பிடு). பேசக்கூட மாட்டேங்குறாரு (அதான் என்னன்னு கேக்றனே). அய்யோ! என் குடும்பத்துச் சமாசாரத்தக் கேட்டீங்களா அண்ணாச்சி. (குடும்பத்ல என்னா சமாசாரம்னு தெரியாதெ) எனக்கு ரெண்டு பொம்பளப் புள்ளய. மூத்தவ பேரு வந்து ஒறமொற குந்தாணி. எளையவ பேரு வந்து மந்த குந்தாணி. ஆனால்... ஆச மருமகனுக்குக் கல்யாணம் முடிச்சிக் குடுத்தேன் (ஆச மருமகனுக்கு). ஆமா.

அத வச்சிப் பொழைக்காம மெட்ராஸுக்குப் போறேன், மெட்ராஸுக்குப் போறேங்றாரு அண்ணாச்சி! (போய்ட்டு வரட்டுமே. கொஞ்ச நாளைக்கி விட்டுப் புடியேன்) அய்ய. அட, மருமகனைப் பாக்காம... எங்கண்ணுக்குள் ளேயே திரியுறாரே! (இப்ப எங்க தேடிப் போற?) அய்யய்யோ ஊரெல்லாம் தேடிட் டேன். மருமகன் இருக்ற எடமே தெரியல (ம். இந்தப் பக்கம் வரலயம்மா) ஏ! பாத்திருந்தா கொஞ்சம் சொல்லுங்களேன். ஓங்களுக்குத் தருமமாயிருக்கும் (நாங்க பாக்கல). அய்யோ எங்கெங்கேல்லாம் சுத்திப் பாத்துக்கிட்டே வர்றேன் (பாக்கலம்மா. ஓங்க மருமகன் பேரென்ன?) மருமகன் பேருதான் மாமியா சொல்வாகளாக்கும் (ஏன் சொன்னா என்னா ஆக்கும்?) அய்யோ நான் கழிஞ்சி போவேன் (அப்ப இந்தப் பக்கம் நின்னுக் கூப்புடு. எங்கிட்டும் நின்னா வருவான்). சத்தம் போட்ட மின்னா என் ‘சவுண்டு’ கேட்ட வொடன மருமகன் காத்தாப் பறந்து எங்கிட்ட ஓடி வந்திடுவாரு (வொடன ஓடியாந்திருவாரு. அந்த எலத்தொட்டிப் பக்கம் நிப்பாரு). கூப்பிடுவமா? (ம்) கூப்பிட்டுப் பாப்பமா? (கூப்புடு... கூப்புடு) ஏ!... ஏ!... மருமகனே! (பதினொன்ர சங்கு ஊதுது இப்பத்தான்) {சிரிப்பு} ஏ... ஏ! மருமகனே!

பபூன் 2 : ஏண்டி புள்ள அத்த! (அப்படிப் போடு பின்னால போயி) {சிரிப்பு} (ஏண்டி புள்ள அத்த! எவ்வளவு மதிப்பு?) ஏண்டி புள்ள அத்த...! (ம். இன்னும் ரெண்டு பொண்ணக் கெட்டிக் குடம்மா)

மாமியார் : அய்ய... மருமகன் ‘சவுண்டு’ கேக்றாப்ல தெரியுது. (ம். அவுகதான். அவுகதான்) ஏம் மருமகனே!

பபூன் 2 : என்ன? என்ன அத்த? என்னா? என்ன சமாச்சாரம்? என்ன எதுக்குத் தேடிக்கிட்டு வந்தீக?

மாமியார் : குடும்பத்ல சண்டையாக இருந்தம்னா இப்படி நீங்க கோவிச்சுக்கிட்டுப் போகலாமா? கோவிச்சிக்கிட்டு நீங்கப் போகக் கூடாது மருமகனே! வந்து கொஞ்சம் சாப்பிட்டுப் போங்க.

பபூன் 2 : வேண்டாம் வேண்டாம் வேண்டாம். இப்பத் தான் அய்யர் கடயில உப்பு மாவு, கேப்ப மாவெல்லாம் சாப்பிட்டு வந்திருக்றேன். ரெண்டு நாள் பட்னி. ஏவ்வ்வ்...(ரெண்டு நாள் பட்னி,... உப்புமா, கேப்பமா சாப்ட்டானாம்!.)

மாமியார் : அய்யோ... பட்னியாகக் கெடந்தம்னா ஒடம்புக்கு என்னாகும் மருமகனே (ஒடம்பு, துரும்பா எளச்சிரும்). வந்து சாப்ட்டுப் போங்க. ஆனால் எம் பொம்பளப் புள்ளைங்க ஆக்கிவைக்கலேன்னாலும் நானாவது சமையல் செய்து போட்றேன். ஆனா சாப்பிட்டிட்டு நீங்க வீட்லயிருந்தாலும் போதும். அப்படிச் சம்பாதிக்க வேண்டாம் மருமகனே (ம். மாமியா சம்பாதிச்சுப் போடுவாப்பா போப்பா).

பபூன் 2 : சரி. மாமியா சொல்லிட்டா (சொல்லிட்டா). ஆமாம். அவ சொல்றத நான் கேக்கணும்... மாமியா சொல்றத! (அடக் கொலகாரப் பாவி) என்ன...ஏய் அய்த்தே! ஏ அய்த்தே! என்ன கறி? என்ன சோறு? என்ன சோறு பொங்கிப் போடப் போறீக?

மாமியார் : மருமகனே! சோறு பொங்கிப் போடணுமா?... சொல்றங் கேளுங்க...

பாடல் : **பச்சரிசி ஆக்கணுமா**
புழுங்கரிசி ஆக்கணுமா

எந்த அரிசி ஆக்கணும் - மருமகனே
சொல்லுங்க சீக்கிரம்

மருமகனே! பச்சிரிசி ஆக்கணுமா? புழுங்கரிசி ஆக்கணுமா? (என்ன அரிசி ஆக்கணும்? மருமகனே சொல்லுங்க சீக்கிரம்.)

பபூன் 2 : அய்த்தே!...

பாடல் : **பச்சரிசி புழுங்கரிசி**
அப்படியே யிருக்கட்டும் (பச்சரிசி)
சோளச்சோறு
ஆக்கிப் போடுங்க.

அய்த்தே! பச்சரிசி, புழுங்கரிசி அப்படியே யிருக்கட்டும் (சோளச்சோறுதான் புடிக்கும்). புடிக்கும். சோளச் சோறு இருக்கு பாருங்க. இந்தச் சோளத்தப் போடாம நல்லா எடுத்து ஒரு பானைல போட்டு...கொளகொளன்னு நல்லா ஆக்கிட்டம்னா, ஆனா... ஒரு செம்புக்கு நாலு செம்பு சாப்பிட்டுட்டம்னா... ஆனா வயிறு திம்முனு இருக்கும். வகுறு நெறஞ்சி (ம். விடியக்காலேல சொல்லாம ஓடணும்) காலேல போய் உக்காந்திட்டா வெளிக்கி கிளி போலப் போகும் (வயக்காட்டுக்கு ஓரம்). ஆமா. வகுறு சுத்தமாகும்.

மாமியார் : அய்யய்யோ... சோளச்சோறு ஆக்கணுமா? வகுத்தாலப் போகும்... வாய்வார்சே! அதுக்குக் கரெக்ட்... என்னக் கறி வைக்கறதுங்க?...

பாடல் : **ஆட்டுக்கறி ஆக்கவா**
கோழிக் கறி ஆக்கவா (ஆட்டுக்)
சொல்லுங்க மருமகனே
சொல்லுங்க மருமகனே.

மருமகனே : ஆட்டுக்கறி ஆக்கணுமா? கோழிக்கறி ஆக்கணுமா?

பபூன் 2 : ஆட்டுக்கறியும் வேண்டாம். கோழிக் கறியும் வேண்டாம்.

பாடல் : **ஆட்டக்கறி கோழிக்கறி**
அப்படியே இருக்கட்டும் (ஆட்டுக்)
சோளச்சோறு ஆக்கிறணும் - கொளகொளன்னு
சோளச்சோறு ஆக்கிறணும்

(அந்தக் காலத்துப் பட்டிக்காட்டு மனுஷன் இவன்) ஆனா பச்சரிசி... ஆனா, ஆட்டுக் கறியும் வேண்டாம். கோழிக்கறியும் வேண்டாம் (ம். சோளச்சோறும் கானத் தொவயலும் வேணுமா) இந்தக்... கானப் பயறு இருக்கில்லா... அத நல்லா வறுத்து, சட்னியாக்கி விடுங்க. நல்லா அரச்சிக் குடுத்தம்னா சோளச் சோத்துக்கும் கானப் பயறுக்கும்... ஆனா சட்னிக்கும் ரொம்ப 'ரைட்டா'யிருக்கும். நாளைக்கி வச்சிச் சாப்பிடலாம்.

மாமியார் : அய்யோ, ஆக்கி யாருகிட்ட குடுத்தனுப்பறது மருமகனே!

பாடல் : **சின்ன மகள அனுப்பட்டா**
பெரிய மகள அனுப்பட்டா (சின்ன)
சொல்லுங்க மருமகனே
சொல்லுங்க மருமகனே

பபூன் 2 : சின்ன மகா பெரிய மகா
அப்படியே யிருக்கட்டும் (சின்ன)
நீங்க வந்து போயிருங்க - அத்த
நீங்க வந்து போயிருங்க
ஏய்... ஏய்... ஏய்... ஏய்... (வேண்டாம்டா.)

பபூன் 1 : நாசமாப் போன பயலே! ம். நல்லாயிருக்கு. மாமியாளும் மருமகனும் ஆட்ற ரிகார்டு டான்ஸ். எங்க வந்து டான்ஸ் போடுறாக பாத்தியா இவுக.

பபூன் 2 : ஏய் படுவா! 'இன்ரஸ்' தெரியாத பயலே! {சிரிப்பு}. ஒனக்கு ரசிக்கத் தெரியுதாடா படுவா. (ம்... என்னத்தடா வாசிக்ற) மாமியாளும் மருமகனும் எவ்வளவு அழகா டான்ஸு போடுறாக... ஓரியண்டல் டான்ஸு. ஏய்! பளிச்சின்னு அடிச்சி வெரட்டி விட்டுட்டானெ! மக்கா கோழி மேல கோழி வைக்கப் படுவா... ராஸ்கோல்! ஏல! கொஞ்சமாவது ஒனக்கு ரசிக்கத் தெரியுதா? (அவனுக்குத் தெரியாதப்பா)

பபூன் 1 : ஏய்! அவுகதான் டான்ஸு போடுறாகன்னா நீங்களுமா டான்ஸு போடணும்? (எல்லாரும் சேர்ந்து ஆட வேண்டியதுதானே)

பபூன் 2 : இது மேல் நாட்டு நடனம். இது வந்து இங்லீஷ் நடனம். இங்லீஷ் ரிகார்டு போட்டு.. அப்படியப்படி.. அப்படியப்படி...

பபூன் 1 : என்ன... எப்படியெப்படி? [அடிக்கிறான்] எம்மேலதான் இடிச்சித் தள்ளிட்டு வாரான்.

பபூன் 3 : மாப்ள... அந்த அஞ்சி பைசா.

பபூன் 1 : யாருகிட்டக் கேக்றாம் பாரு [அடிக்கிறான்]. அவங்கிட்டே கொடுத்துப்புட்டு எங்கிட்ட கேக்றான்... [இசை]

இராமர் : விபூஷணரே! இவர்கள் யார்?

விபிடணன்: ராவணனும், மகோதரனும்... இந்தக் கடசி நாள் போர்முனைக்காக வந்திருக்கிறார்கள். இவர்கள் இரு பேர்களையும் நீங்கள் கொன்று விட்டால் கோட்டைக்குள்ளாக நாய், நரிகள் போனாலும் வெரட்றதுக்கு ஒரு நாதியும் கெடயாது. தங்களுடைய அம்புனால் இந்தப் பேர்களையும் கொன்று விடுங்கள்.

இராமர் : அப்படியா. கொன்று விடுகிறேன்... [இசை]

மகோதரன் : மகாராஜா!

இராவணன்: வந்தேன் (வாயப் போடாதிங்க மந்திரி! தலகாணி) {'அடப்பாவி'}

மகோதரன் : ஆனால், நான் போனதுலயிருந்து... ஒரு கொரங்கு சத்தமே கெடயாது (எல்லாம் இட்லி பண்ணிட்டாரு). எல்லாக் கொரங்குகளையும் என் வீர வாளால் குத்திக் கொலை செய்து விட்டேன் மகாராஜா. நீங்கள் ஒன்றும் பயப்படாதீர்கள் (பயப்படவேண்டாம்). எல்லாக் குரங்குகளையும் சட்னி சட்னியாக்கீட்டேன் (இட்லிதான் அவிக்கணும்)

பபூன் 2 : யாரை?

பபூன் 1 : ஏப்பா... கொரங்கு {சிரிப்பு} (அங்க செம்மையா வாங்கிக் கட்டிக்கிட்டு வந்துட்டு இங்க வந்து பெருமையா சொல்றான்).

பபூன் 2 : வாங்க... வெட்டுங்க... வாங்க. {சிரிப்பு}. அட என்னையக் கண்டு பயந்து ஓட்னவன் கொரங்க எப்படி வெட்டியிருப்பான்? {சிரிப்பு}.

மகோதரன் : வெட்டுவேன் (எங்க வெட்டுவ?) மகாராஜா!

இராவணன்: இன்னும் யார் மிச்சம் இருக்கிறார்கள்?

மகோதரன் : எல்லாக் கொரங்குகளும் இறந்து விட்டது. அந்த ராமன் ஒருவன்தான் மிச்சம். அந்த ராமனை என்னுடைய மந்த்ர வாளால் கண்ட துண்டமாக வெட்டிக் காக்கைக் கழுகுகளுக்கு இரையளித்து வருகிறேன்.

இராவணன்: எங்கே பார்க்கலாம் உன்னுடைய சாமர்த்தியத்தை... [இசை]

இராமர் : டேய் மகோதர மந்திரி! ஒருவனுடைய குடும்பத்தைப் பூராவும் கெடுத்த பாவியே! உன்னை நான் நரகத்துக்குக் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்.

மகோதரன் : ஏ! நாராயுணா, பரந்தாமா! எம்பெருமானே! (கீழ விழுந்து கும்புடு). ஆனால்... நான் செய்து வந்த குத்தமென்ன? நீங்கள் தெய்வ லோகத்தில் பேசிய தெய்வ ரகசியத்தை... நீங்கள் மறந்து விட்டீர்களா? இந்த இராவணன், சகல வரங்கள் வாங்கிக் கொண்டு முப்பத்து முக்கோடி முனிவர்களையும் நாற்பத்தி எண்ணாயிரங் கோடி ரிஷிமார்களையும் அடக்கி அரசு புரிந்து கொண்டு வருகிறான் ராவணன் (ஆமா). நீங்கள் கிருஷ்ணாவதாரமாக இருக்கும்போது... ஆனால் நீங்கள் என்னைய... நான் ஒரு நித்திய தேவன்... என்னையப் பிடித்து மந்திரிவேலைக்காக இந்த ராவணனிடம் அனுப்பவில்லையா? அப்போது நீங்கள் என்னது தெரியப்படுத்தி வந்தீர்கள்? மகோதரனாக இருந்து ஒவ்வொரு அரசர்களாகத் தள்ளி விட வேண்டும். கடசியில் ராவணனுடைய உயிர்கள் போவதற்குள்ளாக ஒனக்கு நான் மோட்சம் தருவதாக தெய்வலோகத்தில் நீங்கள் பேசவில்லையா சுவாமி? தெய்வ ரகசியத்தை மறந்து விட்டீர்களா பிரபு?

இராமர் : சர்தான். தெய்வ லோகத்தில் பேசிய தெய்வ ரகசியத்தைப் போல நீ நடந்து விட்டாய். இருந்தாலும் ஒருவனுடைய குடும்பத்தை நீ கெடுத்து விட்டாய் அல்லவா? உனக்கு நான் மோட்சங் கொடுத்து விட்டால் உலகம் என்னைய ஏற்காது. ஒனக்குப் பாதி மோட்சமும் பாதி நரகங்களையும் தருகிறேன்...

பாடல் : **ராம ராகவ ராவண ராட்சத**
ராகவன் வருவான்

மகோதரன் : மகாராஜா! இவ்வளவுதான் ஒங்களுக்கும் எனக்கும் குடுத்து வைத்தது. நான் முன்னதாகப் போகிறேன். நீங்கள் பின்பதாக வந்து விடுங்கள் (பின்னால வந்திடுவாக).

பபூன் 2 : அதெல்லாம் சொல்லி வச்சித் தயாராயிருக்குது. சீக்கிரம் வாங்க. 'டயம்' ஆகுது.

இராவணன்: எப்படியாவது வேட ராமனை ஜெயித்துவா.

மகோதரன் : வருகிறேன்...

பாடல் : ராம ராகவ ராட்சத ராவண
ராகவன் வருவான்
வாசுதேவக் குமரா - ஹரே
வாசுதேவக் குமரா
....
....

இராவணன்: [உரைப்பாட்டு]
சூர்ப்பநகை வார்த்தையை நான் கேட்டு... தங்கை சூர்ப்பநகை வார்த்தையைக் கேட்டு, நான் சீதையை நான் சிறை எடுத்தேன். என் வார்த்தைகளைக்கேட்டு என் ஜனங்களை நான் தோர்வையடைந்தேன். கடசிச் சண்டையில் வந்து என்னையப் போர்களத்தில் நிராயுதமாக நிற்க வைத்து, நீ எமலோகம் சென்று விட்டாயே மகோதரா... ஆ.... ஆ... மந்திரி! ஆனால் வேட ராமனை ஜெயித்து விடுவோமென்று எவ்வளவு தைரியமான வார்த்தைகளை நீ தெரியப்படுத்தி... ஆனால்... என்னையத் தனிமரமாக நிற்க வைத்து, நீ எமலோகம் சென்று விட்டாயே. இனி தைர்யமான வார்த்தைகளைச் சொல்லக் கூடியவர்களும் வேட ராமனை ஜெயிக்கக் கூடியவர்களும் ஒருவருமில்லாது போய் விட்டார்களே மகோதர மந்திரி. ஆனால் இவனைக் கண்டு நான் அழுது புலம்பிக் கொண்டிருந்தால்... ஆனால்... வேட ராமன் என்னைப் போய்க் கேவலமாகவே சொல்வான். நான் கூடிய வரையிலும் எதுத்து நின்னு... நான் எதுத்து நின்னு சண்டை செய்து வருகிறேன்.

பாடல் : **ராம ராகவ ராட்சத ராவண**
ராகவன் வருவான்....

இராமர் : யாரப்பா விபூஷணரே! உன்னுடைய அண்ணனு டைய தலை வெட்டினால் தலை முளைத்து வருகிறது. கை கால்களை வெட்டினாலும் கை கால்கள் முளைத்து வருகிறது. உன்னுடைய அண்ணனுடைய உயிர்கள் எந்த இடத்தில் இருக்கிறது? சொல் பார்ப்போம்.

விபீடணன் : பிரபு! இவனைக் கண்டந்துண்டமாக வெட்டி னால் இவனுடைய உயிர்கள் போகாது. இவனு டைய பத்துத்தலையில் நடுத்தலையானது இருக்கிறது. ஆனால் நடுத்தலையை இரண்டா கவே உடைக்க வேண்டும். நெஞ்சுக்குள்ளாக அமிர்த கலசம் இருக்கிறது. அந்த அமிர்த கலசத்தை உடைத்து விட்டால் ஆனால்... மலைபோல் மாண்டு விடுவான் சுவாமி.

இராமர் : அமிர்த கலசங்கள்.... ஆனால் அதை உடைத்து விட்டால் இவன் மரணமடைந்து விடுவானா? முப்பத்து முக்கோடி முனிவர்கள்... அன்ன ஆகாரங்களைச் சேர்ந்தது... இந்த இராவணனு க்கு எப்படி... ஆனால்... கிடைந்து வந்தது?

விபீடணன் : அந்த வரலாறுகளைச் சொல்லுகிறேன். கவனமாகக் கேளுங்கள். முப்பத்து முக்கோடி முனிவர்களும், நாற்பத்து எண்ணாயிரங்கோடி ரிஷிமார்களும் திருப்பாற்கடலில் அமிர்தங்கடையும் சமயத்தில், அதுலொரு முனிவன் அமிர்த கலயத்தைத் தூக்கிக் கொண்டு... திருடிக் கொண்டு ஒட்டமாக ஓடி வந்தான். இந்த ராவணேஸ்வரன், அந்த ஈஸ்வரனிடம் வரங்கள் வாங்கிக்கொண்டு, அந்தப் பாதையுடனே வந்தான். அந்த முனிவர் இந்த ராவணனைக் கண்டு பயந்து... ஆனால்... ஒரு செடிமறைவாக இந்த அமிர்த கலயத்தை ஒளித்து வைத்துவிட்டு

அந்த முனிவர் விழுந்து ஓடிப் போய் விட்டார். இந்த ராவணன், வரக்கூடியவன் லெங்கைக்கு வராமல், என்னடா இந்த முனிவன் என்னையக் கண்டு பயந்து ஓட்டமாக ஓடிவந்தான். அந்தச் செடியருகில் மறைவாக ஏதோ வைத்து விட்டு ஓடுகிறானே! அது என்ன பார்ப்போம் அப்படீன்னு ஓட்டமாக ஓடிவந்தான். ஆனால் அமிர்த கலயமானது அந்தச் செடிக்குள்ளாக மறைத்து வைத்திருக்கிறான் அந்த முனிவன். இவன் ஓட்டமாக ஓடிப் போய் அதைத் தூக்கி... அதை மணந்து பார்த்தான். மோந்து பார்க்க..., ஆனால்... பின்பதாகவே தெரியும். இவனுக்கு அதைச் சாப்பிடத் தெரியாமல் அந்தக் கலயத்தோடு தூக்கி முழுங்கி விட்டான். முழுங்னவொடன அவனது நெஞ்சுக்குள்ளா கவே போய் ஒரு உயிராகவேயிருக்கிறது. ஆனால்... அந்த அமிர்த கலயத்தை நீங்கள் உடைக்கும் பொழுது, அதை உடையாமல், துண்டாகவே கீழ் விழுந்து விடவேண்டும். அதில் ஒரு சில்லாவது இவனது திரேகத்தில் பட்டுவிட்டால் இந்த ராவணனைப் போல் முப்பத்ரெண்டு ராவணன் அதுக்குள்ளாகயிருந்து வருவான். அப்பேர்ப்பட்ட ஒரு பிராக்ரமம் படைத்தவன்.

இராமர் : சரி. அப்படியே நான் உடைத்து விடுகிறேன்... [இசை]

இராவணன்: ஏ தம்பி! விபூஷணரே! யார்க்கும் சற்குணமான குணம் படைத்த தம்பி விபூஷணா! கூடப்பிறந்த பிறவி என்று தெரியாமல் கூட்டுப் பால் உண்ணவர்கள் அல்லவா? ஆனால் உன்னு டைய அங்கங்கள் கொஞ்சமாவது பதற வில்லையா? ஆனால் என்னுடைய உயிர்களைச் சொல்லிக் கொடுத்து உன்னுடைய மனதுகள் எப்படித் துணிந்து வந்தது தம்பி விபூஷணரே!

விபீடணன் : அடப் பாவி! இப்பத்தான் தம்பி என்று உன்னுடைய கண்கள் தெரிந்ததா? ராமா, மொதலாக நம்முடைய அரமணைக்கி வருவதற்கு முன்பாகவே எவ்வளவோ புத்திமதியான வார்த்தைகள் சொன்னேன். அந்தச் சீதையைக் கொண்ட்டு போய் விட்டு விடு. ராமருடைய பொல்லாப்பு நமக்கு வேண்டாம். அப்படீன்னு நான் புத்திமதியான வார்த்தை சொல்ல, அதை நீ உன்னுடைய இருபது கையினாலயும் என்னுடைய கன்னத்தில் அடித்து,... ஆனால் என்னைய அடித்து வெரட்டியிருந்தாலும் நான் அதைப் பத்தி நான் கவலைப்படமாட்டேன். வேலை செய்யக் கூடிய வேலையாட்களை அனுப்பி என்னைய அடித்து அவமானப்படுத்தி கோட்டைக்கி வெளியே தள்ளி விட்டாயே. அப்போது இல்லாத தம்பி... இப்போ எப்படி வந்துவிட்டான்? சுவாமி! அந்த நாய் முகத்தைப் பார்க்காதீர்கள். அவனுடைய அமிர்த கலசத்தை உடைத்து விடுங்கள்... [இசை]

பபூன் 2 : அய்யய்யோ (என்னடா?) அட... கூடப் பெறந்த பொறவின்னு தெரியாம... (கூடப் பெறந்த பெறவி) என்னமோ இருக்குது (அமிர்த கலசம்) இருக்குது ஒடச்சிப் போடுங்க. சட்னு போகட்டும் (அதுக்கென்ன?). எனக்குல்லா குண்டி எரியுது {சிரிப்பு}. எங்க மண்டயிடியக் காணோம்? (மந்திரி செத்துப் போனாரு) அய்யோ மந்திரி செத்துப் போய்ட்டானா? அவனக் கொண்ட்டு... அமிக்கிட்டு வந்திட்றேன்...

பாடல் : ....

ராம ராகவ ராட்சத ராவண

ராகவன் வருவான்.......

....

....

இராமர் : விபூஷணரே!

விபீடணன் : சுவாமி!

இராமர் : உன்னுடைய அண்ணனைக் கண்டு, எதிராளி பகையாளி என்று பகைத்து.... என்னிடம் அடைக்கலமாகவே சேர்ந்தாய். உன்னுடைய அண்ணனை இழந்தவுடனே... கூப்பிட வேண்டிய காரணமென்ன?

விபீடணன் : மன்னிக்க வேண்டும் பிரபு. நூறு எதிரியிருந் தாலும், நூறு பகையாளி இருந்த போதிலும்... ஆனால்...கூடப் பொறந்தவர்கள், கூட்டுப் பால் உண்ணவர்கள்... அவர்கள் அழுகவில்லை யென்றாலும் அவர்கள் அங்கங்கள் கொஞ்ச மாவது பதறாதா சுவாமி? (பதறத்தான் செய்யும்).

இராமர் : பதறத்தான் செய்யும் அப்பா. அவனை நான்... வஞ்சகமாக நான் கொல்ல வரவில்லை. அவன் செய்து வந்த ஒரு அக்குறுமங்களுக்கும், தான் என்ற கெர்வத்தினால் கொண்டாடி வருவான்... ஆனால்... நரகத்தில் போய்ச் சேரக் கூடிய ஒரு மனிதன். உன்னுடைய முகத்தில்... ஆனால்... உனக்காக, தயவு தாட்சணையால் அவனுக்கு நான் பாதி மோட்சம் நான் குடுத்திருக்கிறேன். அவனை எடுத்துத் தகனம் செய்து, சிறையி லிருக்க வேண்டிய சீதாலக்ஷ்மியைச் சிறை மீட்டி வாருங்கள்.

விபீடணன் : ரொம்ப சந்தோஷம்.

இராமர் : யாரப்பா, அனுமாரே! ஆஞ்சநேயரே! இந்த ராவணனைத் தூக்கிக் கொண்டு விபூஷணரு டைய பின்பதாகப் போய் ராவணனைத் தகனம் செய்து, சீதாலக்ஷ்மியைச் சிறை மீட்டி வாருங்கள்.

அனுமான் : வருகிறேன்... [இசை]

இராமர் : போ.

அனுமன் : போங்க... போங்க....போங்க....

பாவையாட்டி : 'ராவணனை எடுத்துத் தகனம் செய்யும் போது ராவணனுடைய மனைவியாகிய... சொந்த மனைவி பட்டத்து ராணி மண்டோதரி, ''என்னுடைய கணவன் மரணமடைந்து விட்டால் இனிமேல் நாங்கள் உயிரோடிருந்து என்ன பிரயோஜனங்கள்'' அப்படியென்று, அந்த மண்டோதரியானவள் வந்து மரணமடைந் தாள். அக்கினிக்குள்ளாக விழுகவும் அவளைத் தூக்கி... ஆனால்... தகனம் செய்தார்கள். அறுபது பெண்கள் வைப்புகளும் அக்கினியில் வந்து விழுந்தார்கள். அவர்களையும் எடுத்துத் தகனம் செய்தார்கள். சிறையில் சென்று சீதாலக்ஷ்மியை இதோ சிறைமீட்டி வருகிறார்கள்'

பாடல் : ஜானகி வாராளே.....
ராகவன் தேவி
ஜானகி வாராளே!
....

அனுமன் : ராவணனை எடுத்துத் தகனம் செய்தோம். ராவணனுடைய மனைவிகள் அத்தனை பேரும் மரணமடைந்தார்கள். அவர்களை எடுத்துத் தகனம் செய்து சிறையில் இருக்க வேண்டிய தேவியை நான் மீட்டி வந்திருக்கின்றேன்.

இராமர் : அனுமாரே! ராவணனுடைய கோட்டைக் குள்ளாகவே இருந்ததனால் இவளுடைய கற்பின் நீதி, நேர்மையை நான் அறிய வேண்டும். அக்னி வளர்த்து அக்னிக்குள் இறங்கி வந்தால் இந்தச் சீதையை நான் சேர்த்துக் கொள்வேன். இல்லையென்றால் சேர்ப்பது கிடையாது.

அனுமன் : தேவி! அக்னிக்குள்ளாக நீங்கள் இறங்கி வரவேண்டும்.

சீதை : அக்கினி வளர்த்தால் அக்னிக்குள்ளாக நான் இறங்கி வருகிறேன் அனுமாரே.

அனுமன் : ரொம்ப சந்தோஷம்.

பாடல் : **அக்னியில் இறங்கினாளே**
ஜானகி தாயார்
அக்கினியில் இறங்கினாளே
அக்கினியில் இறங்கினாளே
பத்தரை மாத்துத் தங்கம் போல
அக்கினிக்குள் இறங்கினாளே (அக்கினி)

இராமர் : ஜானகி! ஒரு மானுக்காக ஒருவனுடைய குடும்பங்கள் பூராகவே அழிந்து விட்டது.

சீதை : நான் தெரிந்தும் தெரியாமலும்... மான் பிடித்துத் தர வேண்டுமென்று நான் தெரியப்படுத்தி விட்டேன். மன்னிக்க வேண்டும் பிரபு.

இராமர் : என்னுடைய பின்புறமாக வா. ஆனால் இங்கு விபீஷணனுக்குச் சொன்ன வாக்குகளை.... நான்.... தவறாமல் இந்த லங்கை பூராக இவனுக்கு நான் சொந்தமாக்கி விடுகிறேன்.

சீதை : ரொம்ப சந்தோஷம். ஆனால் விபீஷணனுடைய மகளாகிய திரிசடையை...

இராமர் : தேவி!

சீதை : இந்தப் பத்துமாதக் காலமாக என்னையக் காவல் பார்த்துக் கொண்டிருந்தாயல்லவா? சுவாமி யன்னவர்கள் என்னா வரங்குடுத்து வருகிறார் களோ, அந்த வரங்களை இதோ உனக்கு நான் கொடுத்து வந்தேன்.

திரிசடை : ரொம்ப சந்தோஷம் தேவி

சீதை : சந்தோஷமாய் சென்று வரலாம்.

இராமர் : நீ... யார் நீ?

திரிசடை : ஆனால் விபூஷணனுடைய மகளாகிய... என் பேர் திருச்சடை என்றும் சொல்லி வருவார்கள். சீதாலக்ஷ்மியிடம் காவல் பார்த்துக்கொண்டிருந் தேன், இந்தப் பத்து மாத காலமாக! நான் நினைத்த நினைவுகளைத் தீர்த்து வழி செய்ய வேண்டும் சுவாமி.

இராமர் : திருச்சடை! உன் மனதிலே எப்படி நினைத்து வந்திருக்கிறாய் தெரிவருமா? என்னுடைய தம்பியாகிய லக்ஷ்மணனைக் கல்யாணம் செய்ய வேண்டும். திருமணம் முடிக்க வேண்டுமென்றே நினைத்து வந்திருக்கிறாய்.

திரிசடை : உண்மைதான்.

இராமர் : இப்பொழுது முடியாது. இந்தப் பிறப்புகள் போக இன்னொரு பிறப்புகளில் நான் கிருஷ்ணாவதாரமாக நான் பிறந்து வருவேன். எனக்கு நீ... சகோதரி சுமத்திரையாகவே நீ பிறந்து வரவேண்டும். தம்பியாக லக்ஷ்மணன்... அர்ஜுனனாக வருவான். அப்போது ஒனக்கு நான் கல்யாணம் செய்து தருகிறேன். இதோ ஒரு வரங்கள்.

திரிசடை : ரொம்ப சந்தோஷம்... [இசை]

இராமர் : விபூஷணரே! ஒனக்கு சொன்ன வாக்குகளைத் தவறாமல், ராவணனைக் கொன்று, ஒனக்கு லெங்கை பூராக நான் முடிசூட்டு விழா நடத்தி விடுகிறேன். ஆனால்... சொந்தமாக்கி விடுவதாக நான் தெரியப்படுத்தி வந்தேன். அதைப் போல் ராவணனை நான் ஜெயித்தேன். சீதையை நான் சிறை மீட்டினேன். இந்த லெங்கையை நீ அரசு புரிந்து கொண்டு வர வேண்டும்.

விபீடணன் : சந்தோஷம் பிரபு. ஆனால் இன்னொரு நிபந்தனைகள்.

இராமர் : என்ன?

விபீடணன் : ஆனால்... சந்திரன், சூரியன்... அண்ணன் இருக்கும் காலங்களில் வடக்கும் தெற்குமாக விலகி வந்தார்கள். அண்ணன் மரணமடைந்த வுடனே... ஆனால் லெங்கைக்கி நேராகவே வருகிறார்களே சுவாமி.

இராமர் : விபூஷணரே! உன்னுடைய அண்ணன் எறந்த தேதிக்கு மட்டுந்தான் வருவார்கள். மற்ற காலத்தில், உன்னுடைய அண்ணன் இருக்கும் போது எப்படி விலகி வந்தார்களோ அதைப் போல் வடக்கும் தெற்குமாக விலகி வருவதாக நான் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

விபீடணன் : ரொம்ப சந்தோஷம். ஆனால் உங்களுடைய மங்களத்தை நான் காண வேண்டுகிறேன். சுவாமி!

இராமர் : ஆனால்... என்னுடைய முடிசூட்டு விழாவைப் பார்க்கிறாயா? அதையும் நான் முடித்து வருகிறேன்.

பாடல் : வாசுதேவ குமாரா

....

....

பபூன் 1 : ராவணனைக் கொன்று, சீதையைச் சிறைமீட்டு, நாங்கள் மங்களம் படிப்பதனால் அரையுங் கொறையும் விடக் கூடாது என்ற முறையில்... ஆனால்... சீதையை நாங்கள் சிறைமீட்டு மங்களம் படிக்கச் செல்கிறோம். அனைவரும்... வந்திருக்கக் கூடிய பெரியவர்களும், தாய்மார்களும், வாலிபர்களும்... ஆனால் எங்கள் மங்களத்தை நீங்கள் பார்த்துச் சென்று வருவதற்கு, அனைவர்களுக்கும் வணக்கமாய்க் கேட்டுக் கொண்டேன் பபூன் கோமாளி!

பாடல் : ....

....

மங்களம் சுப மங்களம்

....

அந்த வாலி சுக்ரீவனுக்கும்
ராம லச்மணருக்கும்
வீராதி வீரனுக்கும்
சுப மங்களம்
அந்த ராமனுக்கும் சீதைக்கும்
சுப மங்களம்

....

[உரைப்பாட்டு]

அயோத்தி மாநகரம் சென்று... தனக்கு பிரியமான காட்டில்... கொண்ட ராவணனை மாட்டிக் கோதண்டம் கையால் ஏந்தி..... உன்னைப் போற்றினேன்.

ஹரஹர நமப் பார்வதி பதயே........
ரகுபதி ராகவ ராஜாராம்
பதீத பாவன சீதாராம்
ராம ராம........ஹரி ராஜாராம்

பபூன் 2 : அனைவர்களும் சந்தோஷமாகச் சென்று வருவதற்கு, அனைவர்களுக்கும் வணக்கமாய்க் கேட்டுக்கொண்டேன், உளுவத் தலையன்.

பபூன் 1 : மொட்டப் பயல! ஆனால் ராமருடைய பட்டாபிஷேகங்கள் முடிந்து சந்தோஷமாய்ச் சென்று வருவதற்கு அனைவர்களுக்கும் வணக்கம். வணக்கம்.









தமிழகத்தைப் பொருத்தவரை, நிகழ்த்துப்பனுவல் அப்படியே மாற்றமின்றி நூலாக வெளிவருவதென்பது நானறிந்த வரையில் இதுதான் முதலாவது. தோற்பாவை நிழற்கூத்தைப் பொருத்தவரை! கேரளத்தில் வாழ்ந்து வரும் கிருஷ்ணன் குட்டிப் புலவரின் கம்பராமாயண ஆடற்பத்து - அயோத்தியா காண்டம் மட்டும் சுவடியிலிருந்து எடுத்தெழுதி மைய சங்கீத நாடக அகாடமியால் வெளியிடப் பெற்றுள்ளது. தமிழகத் தோற்பாவை நிழற்கூத்துப் பனுவல்கள், பாலகாண்டம் தொடங்கி பட்டாபிஷேகம் வரை ஒரு தொடர்ச்சியுடன் வருவதென்பதை, இன்னமும் கூட என்னால் நம்பமுடியாதிருக்கிறது.

...பேச்சு மொழியில் அவர்கள் பேசியதை அன்று எடுத்தெழுதியதை மாற்றமின்றி-அதை மாற்றுவதற்கு நமக்கு எந்தச் சொந்தமுமில்லை எனும் தெளிவுடனும், மாற்றுகையில் நிகழ்த்து பனுவலின் குணங் கெட்டுப் போய்விடும் எனும் விதி மாறாமலும், பதிவு செய்த பனுவல் எவ்விதத் திரிபுமின்றி - அப்படியே எழுத்துப் பிசகாமல் இங்குக் கொடுக்க முயற்சிக்கப்பட்டுள்ளது. கொச்சை, இடக்கரடக்கல், அசிங்கம் என்று முகஞ் சுளிக்காமல், ஒரு கலை வடிவின் அந்நேர ஜீவிதம் எப்படி இருந்தது என்பது பற்றிய அறிவாக்க வரலாற்றுப் பதிவு இப்படித்தான் இருக்க முடியும் என்று நம்புகிறேன்.

மு. இராமசுவாமி